श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः।



## तैत्तिरीयारण्यके प्रथमः प्रश्नः ॥

# தைத்திரீயாரண்யகம்

## முதல்பிரச்னம்

தமிழுரையுடன்

இச்சிறந்த உரை

ந்யாய வியாகரண பாரங்கதரும், மீமாம்ஸா சிரோமணியுமான

பிரும்மஸ்ரீ பேரம்பூர் கணேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றப்பட்டு


'ஆர்யமத சம்வர்த்தனீ' பத்திராதிபர்

பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1924

பிரைட்]		[விலை ரூ.

சிறுமணவூர் முனிசாமி முதலியார் அண்டு சன்ஸ்
: சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை.

श्रीगणेशायनमः

सर्वकर्मसाक्षिणे भगवते भास्कराय नमः

---

# तैत्तरीयारण्यके प्रथमः प्रश्नः

प्रारभ्यते

# தைத்தரீயாரண்யகம்

## முதல் பிரச்னம்

அவதாரிகை.

धर्मार्थकाममोक्षाणां आरोग्यं मूलमुत्तमम् ।
रोगास्तस्यापहर्तारः श्रेयसो जीवितस्य च ॥

என்று மஹான்கள் உபதேசித்தபடி தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்குவித புருஷார்த்தங்களுக்கும் ஆரோக்யம் இன்றியமையாச்சாதானமாயிருக்கின்றது. அவ்வித ஆரோக்கியத்தைப்பெறுவதற்கு சாஸ்திரங்களில் திருஷ்டமான உபாயங்களும், அதிருஷ்டமான உபாயங்களு முபதேசிக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கர்மாவானது எந்தப்பலனைக் குறித்துச் சாதனமா யுபதேசிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தக்கர்மத்திற்கும் அந்தப் பலத்திற்கும் காரியகாரணபாவம் பொருந்துவதற்காக மத்தியில் அவாந்தரமாய் உண்டாவதாயங்கீகரிக்கப்படும் காரியங்கள் எச்சமயத்திலாவது இந்திரியங்களுக்குப் புலப்படக்கூடிய தாயின் அக்கர்மாவை திருஷ்டோபாயமென்றும் எச்சமயத்திலும் இந்திரியங்களுக்குப்புலப்படக் கூடாததாயின் அக்கர்மாவை அதிருஷ்டோபாய மென்றும் சொல்லுகிறோம். "आरोग्यं भास्करादिच्छेत्" என்ற சாஸ்திரத்தை யனுசரித்து அர்த்தானுசந்தானத்துடன் மந்திரங்களை ஜபித்து மூன்றுகரணங்க

ளாலும் சூரியமண்டலத்தில் வசிக்கும் பகவானைக் குறித்து நமஸ்கரிப்பது ஆரோக்கியத்திற்கு அதிருஷ்டோபாயம். பலவிருத்தியைத்தரத்தக்கமருந்துகளைச் சாப்பிடுவது, ஆகாரங்களை உட்கொள்வது முதலியவை திருஷ்டோபாயம். எக்காரியமும் முற்கூறிய இரண்டு சாதனங்களின்றி உண்டாவதில்லை. ஆனது பற்றியே,

जन्मान्तरकृतं पापं व्याधिरूपेण बाधते ।
तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमार्चनादिभिः ॥

சென்ற ஜன்மத்தில் செய்த பாபம் வியாதி யுருவங்கொண்டு பீடிக்கின்றது; மருந்துகளாலும், தானங்களாலும், மந்திர ஜபங்களாலும், ஹோமங்களாலும், தேவதைகளைப் பூஜிப்பதாலும் அது சாந்தியடைகிறது; என்று மஹான்களுமுபதேசித்திருக்கின்றனர்.

சிலமேதாவிகள் சூரியநமஸ்காரத்தை திருஷ்டோபாயமாக மாத்திரம் எண்ணுகின்றனர். எவ்விதமெனின், சூரியபகவானைக் குறித்து நமஸ்கரிக்கும்பொழுது கீழே படுத்துப்படுத்து எழுந்திருக்கவேண்டியிருப்பதால் அதன்மூலம் சரீரத்தில் ரக்தசஞ்சாரம் ஒழுங்காய் ஏற்படுகிறது; அதனாலாரோக்ய முண்டாகிறதென்று யுக்திகூறுகின்றனர். அவ்விதமவர்கள் சொல்வதொப்பத்தக்கதே. ஆயினும், அர்த்தானுசந்தானத்துடன் மந்திரங்களை உச்சரிக்கின்றோமே, அதற்கு என்னபிரயோஜனம்? மந்திரத்தை உச்சரிக்காமல் படுத்துப்படுத்து எழுந்தால் ரக்த ஓட்டம் ஏற்படாதா? அவ்விதம் ஏற்படுவதை நாம் அனுபவத்திற் கண்டிருக்கின்றோமே? ஆதலால் படுத்துப்படுத்து எழுவதால் சரீரத்தில் ரக்தசஞ்சார மேற்பட்டு பலவிருத்தி முதலியவை ஏற்படுவது அவாந்தரபலனேயொழிய சூரிய நமஸ்காரத்தின் முக்கியபலன் அஃதல்ல. ரக்தசஞ்சாரம் ஒழுங்காய் ஏற்படுவதையே முக்கிய பலனாய்க் கருதிய மேதாவிகள் பிறர் ஆரோக்ய மடைவதற்காக பிறராலனுஷ்டிக்கப்படும் சூரிய நமஸ்கார விஷயத்தில் என்ன



யுக்திசொல்லுவார்களோ? தெரியவில்லை. ஒருவன் படுத்து எழுவதால் மற்றவனுடைய சரீரத்தில் ரக்தசஞ்சாரம் ஏற்படுமா? ஆதலால் இந்த யுக்திவாதத்தை விட்டு சாஸ்திர முறைப்படி ஆரோக்யஹேதுவாய் ஏதோ ஒருவித அதிருஷ்டமுண்டாகின்றதென்றே அங்கீகரிக்க வேண்டும.

அவ்விதம் ஆரோக்யத்திற்கு அதிருஷ்டசாதனமான சூரிய நமஸ்காரத்தைச் செய்யும்பொழுது ஜபிக்கவேண்டிய மந்திரங்கள் தைத்தரீயாரண்யகம் முதல்பிரச்னத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன.

“अर्थज्ञ इत्सकलं भद्रमश्नुते सनाकमेति ज्ञानविधूतपाप्मा”
“यदेव विद्यया करोति........तदेव वीर्यवत्तरं भवति”

“அர்த்தமறிந்தவன் சகலவிதமான இம்மை மறுமைக்ஷேமங்களை நிச்சயமாயடைகிறான்; அவன் ஞானத்தால் விலகின பாபமுள்ளவனாய், ‘நாகம்’ என்ற மேலான பதவியையடைகிறான்; எந்தக் கர்மத்தை மந்திரங்களின் அர்த்தமறிந்து செய்கிறானோ அதுவே அதிகபலனைத் தரத்தக்க சக்தியுள்ளதாயாகும்” என்று வேதங்களே கூறுவதாலும், அர்த்தமறியாமல் மந்திரங்களை யுச்சரிப்பதென்பது விவேகத்தாற் சிறந்த மானிடப் பிறவிக்குப் பொருத்தமில்லாததாகையாலும், அர்த்தமறிதல் மிக்க அவசியமாதல்பற்றி, ஆரண்யகம் முதல் ப்ரச்னத்திற்கு சூரிய நமஸ்காரத்தில் விநியோகத்தை யனுசரித்து ஸாயணாசாரியஸ்வாமிகளா லியற்றப்பெற்ற பாஷ்யத்திற்கிணங்க எளிய தமிழ்நடையில் வியாக்யானம் செய்யப்புகுகின்றோம்.

முதலில், இந்த ப்ரச்னத்தை அத்யயனஞ்செய்து முடிக்கும்வரை தனக்கும், ஆசாரியனுக்கும், தன்னுடன் அத்யயனஞ் செய்யும் மற்றுமுள்ள மாணாக்கர்கட்கும் எவ்விதத்தீங்கும் நேராமலிருப்பதற்காகவும், விக்நங்கள் உண்டாகாமலிருப்பதற்காகவும் ஜபிக்கவேண்டிய இரண்டு மந்திரங்கள் படிக்கப்படுகின்றன. இவ்விரண்டு மந்திரங்களையும் இப்பிரச்னத்தின் “சாந்தி” எனக் கூறுவார்கள்.

ओं। भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्गैस्तुष्टुवांसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः ॥

| | |
|---|---|
| देवाः | ஓ தேவதைகளே ! |
| यजत्राः | உங்களை ஆராதனஞ் செய்கின்றவர்களும் |
| तुष्टुवांसः | ஸ்தோத்திரஞ் செய்கின்றவர்களுமான நாங்கள் |
| भद्रम् | மங்களகரமான சமாசாரத்தை |
| कर्णेभिः | காதுகளால் |
| शृणुयाम | கேட்போமாக |
| अक्षभिः | கண்களால் |
| भद्रम् | மங்களத்தை |
| पश्येम | பார்ப்போமாக |
| स्थिरैः | பலமுள்ளவைகளான |
| अङ्गैः | அவயவங்களோடு கூடிய |
| तनूभिः | சரீரங்களால் |
| यत् | எந்த |
| आयुः | ஆயுளானது |
| देवहितम् | தேவதைகளைப் பூஜைசெய்வதில் உபயோகப் படுதல் மூலம் நன்மையை விளைவிக்கக் கூடியதோ |
| (तत्) | (அந்த ஆயுளை) |
| व्यशेम | அடைவோமாக. |

தா-ம்—ஓதேவதைகளே ! மனத்தினாலும், காயத்தினாலும், உங்களை யாராதனஞ் செய்கின்றவர்களும் வாக்கினால் ஸ்துதிக்கின்றவர்களுமான நாங்கள், மேன்மேலும் க்ஷேமத்தை விளைவிக்கின்ற ஆசாரியன், வேதம், சாஸ்திரம் இவர்களுடைய உபதேசமொழிகளைக் காதுகளாற் கேட்கவேண்டும். கண்களாலும் மங்களங்களைக் காணவேண்டும். அஃதுடன் என்னிலையிலும் பலக்குறைவற்ற அங்கங்களுடன் கூடிய சரீரங்களையுடையவர்களாகவும், தேவதைகளைப்பூஜைசெய்வதற்குச் சாதனமான



நீண்ட ஆயுளையுடையவர்களாகவும் ஆகவேண்டும்என்று இதனால் பிரார்த்திக்கப்பட்டது. (1)

स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः ।
स्वस्ति नस्ताक्ष्र्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

| | |
|---|---|
| वृद्धश्रवाः | பெரியோர்களால் கேட்கப்படுகின்ற |
| इन्द्रः | இந்திரன் |
| नः | எங்களுக்கு |
| स्वस्ति | க்ஷேமத்தை |
| दधातु | உண்டுபண்ணட்டும் |
| विश्ववेदाः | எல்லாவற்றையுமறிந்த |
| पूषा | பூஷா என்ற தேவன் |
| नः | எங்களுக்கு |
| स्वस्ति | க்ஷேமத்தை |
| दधातु | உண்டுபண்ணட்டும் |
| अरिष्टनेमिः | தீமையை விலக்குவதற்கு வண்டிச்சக்கரத்தின் இரும்பு வட்டைபோலுள்ள |
| तार्क्ष्यः | கருடன் |
| नः | எங்களுக்கு |
| स्वस्ति | க்ஷேமத்தை |
| दधातु | உண்டுபண்ணட்டும் |
| बृहस्पतिः | தேவகுருவான பிருஹஸ்பதியானவர் |
| नः | எங்களுக்கு |
| स्वस्ति | க்ஷேமத்தை |
| दधातु | உண்டுபண்ணட்டும். |

தா-ம்—வேதம், சாஸ்திரம், புராணம், இதிஹாஸம் இவை முதலிய நூல்களை நன்றாய் ஆராய்ச்சி செய்த மஹான்களாலே

(1) **कर्णेभिः, अक्षभिः, तनूभिः** என்று பஹுவசனத்தைஉபயோகப்படுத்தியதற்கு தன்னுடன் அத்யயனஞ் செய்கின்ற மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு பிரார்த்தனை செய்வதில் கருத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரம் அறியக்கூடிய ஸ்வரூபசுவபாவ குணாதிகளை யுடைய தேவேந்திரனும், எல்லாவற்றையுமறியக்கூடிய சக்திவாய்ந்தவரா யிருப்பதுபற்றி நாங்கள் க்ஷேமத்தையாசிப்பது சத்விஷயத்தை யனுஷ்டிக்கவேண்டியேயொழிய, அசத்விஷயத்தை யனுஷ்டிப் பதற்கல்லவென்பதைத் தானேயறிந்த "பூஷா" என்ற தேவ னும், வண்டியின் சக்கிரத்தைச்சுற்றிலும் போடப்பட்ட இரும்பு வட்டையானது எவ்விதம் சக்கிரத்திற்குச் சம்பவிக்கும் கெடு தல்களை விலக்கி ரக்ஷிக்கின்றதோ அவ்விதமே தன்னை யுபாஸிப் பவர்களுக்குச் சம்பவிக்கும் தீமைகளைவிலக்கி நன்மையைக் கொடுக்கின்ற கருடனும், தேவகுருவான பிருஹஸ்பதியும் க்ஷேமத்தைக் கொடுப்பார்களாக எ-று.

ओं शान्तिः, शान्तिः, शान्तिः ॥

| | |
|---|---|
| शान्तिः | ஆத்யாத்மிக துக்கம் விலகட்டும் |
| शान्तिः | ஆதிபௌதிக துக்கம் விலகட்டும் |
| शान्तिः | ஆதிதைவிக துக்கம் விலகட்டும் |
| ओं | மங்களமுண்டாகட்டும் |

தா-ம். துக்கம் மூன்றுவிதம். 1. ஆத்யாத்மிகம், 2. ஆதி பௌதிகம், 3. ஆதி தைவிகம். சரீரவியாதி, இஷ்டமித்திர பந்துவியோகம் முதலிய காரணங்களா லேற்படும் துக்கம் ஆத் யாத்மிகம். பாம்பு, தேள் முதலியவைகளா லேற்படும் துக்கம் ஆதி பௌதிகம். அதிக மழை, அதிகக் காற்று முதலியவைக ளால் ஏற்படும் துக்கம் ஆதி தைவிகம். இம்மூன்றுவித துக்கங் களும் எங்களுக்கு உண்டாகாமலிருக்கவேண்டும். மங்கள முண் டாகவேண்டும் எ-று.

ओं । भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्गैस्तुष्टुवांसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः ॥
स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः । स्वस्ति नः पूषा विश्ववेदाः ।
स्वस्ति नस्ताक्ष्र्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥



இவைகளுக்கு முந்தியே வியாக்யானஞ் செய்யப்பட்டுவிட் டதால் இங்கு மறுபடியும் வியாக்யானஞ் செய்யவில்லை.

அ-கை.— ஆரோக்யத்திற்குச் சுத்தமான ஜலம் முக்ய சாதனமாகையால் அது அக்னி, வாயு, சூரியன் இவர்களிடம் பிரார்த்திக்கப்படுகிறது.

आपमापामपः सर्वाः । अस्मादस्मादितोऽमुतः ॥ (१)
अग्निर्वायुश्च सूर्यश्च । सहसंचस्करर्द्धिया ॥

| | |
|---|---|
| अस्मात्, अस्मात् | அந்தந்த விடங்களிலிருந்தும் |
| इतः | இந்தப் பூலோகத்திலிருந்தும் |
| अमुतः | சுவர்க்கலோகத்திலிருந்தும் |
| सर्वाः | எல்லாவிதமான |
| अपः | ஜலங்களை |
| आपमापाम् | அடிக்கடி அடைவேனாக. |
| (तदर्थम्) | (அவ்விதம் ஜலங்களை யடைவதற்காக) |
| अग्निः | அக்கினியும் |
| वायुश्च | வாயுவும் |
| सूर्यश्च | சூரியனும் |
| (अनुगृण्हन्तु) | (அனுக்கிரஹஞ் செய்வார்களாக) |
| (अहम्) | (நான்) |
| (तैः) सह | அந்த தேவர்களோடுகூட |
| (इमा अपः) | (இந்த என்னிடமுள்ள ஜலங்களை) |
| ऋद्धिया | ஆரோக்கியமாகிய சம்பத்தின்பொருட்டு |
| संचस्करे | அதிக சக்திவாய்ந்ததாகச் செய்கிறேன். |

தா-ம்.—ஓ அச்னி வாயு சூரியதேவதைகளே! கங்கா ஜலத்திற்கு ஒருவித சக்தியும், கோதாவரீ ஜலத்திற்கு ஒருவித சக்தியும் காவேரீ ஜலத்திற்கு ஒருவித சக்தியு மிருக்கின்றது. இவ் விதமே அவைகள் தங்கியிருக்கும் தேசத்தின் குணவிசேஷத் திற்கிணங்க வெவ்வேறான சக்திகள் ஜலங்களிற் பிரிந்திருக்கின் றன. அச்சக்திகள் யாவும் எனது ஸ்நானபானாதிகளுக்கு உப

யுக்தமான ஜலத்தில் ஒன்றுசேர்ந்து வசிக்குமாறு அருள்புரிந்து அதன்மூலம் எனக்கு ஆரோக்யத்தைக் கொடுக்கவேண்டும் (எ-று.)

அ - கை.—இனிவரும் நான்குமந்திரங்களால் ஜலாபிமானி தேவதைகள் பிரார்த்திக்கப்படுகின்றனர்.

(1) वाय्वश्वा रश्मिपतयः । मरीच्यात्मानो अद्रुहः ॥

देवीर्भुवनसूवरीः । पुत्रवत्वाय मे सुत ॥

| | |
|---|---|
| वाय्वश्वाः | காற்றுகிற குதிரையை யுடையவர்களும் |
| रश्मिपतयः | சூரிய கிரணங்களை ரக்ஷகனுகவுடையவர்களும் |
| मरीच्यात्मानः | ஜலத்திற்குள்ளிருக்கும் அக்கினியை ஆத்மாவாகவுடையவர்களும் |
| अद्रुहः | கெடுதலை விளைவிக்காதவர்களும் |
| देवीः | பிரகாசிக்கின்றவர்களும் |
| भुवनसूवरीः | லோகத்தை உண்டுபண்ணினவர்களுமான ஓ ஜலாபிமானி தேவதைகளே ! |
| पुत्रवत्वाय | அநேகம் புத்திரர்களுடன்கூடி இருக்கும்படியாக |
| मे | என்விஷயத்தில் |
| सुत | சங்கல்பியுங்கள் |

தா - ம்.—ஓ ஜலாபிமானி தேவதைகளே! நீங்கள் மழை ஜலமாய் மாறுமல் மேகரூபமா யிருந்தபொழுது காற்றுகிற குதிரையின்மேலேறி அங்குமிங்கும் சஞ்சரித்தீர்கள். (எத்

---

(1) நான் கருப்பு, நான் சிவப்பு, நான் பிராம்மணன் என்ற சரீர தர்மங்களை சரீரியான ஆத்மாவினிடம் ஆரோபணஞ் செய்து வியவஹரிப்பது போல ஜலாபிமானி தேவதைகளுக்குச் சரீர ஸ்தானமான ஜலத்தின் தர்மங்களை அபிமானிதேவதையினிடம் ஆரோபணஞ்செய்து ஸ்துதிக்கப்படுவதாய் இது போன்ற மந்திரங்களில் கருத்துக் கொள்ளவெண்டும்.



திசையைநோக்கிக் காற்று அடிக்கின்றதோ அத்திசையைநோக்கியே மேகங்கள் செல்லுமாதலால் இவ்விதம் சொல்லப்பட்டது.) சூரியகிரணங்களே உங்களது பதிகள். (புருஷனுடையசம்ரக்ஷணையை இழந்தஸ்திரீ யானவள் எவ்விதம் சீர்கேடான நிலையையடைந்து விடுவாளோ அவ்விதமே சூரியகிரண சம்பந்தமில்லாவிடில் ஜலங்களும் கெட்டுப் போவதால் இவ்விதம் சொல்லப்பட்டது.) ஜலத்திற்குள்ளிருக்கும் அக்னியே உங்களது ஜீவன். (பஞ்சீகரண ப்ரக்கிரியைப்படி சோதித்தால் ஜலத்திலும் அக்னி இருப்பது புலப்படுவதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது) நீங்கள் ஒருவருக்குங் கெடுதலை விளைவிக்கின்றீர்களில்லை. ஜகத்தையே நீங்கள் உண்டுபண்ணினவர்கள். அவ்விதமஹிமை தங்கியநீங்கள் வியர்த்தமாகாத சங்கல்பமுள்ளவர்களாகையால் எனக்கு அநேகம் புத்திரர்கள் ஜனிக்குமாறு சங்கல்பிக்கவேண்டும் எ-று.

महानाम्नीर्महामानाः । महसो महसः स्वः ॥

देवीः पर्जन्यसूवरीः । पुत्रवत्वाय मे सुत ः। (२)

| | |
|---|---|
| महनाम्नीः | பெரிய (அர்த்தபுஷ்டியுள்ள) பெயரையுடையவர்களும், |
| महामानाः | அதிகமாய் பூஜிக்கத்தகுந்தவர்களும் |
| महसो महसः | அந்தந்த தேவதைகளின் பூஜையை |
| स्वः | நடத்திவைக்கின்றவர்களும் |
| देवीः | பிரகாசிக்கின்றவர்களும் |
| पर्जन्यसूवरीः | மேகத்தினல் வர்ஷிக்கப்பட்டவர்களுமான ஓ ஜலாபிமானி தேவதைகளே ! |
| पुत्रवत्वाय | அநேகம் புத்திரர்களுடன்கூடி இருக்கும்படி |
| मे | என்விஷயத்தில் |
| सुत | சங்கல்பம் செய்வீர்களாக. |

தா - ம்.—ஓ ஜலாபிமானி தேவதைகளே ! எவ்விதமான பலன்களையும் கொடுக்கச் சக்திவாய்ந்தவர்கள் என்னும் பொரு

ளைக்கொடுக்கின்ற **अप्** என்ற பெரிய பெயரையுடையவர்களாயும்,எந்த வைதிக கர்மத்தைச் செய்யவேண்டுமானாலும் முதலில் வேண்டப்படுகின்ற சுத்தியானது உங்களாலேயே ஏற்படவேண்டி இருப்பதால் மற்றவரைக்காட்டிலும் அதிகமாய் கௌரவிக்கத் தகுந்தவர்களாயும், தேவதைகளைப் பூஜை செய்யும்பொழுது அவசியம் நடத்தவேண்டிய அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், ஸ்நானம் முதலிய உபசாரங்களுக்குச் சாதனபூதர்களாயும், நிர்மலமாய் பிரகாசிக்கின்றவர்களாயும், களங்கமற்ற ஆகாசத்திற் சஞ்சரிக்கும் மேகங்களா லுண்டுபண்ணப்பட்டவர்களாயு மிருக்கின்ற நீங்கள் வீண்போகாத சங்கல்ப முள்ளவர்களாகையால் எனக்கு அநேகம் புத்திரர்கள் ஜனிக்குமாறு சங்கல்ப்பிப்பீர்களாக (எ-று.)

अपाश्न्युष्णिमपा रक्षः । अपाश्न्युष्णिमपारघम् ॥
अपाघ्रामप चावर्तिम् । अपदेवीरितो हित ॥

| | |
|---|---|
| देवीः | நிர்மலமாய் பிரகாசிக்கின்ற ஓ ஜலாபிமானி தேவதைகளே ! |
| अश्न्युष्णिम् | போக்யவஸ்துக்களை அனுபவிக்கும் ஜீவர்களைத் தஹிக்கின்ற அக்நியை |
| अपहित | விலக்குவீர்களாக |
| रक्षः | ஹிம்சிக்கின்ற ராக்ஷஸ ஜாதியை |
| अपहित | விலக்குவீர்களாக |
| अश्न्युष्णिम् | போக்யவஸ்துக்களை அனுபவிக்கும் ஜீவர்களை தஹிக்கின்ற ஜ்வரம் முதலிய ரோகங்களுக்குக் காரணமான அக்நியை |
| अपहित | விலக்குவீர்களாக |
| रघम् | ஜ்வரத்தினாலுண்டான சரீர சோஷத்தையும் அதற்குக் காரணமான பாபத்தையும் |
| अपहित | விலக்குவீர்களாக |
| अघ्राम् | மூக்கு முதலிய இந்திரியங்களுக்கு அதனதன் விஷயங்களான வாசனை முதலியவற்றை கிரஹிப்பதில் சக்திக்குறைவை |



| | |
|---|---|
| अपहित | விலக்குவீர்களாக |
| अवर्तिम् | ஜீவனத்திற்கு வழியில்லாமையை |
| अपहित | விலக்குவீர்களாக |
| (सर्वमरिष्टम्) | (சகலவிதமான துன்பங்களையும்) |
| इतः | எனது சமீபத்திலிருந்து |
| अपहित | விலக்குவீர்களாக |

(தா-ம்) ஓ ஜலாபிமானி தேவதைகளே ! என்னால் அனுபவிக்கப்படவேண்டிய போக்யவஸ்துக்களை எரித்து நாசஞ்செய்து தீமையை விளைவிக்கின்ற அக்னியை நீங்கள் என்னிடம் வராமலிருக்கும்படித் தடுக்கவேண்டும். உங்களது பிரசாதத்தால் எனது வீட்டில் தீபிடிப்பது முதலிய சம்பவங்கள் நேராமலிருக்கவேண்டும். **आपोवै रक्षोघ्नीः** என்ற சாஸ்திரப்படி நீங்கள் ராக்ஷஸர்களை நாசஞ்செய்யச் சக்திவாய்ந்தவர்களா யிருப்பதால் ரக்ஷஸ், பூதம், பிரேதம், பிசாசம் முதலியவைகளை என்னிடம் வராமலிருக்கும்படித் தடுக்கவேண்டும். சிலதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த மாத்திரத்தால் ஜ்வரமேற்பட்டுவிடும்; அவ்விதம் எனக்கு எந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தபோதிலும் ஜ்வரம் முதலிய ரோகங்கள் உங்கள் பிரசாதத்தாலுண்டாகாம லிருக்கவேண்டும். சகலவிதமான அனர்த்தங்களுக்கும் முதற்காரணமான ஊழ்வினைகளை நாசஞ் செய்யவேண்டும். கண்காது முதலிய இந்திரியங்களுக்கு அதனதன் விஷயங்களான ரூபம் முதலியவற்றைக் கிரஹிப்பதில் சக்திக்குறைவு உண்டாகாமலிருக்கவேண்டும். ஜீவனத்திற்கு வழியில்லாமல் கஷ்டப்படவேண்டிய நிலை உண்டாகாமலிருக்கவேண்டும். இது விலகவேண்டும் அது விலகவேண்டுமென்று ஒவ்வொன்றாய்க் குறிப்பிட்டுக்கூறுவது சாத்தியமல்ல. ஆதலால் எனக்குச் சம்பவிக்கும் சகலவிதமான உபத்திரவங்களையும் நாசஞ்செய்து க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டும் (எ-று.)

वज्रं देवीरजीतांश्च । भुवनं देवसूवरीः ॥
आदित्यानदितिं देवीम् । योनिनोर्ध्वमुदीषत ॥

| | |
|---|---|
| **देवसूवरीः** | சகலமான தேவர்களையும் தூண்டுகின்றவர்களும் |
| **देवीः** | நிர்மலமாய்ப் பிரகாசிக்கின்றவர்களுமான ஓ ஜலாபிமானி தேவதைகளே ! |
| **वज्रम्** | இந்திரதனுஸை |
| **ऊर्ध्वम्** | ஆகாசத்தில் |
| **उदीषत** | எங்களைக் காப்பதற்காக ஸ்தாபியுங்கள் |
| **(अस्मान्)च** | எங்களையும் |
| **अजीतान्** | சத்துருக்களால் ஜயிக்கப்படாதவர்களாய் |
| **(कृत्वा)** | (செய்து) |
| **उदीषत** | மேலானபதவியில் ஸ்தாபியுங்கள் |
| **भुवनम्** | ஜகத்தை |
| **उदीषत** | மேலானபதவியில் ஸ்தாபியுங்கள் |
| **आदित्यान्** | அதிதி தேவியின் குமாரர்களான தேவர்களையும் |
| **अदितिं, देवीम्** | அவர்களின் மாதாவான அதிதி தேவியாரையும் |
| **योनिना** | என்னை ரக்ஷிப்பதென்ற காரணத்தால் |
| **उदीषत** | மேலே வசிக்கும்படிச் செய்வீர்களாக. |

(தா-ம்) ஓ ஜலாபிமானி தேவதைகளே! உங்களது வில்லான இந்திரதனுஸை என்னைக் காப்பாற்றுவதற்காக மேலே நிறுத்த வேண்டும். எப்பொழுதும் சத்துருபீடையற்றவனாய் மேலான நிலையிலேயே வசிக்கும்படி என்னைச்செய்யவேண்டும். **लोकास्समस्ताः सुखिनो भवन्तु** (எல்லாப்பிராணிகளும் சுகிகளாயாகட்டும்) என்றபடி சகலப்பிராணிகளையும் மேலான நிலையில் ஸ்தாபித்து அவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கவேண்டும். சகலதேவதைகளையும் 'இக்காரியத்தைச்செய்' என்று தூண்டுவதற்குத் திறமை பொருந்தியவர்களாய் நீங்களிருப்பதால் என்னை ரக்ஷிப்பதற்காகச் சகலதேவதைகளையும் மேலே வசிக்கும்படித் தூண்டவேண்டும் (எ-று.)



அ-கை. ஓஷதி தேவதைகளும், ஜலாபிமானி தேவதைகளும் இதனால் பிரார்த்திக்கப்படுகின்றனர்.

शिवा नश्शन्तमा भवन्तु । दिव्या आप ओषधयः । (३)

| | |
|---|---|
| **दिव्याः** | மனது, வாக்கு இவைகட்குக்கூடப் புலப்படாத திவ்ய சக்திவாய்ந்த |
| **आपः** | ஜலங்களும் |
| **ओषधयः** | ஓஷதிகளும் |
| **शिवाः** | சுகத்திற்குக் காரணங்களாகவும் |
| **शन्तमाः** | துக்கத்தை விலக்குகின்றவைகளாகவும் |
| **नः** | எங்களுக்கு |
| **भवन्तु** | ஆகட்டும் |

(அ-கை) இம்மந்திரத்தால் சரஸ்வதீ தேவியார் பிரார்த்திக்கப்படுகின்றார்.

सुमृडीका सरस्वति । मा ते व्योम संदशि ।

| | |
|---|---|
| **सरस्वति** | ஓ சரஸ்வதீதேவியே ! |
| **सुमृडीका** | மிகுந்த சுகத்தை யுண்டுபண்ணுகிறவளாய் |
| **भव** | ஆவாயாக |
| **ते** | உன்னுடைய |
| **व्योम** | இடைவெளியானது (பிரிந்திருத்தலானது) |
| **न संदृशि** | பார்க்கப்படவேண்டாம். |

(தா-ம்) ஓ சரஸ்வதீ தேவியாரே ! தாங்கள் என்னிடம் எப்பொழுதும் வசித்துக்கொண்டு சுகத்தை உண்டுபண்ணவேண்டும். (எ-று)

अमृतस्सुतौषधयो द्वेच ।

इति प्रथमोऽनुवाकः

50 பதங்கள் கொண்டதை பஞ்சாசத் என்று சொல்வது நியாயமாயினும் இங்கு பத்துபத்து வாக்கியங்களுக்கு பஞ்சாசத் என வைதிகர்களால் பெயரிடப்பட்டிருக்கிறது. அந்த பஞ்சாசத்தின் முடிவிலுள்ள பதங்களைச் சேர்த்து படிப்பதற்கு "கோவை" என்று பெயர். **अमुतस्सुतौषधयोचद्वेच** என்பது கோவை. (கோவை என்பது கோக்கப்படுவது) இவ்விதமே ஒவ்வொரு அனுவாகத்தின் முடிவிலும் கோவை படிக்கப்படும். அது வேதமல்ல. அத்யயனஞ் செய்பவர்கள் இவ்வளவோடு ஒரு பஞ்சாசத் முடிவு அடைகிறதென்பதைச்சுலபமாய் நினைவில் வைத்துக்கொள்வதற்காக பின்வந்த மஹான்களா லியற்றப்பட்ட வாக்கியங்கள் என்று அறியவும்.

### இவ்வனுவாகத்தைப்பற்றிய விசாரம்

சங்கை—**वायवश्वा रश्मिपतयः** முதலிய மந்திரங்களால் நேரில் ஜலமே பிரார்த்திக்கப்படுவதாய்ப் புலப்படுகிறதே யொழிய ஜலாபிமானி தேவதைகள் பிரார்த்திக்கப்படுவதாய்த் தெரியவில்லையே. அவ்விதமிருக்க, ஜலாபிமானி தேவதைகள் பிரார்த்திக்கப்படுகின்றனர் என்று அவதாரிகை செய்தது எவ்விதம் பொருந்தும் ?

உத்தரம்—லோகத்தில் மேதாவிகள் யாதானு மொன்றை விரும்பிப் பிரார்த்திப்பதாயிருந்தால் சுவதந்திரமாய் தான் விரும்பியதைக் கொடுக்கவோ அல்லது பிறரைக் கொடுக்கும்படி தூண்டவோ சக்திவாய்ந்த சேதனனைப் பிரார்த்திக்கின்றனரே யல்லாது, அசேதனத்தையும், சுவதந்திரமாகவோ பிறரைக் கொண்டோ கொடுக்கச் சக்தியற்றவனையும் பிரார்த்திப்பதில்லை என்பது யாவருக்கு மனுபவத்திலிருக்கக்கூடிய விஷயமே. ஆனதுபற்றி, லோகத்திற்கும் வேதத்திற்கும் பெரும்பாலும் பேதமில்லாததால் இங்கு செய்யப்படும் பிரார்த்தனைகளையும் சேதனத்தினிடஞ் செய்ததாகவே கொள்ளவேண்டும். அவ்விதமில்லாவிடில் புத்திரனைக் கொடுக்கவேண்டும், அந்தந்த அனிஷ்டங்களை விலக்கவேண்டும் என்றது முதலிய பிரார்த்தனைகள் அசேதனமான ஜலத்தினிடம் எவ்விதம் பொருந்தும்? பொருந்தாத பிரார்த்தனையைத்தான் வேதஞ் சொல்லுகிற தென்றால் வேதத்திற்குப் பிராமாண்யம் சம்பவிக்குமா? ஆதலால் லோகத்தில் ஒரு புருஷனிடம் ஒன்றை நாம் யாசிக்கும் பொழுது புருஷனுடைய சரீர சம்பந்தமான நாமரூபங்களைக் கொண்டே அழைத்து ஸ்துதி செய்வது போலவே இங்கும் ஜலத்தையே சரீரமாகவுடைய விசேஷ சக்திவாய்ந்த சேதன னொருவனை அழைத்து ஸ்துதி செய்து இஷ்டங்களை பிரார்த்திப்பதாய் அறியவேண்டும்.



சங்கை—அவ்விதமே இருக்கட்டும். ஆயினும், ஜலாபிமானி தேவதைகளை ஸ்துதிக்கின்ற மந்திரங்களைப் படித்து சூரியனை நமஸ்கரிப்பது எவ்விதம் பொருந்தும்? சிவனை ஸ்துதிக்கின்ற சுலோகத்தைப் படித்து விஷ்ணுவை வணங்குவது நியாயமாகுமா? வியக்தமாகக் குறிப்பிட்ட ஒரு மனிதனை ஸ்துதிக்கின்ற சுலோகத்தை மற்றவரை ஸ்துதிக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் படித்தால் அவர் நம்மிடம் கோபங்கொள்வதையோ, அல்லது மூடன் என்று உபேக்ஷை செய்வதையோ அல்லவா லோகானுபவத்தில் கண்டிருக்கிறோம். இவ்விதம் பொருந்தாத மந்திரங்களை ஜபிக்கவேண்டியதாய் விதித்ததிலிருந்து மந்திரங்களின் அர்த்தத்தைக் கவனிக்கவேண்டியதில்லை; அவைகளையுச்சரித்த மாத்திரத்தால் தேவதா பிரசாதம் உண்டாகி விடும் என்றும் தீர்மானிப்பதற்கு இடமேற்படுகின்றதே?

உத்தரம்—இங்கு இதற்கு இரண்டு சமாதானங்கள் கூறுகிறோம். அவைகளில் முதற் சமாதானம் பின்வருமாறு—லோகத்தில் எந்த சப்தத்திற்கும் முக்யார்த்தமென்றும் கௌணார்த்தமென்றும் இருவகைப் பொருள்களிருக்கின்றன. எந்த சப்தம் எந்த அர்த்தத்தில் ஜாதியை மாத்திரம் நிமித்தமாகக் கொண்டு உபயோகிக்கப்படுகின்றதோ அந்த அர்த்தம் அந்த சப்தத்திற்கு முக்யார்த்தமென்றும், அஃதன்றி முக்யார்த்தத்திலிருக்கின்ற தைரியம், சௌரியம், காம்பீரியம், உண்மை பேசல், கொடை முதலிய குணங்களை நிமித்தமாகக்கொண்டு

அதே சப்தம் வேறு அர்த்தத்தில் உபயோகிக்கப்படுமானால் அந்த அர்த்தத்தை அந்த சப்தத்தின் கௌணார்த்த மென்றும் கொள்ளுகிறோம். சிங்கம் என்ற வார்த்தைக்கு மிருகேந்திரன் முக்கியார்த்தம். ஏனென்றால் இங்கு எல்லாச் சிங்கத்தினிடமும் தொடர்ந்திருக்கின்ற பிடரிமயிர் முதலிய அவயவங்களின் அமைப்பினால் ஊஹிக்கக்கூடிய சிங்கத்தின் தன்மை என்ற ஜாதியே நிமித்தமாகக் கொள்ளப்படுகிறது. தைரியம் முதலிய குணங்களற்ற சிங்கத்தையும் சிங்கமென்றே அழைக்கிறோம். ஆதலால் மிருகேந்திரன் என்பது "சிங்கம்" என்ற வார்த்தைக்கு முக்யார்த்தமெனக் கருதப்படுகிறது. காம்பீரியம், தைரியம், சௌரியம் முதலிய குணங்கள் பொருந்திய மனிதனைப் பார்த்து "அடே அப்பா சிங்கமடா" என்கிறோம். இந்தவிடத்தில் சிங்கம் என்ற வார்த்தைக்கு மனிதன் கௌணார்த்தம். ஏனென்றால் மனிதனைப் பார்த்து சிங்கமென அழைப்பதற்கு மிருகேந்திரத்தினிடமுள்ள தைரிய சௌரியாதிகளுக்கு ஒப்பான தைரிய சௌரியாதிகளுடன் கூடி இருப்பதே நிமித்தமாக அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விதமே ஒவ்வொரு சப்தத்திற்கும் முக்யார்த்தமும் கௌணார்த்தமும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுள் எந்த இடத்தில் முக்யார்த்தத்தை எடுத்துக்கொள்வதற்குப் பாதகம் நேருகிறதோ அந்த விடத்தில் கௌணமான அர்த்தத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிரகிருத ஸ்தலத்தில் முக்யார்த்தமான ஜலாபிமானி தேவதைகளை எடுத்துக்கொள்வோமேயானால் சூரிய நமஸ்கார பிரகரணத்தில் படித்தது பொருந்தாமல் போய்விடுகிறது. ஆதலால் கௌணமான அர்த்தத்தை எடுத்துக்கொள்ளுகிறோம். அவ்விதமாயின் இவ்வனுவாகத்திற் படிக்கபட்டிருக்கும் மந்திரங்களுக்கு "ஓ ஜலாபிமானி தேவதைகளுக்கொப்பான மஹிமை தங்கிய சூரியனே! அந்தந்த அனிஷ்டங்களை விலக்க வேண்டும் இந்த இந்த இஷ்டங்களைக் கொடுக்கவேண்டும்" என்று அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு கருத்துகொள்ளவேண்டும். ஆனால் அர்த்தமெழுதும் பொழுது என் அவ்விதம் எழுதவில்லை என்றால் முக்யார்த்தத்தைத் தெரிவித்துவிட்டால் கௌணார்த்தத்தைச் சுலபமா யறிந்துவிடலாமென்றே முக்யார்த்தத்தை முன்னர் எழுதினோம். ஆகவே கௌணார்த்தத்தை பிரகிருத ஸ்தலத்தி லெடுத்துக்கொள்வோமேயானால் சகலமும் பொருந்தி விடுவதால் எவ்வித ஆசங்கைக்குமிடமில்லை.



இரண்டாவது சமாதானமாவது—ஸ்துதியோ, பிரார்த்தனையோ இரண்டும் நேரிலும் பரம்பரையாகவும் செய்யப்படலாம். கிருஷ்ணன் ராமன் பிறந்த ஊரை ஸ்துதி செய்தாலும் ராமன் தன்னை ஸ்துதித்ததாகவே நினைக்கிறான். இவ்விதமே ராமன் தனது புத்திரனை ஸ்துதிசெய்து ஒருவன் ஒன்றைப் பிரார்த்தித்தாலும் தன்னை ஸ்துதிசெய்து பிரார்த்தித்ததாகவே நினைக்கிறான். ஏனென்றால் ஸ்துதிப்பவனின் தாத்பர்யம் தன்னை ஸ்துதிப்பதிலேயே முக்யமா யிருக்கின்றதென்பதை பிரகரணம் முதலிய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் பிரமாணங்களா லறிந்திருக்கிறான். அவ்விதமே இப்பிரச்னத்திலுள்ள மந்திரங்கள் யாவற்றிற்கும் சூரிய ஸ்துதியிலேயே விநியோகத்தை யனுசரித்து தாத்பரியமிருப்பதாய் அறியப் பட்டிருப்பதால் சூரியனைச் சேர்ந்த ஜலாபிமானி தேவதைகளை ஸ்துதி செய்தபோதிலும் சூரிய ஸ்துதியிலேயே முடிவு ஏற்படும். சூரியனுக்கும் ஜலாபிமானி தேவதைகளுக்கும் யாது சம்பந்தமெனின்—அக்னியினிடமிருந்து ஜலமுண்டானதாய் अग्नेरापः என்ற சாஸ்திரம் கூறுகின்றது. சூரிய மண்டலமோ அக்னி வடிவமாயிருக்கின்றது. பிதாவின் ஜீவனும் புத்திரனின் ஜீவனும் தனிப்பட்டவையே. இரண்டிற்கும் காரிய காரணபாவங்கிடையா. ஆயினும் அவ்விரண்டு பேர்களுடைய சரீரங்களுக்கும் காரியகாரணபாவ மிருப்பதால் புத்திரனை ஸ்துதி செய்தால் தகப்பன் தன்னை ஸ்துதித்ததாக நினைக்கிறான். அதுபோலவே சூரியனும் தனது சரீரமான அக்னியினிடமிருந் துண்டான ஜலத்தை சரீரமாகவுடைய ஜலாபிமானி தேவதைகளை ஸ்துதிசெய்தபோதிலும் தன்னை ஸ்துதித்ததாகவே நினைக்கிறார் என்று அறியவேண்டும். ஓஷதிகளும் சூரிய கிரண சம்பந்தத்தினாலேயே விருத்தியடை

கின்றன. அஃதில்லாவிடில் அவைகட்கு வியாதியுண்டாகின்றதென்பது யாவருமறிந்த விஷயமே. ஆதலால் ஓஷதி தேவதைகளைப் பிரார்த்திப்பதும் சூரியனை பிரார்த்திப்பதிலேயே முடிவடைகிறது. இவ்விதமே நேரில் ஸ்துதிக்கப்படும் வஸ்துவிற்கும் சூரியனுக்கும் சம்பந்தத்தை ஊஹித்து தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

முதலனுவாகம் முற்றிற்று.

---

## இரண்டாவது அனுவாகம்.

அ-கை—உண்மையான காலமென்றும் வியாவஹாரிக காலமென்றும் காலம் இருவகைப்படும். *உபாதி சம்பந்தத்தால் நாமரூபத்தை யடைந்த காலத்திற்கு வியாவஹாரிக காலமென்றும்; உபாதிசம்பந்த மற்ற அகண்டமான காலத்திற்கு உண்மையான காலமென்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. வியாவஹாரிகமான அக்காலங்கள் யாவற்றிற்கும் உபாதியாயிருக்கின்ற வஸ்துவை உண்டு பண்ணுகிறவர் சூரியனே என்று இந்த அனுவாகத்தால் உபதேசிக்கப்படுகிறது.

### अथ द्वितीयोऽनुवाकः

स्मृतिः प्रत्यक्षमैतिह्यम्। अनुमानश्चतुष्टयम्।
एतैरादित्यमण्डलम्। सर्वैरेव विधास्यते ॥

---

* இயற்கையில் நாமரூபபேதங்களற்ற வஸ்துவிற்கு அவைகளைக் கற்பிக்கின்ற வேறு வஸ்து உபாதியெனப்படும். ஜலம் என்பது ஒன்றே; ஆயினும் கிணற்று ஜலம், குழாய் ஜலம், சமுத்திரஜலம், குளத்து ஜலம், சமுத்திர ஜலமென வெவ்வேறாக வியவஹரிக்கப் படுகின்றது. இவ்விடத்தில் உபாதியின் வேற்றுமையினாலேயே ஜலத்திற்கும் வேற்றுமை ஏற்பட்டிருக்கின்றது. பிரகிருதஸ்தலத்தில் உபதியாயிருப்பது கிணறு, குளம், குழாய், சமுத்திரம் முதலியனவே. இனி உபயோகிக்கப்படும் உபாதி என்ற பதத்திற்கும் இப்பொருளையே கொள்ளவேண்டும்



| | |
|---|---|
| स्मृतिः | தர்மசாஸ்திரம் |
| प्रत्यक्षम् | (பிரத்யக்ஷம் என்ற பிராமணம்போல் யாவராலும் நம்பவேண்டிய) வேதம் |
| ऐतिह्यम् | இதிஹாசம், புராணம் முதலியன |
| अनुमानः | ஹேதுவைக்கொண்டு ஊஹித்தல் |
| (इत्येतत्)चतुष्टयम् | என்ற இந்த நான்கும் |
| (प्रमाणम्) | (இந்திரியங்களுக்குப் புலப்படக் கூடாத பொருளை) அறிவதற்குச் சாதனம் |
| एतैस्सर्वै रेव | இந்த நான்கு பிரமாணங்களால்தான் |
| आदित्यमराडलम् | சூரியமண்டலமானது |
| विधास्यते | உண்மையான ஸ்வரூபத்துடன் அறியப்படுகின்றது. |

(தா-ம்) இந்திரியங்களுக்குப் புலப்படக்கூடாத வஸ்துக்களை யறிவதற்கு நான்கு பிரமாணங்களிருக்கின்றன. அவை யாவன—1. தர்மசாஸ்திரம். 2. வேதம். 3. இதிஹாஸம், புராணம், வேதத்திலேயேயுள்ள பிராம்மண பாகங்கள். 4. ஹேதுவைக் கண்டு ஊஹித்தல். சூரியமண்டலத்தின் பரிமாணமும் அதற்கும் பூமிக்குமுள்ள தூரமும், அது எவ்விதம் காலவியவஹாரத்தை யுண்டுபண்ணுகிற தென்பதும், மற்றும் இதுபோன்ற விஷயங்களும் இந்திரியங்களுக்குப் புலப்படக்கூடாதனவாதல் பற்றி மேற்கூறிய நான்குவித பிரமாணங்களாலேயே அவை அறியப்பட வேண்டி யிருப்பதால் அவ்விஷயமாய்ச் சாஸ்திரங்கள் எவ்விதங் கூறுகின்றனவோ அவ்விதமே அவைகளை நம்பவேண்டும். சாஸ்திரங்கள் சொல்வதால் மட்டும் எவ்விதம் நம்புவது? அவ்விஷயம் அனுமானத்திற்கும் விஷயமாகுமேயாயின் நம்புவாம் எனின் அதற்குச் சமாதானங் கூறுவாம். ஒரு பிரமாணத்தால் அறியப்படும் விஷயம் மற்றப்பிரமாணத்தால் அறியப்படவில்லை என்றதால் அது நம்பத்தகாததாயாகாது. கருப்பு, சிவப்பு முதலிய நிறங்கள் கண்களாலறியப்படுகின்றன; மற்றவைகளா லறியப்படவில்லை என்பதற்காக கண்ணால் கண்ட ரூபத்தை நம்பாமலிருக்கிறோமா? ஆதலால்

ஒரு பிரமாணத்தால் அறியப்படும் விஷயம் மற்றப் பிரமாணங்களாலு மறியப்பட வேண்டுமென்ற நியமமில்லை. ஆகவே சூரிய மண்டலத்தைப்பற்றி இனி வர்ணிக்கப்படும் விஷயங்கள் யாவையும் சாஸ்திரம் கூறுகின்றபடி இருப்பதாகவே நம்பவேண்டும்.

सूर्यो मरीचिमादत्ते । सर्वस्माद्भुवनादधि ॥
तस्याः पाकविशेषेण । स्मृतं कालविशेषणम् ॥

| | |
|---|---|
| सर्वस्मात् | சகலவிதமான |
| भुवनात् | லோகத்திற்கும் |
| अधि | மேல்பாகத்தில் |
| सूर्यः | சூரியன் |
| मरीचिम् | கிரணத்தை |
| आदत्ते | எடுத்துக்கொள்ளுகிறார் |
| तस्याः | அந்த சூரியகிரணத்தினுடைய |
| पाकविशेषेण | வெப்பத்தால் ஏற்பட்ட வஸ்துக்களின் மாறுபாட்டினால் |
| कालविशेषणम् | காலோபாதியானது |
| स्मृतम् | அறியப்படுகிறது (கல்பிக்கப்படுகிறது). |

(தா-ம்) சூரியகிரணத்தின் சம்பந்தத்தால் ஒஷதிமுதலிய வஸ்துக்களுக்கு விசித்திரமான ரசம், வீர்யம், விபாகம் என்ற மாறுதல் இவை யுண்டாகின்றன. அதனால் சகல பிராணிகளும் க்ஷேமத்தை யடைகின்றன. அஃதுடன் சூரிய கிரணத்தின் வெப்பத்தால் ஜல சம்பந்த மடைந்த வித்தானது முளைக்கின்றது. மற்றுமோர் வெப்பத்தால் பெரியமரமாய் வளருகின்றது. மற்றுமோர் வெப்பத்தால் பூக்கின்றது. மற்றுமோர் வெப்பத்தால் காய்க்கின்றது. அவ்வவற்றைக் கொண்டு முளைக்குங்காலம், வளருங்காலம், பூக்குங்காலம், காய்க்குங்காலம் என்று காலத்தை அழைக்கிறோம். ஆதலால் காலோபாதிகளான முளை, புஷ்பம், முதலியவை சூரிய கிரணத்தாலுண்டான வெப்பத்தாலேற்படுவதால் வியாவஹாரிககால வியவஹாரத்தை நடத்திவைப்பவர் சூரியனே எ-று.



குறிப்பு—உண்டாகக்கூடிய பொருள்கள் யாவும் காலோபாதியாக ஆகலாமாயினும் நியதமாய் ஒன்றை காலோபாதியாக அங்கீகரிக்காவிடில் லோகவியவஹாரம் ஒழுங்காய் நடைபெறாதானதுபற்றி க்ஷணம், முஹூர்த்தம், நாள், மாதம், வருஷம் இவை முதலியவற்றிற்கு நம்மால் காணப்படும் சூரியகதியையே உபாதியாக எடுத்துக் கொள்ளவேண்டும். சூரியகதியானது ஒரு தினத்தில் பல்லாயிரக் கணக்கா யுண்டாகின்றது. "கிரியை என்பது முதலில் ஒரு வஸ்துவிலுண்டாகின்றது. இரண்டாவதாக அந்த வஸ்துவை முன் சேர்த்திருந்த வஸ்துவினிடமிருந்து பிரிக்கின்றது. மூன்றாவதாய் தான் ஆசிரயித்திருக்கும் வஸ்துவிற்கும் அவ்வஸ்து முன்னிருந்த இடத்திற்கு முள்ள சம்பந்தத்தை ஒழித்து விடுகிறது. நான்காவதாய் தான் ஆசிரயித்திருக்கும் வஸ்துவிற்கும் முன்னிருந்த தேசத்தைவிட வேறான தேசத்திற்கும் சம்பந்தத்தை யுண்டுபண்ணுகிறது. ஐந்தாவதாகத் தானும் நாசமடைகிறது" என்றபடி ஒவ்வொரு சூரியகதியும் உண்டான பிறகு 4க்ஷண மிருந்து 5வதுக்ஷணத்தில் நாசமடைகின்றதென்பதை அறிவுக்குக் கொண்டு வரவேண்டும். க்ஷணம் என்று ஒரு காலத்தைக் குறிப்பிடுகிறோமல்லவா? அவ்விதம் எதைக்கொண்டு குறிப்பிடுகிறோமெனின்—உண்டாகும் நிலையிலுள்ள சூரியகதியைக் கொண்டாகிலும், அதனால் ஏற்பட்ட விபாகத்துடன் கூடிய சூரியகதியைக் கொண்டாகிலும், மூன்றாவதாயுண்டாகின்ற சூரியனுக்கும் அவர் முன்னிருந்த தேசத்திற்குமுள்ள சம்பந்த நாசத்துடன் கூடிய சூரியகதியைக் கொண்டாகிலும், நான்காவதாயுண்டாகின்ற வேறுதேசத்தின் சேர்க்கையுடன்கூடிய சூரியகதியைக் கொண்டாகிலும், ஐந்தாவதாய் ஏற்படப் போகின்ற நாசத்தையடையும் தருணத்திலுள்ள சூரியகதியைக் கொண்டாகிலும் குறிப்பிடுகிறோம். மேல்சொல்லியஐந்துவித நிலைமைகளுள்யாதானும் ஒருநிலைமை சூரியகதிக்கு எக்காலத்திலு முண்டாகிக்கொண்டே இருப்பதால் இந்த க்ஷணத்தில் இதைச் செய்தோம் என்பது முதலிய வியவஹாரங்களும் எப்பொழுது முண்டாகலாம். எவ்வளவு காலத்திற்குள் சூரியகதியுண்டாகின்றதோ அதுவும் க்ஷணமே. அதனால் தான்

ஆசிரயித்திருக்கும் சூரியனுக்கும், அவர்முன்னிருந்த தேசத்திற்கும் பிரிவு எவ்வளவு காலத்திற்குள் ஏற்படுகிறதோ அதுவும் க்ஷணமே. இவ்வாறே மற்றவிடங்களிலும் ஊஹித்தறியவேண்டும். இதுவரை சொன்னதிலிருந்து க்ஷணம் என்ற காலத்திற்கு உபாதியாயிருப்பது சூரியகதியே என்று நிச்சயிக்கப்பட்டதாய் ஏற்படுகிறது. இவ்வளவு க்ஷணம் கொண்டது ஒரு நாழிகையென்றும், இவ்வளவு நாழிகை கொண்டது ஒருதினமென்றும், இவ்வளவு தினம் கொண்டது ஒருமாதமென்றும் சோதிட சாஸ்திரங்களில் விரிவாய் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே நாழிகை, தினம், பக்ஷம், மாதம், வருஷம் முதலிய வியாவஹாரிககாலங்கள் யாவும் க்ஷணத்தைக்கொண்டே அறியப்படவேண்டி யிருப்பதாலும், அந்த க்ஷணம் என்பது சூரியகதியைக் கொண்டே அறியப்படவேண்டியிருப்பதாலும் வியாவஹாரிக சகல காலவியவஹாரத்தையும் சூரியனே நடத்திவைக்கிறார் என்று இம்மந்திரத்தால் சூசனஞ் செய்யப்பட்டதா யறியவேண்டும்.

(அ-கை.) மேஷம் என்றராசிக்கு ஒருதடவைவந்த சூரியன் மறுபடி அவ்விடத்திற்கு வருவதற்குள் பலக்ஷணங்கள், பலநாழிகைகள், பலநாட்கள் செல்லுகின்றன. அவ்வளவு காலங்கள் கொண்ட ஒருகாலத்தை "ஒருவருஷம்" என்கிறோம். சூரியன் மேஷம் முதல் மீனம் வரையுள்ள ராசிகளில் சுற்றிச் சுற்றி வருவதால் க்ஷணம், நாழிகை, நாள் முதலிய காலங்களடங்கிய சம்வத்ஸரவியவஹாரமும் திரும்பித்திரும்பி வந்துகொண்டிருக்கின்றதென்று திருஷ்டாந்தத்தை முன்னிட்டு உபதேசிக்கப்படுகின்றது.

नदीव प्रभवात्काचित् । अक्षय्यात्स्यन्दते यथा ॥
तां नद्योऽभिसमायन्ति । सोरुस्सती न निवर्तते ॥

| | |
|---|---|
| काचित् | பிரசித்திபெற்ற |
| नदी | நதி |
| इव | எவ்விதம் |



| | |
|---|---|
| अक्षय्यात् | என்றைக்கும் வற்றாதஜலமுள்ள |
| प्रभवात् | உத்பத்திஸ்தானத்திலிருந்து |
| स्यन्दते | பிரவஹிக்கின்றதோ |
| यथा | எவ்விதம் |
| ताम् | அந்தமஹாநதியை |
| नद्यः | சிறியநதிகள் |
| अभिसमायन्ति | நாலாபக்கங்களிலிருந்தும் வந்தடைகின்றனவோ |
| (यथा) | (எவ்விதம்) |
| सा | அந்தப் பெரிய நதியானது |
| ऊरुस्सती | விஸ்தாரத்தை யடைந்ததாய்க்கொண்டு |
| न निवर्तते | ஒருபொழுதும் வற்றுகிறதில்லையோ. |

एवं नानासमुत्थानाः । कालास्संवत्सꣳश्रिताः ॥
अणुशश्च महशश्च । सर्वे समवयन्ति तम् ॥

| | |
|---|---|
| एवम् | இவ்விதம் |
| नानासमुत्थानाः | பலவிதமான இடங்களிலிருந்துண்டானவைகளும் (பலவிதமானஉபாதிகளாலேற்பட்டவைகளும்) |
| अणुशश्च | க்ஷணம், முகூர்த்தம் முதலிய சிறியவைகளும் |
| महशश्च | பக்ஷம், மாதம் முதலிய பெரியவைகளுமான |
| कालाः | காலங்கள் |
| संवत्सरम् | வருஷம் என்ற காலத்தை |
| श्रिताः | அடைந்திருக்கின்றன. |
| सर्वे | கீழ்ச் சொல்லியகாலங்கள்யாவும் |
| तम् | அந்த சம்வத்ஸரம் என்ற காலத்தை |
| समवयन्ति | சார்ந்திருக்கின்றன. |

குறிப்பு—அதிகமான ஆதரவினால் சம்வத்ஸரம் என்ற காலத்தில் சிறியகாலங்கள் அடங்கி யிருக்கின்றன வென்பதை திருப்பிச் சொன்னதாயறியவேண்டும்.

स तैस्सर्वैस्समाविष्टः । उरुस्सन्न निवर्तते ॥
अधिसंवत्सरं विद्यात् । तदेव लक्षणे ॥

| | |
|---|---|
| सः | அந்த சம்வத்ஸரம் என்ற காலமானது |
| सर्वैः | எல்லாவிதமான |
| तैः | மேல் சொல்லிய சிறியகாலங்களோடு |
| समाविष्टः | கூடினதாயும் |
| ऊरुः | விஸ்தாரமாக (பெரிதாக) |
| सन् | ஆனதாயும் கொண்டு |
| न निवर्तते | ஒருபொழுதும் முடிவடைந்து விடுகிறதில்லை |
| तदेव | ஆனதுபற்றியே |
| लक्षणे | நன்கு ஆராய்ந்து பார்த்து |
| (सूर्यम्) | (சூரியனை) |
| अधिसंवत्सरम् | சம்வத்ஸரம் என்றகாலத்திற்கு யஜமானனாக |
| विद्यात् | அறியவேண்டும். |

தா-ம்—கங்கை, கோதாவரீ, காவேரீமுதலிய மஹாநதிகள் என்றைக்கும் வற்றாதஜலமுள்ள இடத்திலிருந்து உத்பத்தியடைந்து பிறகு பலகிளை நதிகளுடன் சேர்ந்து விரிவடைந்து எவ்விதம் இடைவிடாமல் பிரவஹிக்கின்றனவோ அவ்விதமே சம்வத்ஸரம் என்ற காலமும் * சூரியனிடமிருந்துண்டாகி க்ஷணம், முஹூர்த்தம், நாள், மாதம் முதலிய பல சிறியகாலங்களுடன் சேர்ந்து விரிவடைந்ததாய்க் கொண்டு ஒருபொழுதும் முடிவடையாமல் திரும்பித்திரும்பிவந்து கொண்டிருக்கிறது. "பிரபவ" என்றசம்வத்ஸரம் சென்றவுடன் "விபவ" என்ற சம்வத்ஸரம் வருகின்றது. இவ்விதமே அக்ஷய என்ற சம்வத்ஸரம் வரைச் சென்றபிறகு மறுபடியும் பிரபவ என்ற சம்வத்ஸரமே தொடங்குகின்றது. ஆகவே இவ்விதம் முடிவடையாமல் சம்

* சம்வத்ஸரம் என்ற வியவஹாரம் சூரியகதியாலேயே ஏற்படுவதாய் முன் ஸ்தாபித்திருப்பதால் சம்வத்ஸரமே சூரியனிடமிருந்துண்டானதாய் திருஷ்டாந்ததார்ஷ்டாந்திகபாவம் பொருந்துவதற்காகச் சொல்லப்பட்டதாயறியவேண்டும்.



வத்ஸரங்கள் வந்து கொண்டிருப்பதற்கு மேஷம் முதல் மீனம் வரையுள்ள ராசிகளில் சூரியன் இடைவிடாமல் சஞ்சரிப்பதே காரணமாதலால் சூரியனை சம்வத்ஸரம் என்ற காலத்திற்கு யஜமானனாக ஆராய்ந்தறியவேண்டும்.

அ-கை—சூரியமண்டலத்தில் வசிக்கின்ற பகவான் சகலவிதமான காலவியவஹாரத்தையு முண்டுபண்ணுகிறார் என்பதைசாமானியர்கள் அறியமாட்டார்கள் என்று உபதேசிக்கப்படுகிறது.

अणुभिश्च महद्भिश्च । समारूढः प्रदृश्यते ॥
संवत्सरः प्रत्यक्षेण । नाधिसत्वः प्रदृश्यते ॥

| | |
|---|---|
| अणुभिः | க்ஷணம், முஹூர்த்தம் முதலிய சிறிய காலங்களோடும் |
| महद्भिश्च | பக்ஷம், மாதம் முதலிய பெரிய காலங்களோடும் |
| समारूढः | கூடின |
| संवत्सरः | சம்வத்ஸரம் என்றகாலம் |
| प्रत्यक्षेण | பிரத்யக்ஷமாய் |
| प्रदृश्यते | காணப்படுகின்றது |
| अधिसत्वः | வியாவஹாரிகமான சம்வத்ஸரம் முதலிய காலங்களை உண்டுபண்ணினவரும் சூரிய மண்டலத்தில் வசிப்பவருமான பரமாத்மாவோவென்றால் |
| न प्रदृश्यते | காணப்படுவதில்லை. |

தா-ம்—பேசத்தெரிந்த பிராணிகள் யாவும், க்ஷணம், முஹூர்த்தம், மாதம் முதலிய காலங்களடங்கிய சம்வத்ஸரம் என்ற காலம் ஒன்றிருப்பதாய் வியவஹரிக்கின்றன. இவ்விதமனைவராலும் வியஹரிக்கக்கூடிய நிலைமையிலிருப்பதுபற்றி சம்வத்ஸரம் என்ற காலம் பிரத்யக்ஷமாயிருக்கின்றது என்று சொல்லப்பட்டது. சூரியமண்டலத்தில் வசிக்கின்ற பகவான்

காலோபாதியான ஸூரியகதியை ஏற்படுத்துவதன்மூலம் சகல விதமான காலவியவஹாரத்தையும் நடத்திவைக்கிறார் என்பதை சாஸ்திரப் பயிற்சியற்றவர்கள் அறிவதில்லை. எ-று.

அ-கை—அவ்விதம் சாமான்ய ஜனங்கள் அறியாமலிருப்பதற்குக் காரணத்தை உபதேசிக்கிறார்.

पटरो विक्लिधः पिङ्गः । एवद्वरुणलक्षणम् ॥
यत्रैतदुपदृश्यते । सहस्रं तत्र नीयते ॥

| | |
|---|---|
| पटरः | துணிபோன்ற இமையையுடையதும் |
| विक्लिधः | எப்பொழுதும் ஜலத்தினால் நனைக்கப்பட்டதும் |
| पिङ्गः | சிவப்புமுதலிய நிறமுள்ளதுமான யாதொரு நேத்திரகோளமுண்டோ |
| एतत् | இதுதான் |
| वरुणलक्षणम् | பரமாத்ம வஸ்துவை மறைக்கின்றதா யிருக்கின்றது |
| यत्र | எந்தமாம்ஸ திருஷ்டியுள்ளவர்களால் |
| एतत् | இந்த உலகமானது |
| उपदृश्यते | காணப்படுகிறதோ |
| तत्र | அந்தமாம்ஸ திருஷ்டியுள்ளவர்களால் |
| सहस्रम् | ஆயிரக்கணக்கான க்ஷணம், முஹூர்த்தம் முதலிய காலம் |
| नीयते | வியவஹரிக்கப்படுகிறது. |

தா-ம்—நமது நேத்திர கோளங்களுக்குப் படுதாவைப் போல் இமைகள் இருக்கின்றன. அவை ஜலத்தினால் நனைந்திருக்கின்றவென்பது கண்ணீருண்டாவதிலிருந்து நன்றாய்யாவராலு மறியக்கூடியதே. அதில் கருப்பு, சிவப்பு, வெள்ளை முதலிய வர்ணங்களுமிருக்கின்றன. இத்தகையமாம்ஸ திருஷ்டியை பிரதானமாய்க் கைக்கொண்ட சாமான்ய ஜனங்களால் இந்த ஜகத்தும், க்ஷணம் முஹூர்த்தம் என்று பலவாறாகப் பிரிக்கப்



பட்ட காலங்களுமறியப்படுகின்றன. அவ்விதமாம்ஸ மயமான திருஷ்டியை சாமான்யஜனங்கள் பிரதானமாய்க் கைக்கொண்டிருப்பதால் காலோபாதியை ஏற்படுத்தின பரமாத்ம வஸ்துவின் தத்வம் அறியப்படுவதில்லை. அதாவது—சாஸ்திரங்கள் வாயிலாகவே இதுபோன்ற விஷயங்கள் அறியப்படுவனவன்றி கண்களுக்குப் புலப்படக் கூடியவையல்ல. எ-று.

அ-கை—சாமான்யஜனங்கள் காலத்தை மாத்திரம் வியவஹரிக்கின்றனரே யல்லாது காலோபாதியை ஏற்படுத்தின பகவத்ஸ்வரூபத்தை யறிவதில்லை என்பது மறுபடியு முபதேசிக்கப்படுகிறது.

एकꣳहि शिरो नाना मुखे । कृत्स्नं तदृतुलक्षणम् ॥
उभयतस्सप्तेन्द्रियाणि । जल्पितं त्वेव दिह्यते ॥

| | |
|---|---|
| शिरः | எல்லா அங்கங்களிலும் சிரஸ் பிரதானமாயிருப்பது போல மற்றகாலங்களுட் பிரதானமான சம்வத்ஸரம் என்றகாலம் |
| एकम् | ஒன்று |
| मुखे | முகம் போலுள்ள தக்ஷிணாயனம், உத்தராயனம் இவை |
| नाना | பல (இரண்டு) விதமாக இருக்கின்றன. |
| तत् कृत्स्नम् | அவையாவும் |
| ऋतुलक्षणम् | வசந்தம் முதலிய ருதுக்களின் அடையாளங்களாலறியக் கூடியவைகளாயிருக்கின்றன. |
| उभयतः | தக்ஷிணாயனம் உத்தராயனம் இவைகளில் |
| सप्तेन्द्रियाणि | இந்திரியங்களுக்கு ஆதாரமாயும், முகத்திலிருக்கின்றதாயுமுள்ள 7 துவாரங்களையுடைய* பிராணிகள் உண்டாகின்றன. |

---

* கண்களின் துவாரம் 2, காதுகளின் துவாரம் 2, வாய்துவாரம் 1, மூக்கின் துவாரம் 2, ஆக 7 துவாரங்கள் முகத்திலிருக்கின்றன.

| | |
|---|---|
| इति | என்ற |
| जल्पितंत्वेव | வியவஹாரம் மாத்திரம் |
| दिह्यते | விருத்தியடைகின்றது. |

தா-ம்—வியாவஹாரிககாலம் என்ற அவயவிக்குச் சம்வத்ஸரம் தலையாகவும், தக்ஷிணாயனம், உத்தராயனம் இவ்விரண்டும் முகமாகவு மிருக்கின்றன. தக்ஷிணாயனத்தில் 3ருதுக்களும், உத்தராயனத்தில் 3ருதுக்களும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு ருதுக்களிலும் பதார்த்தங்கள் வெவ்வேறு மாதிரியாய் மாறுகின்றன. அவைகளைக் கொண்டே காலகணிதம் தெரியாதவனும் இப்பொழுது இன்ன ருது. என்பதை அறிந்து கொண்டுவிடலாம். அவ்விதம் ருதுக்களை அறிவதற்குச் சாதனமான அடையாளங்களைக் கொண்டே அந்தந்த ருதுக்களடங்கிய தக்ஷிணாயனம், உத்தராயனம் இவைகளையும் அறிந்துவிடலாம். அவைகளில், உண்டாகக்கூடிய பிராணிகள்யாவும் உண்டாகின்றன என்று சாமான்ய ஜனங்கள் வியவஹாரம் மாத்திரம் செய்கின்றனரே யல்லாது காலவியவஹாரத்தை நடத்திவைக்கின்ற பரமாத்மாவை அறிவதில்லை. எ-று.

அ-கை—மந்திரம் என்றும் பிராம்மணம் என்றும் இரண்டு பிரிவுகள் வேதத்திலிருக்கின்றன. வைதிக சம்பிரதாயத்தை நன்றாயறிந்தவர்கள் எந்த எந்த வாக்யங்களை "மந்திரம்" என்று சொல்லுகிறார்களோ அந்தந்த வாக்யங்களை மந்திரமென்றும், மற்ற வாக்யங்களை பிராம்மணமென்றும் அறியவேண்டும். இவ்விதமே ஜைமினி என்ற மஹருஷியும் **तच्चोदकेषु मन्त्राख्या, शेषे ब्राह्मणशब्दः** என்ற சூத்திரங்களால் கூறி இருக்கிறார். இதுவரை படிக்கப்பட்டவை மந்திரங்கள். இனி பிராம்மணங்கள் படிக்கப் படுகின்றன.

शुक्लकृष्णे संवत्सरस्य । दक्षिणवामयोः पार्श्वयोः ॥
तस्यैषा भवति ।



| | |
|---|---|
| संवत्सरस्य | சம்வத்ஸரம் என்ற காலத்திற்கு |
| दक्षिणवामयोः | வலம் இடமான |
| पार्श्वयोः | பக்கங்களில் |
| शुक्लकृष्णे | வெளுப்பு கருப்பு நிறமுள்ள பகல் இரவுகள் இருக்கின்றன |
| तस्य | இந்த அர்த்தத்தை |
| एषा | இந்த ருக்கானது |
| (प्रतिपादिका) | (சொல்லுகிறதாக) |
| भवति | இருக்கின்றது. |

அ-கை—சம்வத்ஸரத்தின் வலது இடது பாகங்களாக பகல் இரவுகளிருக்கின்றன வென்பதை ஒரு ருக்கும் சொல்லுகிறதென்று முன்கூறப்பட்டது. அந்த ருக்கானது இன்னதென்றுபடித்துக்காண்பித்து உபதேசிக்கப் படுகின்றது.

शुक्रं ते अन्यद्यजतं ते अन्यत् । विषुरूपे अहनी द्यौरिवासि ॥
विश्वा हि माया अवसि स्वधावः । भद्रा ते पूषन्निह रातिरस्त्त्विति ॥

| | |
|---|---|
| पूषन् | உலகத்தை புஷ்டியுள்ளதாய்ச் செய்கின்ற ஓ சூரியனே! |
| ते | தங்களா லுண்டுபண்ணப்படுகின்ற சம்வத்ஸரத்தின் அம்சமாயும் |
| शुक्रम् | வெளுப்பு நிறத்துடன் கூடியதாயுமுள்ள பகல் என்பது |
| अन्यत् | வேறாகவே |
| (अस्ति) | (இருக்கின்றது) |
| ते | தங்களா லுண்டுபண்ணப்படுகின்ற சம்வத்ஸரத்தின் அம்சமாயும் |
| यजतम् | * யாக சம்பந்தமுள்ளதாயு மிருக்கின்ற இராத்திரி என்பது |

* இராத்திரியில் அனுஷ்டிக்க வேண்டியதாய்ச் சில யாகங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வித இராத்திரியின்வகுப்பில் யாக சம்பந்தமற்ற இராத்திரியும் சேர்ந்திருப்பதால் பொதுவாய் எல்லா இராத்திரிகளும் "யாகசம்பந்தமுள்ள" என்று அர்த்தமுள்ள பதத்தால்சொல்லப்படுகின்றன.

| | |
|---|---|
| अन्यत् | வேருகவே |
| (अस्ति) | (இருக்கின்றது) |
| अहनी | பகல், இரவு இவ்விரண்டும் |
| विषुरूपे | முன்சொல்லிய பிரகாரம் ஒன்ருெடொன்று வேறுபட்ட உருவமுள்ள வைகளாய் |
| (स्तः) | (இருக்கின்றன) |
| (त्वम्) | (நீர்) |
| द्यौरिव | அந்தரிக்ஷ லோகம்போல |
| असि | அவைகளின் மத்தியிலிருக்கிறீர்.(அவ்விரண்டு காலங்களும் தங்களாலேயே உண்டுபண்ணப்படுகின்றன) |
| स्वधावः | அன்னத்துடன் கூடின ஓ சூரியனே! |
| विश्वाः | சமஸ்தமான |
| मायाः | பக்ஷம், மாதம் முதலிய ஔபாதிகமான காலங்களைக் |
| अवसि | காப்பாற்றுகிறீர் |
| इह | என்னால் செய்யப்படும் இந்தக் கர்மாவில் |
| ते | தங்களுடைய |
| रातिः | பலத்தின் கொடையானது |
| भद्रा | கல்யாணமாக (அதிகமாக) |
| अस्तु | ஏற்படட்டும் |
| इति | என்ற ருக்கானது இருக்கின்றது (என்று முன்படித்த பிராம்மண வாக்யத்துடன் சேர்த்துக்கொள்ளவும்) |

(தா-ம்) ஜகத்திற்கெல்லாம் புஷ்டியை விளைவிக்கின்ற ஓ சூரியனே! தங்களா லுண்டுபண்ணப் படுகின்ற சம்வத்ஸரத்தின் பாகமாகிய பகல், இரவு இவ்விரண்டும் முறையே வெளுப்பு கருப்பு நிறமுள்ளவைகளாகவும், ஒன்ருெடொன்று முற்றிலும் வேறுபட்டவைகளாகவும் இருக்கின்றன. அந்த ரிக்ஷலோகமானது பூமி சுவர்க்கம் இவ்விரண்டிர்க்கும் மத்தியிலிருந்துகொண்டு எவ்விதம் இரண்டிலும் சம்பந்தமுள்ளதாயிருக்கின்றதோ அவ்விதமே தாங்களும் முற்கூறிய பகல் இரவுகளை நடத்திவைப்பதால் அவ்விரண்டிலும் சம்பந்தமுள்ளவர்களா யிருக்கிறீர்கள். வியாவஹாரிக காலங்கள் யாவற்றையும் தாங்களே காப்பாற்றுகிறீர்கள். அஃதுடன் தம்மை யுபாசிப்பவர்களுக்கு அதிகமாய் அன்னத்தைக் கொடுக்கிறீர்கள். அவ்வித மஹிமை தங்கிய தாங்கள் நான் செய்கின்ற இக்கர்மத்தினுல் திருப்தியடைந்து கோரிய பலன்களை அதிகமாய்க் கொடுத்து அருள் புரியவேண்டும் (எ-று.)



(அ-கை) மேற்சென்றவைகளால் வியாவஹாரிக காலஸ்வரூபம் உபதேசிக்கப்பட்டது. இனி இவ்வனுவாகத்தில் படிக்கப்படுகின்ற பிராம்மண வாக்யங்களால் பாரமார்த்திக காலஸ்வரூபம் உபதேசிக்கப்படுகிறது.

नात्र भुवनम् । न पूषा । न पशवः । नादित्यस्संवत्सर एव प्रत्यक्षेण प्रियतमंविद्यात् । एतद्वै संवत्सरस्य । प्रियतमꣳरूपम् । योऽस्य महानर्थ उत्पत्स्यमानो भवति । इदं पुण्यं कुरुष्वेति । तमाहरणं दद्यात् ।

यथालक्षण ऋतुलक्षणं भुवनꣳसप्तच
इति द्वितीयोऽनुवाकः

| | |
|---|---|
| अत्र | பாரமார்த்திக காலஸ்ரூபத்தில் (அதைப் பற்றி விசாரிக்கும் பொழுது) |
| भुवनम् | லோகமானது |
| न | இல்லை |
| पूषा | புஷ்டியை விளைவிக்கின்ற தேவதை |
| न | இல்லை |
| पशवः | ஜீவராசிகள் |
| न | இல்லை |
| आदित्ययः | சூரியன் |
| न | இல்லை |
| (किन्तु) | ஆனல் |
| संवत्सरएव | க்ஷணம் முஹூர்த்தம் முதலிய அவயவங்களற்ற அகண்டமான காலஸ்ரூபம்தான் |

| | |
|---|---|
| अस्ति | (இருக்கின்றது) |
| प्रत्यक्षेण | (அனைவராலும் கையாளப்படுகின்ற) பிரத்யக்ஷம் என்ற பிரமாணத்தால் |
| प्रियतमम् | பெரும்பாலும் அனைவராலும் விரும்பப்படுகின்ற சுவரூபத்தை (மாத்திரம்) |
| (सर्वोजन्तुः) | (எல்லாப் பிராணியும்) |
| विद्यात् | அறிந்துவிடும் |
| (न वस्तुतत्वम्) | (வஸ்துவின் உண்மையான ஸ்வரூபத்தையறியமாட்டாது) |
| एतद्वै | க்ஷணம் முஹூர்த்தம் முதலியனவே |
| प्रियतमम् | அனைவராலும் மிகவும் விரும்பக்கூடிய |
| संवत्सरस्य | காலத்தினுடைய |
| रूपम् | சுவரூபம் |
| अस्य | இந்த ஜீவனுக்கு |
| उत्पत्स्यमानः | செய்து முடிக்கவேண்டியதாயும் |
| महान् | பெரிய பலத்திற்குச் சாதனமாயுமிருக்கின்ற |
| यः | எந்த |
| अर्थः | காரியம் |
| भवति | இருக்கின்றதோ |
| तम् | அந்த |
| आहरणम् | அநுஷ்டிக்கவேண்டிய காரியத்தை |
| "इदम् | "இது |
| पुण्यम् | நன்மைக்குச் சாதனமாயிருக்கின்றது |
| (तस्मात्) | (ஆகையால்) |
| कुरुष्व" | (இதனை)ச் செய்" |
| इति | என்று |
| दद्यात् | உபதேசம் செய்யவேண்டும். |

(தா-ம்) பாரமார்த்திக காலஸ்வரூபத்தைப்பற்றி விசாரிக்கப் புகுவோமேயாயின் அதில், **सर्वस्माद्भुवनादधि, भद्राते पूषन्निहरातिरस्तु, उभयतस्सप्तेन्द्रियाणि, एतैरादित्यमण्डलम्** என்றவைகளால் வியாவஹாரிக காலசம்பந்தப்பட்டவைகளாய் முற்கூறிய



லோகம், பூஷா என்ற தேவதை, பிராணிகள், சூரியன் இவை கிடையா. வியாவஹாரிக காலஸ்வரூபத்தில் சம்பந்தப்பட்ட உபாதிகள் பாரமார்த்திக காலஸ்ரூபத்திலும் சம்பந்தப்பட்டவையல்ல. பாரமார்த்திக காலஸ்வரூபம் உபாதிசம்பந்த மற்றிருப்பதால் க்ஷணம் முஹூர்த்தம் முதலிய அவயவங்களற்று அகண்டமாய் இருக்கின்றது. அவ்வித பாரமார்த்திக காலசுவரூபம் பெரும்பாலும் யாவராலு மறியப்படவில்லையே யெனின், பெரும்பாலும் சாமானிய ஜனங்கள் மேல்தோற்றத்திலேயே விருப்பமுள்ளவர்களாயும், வஸ்துவின் உண்மையான நிலையை ஆராய்ந்து பார்ப்பதில் சிரத்தை யற்றவர்களாயும், பிரத்யக்ஷம் என்ற பிரமாணத்தையே தாராளமாய் கையாளுகின்றவர்களாயுமிருக்கின்றனர். பிரத்யக்ஷப் பிரமாணத்திற்கு வஸ்துவின் உண்மையான நிலை புலப்படாது. உண்மையில்லாத நிலைதான் புலப்படும். அதுவே மேல்தோற்ற மெனப்படும். அதிலேயே சாமான்ய ஜனங்க ளீடுபடுகின்றனர். ஆனதுபற்றி அம்மேல் தோற்றம் "பிரியதமம்ரூபம்" என்று இவ்விடத்தில் சொல்லப்பட்டது. ஆகவே அனைவர்க்கும் பாரமார்த்திக வஸ்துஸ்வரூபம் புலப்படாமைக்கு ஆராய்ச்சி செய்யாமலிருத்தலே காரணம் என ஏற்படுகின்றது.

தத்வவிசாரம் செய்வதற்குப் பரிபாக மற்றவர்களிடம் இவ்விதம் தத்வோபதேசம் செய்யக்கூடாது. வியாவஹாரிக வஸ்துக்களைக் காண்பித்து "இதன் மேல்தோற்றத்தி லீடுபட்டு இதனை அடையவேண்டுமென விரும்புவதால் அதற்குச் சாதனமான இக்கர்மத்தை இக்காலத்தில் நீ செய்வாயாக" என்றே உபதேசம் செய்யவேண்டும். அதன்படி நடந்து கோரிய பலனையடைந்தும் துக்கமே மேலிடுவதை தனது அனுபவத்தில் கண்டு இவையெல்லாம் உபயோகமில்லையென என்று வைராக்யமடைகிறானே அன்றே தத்வோபதேசம் செய்யவேண்டும் (எ-று)

இரண்டாவது அநுவாகம் முற்றிற்று

———

## மூன்றாவது அநுவாகம்

(அ-கை) வசந்தம், கிரீஷ்மம் முதலிய ருதுக்களை நடத்தி வைப்பவரும் சூரியனே என்று இவ்வநுவாகத்தா லுபதேசிக்கப் படுகின்றது.

### अथ तृतीयोऽनुवाकः।

साकंजानाꣳसप्तथमाहुरेकजम्। षडुद्यमा ऋषयो देवजा इति।
तेषामिष्टानि विहितानि धामशः। स्थात्रे रेजन्ते विकृतानि रूपशः॥

| | |
|---|---|
| ऋषयः | அறிஞர் |
| साकंजानाम् | ஒரே இடத்திலிருந்துண்டான (சூரியகிரணங் களுள்) |
| सप्तथम् | ஏழாவது கிரணத்தை |
| एकजम् | மற்றக் கிரணங்களுண்டாவதற்கு முன்னரே தனிமையா யுண்டானதாகவும் |
| देवजाः | சூரியனிடமிருந் துண்டானவைகளான |
| षट् | மற்ற ஆறு கிரணங்களும் |
| उद्यमाः | உரியின் நாலாபக்கங்களிலுமுள்ள கயிறுகள் போல் ஏழாவது கிரணத்திற்கு உள்பட்டவைகள் |
| इति | எனவும் |
| आहुः | சொல்லுகின்றனர் |
| तेषाम् | அந்த ஆறு கிரணங்களுக்கும் |
| इष्टानि | உரித்தான |
| धामशः | ஸ்தானங்கள் |
| विहितानि | (ஈசுவரனால்) உண்டுபண்ணப்பட் டிருக்கின்றன. |
| (तेच) | (அந்தக் கிரணங்கள்) |
| स्थात्रे | உலகத்தின் க்ஷேமத்திற்காக |
| विकृतानि | வெவ்வேறான |
| रूपशः | ஸ்வபாவமுள்ளவைகளாய் |



| | |
|---|---|
| रेजन्ते | பிரகாசிக்கின்றன. |

(தா-ம்) சூரியனிடம் பிரதானமாய் ஏழு கிரணங்களிருக்கின்றன. அவைகளில் ஏழாவதாய் கணக்கிடப்படும் கிரணமே மற்றெல்லாக் கிரணங்களிலும் முதலிலுண்டானது. அக்கிரணத்தையே சூரியன் எல்லா உலகத்திற்கும் மேலான இடத்தில் எடுத்துகொள்ளுகிறார் என்று **सूर्यो मरीचिमादत्ते। सर्वस्माद्भुवनादधि** என்ற மந்திரத்தா லுபதேசிக்கப்பட்டதாய் அறியவேண்டும். அந்த ஏழாவது கிரணத்திற்கு மற்ற கிரணங்கள் உரியின் அடித்தட்டிற்கு அதன் நாலாபக்கங்களிலுமுள்ள கயிறுகள் போல் பிராதான்யமற்றதாய் சேவகனைப்போ லிருக்கின்றன. அவையே வசந்தம், கிரீஷ்மம் முதலிய ருது வியவஹாரத்திற்கு உபாதியாயு மிருக்கின்றன. இந்த இந்தக் காலத்தில் இந்த இந்தக் கிரணம் பிரகாசிக்கவேண்டுமென்று ஜகத்தின் க்ஷேமத்திற்காக ஈசுவரனால் சிருஷ்டி காலத்திலேயே ஒரு வரையறுக்கப்பட் டிருக்கிறது. அதன்படியே சூரியன் தனது கிரணங்களை வெளியிடுகிறான். ஒருசமயத்தில் வெய்யில் அதிகமாய்க் காய்கின்றது. ஒருசமயத்தில் மழை அதிகமாய்ப் பொழிகின்றது. ஒருசமயத்தில் குளிர்ச்சி அதிகமாயிருக்கின்றது. இவ்வித சம்பவங்கள் வெவ்வேறு குணமுள்ள சூரியனுடைய ஆறு கிரணங்கள் அவ்வக் காலங்களில் பிரகாசிப்பதாலேயே உண்டாகின்றன. மரங்களின் சருகுகளை யுதிர்த்துப் புதிதாய்த் தளிர்க்கும்படிச் செய்கின்ற சூரியகிரணம் எக்காலத்தில் பிரகாசிக்கின்றதோ அக்காலத்தை வசந்தம் என்கிறோம். அதிகமாய் உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய சூரிய கிரணம் எக்காலத்தில் பிரகாசிக்கின்றதோ அக்காலத்தைக் கிரீஷ்மம் என்கிறோம். இவ்விதமே மற்ற ருதுக்கள் விஷயத்திலுமறியவேண்டும். ஆகவே இவ்விதம் ருது வியவஹாரத்தை நடத்திவைப்பவனாய் சூரியனிருப்பதால் அவனை நான் நமஸ்கரிக்கின்றேன் (எ-று)

(அ-கை) வெவ்வேறு குணமுள்ள சூரிய கிரணங்கள் அவ்வக்காலங்களில் பிரகாசிப்பதாலேயே அதிக உஷ்ணம், அதிக மழை முதலிய காரியங்கள் உண்டாகின்றன வென்று உபதே

சித்ததை எவ்விதம் நம்புவது என்ற சந்தேஹத்தைத் தெளிவு படுத்துவதற்காகப் பொதுவில் சிநேகிதனிடம் தப்பெண்ணங் கொள்வது மிகவும் தவறு என்பதை உபதேசிக்கிறார்.

को नु मर्या अमिथितः। सखा सखायमब्रवीत्।
जहाको अस्मदीषते॥

| | |
|---|---|
| मर्याः | ஓ மனிதர்களே! |
| अमिथितः | மற்றவனால் பாதிக்கப்படாத |
| कः | எந்த |
| सखा | சிநேகிதன் |
| सखायम् | தனது சிநேகிதனை |
| जहाकः | (இவன் தம்மைத் திண்டாடும்படி) விடுபவன் |
| अस्मत् | நம்மை |
| ईषते | பீடிக்கிறான் |
| (इति) | (என்று) |
| अब्रवीत् | சொல்லுவான். |

(தா-ம்) எந்த மனிதனாவது நன்மையை உபதேசம் செய்கின்ற தனது சிநேகிதனைப் பார்த்து இவன் நம்மைத் திண்டாடும்படி விடுபவன்; இவன் நமக்கு ஆபத்தை விளைவிப்பவன்; இவனை நம்பக்கூடாதென்று சொல்லுவானா? அவ்விதம் ஒருவன் தனது சிநேகிதனிடமே அவநம்பிக்கை கொள்வானேயாகில் அது எவ்விதம் நியாய விருத்தமோ அவ்விதமே நம்மை அந்தரங்க சுஹிருத்தாகக் கருதி அரிய விஷயங்களை உபதேசிக்கின்ற சாஸ்திரங்களிடம் அவநம்பிக்கைக் கொள்ளுதலும் நியாய விருத்தமே. ஆதலால் சாஸ்திரங்கள் கூறுவதில் அவநம்பிக்கை கொள்ளக்கூடாது. (எ-று)

(அ-கை) மித்திர துரோஹம் செய்தல் முற்றிலும் நியாய விருத்தமான காரியம் என்பது வேறு சாகையிலும் படிக்கப்பட்டிருக்கிறதென்று உபதேசிக்கப்படுகிறது.



यस्तित्याज सखिविदꣳसखायम्। न तस्य वाच्यपि भागो अस्ति॥
यदीꣳश्रृणोत्यलकꣳश्रृणोति। न हि प्रवेद सुकृतस्य पन्थामिति॥

| | |
|---|---|
| यः | எவன் |
| सखिविदम् | தன்னைச் சிநேகிதனாகக் கருதிய |
| सखायम् | மற்ற சிநேகிதனை |
| तित्याज | விட்டு விடுகிறானோ (நம்புவதில்லையோ) |
| तस्य | சிநேகிதத் துரோஹம் செய்த அவனுக்கு |
| वाच्यपि | வேதம் சாஸ்திரம் இவைகளைக் கற்பதினும் |
| भागः | பாக்யமானது |
| न | கிடையாது |
| (अयम्) | (இந்த சிநேகித துரோஹம் செய்த மனிதன்) |
| ईम् | இந்த வேத வாக்யங்களை |
| श्रृणोति | கேட்டபோதிலும் |
| अलकम् | நம்பிக்கை யற்றவனாகவே |
| श्रृणोति | கேட்கிறான் |
| सुकृतस्य | புண்யத்தினுடைய |
| पन्थाम् | மார்க்கத்தை |
| नहिप्रवेद | அறியவேமாட்டான் |
| इति | என்று (வேறு சாகையிலும் கூறப்பட்டிருக்கிறது) |

(தா-ம்) எவன் உள்ளத்தில் அவநம்பிக்கை யுள்ளவனாயிருந்து தன்னை சிநேகிதனாகக் கருதிய மற்றவனை நம்பாமல் விட்டுவிடுகிறானோ அவன் எங்கும் அவநம்புதலையே கொள்வானாதலால் நன்மையை உபதேசிக்கின்ற சாஸ்திரங்களிடத்தும் நம்புதலற்றவனாய் அவைகளைப் படிப்பதற்கே பிரவிருத்திக்க மாட்டான். ஒரு சமயம் படித்தாலும் அவைகளில் நம்பிக்கை யற்றவனாக இருப்பான். அவ்விதம் சாஸ்திரங்களிடத்து அவநம்புதலேற்படுமேயாயின் சாஸ்திரங்கள் வாயிலாகவே அறியவேண்டிய புண்யமார்க்கங்களை யறியாதவனாய் நரகத்தை யடைவான்.

ஆகவே உலகத்தில் சிநேகிதனாக இருக்கின்றவனை நம்பியே எவ்விதம் அவனது உபதேச மொழிகளைக் கேட்டு அதற்

கிணங்க நடக்கின்றோமோ அவ்விதமே **मातापितृसहस्रेभ्योऽपि वत्सलतरं हि शास्त्रम्** (ஆயிரம் மாதா பிதாக்களிலும் சாஸ்திரம் ஜீவர்களிடத்து அதிக பிரேமையுள்ளது) என்றபடி நம்மிடம் அதிக சிநேஹத்தால் பல அரிய விஷயங்களை உபதேசிக்கின்ற சாஸ்திரங்களை நம்பி அதற்கிணங்க நடக்கவேண்டுமென்று இரண்டு மந்திரங்களா லுபதேசிக்கப்பட்டதா யறியவேண்டும். (எ-று)

(அ-கை) பொதுவாய் ருதுக்களின் சுவபாவம் நிரூபிக்கப் படுகின்றது.

ऋतुर्ऋतुना नुद्यमानः । विननादाभिधावः ॥
षष्टिश्च त्रिंशका वल्गाः । शुक्लकृष्णौ च षाष्टिकौ ॥

| | |
|---|---|
| **ऋतुना** | ஒரு ருதுவினால் |
| **नुद्यमानः** | 'வா' என்று தூண்டப்படுகின்ற |
| **ऋतुः** | மற்ற ருதுவானது |
| **अभिधावः** | வேகமாய் ஓடிவந்துகொண்டு |
| **विननाद** | சத்தம் போடுகின்றது |
| **तेषु** | அந்த ருதுக்களில் |
| **षष्टिः** | அறுபது எண்ணுள்ள |
| **त्रिंशकाः** | முப்பது முஹூர்த்தமுள்ள பகல் இரவுகளுடைய |
| **वल्गाः** | சமூஹம் (இருக்கின்றது) |
| **षाष्टिकौ** | சமமாய் இருக்கும்படி இரண்டாகப் பிரிக்கப்பட்ட அறுபது நாட்களின் பாகங்கள் |
| **शुक्लकृष्णौच** | வெளுப்பு கருப்பு நிறமுள்ளவைகளாக (இருக்கின்றன) |

(தா-ம்) வசந்தம் என்ற ருது சென்றவுடன் கிரீஷ்மம் என்ற ருது வந்து விடுகின்றது. மத்தியில் கொஞ்சமும் அவகாசம் ஏற்படுவதில்லை. இவ்விதம் வருவதைக்கொண்டு முன்னிருக்கின்ற ருது தான் செல்லும் பொழுது பின்னிருக்கின்ற ருதுவை இழுத்துத் தனது ஸ்தானத்தில் ஸ்தாபிப்பதாய் இங்கு



உபதேசிக்கப்படுகிறது. அந்தந்த ருதுக்களில் நிகழக்கூடிய கார்யங்கள் கொஞ்சம் கொஞ்சமாகவே ஏற்படுவதால் அதனை அனுசரித்து ருது ஓடிவருகின்றதென்று உபதேசிக்கப் படுகிறது. வசந்தம் முதலிய ருதுக்களில் பிராணிகள் வெவ்வேறு விதமாய் வியவஹரிப்பார்களென்பதை இனி சொல்லப் போகிறோம். அவ்வார்த்தைகள் ருதுக்களால் செய்யப்பட்ட சத்தமாக உபதேசிக்கப்படுகின்றன. முஹூர்த்தம் என்பது இரண்டு நாழிகைகள். ஒரு தினத்தில் 30 முஹூர்த்தங்கள் அடங்கியிருக்கின்றன. 60 தினங்கள் "ஒரு ருது" எனப்படும். சுக்கிலபக்ஷத்தில் சந்திரன் பிரகாசிப்பதால் அப்பதினைந்துதினங்களும் வெளுப்பு நிறமுள்ளவைகளாகவும், கிருஷ்ண பக்ஷத்தில் சந்திரிகை இல்லாததால் அப்பதினைந்து தினங்களும் கருப்பு நிறமுள்ளவைகளாகவும் இருப்பதாலும், அவ்வித சுக்கில பக்ஷம் இரண்டும், கிருஷ்ண பக்ஷம் இரண்டும் ஒரு ருதுவில் அடங்கியிருப்பதாலும் ஒவ்வொரு ருதுக்களின் சமமான இரண்டு பாகங்களில் ஒரு பாகம் வெளுப்பு நிறமுள்ளதாகவும், மற்றபாகம் கருப்பு நிறமுள்ளதாகவு மிருப்பதாய் உபதேசிக்கப்படுவதாக அறியவேண்டும் (எ-று)

(அ-கை) இனி வசந்தம் முதலிய ருதுக்கள் தனித்தனியே வர்ணிக்கப்படுகின்றன. அவைகளில் முதலில் வசந்த ருது வர்ணிக்கப்படுகிறது.

सारागवस्त्रैर्जरदक्षः । वसन्तो वसुभिस्सह ॥
संवत्सरस्य सवितुः । प्रैषकृत्प्रथमः स्मृतः ॥

| | |
|---|---|
| **वसन्तः** | வசந்தம் என்ற ருது |
| **सारागवस्त्रैः** | முற்றிலும் சிவப்பு முதலிய நிறமுள்ள வஸ்திரங்களோடுகூடிய |
| **वसुभिः** | பிரஜைகளின் சுக வாழ்க்கைக்குச் சாதனமான "வஸு" என்ற தேவதைகளோடு |
| **सह** | கூடினதாயும் |

जरदक्षः — ஜலத்தைச் சுத்திசெய்வதில் சாமர்த்யமுள்ளதாயும்
सवितुः — ருதுக்களைத் தூண்டுகின்ற
संवत्सरस्य — சூரியனுடைய
प्रैषकृत् — ஆக்ஞையைச் செய்கின்றதாயும்
प्रथमः — ருதுக்களுள் முதலாவதாயும்
स्मृतः — அறிஞர்களால் உபதேசிக்கப் பட்டிருக்கின்றது.

(தா-ம்) சூரியன் எல்லா ருதுக்களுக்கும் யஜமானனாயிருக்கிறார். அவரது ஆக்ஞையை எல்லா ருதுக்களும் சிரமேற்கொண்டு அதன்படி நடக்கின்றன. அவைகளில் முதலாவதாயிருப்பது "வசந்தம்" என்ற ருது. அக்காலத்தில் மழைக்காலத்திலிருப்பதுபோல் ஜலம் கலக்கமாகயிராமல் தெளிந்திருக்கின்றது. ஸ்திரீ புருஷர்களுக்கு அதிகமாய் சிருங்காரத்தை அக்காலம் விருத்தி செய்யுமாதலால் அவர்கள் கிரீடைகளைச் செய்யும் பொழுது எவ்வித விக்கினமும் நேராமலிருப்பதற்காகவும், ஒருவருக்கொருவரிடம் பற்றுதல் விருத்தியடைவதற்காகவும் மஞ்சள், சிவப்பு முதலிய வர்ணங்களுள்ள வஸ்திரங்களால் "வசு" என்ற தேவதைகளை அலங்காரம் செய்து பூஜை செய்கின்றனர். (எ-று)

अमूनादयतेत्यन्यान् । अमूंश्च परिरक्षतः ॥
एतावाचः प्रयुज्यन्ते । यत्रैतदुपदृश्यते ॥

यत्र — எக்காலத்தில்
एतत् — இந்த வசந்தருது
उपदृश्यते — காணப்படுகிறதோ
तत्र — அக்காலத்தில்
अमून् — இந்த பந்துக்களுக்கு
आदयत — போஜனம் செய்வியுங்கள்
अमूंश्च — தேசாந்தரமிருந்து வந்தவர்களையும்



परिरक्षतः — (வேண்டிய பொருளைக் கொடுத்து) காப்பாற்றுங்கள்
(इति) एता वाचः — என்ற இந்த வார்த்தைகள்
(गृहस्वामिभिः) — (வீட்டிற்கு யஜமானர்களால்)
अन्यान् — மற்றவர்களை (சேவகர்களை)க் குறித்து
प्रयुज्यन्ते — (அதிகமாய்) சொல்லப்படுகின்றன.

(தா-ம்) வசந்தருதுவில் யாகம், உபநயனம், கல்யாணம் முதலிய மங்களகாரியங்களைப் பெரும்பாலும் ஜனங்கள் நடத்துவதால் அச்சமயம் தங்கள் கிருஹத்திற்கு வந்தபந்துக்களுக்குத் தகுந்தபடி மர்யாதையுடன் போஜனம் முதலியவற்றை நடத்திவைக்கும்படியும், தேசாந்தரத்திலிருந்து வந்த வழிப்போக்கர்களுக்குப் போஜனாதிகளைச் செய்வித்து வேண்டுவனவற்றைக் கொடுத்துக் காப்பாற்றும்படியும் தமது வேலைக்காரர்களைத் தூண்டுகின்றனர். இது போன்ற வார்த்தைகள் பெரும்பாலும் வசந்தருதுவில் எங்கும் கேட்கப்படும். (எ-று)

एतदेव विजानीयात् । प्रमाणं कालपर्यये ॥
विशेषणं तु वक्ष्यामः । ऋतूनां तन्निबोधत ॥

एतदेव — சென்ற இரண்டு மந்திரங்களாலுபதேசிக்கப் பட்ட வசந்த ருதுவின் அசாதாரண குணத்தையே
कालपर्यये — கிரீஷ்மம் முதலிய ருதுக்களின் வேற்றுமையில்
प्रमाणम् — பிரமாணமாக
विजानीयात् — அறியவேண்டும்
ऋतूनां — கிரீஷ்மம் முதலிய ருதுக்களுடைய
विशेषणं तु — மற்றவைகளுக்கில்லாத குணத்தை
वक्ष्यामः — சொல்லுகிறோம்.
तत् — அதை
निबोधत — கேளுங்கள்.

(தா-ம்) "வசந்தம் என்றருது மேல்சொல்லிய பிரகாரம் எவ்விதம் அசாதாரண (மற்றவைகளுக்கில்லாத) குணமுள்ளதாயிருக்கின்றதோ அவ்விதமே மற்ற ருதுக்களும் அசாதாரண குணமுள்ளவையாயிருக்கவேண்டும்" என்று ஊஹித்தறியவும்.* இவ்விதம் பொதுவாய் ருதுக்களுக்கு அசாதாரணகுணங்களிருக்கவேண்டுமென்று சித்தித்தவுடன் அவ்வசாதாரணகுணங்கள் எவையெவை என்பதை இனிச்சொல்லுவாம். அதைச்சாவதானமாய்க் கேட்பீர்களாக. (எ-று)

(அ-கை) கிரீஷ்மருது வர்ணிக்கப்படுகிறது.

शुक्लवासा रुद्रगणः । ग्रीष्मेणावर्तते सह ॥

निदहन् पृथिवीꣳसर्वाम् । ज्योतिषाप्रतिख्येन सः ॥

| | |
|---|---|
| रुद्रगणः | பதினொருருத்திரர்களுடைய கூட்டமானது. |
| शुक्लवासाः | வெளுத்த வஸ்திரத்துடன் கூடியதாய் |
| ग्रीष्मेण सह | கிரீஷ்மம் என்றவியவஹாரத்திற்குக் காரணமாகிய சூரியகிரணத்துடன் |
| आवर्तते | வசிக்கின்றது. |
| सः | அந்த ருத்திரகணம் |
| अप्रतिख्येन | ஒப்பற்ற |
| ज्योतिषा | தேஜஸினால் |
| सर्वाम् | சமஸ்தமான |
| पृथिवीम् | பூமியை |
| निदहन् | பொசுக்கிக்கொண்டு (அதிகதாபத்தைக்கொடுத்துக்கொண்டு) |
| (वर्तते) | (இருக்கின்றது.) |

---

* "एतद्दृष्टान्तेनानुमातुं शक्यत्वात्—विमता ग्रीष्माद्यृतवः असाधाण-स्वभावोपेताः । ऋतुत्वात् । वसन्तवदित्यनुमानम्" इति अत्र सायणभाष्यम् ॥



(தா-ம்) கிரீஷ்ம ருதுஎன்று சொல்லப்படும் ஆனி ஆடி இவ்விரண்டுமாதங்களில் வெய்யில் மிகவும் பிரகாசமுள்ளதாயும் சுடுகையுள்ளதாயும் காய்கின்றதென்பதை யாவருமறிவார்கள். அக்காலங்களில் வெளுப்புவஸ்திரம் தரித்தபதினொரு ருத்திரகணங்கள் சூரியனுடன் சஞ்சரிக்கின்றன. ஆனதுபற்றியே வெய்யில் கொடுமையாகவும் வெளுப்பு நிறமுள்ளதாகவு மிருக்கின்றது. (எ-று)

குறிப்பு—இம்மந்திரத்தால் கிரீஷ்மருதுவில் சூரியனுடன் வெளுப்புவஸ்திரம் தரித்த ருத்திரகணங்கள் சஞ்சரிக்கின்றன என்று உபதேசிக்கப்படுவதுபோல் கீழ்வரும் மந்திரங்களாலும் அந்தந்த ருதுக்களில் அந்தந்த தேவதைகள் வெவ்வேறான வேஷத்துடன் சஞ்சரிக்கின்றனர் என்று உபதேசிக்கப்படுகின்றது. அவைகளாலுபதேசிக்கப்பட்ட பிரகாரமே அந்தந்த ருதுக்களில் அந்தந்ததேவதைகள் அவரவர்க்குரிய வேஷத்தோடு சூரியனுடன் சஞ்சரிப்பதாய் த்யானிக்கவேண்டும்.

(அ-கை) இனி வர்ஷருது வர்ணிக்கப்படுகின்றது.

विश्वरूपाणि वासꣳसि । आदित्यानां निबोधत ॥

संवत्सरीणं कर्मफलम् । वर्षाभिर्ददताꣳसह ॥

| | |
|---|---|
| संवत्सरीणम् | ஒருவருஷம் முழுவதும் அநுபவிக்கப் போதுமான |
| कर्मफलम् | பயிரிடுவது முதலிய தொழில்களின் பலன்களை |
| वर्षाभिस्सह | "வர்ஷருது" என்ற வியவஹாரத்திற்குக்காரணமான சூரியகிரணத்துடன் |
| (अवस्थाय) | (இருந்துகொண்டு) |
| ददताम् | கொடுக்கின்ற |
| आदित्यानाम् | தேவர்களுள் ஒருவகுப்பார்களான "ஆதித்யாள்" என்றவர்களுடைய |
| वासꣳसि | வஸ்திரங்களை |

| | |
|---|---|
| विश्वरूपाणि | பலவர்ணங்களுள்ளவைகளாக |
| निबोधत | அறியுங்கள். |

(தா-ம்) வருஷருதுவில் கிருஷி (பயிரிடுவது) முதலிய காரியங்களை ஒழுங்காய் நடத்துபவர்கள் அதன் பலனாகிய நெல் முதலியவற்றை அருவடைக்காலத்திலடைந்து மறுவருஷம் பயிரிட்டு நெல்விளையும்வரையில் அவைகளை உண்டு சுகமனுபவிக்கின்றனர். அவ்விதம் அவர்கள் பயிரிடுவதற்கு வர்ஷருதுவில் வேண்டியவளவு மழைபொழியவேண்டும். இவ்விதம்கிருஷி செய்வதற்கு இன்றியமையாச்சாதனமான மழையை "ஆதித்யாள்" என்றதேவர்கள் சூரியனோடுசஞ்சரித்துக்கொண்டுப் பொழிகின்றனர். ஆனதுபற்றி அந்த "ஆதித்யாள்" என்றதேவர்களே கிருஷிபலத்தைக் கொடுக்கின்றனர் என்று இங்குவர்ணிக்கப்படுகிறது. அவ்வாதித்யர்கள் பலவர்ணமுள்ள வஸ்திரங்களைத்தரித்திருக்கின்றனர். (எ-று)

अदुःखो दुःखचक्षुरिव । *तद्मा पीत इव दृश्यते ॥
शीतेनाव्याथयन्निव । रुरुदक्ष इव दृश्यते ॥

| | |
|---|---|
| (अयम्) | (இந்தவர்ஷருது) |
| अदुःखः | உண்மையில் துக்கமற்றதாயினும். |
| दुःखचक्षुरिव | துக்கத்தையனுபவிக்கின்ற கண்களையுடையதுபோல் |
| दृश्यते | காணப்படுகின்றது |
| तद्मा | அவ்விதமே |
| पीत इव | மஞ்சள் நிறமுள்ளதுபோல் |
| दृश्यते | காணப்படுகின்றது. |
| शीतेन | குளிர்ச்சியான காற்றுமுதலியவற்றால் |
| अव्यथयन्निव | அதிககஷ்டத்தைக் கொடுக்காததாகவே |
| दृश्यते | காணப்படுகின்றது. |
| रुरुदक्ष इव | மான்களைப் போஷிப்பதில்சாமர்த்யமுள்ளதுபோல் |
| दृश्यते | காணப்படுகின்றது. |

* तथापीत इवदृश्यते इति पाठान्तरम् ॥



(தா-ம்) கிரீஷ்மருதுவில் அதிகமாய் வெய்யில் காய்ந்த பிறகு வர்ஷருதுவில் மழைபொழிய ஆரம்பித்தவுடன் உஷ்ணம் மேலிட்டு அதனாலுண்டாகின்ற காமாலைமுதலிய கண்வியாதிகளால் பிராணிகள்வருந்துகின்றன. அவ்விதம் பிராணிகள்வருந்துவதைக்கொண்டு வர்ஷருதுவே நேரில்வருந்துவதாக இங்கு உபதேசிக்கப்படுகிறது. கலியாணத்திற்குவந்தவர்கள் அழுவார்களேயாகில் கலியாணம் அழுகிறதென்று நாம் வியவஹரிப்பதுபோலிதனையும் அறியவேண்டும். மஞ்சட்காமாலை என்றரோகமுள்ள பிராணிகளுக்கு எல்லாப்பொருள்களும் மஞ்சள் நிறமுள்ளதாகவேகாணப்படுமாதலால் அந்தரோகம் பெரும்பாலும் வருஷருதுவிலுண்டாவதுபற்றி வருஷருதுவே மஞ்சள் நிறமுள்ளதுபோல் காணப்படுவதாய் வர்ணிக்கப்படுகிறது. குளிர்ச்சியைக் கொடுக்கின்ற சாரல்காற்று முதலியவற்றால் பனிக்காலத்தில் போல் பிராணிகளுக்கு அதிகக் கஷ்டமுண்டாவதில்லை. இவ்விஷயம் யாவருக்கு மநுபவத்திலிருக்கக்கூடியது. வருஷருதுவில் மிகுந்த மழையினால் மலை, காடு முதலிய விடங்களில் புல் முதலிய உணவுப்பொருள்கள் விருத்தியடைவதால் அவைகளைமேய்ந்து மான்கள் சரீரபுஷ்டியுடன் சந்தோஷமடைகின்றன. இத்தகைய வருஷருதுவிற்குச் சூரியன் நாயகனாக இருக்கிறார் (எ-று)

ह्लादयते ज्वलतश्चैव । शाम्यतश्चास्य चक्षुषी ॥
यावै प्रजा भ्रंश्यन्ते । संवत्सरात्ता भ्रंश्यन्ते ॥

| | |
|---|---|
| (अयम्) | (இந்தவருஷருது) |
| ह्लादयते | எல்லாப்பிராணிகளையும் சந்தோஷப்படுத்துகின்றது. |
| याः | எந்த |
| प्रजाः | ஜனங்கள் |
| भ्रंश्यन्ते | விதைவிதைக்காமல் அந்த ருதுவிலிருந்து நழுவிவிடுகிறார்களோ |
| ताः | அந்த ஜனங்கள் |
| संवत्सरात् | அவ்வருஷத்திலிருந்து |

भ्रश्यन्ते वै — நிச்சயமாய் நழுவினவர்களாயாகின்றனர்.
अस्य — இத்தகைய வருஷருதுவினுடைய
चक्षुषी — கண்கள்
ज्वलतश्चैव — நிச்சயமாய் எல்லாப்பயிர்களையும் காந்தியுள்ளதாகச் செய்கின்றன.
शाम्यतश्च — வெய்யிலாலுண்டான தாபத்தைப் போக்குகின்றன.

(தா-ம்) வர்ஷருது போதுமான மழையைப்பொழிந்து "இவ்வருஷம் பயிரிடுவதற்குப் போதியவளவு மழை பொழிந்துவிட்டது. காடாரம்பங்கள் செழித்துவிடும். சுபிக்ஷமுண்டாகும்" என்றுசொல்லிக்கொண்டு அனைவரும் சந்தோஷமடையும்படி செய்கின்றது. எவர்கள் வர்ஷருதுவில் விதைவிதைக்காமல் சோம்பேரிகளாய் அக்காலத்தை நழுவவிடுகிறார்களோ அவர்கள் அவ்வருஷம் முழுவதையும் இழந்தவர்களாயாகின்றனர். அவர்கள் மறுவருஷம் வர்ஷருதுவில் விதைவிதைத்து அன்னம் கிடைக்கும் வரையில் புஜிக்கஉணவில்லாமல் கஷ்டப்படுவார்கள். பிராணிகளுக்கு உணவுப்பொருள் பிரதானமும் அவசியமுமானது. அது வருஷருதுவினால் கிடைக்கவேண்டியிருக்கின்றது. மேலும் ஷை ருதுவில் செடிகொடிகளும், பிராணிகளும் க்ரீஷ்மருதுவிலுண்டான தாபம் விலகி சந்தோஷமடைகின்றன. இவ்வித சம்பவங்கள் ஷை ருதுவில் நேருவதிலிருந்து வருஷருதுவை ஒரு புருஷனாகப் பாவித்து அவனது பார்வையின் மஹிமையால் அவைகள் உண்டாகின்றன என்று வர்ணிக்கப்படுவதாக அறியவேண்டும். (எ-று)

இனி பிராம்மண வாக்கியங்கள் படிக்கப் படுகின்றன.

याः प्रतितिष्ठन्ति । संवत्सरे ताः
प्रतितिष्ठन्ति । वर्षाभ्य इत्यर्थः ।
शृणोत्यन्यान्सर्वामेव षट् च ।

इति तृतीयोऽनुवाकः ॥ ३ ॥



याः — எந்த ஜனங்கள்
प्रतितिष्ठन्ति — வருஷ ருதுவில் அநுஷ்டிக்கவேண்டிய விதை விதைப்பது முதலிய காரியங்களை ஒழுங்காய்ச் செய்கின்றனரோ
ताः — அந்த ஜனங்கள்
संवत्सरे — அவ்வருஷம் முடிய
प्रतितिष्ठन्ति — சுகமாய் வாழ்கின்றனர்
वर्षाभ्य इति — या वै प्रजाः भ्रश्यन्ते என்ற விடத்தில் "வர்ஷருதுவிலிருந்து" என்று பொருளைக் கொடுக்கக்கூடிய பதமில்லாவிடினும் வர்ஷருதுவிலிருந்து என்று
अर्थः — பொருள் கொள்ளவேண்டும்.

(தா-ம்) வர்ஷருதுவில் விதை விதைப்பது முதலிய காரியங்களை முறையே செய்துகொண்டு எவர்கள் வசிக்கின்றனரோ அவர்கள் அறுவடைக்காலத்தில் போதியவளவு உணவுப் பொருள்களையடைந்து மறுவருஷம் பலன்கிடைக்கும்வரையில் சுகமாய் வாழ்கின்றனர். அவ்விதம் செய்யாதவர்கள் உணவுக்கு வழியில்லாமல் திண்டாடுவார்கள். சூரியன் இத்தகைய வருஷருதுவை நடத்திவைக்கிறார். (எ-று)

மூன்றாவது அநுவாகம் முற்றிற்று

---

நான்காவது அநுவாகம்.

(அ-கை) சரத் என்ற ருதுவர்ணிக்கப்படுகிறது.

अक्षिदुःखोत्थितस्यैव । विप्रसन्ने कनीनिके ॥
आङ्क्ते चाद्गणं नास्ति । ऋभूणां तन्निबोधत ॥

अक्षिदुःखोत्थितस्य — கண்வியாதியினின்றும் விலகின பிராணியினுடைய
कनीनिके — கருவிழிகள்

| | |
|---|---|
| **एव** | எவ்விதம் |
| **विप्रसन्ने** | மிகவும் தெளிவாக |
| **(भवेताम्)** | (இருக்குமோ) |
| **(तथा)** | (அவ்விதம்) |
| **(सर्वम्)** | (எல்லா உலகமும்) |
| **(विप्रसन्नम्)** | (மிகவும் தெளிவுள்ளதாக இருக்கின்றது.) |
| **आङ्क्तेच** | ஜனங்கள் மையிட்டுக் கொள்ளுகின்றனர். |
| **अद्गणम्** | பார்வையைத்தடுக்கின்ற கண்ணீர் முதலியவைகளின் கூட்டம் |
| **नास्ति** | கிடையாது. |
| **तत्** | இஃதெல்லாம் |
| **ऋभूणाम्** | சரத்ருதுவின் அதிபர்களான "ருபு" என்ற தேவர்களுடைய |
| **(सामर्थ्यजातमिति)** | சக்தியாலேற்பட்டதென்று |
| **निबोधत** | அறியுங்கள். |

(தா-ம்) வர்ஷருதுவில் ஆகாசமெல்லாம் மேகங்களால் சூழப்பட்டிருந்தது. திக்குகளெல்லாம் கலக்கம் பூண்டிருந்தன. பூமிகளெல்லாம் சேருள்ளதாய்க்கொண்டு நடப்பவர்க்குக் கஷ்டத்தை விளைவித்தன. கண்வியாதியுள்ளவர்களின் கருவிழிகள் எவ்விதம் ஆபாசத்தில்மூழ்கிக்கிடக்குமோ அவ்விதம் லோகம்முழுவதும் ஆபாசத்தில் மூழ்கிக் கிடப்பதுபோல் காணப்பட்டது. ஒருவனுக்குக் கண்வியாதி வந்து நீங்கினபிறகு அவனது கண்கள் எவ்விதம் மிகவும் தெளிவாய்க் காணப்படுமோ அவ்விதம் சரத்ருதுவில் லோகம் தெளிவடைந்து விளங்குவதாய்க் காணப்படுகிறது. வர்ஷருதுவில் உண்டாகின்றகண்வியாதி சரத்ருதுவில் நீங்கிவிடுவதால் பொருள்களை உற்று நோக்கமுடியாமல் தடுத்துவந்த கண்ணீர் முதலியவற்றால் பிராணிகள் துன்பமடைவதில்லை. கண்களை மைமுதலியவற்றால் அலங்கரித்துக் கொள்ளுகின்றனர். இஃதெல்லாம் சரத்ருதுவில் சூரியனுடன் சஞ்சரிக்கின்ற "ருபு" என்ற தேவர்களின் பிரபாவத்தாலுண்டாயிற்றென்று அறிய வேண்டும். (எ-று)



कनकाभानि वासाꣳसि। अहतानि निबोधत ॥
अन्नमश्नीत मृज्मीत। अहं वो जीवनप्रदः ॥

| | |
|---|---|
| **(तेषामृभूणाम्)** | (சரத்ருதுவில் சூரியனுடன் சஞ்சரிக்கின்ற அந்த "ருபு" என்ற தேவர்களுடைய) |
| **वासाꣳसि** | வஸ்திரங்களை |
| **कनकाभानि** | தங்கத்தின் நிறமுள்ளவைகளாகவும் |
| **अहतानि** | புதியவைகளாகவும் |
| **निबोधत** | அறியுங்கள். |
| **अन्नम्** | அன்னத்தை |
| **अश्नीत** | சாப்பிடுங்கள். |
| **मृज्मीत** | சுத்தி செய்துகொள்ளுங்கள் |
| **अहम्** | நான் |
| **वः** | தங்களுக்கு |
| **जीवनप्रदः** | நல்லவுணவுடன் கூடிய ஜீவனத்தைக் கொடுக்கிறவனாக |
| **(भवामि)** | (ஆகிறேன்) |

एता वाचः प्रयुज्यन्ते। शरद्यत्रोपदृश्यते ॥ १ ॥

| | |
|---|---|
| **यत्र** | எக்காலத்தில் |
| **शरत्** | சரத்ருது |
| **उपदृश्यते** | காணப்படுகிறதோ |
| **एता वाचः** | (அக்காலத்தில்) இந்தவார்த்தைகள் |
| **प्रयुज्यन्ते** | பெரும்பாலும் பிராணிகளால் சொல்லப்படுகின்றன. |

(தா-ம்) சரத்ருதுவில் சூரியனுடன் சஞ்சரிக்கின்ற "ருபு" என்ற தேவர்கள் தங்கத்தின் நிறமுள்ள புதிய வஸ்திரத்தைத் தரித்திருக்கின்றனர். இந்த ருதுவில் அதிகமாய் ஆகாரத்தை உட்கொள்வதால் பெரும்பாலும் வருஷருதுவில் கெடுதல் உண்டாவதுபோல் ஏற்படுவதில்லை. மேலும் உணவுப்பொருள்களும் எங்கும் மிகுதியாய்க் கிடைக்கின்றன. ஆனதுபற்றி "நைகால்

களை சுத்திசெய்து கொள்ளுங்கள், திருப்தி ஏற்படும் வரையில் அன்னத்தைச் சாப்பிடுங்கள்" என்று ஜனங்கள் அதிதிகளையும், பந்துக்களையும் பார்த்து சொல்லுகின்றனர். (எ-று)

இனி ஹேமந்த ருது வர்ணிக்கப்படுகிறது.

अभिधून्वन्तोऽभिघ्नन्त इव । वातवन्तो मरुद्गणाः ॥

मरुद्गणाः "மருத்" என்ற தேவர்களின் கூட்டங்கள்
वातवन्तः கோரமான பனிக்காற்றை யுடையவைகளாய்
अभिधून्वन्तः इव சகல பிராணிகளையும் நடுங்கும்படி செய்கின்றவைகள் போலும்
अभिघ्नन्त इव (भवन्ति) நேரில் நின்று ஹிம்சிப்பவைகள் போலும் (இருக்கின்றன.)

(தா-ம்) ஹேமந்தருதுவில் கோரமான பனிக்காற்று வீசுகின்றது. அதனால் பிராணிகளின் கைகால் முதலிய அவயவங்கள் அசங்குகின்றன. பனியினால் உபத்திரவமும் உண்டாகின்றது. இத்தகைய சம்பவங்கள் இந்தருதுவில் நேருவதால் இந்த ருதுவின் அபிமானிதேவதைகளான "மருத்" என்ற தேவர்கள் பனிக்காற்றாகிற அம்பை எய்து பிராணிகளை நடுங்கும்படிசெய்கின்றவர்கள்போலும், ஹிம்சிக்கிறவர்கள் போலும் இருக்கின்றனர் என்று வர்ணிக்கப்படுகின்றது (எ-று)

अमुतो जेतुमिषुमुखमिव । सन्नद्धास्सह ददृशे ह ॥
अपध्वस्तैर्वस्तिवर्णैरिव । विशिखासः कपर्दिनः ॥

विशिखासः பலவிதகுடுமியுள்ளவர்களும், அல்லது தலையில் மயிரில்லாதவர்களும்
कपर्दिनः தலையில் செடையுள்ளவர்களுமான ஜனங்கள்
अमुतः வாயுலோகத்திலிருந்து
(प्रेरितम्) (விடப்பட்ட)
इषुमुखम् அம்பின் நுனியை



जेतुमिमिव தமது சரீரத்தில் படாமல் தடுத்துக் கொள்வதற்குப்போல்
अपध्वस्तैः அழுக்கடைந்த
वस्तिवर्णैरिव ஆட்டிற் கொப்பான நிறமுள்ள சட்டைகளோடு
सन्नद्धाः கூடினவர்களாய்
सह கூட்டமாக
ददृशेह காணப்படுகின்றனர்.

(தா-ம்) ஹேமந்தருதுவில் மிகவும் குளிர்ச்சியானகாற்று வீசுகின்றது. சத்துருவினால் வில்லில் தொடுத்துவிடப்பட்ட அம்பானது சரீரத்தில் பாய்ந்து எவ்விதம் ஹிம்சையை விளைவிக்குமோ அவ்விதம் அப்பனிக்காற்று பிராணிகளைக் கஷ்டப்படுத்துகின்றது. அக்காலத்தில் ஜனங்கள் வெளுப்பாயும் லேசாயுமிருக்கின்ற வஸ்திரங்களைப் போற்றிக் கொள்வதால் குளிர்ச்சி நிவிருத்தியாகாதானதுபற்றி ஜலம்பட்டபோதிலும் சீக்கிரமாய் நனையாததாயும், கெட்டியாயும், அழுக்கடைந்தாயுமுள்ள சட்டை தலைப்பாகை முதலியவற்றை அணிந்துகொண்டும், உஷ்ணத்திற்காக ஒருவர்மேல் ஒருவர் இடித்துக்கொண்டும் வசிக்கின்றனர். இவ்விதமிருப்பது, சத்துருவினால் விடப்பட்ட குளிர்க் காற்றாகிற அம்பைத் தடுத்துக்கொண்டு அப்பாணத்தை விட்டவனுடன் சண்டை போடுவதற்குத் தயாராக இருப்பதற் கொப்பாக இருக்கின்றது என்று வர்ணிக்கப்படுகிறது. (எ-று.)

अक्रुद्धस्य योत्स्यमानस्य । क्रुद्धस्येव लोहिनी ॥
हेमतश्चक्षुषी विद्यात् । अक्ष्णयोः क्षिपणोरिव ॥ २ ॥

अक्रुद्धस्य உண்மையில் கோபமற்ற
हेमतः பனியுள்ள ஹேமந்த ருதுவினுடைய (அக்காலத்திய பிராணிகளுடைய)
चक्षुषी கண்களை

| | |
|---|---|
| योत्स्यमानस्य | சண்டை போடுவதற்குத் தயாராக யிருப்பவனையும் |
| क्रुद्धस्य | கோபமடைந்தவனையும் |
| अक्षणयोः | கண்களை |
| क्षिपणोः | சுழட்டுகிறவனையுமிருக்கிற மனிதனுடைய |
| चक्षुषीव | கண்களைப்போல் |
| लोहिनी | சிவப்பு நிறமுள்ளவைகளாக |
| वियात् | அறியவேண்டும் |

(தா-ம்) ஹேமந்த ருதுவில் மிகுந்த பனியினால் பிராணிகளுடைய கண்கள் சிவந்திருக்கின்றன. கருவிழிகள் அங்குமிங்கும் அலைகின்றன. இவ்வித மிருப்பதால், சத்தருவினுடன் சண்டை செய்யத் தயாராக இருக்கின்ற புருஷன் சிவந்த கண்களையுடையவனையும், சேவகர்களைக் கண்ஜாடையால் தூண்டுகிறவனுகவும் எவ்வித மிருப்பானே அவ்விதம் எல்லாப் பிராணிகளுமிருக்கின்றனபோல் காணப்படுவதாய் இங்கு வர்ணிக்கப் படுகிறது.

இனி சிசிரம் என்ற ருது வர்ணிக்கப்படுகிறது.

दुर्भिक्षं देवलोकेषु । मनूनामुदकं गृहे ॥
एतावाचः प्रवदन्तीः । वैद्युतो यान्तिशैशिरीः ॥

| | |
|---|---|
| देवलोकेषु | ஆகாசத்தில் |
| उदकम् | ஜலம் |
| दुर्भिक्षम् | யாசித்தாலும் கிடைக்கக்கூடாததாக இருக்கிறது. |
| मनूनाम् | மனிதர்களுடைய |
| गृहे | வீட்டில் |
| उदकम् | (கொஞ்சம்) ஜலமிருக்கின்றது. |
| एताः | இந்த |
| वाचः | வார்த்தைகளை |
| प्रवदन्तीः | சொல்லுகின்றவர்களாயும் |
| वैद्युतः | தாபத்தை அடைந்தவர்களாயும் |



| | |
|---|---|
| शैशिरीः | சிசிர ருதுவி லிருக்கின்றவர்களாயு முள்ள (ஜனங்கள்) |
| यान्ति | செல்லுகின்றனர். |

(தா-ம்) சிசிர ருதுவில் வழிகடந்து செல்லும் ஜனங்கள் மிகுந்த தாபத்தை யடைந்தவர்களாய் "வருஷ ருதுவில் எந்த ஆகாசம் கேட்காமலிருக்கும் பொழுதே அதிகமாய் மழையைப் பொழிந்து ஜனங்களைச் சுகப்படுத்தியதோ அவ்வாகாசத்தில் யாசித்தாலும் எள்ளளவுகூட ஜலம் கிடைப்பதில்லை. தீர்த்த மருந்த வேண்டுமாயின் கிணருள்ள வீடுகளுக்குச் சென்று தீர்த்தத்தை யாசிக்கவேண்டும். வழிகளில் குளம் குட்டைகளெல்லாம் வரண்டு கிடக்கின்றன" என்று சொல்லிக்கொண்டு செல்லுகின்றனர். (எ-று)

(அ-கை.) இனி பிராம்மணவாக்யங்கள் படிக்கப் படுகின்றன.

ता अग्निः पवमाना अन्वैक्षत । इह जीविकामपरिपश्यन् ।
तस्यैषा भवति ॥

| | |
|---|---|
| अग्निः | அக்னியானவர் |
| इह | இந்த லோகத்தில் |
| जीविकाम् | ஜீவிப்பதற்குச் சாதனமான ஜலத்தை |
| अपरिपश्यन् | (தானும் நேரில்) பார்க்காமல் |
| पवमानाः | ஜலமில்லாமையை வெளியிடுகின்ற |
| ताः | அந்த ஜனங்களை |
| अन्वैक्षत | அனுசரித்து ஆலோசனை செய்தார். பிறகு "மருத்" என்றதேவர்களை பிரார்த்தித்தார் |
| तस्य | அந்த அக்நியின் பிரார்த்தனையை |
| एषा | இந்த ருக்கானது |
| प्रतिपादिका | வெளியிடுவதாக |
| भवति | இருக்கின்றது. |

(தா-ம்) சிசிர ருதுவில் பூமியில் ஜலமெல்லாம் வற்றிப் போன சந்தர்ப்பத்தில் அக்னியானவர் "ஜனங்களோ ஓரிடத்திலும் ஜலம் கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். பிராணிகள் ஜீவிப்பதற்கு முக்கிய சாதனமான ஜலத்தை நாமும் பூலோகத்தில் ஓரிடத்திலும் காணவில்லை. இவ்வித மிருக்குமாயின் பிராணிகளுக்கு எவ்விதக் கஷ்டமுண்டாகுமோ. தெரியவில்லை" என்று கவலைப்பட்டு "மருத்" என்ற தேவர்களைப் பிரார்த்தித்தார். அவர் பிரார்த்தனை செய்த மாதிரியை ஒரு ருக்கும் வெளியிடுகின்றது. (எ-று)

(அ-கை.) எந்த ருக் அக்னியின் பிரார்த்தனையை வெளியிடுகின்றதோ அந்த ருக் படிக்கப்படுகிறது.

इहेवः स्वतपसः । मरुस्सूर्यत्वचः ।
शर्म सप्रथा आवृणे ॥

दृश्यत इवावृणे ॥
इति चतुर्थोऽनुवाकः ॥ ४ ॥

| | |
|---|---|
| स्वतपसः | தனக்கு உட்பட்ட தாபத்தை (வெப்பத்தை) யுடையவர்களும் |
| सूर्यत्वचः | சூரியனுக்குச் சமானமான காந்தியை யுடையவர்களுமான |
| मरुतः | ஓ மருத் என்ற தேவர்களே ! |
| वः | தங்களிடமிருந்து |
| शर्म | சுகத்திற்குக் காரணமான ஜலத்தை |
| इहेह | இந்த இந்த விடங்களில் |
| सप्रथा | அதிகமாக (வர்ஷிக்கும்படி) |
| आवृणे | பிரார்த்திக்கிறேன். |

(தா-ம்) ஓ மருத் என்ற தேவர்களே ! தாங்கள் அதிகமாய் வெய்யிலைக் காயும்படி செய்து தாபத்தைக் கொடுக்கவும், தாபத்தைப் போக்குகின்ற மழையைப் பொழியவும் சக்தி வாய்ந்தவர்களாயும், சூரியனுக்கொப்பான காந்தியை யுடையவர்களாயும் தாங்களிருக்கிறீர்கள். ஜலமில்லாமையால் கஷ்டப்படுகின்ற சகலப் பிராணிகளுக்கும் க்ஷேமமுண்டாவதற்காக உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் போதியவளவு மழையைப் பொழிய வேண்டுமாய்த் தங்களைப் பிரார்த்திக்கிறேன் (எ-று.)



நான்காவது அநுவாகம் முற்றிற்று.

ஐந்தாவது அநுவாகம்

(அ-கை) இவ்வனுவாகத்தால் சிசிரருதுவில் சூரியனுடன் சஞ்சரிக்கின்ற "விச்வேதேவாள்" என்ற தேவர்களின் சாமர்த்தியம் முதலியனவை வர்ணிக்கப்படுகின்றன:—

अतिताम्राणि वासाꣳसि । अष्टिवज्रिशतघ्नि च ॥
विश्वे देवा विप्रहरन्ति । अग्निजिह्वा असश्चत ॥

| | |
|---|---|
| (शिशिरर्तुसहभाविनाम्) | சிசிருது வியவஹாரத்திற்கு நிமித்தமான சூரிய கிரணத்துடன் சஞ்சரிக்கின்ற |
| (विश्वेषां देवानाम्) | விச்வே தேவர்களுடைய |
| वासांसि | வஸ்திரங்கள் |
| अतिताम्राणि | மிகவும் சிவந்தவைகளாக இருக்கின்றன. |
| विश्वे देवाः | அந்த விச்வேதேவர்கள் |
| अष्टिवज्रिशतघ्नि च | அஷ்டி, வஜ்ரி, சதக்நி, (ஒரே சமயத்தில் அநேகம் பேர்களைக் கொல்லக்கூடிய ஆயுதம்) என்ற ஆயுதங்களால் |
| विप्रहरन्ति | பலவிதமாய்ச் சத்துருக்களை அடிக்கின்றனர். |
| अग्निजिह्वाः | அக்நியை நாக்காகவுடைய அந்தத்தேவர்கள் |
| असश्चत | ஜயமடைந்ததால் மிகுந்த உத்ஸாஹத்துடன் சத்தம் செய்தனர் (வீரமொழிகளை மொழிந்தனர்.) |

(அ-கை) அந்தவிச்வேதேவர்கள் மொழிந்த வீரவாதங்கள் உபதேசிக்கப் படுகின்றன:—

नैव देवो न मर्त्यः । न राजा वरुणो विभुः ॥

नाग्निर्नेन्द्रो न पवमानः । मतृकच्चन विद्यते ॥

| | |
|---|---|
| कच्चन देवः | தேவவகுப்பைச் சேர்ந்த எந்தத் தேவனும் |
| मातृक् | எங்களுக்கு நிகராக |
| नैवविद्यते | இல்லவே இல்லை. |
| कच्चन मर्त्यः | மனித வகுப்பைச்சேர்ந்த எந்த மனிதனும் |
| मतृक् | எங்களுக்கு நிகராக |
| न विद्यते | இல்லை |
| विभुः | சமர்த்தனும் |
| राजा | ஜலத்திற் கதிபதியுமான |
| वरुणः | வருணன் |
| मातृक् | எங்களுக்கு நிகராக |
| न विद्यते | இல்லை |
| अग्निः | அக்னியும் |
| मातृक् | எங்களுக்கு நிகராக |
| न विद्यते | இல்லை |
| इन्द्रः | இந்திரன் |
| मातृक् | எங்களுக்கு நிகராக |
| न विद्यते | இல்லை |
| पवमानः | வாயுவும் (காற்றும்) |
| मातृक् | எங்களுக்கு நிகராக |
| न विद्यते | இல்லை |

(தா-ம்) சிசிரருதுவில் சூரியனுடன் சஞ்சரிக்கின்ற விச்வேதேவர்கள் மிகவும் சிவந்த வஸ்திரத்தை தரித்திருக்கின்றனர். அவர்கள் இந்தருதுவில் அஷ்டி, வஜ்ரி, சதக்கினி என்ற ஆயுதங்களால் சத்துருக்களை ஹிம்சிக்கின்றனர். அக்நியின் வாயிலாக ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற அந்த விச்வே தேவர்கள் சத்துருஜயம் ஏற்பட்ட பொழுது மிகுந்த உத்ஸாஹ



த்தினால் தேவனோ, மனிதனோ, ஜலாதிபதியும், மிகுந்த சக்தி வாய்ந்தவனுமான வருணனோ, அக்நியோ, இந்திரனோ, வாயுவோ தமக்கு நிகரல்ல வென்று வீரவாதம் மொழிந்தனர். (எ-று)

குறிப்பு:—இதனால் இந்தருதுவில் காரியசித்தியை விரும்புபவன் அக்நியில் ஹோமம்செய்தல்வாயிலாக விச்வேதேவர்களை உபாசிக்கவேண்டு மென்று அறியப்படுகிறது.

दिव्यस्यैका धनुरार्त्निः । पृथिव्यामपरा श्रिता ॥

तस्येन्द्रो वम्रिरूपेण । धनुर्ज्यामछिनत्स्वयम् ॥

| | |
|---|---|
| अस्य | இந்த விச்வேதேவர்களுடைய |
| एका धनुरार्त्निः | வில்லின் ஒரு கோடியானது (மேல் கோடியானது) |
| दिवि श्रिता | த்யுலோகத்தை அடைந்திருக்கின்றது |
| अपरा | வேறு கோடியானது (கீழ்க்கோடியானது) |
| पृथिव्यां श्रिता | பூமியை அடைந்திருக்கிறது |
| इन्द्रः | இந்திரன் |
| स्वयम् | தானே |
| वम्रिरूपेण | கரையான் உருவமாய் |
| तस्य | அந்த விச்வேதேவர்களுடைய |
| धनुर्ज्याम् | வில்லில் கட்டப்பட்டிருக்கும் ஞாண்கயிறை |
| अच्छिनत् | அறுத்தார் |

(தா-ம்) சத்துருக்களைக் கொல்வதற்காக விச்வேதேவர்கள் கையில் தாங்கி யிருக்கிற வில்லினுடைய மேல்கோடி த்யுலோகத்தையும், கீழ்கோடி பூமியையும் தொட்டிருந்தது. இவ்வளவு பெரிய தனுஸைக்கண்டு பயமடைந்த இந்திரன் தானேநேரில் கரையான் உருவமெடுத்து அந்த வில்லில் கட்டி இருந்த ஞாண் கயிறை அறுத்தான் (எ-று)

तदिन्द्रधनुरित्यज्यम् । अभ्रवर्णेषु चक्षते ॥

एतदेव शंयोर्बार्हस्पत्यस्य । एतद्रुद्रस्य धनुः ॥

| | |
|---|---|
| तत् | அந்தவில்லை (அந்தவில்லுக் கொப்பான வடிவத்தை) |
| अभ्रवर्णेषु | மேகத்தில் பட்டிருக்கும் சூரியகிரணத்தில் (பார்த்து) |
| अज्यम् | ஞாண் கயிறில்லாத |
| इन्द्रधनुरिति | "இந்திரதனுஸ்" என்று |
| चक्षते | தெரிந்தவர் சொல்லுகின்றனர் |
| एतदेव | விச்வேதேவர்களின் கையிலிருந்த வில்லே |
| बार्हस्पत्यस्य | பிருஹஸ்பதியின் பிள்ளையான |
| शंयोः | "சம்யு" என்றவருடையதாக இருக்கிறது |
| एतद्धनुः | இந்த வில்லானது |
| रुद्रस्य | ருத்திரனுடையதாகவு மிருக்கின்றது |

(தா-ம்) மேகம் சிறிய துளிகளை வர்ஷித்துக் கொண்டிருக்கும் பொழுது அதன்மேல் சூரியகிரணம்பட்டால் அது பலநிறமுள்ள வில்லுபோல் காணப்படும். அது பூமியிலிருந்து ஆகாசத்தில் வெகுதூரம் சென்றிருப்பது போலிருக்கும். ஞாண்கயிற் கட்டப் பட்டிருப்பதாய்த் தெரியாது. இந்த வில்லானது இந்திரனால் அறுக்கப்பட்ட ஞாண்கயிறையுடைய விச்வேதேவர்களின் வில்லுக்கு ஒப்பாக இருப்பது பற்றி இதையே "ஞாண்கயிறற்ற இந்திரதனுஸ்" என்கின்றனர். விச்வேதேவர்களின் வில்லானது நம்மால் மேகத்தில் பார்க்கப்படுகின்ற பலவர்ணமுள்ள பெரிய வில்லுக்குச் சமானமாகயிருந்தது என்று இதன் கருத்து. விச்வேதேவர்கள் வைத்திருந்த வில்லினாலேயே பிருஹஸ்பதியின் புத்திரனான "சம்யு" என்றவர் தனது காரியத்தைச் சில சமயங்களில் சாதித்துக்கொள்ளுகிறார். ருத்திரனும் இந்தவில்லினாலேயே சத்துரு ஜயம் முதலிய வற்றைப் பெற்றிருக்கிறார். இத்தகையசக்தி வாய்ந்தவில்லை விச்வேதேவர்கள் தரித்திருக்கின்றனர். (எ-று)

(அ-கை) இனி பிராம்மண வாக்யங்கள் படிக்கப்படுகின்றன.



रुद्रस्य त्वेव धनुरार्त्निः। शिर उत्पिपेष। स प्रवर्ग्योऽभवत्। तस्माद्यस्सप्रवर्ग्येण यज्ञेन यजते। रुद्रस्य स शिरः प्रतिदधाति। नैनꣳरुद्र आरुको भवति। य एवं वेद।

श्रिता यजते त्रीणि च।

इति पंचमोऽनुवाकः ॥ ५ ॥

---

| | |
|---|---|
| धनुरार्त्निः | (இந்திரனால் ஞாண்கயிற் அறுக்கப் பட்ட பிறகு மேலே கிளம்பின) வில்லின் மேல் நுனியாது. |
| रुद्रस्यत्वेव | ருத்திரனுடைய |
| शिरः | தலையை |
| उत्पिपेष | மேலேகிளப்பித்தள்ளிப் பொடியாக்கிவிட்டது. |
| सः | அந்தத்தலையானது |
| *प्रवर्ग्यः | "பிரவர்க்யம்" என்ற வைதிக கர்மரூபமாக |
| अभवत् | உண்டாயிற்று. |
| तस्मात् | ஆகையால் |
| यः | எவன் |
| सप्रवर्ग्येण | பிரவர்க்யத்துடன் கூடின |
| यज्ञेन | யாகத்தால் |
| यजते | தேவதையை ஆராதனம் செய்கிறானோ |
| सः | அவன் |
| रुद्रस्य | ருத்திரனுடைய |
| शिरः | தலையை |
| प्रतिदधाति | ஒட்டவைக்கிறான் |
| यः | எவன் |
| एवम् | இவ்விதம் (பிரவர்க்யம் என்றகர்மத்துடன் யாகத்தை அநுஷ்டித்தால் ருத்திரனின் தலையை ஒட்டவைத்ததாயாகும் என்று) |

* இது ஜ்யோதிஷ்டோமம் என்ற கர்மாவிற்கு அங்கமாக அநுஷ்டிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| वेद | அறிகிறானோ |
| एनम् | இவனை |
| रुद्रः | ருத்திரன் |
| आरुकः | ஹிம்சிப்பவனாக |
| न भवति | ஆகிறதில்லை. |

(தா-ம்) விச்வேதேவர்கள் வைத்திருந்தவில்விஷயமாய் பிரசங்க நியாயத்தை யனுசரித்து மற்றும் சிலவிஷயங்கள் இப்பிராம்மண வாக்யங்களா லுபதேசிக்கப்படுகின்றன. ஒருசமயம் ருத்திரன் விச்வேதேவர்கள் வைத்திருந்த பெரியவில்லினால் சத்துருக்களை ஜயித்து ஞாண்கயிறை அவிர்க்காமல் மேல்நுனியில் முவ்வாய்க்கட்டையைவைத்து அமுக்கிக்கொண்டு சமீபத்தில்வருபவரெல்லோரையும் பயமடையும்படி செய்துவந்தார். அச்சமயத்திலும் இந்திரன் கரையான் வடிவமெடுத்து ஞாண்கயிறை அரித்து அறுத்துவிட்டான். நன்றாய் இழுத்துக்கட்டப்பட்டிருந்த ஞாண்கயிறு அறுந்தவுடன் வில்லின்மேல்நுனி வேகமாய் நிமிர ஆரம்பித்து ருத்திரனுடைய தலையைக்கிள்ளிக் கீழே தள்ளிப்பொடியாக்கிவிட்டது. அது "ருத்திரன்" என்ற மஹாபுருஷனின் தலையாதலால்பிறகு "பிரவர்க்யம்" என்றகர்ம வடிவமாயா விர்ப்பவித்தது. ஆகையால் எவன் யாகத்தை பிரவர்க்யம் என்ற கர்மத்துடன் அனுஷ்டிக்கிறானோ அவன் ருத்திரனுடைய தலையை ஒட்ட வைத்தவனாக ஆகிறான். அவனுக்கு ருத்திரன் ஹிம்ஸையைச் செய்வதில்லை; அவர் க்ஷேமத்தைக் கொடுப்பார். பிரவர்க்யம் என்றகர்மத்தை எந்தக் கர்மத்திற்கு அங்கமாய் அனுஷ்டிக்க வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறதோ அக்கர்மத்தில் அதை அநுஷ்டிக்கா விடில் கர்மத்தை முறைபடி அநுஷ்டித்த தாயாக தானது பற்றி அதன் பலன் கிடைக்காதாதலால் இதை அவசியம் அநுஷ்டிக்க வேண்டும் என்பது மேற் சொல்லிய வற்றின் கருத்து. எவன் பிரவர்க்யத்தை அநுஷ்டிப்பதால் ருத்திரனுடைய தலை ஒட்டப்பட்டதா யாகின்றதென்று அறிகிறானோ அவனையும் ருத்திரன் ஹிம்சிப்பதில்லை (எ-று)

ஐந்தாவது அநுவாகம் முற்றிற்று.



ஆறாவது அநுவாகம்

(அ-கை) இவ்வநுவாகத்தாலும் சிசிரருதுவைப்பற்றிவர்ணித்து ருதுவர்ணனை முடிக்கப்படுகிறது.

अत्यूर्ध्वाक्षोऽतिरश्चात्। शिशिरः प्रदृश्यते ।
नैव रूपं न वासाꣳसि। न चक्षुः प्रतिदृश्यते ॥

| | |
|---|---|
| शिशिरः | சிசிரருது |
| अत्यूर्ध्वाक्षः | மிகவும் தூக்கப்பட்ட புருவங்களையுடையதாகவும் |
| अतिरश्चात् | நேரான பார்வையையுடையதாகவும் |
| प्राणिषु | பிராணிகளிடம் |
| प्रदृश्यते | காணப்படுகிறது. |
| (तत्र) | அந்த ருதுவில் |
| रूपम् | சரீரத்தின் ரூபமும் |
| वासाꣳसि | வஸ்திரங்களும் |
| चक्षुः | கண்ணும் |
| न प्रतिदृश्यते | கவனிக்கப்படுவதில்லை. |

(தா-ம்) சிசிரருதுவில் பிராணிகள் செய்கின்ற சேஷ்டைகள்யாவற்றிற்கும் அந்த ருது நிமித்தமாயிருப்பது பற்றி அந்த ருதுவே நேரில் செய்வதாக உபதேசிக்கப்படுகிறது. அவையாவன:—இந்தருதுவில் பிராணிகள் மிகுந்தகுளிரினால் சரீரத்தில் நடுக்கத்தையடைந்து கைகளால் மார்பை அணைத்துக்கொண்டும், வாயினால் "உஸ்" என்று சத்தம் செய்துகொண்டும் இரண்டு புருவங்களை மேலே தூக்குகின்றனர். வலது பக்கமோ இடது பக்கமோ திரும்பிப்பார்க்காமல் நேராகவே பார்க்கின்றனர். சரீரமோ, வஸ்திரமோ அழுக்கடைந்த போதிலும் அவைகளை சுத்திசெய்வதற்காக முயற்சிப்பதில்லை. கண்ணாடியில் கண்களைப்பார்த்து அலங்கரித்துக் கொள்ளக்கூட விரும்புவதில்லை. குளிரைப்போக்கிக் கொள்வதற்கு வேண்டிய சாதனத்தைச் சம்பாதிப்பதில் மாத்திரம் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர் (எ-று)

अन्योन्यं तु न हिंस्त्रातः । सतस्तद्देवलक्षणम् ॥
लोहितोऽक्ष्णि शारशीर्ष्णिः । सूर्यस्योदयनँ प्रति ॥

| | |
|---|---|
| (युद्धोद्युक्तावपि) | யுத்தம் செய்யத்தயாராக உள்ள சத்துருகளும் |
| अन्योन्यम् | ஒருவரை யொருவர் |
| न हिंस्त्रातः | ஹிம்ஸிப்பதில்லை |
| तत् | இவ்விதமிருப்பது |
| सतः | நிகழ்ந்து கொண்டிருக்கிற சிசிர ருதுவிற்கு |
| देवलक्षणम् | சூரியனால் உண்டுபண்ணப்பட்ட அடையாளம் |
| किंच | மேலும் |
| सूर्यस्य | சூரியனுடைய |
| उदयनं प्रति | உதய காலத்தில் |
| *शिशिराभिमानि देवता) | சிசிரருதுவின் அபிமானிதேவதை |
| अक्षिण | கண்ணில் |
| लोहितः | சிவப்பு நிறமுள்ளதாயும் |
| शारशीर्ष्णिः | பெண்கிளியின் நிறமுள்ள தலையை யுடையதாயும் (இருக்கின்றது) |

(தா-ம்) மிகுந்தகுளிரினால் எல்லாப்பிராணிகளும் பாதிக்கப்படுவதால் அவையவைகள் குளிரைப்போக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனவே யல்லாது சண்டை சச்ரவுகளை நடத்தப்புகுவதில்லை. இத்தகைய மிகுந்த குளிரானது சூரியனால் சிசிரருதுவிற்காக ஏற்படுத்தப்பட்ட அடையாளம். சிசிரருதுவின் அபிமானி தேவதை சூரியோதய காலத்தில் சிவந்த சீரம், கண்

* अत्र सर्वत्रोच्यमानेषु कललक्षणेषु यत्प्रजासु संभवति तत्प्रजाद्वारेण कालं लक्षयति । यत्तु प्रजासु न संभवति, तत्साक्षादेव कालाभिमानिदेवताय द्रष्टव्म् इति सायनभाष्यम् ॥



இவைகளை யுடையதாயும், பச்சை நிறமான தலையை யுடையதாயு மிருக்கிறது (எ-று)

त्वं करोषि न्यञ्जलिकाम् । त्वं करोषि निजानुकाम् ॥
निजानुका मे न्यञ्जलिका । अमी वाचमुपासतामिति ॥

| | |
|---|---|
| हे शिशिरर्तो | ஓ சிசிரருதுவே |
| त्वम् | நீ |
| अञ्जलिकाम् | அஞ்ஜலியை |
| निकरोषि | கவிழ்த்துவிடுகிறாய் |
| त्वम् | நீ |
| जानुकाम् | முழங்காலை |
| निकरोषि | பூமியில்படும்படி கவிழ்த்து விடுகிறாய் |
| "जानुका | முழங்கால் |
| (न्यग्भूता) | பூமியில் படும்படி கவிழ்ந்ததாகவும் |
| अञ्जलिका | அஞ்சலியானது |
| (न्यग्भूता") | கவிழ்ந்ததாகவும் இருக்கவேண்டும்' |
| इतिवाचम् | என்ற வார்த்தையை (இதன் பொருளை) |
| अमी | இந்த சிறுவர்கள் |
| उपासताम् | அநுசரிக்கவேண்டும். என்று பெரியோர்கள் உபதேசிக்கின்றனர். |

(தா—ம்) ஓ சிசிரருதுவே! நீ பிராணிகளின் அஞ்ஜலிகளையும் முழங்கால் களையும் கவிழ்த்து விடுகிறாய். அதாவது: மனிதர்கள் அக்நி சமீபம் சென்று குளிர்காயும் பொழுது வயிறு, மார்பு முதலியவற்றில் உஷ்ணம் தாக்குவதற்காக முழங்கால்கள் பூமியில் படும்படி மட்டிபோட்டு உட்கார்ந்து கைகள் இரண்டையும் சேர்தது அக்நியின் மேல் கவிழ்து சூடேரிய பிறகு ஆங்காங்கு ஒத்திக்கொள்ளுகின்றனர். இச்செய்கைக்கு சிசிரருதுகாரணமாயிருப்பதால் சிசிரருது ஷெ செய்கைகளை நேரில் நடத்தி வைப்பதாய் இங்கு சொல்லப்படுகிறது. அக்நி சமீபம் சென்று குளிர்காயத் தெரியாதவர்களுக்கு தெரிந்த பெரியோர்கள்

தாங்கள் காய்வது போல்காயவேண்டுமென்று உபதேசிக்கின்றனர். (எ-று)

तस्मै सर्व ऋतवो नमन्ते । मर्यादाकरत्वात्प्र
पुरोधाम् । ब्राह्मण आप्नोति । य एवं वेद ॥

| | |
|---|---|
| यः ब्राह्मणः | எந்தப்பிராம்மணன் |
| एवम् | சென்ற அநுவாகங்களால் சொல்லப்பட்ட பிரகாரம் ருதுக்களின் சுவபாவத்தை |
| वेद | அறிகிறானோ |
| तस्मै | அவனுக்கு |
| मर्यादाकरत्वात् | அந்தந்தருதுக்களில் நடத்தவேண்டிய தர்மங்களை ஒழுங்காய் நடத்துவதால் |
| सर्वऋतवः | எல்லாருதுக்களும் |
| नमन्ते | வணங்குகின்றன |
| किंच | மேலும் |
| स ब्राह्मणः | அந்தப்பிராம்மணன் |
| पुरोधाम् | மற்ற பிராம்மணர்களுக்குத்தலைவனாயிருத்தலை |
| प्राप्नोति | அடைகிறான் |

(தா-ம்) மேற் சொல்லிய பிரகாரம் எவன்ருதுக்களின் சுவபாவமறிந்து அவ்வவற்றில் அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களை ஒழுங்காய் நடத்தி வருகிறானோ அவனுக்கு அவற்றால் எவ்விதத் தீங்குமுண்டாவதில்லை. அவ்வவற்றில் விளையக்கூடியதான்யம் முதலியவைகள் சமிருத்தியாயுட்டாகின்றன. தெரியாதவர்கள் ருதுஸ்வபாவமறிந்தவனைக் கேட்டுக் கொண்டே அந்தந்தருதுக்களில் நடத்தவேண்டிய தர்மங்களை நடத்தும்படி நேருமாதலால் இவ்வறிஞன் தன்னைப் போன்றவர்களுக்கெல்லாம் தலைவனாகவிளங்குவான் (எ-று)

स खलु संवत्सर एतैस्सेनानीभिस्सह। इन्द्राय सर्वान् कामानभिवहति।
स द्रप्सः। तस्यैषा भवति ॥



| | |
|---|---|
| स खलु-संवत्सरः | சம்வத்ஸரம் என்ற காலத்தை நடத்தி வைக்கின்ற அந்தச் சூரியன் |
| एतैः सेनानीभिस्सह | முன் சொல்லிய வஸுக்கள், 11-ருத்திரர்கள் விச்வேதேவாள் முதலிய சேனாதிபதிகளுடன் |
| इन्द्राय | தன்னை உபாஸிக்கின்ற யஜமானனுக்கு |
| सर्वान्कामान् | விரும்பிய சகலப்பொருள்களையும் |
| अभिवहति | கொடுக்கிறார். |
| सः | அந்தச் சூரியன் |
| द्रप्सः | மழையை உண்டுபண்ணுதல் மூலம் ஜலத்திற்குக் காரணமாயிருக்கிறார். |
| तस्य | இதை |
| एषा | இந்தருக்கானது |
| (प्रतिपादिका) | விளக்கிக்காட்டுவதாக |
| भवति | இருக்கின்றது. |

(தா-ம்) **वसन्तो वसुभिस्सह, शुक्लवासा रुद्रगणाः** என்றவை முதலியவற்றால் அந்தந்த ருதுக்களில் சூரியனுடன் சஞ்சரிப்பவர்களா யுபதேசிக்கப்பட்ட வஸுக்கள், ருத்திரர்கள் முதலிய தேவர்களோடு கூடி இருப்பவனாய் அந்தந்த ருதுக்களின் எவன் சூரியனை யுபாசிக்கிறானோ அவனுக்குச் சூரியன், வஸு முதலிய தேவர்கள் இவர்களின் பிரசாதத்தால் சகல மனோரதங்களும் சித்திக்கின்றன. சூரியன் மழைக்குக் காரணமாக இருப்பதால் அவரை உபாசித்தால் ஜலங்கிடைக்கும். இவ்விஷயத்தைப்பற்றி ஒரு ருக்குமிருக்கின்றது. (எ-று)

(அ-கை) எந்தருக்கானது சூரியன் மழைக்குக் காரணமாக இருக்கிறான் என்று உபதேசிக்கின்றதோ அந்தருக்கானது படிக்கப்படுகின்றது.

अवद्रप्सो अंशुमतीमतिष्ठत्। इयानः कृष्णोदशभिस्सहस्रैः ॥
आवर्तमिन्द्रः शच्याधमन्तम्। उपस्तुहि तं नृमणामथद्रामिति ॥

दशभिस्सहस्त्रैः பதினுயிரக்கணக்கான கிரணங்களால்
इयानः சஞ்சரிக்கின்றதும் (வர்ஷிக்கப்படுகின்றதும்)
कृषणः கிருஷி செய்வதற்குச்சாதனமாயிருக்கின்றது மான
द्रप्सः ஜலமானது
अंशुमतीम् எல்லாவித ஓஷதிகளுடன் கூடியபூமியை
अतिष्ठत् அடைந்திருந்தது.
इन्द्रः மழைக்கு யஜமானனுன நீர்
आवर्तम् அடிக்கடி இங்கு வந்துவந்து
धमन्तम् இடிச்சத்தம் போடுகின்றதாயும்
नृमणाम् மனிதர்களால் எப்பொழுதும் பிரார்த்திக்கக் கூடியதாயும்
अधद्राम् தாழ்ந்த இடத்தில் ஓடும் சுவபாவமுள்ளதாயு மிருக்கின்ற
तम् அந்த ஜலத்தை
शच्या உமது சக்தியால்
उपस्नुहि பூமியில் வர்ஷிப்பீராக
इति என்றருக் வேறு சாகையினுலிருக்கின்றது.

(தா—ம்) आदित्याज्जायते वृष्टिः (சூரியனுல் மழையுண்டாகின்றது) என்ற சாஸ்திரத்தை அநுசரித்தும், யுக்திகளாலும் சூரியனுடைய கிரகணங்களால் உண்டுபண்ணப் படுகின்றதென்று அங்கீகரிக்கக் கூடியதும், கிருஷிசெய்வதற்கு நெருங்கிய சாதனமாயுமுள்ளதுமான ஜலம் சகலவித ஓஷதிகளாலும் நிறைந்த பூமியை முன் அடைந்திருந்தது. இப்பொழுதோ ஜலமெல்லாம் வற்றிப்போய் விட்டன. ஆதலால் ஓ சூரியனே! அடிக்கடி இப்பூமியைத் திரும்பிப்பார்த்து, மேகத்திலிருக்கும் பொழுது இடியை உண்டுபண்ணுகின்றதும், தாழ்ந்த இடத்தை நோக்கிச் சொல்லும் சுவபாவ முடையதும், மனிதர்களால் எப்பொழுது[ம்] விரும்பப்படுகின்றதுமான ஜலத்தை உமது சக்தியால் வர்ஷிப்பீராக. (எ—று)



एतयैवेन्द्रः सलावृक्या सह । असुरान् परिवृश्चति । पृथिव्यंशुमती । तामन्ववस्थितः संवत्सरो दिवं च । नैवं विदुषाचार्यान्तेवासिनौ । अन्योन्यस्मै द्रुह्याताम् । यो द्रुह्याति । भ्रश्यते स्वर्गाल्लोकात् । इत्यृतुमण्डलानि । सूर्य-मण्डलान्याख्यायिकाः । अत ऊर्ध्वंसनिर्वचनाः ॥

यथालक्षणमृतुलक्षणं भुवनंसप्तच ।

इति सप्तमोऽनुवाकः ॥ ७ ॥

इन्द्रः மழைக்கு யஜமானனுன சூரியன்
सलावृक्या ஜலத்தை ஸ்வீகரிக்கின்ற (விரும்புகின்ற)
एतयैव सह இந்தப்பூமிக்காகவே
असुरान् பிராணிகள் உயிருடனிருப்பதற்குச் சாதனமான மேகத்தை
परिवृश्चति நாலாபக்கங்களிலும் துளைக்கிறுர்.
अंशुमति "அம்சுமதி" என்ற பதத்தின்பொருளாக இருப்பது
पृथिवी பூமி.
ताम् அந்தப் பூமியையும்
दिवं च ஆகாசத்தையும்
अन्ववस्थितः காப்பாற்றிக் கொண்டிருக்கிறுர்.
एवम् இவ்விதம் (சூரியனுடைய மஹிமையை)
विदुषा அறிந்திருக்கிற
आचार्यान्तेवासिनौ-ருத்விக் யஜமானர்கள்
अन्योन्यस्मै ஒருவருக்கொருவர்
नद्रुह्याताम् துரோஹம் செய்துகொள்ளக்கூடாது.
यः எவன்
द्रुह्यति துரோஹம் செய்கிறுனே (அவன்)
स्वर्गात्, लोकात् சுவர்க்கலோகத்திலிருந்து
भ्रश्यते நழுவிவிடுகிறுன்.
ऋतुमण्डलानि ருதுக்களை நிரூபிக்கின்றவைகளும்

| | |
|---|---|
| सूर्यमण्डलानि | சூரியமண்டலத்தை நிரூபிக்கின்றவைகளும் |
| आख्यायिकाः | முன் சொல்லிய சமாசாரத்தைத் திருடப்படுத்துகின்ற ருக்குகளும் |
| इति | முற்றிவிட்டன |
| अत ऊर्ध्वम् | இதற்குமேல் |
| सनिर्वचनाः | பிராம்மண வாக்யத்துடன்கூடிய ருக்குகள் படிக்கப்படுகின்றன. |

(தா-ம்) ஜலத்தை விரும்புகின்ற பூமியிலுள்ள ஜனங்கள் கஷ்டமடையாமலிருப்பதற்காக சூரியன் மேகங்களைத் தூண்டி வர்ஷிக்கச்செய்கிறார். மழை பொழியும் பொழுது இடியுண்டாவதால் சூரியன் மேகங்களைத்துளைப்பதாக இங்கு வர்ணிக்கப் படுகிறது. अवद्रप्सो अंशुमतीमतिष्ठत् என்ற மந்திரத்திலுள்ள अंशुमती என்றபதத்திற்கு "பூமி" என்று பொருள் கொள்ள வேண்டும். பிராம்மணவாக்யங்கள் மந்திரத்தின் கருத்தை வெளியிடுவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றமையால் இங்குள்ள வாக்யமும் மந்திரத்தின் கருத்தை வெளியிடுகிறது. இவ்விதம் சூரியனுடையமஹிமையை அறிந்தருத்விக்யஜமானர்கள் ஒருவருக்கொருவர் துரோஹம்செய்து கொள்ளக்கூடாது. அதாவது:—ஒருவனைத்தனக்காகச் சூரியனை உபாசிக்கும்படிசொல்லி அவன்பட்ட சிரமத்திற்குத்தக்கபடி தக்ஷிணை கொடுக்காமலிருப்பதேயஜமானன் ருத்விக்களுக்குச்செய்யும் துரோஹம். ருத்விக்கானதன்னிடம் யஜமானனால் நம்பி விடப்பட்டிருக்கும் கர்மத்தை ஒழுங்காகச் செய்யாமலிருப்பதே யஜமானனுக்கு ருத்விக் செய்யும் துரோஹமாம். சூரியோபாசனத்தால் தேசம்முழுவதுமே சுபிக்ஷமடைவதற்குவேண்டிய மழைமுதலிய பெரியபலன்கள் கிடைப்பதால் இக்கர்மத்தை ஒருவரையொருவர்வஞ்சித்துவிடாமல் ஒழுங்காய் நடத்தவேண்டும். எவன் துரோஹம் செய்கிறானோ அவனுக்குவேறு புண்யகர்மத்தால் கிடைக்கவேண்டிய சுவர்க்கம் முதலிய நல்ல லோகங்களும் கிடைக்காமல்போய் விடும். இதுவரையில் ऋतु ऋतुना नुद्यमानः என்றுதொடங்கி ருதுக்களைவர்ணிக்கின்ற மந்திரங்களும், சூரியமண்டலத்தைப்பற்றி



நிரூபணம் செய்கின்ற एतैरादित्यलम् என்றது முதலிய பாகங்களும், ஒருமந்திரத்தால் நிரூபணஞ் செய்யப்பட்ட சமாசாரத்தையே திருடப்படுத்துவதற்காக शुक्रं ते अन्यत् என்றது முதலியவேறுசாகையிலுள்ள மந்திரவாக்யங்களும் படிக்கப்பட்டன. இனி பிராம்மண வாக்யங்களால் நிரூபிக்கப்பட்ட சமா சாரத்தைத் திருடப்படுத்துவதற்காக வேறுசாகையிலுள்ள ருக்குகளைக் காண்பித்து சூரியமண்டலத்தைப்பற்றி மற்றும் சிலசமாசாரங்கள் உபதேசிக்கப்படும். (எ-று)

## எட்டாவது அநுவாகம்

(அ-கை) இவ்வனுவாகத்தில் சூரியமண்டலத்தைப்பற்றிச் சிலவிஷயங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

आरोगो भ्राजः पटरः पतङ्गः । स्वर्णरो ज्योतिषीमान् विभासः ॥
ते अस्मै सर्वे दिवमातपन्ति । ऊर्जं दुहाना अनपस्फुरन्त इति ॥

| | |
|---|---|
| आरोग इति | ஆரோகன் என்றும், |
| भ्राज इति | பிராஜன் என்றும் |
| पटर इति | படரன் என்றும் |
| पतङ्ग इति | பதங்கன் என்றும் |
| स्वर्णर इति | சுவர்ணரன் என்றும் |
| ज्योतिषीमान् | ஜ்யோதிஷீமான் என்றும் |
| विभासः | விபாஸன் என்றும் (பெயருள்ள) |
| ते सर्वे | அந்த எல்லாச் சூரியன்களும் |
| अस्मै | இந்த லோகத்திற்கு |
| ऊर्जम् | பலத்திற்குச் சாதனமான பால் முதலியவற்றை |
| दुहानाः | காலதில் மழைபொழிதல் வாயிலாகக்கொடுக்கின்றவர்களாகவும் |
| अनपस्फुरन्तः | கெடுதலை விளைவிக்கும்படி பிரகாசிக்காதவர்களாகவும் |

| | |
|---|---|
| दिवम् | ஆகாசத்தில் (இருந்துகொண்டு) |
| आतपन्ति | எங்கும் பிரகாசத்தை கொடுக்கின்றனர் |

कश्यपोऽष्टमः । स महामेरुं न जहाति । तस्यैषा भवति ।

| | |
|---|---|
| कश्यपः | கச்யபன் என்று பெயருள்ள சூரியன் |
| अष्टमः | எட்டாவது |
| सः | அவர் |
| महामेरुम् | மஹாமேரு மலையை |
| न जहाति | விடுகிறதில்லை |
| तस्य | அந்தக் கச்யபன் என்ற சூரியனை |
| एषा | இந்த ருக்கானது |
| प्रतिपादिका | நிரூபணம் செய்கின்றதாக |
| भवति | இருக்கின்றது |

(தா-ம்) ஆரோகன், பிராஜன், படரன், பதங்கன், சுவர்ணரன், ஜ்யோதிஷீமான், விபாஸன், கச்யபன், என்று 8 சூரியர்கள் இருக்கின்றனர். அவர்களுள் 7பேர்கள் இந்த லோகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காகவும், காலத்தில் மழைபொழிந்து புல் முதலியவற்றை விருத்தி செய்து பாலைக்கொடுத்து பிராணிகளை பலிஷ்டர்களாகச் செய்வதற்காகவும் ஆகாசத்தில் பிரகாசிக்கின்றனர். ருதுக்களெல்லாம் சூரியனால் உண்டு பண்ணப்படுவதாய் முன்சொல்லி யிருப்பதால் ஒரு சூரியன் ஒருருதுவை உண்டு பண்ணும் பொழுது மற்ற சூரியர்கள் வேறு ருதுவை உண்டு பண்ணி பிராணிகளுக்குத் தீங்கை விளைவிப்பார்களோ என்று சந்தேஹங்கொள்ளவேண்டாம். ஏனென்றால் எல்லோரும் அநுகூலமாகவே பிரகாசிக்கின்றனர். 8-வதான கச்யபன் என்ற சூரியன் மேருபர்வதத்தைவிட்டு அகலுவதில்லை. அதையே எப்பொழுதும் பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவனைப்பற்றி ஒருருக்கும் வேறு சாகையில் இருக்கின்றது (எ-று)

(அ-கை) கச்யபன் என்ற சூரியனைச் சொல்லுகின்ற ருக் படிக்கப்படுகிறது.



यत्ते शिल्पं कश्यप रोचनावत् । इन्द्रियावत्पुष्कलं चित्रभानु ॥
यस्मिन्त्सूर्या अर्पितास्सप्त साकम् ।
तस्मिन् राजानमधिविश्रयेममिति ॥

| | |
|---|---|
| कश्यप | ஓ கச்யபனே ! |
| ते | உம்முடைய |
| रोचनावत् | பிரகாசமுள்ளதாயும் |
| इन्द्रियावत् | இந்திரியமுள்ளதாயும், அதாவது கண் முதலிய இந்திரியங்களுக்குப் பதார்த்தத்தை அறியும் திறமையைக் கொடுக்கின்றதாயும் |
| पुष्कलम् | நிறைந்ததாயும், அதாவது புஷ்டிக்குச் சாதனமாயும் |
| चित्रभानु | பலவிதகிரணங்களுடன் கூடியதாயுமுள்ள |
| यत्, शिल्पम् | ஜகத்திற் கெல்லாம் வெளிச்சத்தைக் கொடுப்பதென்ற எந்தத் தொழிலுண்டோ |
| यस्मिन् | உலகத்திற்குப் பிரகாசத்தைக் கொடுப்பதென்ற எந்தக்காரியத்தில் |
| सप्तसूर्याः | ஆரோகன் முதலிய ஏழு சூரியர்கள் |
| साकम् | உம்முடன் |
| अर्पिताः | ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனரோ |
| तस्मिन् | அந்தக்காரியத்தில் |
| इमम् | இந்த யஜமானனை |
| राजानम् | காந்தியுள்ளவனாகச் செய்து |
| अधिविश्रय | எல்லோருக்கும் மேலானபதவியில் ஸ்தாபனம் செய்வீராக. |

(தா-ம்) ஓ கச்யபனே ! உமது பிரகாசத்தால் பிராணிகளும், செடிகொடிகளும் ஆரோக்யத்தையடைந்து புஷ்டியையடைகின்றன. தாங்கள் பிரகாசிக்காவிடில் கண்ணால் ஒரு வஸ்துவும் அறியப்படமாட்டாது. தாங்கள் விசித்திரமான சக்திவாய்ந்த கிரணங்களை யுடையவர்களாகவு மிருக்கின்றீர்கள். எல்லாலோகத்திற்கும் பிரகாசத்தைக் கொடுப்பதற்காக ஜகத்

சிருஷ்டி ஏற்பட்டகாலத்திலேயே ஆரோகன் முதலிய 7 சூரியர்கள் உம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். இத்தகைய மஹிமைதங்கிய தாங்கள் இந்த யஜமானனையும் காந்தியுள்ளவனாகச் செய்து எல்லோருக்கும் மேலானபதவியில் ஸ்தாபனம் செய்வீராக. (எ.று)

ते अस्मै सर्वे कश्यपाज्ज्योतिर्लभन्ते ।

तान्त्सोमः कश्यपादधिनिर्द्धमति । भ्रस्ताकर्मकृदिवैवम् ॥

| | |
|---|---|
| ते सर्वे | அந்த ஆரோகன் முதலிய எல்லாச் சூரியரும் |
| अस्मै | உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக |
| कश्यपात् | கச்யபன் என்ற சூரியனிடமிருந்து |
| ज्योतिः | ஒளியை |
| लभन्ते | அடைகின்றனர். |
| तान् | அவர்களை |
| सोमः | சோமன் என்ற தேவன் |
| कश्यपात् | 'கச்யபன்' என்ற சூரியனால் |
| भ्रस्ताकर्मकृदिव | துருத்தியை வைத்துக்கொண்டு வேலை செய்கின்ற தட்டான் முதலியவர்கள் போல |
| अधिनिर्धमति | காந்தியில்லாமை முற்றிலும் விலகி எவ்விதம் அதிக பிரகாசமுள்ளவர்களா யாவார்களோ அவ்விதம் செய்கிறார். |

(தா-ம்) தட்டான் முதலியோர்கள் துருத்தியால் காற்றையுண்டுபண்ணி அக்கினியை வளர்த்து அதில் தங்கம் முதலிய லோஹங்களைப் போட்டு காச்சுவதால் அதன்தோஷங்களைப் போக்கி சுத்திசெய்து எவ்விதம் பிரகாசமுள்ளவைகளாகச் செய்வார்களோ அவ்விதமே 'சோமன்' என்ற தேவன் ஆரோகன்முதலிய ஏழுசூரியர்கள் இயற்கையிலேயே பிரகாசமுள்ளவர்களாயினும் அதிக பிரகாசத்தை யுண்டுபண்ணுவதற்காக அவர்களை 'கச்யபன்' என்ற சூரியனிடம் அழைத்துச்சென்று அவரது அநுக்கிரஹத்தையும் பெறும்படிசெய்து அதிகப்பிரகாசமுள்ளவர்களாகச் செய்தார் (எ-று)



(அ-கை) அந்த ஏழுசூரியர்களின் சுவரூப விஷயத்திலுள்ள மதபேதங்களுபதேசிக்கப்படுகின்றன.

प्राणो जीवानीन्द्रियजीवानि । सप्त शीर्षण्याः प्राणाः ।

सूर्या इत्याचार्याः ॥

| | |
|---|---|
| प्राणः | மூக்கு, வாய் இவை வாயிலாக சஞ்சரிக்கின்ற பிராணவாயுவே |
| सप्तसूर्या इति | ஏழுசூரியர்கள் என்று |
| (केचि) दाचार्याः | சில ஆசிரியர்களும் |
| *जीवानि | உயிருடனிருப்பதற்குச் சாதனமான மஹத், அஹங்காரம், ஐந்து தந்மாத்திரைகள் என்ற தத்துவங்களே |
| सप्तसूर्या इति | ஏழுசூரியர்கள் என்று |
| (केचि) दाचार्याः | சில ஆசிரியர்களும் |
| (मनोबुद्धिसहितानि) | மனது, புத்தி இவைகளுடன் கூடிய |
| इन्द्रियजीवानि | ஜீவிப்பதற்குச் சாதனமான கண், காது முதலிய ஐந்து இந்திரியங்கள் |
| सप्तसूर्या इति | ஏழுசூரியர்கள் என்று |
| (केचि) दाचार्याः | சில ஆசிரியர்களும் |
| शीर्षण्याः | சிரஸில் (முகத்தில்) இருக்கின்ற ஏழு துவாரங்களில் சஞ்சரிக்கின்ற |
| प्राणाः | பிராண வாயுக்கள் |
| सप्तसूर्या इति | ஏழு சூரியர்கள் என்று |
| (केचि) दाचार्याः | சில ஆசிரியர்களும் |
| (आहुः) | சொன்னார்கள். |

* சாங்கியதர்சனத்தில் 25 தத்துவங்கள் உலகில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் மஹத்அஹங்காரம் பிருதிவீ முதலிய ஐந்துபூதங்களின் சூக்ஷ்மகாரணங்கள் என்ற ஐந்து தந்மாத்திரைகள் இவ்வேழு மடங்கி யிருக்கின்றன. அவைகள் இங்கு குறிக்கப்படுகின்றன என்று அறியவேண்டும்.

(தா-ம்) இம்மந்திரத்தில் பிராணன் முதலியனவே 7 சூரியர்கள் என்று ஆசிரியர்கள் கருதுவதாய்ச் சொல்லப்பட்டிருப்தால் பிராணன் முதலியவற்றையே ஏழுசூரியர் என்ற பாவனையுடன் உபாசிக்கவேண்டும் என்பதே ஏழுசூரியர்கள் இருக்கின்றனர் என்று சொன்னதின் கருத்து என்று வெளியாகின்றது (எ-று)

(அ-கை) உண்மையில் ஏழு சூரியர்களை நேரில்கண்டருஷிகள் உபதேசிக்கப்படுகின்றனர்:—

अपश्यमहमेतान्त्सप्त सूर्यानिति । पञ्चकर्णो वात्स्यायनः ।
सप्तकर्णश्च प्लाक्षिः । आनुश्रविक एव नौ कश्यप इति ।
उभौ वेदयिते । न हि शेकुमिव महामेरुं गन्तुम् ।

| | |
|---|---|
| वात्स्यायनः | 'வத்ஸர்' என்றவரின் பிள்ளையான |
| पंचकर्णः | பஞ்சகர்ணர் என்றவரும் |
| प्लाक्षिः | ப்லக்ஷர் என்றவரின் பிள்ளையான |
| सप्तकर्णश्च | 'சப்தகர்ணர்' என்றவரும் |
| एतान्, सप्तसूर्यान् | இந்த ஆரோகன்முதலிய ஏழுசூரியர்களை |
| अहम् | நான் |
| अपश्यम् | பார்த்தேன் |
| इति | என்றும் |
| उभौ | பஞ்சகர்ணர் சப்தகர்ணர் என்ற மஹருஷிகளே |
| कश्यपः | 'கச்யபன்' என்ற சூரியன் |
| नौ | எங்களுக்கும் |
| आनुश्रविकएव | வேதம் வாயிலாகவே ; அறியப்படவேண்டியவனாயிருக்கிறான் |
| इति | என்றும் |
| महामेरुम् | மஹாமேரு என்ற மலையை |
| गन्तुम् | அடைவதற்கு |
| न, हि, शेकुमिव | சக்தியற்றவர்களாகவே இருக்கின்றோம் |



| | |
|---|---|
| इति | என்றும் |
| वेदयिते | போதிக்கின்றனர். |

(தா-ம்) வத்ஸர் என்ற மஹருஷியின் பிள்ளையான 'பஞ்சகர்ணர்' என்ற மஹருஷியும், 'ப்லக்ஷர்' என்ற மஹருஷியின் பிள்ளையான 'சப்தகர்ணர்' என்ற மஹருஷியும் தாங்கள் நேரிலேயே ஆரோகன் முதலிய ஏழு சூரியர்களைப் பார்த்திருப்பதாகவும், ஒருசூரியன் மாத்திரம் சமீபத்திலிருப்பதால் அனைவராலும் பார்க்கப்படுவதாகவும், மற்றவையெல்லாம் மிகவும் தூரத்திலிருப்பதால் பார்க்கப்படவில்லை என்றும், 'மஹாமேரு' என்ற மலைக்குச் செல்வதற்குத்தங்களுக்கும் சக்தியில்லாமையால் அவ்விடத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற 'கச்யபன்' என்ற 8வது சூரியனைத் தாங்களும் நேரில்பார்த்ததில்லை என்றும் यत्तेशिल्पं कश्यप என்ற வேதவாக்கியம் வாயிலாகவே 8வதாக ஒருசூரியனிருப்பதாய்த் தாங்களு மறிவதாகவும் போதிக்கின்றனர். (எ-று)

(அ-கை) எட்டாவதான கச்யபன் என்ற சூரியனை நேரில் கண்டிருக்கிற ருஷியானவர் உபதேசிக்கப்படுகிறார்:—

अपश्यमहमेतत्सूर्यमण्डलं परिवर्तमानम् ।
गार्ग्यः प्राणत्रातः । गच्छन्त महामेरुम् । एकं चाजहतम् ॥

| | |
|---|---|
| गार्ग्यः | கர்க்கரின் பிள்ளையான |
| प्राणत्रातः | 'பிராணத்ராதர்' என்ற மஹருஷியானவர் |
| परिवर्तमानम् | மஹாமேருமலையைச் சுற்றிவருகின்ற |
| एतत्सूर्यमण्डलम् | 'கச்யபன்' என்ற சூரியமண்டலத்தை |
| अहम् | நான் |
| अपश्यम् | பார்த்தேன் |
| महामेरुम् | மஹாமேரு மலைக்கு |
| गच्छन्त | போங்கள். |
| अजहतम् | மஹாமேருமலையை ஒருபொழுதும் விட்டுப்பிரியாதவனான |
| एकम् | கச்யபன் என்ற சூரியனை |

(गच्छतम्) அடையுங்கள்
(इति पञ्चकर्णसप्त-என்று பஞ்சகர்ணர் சப்தகர்ணர் என்ற மஹ
कर्णौप्रत्युवाच) ருஷிகளைக் குறித்துச்சொன்னார்.

(தா-ம்) கர்கரின்பிள்ளையான 'பிராணத்ராதர்' என்றவர் பஞ்சகர்ணர் சப்தகர்ணர் என்றருஷிகளைப்பார்த்து, மஹாமேரு மலையைச்சுற்றிவருகின்ற 'கச்யபன்' என்ற எட்டாவது சூரிய மண்டலத்தைத் தாம் நேரில் பார்த்திருப்பதாகவும், நீங்களும் மஹாமேருமலைக்குச் சென்றால் அவ்விடத்தில் நித்தியம் பிரகாசித்துக்கொண்டிருக்கிற கச்யபனைப்பார்க்கலாம் என்றும் சொன்னார். (எ-று)

(அ-கை) மஹாமேருவுக்குச் செல்லவேண்டிய மார்க்கத்தை யுபதேசிக்கிறார் :—

भ्राजपटरपतङ्गा निहने । तिष्ठन्नातपन्ति । तस्मादिहतप्त्रितपाः ।
अमुत्रेतरे । तस्मादिहातप्त्रितपाः । तेषामेषा भवति ।

भ्राजपटरपतङ्गाः பிராஜன், படரன், பதங்கன் என்ற சூரியர்கள்
निहने மஹாமேரு மார்க்கத்தின் கீழ்பாகத்தில்
तिष्ठन् இருந்துகொண்டு
आतपन्ति பிரகாசிக்கின்றனர்.
तस्मात् ஆகையால்
इह இவ்வுலகில்
तप्त्रितपाः தாபத்தைக் கொடுக்கின்ற கிரணங்களையுடையவர்களாக இருக்கின்றனர்.
इतरे மற்ற சுவர்ணரன், ஜ்யோதிஷீமான், விபாசன் என்ற சூரியர்கள்
अमुत्र மேருமார்க்கத்திற்கு மேல் பாகத்திலிருக்கின்றனர்.
तस्मात् ஆகையால்
इह இவ்வுலகில்



अतप्त्रितपाः தாபத்தைக் கொடுக்கின்ற கிரணங்களையுடையவர்களாயாவதில்லை
तस्य அந்த ஏழு சூரியர்களின் மத்தியிலுள்ள மேருமார்க்கத்தை
एषा இந்தருக்கானது
(प्रतिपादिका) நிருபணஞ் செய்வதாக
भवति இருக்கின்றது.

(தா-ம்.) ஏழு சூரியர்களுள் நம்மால் பார்க்கப்படுகின்ற ஆரோகன் என்ற சூரியனுடைய கதியானது இவ்விதமிருக்கின்ற தென்பது யாவராலு மறியக்கூடியதே. பிராஜன், படரன், பதங்கன் என்ற சூரியர்கள் மேருமார்க்கத்தின் கீழ்பாகத்தில் கீழ்நோக்கிச் செல்லுகின்ற கிரணங்களுடன் பிரகாசிக்கின்றனர். நாமிருக்கும் லோகம் மேருமார்க்கத்திற்குக் கீழாக இருப்பதால் அவர்களின் கிரணங்களால் தாபத்தை யடைகின்றது. சுவர்ண ரன், ஜ்யோதிஷீமான், விபாஸன் என்ற சூரியர்கள் மேருமார்க் கத்தின் மேல்பாகத்தில் மேல்நோக்கிச் செல்லுகின்ற கிரணங்க ளுடன் பிரகாசிக்கின்றனர். ஆனதுபற்றியே அவர்கள் இவ்வுல கத்திற்குத் தாபத்தைக் கொடுப்பதில்லை. ஆதலால் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்பட்ட சூரியர்களின் நடுவில் சூரியகிரண தாபங் கிடையாதாகையால் அவ்வழிகளால் மஹாமேரு மலையை யடையலாம். இவ்விஷயத்தைப் போதிக்கின்ற ருக்கும் வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. (அ-து.)

(அ-கை.) भ्राजपटरपतङ्ग என்ற பாகத்தால் சொல்லப் பட்ட சமாசாரத்தை ஒரு ருக்கும் நிருபணஞ் செய்வதாக முன் சொன்னோம். அந்த ருக்கானது இப்பொழுது படிக்கப்படு கின்றது.

सप्त सूर्या दिवमनुप्रविष्टाः । तानन्वेति पथिभिर्दक्षिणावान् ।
ते अस्मै सर्वे घृतमातपन्ति । ऊर्जं दुहाना अनपस्फुरन्त इति ॥

सप्तसूर्याः ஆரோகன்முதலிய ஏழுசூரியர்கள்
दिवम् ஆகாசத்தை

| | |
|---|---|
| अनुप्रविष्टाः | கிரமமாயடைந்திருக்கின்றனர். |
| दक्षिणावान् | சூரியோபாஸனஞ் செய்தவன் |
| तान् | அந்த ஏழு சூரியர்களை |
| अनु | அனுசரித்து |
| पथिभिः | இரண்டு வகுப்பாய் பிரிக்கப்பட்ட சூரியர்களின் மத்தியிலுள்ள பாதைகளால் |
| एति | மஹாமேருமலையை யடைகிறுர் |
| तेसर्वे | அந்தச் சூரியர்களெல்லோரும் |
| अस्मै | இந்த யஜமானனுக்கு |
| ऊर्जम् | பலத்திற்குச் சாதனமான |
| घृतम् | நெய்முதலிய போக்யவஸ்துக்களை |
| दुहानाः | சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டும் |
| अनपस्फुरन्तः | தாபத்தைக் சொடுக்காதவர்களாகவும் |
| आतपन्ति | பிரகாசிக்கின்றனர். |
| इति | என்ற ருக்கானது வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. |

(தா-ம்) ஆரோகனுக்கு மேற்பாகத்தில் ப்ராஜன், ப்ராஜனுக்குமேற் பாகத்தில் படரன் என்ற கிரமமாய் ஏழுசூரியர்கள் ஆகாசத்திலிருக்கின்றனர். சாஸ்திரத்தில் சொல்லியபடி எவன் சூரியோபாசனஞ் செய்கிருனே அவன் கீழ்நோக்கிச்செல்லும் கிரணங்களை யுடையவர்களென்றும் மேல்நோக்கிச்செல்லும் கிரணங்களையுடையவர்களென்றும் இரண்டுவகுப்பாக முன் பிரிக்கப்பட்ட சூரியர்களின் மத்தியிலுள்ள மார்க்கத்தால் மஹாமேரு மலையை யடைகிருன். அச்சமயத்தில் இவ்வேழுசூரியர்களும் அப்பாதையில் சகலவிதமான போக்யவஸ்துக்களையும் கிடைக்கும்படி செய்து கொண்டும், தாபத்தைக் கொடுக்காமலும் பிரகாசிக்கின்றனர். இங்குவாருங்கள், உட்காருங்கள், சாப்பிடுங்கள் என்று பிரியமான வார்த்தைகளையும் மொழிகின்றனர். (எ-று)

(அ-கை.) ஏழுசூரியர்கள் ருத்விக் வடிவமாயிருக்கின்றனர் என்று உபதேசிக்கப்படுகிறது.



सप्तर्त्विजस्सूर्या इत्याचार्याः । तेषामेषा भवति ।

| | |
|---|---|
| सप्तर्त्विजः | ஹோதா, பிரசாஸ்தா, பிராம்மணுச்சம்ஸீ, போதா, நேஷ்டா, அச்சாவாகன், ஆக்நீத்திரன் என்ற ஏழுருத்விக்குகள் |
| (सप्त) सूर्याइति | ஏழு சூரியர்கள் என்று |
| (केचि) दाचार्याः | சில ஆசிரியர்கள் சொல்லுகின்றனர். |
| तेषाम् | ருத்விக்ரூபர்களான ஏழுசூரியர்களை |
| एषा | இந்தருக்கானது |
| (प्रतिपादिका) | நிரூபணஞ் செய்வதாக |
| भवति | இருக்கின்றது. |

(அ-கை) ருத்விக்ரூபர்களான ஏழுசூர்யர்களைப் போதிக்கின்ற ருக் படிக்கப்படுகிறது.

सप्त दिशो नानासूर्याः । सप्त होतार ऋत्विजः ।
देवा आदित्या ये सप्त । तेभिस्सोमाभीरक्ष ण इति ॥

| | |
|---|---|
| सप्तदिशः | கிழக்குதிக்குதவிற மற்ற ஏழுதிக்குகள் |
| नानासूर्याः | ஒவ்வொருதிசைக்கும் ஒவ்வொரு சூரியன் வீதம் பலசூரியர்களையுடையனவா யிருக்கின்றன. |
| (तेच) | அந்தச் சூரியர்கள் |
| सप्तहोतारः | ஹோதாமுதலிய 7பெயர்களாகிய |
| ऋत्विजः (भूत्वा) | ருத்விக்குகளாக உருவமெடுத்து |
| (चरन्ति) | கர்மத்தை நடத்துகின்றனர். |
| (ये) | இக்கர்மத்தை நடத்திவைக்கின்ற எந்த ஹோதாமுதலிய ருத்விக்குகளுண்டோ |
| (तएव) | அவர்களே |
| देवाः (भूत्वा) | தேவத்தன்மையை யடைந்த பிறகு |
| सप्त आदित्याः | ஏழு சூரியர்கள் (என்று சொல்லப்படுகின்றனர்.) |
| सोम | யாகத்திற்கதிபனுன ஓ சோமனே ! |

| | |
|---|---|
| तेभिः | ஹோதாமுதலியவர்களின் வடிவமான சூரியர்களால் |
| नः | எங்களை |
| अभिरक्ष | காப்பாற்றுவீராக |
| इति | என்ற ருக்கானது வேறுசாகையில் படிக்கப் பட்டிருக்கிறது. |

(தா-ம்) இம்மந்திரத்தால் 'சோமன்' என்ற தேவன் பிரார்த்திக்கப்படுகிறான். ஒ சோமனே! எட்டுத் திக்குகளில் கிழக்கு திசை சூரியனுள்ளதாயிருக்கிற தென்பதை யாவருமறிவார்கள். மற்ற தென்கிழக்கு, தெற்கு முதலிய 7 திசைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியனுள்ளதாகவே இருக்கின்றது. அவ்வேழு சூரியர்கள் ஹோதா, பிரசாஸ்தா, பிராம்மணாச்சம்ஸீ, போதா, நேஷ்டா, அச்சாவாகன், ஆக்நீத்திரன் என்ற ஏழு ஹோதாக்களின் உருவமெடுத்துக்கொண்டு யாகத்தை நடத்தி வைக்கின்றனர். அவர்களே மனிதத்தன்மையைவிட்டு தேவத்தன்மையையடைந்த பிறகு ஏழுசூரியர்கள் என்றழைக்கப்படுகின்றனர். அவர்களை என்னைக்காப்பாற்றும்படித் தூண்டுவீராக. (எ-று.)

(அ-கை) சூரியர்கள் ருத்விக்ரூபமாயிருக்கின்றனர் என்றதை ஸ்திரப்படுத்துவதற்கு மேற்கோளாக எடுத்துப்படிக்கப் பட்டருக்கில் 7 திக்குகளும் ஒவ்வொரு சூரியனுள்ளனவாகவே இருக்கின்றன, என்று சொன்னது சந்தர்ப்பமின்றியே சொல்லப்பட்ட விஷயமாயல்லவோ ஆகின்றதென்று சந்தேகித்துப் பதில் சொல்லுகிறார்:—

तदप्याम्नायः । दिग्भ्राज ऋतून् करोति ।

| | |
|---|---|
| तदपि | திக்குகள் பலவித சூரியர்களுள்ளனவாயிருக்கின்றன என்பதை |
| आम्नायः | வேறு சாகையில்படிக்கப்பட்ட ஒருமந்திரம் (சொல்லுகின்றது.) |



| | |
|---|---|
| दिग्भ्राजः | அந்தந்தத் திசைகளை யடைந்தவர்களாய்க் கொண்டு |
| ऋतून् | வசந்தம் முதலிய ருதுக்களில் சம்பவிக்கின்ற காரியங்களை |
| करोति | உண்டு பண்ணுகின்றனர். |

(தா-ம்) ஒவ்வொருதிக்கும் ஒவ்வொரு சூரியனுள்ளதாயிருக்கின்றதென்பதையும் வேறுசாகையில் படிக்கப்பட்ட ஒருமந்திரம் சொல்வதால் அவ்விஷயமும் இச்சந்தர்ப்பத்தில் நிரூபிக்கத் தகுந்ததே. ஆதலால் சம்பந்தமன்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றறியவும். ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு சூரியனிருந்தேதீரவேண்டு மென்பதில் யுக்தியுமிருக்கின்றது. அதாவது:— எல்லாத் திக்குகளிலும் வசந்தம் முதலிய ருதுக்களில் மரங்கள்தளிர்ப்பது முதலியகாரியங்கள் ஏற்படுவதையாவருமறிவார்கள். அஃது ஒவ்வொருதிக்கிலும் ஒவ்வொரு சூரியனில்லாவிடில் எவ்விதம் சம்பவிக்கும்? ஆதலால் ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு சூரியனிருக்கிறார் என்றே அங்கீகரிக்க வேண்டும். (எ-று)

(அ-கை) கைமுதிக நியாயத்தாலும் ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு சூரியனிருக்கிறாரென்பதை திருடப்படுத்துகிறார்:—

एतयैवावृता सहस्रसूर्यताया इति वैशंपायनः । तस्यैषा भवति ।

**एतयैव आवृता** - மேற்சொல்லிய யுக்தியை அநுசரித்து **सहस्रसूर्यतायाः** - ஆயிரக்கணக்கான சூரியர்கள்வரையில் (கல்பிக்க வேண்டும் ஒவ்வொருதிக்கிலும் ஒவ்வொரு சூரியனிருக்கிறாரென்பதில்யாது ஆச்சரியம்) **इति** - என்று **वैशंपायनः** - வைசம்பாயனர் என்ற மஹருஷியானவர்(அபிப்பிராயப்படுகிறார்.) **तस्य** - ஆயிரக்கணக்கான சூரியர்களிருக்கின்றனர் என்பதை **एषा** இந்தருக்கானது **प्रतिपादिका** - நிரூபணஞ்செய்வதாக **भवति** - இருக்கின்றது.

(அ-கை) அந்த ருக்படிக்கப்படுகிறது:—

यद्द्याव इन्द्र ते शतꣳशतं भूमीः । उतस्युः ।
नत्वा वज्रिन्सहस्रꣳसूर्याः । अनुनजातमष्ट रोदसी इति ।

| | |
|---|---|
| वज्रिन् | வஜ்ஜிரம் என்ற ஆயுதமுள்ள |
| इन्द्र | ஓ இந்திரனே ! |
| ते | உமக்கு |
| शतंद्यावः | நூற்றுக்கணக்கான த்யுலோகங்களும் |
| शतंभूमीः | நூற்றுக்கணக்கான பூலோகங்களும் |
| उतयत्स्युः | இருந்தபோதிலும் |
| सहस्रं सूर्याः | ஆயிரக்கணக்கான சூரியர்கள் |
| रोदसी | த்யுலோகம் பூலோகம்இவைகளின் மத்தியில் |
| जातम् | உண்டாயிருக்கிற |
| त्वा | உன்னை |
| नान्वष्ट | அநுசரித்திருப்பதில்லை. |
| इति | என்ற ருக்கானது வேறுசாகையில் படிக்கப் பட்டிருக்கிறது. |

(தா-ம்) ஓ இந்திரனே ! உமக்கு நூற்றுக்கணக்காக பூலோகங்களும், த்யுலோகங்களு மிருந்தபோதிலும் அவை சூரியர்கள் சஞ்சரிப்பதற்குப் போதியனவாக இல்லை. ஏனென்றால் சூரியர்கள் கணக்கிலடங்காமலிருக்கின்றனர். (எ-று)

(அ-கை) முன்மந்திரத்தால் பல சூரியர்களிருக்கின்றனர் என்று சொல்லியதை யுக்தியாலும் ஸ்தாபிக்கிறார்:—

ननालिङ्गत्वाद्दतूनां ननासूर्यत्वम् ।

**ऋतूनाम्** - ருதுக்களுக்கு **नानालिंगत्वात्** - பலவித அடையாளங்களிருப்பதால் அதாவது பலவிதகாரியங்கள் நிகழுவதால் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சூரியன்வீதம் **नानासूर्यत्वम्** - அநேகம் சூரியர்களிருக்கின்றனர்.

(அ-கை) பலசூரியர்களிருப்பார்களே யாகில் சூரியன் எட்டு என்று முன்சொன்னது எங்ஙனம்? என்றால் சொல்லுகிறார்:—



अष्टौ तु व्यवसिता इति ।

| | |
|---|---|
| अष्टौतु | எட்டு சூரியர்கள்தான் |
| व्यवसिताः | நிச்சயிக்கப்பட்டவர்கள் |
| इति | என்று (அறியவேண்டும்) |

(தா-ம்) அந்தந்த ருதுக்களில் பலவிதமான காரியங்களேற் படுவதால் பல சூரியர்க ளிருக்கவேண்டுமென்று ஊஹித்தது உண்மையேயாகிலும் பஞ்சகர்ணர், சப்தகர்ணர் என்ற மஹருஷிகளால் ஏழுசூரியர்கள் நேரில் பார்க்கப்பட்டவர்களாயிருப்பதாலும், பிராணத்ராதர் என்ற மஹருஷியால் கச்யபன் என்ற 8 வது சூரியனும் நேரில் பார்க்கப் பட்டிருப்பதாலும் 8 சூரியர்கள் தான் ப்ரத்யக்ஷமாய் நிச்சயிக்கப்பட்டவர்கள் என்பது முன் 8 சூரியர்களிருக்கிறார்கள் என்று சொன்னதின் கருத்து என்றறியவும் (எ-று)

सूर्यमण्डलान्यष्टात ऊर्ध्वम् । तेषामेषा भवति ।

**अतः** - பஞ்சகர்ணர், சப்தகர்ணர், பிராணத்ராதர் என்ற மஹருஷிகளால் நேரில் பார்த்து நிச்சயிக்கப்பட்டிருப்பதால் **ऊर्ध्वम्** - ஆகாசத்தில் **अष्ट सूर्यमण्डलानि** 8 சூரியமண்டலங்கள் (இருக்கின்றனவென்றும், ஒரு சூரியமண்டலம் மாத்திரம் சமீபத்திலிருப்பதால் காணப்படுவதாகவும் அறியவேண்டும்.) **तेषाम्** - அநேக சூரியமண்டலங்களை **एषा** - இந்த ருக்கானது **(प्रतिपादिका)** நிரூபணஞ் செய்வதாக **भवति** - இருக்கின்றது.

(அ-கை) அநேக சூரிய மண்டலங்களை நிரூபணஞ் செய்கின்ற ருக்கானது படிக்கப்படுகிறது:—

चित्रं देवानामुदगादनीकम् । चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः ।
आप्रा द्यावा पृथिवी अन्तरिक्षम् । सूर्य आत्मा जगतस्तस्थुषश्चेति ॥

| | |
|---|---|
| देवानाम् | தேவர்களின் |
| अनीकम् | சைன்யம்போலிருப்பதாயும் |
| मित्रस्य | 'மித்திரன்' என்றதேவனுடையவும் |

| | |
|---|---|
| वरुणस्य | வருணனுடையவும் |
| अग्नेः | அக்கினியினுடையவும் |
| चक्षुः | கண்ணுக இருப்பதாயும் |
| चित्रम् | பலவிதமாயுமுள்ள சூரியமண்டலமானது |
| उदगात् | (கிழக்குதிசையில்) உதிக்கின்றது |
| (तत्) | அந்தச் சூரியமண்டலம் |
| द्यावापृथिवी | த்யுலோகம், பூலோகம் இரண்டையும் |
| अन्तरिक्षम् | அந்தரிக்ஷலோகத்தையும் |
| (स्वकीयप्रकाशेन) | தனது பிரகாசத்தால் |
| आप्रा | எங்கும் வியாபரித்து (இருக்கிறது.) |
| सूर्यः | அத்தகைய மண்டலங்களுக்கு அதிபனை சூரியன் |
| जगतः | அசையும் பொருளுக்கும் |
| तस्थुषश्च | அசையாப் பொருளுக்கும் |
| आत्मा | ஆத்மவஸ்துவாக விளங்குகிறுர். |

(தா-ம்) தேவர்களின் சைன்யம் எவ்விதம் கருத்தசரீரமுள்ள விருத்திராசுரனை நாசஞ் செய்கின்றதோ அவ்விதமே சூரியமண்டலம் கருப்பான இருளை நாசஞ் செய்வதால் தேவசைன்யம் போலிருப்பதாய் இங்கு வர்ணிக்கப்படுகிறது. மித்திரன் முதலியோர்க்கு இருளைப்போக்கிக் கண்ணுல் வஸ்துக்களை அறிவதற்கு உபகாரஞ்செய்வதால் மித்திரன் முதலியோரின் கண்ணுக விருப்பதாயும் உபதேசிக்கப்பட்டது. இவ்விதம் சொன்னதை உபலக்ஷணமாக வைத்துக்கொண்டு எல்லோருடைய கண்ணுகவும் சூரிய மண்டலமிருக்கின்றதென்று அறியவேண்டும்.

ஏழாவது அநுவாகம் முற்றிற்று.



எட்டாவது அநுவாகம்.

(அ-கை.) இவ்வனுவாகத்தால் கச்யபன் என்ற சூரியனின் மஹிமை வர்ணிக்கப்படுகிறது :—

केदमभ्रं निविशते । कायंसंवत्सरोमिथः ।
काहः केयं देव रात्री । क मासा ऋतवः श्रिताः ॥

| | |
|---|---|
| देव ! | ஓ பரமேசுவரனே ! |
| इदम् | இந்த |
| अभ्रम् | மேகம் |
| क्व | எந்த ஆதாரத்தில் |
| निविशते | இருக்கின்றது. |
| मिथः | பலகாலங்களின் சமஷ்டிரூபமான |
| अयं, संवत्सरः | இந்த சம்வத்ஸரம் என்ற காலம் |
| क्व | எதை ஆச்ரயித்திருக்கின்றது. |
| अहः | பகல் |
| क्व | எதை ஆச்ரயித்திருக்கின்றது. |
| इयं रात्री | இந்த ராத்திரியானது |
| क्व | எதை ஆச்ரயித்திருக்கின்றது. |
| मासाः | மாதங்களும் |
| ऋतवः | ருதுக்களும் |
| क्वश्रिताः | எதை ஆச்ரயித்திருக்கின்றன. |

अर्द्धमासा मुहूर्ताः । निमेषास्त्रुटिभिस्सह ।
क्वेमा आपो निविशन्ते । यदीतोयान्ति संप्रति ॥

| | |
|---|---|
| त्रुटिभिस्सह | துருடிஎன்ற காலத்துடன் (இக்காலமும்) |
| अर्द्धमासाः | பக்ஷங்களும் |
| मुहूर्ताः | முஹூர்த்தங்களும் |
| निमेषाः | நிமேஷங்களும் |
| क्व | எதை ஆச்ரயித்திருக்கின்றன. |
| (घर्मकाले) | கோடைக்காலத்தில் |
| (आपः) | ஜலங்கள் |

| | |
|---|---|
| इतः | இந்தப் பூமியிலிருந்து |
| यदियान्ति | வற்றிப்போகின்றதென்ருல் |
| संप्रति | அப்பொழுது |
| इमा ग्रापः | அந்த ஜலங்கள் |
| क्वनिविशन्ते | எதை ஆச்ரயித்திருக்கின்றன. |

(தா-ம்) மேகங்கள் ஆதாரமின்றி ஆகாசத்திலிருப்பனவாய்க்காணப்படுகின்றனவே. ஆதாரமின்றி ஒருவஸ்துவுமிருக்கமுடியாதாகையால் மேகங்கள் எதை ஆதாரமாக்கிக் கொண்டு ஆகாசத்திலிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னே? இவ்விதமே பலகாலங்களின் சமஷ்டிரூபமான சம்வத்ஸரம் என்ற காலமும், பகலும், இரவும், மாதங்களும், ருதுக்களும், பக்ஷங்களும், முஹூர்த்தங்களும், த்ருடி என்றகாலமும், எதை ஆச்ரயித்திருக்கின்றன. அவைகட்குக்காரணம் என்னே? கோடைகாலத்தில் ஜலமெல்லாம் வற்றிப்போவதை யாவரு மறிவார்கள். வற்றிப்போன ஜலங்கள் எங்கே செல்லுகின்றன. ஒபரமேசுவரனே! இவற்றிற்கெல்லாம் சமாதானங் கூறவேண்டும். (எ-று)

(அ - கை.) ஸம்வஸ்தரம் என்ற காலம் முதல் த்ருடி என்றகாலம்வரையுள்ள காலங்கள் எதை ஆச்ரயித்திருக்கின்றன என்ற கேள்விக்குப் பதில் கூறப்படுகிறது:—

काला अप्सुनिविशन्ते ।

| | |
|---|---|
| कालाः | சம்வத்ஸரம்முதல் த்ருடி வரையிலுமுள்ள காலங்கள். |
| ग्रप्सु | ஜலத்தில் |
| निविशन्ते | இருக்கின்றன. |

(தா - ம்.) आपोवा इदमग्रेसलिलमासीत् 'என்றதால் ஜலம் தான் ஜகத்திற்குக் காரணமாயிருந்தது என்று சொல்லியிருப்பதால் ஜலத்தில் தான் எல்லாக்காலங்களு மிருக்கின்றன; அவ்விடத்திலேயே உண்டாகின்றன என்று அறியவேண்டும்.



அதாவது:—முஹூர்த்தம், பக்ஷம், மாதம்முதலிய பெயர்கள் காலத்திற்கு உபாதியை முன்னிட்டே ஏற்பட்டிருக்கின்றனவென்பதை முன்னரே கூறிஇருக்கிறோம். ஆதலால் சம்வத்ஸரம் முதலியகாலவியவஹாரத்திற்கு முதல் உபாதி (காரணம்) யாது? என்பதே 'சம்வத்ஸரம் முதலியகாலங்கள் எதை ஆச்ரயித்திருக்கின்றன' என்ற கேள்வியின் தாத்பர்யம் என்று ஏற்படுகின்றது. இதன் சமாதானம்:—பரமேச்வரன் ஜலத்தை முதலில்படைத்து அதற்குக் கெட்டியாகுந்திறமையையும்கொடுத்தார். அதனுல் அந்தஜலம் கெட்டியாயிற்று. கெட்டியான அந்த ஜலமே "பிரும்மாண்டம்" என்று வியவஹரிக்கப்படுகின்றது. அது ஒடைபடாமல் கொஞ்சகாலமிருந்தது. அக்காலத்திற்குச்சம்வத்ஸரம் என்றுபெயரிடப்பட்டது. ஆகவே சம்வத்ஸரம் ஜலத்தின் விகாரமான பிரும்மாண்டத்தை உபாதியாயடைந்தமையால் சம்வத்ஸரமும், அதன் அவயவங்களானமாதம், பக்ஷம் முதலியனவும் பிரும்மாண்டத்தையே முதல் உபாதியாய் (காரணமாய்) உடையன என்றறியவேண்டும். (எ-று)

(அ-கை) கிரீஷ்மருதுவில் பூமியினின்றும் வற்றிப்போன ஜலங்கள் எங்குசெல்லுகின்றன என்றகேள்விக்கும், மேகங்களுக்கு ஆதாரம் யாது? அவை எதனுலுண்டாகின்றன என்ற கேள்விக்கும், *மின்னலுக்குக்காரணம் யாது? என்ற கேள்விக்கும் முறையே பதிலளிக்கப்படுகிறது:—

आपस्सूर्ये समाहिताः । अभ्राण्यपः प्रपद्यन्ते ॥
विद्युत्सूर्ये समाहिता ॥

(ப-ரை) आपः=ஜலங்கள் सूर्ये=சூரியனிடம் समाहिताः=கொண்டுவந்து சேர்க்கப்பட்டவைகளாக (भवन्ति=ஆகின்றன.) अभ्राणि=மேகங்கள் (तेभ्यः=அந்தச் சூரியகிரணங்களிடமிருந்து) अपः=ஜலத்தை प्रपद्यन्ते=அடைகின்றன. विद्युत्=மின்னல் सूर्ये=சூ

* இக்கேள்வி முன் சொல்லப்படாமலிருந்தபோதிலும் இங்கு இதற்குப்பதில் சொல்லிஇருப்பதால் இக்கேள்வியை ஊஹித்துக்கொள்ள வேண்டும்.

ரியனிடம் **समाहिता**=வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது— ஸூரியனைக்காரணமாகவுடையது.

(தா-ம்) கோடைக்காலத்தில் வற்றிப்போனஜலங்கள் ஸூரியனை வந்தடைகின்றன. ஸூரியன் கொடூரமான கிரணங்களால் கோடைக்காலத்தில் ஜலத்தைக்கிரஹிக்கிறார். இவ்விதமே காளிதாஸரும் **सहस्रगुणमुत्स्रष्टुमादत्ते हि रसं रविः** (பல்லாயிரம்பங்காக வர்ஷிப்பதற்காகவே கோடைக்காலத்தில் ஜலத்தைச்ஸூரியன் கிரஹிக்கிறார்) என்றதால் சொல்லி இருக்கிறார். ஸூரியகிரணங்கள் தம்மிடமுள்ள ஜலத்தையே புகை, நெருப்பு, காற்று இவைகளின் சேர்க்கையால் மேகவடிவமாக்குகின்றன. ஆதலால் மேகங்கள் ஸூரிய கிரணங்களாலுண்டு பண்ணப்பட்டவைகளாயும், அவற்றை ஆச்ரயித்தவைகளாயுமாகின்றன. பின்னாலும் ஸூரியகிரணத்தாலுண்டுபண்ணப்பட்ட மேகத்தில் புலப்படுவது பற்றி ஸூரியகிரணத்தையே ஆச்ரயித்திருப்பதாயறியவேண்டும். (எ-று.)

अनवर्णे इमे भूमी। इयं चाऽसौ च रोदसी।

(ப-ரை) **इयंच**=இப்பூமியும் **असौच**=த்யுலோகமும் **रोदसी**=“ரோதஸீ” எனப்படும். **इमे**=இந்த **भूमी**=பூலோகத்யுலோகங்கள் **अनवर्णे**=நல்லரூபமுள்ளவைகளாயிருக்கின்றன.

(தா-ம்) இப்பூலோகமும், த்யுலோகமும் ஸூரியன் பிரகாசத்தால் இருள் நீங்கி நல்லரூபமுள்ளவைகளாய் பிரகாசிக்கின்றன. (எ-று)

(அ-கை) பூலோகம், த்யுலோகம் இவற்றைத்தரித்துவருபவர் யார்? என்ற கேள்வியும் அதற்குப்பதிலு முபதேசிக்கப்படுகிறது.

किंस्विदत्रान्तरा भूतम्। येनेमे विधृते उभे॥
विष्णुना विधृते भूमी। इति वत्सस्य वेदना॥

(ப-ரை) **येन**=எதனால் **इमे**=இந்த **उभे**=பூலோகத்யுலோகங்கள் **विधृते**=தரிக்கப்பட்டிருக்கின்றனவோ (**तत्**=அந்த) **भूतम्**=வஸ்து



வான்து **अत्र, अन्तरा**=இவ்விரண்டுகளின் மத்தியில் **किंस्वित्**=என்னை? எத்தகையது. **विष्णुना**=தனதுகிரணங்களால் எங்கும் வியாபரித்த ஸூரியனால் **भूमी**=பூலோகத்யுலோகங்கள் **विधृते**=தரிக்கப்பட்டிருக்கின்றன **इति**=என்று **वत्सस्य**=“வத்ஸர்” என்ற மஹருஷியினுடைய **वेदना**=அறிவு (சித்தாந்தம்) என்று ஒருவர் பதிலுரைத்தார்.

(தா-ம்) “பூலோகம், த்யுலோகம் இவற்றின் நடுவிலிருந்து கொண்டு எவர் அவைகளை தரித்துவருகிறார்” என்றுப்பிரும்மவாதிகள் ஒருவரையொருவர் பிரச்னஞ் செய்துகொண்டனர். அச்சமயம் ஒருப்பிரும்மவாதியானவர்— தனது கிரணங்களால் உலகம்முழுவதும் வியாபரித்திருக்கின்ற ஸூரியனாலேயே பூலோகம் த்யுலோகம் இவைகள் தரிக்கப்படுகின்றனவென்று வத்ஸர் என்ற மஹருஷிசொல்லிஇருப்பதாகப் பதிலுரைத்தார் (எ-று)

(அ-கை) முன்மந்திரத்தால் சொல்லியதையே மறுபடியும் திருடப்படுத்துவதற்காக உபதேசிக்கிறார்:—

इरावती धेनुमती हि भूतम्। सूयवसिनी मनुषे दशस्ये॥
व्यष्टभ्नाद्रोदसी विष्णवेते। दाधर्थ पृथिवीमभितो मयूखैः॥

(ப-ரை) **मनुषे**=மனிதனுக்காக **एते**=இந்த த்யுலோக பூலோகங்கள் **इरावती**=உணவு பொருளுள்ளவைகளாகவும் **धेनुमती**=பசுக்களுள்ளவைகளாகவும் **सूयवसिनी**=நல்ல புல் முதலிய பக்ஷ்யங்களுள்ளவைகளாகவும் **भूतम्**=அன்னம் முதலியவற்றை **दशस्ये**=கொடுப்பதற்குச் சக்தியுள்ளவைகளாகவும் (**भवतः**=இருக்கின்றன.) **हि**=நிச்சயம் **एते रोदसी**=இத்தகைய பூலோகம் த்யுலோகம் இவற்றை (**विष्णुः**=ஸூரியன்) **व्यष्टभ्नात्**=நன்றாய் தரித்து வருகிறார். இவ்விதம் மற்ற ருஷிகளைப்பார்த்துச்சொல்லி மேல்பாகத்தால் நேரில் ஸூரியனை ஸ்தோத்திரஞ் செய்கிறார். **विष्णो**=ஓ ஸூரியனே! (**त्वम्**=நீர்) **पृथिवीम्**=த்யுலோகத்துடன்கூடிய பூலோகத்தை **अभितः**=மேலும் கீழும் **मयूखैः**=கிரணங்களால் **दाधर्थ**=தாங்கினீர், தாங்கிவருகிறீர்.

(தா-ம்) உணவுப்பொருளுள்ளவைகளும், பசுக்களுள்ளவைகளும், பசுக்கள் ஜீவிப்பதற்கு முக்கியசாதனமான புல்களுள்ளவைகளும், மழைபொழிதல் மூலம் அன்னத்தைக் கொடுக்கின்றவைகளுமான பூலோகத்யுலோகங்களை சூரியன் தரித்துவருகிறார். இவ்விதம்மற்றருஷிகளைக் குறித்துச்சொல்லி சூரியனின் மஹிமையிலீடுபட்டவராய் நேரில் சூரியனை ஸ்தோத்திரஞ் செய்கிறார்:—ஓ சூரியனே! நீர் ஆயிரக்கணக்கான கிரணங்களால் பூலோகம் த்யுலோகம் இவற்றை எங்கும் வியாபரித்து அவைகளைத் தரித்துவருகிறீர். இத்தகையமஹிமை தங்கிய தங்களை நான் வணங்குகிறேன்.* (எ-று)

(அ-கை) இவ்விதம் ஒரு மஹருஷி சொன்னவுடன் மற்ற மஹருஷிகள் அவரை நோக்கி வேறு சிலகேள்விகளைக் கேட்கின்றனர்:—

किन्तद्विष्णोर्बलमाहुः । का दीप्तिः किं परायणम् ॥
एको यद्धारयद्देवः । रेजती रोदसी उभे ॥

(ப-ரை) **यद्देवः**=எந்தச்சூரியன் **एकः**=ஒருவராகவே **रेजती**=விளங்குகின்ற **उभे**=இரண்டான **रोदसी**=பூலோகம் த்யுலோகம் இவற்றை **धारयत्**=தரித்தாரோ (**तस्य**=அந்த) **विष्णोः**=சூரியனுக்கு **तद्बलम्**=அத்தகைய சக்தியானது **किम्**=எங்கிருந்து கிடைத்தது. **दीप्तिः**=(பூலோகம் த்யுலோகம் இவற்றைப் பிரகாசப்படுத்தச் சாதனமான) கிரணமானது **का**=எங்கிருந்து கிடைத்தது. **परायणम्**=அவருக்குச் சஹாயமாயுள்ளவஸ்து **किम्**=என்னை? என்று மஹருஷிகள் **आहुः**=பிரச்னஞ் செய்தனர்.

(அ-கை) மேல்கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படுகிறது:—

*சூரியனுக்குப் பூமியை ஆகர்ஷணஞ்செய்யும் சக்திஇருக்கின்றதென்றும், அதனாலேயே நிராதாரமானஸ்தலத்தில் பூகோளமிருக்கின்றதென்றும் வானசாஸ்திரம் பயின்றவர்கள் கூறுகின்றனர். அவர்களபிப்ராயத்திற்கு இம்மந்திரமனுகூலமாயிருக்கின்றது என்றறியவும்.



वाताद्विष्णोर्बलमाहुः । अक्षराद्दीप्तिरुच्यते ।
त्रिपदाद्धारयद्देवः । यद्विष्णोरेकमुत्तमम् ॥

(ப-ரை) **विष्णोः**=சூரியனுக்கு **वातात्**=காற்றினால் **बलम्**=பூலோக த்யுலோகங்களைத் தரிப்பதற்குரிய சக்தியானது (**आगतम्**=வந்தது) என்று **आहुः**=அறிஞர் சொல்லுகின்றனர். **दीप्तिः**=ஜகத்திற்குப் பிரகாசத்தைக் கொடுக்கின்ற காந்தியானது **अक्षरात्**=நாசமற்ற பரப்பிரும்மத்தினிடமிருந்து (**लब्धा**=அடையப்பட்டதென்று) **उच्यते**=சொல்லப்படுகிறது. **यत्**, **एकम्**=எந்த த்ரிபாத் என்ற ஒருவஸ்துவானது **विष्णोः**=எங்கும் வியாபரித்த பரப்பிரும்மத்தினுடைய **उत्तमम्**=மேலான சுவரூபமோ(**तस्मात्**=அந்த) **त्रिपदात्**=த்ரிபாத் வஸ்துவினிடமிருந்து (**लब्धसामर्थ्यः**=சாமர்த்தியத்தைப் பெற்ற) **देवः**=சூரியன் **रोदसी**=பூலோகம் த்யுலோகம் இவற்றை **धारयत्**=தரித்து வருகிறார்.

(தா-ம்) சூரியனுக்குப் பூலோகம் த்யுலோகம் இவற்றைத் தரிப்பதற்கு வேண்டியசாமர்த்தியம் வாயுவாலுண்டாகின்றது. இவ்விதமே வாஜஸநேயிசாகையில்—**वायुर्वै गौतम तत्सूत्रम्, वायुना वै गौतम सूत्रेणायं च लोकःपरश्च लोकः सर्वाणि च भूतानि संदृब्धानि भवन्ति** ‘ஓ கௌதம வாயுத்தான் அந்தச் சூத்ரம்* வாயுவாகிற சூத்ரத்தினாலேயே இவ்வுலகமும் மேல்லோகமும், எல்லாப்பூதங்களும் தரிக்கப்படுகின்றன’ என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியனுக்கு ஜகத்தைப் பிரகாசப்படுத்தும் காந்தியானது பிரும்மத்தினிடமிருந்துண்டாயிற்று. புருஷ சூக்தத்திலும் **पादोऽस्य विश्वा भूतानि । त्रिपादस्यामृतं दिवि** ‘உத்பத்தியையடைந்த எல்லாவஸ்துவும் உபாஸ்யனாகச் சொல்லப்பட்ட இந்த நாராயணனுடைய பாதம்=அம்சம். அதாவது: அவரால் சிருஷ்டிக்கப்

* சர்வவாயு சமஷ்டி யபிமானி ஹிரண்ய கர்ப்பரே சூத்ராத்மாவென்றும், சர்வவாயுவும் அவரது சரீர மென்றும், சரீர சரீரிபாவத்தை யடைந்த வாயு சூத்ராத்மா இவர்களே ஜகத்தைத் தரிக்கின்றனர் என்றும் கூறியிருப்பதால் சூத்ராத்மாவின் சரீரமான வாயு ஜகத்தைத்தரிக்கின்றதென்றேற்படுவதையே இந்த உபதேசித்ததா யறியவும்

பட்டது பற்றி அவரது ஸ்வரூபத்தைவிட எவ்வளவோ சிறிது. குணத்ரயாத்மகமாயா சம்பந்தமற்றதாய் சாஸ்திரங்களாலறியப் படுகின்றதும் ஆனதுபற்றியே அமிருதம்=மரணாதி விகாரமற்றதுமான இவரது சுவரூபமானது சொந்த ஸ்வரூபத்திலேயே நிலைத்திருக்கின்றது' என்று சொல்லப் பட்டிருக்கிறது ஆகவே அந்த பரப்ரும்மத்தினிடமிருந்து சூரியன் ஜகத்தைத் தரிப்பதற்கு வேண்டிய சக்தியைப் பெற்றிருக்கிறார் என்று அம் மஹருஷி பதிலுரைத்தர். (எ-று)

(அ-கை) **किं परायणम्** என்ற கேள்விக்குப் பதிலளிக்கப் படுகிறது:—

अग्नयो वायवश्चैव। एतदस्य परायणम् ॥

(ப-ரை) **अग्नयः**=அக்நி **वायवश्चैव**=காற்று **एतत्**=என்றஇந்தத் தேவர்களின் கூட்டமானது **अस्य**=இந்தச்சூரியனுக்கு **परायणम्**=சஹாயமாயிருக்கின்றது.

(அ-கை) இனி வேறு சிலப்பிரச்னங்கள் கேழ்க்கப்படுகின்றன:—

पृच्छामि त्वा परं मृत्युम्। अवमं मध्यमं चतुम् ॥
लोकं च पुण्यपापानाम्। एतत्पृच्छामि संप्रति ॥

(ப-ரை) (**हेब्रह्मन्**=ஓ மஹருஷே!) **त्वा**=உம்மை **परम्**=மேலான **मृत्युम्**=மிருத்யுவையும் **अवमम्**=மூன்றாவதுபடியிலுள்ள(மிருத்யுவையும்) **मध्यमम्**=இரண்டாவது படியிலுள்ள (மிருத்யுவையும்) **चतुम्**=நான்காவது படியிலுள்ள (மிருத்யுவையும்) **पृच्छामि**=கேட்கிறேன். **पुण्यपापानाम्**=புண்யம், பாபம் இவற்றைச் செய்தவர்களுடைய **लोकंच**=லோகத்தையும் **संप्रति**=இப்பொழுது **पृच्छामि**=கேட்கிறேன். தயவுசெய்து பதிலளிக்கவேண்டும்.

(தா-ம்) இவ்வுலகில் எவனாலும் தாண்டமுடியாத மிருத்யு எது? அதிலும் இரண்டாவது படியிலும், மூன்றாவதுபடியிலும், நான்காவது படியிலும் இருக்கும் மிருத்யு எது? புண்யஞ் செய்தவர்களும், பாபஞ்செய்தவர்களும் எந்தெந்த லோகங்களை யடைகின்றனர். இதைத் தாங்கள் உபதேசிக்கவேண்டும் (எ-று)



(அ-கை) மேல் மந்திரத்தால் மிருத்துயுவைப்பற்றிச்செய்த பிரச்னங்களுக்கு இம்மந்திரத்தால் பதிலளிக்கப்படுகிறது:—

अमुमाहुः परं मृत्युम्। पवमानं तु मध्यमम् ॥
अग्निरेवावमो मृत्युः। चन्द्रमाश्चतुरुच्यते ॥

(ப-ரை) **अमुम्**=இந்தச் சூரியனையே **परम्**=மேலான **मृत्युम्**=மிருத்யுவாக **आहुः**=பெரியார் சொல்லுகின்றனர். **पवमानं तु**=காற்றையே-பிராணவாயுவையே **मध्यमम्**=மத்யம மிருத்யுவாக-இரண்டாவது பயிடியிலுள்ள மிருத்யுவாக (ச் சொல்லுகின்றனர்) **अग्निरेव**=அக்நிதான் - ஜாடராக்நிதான் **अवमः**=மூன்றாவது படியிலுள்ள **मृत्युः**=மிருத்யுவாக (ஆகின்றது) **चन्द्रमाः**=சந்திரன் **चतुः**=நான்காவதான மிருத்யுவாக **उच्यते**=சொல்லப்படுகிறான்.

(தா-ம்) எல்லாப் பிராணிகளுக்கும் ஜந்ம முண்டாகும் பொழுதே பகவானால் ஏற்படுத்தப்பட்ட ஆயுளின் காலவரையறையானது சூரியனின் உதயாஸ்தமனங்களால் கிரமமாய் முடிவடைகின்றது. அவ்விதம் முடிந்துவிடின் பிராணிகள் இறந்துவிடுகின்றனர். இதுவே "காலமிருத்யு" எனப்படும். இதை வெல்ல எவனாலும் முடியாது. இதற்குச் சூரியகதிகாரணமாயிருப்பதால் சூரியனே பரமிருத்யு எனப்படுவான். பிராணவாயுக்கள் நாடிகளில் முறைதவறி சஞ்சரிக்குமாயின் அதனாலும் மரணம் ஏற்படலாம். ஆனால் அவ்விதம் பிராணவாயு சஞ்சாரமேற்பட்டாலும் பிராணாயாமத்திற் பயிற்சி பெற்றிருந்தால் சிரமப்பட்டு அதை நன்றாகச் சஞ்சரிக்கும்படி செய்துகொண்டு மிருத்யுவைக் கடந்துவிடலாம். பிராணாயாமத்தில் பயிற்சி முதிர்தல் சிரம சாத்யம் ஆதலால், பிராணவாயு மத்யம மிருத்யு—இரண்டாவது படியிலுள்ள மிருத்யு எனப்படும். ஜாடராக்நியானது எப்பொழுது மந்தமாயாகின்றதோ அப்பொழுதும் அஜீர்ணம் முதலிய வியாதிகளால் மரணமுண்டாகலாம்,

அந்த ஜாடராக்நியின் மாந்தியத்தைச் சுவல்பப்பிரயாசத்தால் சாதிக்கக்கூடிய ஔஷதபாநாதிகளால் நிவிருத்தி செய்து கொண்டு அதன் மூலம்வரும் மிருத்யுவைக் கடந்துவிடலாம். ஆதலால் அக்கியானது அவமமிருத்யு—மூன்ருவது படியுள்ள மிருத்யு எனப்படும் சந்திரன் ஓஷதிகளுக்கதிபனுயிருக்கின்றமையால் அவனது அநுக்கிரஹமில்லாவிடில் அன்னம் கிடைக்காமலோ, அன்னம் கிடைத்தபோதிலும், அஃது ஆரோக்கிய ஹேதுவாயாகாமலோ மிருத்யு ஏற்படலாமாதலாற் சந்திரன் நான்காவது மிருத்யு எனப்படுவன். என்று அந்தப்பிரும்ம வித்தானவர் பதிலளித்தார். (எ-று)

(அ-கை) लोकं च पुण्यपापानम् என்ற கேள்விக்குப் பதிலளிக்கப்படுகிறது.

अनाभोगाः परं मृत्युम् । पापास्संयन्ति सर्वदा ॥
आभोगास्त्वेव संयन्ति । यत्र पुण्यकृतो जनाः ॥

(ப-ரை) पापाः=சுருதிஸ்மிருதிகளை அதிக்ரமித்து நடக்கின்றவர்கள் अनाभोगाः=கொஞ்சமேனும் சுகமற்றவர்களாய் (பூச்சி, புழு முதலியவற்றின் ஜந்மாவை யடைந்து सर्वदा=எப்பொழுதும் परंमृत्यम्=பர மிருத்யுவை संयन्ति=அடைகின்றனர். (श्रुतिस्मृतिमार्गवर्तिनः पुरुषाः=சுருதி ஸ்மிருதிகளின் வழியை அநுசரித்த புருஷர்கள்) आभोगास्त्वेव=சகலவிதமான போகங்களுள்ளவர்களாகவே यत्र=எந்தவிடத்தில் पुण्यकृतः=அதிகப் புண்ணியஞ்செய்த जनाः=தேவர்கள் (வஸிக்கின்றனரோ அவ்விடம்) संयन्ति=செல்லுகின்றனர்.

(தா-ம்) இவ்வுலகில் பாபத்தையே அதிகமாகச்செய்த மனிதர்கள் மறித்த பிறகு சுகலேசமுமற்ற பூச்சி, புழு முதலியவற்றின் ஜந்மங்களையடைந்து ஒவ்வொருக்ஷணமும் ஜனனமரண துக்கங்களை யனுபவிக்கின்றனர். இங்கு புண்யத்தையே அதிகமாகச் செய்தவர்களோவெனின் தேவர்கள் வசிக்கின்ற இடமான சுவர்க்கத்தில் சகலவிதமான போகங்களுடன் வசிக்கின்றனர். (எ-று)



ततो मध्यममायन्ति । चतुमग्निं च संप्रति ॥

(ப-ரை) ततः=ரொம்பவும் புண்ணியஞ் செய்தவர்களிலும், ரொம்பவும் பாபஞ் செய்தவர்களிலும் (अन्ये=மற்றவர்கள் அதாவது சரிசமமான புண்ய பாபமுள்ளவர்கள்) संप्रति=இம்மனிதப் பிறவியில் मध्यमम्=மத்தியம மிருத்யுவையும், चतुम्=நான்காவது மிருத்யுவையும் अग्निंच=அக்கினி என்ற மூன்ருவது மிருத்யுவையும் आयन्ति=அடிக்கடி யடைகின்றனர்.

(தா-ம்) அதிகப்புண்யஞ் செய்தவர்கள் சுவர்க்கத்தில் சுகமாய் வஸிக்கின்றனர். அதிகப்பாபஞ் செய்தவர்கள் நரகத்தில் பூச்சி, புழு முதலியவற்றின் ஜந்மமடைந்து சொல்லொணுத் துயரத்தையடைந்து வருந்துகின்றனர். புண்யத்திலும் பாபத்திலும் சமபாகமுள்ளவர் இம்மனித ஜந்மாவையடைந்து பிராணவாயு சம்பந்தமாயும், ஜாடராக்னி சம்பந்தமாயும், உணவுப் பொருள் சம்பந்தமாயுமுள்ள வியாதிகளையடைந்து அதற்கு வேண்டிய பரிஹாரங்களையு மனுஷ்டிக்கின்றனர். (எ-று)

(அ-கை) மற்றுஞ் சிலப்பிரச்னைகள் உபதேசிக்கப்படுகின்றன:—

पृच्छामि त्वा पापकृतः । यत्र यातयते यमः ॥
त्वं नस्तद्ब्रह्मन् प्रब्रूहि । यदि वेत्थाऽसतो गृहान् ॥

(ப-ரை) ब्रह्मन्=பிரும்மவித்தான ஓ மஹருஷே! (इदम्=இதைப்பற்றி) त्वा=உம்மை पृच्छामि=கேட்கிறேன் यमः=யமன் यत्र=எந்தவிடத்தில் पापकृतः=பாபஞ்செய்தவர்களை यातयते=கஷ்டப்படுத்துகிருனே तत्=அந்த ஸ்தானமான असतः=பாபிகளுடைய गृहान्=வீடுகளை यदिवेत्थ=அறிவீர்களேயாளுல் त्वम्=நீர் नः=எங்களுக்கு प्रब्रूहि=சொல்லவேண்டும்.

(அ-கை) மேல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கப்படுகிறது:—

त्तमः=வெகுகாலம் கச்யபனிடம் "இவன் நல்லகாரியஞ் செய்கிறான்" என்று தேவர்கள் புகழக்கூடியதாயும், கச்யபன் கேட்டு சந்தோஷிக்கக்கூடியதாயுமுள்ள நற்குணமுள்ளவனையும்(परलोके=பரலோகத்தில்कश्यपस्य=கச்யபருக்கு अतिथिः=அதிதியைப்போல் கௌரவிக்கத் தகுந்தவனாகவும், सिद्धगमनः=நினைத்தவுடன் கச்யபரிடஞ் செல்லச் சக்தியுள்ளவனாகவும், सिद्धागमनः=நினைத்தவுடன் இங்கு திரும்பிவருவதற்குச் சக்தியுள்ளவனாகவும் (भवति=ஆகிறான்.) तस्य=இச்சமாசாரத்தை एषा=இந்த ருக்கானது (प्रतिपादिका=நிரூபணஞ் செய்வதாக) भवति=இருக்கின்றது.

(தா-ம்) மேற்சொல்லியப்பிரகாரம் கச்யபனின்மஹிமையையறிந்தவர்கள் நரகத்தினின்றும் பயத்தால் பாபஞ் செய்யத் துணியார்களாதலால் அதன்மூலம் வருகின்ற பூச்சி, புழு முதலியவற்றின் ஜன்மத்தையும், அங்கு சம்பவிக்கின்ற அபமிருத்யுவையு மடையமாட்டார்கள். அஃதுடன் அந்தப்பிராம்மணன் இங்கிருக்கும்பொழுதே கச்யபன் அவனது நற்குணங்களைத் தேவர்கள் வாயிலாகக்கேட்டு ஆனந்திக்கக்கூடிய பாக்கியத்தைப் பெறுவான். பரலோகத்திலும் கச்யபன் அதிதியைப் போல் இந்தப்பிராம்மணனைப் பூஜித்து உபசரிப்பான். நினைத்தவுடன் கச்யபசமீபஞ் செல்லவும், நினைத்தவுடன் அவ்விடம் விட்டுத் திரும்பிவரவும் சக்தியைப்பெறுவான். ஆதலால் கச்யபமஹிமையைத் தெரிந்துகொண்டு அவச்யம் கச்யபோபாசனஞ் செய்யவேண்டும். (எ-று)

(அ-கை) கச்யப மஹிமையையறிந்தவன் அவனுக்கு அதிதியாகின்றானென்பதை ஒருருக்கும் சொல்வதாக முன் கூறப்பட்டது. அந்தருக் படிக்கப்படுகிறது:—

आयस्मिन्त्सप्त वासवाः। रोहन्ति पूर्व्या रुहः॥
ऋषिर्ह दीर्घश्रुत्तमः। इन्द्रस्य घर्मो अतिथिरिति॥

(ப - ரை) यस्मिन्=எந்தக்கச்யபனை वासवाः=உலகம் ஜீவிப்பதற்குச் சாதனபூதர்களும், पूर्व्या रुहः=ஜகத் சிருஷ்டி ஏற்படும் பொழுது முதலினுண்டானவர்களாதல்பற்றி முதல் முளையாக இருப்பவர்களுமான सप्त (सूर्याः)=ஆரோகன் முதலிய ஏழுசூரியர்கள் आरोहन्ति=ஆச்ரயித்திருக்கின்றனரோ (तस्य)इन्द्रस्य=மேலான ஐசுவரியமுள்ள அந்தக் கச்யபனுக்கு दीर्घश्रुत्तमोह="தீர்க்க ச்ருத்தமர்" என்று பிரசித்தரான ऋषिः=மஹருஷியானவர் घर्मः=ஜ்வலிக்கின்றகாந்தியை யுடையவராய்க்கொண்டு अतिथिः=அதிதியாக ஆனார் इति=என்ற ருக்கானது இருக்கின்றது.



(தா-ம்) உலகம் ஜீவிப்பதற்குச் சாதனபூதர்களும், உலகம் படைக்க ஆரம்பமானவுடன் சிருஷ்டிக்கப் பட்டவர்களுமான ஆரோகன் முதலிய 7 சூரியர்கள் எந்தக் கச்யபனிடமிருந்துண்டாகி அவனையே ஆச்ரயித்திருக்கின்றனரோ அந்தக்கச்யபனுக்கு "தீர்கச்ருத்தமர்" என்ற மஹருஷியானவர் ஜ்வலிக்கின்ற காந்தியுள்ளவராய்க்கொண்டு அதிதியாக ஆனார். அவ்விதமே கச்யபோபாசனஞ் செய்கின்ற மற்றவர்களும் கச்யபனால் கௌரவிக்கப்படுவார்களென்று அறியவேண்டும். (எ-று)

(அ - கை) இனிப் பிராம்மணவாக்கியங்கள் படிக்கப்படுகின்றன:—

कश्यपः पश्यको भवति। यत्सर्वं परिपश्यतीति सौक्ष्म्यात्॥

(ப - ரை) यत्=யாதுகாரணம்பற்றி सौक्ष्म्यात्=நுட்பமான திவ்யதிருஷ்டியால் सर्वम्=எல்லாவற்றையும் परिपश्यति=பார்க்கின்றாரோ (तस्मात्=ஆகையால்) कश्यपः=கச்யபர் என்று பெயருள்ளவரே पश्यकः=உண்மையில் பச்யகர் என்று பெயருள்ளவராக भवति=ஆகின்றார்.

(தா - ம்) மஹாமேருவில் வசிக்கின்ற சூரியன் கச்யபன் என்ற பெயரால் வழங்கப்படுகிறார். அதற்கு பச்யகன் என்று பொருள். அதாவது:—அதிசூக்ஷ்மமான திவ்ய திருஷ்டியால் நடந்தது, நடக்கின்றது, நடக்கப்போகின்றது என்ற சகலசமாசாரங்களையும், சகலவஸ்துக்களையும் அறிந்திருக்கிறார். (எ-று)

अथाग्नेरष्टपुरुषस्य । तस्यैषा भवति ॥

(ப-ரை) अथ=இதற்குமேல் अष्टपुरुषस्य=எட்டு விதமான மூர்த்திகளையுடைய अग्नेः=அக்கினியினுடைய (महिमा)=மஹிமையானது (कथ्यते=சொல்லப்படுகிறது.) एषा=இந்தருக்கானது तस्य=அந்த அக்கினியினுடைய (महिमप्रतिपादिका=மஹிமையை நிரூபணஞ் செய்கின்றதாக) भवति=இருக்கின்றது.

(தா-ம்) இதுவரை கச்யபனின் மஹிமை முதலியவற்றைப் பற்றிச் சொல்லப்பட்டது. இனி சூரியனின் அம்சம் வாய்ந்த அக்கினியின் மஹிமைமுதலியன நிரூபணஞ்செய்யப்படும். அக்கினியின் மஹிமையை ஒருருக்கும் நிரூபணஞ்செய்கின்றது.(எ-று)

(அ-கை) அக்கினியின் மஹிமையை நிரூபணஞ் செய்கின்ற ருக்கானது படிக்கப்படுகின்றது:—

अग्ने नय सुपथा राये अस्मान्। विश्वानि देव वयुनानि विद्वान्।
युयोध्यस्मज्जुहुराणमेनः । भूयिष्ठां ते नम उक्तिं विधेमेति ॥

(ப-ரை) अग्ने! ஓ அக்கினியே! राये=தனங்கிடைப்பதற்காக सुपथा=நல்லவழியால் अस्मान्=எங்களை नय=அழைத்துச் செல்லுவீராக. देव!=ஓ அக்கினியே (त्वम्=நீர்) विश्वानि=சமஸ்தமான वयुनानि=பாதைகளை विद्वान्=அறிந்தவராக(वर्तसे=இருக்கிறீர்)जुहुराणम्=கொடூரமான एनः=பாபத்தை अस्मत्=எங்களிடமிருந்து युयोधि=பிரித்து வைப்பீராக. ते=தங்களுக்கு भूयिष्ठाम्=அதிகமான नम उक्तिम्=நமஸ்காரம் என்றவார்த்தையை विधेम=செய்கிறோம்.

(தா-ம்) ஓ அக்கினியே! நல்வழியில் பிரவிருத்தியை எனக்கு உண்டுபண்ணி அதன்மூலம் பொருள்கிடைக்கும்படி அநுக்கிரஹஞ் செய்யவேண்டும். ஏனென்றால் தாங்கள் எல்லாப்பாதைகளையு மறிந்தவர்களாயிருக்கிறீர்கள். ஆதலால் இது நல்ல பாதை இது கெட்டபாதை என்று தங்களுக்குத்தான் தெரியும். எனது பிரவிருத்திக்குத் தடங்கலைச்செய்கின்ற பாபங்களை நாசஞ் செய்யவேண்டும். தங்களை மூன்றுகரணங்களாலும் பல தடவை வணங்குகிறேன். தங்கள் பிரசாதத்தை எதிர்பார்க்கும் தீனனான நான் இதைத்தவிர்த்து வேறு என்ன செய்ய முடியும். (எ-று)



(அடிமுதல் 33 பஞ்சாசத்தாயிற்று)

எட்டாவது அநுவாகம் முற்றிற்று.

## ஒன்பதாவது அநுவாகம்

(அ-கை) முன் அக்கினிக்கு 8வித மூர்த்திகளிருப்பதாயுபதேசிக்கப்பட்டது. அவைகளின் நாமங்கள் இங்கு உபதேசிக்கப்படுகின்றன:—

अग्निश्च जातवेदाश्च । सहोजा अजिराप्रभुः ॥
वैश्वानरो नर्यापाश्च । पङ्क्तिराधाश्च सप्तमः ॥
* विसर्प्येवाऽष्टमोऽग्नीनाम् । एतेऽष्टौ वसवःक्षिता इति ॥

(ப-ரை)अग्निश्च=அக்கினி என்றும் जातवेदाश्च=ஜாதவேதஸ் என்றும் सहोजाः=சஹோஜஸ் என்றும், अजिराप्रभुः=அஜிராப்பிரபு என்றும் वैश्वानरः=வைச்வாநரனென்றும் नर्यापाश्च=நர்யாபஸ் என்றும் முறையே ஆறு அக்கினியின் மூர்த்திகளின் பெயர். सप्तमः=ஏழாவது அக்கினி மூர்த்தியானது. पङ्क्तिराधाः=பங்திராதஸ் என்று பெயருள்ளது. अष्टमः=எட்டாவது அக்கினி மூர்த்தியானது विसर्प्येव=விஸர்பீ என்று பெயருள்ளது. एते=இந்த अष्टौ=எட்டுஅக்கினிமூர்த்திகள் वसवः=எல்லாப்பிராணிகளும் சுகமடைவதற்குச் சாதனபூதர்களாயும், क्षिताः=தாங்களும் சுகமுள்ளதுகளாயும் (सन्ति=இருக்கின்றன) इति=என்று (जानीयात्=அறியவேண்டும்.)

---

* विसर्पेवा என்றும் பாடமிருக்கிறது. அதற்கும் பாஷ்யகாரர் विसर्पेव शब्देन विसर्पीति नाम विवक्ष्यते என்று பொருள் செய்திருக்கிறார். विसर्पोवा என்றும் பாடமிருக்கிறது.

(அ-கை) இனிப் பிராம்மணவாக்கியங்கள் படிக்கப்படுகின்றன.—

यथर्त्वेवाग्नेरर्चिर्वर्णविशेषाः । नीलार्चिश्च पीतकार्चिश्चेति ॥

(ப-ரை) **अग्नेः**=அக்கினியி னுடையதான **अर्चिर्वर्णविशेषाः**—**अर्चिः**=காந்தியின் **वर्णविशेषाः**=நிறங்கள் **यथर्त्वेव**=ருதுக்களை யநுசரித்தவைகளாகவே (**भवन्ति** = இருக்கின்றன. **एवंच**=இவ்விதமிருத்தலால் **क्वचिदृतौ**=சில ருதுவில்) **नीलार्चिश्च**=நீல நிறமுள்ள காந்தியை யுடையவராகவும், (**क्वचिदृतौ**=சில ருதுவில்) **पीतकार्चिश्च**=சிவப்பு நிறமுள்ளவராகவும் (**भवति**=ஆகின்றார்.) **इति**=என்று அறியவேண்டும்.

(தா-ம்) வசந்தருது சிவந்ததென்றும், கிரீஷ்மம் வெளுத்ததென்றும், வர்ஷருது பல நிறமுள்ளதென்றும், சரத்ருது தங்க நிறமுள்ளதென்றும், ஹேமந்த சிசிரங்கள் அதிகச் சிவப்புள்ளதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அக்கினிமூர்த்திகளை வசந்தம் முதலிய ருதுக்களின் அவ்வவற்றிர்க்குரிய நிறம் பொருந்திய காந்தியுள்ளவைகளாக த்யானிக்கவேண்டும்.(எ-று)

(அ-கை) வாயுவின் சஹாயத்தால் சூரியன் பூமியைத்தரித்துவருவதாக முன் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாயுவின் கணங்கள் இங்கு உபதேசிக்கப்படுகின்றன:—

अथ वायो रेकादशपुरुषस्यैकादशस्त्रीकस्य ॥

(ப-ரை) **अथ**=இதற்குமேல் **एकादशपुरुषस्यं**=புருஷர்களடங்கிய 11கணங்களையுடையவரும், **एकादशस्त्रीकस्य**=ஸ்திரீகளடங்கிய 11கணங்களை யுடையவருமான **वायोः**=வாயுவினுடைய (**गणाः**=அவரது அம்சம்வாய்ந்த கணங்கள் (**उच्यन्ते**=சொல்லப்படுகின்றன.)

(அ - கை) முன்சொல்லிய கணங்களின்பெயர்கள் உபதேசிக்கப்படுகின்றன:—

प्रभ्राजमाना व्यवदाताः । याश्च वासुकिवैद्युताः ।
रजताः परुषाः श्यामाः । कपिला अतिलोहिताः ।



ऊर्ध्वा अवपतन्ताश्च । वैद्युत इत्येकादश ॥

(ப - ரை) १ **प्रभ्राजमानाः**=ப்ரப்ராஜமானம் २ **व्यवदाताः**=வியவதாதம் ३ **वासुकिवैद्युताः**=வாசுகிவைத்யுதம் ४ **रजताः** = ரஜதம் ५ **परुषाः**=பருஷம் ६ **श्यामाः**=சியாமம் ७ **कपिलाः**=கபிலம் ८ **अतिलोहिताः**=அதிலோஹிதம் ९ **ऊर्ध्वाः**=ஊர்த்தவம் १० **अवपतन्ताश्च**=அவபதந்தம் ११ **वैद्युतः**=வைத்யுதம் **इति**=என்று **एकादश**=11 கணங்கள் (**सन्ति**=இருக்கின்றன.)

(தா-ம்) ஒவ்வொரு கணத்திலும் பலதேவர்கள் அடங்கியிருப்பதைத் தெரிவிப்பதற்காக இங்கு ஒவ்வொரு பதமும் பன்மையுள்ளதாக வுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளடங்கிய 11 கணங்களின் பெயர்களை இங்கு குறிப்பிடாவிடினும் **एकादशस्त्रीकस्य**=என்று பிரதிக்ஞை செய்திருப்பதால் மேற்கூறிய பதங்களையே ஸ்திரீலிங்கத்தைப் போதிக்கின்ற பிரத்யயமுள்ளவைகளாக மாற்றிக்கொண்டு ஸ்திரீகணங்களின் பெயர்களாயறியவும். அவையாவன:—१ **प्रभ्राजमान्यः**. २ **व्यवदात्यः**. ३ **वासुकिवैद्युत्यः**. ४ **रजताः**. ५ **परुषाः**. ६ **श्यामाः**. ७ **कपिलाः**. ८ **अतिलोहित्यः**. ९ **उर्ध्वाः**, १० **अवपतन्त्यः** ॥ ११ **वैदूयुत्यः**. (எ - று)

नैनं वैद्युतो हिनस्ति। य एवं वेद ।

(ப - ரை) **यः**=எவன் **एवम्**=இவ்விதம் வாயுகணத்தின் மஹிமையை **वेद**=அறிவானோ **एनम्**=அம்மனிதனை **वैद्युतः**=மின்னல் சம்மந்தமான அக்னி (இடியானது) **नहिनस्ति**=பாதிப்பதில்லை.

(அ - கை) இடியால்பாதை ஏற்படாமலிருப்பது பெரிய பயனாகுமா ? என்று சந்தேஹித்துப் பதிலளிக்கப்படுகிறது:—

स हो वाच व्यांसः पाराशर्यः । विद्युद्वधमेवाहं मृत्युमैच्छमिति ॥

(ப - ரை) **पाराशर्यः**=பராசரரின் புத்திரரான **यः**=யாதொரு **व्यासः**=வியாசமகருஷியுண்டோ **स ह**=பிரசித்தரான அந்த

வியாசமகருஷி **विद्युद्वधमेव**=இடியினாலுண்டாகும் மரணத்தையே **मृत्युम्**=மிருத்யுவாக **अहम्**=நான் **ऐच्छम्**=நினைத்தேன் **इति**=என்று **उवाच**=சொன்னார்.

(தா - ம்) பராசரரின் புத்திரரான வியாசமகருஷி இடிவிழுந்து இறப்பதுதான் மரணமேயல்லாது மற்றவை மரணமல்ல என்று சொன்னார். அவ்விதஞ் சொல்லியதின் கருத்து யாதெனில்— இடிவிழுந்து மரணமடைகிறவர்களே மஹாபாபிகள். அவர்கள்போல் பாபிகள் லோகத்தில்கிடையா என்பதேயாம்.

नत्वकाम<sup></sup>ँहन्ति । य एवं वेद ॥

(ப-ரை) **यः**=எவன் **एवम्**=மேற்சொல்லியபிரகாரம் இடிவிழுதலாலிறப்பது மஹாபாபத்தின்பயன் என்று **वेद**=அறிவனோ **अकामम्**=அம்மரணத்தில் விருப்பமில்லாத அம்மனிதனை (இடியானது) **नतुहन्ति**=நிச்சயமாய் பாதிக்காது.

(தா-ம்) இடிவிழுதலாலிறப்பது மஹாகஷ்டமென்றும், ஆனதுபற்றியே அது மஹாபாபத்தின்பயன் என்றும் எவன் அறிவனோ அவன் அம்மரணத்தில் விருப்பமில்லாதவனாகவும், அப்பாபத்தைப் போக்கிக்கொள்வதற்குச் சாதனமான மேற்சொல்லிய 11வாயுகணங்களின் உபாசனத்தில் விரும்பமுள்ளவனாகவும், அவ்வுபாசனத்தை அனுஷ்டிப்பவனாகவும் இருப்பானாதலால் அதன்மூலம் இடிவிழுந்து இறப்பதற்கு ஹேதுவான பாபத்தை விலக்கிக்கொள்வான். பாபம் விலகிவிட்டபடியால் இடியால் பாதை அம்மனிதனுக்குண்டாவதில்லை. இவ்விதம் சூரியோபாசனத்திற்கு அங்கமான மருத்கணங்களின் உபாசனத்தாலேயே மஹாபாபநிவிருத்தி ஏற்படுமாயின் சூரியோபாசனத்தால் மஹாபாப நிவிருத்தியுண்டாகுமென்று சொல்லவும் வேண்டுமோ? ஆதலால் யாவருஞ் சூரியோபாசனஞ் செய்ய வேண்டும். இவ்விதக்கருத்தையே கீழ்வரும் மந்திரங்களிலும் கொள்ளவேண்டும். (எ - று)



अथ गन्धर्वगणाः ॥

(ப-ரை) **अथ**=இனி **गंधर्वगणाः**=சூரியனுடன் சஞ்சரிக்கின்ற கந்தர்வர்களின் கூட்டங்கள் (**उच्यन्ते**=சொல்லப்படுகின்றன.)

स्वानभ्राट् । अंघारिर्बंभारिः । हस्तस्सुहस्तः । कृशानुर्विश्वावसुः ।
मूर्धन्वान्त्सूर्यवर्चाः । कृतिरित्येकादशगन्धर्वगणाः ॥

(ப-ரை) **स्वान्**=ஸ்வான் **अभ्राट्**=அப்ராட் **अंघारिः**=அங்காரி **बंभारिः**=பம்பாரி **हस्तः**=ஹஸ்தன் **सुहस्तः**=சுஹஸ்தன் **कृशानुः**=கிருசானு. **विश्वावसुः**=விசுவாவஸு **मूर्धन्वान्**=மூர்த்தன்வான் **सूर्यवर्चाः**=சூரியவர்சஸ் **कृतिः**=கிருதி **इति**=என்று **एकादश**=பதினொன்று **गन्धर्वगणाः**=கந்தர்வர்களின் கூட்டங்கள் (**सन्ति**=இருக்கின்றன)

(அ-கை) மேற்சொல்லிய கணங்களிலடங்கிய கந்தர்வர்களின் பிரபாவம் முதலியவைகள் வர்ணிக்கப்படுகின்றன:—

देवाश्च महादेवाः । रश्मयश्च देवा गरगिरः ॥
नैनं गरो हिनस्ति । यः एवं वेद ॥

(ப-ரை) (மேற்சொல்லிய கூட்டங்களிலடங்கியகந்தர்வர்கள்) **देवाः**=தேவவகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் **महादेवाः**=நற்குணங்களால் மற்றத்தேவர்களுள் சிறந்ததேவர்களாகவும் **गरगिरः**=விஷத்தையுட்கொண்டும் ஜீரணஞ் செய்வதற்குப்போதுமான சக்தியுள்ளவர்களாகவும் (**सन्ति**=இருக்கின்றனர்) **यः**=எந்த மனிதன் **एवम्**=மேற்சொல்லிய பிரகாரம் **वेद**=மஹிமை முதலியவற்றையறிவனோ **एनम्**=அம் மனிதனை **गरः**=விஷம் **नहिनस्ति**=பாதிப்பதில்லை.

(தா-ம்) மேற்சொல்லியபிரகாரம் கந்தர்வர்களின் பிரபாவமறிந்து அவர்களை எவன் உபாசிக்கிறானோ அவனுக்கு விஷம் சரீரத்தில் சம்பந்தித்தபோதிலுமதனால்யாதுந் தீங்குநேரிடாது. சூரியோபாசனஞ் செய்கிறவன் அதற்கு அங்கமாக, **अग्निश्च जातवेदाश्च** என்று தொடங்கி உபதேசிக்கப்பட்ட அக்னியின் 8வித மூர்த்திகளையும், **प्रभ्राजमानाव्यवदाताः** என்று தொடங்கி உப

தேசிக்கப்பட்ட 11 வாயுகணங்களையும், स्वानभ्राट् என்று தொடங்கி உபதேசிக்கப்பட்ட 11 கந்தர்வகணங்களையும் அவச்யமுபாசிக்கவேண்டுமென்பதே இந்தப்பிரகரணத்தின் மொத்தமான கருத்து. இவ்விதமே இனிவரும் மந்திரங்களிலும் ஊஹித்தறியவும். (எ-று)

(அ-கை) சரஸ்வதியின் உபாசனத்திற்கு அங்கமான மந்திர முபதேசிக்கப்படுகிறது:—

गौरी मिमाय सलिलानि तक्षती । एकपदी द्विपदी सा चतुष्पदी ।
अष्टापदी नवपदी बभूवुषी । सहस्राक्षरा परमे व्योमन्निति ॥

(ப-ரை) **सलिलानि**=ஜலத்தினின்று முண்டான சகலவஸ்துக்களையும், **तक्षती**=தனது சரீரமான சப்தப் பிரபஞ்சத்தினின்றும் சிறிதாகச் செய்கின்றவளும் **एकपदी**=ஒருபாதமுள்ளருக்கு **द्विपदी**=இரண்டுபாத முள்ளருக்கு **चतुष्पदी**=நான்குபாத முள்ளருக்கு **अष्टापदी** எட்டுபாத முள்ளருக்கு **नवपदी**=9 பாத முள்ளருக்கு என்றக்கிரமமாய் (**वर्धमाना**=விருத்தியை யடைகின்றவளாய்க்கொண்டு) **सहस्राक्षरा**=அநேகாக்ஷர முள்ளவளாக **बभूषी**=ஆவதற்கு விருப்பமுள்ளவளும் **परमे व्योमन्**=ஜகத்காரணமான பிரும்மத்தினிடம் **स्थिता**=இருக்கின்றவளும் **सा**=பிரசித்தி பெற்றவளும் **गौरी**=வெண்ணிறமுள்ளவளுமான சரஸ்வதீதேவியானவள் **मिमाय**=அளக்கிறாள்.

(தா-ம்) **अप एवससर्जादौ** (ஜலத்தையே முதலில்படைத்தார்) என்ற சாஸ்திரப்படி பார்த்திவமான வஸ்துக்களைச் சிருஷ்டிக்கத் தொடங்குமுன் ஈசுவரன் ஜலத்தைப்படைத்து அதினின்றுமே பார்த்திவமான சகலப்பிர பஞ்சத்தையுமுண்டு பண்ணினாராகையால் பார்த்திவப் பிரபஞ்சம்யாவும் ஜலத்தின் விகாரமாகின்றன. **सलिलानि** என்று சொல்லியதை உபலக்ஷணமாக வைத்துக் கொண்டு அக்னிமுதலிய எல்லாப் பூதங்களின் விகாரங்களையும் கிரஹித்துக் கொள்ளவேண்டும். பிரபஞ்சத்தை சப்தம், அர்த்தம் என்று இரண்டு விதமாகப்பிரித்துக் கொள்வோமாயின் அவற்றுள் சப்தப்பிரபஞ்சம் அர்த்தப்பிரசஞ்சத்தி



னும் பெரிதாக இருக்கின்றது. எவ்விதமெனின்:—ஒருபாஷையிலே ஒருபொருளைக் குறிப்பிடுவதற்குப் பல பதங்களிருக்கின்றன. இவ்விதமே பலபாஷைகளை எடுத்து ஒவ்வொரு பொருளுக்கும் வாசகமான பதங்களைக் கணக்கிடுவோமாயின் அர்த்தப் பிரபஞ்சம் ஸ்வல்பமாயும், சப்தப் பிரபஞ்சம் பெரிதாயுமிருப்பதாய் நன்கறியப்படும். அந்த சப்தப்பிரபஞ்சத்தை சரஸ்வதீ தேவி சரீரமாக வுடையவளா யிருக்கிறாள். மேலும் ஒருபாதமுள்ளருக்குமுதல் அநேகாக்ஷரமுள்ள தண்டகம் வரையுள்ள சகல சப்தராசிகளும் அவளது சரீரமே அவள் ஜகத்காரணமான பிரும்மத்தின் சக்தி வடிவமாகவு மிருக்கின்றாள் அத்தகைய மஹிமை வாய்ந்தவளும், வெண்ணிற முள்ளவளுமான சரஸ்வதீ தேவியானவள் அந்தந்தப் பதங்களைக் கொண்டு லோகத்திலுள்ள சகலவஸ்துக்களையும் பிரித்துக்காண்பிக்கிறாள். அதாவது:—ஒருகடையில் பலசாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அவற்றுள் நமக்குக் குடம்தான் தேவை என்றும் வைத்துக் கொள்வோம். அச்சமயம் நாம் கடைக்காரனைப் பார்த்துக் குடத்தைக் கொண்டுவா என்று சொன்னால் உடனே கடைக்காரன் கடையிலுள்ள மற்றச்சாமான்களை விடுத்து குடத்தைமட்டும் கொண்டுவருகிறான் என்பதை நாம் அநுபவத்திற் கண்டிருக்கிறோம். இவ்விடத்தில் குடம் என்ற வார்த்தையானது குடதலை மற்ற வஸ்துகளினின்றும் பிரித்துக் காண்பிக்கின்றது. இவ்விதமே மற்ற விடங்களிலு மறியவும். (எ-று)

(அ - கை) மேற்படித்த மந்திரத்தின் தாத்பர்யத்தைப் பிராம்மணவாக்யம் வெளியிடுகின்றது:—

वाचो विशेषणम् ॥

(ப-ரை) (மேற்படிக்கப்பட்ட மந்திரத்தில் கூறப்பட்டவைகள்) **वाचः**=வாக்கின் அபிமானி தேவதையான சரஸ்வதிக்கு **विशेषणम्**=விசேஷணங்களாக ஆகின்றன.

अथ निगद्व्याख्याताः ।ताननुक्रमिष्यामः ॥

(ப-ரை) **अथ**=இதற்குமேல் (ये=எந்த) **निगद्व्याख्याताः**=பெயரிலிருந்தே நன்றாய் வெளியாகின்ற மஹிமைகளையுடைய மருத்கணங்களுண்டோ **तान्**=அவைகளை **अनुक्रमिष्यामः**=கிரமமாய்ச் சொல்லத்தொடங்குவாம்.

(அ-கை) மேற்சொல்லிய மருத்கணங்களின் பெயர்களுபதேசிக்கப்படுகின்றன:—

वराहवः स्वतपसः । विद्युन्महसो धूपयः ॥
श्वापयो गृहमेधाश्चेत्येते । येचेमेऽशिमिविद्विषः ॥

(ப-ரை) **वराहवः** = நல்லமழையைக் கூப்பிடுகின்றவைகள். **स्वतपसः**=தாமே தாபத்தைக் கொடுக்கின்றவைகள் அதாவது:—தாபத்தை யுண்டுபண்ணுவதற்காக சூரியனையோ, அக்னியையோ எதிர்பாராதவைகள். **विद्युन्महसः**=மின்னலுக்குச் சமானமான காந்தியையுடையவைகள், அல்லது மின்னலை யுண்டுபண்ணுகின்றவைகள் **धूपयः**=வேறு வாசனைத் திரவ்வியத்தை யபேக்ஷிக்காமல் தமது சரீரத்தின் பரிமளத்தாலேயே எல்லா வஸ்துக்களையும் வாசனையுள்ளவைகளாகச் செய்கின்றவைகள் **श्वापय.**=சீக்கிரமாய் சஞ்சரிக்கின்றவைகள் **गृहमेधाश्च**=வீட்டில் பூஜிக்கத்தகுந்தவைகள் **इति**=என்று பொருளையுடைய பெயருள்ள **एते**=இந்த மருத்கணங்களும் **येच**=யாதொரு **अशिमिविद्विषः**=கிருஷி முதலிய காரியங்கட்கு இடையூறாக இல்லாத மருத்கணங்களுண்டோ **ते इमे**=அவைகளும் **उपास्याः**=(உபாசிக்கத்தகுந்தவை.)

(தா-ம்) **वराहवः** என்று தொடங்கி **गृहमेंधाः** என்றதுவரையுள்ள 6 பதங்கள் மேகத்தைத் தூண்டுகின்ற மருத்கணங்களின் பெயர்கள். ஒவ்வொரு கணத்திலும் பல மருத்துக்களடங்கி இருப்பதால் அவ்வவற்றின் பெயர்கள் பஹுவசனாந்தமாய் (பன்மையுள்ளதாய்) படிக்கப்பட்டிருப்பதாக அறியவும். மேலும் இவ்வாறு கணங்களும் ஒரே இடத்திலிருப்பதாலவைகளைச் சேர்ந்தபடியாக உபதேசித்து 7வதான **अशिमिविद्विट्** என்ற கணம் வேறிடத்திலிருப்பதால் அதைத்தனித்து உபதேசித்திருப்பதாயும் கண்டு கொள்ளவேண்டும். ஸூரியோபாசனஞ்



செய்கின்றவன் இந்த மந்திரத்திற் சொல்லிய மருத் கணங்களையுமுபாஸிக்கவேண்டும். (எ-று)

(அ-கை) மேற்சொல்லிய வாயுகணங்களின் மஹிமை சுருக்கி உபதேசிக்கப்படுகிறது:—

पर्जन्यास्सप्त पृथिवीमभिवर्षन्ति । वृष्टिभिरिति ॥
एतयैव विभक्तिविपरीताः । सप्तभिर्वातैरुदीरिताः ॥
अमूल्लोकानभिवर्षन्ति । तेषामेषा भवति ॥

(ப-ரை) (மேற்படித்தமந்திரத்தில் சொல்லிய 7விதமான வாயுகணங்களால் தூண்டப்பட்ட) **सप्तपर्जन्याः** = 7 மேகங்கள் **वृष्टिभिः**=மழையை **पृथिवीम्**=பூமியில் **अभिवर्षन्ति**=பொழிகின்றன. **इति**=என்பது வாயுகணங்களின் மஹிமை. **सप्तभिः**=7 விதமான **वातैः**=வாயுகணங்களால் **उदीरिताः**=மேல்நோக்கிச் செல்லும்படியாய்த் தூண்டபடுகின்றமையால் **विभक्तिविपरीताः**=வர்ஷிப்பதின் முறையில் மாறுதலுள்ளவைகளாய்க்கொண்டு **एतयैव**=பூலோகத்தில் வர்ஷித்தப்பிரகாரமே **अमून् लोकान्**=மேலிருக்கின்ற லோகங்களில் **अभिवर्षन्ति**=மழையைப் பொழிகின்றன. **तेषाम्**=மேற்சொல்லிய வாயுகணங்களின் மேலும் கீழும் வர்ஷிக்கும்படி செய்கின்ற சாமர்த்தியத்தை **एषा**=இந்தருக்கானது (**प्रतिपादिका**=நிருபணஞ் செய்கின்றதாக) **भवति**=இருக்கின்றது.

(தா-ம்) வராஹு முதலிய 7 மருத்கணங்கள் நிராதாரமானப் பிரதேசத்தில் 7 விதமான மேகங்களைக்கொண்டு ஜலத்தைச் சம்பாதித்து அவைகளை ஆங்காங்கு சஞ்சரிக்கும்படித் தூண்டி எல்லாப் பூபாகங்களிலும் மழையைப் பொழியும்படி செய்கின்றன. இவ்விதமே அவ்வேழு மருத்கணங்களும் மேகங்களிலிருக்கும் ஜலத்தை மேல் நோக்கிச் செல்லும்படி செய்து மேலிருக்கின்ற சுவர்க்கம் முதலிய லோகங்களிலும் மழையைப் பொழிகின்றன. மேகங்கள் இவ்வேழு மருத்துக்களால் தூண்டப்படுவதால் பூலோகத்தில் கீழ்முகமாகவும் சுவர்க்கம் முதலிய லோகங்களில் மேல்முகமாகவும் வருஷிக்கின்றன. இத்தகைய

வாயுகணங்களின் சாமர்த்தியத்தை ஒருருக்கும் நிருபணஞ் செய்கின்றது. (எ-று)

(அ-கை) மருத்கணங்களின் சாமர்த்தியத்தை நிருபணஞ் செய்கின்ற ருக்கானது படிக்கப்படுகின்றது.

समानमेतदुदकम् । उच्चैत्यवचाहभिः ॥
भूमिं पर्जन्या जिन्वन्ति । दिवं जिन्वन्त्यग्नय इति ॥

(ப-ரை) एतत्=இந்த (பூலோகம், த்யுலோகம் இவைகளில் வர்ஷிக்கப்பட்ட) उदकम्=ஜலமானது समानम्=ஒரேவிதமாக இருக்கின்றது. (ஆயினும் பூமியில் வர்ஷிக்கப்பட்ட ஜலம் கோடைக்காலத்தில் சூரியனின் கிரணங்களால் ஆவியாகமாறி) अहभिः=சில தினங்களால் उच्चैति=மேல்நோக்கிச் செல்லுகின்றது. (சுவர்க்கத்தில் வர்ஷிக்கப்பட்ட ஜலமானது சூரியகிரணத்தின் சம்பந்தத்தால் ஆவியாகமாறி சுவர்க்கத்திற்குக் கீழிருக்கின்ற மேகமண்டலத்தைக்குறித்து) अहभिः=சிலதினங்களால் अवचैति=கீழ்நோக்கிச் செல்லுகின்றது. पर्जन्याः=(கீழ்முகமாய் வர்ஷிக்கின்ற) மேகங்கள் भूमिम्=பூமியை जिन्वन्ति=மழையைப்பொழிந்து சந்தோஷமுள்ளதாகச் செய்கின்றன. अग्नयः அக்னியைப்போல் மேல்நோக்கிச் செல்லுகின்ற ஜலதாரைகளையுடைய மேகங்கள் दिवम्=சுவர்க்கலோகத்தை जिन्वन्ति=மழையைப் பொழிந்து சந்தோஷப்படுத்துகின்றன.

(அ-கை) ஜமதக்னி என்ற மஹருஷியின் பிரபாவம் வர்ணிக்கப்படுகின்றது.

यदक्षरं भूतकृतम् । विश्वे देवा उपासते ॥
महर्षिमस्य गोप्तारम् । जमदग्निमकुर्वत ॥

(ப-ரை) भूतकृतम्=ஆகாசம்முதலிய மஹாபூதங்களைப்படைத்த यत्=யாதொரு अक्षरम्=நாசமற்ற பிரும்ம வஸ்துவை विश्वे देवाः=எல்லாத் தேவர்களும் उपासते=உபாஸிக்கின்றனரோ अस्य=அந்தப் பிரும்மத்தை உபாஸிப்பதற்கு வேண்டிய மார்க்கத்திற்கு जमदग्निम्=ஜமதக்னி என்று பெயர்பூண்ட महर्षिम्=மஹருஷியை गोप्तारम्=காப்பாற்றுகிறவராக अकुर्वत=ஏற்படுத்தினர்கள்.



(தா - ம்) தேவர்களனைவரும், நாம் எவ்விதம் ஜகத்காரணமான பிரும்மத்தை உபாஸித்து நன்மையை யடைந்திருக்கிறோமோ அவ்விதமே பூலோகத்திலுள்ள மனிதர்கள்யாவரும் க்ஷேமத்தை யடையவேண்டும் என்றுகருதி ஜமதக்னி என்ற மஹருஷியினிடம் பிரும்மத்தை வழிபடுவதற்கு வேண்டிய முறைகளை உபதேசித்து, அவரைப்பூலோகத்திற்குப் பிரசாரகராகவும் நியமித்தனர். (எ - று)

जमदग्निराप्यायते । छन्दोभिश्चतुरुत्तरैः ॥
राज्ञः सोमस्य तृप्तासः । ब्रह्मणा वीर्यवता ॥
शिवा नः प्रदिशो दिशः ॥

(ப - ரை) चतुरुत्तरैः=ஒருபாதத்திற்கு 4 அக்ஷரத்திற்குமேற்பட்ட छन्दोभिः=காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகளால் जमदग्नि=ஜமதக்னி என்ற மஹருஷியானவர் आप्यायते=எல்லாப் பிராணிகளையும் விருத்திசெய்கின்றார். ते=அந்தப்பிராணிகள் वीर्यवता=அதிகச்சக்திவாய்ந்த ब्रह्मणा=மந்திரத்தால் राज्ञः=பிரகாசித்துக் கொண்டிருக்கிற सोमस्य=சோமரசத்தை (पीत्वा=பானஞ்செய்து) तृप्तासः=திருப்தியுள்ளவர்களாக—கிருதகிருத்தியர்களாக भवन्ति=ஆகின்றனர். திருப்தியை யடைந்தகாலத்தில் செய்யப்படும் சந்தோஷ ஆரவாரஞ் சொல்லப்படுகிறது:—नः எங்களுக்கு प्रदिशः=கிழக்குமுதலிய திசைகளும் दिशः=ஆக்னேயம் முதலிய மூலைத்திக்குகளும் शिवाः=மங்களமுள்ளவைகளாக(जाताः=ஏற்பட்டுவிட்டன.)

(தா - ம்) தேவர்களிடமிருந்து பிரும்மத்தை வழிபடுவதற்கு வேண்டியவழிகளைநேரில் உபதேசம்பெற்றபிறகு ஜமதக்னி மஹருஷியானவர் காயத்ரீ முதலிய பலவிதச்சந்தஸ்ஸுகளிலமைக்கப்பட்ட மந்திரங்கள் வாயிலாக அவைகளை வெளி

யிட்டு பூமியிலுள்ள மனிதர்கள்யாவரும் க்ஷேமமடையுமாறு செய்தார். அதிகச்சக்திவாய்ந்த அம்மந்திரங்களைக்கொண்டு சோமயாகம் முதலியவற்றைச் செய்து சோமபானஞ்செய்த மனிதர்கள் "நமக்கு 8 திக்குகளிலும் நன்மைபெருகுகின்றது. நமக்கு எவ்விதத்திலும் குறைவில்லை" என்று சந்தோஷ ஆரவாரஞ்செய்கின்றனர். இத்தகைய மஹிமைவாய்ந்த ஜமதக்னி மஹருஷியையும் சூரியனை வணங்கும்பொழுது நமஸ்கரிக்கவேண்டும். (எ - று)

(அ - கை) சூரியனிடம் அபீஷ்டங்கள் பிரார்த்திக்கப்படுகின்றன:—

तच्छंयोरावृणीमहे । गातुं यज्ञाय । गातुं यज्ञपतये । दैवी स्वस्तिरस्तु नः । स्वस्तिर्मानुषेभ्यः । ऊर्ध्वं जिगातु भेषजम् । शंनो अस्तु द्विपदे । शं चतुष्पदे ॥

(ப - ரை) **शम्**=ரோகம் முதலியவற்றால் அனுபவித்துவரும் துக்கத்தின் நிவிருத்திக்குச் சாதனமாயும், **योः**=வரப்போகின்ற துக்கத்தைத் தடுக்கின்றதாயும் இருக்கிற **तत्**=அந்த-தங்களை யுபாஸிப்பதென்ற—நல்லகர்மத்தை **आवृणीमहे** = மிகவும் ஊக்கத்துடன் பிரார்த்திக்கின்றோம். **यज्ञाय**=யாகம் முதலிய சத்கர்மங்களின் **गातुम्**=மார்க்கத்தையும் **यज्ञपतये**=யாகம் முதலிய சத்கர்மங்களை நடத்திவைக்கின்றவனுக்கு **गातुम्** நல்லகதியையும் **आवृणीमहे**=பிரார்த்திக்கின்றோம். **नः**=எமக்கு **दैवी**=தேவர்களின் அனுக்கிரஹத்தாலுண்டாகின்ற **स्वस्तिः**=க்ஷேமம் **अस्तु**=உண்டாகட்டும். **मानुषेभ्यः**=எனது பரிவாரங்களான பிள்ளை, பேரன் முதலியவற்றிற்கும் **स्वस्तिः**=க்ஷேமம் (**अस्तु** உண்டாகட்டும்) **ऊर्ध्वम्** இதற்குமேலும் **भेषजम्**=சகலவிதமான அனிஷ்டங்களின் நிவிருத்தியானது **जिगातु**=உண்டாகவேண்டும். **नः**=எமது **द्विपदे**=இரண்டு கால்களுள்ள பந்துவர்க்கங்களுக்கு, **शम्**=சுகம் **अस्तु** உண்டாகவேண்டும். **चतुष्पदे**= நான்குகால்களுள்ள பசு, குதிரை முதலியவற்றிற்கு **शम्**=சுகமானது **अस्तु**=உண்டாகவேண்டும்,



(அ - கை) **अथ निगद्व्याख्याताः** என்றதுமுதல் எந்தவிஷயஞ் சொல்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதோ அவ்விஷயம் இங்குமுடிக்கப்படுகின்றது:—

सोमपा ३ असोमपा ३ इति निगद्व्याख्याताः ॥

व्यवदाताहन्ति गरगिर स्तपस उदकं तृप्तासः चतुष्पद एकं च ॥

इति नवमोऽनुवाकः ॥

(ப - ரை) (**ये**) **सोमपाः**=எவர்கள் சோமபானஞ் செய்வதற்கு யோக்யதை பெற்றவர்களோ (**ये**) **असोमपाः**=எந்தத் தேவர்கள் சோமபானம் செய்வதற்கு யோக்கியதை யற்றவர்களோ (**ते सर्वेऽपि**=அவர்கள் யாவரும்) **इति**=சொல்லிமுடிக்கப் பட்டனர் **ते**=அவர்கள்) **निगद्व्याख्याताः**=பெயரிலிருந்தே நன்றாய் வெளியாகின்ற மஹிமையை யுடையவர்கள் இங்கு **अनन्त्यस्यापि प्रश्नाख्यानयोः**=என்ற சாஸ்திரத்தை யனுசரித்து ப்லுதம் வந்திருப்பதாயறியவும்.

ஆரம்பம்முதல் 40 பஞ்சாசத்துகளாகின்றன.

ஒன்பதாவது அனுவாகம் முற்றிற்று

## பத்தாவது அனுவாகம்

(அ - கை) த்யுலோகம், பூலோகம் இவைகளின் அபிமானி தேவதைகளுடைய உபாசனத்திற்கு அங்கபூதமான மந்திரம் படிக்கப்படுகின்றது. த்யுலோக பூலோகங்கள் அவைகளின் சரீரமாதலால் ஸ்துதிக்கப்படுகின்றன:—

सहस्रवृदियं भूमिः । परं व्योम सहस्रवृत ॥
अश्विना भुज्यू नासत्या । विश्वस्य जगतस्पती ॥

(ப - ரை) **इयम्**=பார்க்கப்படுகின்ற **भूमिः** = பூமியானது **सहस्रवृत्**=ஆயிரக்கணக்கான மனிதர்களால் விரும்பப்பட்டதாக

(இருக்கின்றது) परं व्योम=மேன்மைதங்கிய சுவர்க்கமும் सहस्रनृ-नृ=ஆயிரக்கணக்கான தேவர்களால் விரும்பப்பட்டதாக (இருக்கின்றது.) भुज्यू=பிராணிகளுக்குண்டாகின்ற ரோகங்களை நிவிருத்திசெய்து சுகத்தைக்கொடுக்கின்றவர்களும், नासत्या=ஒருபொழுதும் பொய் சொல்லாதவர்களும் विश्वस्य जगतः=எல்லலோகத்தையும் पती=காப்பாற்றுகின்றவர்களுமாக இருக்கின்ற अश्विना (इव)=அச்விநீ தேவர்கள்போல (ते एते=இந்தப் பூலோகத்யுலோகங்கள் स्तः=இருக்கின்றன.)

(அ - கை) சென்ற மந்திரத்தால் த்யுலோகம், பூலோகம் இவைகள் அச்விநீதேவர்களாக ஸ்துதிக்கப்பட்டன. இம்மந்திரத்தால் மிதுனமாக (ஆண்பெண்ரூபமாக) ஸ்துதிக்கப்படுகின்றன:—

जाया भूमिः पतिर्व्योम । मिथुनं ता अतुर्यथुः ॥
पुत्रो बृहस्पती रुद्रः । सरमा इति स्त्रीपुमम् ॥

(ப - ரை) भूमिः=பூமியானது जाया=பார்யை (பிராணிகளுண்டாவதற்குக்காரணமாக இருப்பதுபற்றி இவ்விதஞ்சொல்லப்பட்டது.) व्योम=சுவர்க்கம் पतिः=புருஷன் (தேவர்களைக் காப்பாற்றுவதுபற்றி இவ்விதஞ் சொல்லப்பட்டது.) ता=அந்தப் பூலோகத்யுலோகங்கள் मिथुनम्=ஸ்திரீபுருஷர்கள் போல்अतुर्यथुः=ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கின்றன (तयोः=அவைகளுக்கு) बृहस्पतिः=பிருஹஸ்பதியும் रुद्रः=அக்னியும் पुत्रः=புத்திரன். सर-मा=யாகம்முதலிய கர்மங்களை யனுஷ்டிப்பதற்கு இடமான வேதியானது (दुहिता=பெண்.) इति=இவ்விதம் (तयोः=அந்தப் பூலோக த்யுலோகங்களுக்கு) स्त्रीपुमम्=ஒரு பெண் குழந்தையும், இரு ஆண் குழந்தையும், இருக்கின்றன.

(தா - ம்) பூலோகத்யுலோகங்களை ஒருதம்பதியாகவும் பிருஹஸ்பதி அக்னி இவர்களைப் பூலோக த்யுலோகங்களின் புத்திரர்களாகவும், வேதியைப் பெண்ணாகவும் த்யானிக்கவேண்டும். இவ்விதமே இனிபடிக்கப்படும் மந்திரங்களில் தாத்பர்யங் கொள்ளவேண்டும். (எ - று)



(அ - கை) இம்மந்திரத்தால் பூலோகம் த்யுலோகம் இவைகள் பகல் இரவுகளாக ஸ்துதிக்கப்படுகின்றன:—

शुक्रं वामन्यद्यजतं वामन्यत् । विषुरूपे अहनी द्यौरिव स्थः ॥
विश्वा हि माया अवथः स्वधावन्तौ । भद्रा वां पूषणाविह रातिरस्तु ॥

(ப - ரை) (हेद्यावापृथिव्यौ=ஓ த்யுலோக பூலோகாபிமானி தேவதைகளே!) वाम्=உங்களுடைய சரீரமான பூலோக த்யுலோகங்களுள் अन्यत्=ஒன்று शुक्रम्=வெண்ணிறமுள்ள பகலாக (இருக்கின்றது) वाम्=உங்களுடைய சரீரமான பூலோக த்யுலோகங்களுள் अन्यत्=மற்றொன்று यजतम्=யாகசம்பந்தமுள்ள ராத்திரியாக இருக்கின்றது. (इत्येवम्=இவ்விதம் युवाम्=நீங்கள்) विषुरूपे=ஒன்றுக்கொன்று மாறுபட்டரூபமுள்ள अहनी=பகல் இரவு இவைகளாக स्थः=இருக்கிறீர்கள். (ते युवाम्=அந்த நீங்கள்) द्यौरिव=த்யுலோகத்திலிருக்கின்ற சூரியன்போல் (सर्वस्योपकुरुथः=எல்லோருக்கும் நன்மையை விளைவிக்கின்றீர்கள்) स्वधावन्तौ=உணவுபொருளுள்ள ஓ பூலோக த்யுலோகாபிமானி தேவதைகளே! हि=யாது காரணம்பற்றி (युवाम्=நீங்கள்) विश्वामायाः=சகலவிதமான புத்தி விருத்திகளையும் अवथः=காப்பாற்றுகிறீர்களோ! (तस्मात्=அதனால்) पूषणौ=புஷ்டியை விளைவிக்கின்றவர்களாக ஆகின்றீர்கள். वाम्=உங்களுடைய रातिः=பயனைக்கொடுத்தலானது इह=என்னால் செய்யப்படும் இக்கர்மத்தில் भद्रा மங்களமாக अस्तु=ஏற்படவேண்டும்.

(தா-ம்) निशितायां निर्वपेत என்ற சாஸ்திரத்தால் ராத்திரியில் அனுஷ்டிக்கவேண்டியதாய் ஒரு இஷ்டி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு "நிசேஷ்டி" என்றுபெயர். ஆகவே யாகத்தின் சம்பந்தம் ஓர் இரவுக்கு ஏற்பட்டமையால் எல்லாராத்திரிகளும் சத்திரிநியாயத்தையனுசரித்து यजतम् என்றபதத்தாலழைக்கப்படுகின்றன. பூலோகம்த்யுலோகம் இவைகள் வெண்ணிறமுள்ள பகலாகவும் கருநிறமுள்ள இராத்திரியாகவுமிருக்கின்றன. மேலும் அவைகள் உணவு பொருளுள்ளவைகளாயிருப்பதால் அவ்வுணவுபொருளைக் கொடுத்து சகலப்பிராணிகளின் புத்தி

விருத்திகளையும் காப்பாற்றுகின்றன. அன்னத்தையுண்ணுமிடில் எல்லோருடையபுத்தியும் தமோட்டத்தையடைவது பிரத்தியக்ஷமான விஷயம். ஓ பூலோகத்யுலோகாபிமானி தேவர்களே! தங்களை உபாஸிக்கின்ற என்விஷயத்தில் தங்களுடைய ஔதார்யகுணத்தை வெளியிடவேண்டும். (எ - று)

(அ-கை) பூலோகத்யுலோகங்கள் இரண்டுசகாக்களாக ஸ்துதிக்கப்படுகின்றன:—

वासात्यौ चित्रौ जगतो निधानौ । द्यावाभूमी चरथः सꣳसखायौ ॥
तावश्विना रासभाश्वा हवं मे । शुभस्पती आगतꣳसूर्यया सह ॥

(ப-ரை) **द्यावाभूमी**=த்யுலோகம், பூலோகம் இவைகளினபிமானி தேவர்களே! **वासात्यौ**=தேவர், மனிதர் இவர்களின் வாசத்திற்குத்தகுதியானவர்களும், **चित्रौ**=பலவிதமான போகங்களைக் கொடுக்கின்றவர்களும் **जगतः** மற்றுமுள்ள பிராணிவர்க்கத்திற்கு **निधानौ**=ஆதாரபூதர்களுமான நீங்கள் **सखायौ** சஹிருத்துக்களைப்போல் **संचरथः**=சேர்ந்திருக்கிறீர்கள். **रासभाश्वा**=கழுதையைக் குதிரையாகவுடைய **अश्विनौ** அச்விநீ தேவர்கள் போன்ற **तौ**=அந்த நீங்கள் **शुभस्पती**=நல்லகர்மத்தைக் காப்பதற்காக **सूर्यया-सह**=உஷஸ் என்ற தேவதையோடு **मे**=என்னுடைய **हवम्**=யாகத்தைக்குறித்து **आगतम्**=வரவேண்டும்.

(அ-கை) அச்விநீதேவர்கள், பூலோகத்யுலோகங்களில் மழையை யுண்டுபண்ணுகின்றனர் என்று ஸ்துதிக்கப்படுகின்றனர்:—

त्युग्रोह भुज्युमश्विनोदमेघे । रयिं न कश्चिन्ममृवां २ अवाहाः ॥
तमूहथुर्नौभिरात्मन्वतीभिः । अन्तरिक्षप्रुद्भिरपोदकाभिः ॥

(ப-ரை) **अश्विना**=ஓ அச்விநீ தேவர்களே! **उदमेघे**=நீருண்ட மேகத்திலிருக்கின்றதும், **भुज्युम्**=காப்பாற்றுகின்றதும் **आत्मन्वतीभिः**=திருடமானவைகளும் **अन्तरिक्ष प्रुड्भिः**=பூமியில் சம்பந்திக்காமல் ஜலத்தின்மீது மிதக்கின்றவைகளும் **अपोदकाभिः**=ஜலம் உள்புகக்கூடாதவைகளும், அதாவது ஓட்டையில்லாதவைகளுமான **नौभिः**=ஓடங்களால் (**तरणीयम्**=கடக்கக்கூடியதுமான ஜலத்தை) **त्युग्रः**=மிகவும் கடுமையுள்ள (லோபியான) **कश्चित्**=ஓர்மனிதன் **ममृवान् ह**=மரணத்தை யடைந்தபோதிலும் **रयिम्**=பொருளை (**यथा**=எவ்விதம்) **न**=கொடுக்கமாட்டானோ (**किन्तु**=ஆனல்) **अवाहाः**=சுமந்துகொண்டிருப்பானோ அதாவது பொருளைச்சேர்ப்பதில் நோக்கமுள்ளவனாக இருப்பானோ (**तथा**=அவ்விதம்) **ऊहथुः**=சம்பாதிக்கின்றனர்.

(தா-ம்) லோபியானமனிதன் எவ்விதம் பணத்தைமேன்மேலும் சம்பாதித்துக்கொண்டே இருப்பானோ அவ்விதம் அச்விநீதேவர்களும் மேகத்தில் ஜலத்தைத்தேக்கிவைக்கின்றனர். சம்பாதிக்கு மம்சத்தில்மாத்திரம் லோபியை திருஷ்டாந்தமாகக் கொள்ளவேண்டும் (எ-று)

तिस्रः क्षपस्त्रिरहातिव्रजद्भिः । नासत्या भुज्युमूहथुः पतङ्गैः ॥
समुद्रस्य धन्वन्नार्द्रस्य पारे । त्रिभीरथैश्शतपद्भिः षडश्वैः ॥

(ப-ரை) **नासत्या**=ஓ அச்விநீ தேவர்களே! **तिस्रः**=மூன்று **क्षपः**=ராத்திரியும் **त्रिः**=மூன்று **अहा**=பகலும் **अतिव्रजद्भिः**=செல்லக்கூடியவைகளும், (அதாவது நீருண்டமேகம் மூன்று தினங்கள் தொடர்ச்சியாய் வர்ஷித்துக்கொண்டுசெல்லும். அதற்குப்பிறகு அதில் ஜலம் குறைந்துவிடும் என்று கருத்து) (**त्रिभिः**=உத்தமம், மத்தியமம், அதமம் என மூன்றுவிதமானவைகளும். (மூன்று தினங்கள் தொடர்ச்சியாய் வர்ஷிக்கின்ற மேகம் உத்தம மென்றும், இரண்டுதினங்கள்வர்ஷிக்கும்மேகம்மத்தியமமென்றும், ஒருதினம்வர்ஷிக்கின்றமேகம் அதமமென்றுமறியவேண்டும்.) **रथैः**=ரதங்களைப்போலுள்ளவைகளும், (ஜலமாகிற பாரத்தைச் சுமப்பதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **शतपद्भिः**=ஜலத்தின் தாரைகளாகிற நூற்றுக்கணக்கான கால்களையுடையவைகளும் **षडश्वैः**=வர்ஷிக்கவரும்பொழுது மூன்றுவிதமான பரவுதல், வர்ஷித்துத் திரும்பும்பொழுதும் மூன்றுவித பரவுதல் ஆகஆறுவிதமான பரவுதலையுடையவைகளும் **पतङ्गैः**=பக்ஷிகளைப்போல் ஆகாசத்திற் சஞ்

சரிக்கின்றவைகளுமான மேகங்களால் आर्द्रस्य=ஜலமுள்ள समुद्रस्य=சமுத்திரத்திற்கு पारे=தூரத்திலுள்ள धन्वन्=ஜலமில்லாத இடத்தில் भुज्युम्=ஜலத்தை ऊहथुः=வர்ஷிக்கின்றீர்கள்.

(அ-கை) இனிவரும் நான்கு மந்திரங்களால் சூரியனால் மழை யுண்டு பண்ணப்படுகின்றதென்று சொல்லப்படுகின்றது:—

सवितारं वितन्वन्तम् । अनुबध्नाति शांबरः ॥
*अपपूर्षंबरश्चैव । सवितऽपसोऽभवत् ॥

(ப-ரை) शांबरः=ஜலத்தை வஹிக்கின்றமேகம் वितन्वन्तम्=மழைபொழிவதற்காகக் கிரணங்களை எங்கும் பரப்புகின்ற सवितारम्=சூரியனை अनुबध्नाति=அனுசரிக்கின்றது. आपपूः=ஜலப்பிரவாஹமுள்ள शंबरश्च=மேகமும் अरेपसः=அனைவருக்கும் நன்மையைவிளைவிக்கின்ற மழையை सविता=உண்டுபண்ணுவதாக अभवदेव=நிச்சயமாயாகின்றது.

(தா-ம்) சூரியன் தனது கிரணங்களை எங்கும்பரப்பி பூமியிலுள்ள ஜலத்தைக்கிரஹித்து மேகத்தில் தேக்குகிறார். அந்த ஜலத்தை மேகங்கள் வர்ஷிக்கின்றன (எ-று)

त्यं सुतृप्तं विदित्वैव । बहुसोम गिरं वशी ॥
अन्वेति तुग्रो वक्रियां तम् । आयसूयान्त्सोमतृप्सुषु ॥

(ப-ரை) सुतृप्तम्=ஜலம் நிறைந்ததும் बहुसोमगिरम्=மந்தமான அநேக இடிகளை யுடையதுமான त्यम्=அந்தமேகத்தை विदित्वा=அறிந்து वशी=தனக்கு சுவாதீனமான மேகத்தையுடைய तुग्रः=கிரணங்களையுடைய சூரியன் सोमतृप्सुषु=சோமயாகத்தில் சோமபானஞ்செய்து திருப்தியடைந்த யஜமானர்களுக்காக आयसूयान्=மழை பொழியும்படி தூண்டுவதற்கு முயர்ச்சியுள்ளவராய்க்கொண்டு वक्रियाम्=வர்ஷிக்காத तम्=அந்த மேகத்தைத்

---

*आपपूर्वंबरश्चैव என்று பாடமிருக்கின்றது.



अन्वेति=வர்ஷிக்கும்படி செய்வதற்காக பின்தொடர்ந்து செல்லுகிறார்.

(தா - ம்) சிலமேகம் நீருண்டும், பிராணிகள் சந்தோஷமடையுமாறு கர்ஜிக்கின்றதாகவும் இருக்குமாயினும் அதிகமாய் வர்ஷிக்காது. சிலமேகம் அதிகமாய் வர்ஷிக்கும். இன்னமேகம் அதிகமாய் வர்ஷிக்குமென்றும், இன்னமேகம் வர்ஷிக்காதென்றும் மேகதத்துவமறிந்தவர்க்குத்தான் தெரியும். சூரியன் மேகதத்துவமறிந்திருப்பதாலும், அவைகளைத்தன் வசமாகவைத்துக்கொண்டிருப்பதாலும் சோமயாகம் முதலியசத்கர்மங்களை யனுஷ்டிக்கின்ற தார்மிகர்கள் வஸிக்கின்ற தேசத்திற்கு ஜலத்தைச் சுயமாய் வர்ஷிக்காத மேகங்கள் செல்லும்பொழுதுதான் அவைகளைப் பின்தொடர்ந்து சென்று வர்ஷிக்கும்படி செய்கிறார். (எ - று)

स संग्रामस्तमोद्योऽत्योतः । वाचो गाः पिपाति तत् ॥
सतद्गोभिस्तवाऽत्येत्यन्ये । रक्षसानन्विताश्च ये ॥

(ப - ரை) संग्रामः=கிரணங்களின் சமூஹத்தை யுடையவரும் तमोद्यः=இருட்டைத் தூண்டிப்பவரும் अत्योतः=குதிரைகளால் காப்பாற்றப்பட்டவருமான (குதிரைகளாலிழுக்கப்படும் ரதத்தால் சஞ்சரிப்பதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது) सः=அந்தச்சூரியன் वाचः=ஜலங்கிடைக்காமையால் கதருகின்ற गाः=பசுமுதலியப் பிராணிகளை तत्=அந்த ஜலத்தை पिपाति=பானஞ் செய்விக்கிறார். सः=அந்தச்சூரியன் तत्=அவ்விதம் மழையைப்பொழிந்து சந்தோஷப்படுத்தும் காலத்தில் गोभिः=எல்லாப் பிராணிகளின் வாக்கினாலும் स्तवा=ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவராய்க்கொண்டு अन्ये=மற்றத் தேவர்களை अत्येति=அதிக்கிரமிக்கிறார். (மற்றத் தேவர்களுட் சிறந்தவராகின்றார்.) रक्षसा=ராக்ஷஸ ஜாதியில் अनन्विताः=சேராத ये=எந்தத் தேவர்களுண்டோ (ते=அவர்களும் स्तुवन्ति=ஸ்தோத்திரஞ் செய்கின்றனர்.)

(தா - ம்) மழைபொழிவதற்குமுன் ஜலங்கிடைக்காமையால் எல்லாப்பிராணிகளும் கதறிக்கொண்டிருந்தன. சூரியன்

மேகங்களைத்தூண்டி மழையைப் பொழிந்தவுடன் எல்லாப் பிராணிகளும் வேண்டியவளவு ஜலத்தைக்குடித்து திருப்தியை யடைந்து சூரியனே மற்றெல்லாத்தேவர்களுட் சிறந்தவர் என்று ஸ்தோத்திரஞ் செய்கின்றன.

अन्वेति परिवृत्याऽस्तः। एवमेतौ स्थो अश्विना।
ते एते द्युःपृथिव्योः। अहरहर्गर्भं दधाथे॥

(ப - ரை) **अस्तः**=சூரியனால் தூண்டப்பட்ட மேகம் **परिवृत्य**=ஆகாசமெங்கும் சூழ்ந்துகொண்டு **अन्वेति**=பிராணிகளுக்கு ஹிதமாக நடக்கின்றது. (வர்ஷிக்கின்றது) **एतौ**=இந்தப் பூலோகம், த்யுலோகம் இவைகள் **अश्विना**=குதிரையினால் சஞ்சரிக்கின்ற சூரியனால் **एवम्**=இவ்விதம் (மழையைப் பொழிதல்மூலம்) **स्थः**=தரிக்கப்படுகின்றன (காப்பாற்றப்படுகின்றன.) **तेएते**=மேல் முகமாயும், கீழ்முகமாயும் வர்ஷிக்கின்ற அந்தமேகங்கள் **द्युः पृथिव्योः**=த்யுலோகம் பூலோகம் இவைகளில் **अहरहः**=ஒவ்வொருதினமும் **गर्भम्**=அந்தந்தப்பிராணிகளின் உத்பத்திக்குச் சாதனமான விதையை (பீஜத்தை) **दधाथे**=உண்டு பண்ணுகின்றன. காலத்தில் மழை பெய்ந்தால் பயிர்கள் விருத்தியடைந்து உணவு பொருள்கள் விருத்தியாகும். அதைப் பிராணிகள் உட்கொண்டு சரீரத்தில் வீர்யத்தைப் பெறுவார்கள். இவ்விதம் மழையானது பிராணிகளின் அபிவிருத்திக்குச் சாதனமாகின்றது.

(அ - கை) இனிப் பிராம்மண வாக்யங்கள் படிக்கப்படுகின்றன. அவைகளால் பூலோகம், த்யுலோகம் இவைகள் பலவிதமாய் ஸ்துதிக்கப்படுகின்றன. அவற்றுள் முதலாவது பிரகாரம் பின்வருமாறு:—

तयोरेतौ वत्सावहोरात्रे। पृथिव्या अहः। दिवो रात्रिः।
ता अविसृष्टौ। दंपती एव भवतः॥

(ப - ரை) **तयोः**=அந்தப்பூலோக த்யுலோகங்களுக்கு **एतौ**=இந்த **अहोरात्रे**=பகல் இரவுகள் **वत्सौ**=கன்றுகளா.யாகின்றன.



(பூலோக த்யுலோகங்களில் பகல் இரவு காலங்களுண்டாவதால் இவ்விதஞ் சொல்லப்படுகின்றது.) (**तयोः**=அந்தப் பகல் இரவுகளுள்) **अहः**=பகல் **पृथिव्याः**=பிருதிவியின் (**वत्सः**=கன்றாகவும்) **रात्रिः**–இரவு **दिवः**=த்யுலோகத்தின் (**वत्सः**=கன்றாகவும் இருக்கின்றது) **तौ**=அந்தப்பகல் இரவுகள் **अविसृष्टौ**=ஒருபொழுதும் பிரியாத **दंपती एव**=தம்பதிகளைப்போல் **भवतः**=இருக்கின்றன. பகல் இரவுகள் எப்பொழுதும் மாறிமாறிச் சேர்ந்தே வந்துகொண்டிருப்பதால் இவ்விதம் வர்ணிக்கப்படுகின்றது.

तयोरेतौ वत्सौ। अग्निश्चाऽदित्यश्च। रात्रेर्वत्सः। श्वेत आदित्यः।
अन्होऽग्निः। ताम्रो अरुणः। ता अविसृष्टौ। दंपती एव भवतः॥

(ப - ரை) **तयोः**=அந்தப்பகல் இரவுகளுக்கு **अग्निश्च**=அக்னியும் **आदित्यश्च**=சூரியனும் **एतौ**=இவர்கள் **वत्सौ**=கன்றுகளாயாகின்றனர். **श्वेतः**=வெண்ணிறமுள்ள **आदित्यः**=சூரியன் **रात्रेः**=ராத்திரியின் **वत्सः**=கன்றாயாகின்றான். (ராத்திரியின் முடிவில் சூரியனுதிப்பதாலிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **ताम्रः**=சில சமயத்தில் கொஞ்சம் சிவந்தவனும், **अरुणः**=சில சமயத்தில் அதிகமாய்ச் சிவந்தவனுமான **अग्निः**=அக்னி **अन्हः**=பகலின்(**वत्सः**=கன்றாயாகின்றான். பகலின் முடிவில் அக்கினியின் பிரகாச மதிகரிப்பதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது. அல்லது சமையல் முதலிய கார்யங்களுக்காகப் பகலில் அக்னியானது அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றது பற்றி இவ்விதஞ் சொன்னதாய்க் கொள்ளவேண்டும்.) **तौ**=அந்த அக்னி, சூரியன் இவர்கள் **अविसृष्टौ**=ஒருவரை யொருவர் பிரியாத **दंपती एव**=தம்பதிகள்போல் **भवतः**=இருக்கின்றனர். (ஸ்திரீ புருஷர்கள் ஒரு மனதாய் இருந்து குடும்பத்தை நடத்துவது போல் அக்னியும், சூரியனும் ஒருங்குசேர்ந்து லோகக்ஷேமத்தைச் செய்வதாலிவ்விதஞ் சொல்லப்பட்டதா யறியவேண்டும்.

तयोरेतौ वत्सौ। वृत्रश्च वैद्युतश्च। अग्नेर्वृत्रः।
वैद्युत आदित्यस्य। ता अविसृष्टौ। दंपती एव भवतः॥

(ப - ரை) **तयोः**=அந்த அக்னி, சூரியன் இவர்களுக்கு **वृत्रश्च**=மறைக்கின்ற புகையும் **वैद्युतश्च**=வெய்யிலும் **एतौ**=இவைகள் **वत्सौ**=கன்றுகளா யாகின்றன. **वृत्रः**=புகை **अग्नेः**=அக்கினியின் (**वत्सः**=கன்றாயாகின்றது.) **वैद्युतः**=வெய்யில் **आदित्यस्य**=சூரியனின் (**वत्सः**=கன்றாயாகின்றது.) **तौ**=அந்தப் புகை, வெய்யில் இவைகள் **अविसृष्टौ**=ஒன்றையொன்று விட்டுப்பிரியாத **दंपतीएव**=தம்பதிகளைப்போல் **भवतः**=இருக்கின்றன. (புகையானது வெய்யிலடிக்கும்பொழுதே நன்றாய்ப் புலப்படுவதாலிவ்விதஞ் சொல்லப்பட்டது.)

तयोरेतौ वत्सौ । उष्माच नीहारश्च । वृत्रस्योष्मा ।
वैद्युतस्य नीहारः । तौ तावेव प्रतिपद्येते ॥

(ப - ரை) **तयोः**=அந்தப் புகை, வெய்யில் இவைகட்கு **उष्माच**=வெப்பமும் **नीहारश्च**=பனியும் **एतौ**=இவைகள் **वत्सौ**=கன்றுகளாயாகின்றன. **वृत्रस्य**=புகைக்கு **ऊष्मा**=வெப்பம் (**वत्सः**=கன்றாயாகின்றது. புகைசூழ்ந்தவிடத்தில் புழுக்கம் ஏற்படுவதாலிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **वैद्युतस्य**=வெய்யிலுக்கு **नीहारः**=பனி (**वत्सः**=கன்றாயாகின்றது.) வெய்யிலினின்றும் பனி உண்டாகின்றதென்பது பிரசித்தமாதலால் இவ்விதஞ் சொல்லப்பட்டது.) **तौ**=அந்தப் புழுக்கம், பனி இவைகள் **तावेव**=அந்தத் தத் தமதுகாரணமான புகைவெய்யில் இவைகளையே **प्रतिपद्येते**=அடைகின்றன. (அவைகளிலேயே லயத்தை—மறைதலை—அடைகின்றன.)

(அ - கை) இதுவரையில் நேரிலும், பரம்பரையாகவும் த்யுலோகம் பூலோகம் இவைகள் ஸ்துதிக்கப்பட்டன. இனி ராத்திரியும், அதன்கன்றான சூரியனும் பிரசம்ஸிக்கப்படுகின்றன:—

सेयꣳरात्री गर्भिणी पुत्रेण संवसति । तस्या वा एतदुल्बणम् ।
यद्रात्रौ रश्मयः । यथागोर्गर्भिण्या उल्बणम् । एवमेतस्या उल्बणम् ।

(ப - ரை) **सेयं रात्री**=எந்த ராத்திரியானது முன் சூரியன் என்ற கன்றுக்குத் தாயாக நிரூபணஞ் செய்யப்பட்டதோ அந்த



ராத்திரியானது **पुत्रेण**=புத்திரனான சூரியனால் (அவன் உள்ளே இருத்தலால்) **गर्भिणी**=கர்ப்பமுள்ளவளாக **संवसति** = வஸிக்கின்றாள். **रात्रौ**=ராத்திரியில் **यत्**=யாதொரு **रश्मयः**=சூரியனின் கிரணங்களுண்டோ **एतत्**=இவைகள் **तस्याः**=அந்த ராத்திரியின் **उल्बणंवा**=கர்ப்பத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்ற தோல்பைபோல் (**सन्ति**=இருக்கின்றன.) உதாஹரணம்:—**गर्भिण्याः** = கர்ப்பமுள்ள **गोः**=பசுவினுடைய **उल्बणम्**=கர்ப்பத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் தோல்பையானது (இதைப் பனிக்குடம் என்பார்கள்) **यथा**=எவ்விதம் (**अन्तरास्ते**=உள்ளே இருக்கின்றதோ) **एवम्**=அவ்விதம் **एतस्याः**=இந்த ராத்திரியினுடைய **उल्बणम्**=கர்ப்பத்தை மறைக்கின்ற சூரியனின் கிரணங்களாகிற தோல்பையானது (**अन्तरास्ते**=உள்ளே இருக்கின்றது.)

(தா - ம்) பசுவின் வயிற்றிலிருக்கின்றகர்ப்பம் தோலினால் சூழப்பட்டு சரீரத்திற்குள்ளிருப்பதால் எவ்விதம் வெளியில் புலப்படாமலிருக்குமோ அவ்விதமே சூரியன் தனதுகிரணங்களாகிற தோல்பையால் சூழப்பட்டு ராத்திரியின் கர்ப்பத்தில்வஸிப்பதால் ராத்திரியில் சூரியன் புலப்படுவதில்லை. ராத்திரி என்றசப்தம் ஸ்திரீலிங்கமாதலால் அதன்பொருளும் ஸ்திரீயாகபாவிக்கப்படுகின்றது. ராத்திரியில் சூரியன் புலப்படாமல் அதன்முடிவில் புலப்படுவதால் ராத்திரி சூரியனின் தாய் என்றும், அவனை ராத்திரியானவள் கர்ப்பத்தில் தரிக்கிறாள் என்றும் சொல்லப்பட்டது. (எ - று)

(அ - கை) ராத்திரி, சூரியன் இவர்களை மேற்சொல்லியப் பிரகாரமறிவதைப் புகழ்கின்றது:—

प्रजयिष्णुः प्रजया च पशुभिश्च भवति । य एवं वेद ।
एतमुद्यन्तमपियन्तं चेति । आदित्यः पुण्यस्य वत्सः ॥
अथ पवित्राङ्गिरसः ।

(ப - ரை) **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=ராத்திரியின் மாஹாத்ம்யத்தை அறிவானோ **सः**=அவன் **प्रजया**=சந்ததியையும்

**पशुभिश्च**=பசுக்களையும் **प्रजयिष्णुः**=உண்டுபண்ணுகிறவனாக **भवति**=ஆகின்றான். **उद्यन्तम्**=உதயமடைகிறவனும் **अपि**=மேலும் **यन्तंच**=அஸ்தமனமடைகிறவனுமான **एतम्**=இந்தச்சூரியனை **एति**=அடைகிறான். (சூரியன் உதயமடைகின்ற இடத்திலும், அஸ்தமனமடைகின்ற இடத்திலும் தனதிஷ்டப்படி சஞ்சரிப்பதற்குரிய யோக்யதையைப் பெறுகிறான்.) (**किंच**=மேலும்) **आदित्यः**=சூரியனைப்போல் தேஜஸ் உள்ளவனாகவும் **पुण्यस्य**=புண்ய தேவதையின் **वत्सः**=பிள்ளையாகவும் (**भवति**=ஆகின்றான்) பதினொன்றாவது அனுவாகத்தில் படிக்கப்படுகின்ற மந்திரங்கள் இன்னின்னவைகள் என்று சொல்லப்படுகின்றன:—**अथ**=பிறகு **पवित्राङ्गिरसः**=பரிசுத்தியைத் தரத்தக்கவைகளும், அங்கிரஸ் என்ற மஹருஷியினால் கண்டு பிடிக்கப்பட்டவைகளுமான மந்திரங்கள் (**उपदिश्यन्ते** = உபதேசிக்கப்படுகின்றன.)

**स्योऽपोदकाभिर्वशीदधाथे अग्निस्तयोरेतौ वत्सौ भवति चत्वारिच ।**

அடிமுதல் 47 பஞ்சாசத்துக்களாகின்றன.

பத்தாவது அனுவாகம் முற்றிற்று.

---

## பதினொன்றாவது அனுவாகம்

(அ - கை) இவ்வனுவாகத்தால் சூரியனின் மஹிமை வர்ணிக்கப்படுகின்றது:—

पवित्रवन्तः परिवाजमासते । पितैषां प्रत्नो अभिरक्षति व्रतम् ॥
महस्समुद्रं वरुणस्तिरोदधे । धीरा इच्छेकुर्धरुणेष्वारभम् ॥

(ப - ரை) **पवित्रवन्तः**=பரிசுத்தர்கள் **वाजम्**=அன்னம்கிடைப்பதற்காக **पर्यासते**=எங்கும் சேவிக்கின்றனர். **पिता**=காப்பாற்றுகின்றவரும் **प्रत्नः**=புராதனருமான சூரியன் **एषाम्**=இந்தப் பரிசுத்தர்களுடைய **व्रतम्**=சத்கர்மத்தை **अभिरक्षति**=காப்பாற்றுகிறார். **वरुणः**=ஜலத்திற்கதிபனான தேவன் **महः**=பெரிதாயும் **समुद्रम्**=



சமுத்திரம் போலுள்ளதாயுமிருக்கிற ஆகாசத்தை **तिरोदधे**=மேகங்களால் மறைக்கிறார். **धीरा इत्**=மனத்தைத் தன் வசமாக்கினவர்களே **धरुणेषु**=பூஜைக்குரிய சாமான்களைத் தரிக்கின்ற இடத்தில் **आरभम्**=நல்லகர்மத்தை ஆரம்பஞ் செய்வதற்கு **शेकुः**=சமர்த்தர்களாயாகின்றனர்.

(தா - ம்) பரிசுத்தர்களான மஹான்கள் அன்னங் கிடைப்பதற்காக சூரியனை உபாசிக்கின்றனர். அவ்வித முபாஸிக்கின்றவர்களின் சத்கர்மங்களுக்கு எவ்விதவிக்னமும் நேரிடாவண்ணம் சூரியன்காப்பாற்றுகிறார். மேலும் அந்தச்சத்கர்மங்களால் திருப்த்தியையடைந்த சூரியன் காலங்களில் மழையையுண்டாக்கும்படி வருணனைத்தூண்டுகிறார். வருணனும் மேகங்களைத் தூண்டி மழையைப் பொழியும்படி செய்கிறார். மனம் போனபடியெல்லாம் செல்லாமல் மனத்தைத் தன் வசமாக்கினவர்களாலேயே ஷை சத்கர்மங்கள் அனுஷ்டிக்கத்தக்கனவாகின்றன. (அ - று)

पवित्रं ते विततं ब्रह्मणस्पते । प्रभुर्गात्राणि पर्येषि विश्वतः ॥
अतप्ततनूर्नतदामो अश्नुते । शृतास इद्वहन्तस्तत्समाशत ॥

(ப - ரை) **ब्रह्मणस्पते**=அன்னத்தைக்கொடுத்துக் காப்பாற்றுகின்ற ஓ சூரியனே! **ते**=தங்களைக்குறித்து அனுஷ்டிக்கவேண்டிய **पवित्रम्**=பரிசுத்தமான கர்மமானது **विततम्**=பரப்பப்பட்டது. (ஆரம்பிக்கப்பட்டது.) **प्रभुः**=யஜமானரான நீர் **विश्वतः**=சமஸ்தமான **गात्राणि**=சரீரங்களை (பிராணிகளை) **पर्येषि**=உமது கிரணங்களால் வியாபரிக்கிறீர். (காப்பாற்றுகிறீர்) **अतप्ततनूः**=சத்கர்மானுஷ்டான மூலம் சரீரத்தைக் கிலேசப்படுத்தாதவனும் (**अतएव**=ஆனது பற்றியே) **आमः**=வேகாத பொருளுக்குச் சமானமானவனுமான புருஷன் **तत्**=அந்தச் சுகத்தை **नाश्नुते**=அடையமாட்டான். **शृतास इत्**=நன்றாய்ப் பாகத்தை யடைந்த ஹவிஸ்போலுள்ள மனிதர்கள் மாத்திரம் (சத்கர்மானுஷ்டானஞ் செய்து சித்த பரிபாகம் பெற்றவர்கள் மாத்திரம்) **वहन्तः**=சத்கர்மத்தை நிர்வஹிக்கின்றவர்களாய்க்கொண்டு **तत्**=அந்த மேலானசுகத்தை **समा-**

शत=அடைந்தனர். சிரமப்பட்டு எவன் தங்களை உபாஸிக்கின்றனோ அவனால் மட்டும் தங்கள் பிரசாதத்தாலுண்டாகக்கூடிய சுகமனுபவிக்கப்படுமே யல்லாது மற்றவனால் அனுபவிக்க முடியாது என்பது கருத்து.

ब्रह्मादेवानाम् ।

இது ஓர் மந்திரத்தின் தொடக்கம். அம்மந்திரத்தையும் இங்கு படிக்கவேண்டும். அம்மந்திரமாவது:—

ब्रह्मा देवानां पदवीः कवीनामृषिर्विप्राणां महिषो मृगाणाम् ।
श्येनोगृध्राणांऽस्वधितिर्वनानांऽसोमः पवित्रमत्येतिरेभन् ॥

இம்மந்திரத்தின் அர்த்தத்தை மஹா நாராயணோபநிடதத்தின் **अणोरणीयान्** என்ற அனுவாகத்தில் கண்டு கொள்ளவும்.

असतस्सद्ये ततक्षुः । ऋषयस्सप्ताऽत्रिश्च यत् ॥
सर्वेऽत्रयो अगस्त्यश्च । नक्षत्रैश्शंकृतोऽवसन् ॥

(ப-ரை) **ये**=எந்த **सप्त ऋषयः**=ஏழு ருஷிகளுண்டோ, **यत्**=அவர்களுள் சிரேஷ்டரான யாதொரு **अत्रिश्च**=அத்ரி என்ற மஹருஷியுண்டோ (**ते**) **सर्वे** = அவர்கள் யாவரும் **अत्रयः**=அத்ரியும் **अगस्त्यश्च** = அகஸ்த்யரும் **असतः**=இல்லாமைக்குச் சமானமான ஸூக்ஷ்மமான ஜகத்காரண வஸ்துவினிடமிருந்து **सत्**=ஜகத்தை **ततक्षुः**=உண்டுபண்ணினார்கள். (**किंच**=மேலும் **एते कर्मानुष्ठातारः**=இந்தச் சூரியோபாசனஞ் செய்கின்றவர்கள்) **नक्षत्रैः**=நக்ஷத்திரங்களோடுகூட **शंकृतः**=லோகத்திற்கு க்ஷேமத்தைச் செய்கின்றவர்களாக **अभवन्**=ஆகின்றனர்

(தா - ம்) ஜகத்தானது நாமம், ரூபம் என்ற பிரிவினைகளற்றதாய் ஓர் சமயத்திலிருக்கின்றது. அச்சமயத்தில் அது "அவ்யக்தம்" என்றும் "அசத்" என்றும், "காரணம்" என்றும் சொல்லப்படும். நாமம், ரூபம் என்றப்பிரிவினையுள்ள நிலையில் ஜகத்தானது "சத்" எனப்படும். அத்திரி வஸிஷ்டர் முதலியமஹருஷிகள் முன்கல்பத்தில் சூர்யாந்தர்யாமியானபரமாத்மாவை உபாசனஞ்செய்து அதன்பிரபாவத்தால் தத்தமது அதிகாரத்திற்குத் தக்கபடி அவ்யக்தத்தினின்றும் ஜகத்தையுண்டுபண்ணினார்கள். அவ்விதமே இந்தக்கல்பத்திலும் எவர்கள் சூர்யாந்தர்யாமியான பரமேசுவரனை யுபாஸிக்கின்றனரோ அவர்கள் இனிவரப்போகின்ற கல்பத்தில் வஸிஷ்டர் முதலிய மஹருஷிகளின் அதிகாரத்தைப் பெறுவார்கள். மேலும் நக்ஷத்திரரூபமாய் ஆகாசத்தில் பிரகாசித்துக்கொண்டு லோகத்திற்கு க்ஷேமத்தைக்கொடுப்பார்கள். (எ - று)



(அ - கை) பிறகு ஒருப்பிராம்மணவாக்யம் படிக்கப்படுகிறது.

अथ सवितुः श्यावाश्वस्याऽवर्तिकामस्य ।

(ப - ரை) **अथ**=அங்கிரஸ் என்றமஹருஷியினால் சமாதியில் கண்டுபிடிக்கப்பட்ட மந்திரங்களைப் படித்தபிறகு **सवितुः**=மந்திர சம்பிரதாயத்தை ஏற்படுத்தியவரும் **अवर्तिकामस्य**=வைராக்யத்தில் விருப்பமுள்ளவருமான **श्यावाश्वस्य**=ச்யாவாச்வர் என்றமஹருஷியினுடைய மந்திரங்கள் (அவரால் சமாதியில் கண்டுபிடிக்கப்பட்ட மந்திரங்கள் **पठ्यन्ते**=படிக்கப்படுகின்றன.)

अमी य ऋक्षा निहितास उच्चा । नक्तं ददृश्रे कुहचिद्दिवेयुः ॥
अदब्धानि वरुणस्य व्रतानि । विचाकशच्चन्द्रमा नक्षत्रमेति ॥

(ப - ரை) **अमी** = நம்மால் பிரத்யக்ஷமாய்ப் பார்க்கப்படுகின்ற **ये, ऋक्षाः**=எந்த நக்ஷத்திரங்களுண்டோ (**ते**=அவைகள்) **उच्चा**=மேல்பாகத்தில் **निहितासः**=பரமேச்வரனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. **ते**=அவைகள் **नक्तम्**=ராத்திரியில் **ददृश्रे**=நன்றாய்க் காணப்படுகின்றன. **दिवा**=பகலில் **कुहचित्** = எங்கேயோ **ईयुः**=செல்லுகின்றன. **वरुणस्य**=நக்ஷத்திரங்களின் ஒளிகளை மறைக்கின்ற சூரியனின் கிரணங்களுடைய **व्रतानि**=வியாபாரங்கள் **अदब्धानि**=மற்றவைகளா லடக்கக்கூடியவைகளாக இல்லை. **चन्द्रमाः**=

சந்திரன் **विचाकशत्**=நன்றாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிற **नक्ष-त्रम्**=நக்ஷத்திரத்தை **एति**=அடைகிறான்.

(தா - ம்) சூர்யாந்தர்யாமியான பரமேசுவரனால் நம்மால் நேரில் பார்க்கப்படுகின்ற சிறிய நக்ஷத்திரங்கள் ஆகாசத்தில் வெகுதூரமுயரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவை ராத்திரியில் பிரகாசிக்கின்றன. பகலிலோ மிக்க ஒளியுள்ள சூரியனின் கிரணங்களால் அவைகளின் ஒளிகள் மறைக்கப்படுவதால் புலப்படுவதில்லை. சந்திரனோவெனின் சூரியன்போல் நக்ஷத்திரங்களின் ஒளிகளை அடக்கிவிடாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களுடன் சஞ்சரிக்கிறான். இஃதெல்லாம் சூர்யாந்தர்யாமியான பரமேசுவரனின் மஹிமை. (எ - று)

तत्सवितुर्वरेण्यम् । भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

(ப - ரை) **यः**=எந்தச் சூரியன் **नः**=நம்முடைய **धियः**=புத்திவிருத்திகளை **प्रचोदयात्** = தூண்டுகிறானோ **देवस्य**=பிரகாசித்துக்கொண்டிருக்கிற (**तस्य**) **सवितुः**=அந்தச் சூரியனுடைய **वरेण्यम्**=யாவராலும் விரும்பக்கூடிய (மேன்மைதங்கிய) **तत्** = பிரசித்தமான **भर्गः**=ஒளியை **धीमहि**=தியானஞ் செய்கின்றோம்.

तत्सवितुर्वृणीमहे । वयं देवस्य भोजनम् ॥
श्रेष्ठꣳसर्वधातमम् । तुरं भगस्य धीमहि ॥

(ப - ரை) **देवस्य**=பிரகாசித்துக் கொண்டிருப்பவரும் **भग-स्य**=மங்கள ஸ்வரூபியுமான **सवितुः**=சூரியனுடைய **भोजनम्**=சுகானுபவத்திற்குச் சாதனமானதும் **श्रेष्ठम्**=பிரகாசமுள்ள வஸ்துக்களின் பிரகாசங்களுட் சிறந்ததும் **सर्वधातमम्**=எல்லாப் பிராணிகளையும் காப்பாற்றுகின்றதும் **तुरम्**=வேகமுள்ளதும் **तत्**=பிரசித்தியுள்ளதுவுமான அந்தத்தேஜஸ்ஸை **वयम्**=நாம் **वृणीमहे**=பிரார்த்திக்கின்றோம்.



अपागूहत सविता तृभीन् । सर्वान्दिवो अन्धसः ॥
नक्तं तान्यभवन्दृशे । अस्थ्यस्थ्ना संभविष्यामः ॥

(ப - ரை) **सविता**=சூரியன் **अन्धसः**=நக்ஷத்திரத்தின் பிரகாசத்தைப் பொட்டையாக்குகின்ற (அடக்குகின்ற) **सर्वान्**=சமஸ்தமான **त्रिभीन्**=கிரணங்களை **दिवः**=ஆகாசத்தினின்றும் **अपागूहत**=இரவில் எடுத்து மறைத்து வைக்கிறார். (பகலில் ஆகாசமெங்கும் பரப்பப்பட்டிருந்த தனதுகிரணங்களைச் சூரியன் ராத்திரியில் தொட்டி எடுத்து மறைத்துவைக்கிறார்.) (**तत्**=ஆகையால்) **तानि**=அந்த நக்ஷத்திரங்களின் ஒளிகள் **नक्तम्**=ராத்திரியில் **दृशे**=பார்க்கத்தகுந்தவைகளாக **अभवन्**=ஆகின்றன. பகலில் நக்ஷத்திரங்களின் பிரகாசமில்லாமைக்குத் திருஷ்டாந்தம்:—(**वयम्**=நாம் **यथा**=எவ்விதம்) **अस्थि**=எலும்பை **अस्थ्ना**=ரக்தத்தினால் **संभविष्यामः**=மறைக்கிறோமோ இவ்விதமே சூரியனும் நக்ஷத்திரங்களின் தேஜஸ்ஸை மறைக்கிறான்.

(தா - ம்) நமது சரீரத்திலுள்ள எலும்பானது வெண்ணிறமுள்ளதாக இருந்தபோதிலும் அது ரக்தத்தினால் மறைக்கப்பட்டிருப்பதால் அதன் வெண்ணிரம் எவ்விதம் காணப்படுவதில்லையோ அவ்விதமே சூரியனின் தேஜஸ்ஸினால் நக்ஷத்திரங்களின் ஒளிகள் அடக்கப்படுவதால் நக்ஷத்திரங்கள் பகலில் காணப்படுவதில்லை. இரவிலோவெனில் சூரிய கிரணமில்லாமையால் அவைகள் நன்றாய்ப் பார்கப்படுகின்றன.

(அ - கை) சூர்யாந்தர்யாமியான பரமாத்மாவே உலகிலுள்ள எல்லாப்பொருள்களாகவுமிருக்கின்றார் என்று இனி வர்ணிக்கப்படுகின்றது. பரமாத்மாவை அறிந்த ஒருவர் தனது அனுபவத்தை வெளியிடுகிறார்.

नाम नामैव नाम मे । नपुꣳसकं पुमाꣳस्त्र्यस्मि ॥
स्थावरोऽस्म्यथ जंगमः । यजे यक्षि यष्टाहे च ॥

(ப - ரை) **नाम**=தேவன், மனுஷ்யன், பசு என்றப் பெயர்கள் **नामैव नाम**=வெரும் பெயர்மாத்திரமே யல்லவா? **नपुंसकम्**=நபும்ஸக வஸ்துவாயும் **पुमान्**=புருஷனாகவும் **स्त्री**=ஸ்திரீயாகவும் (**अहमेव**=நானே) **अस्मि**=இருக்கிறேன். **स्थावरः**=மரம் கல் முதலிய ஸ்தாவர வஸ்துக்களாகவும் **जङ्गमः**=ஜங்கம வஸ்துக்களாகவும் **अस्मि**=இருக்கிறேன். **यजे**=யாகஞ் செய்கின்றேன் **यक्षि**=யாகஞ் செய்தேன். **यक्ष्यहेच**=யாகஞ் செய்யப்போகிறேன்.

(தா - ம்) தேவன், மனுஷ்யன், பசு என்றது முதலிய பெயர்கள் வெரும்பெயரே யல்லாது அவைகளால் சொல்லப்படுகின்றவஸ்துவில் உண்மையில் வேற்றுமைகிடையாது. இவ்விதமே சாந்தோக்யோபனிடதத்தில் **वाचारंभणं विकारो नामधेयम्** என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்கள், பசு, பக்ஷி, மனிதர்கள் இவர்களின் சரீரத்தில் வேற்றுமையானது பெயரைத்தவிர்த்து உண்மையில் இல்லாவிடில் உண்மையிலிருக்கக்கூடிய ஸ்வரூபம் யாது? என்றால் எல்லா வஸ்துக்களிலும் தொடர்ந்திருக்கும் பிரும்மமே. பிரும்மத்தை அறிந்தவன் அந்தப் பிரும்மவஸ்துவாகவே ஆகின்றான். ஆதலால் லோகத்திலுள்ள புருஷனாகவும், ஸ்திரீயாகவும், நபும்ஸகனாகவும், ஸ்தாவரமாகவும், ஜங்கமமாகவும், எல்லாமாகவும் பிரும்மத்தை அறிந்தவன் ஆகின்றான். மேலும் தற்காலமுள்ள யஜமானர்வடிவமாய் யாகம் முதலிய சத்கர்மங்களைச் செய்கின்றவனாகவும், முன்னிருந்த யஜமானர்வடிவமாய் ஷை கர்மங்களைச்செய்தவனாகவும் இனி வரப்போகின்ற யஜமானர்வடிவமாய் ஷை கர்மங்களை நடத்தப்போகின்றவனாகவும் பிரும்மத்தை யறிந்தவனாகின்றான்.

मया भूतान्ययक्षत । पशवो मम भूतानि ।
अनूबन्ध्योऽस्म्यहं विभुः ।

(ப - ரை) **मया**=என்னால் **भूतानि**=எல்லாப் பிராணிகளும் **अयक्षत**=யாகம் முதலிய சத்கர்மங்களை நடத்தின. (நான் தான் அந்தந்த யஜமானர்களின் சரீரத்தில் ஜீவன் வடிவமாகப் பிரவேசித்து அந்தந்தச் சத்கர்மங்களை நடத்தினேன்.) **मम**=என்னால் படைக்கப்பட்டதுபற்றி என்னைச் சேர்ந்தவைகளான **भूतानि**=பிருதிவீ முதலிய ஐந்துபூதங்கள் **पशवः**=இரண்டு கால், நான்கு கால் உள்ளப் பிராணிகளாக (**संपन्नाः**=ஏற்பட்டன.) **अहम्**=நான் **विभुः**=எங்கும் வியாபரித் திருந்தபோதிலும் **अनूबंध्यः**=அந்தந்தச் சரீரங்களில் பிரவேசித்து அவைகளில் அபிமனம்வைப்பதால் சம்பந்தமுள்ளவன் போல **अस्मि**=இருக்கின்றேன். (இஃதெல்லாம் பிரும்மத்தை சாக்ஷாத்கரித்தவனின் அனுபவம்.)



(அ - கை) பிரும்மத்தை அறிந்த ஒருவர் மற்ற மஹானால் வெளியிடப்பட்ட சித்தாந்தத்தை உபதேசிக்கிறார்:—

स्त्रियस्सतीः । ता उ मे पुꣳस आहुः । पश्यदक्षण्वान्नविचेतदन्धः ।
कविर्यः पुत्रस्स इमा चिकेत । यस्ता विजानात्सवितुः पितासत् ॥

(ப - ரை) (**याः**) **स्त्रियः**=எந்த ஸ்திரீகள் **सतीः**=சத்வஸ்துவான பிரும்மத்தை குருவின் கடாக்ஷத்தினால் அறிந்து சத்வடிவமாகவே ஆகின்றார்களோ **ता उ**=அவர்களும் **मे**=எனது மதப்படி **पुꣳसः**=புருஷர்கள் (**इति**=என்றும்) **अक्षण्वान्**=கண்ணுள்ளவனாக இருந்து **पश्यत्**=கருப்பு, சிவப்பு முதலியவற்றைப் பார்த்தபோதிலும் (**यः**=எவன்) **नविचेतत्**=சத்வஸ்துவைப் பகுத்தறியவில்லையோ (**सः**=அவன்) **अन्धः**=பொட்டையே (**इति**=என்றும்) **यः**=எந்த **पुत्रः**=பிள்ளை **कविः**=வேதம், சாஸ்திரம் இவைகளைக் கற்றறிந்து **इमाः**=பிரத்யக்ஷமாய் அறியப்படுகின்ற வஸ்துக்களை **चिकेत**=உண்மையிலுள்ளப் பிரும்மவஸ்துவாக அறிகிறானோ. **ताः**=அவைகளை **विजानात्**=பிரும்மமாயறிந்த **सः** = அந்தப்புத்திரன் **सवितुः**=தன்னைப் பெற்றத் தகப்பனுக்கும் **पिता**=தகப்பனாக **सत्**=ஆகின்றான் (**इति**=என்றும் **ब्रह्मविदः**=பிரும்மத்தை அறிந்தவர்கள்) **आहुः**=உபதேசித்தனர்.

(தா - ம்) எவன் பிரும்மத்தை யறிகிறானோ அவன் சரீரத்தில் பெண் பாலருக்குரிய ஸ்தனம், கேசம் முதலிய விசேஷாவயவங்களுடன் பொருந்தி இருந்தாலும் அவனை பிரும்மத்தை யறிந்தவர்கள் ஸ்திரீயாகக் கருதாமல் புருஷனாகவே கருதுகின்ற

னர். இவ்விதமே எவன் புருஷ ஜங்மமெடுத்து அந்த ஜங்மத்திற்குரிய தாடி, மீசை முதலிய அடையாளங்களுடன் பொருந்தியிருந்தும் பிரும்மவிசாரஞ் செய்து அதன் சொரூபத்தை உள்ளபடி அறியவில்லையோ அவன் பிரும்மத்தை யறிந்தவர்களால் "ஸ்திரீ" என்றே கருதப்படுவான். இவ்விதமே இரண்டு கண்களுள்ளவனாயிருந்தும் எவன் பிரும்மத்தை யறியவில்லையோ அவனே "பொட்டை" என்றும், எவன் இரண்டு கண்களற்றவனாயினும் பிரும்மத்தை யறிவானோ அவனே கண்ணுள்ளவன் என்றும், பிள்ளைப் பிரும்மத்தையறிந்து தகப்பன் அறியாவிடில் சிறிய வயதுள்ளவனாயினும் பிள்ளையே தகப்பன் என்றும், தகப்பனே பிள்ளை என்றும் பிரும்மத்தை யறிந்தவர்கள் சொல்லுகின்றனர். பிரும்மத்தை யறிவதின் மஹிமை இத்தகையது. (எ - று)

अन्धो मणिमविन्दत् । तमनङ्गुलिरावयत् ॥
सोऽग्रीवः प्रत्यमुञ्चत् । सोऽजिह्वो असश्चत ॥

(ப - ரை) **अन्धः**=உண்மையில் கண்ணற்றவனே **मणिम्**=ரத்தனம் முதலிய போக்ய வஸ்துவை **अविन्दत्**=அறிகிறான். **तम्**=அந்தமணி முதலிய போக்ய வஸ்துவை **अनङ्गुलिः**=விரலில்லாதவனே **आवयत्**=எடுக்கிறான். **अग्रीवः**=கழுத்தில்லாதவனே **प्रत्यमुञ्चत्**=தரித்துக் கொள்ளுகிறான். **सः**=அந்த ஜீவன் **अजिह्वः**=நாக்கற்றவனாகவே **असश्चत**=ஸ்தோத்திரஞ் செய்கின்றான்.

(தா - ம்) மனிதன் கண்ணால் ரத்னத்தைப்பார்த்து, கையால் எடுத்து, கழுத்திலணிந்துகொண்டு நாவினால் சிலாகிக்கிறான் என்று லோகானுபவம். ஆயினும் க்ஞானஸ்வரூபியான ஆத்மாவானவன் உண்மையில் கண், விரல், கழுத்து முதலிய அங்கங்களற்றவனாகவே இருந்துகொண்டு பார்ப்பது, எடுப்பது, தரித்துக் கொள்வது முதலியகார்யங்களைத் தனதுவிசித்திரமான சக்தியின் பிரபாவத்தால் செய்கின்றான். இவ்விதமே **अपाणिपादो जवनो गृहीता पश्यत्यचक्षुस्स शृणोत्यकर्णः** என்றதால் உபநிடதத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இஃது எவ்விதம் பொருந்துமெனின்:-



ஆத்மவஸ்து உபாதியின் வேற்றுமையை அனுசரித்து ஜீவன் என்றும், ஈசுவரன் என்றும் இரண்டு விதமாயாகின்றது. சரீரம், இந்திரியம் முதலியவைகள் "கார்யம்" எனப்படும். இதை உபாதியா யடைந்த ஆத்மவஸ்துவே ஜீவனும். இத்தகையது என்று அளவிடமுடியாத ஓர்விதமான சக்தி "காரணம்" எனப்படும். அதை உபாதியாக அடைந்த ஆத்மவஸ்துவே ஈசுவரனும். இவ்விதமே சித்தாந்த ரஹஸ்யமறிந்தவர்கள் **कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः** என்றதால் சொல்லி இருக்கின்றனர். அவைகளுட் காரியத்தை உபாதியா யடைந்த ஜீவன், தான் உண்மையில் உபாதியினும் வேறுபட்டவனாதலால் கை, கால் முதலிய சாதனங்களற்றவனாய்க் கொண்டே அக்ஞானத்தினால் தேஹம் இந்திரியம் இவைகளாகவே தான் இருப்பதாய்ப் பிரமித்துக்கொண்டு அந்தந்தக் காரியங்களைச் செய்கிறவன்போல் காணப்படுகிறான். ஈசுவரனோவெனின் பிரமமற்றவனாயினும் இத்தகையது என்று அளவிடமுடியாத சக்தியுள்ளவனாயிருப்பதால் கண், காது முதலிய சாதனங்களில்லாமலே தனது சங்கல்ப மாத்திரத்தால் எல்லாக் காரியத்தையுஞ் செய்கின்றான். இவ்விரண்டு பேர்களையு முத்தேசித்தே இம்மந்திரம் பிரவிருத்தித்திருக்கின்றது. சூர்யாந்தர்யாமியான பரமாத்மா இத்தகைய மஹிமையுள்ளவராக இருக்கின்றார். (எ - று)

ऊर्ध्वमूलमवाक्छाखम् । वृक्षं यो वेद संप्रति ॥
न स जातु जनः श्रद्दध्यात् । मृत्युर्मा मारयादितिः ॥

(ப - ரை) **ऊर्ध्वमूलम्**=எல்லாவற்றிலும் சிறந்த பிரும்மத்தை வேராகவுடையதும் **अवाक्शाखम्**=கீழ்பட்டவைகளான பிரும்மா முதல் ஸ்தம்பம் (ஓர்வித சிறிய பூச்சி) வரையுள்ள சகலவிதமான பிராணிகளின் சரீரமாகிற கிளையையுடையதும் **वृक्षम्**=மரம்போல் வெட்டுவதற்குத் தகுதியுள்ளதுவுமான இந்தச் சம்சாரமாகிற மரத்தை **यः**=எவன் **वेद**=குரு, சாஸ்திரம் இவைவாயிலாக அறிவானோ **स जनः**=அந்தமனிதன் **संप्रति**=அப்பொழுதே **मृत्युः**=மிருத்யு

मा=என்னை मारयात्=கொல்லுவான் इति:=என்று जातु=ஒருபொழுதும் नश्रद्दध्यात्=நம்பமாட்டான்.

(தா - ம்) உலகிலுள்ள மரங்களெல்லாம் கீழ் பாகத்தில் வேரும், மேல்பாகத்தில் கிளைகளுமுள்ளவைகளா யிருக்கின்றன. சம்சாரமாகிற மரமோவெனில் மேல்பாகத்தில் வேரும், கீழ்பாகத்தில் கிளையுமுள்ளதா யிருக்கின்றது. அதாவது:—எல்லாவற்றிலும் மேலான பிரும்மம் வேராகவும் அதனிலும் கீழ்ப்பட்ட மற்றப்பிரபஞ்சங்கள் கிளையாகவும் சம்சாரமாகிற மரத்திற்கிருக்கின்றன. இத்தகைய பிரும்மவஸ்துவாகவே நான் இருக்கின்றேன் என்று அறிந்தவன் மிருத்யுவினிடமிருந்து ஒரு பொழுதும் பயத்தையடையமாட்டான். லோகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் அக்ஞானத்தினால் மிருத்யு ஒரு சமயத்தில் நிச்சயமாய்க் கொன்றுவிடுவான் என்று நம்பிக்கொண்டே இருக்கின்றன. பிரும்மத்தையறிந்தவனோவெனின் பிரும்மஸ்வரூபமாக இருக்கின்ற தனக்கு ஜங்மம், மரணம் இவைகளினில்லாமையை நிச்சயித்துக்கொண்டு அந்த க்ஷணத்திலேயே தனக்கு மரணமுண்டென்று முன்கொண்டிருந்த அபிப்ராயத்தை மாற்றிக்கொள்ளுகின்றான். ஏனென்றால்:—ஆத்மவஸ்துவோ மரணமற்றது. தேஹமோ ஆத்மாவினும் வேறுபட்டது. ஜங்மமரணங்கள் தேஹத்திற்கே யல்லாது ஆத்மாவிற்குக் கிடையாது. (எ - று)

(அ - கை) சரீரத்தை ஆத்மாவாகக் கருதக்கூடாது என்பதற்காக அதன் தர்மங்கள் உபதேசிக்கப்படுகின்றன:—

हसितꣳरुदितं गीतम् । वीणापणवलासितम् ॥
मृतं जीवं च यत्किंचित् । अङ्गानि स्नेव विद्धि तत् ॥

(ப - ரை) हसितम्=சிரிப்பும் रुदितम्=அழுகையும் वीणापणवलासितम्=வீணை, மிருதங்கம் இவைகளை வாசிப்பதால் சந்தோஷமும் मृतम्=மரணமும் जीवम्=பிழைத்திருத்தலும் (अन्यत्=மற்றுமுள்ள) यत्किंचित्=எத்த விகாரங்களுண்டோ तत्=அவையாவையும் अङ्गानि=கை கால் முதலிய அவயவங்கள் स्नाः=நரம்பு इव=



இவைகளைப் போல் विद्धि அறிவாயாக.

(தா - ம்) கை, கால்முதலிய அவயவங்களும், நரம்புகளும் எவ்விதம் சரீரத்தின் விகாரங்களோ (சரீரத்தைச் சேர்ந்தவைகளோ) அவ்விதமே சிரித்தல், அழுதல், மரித்தல், ஜீவித்தல் முதலியவைகளும் சரீரதர்மமே. அவை ஆத்மாவைச் சேர்ந்தவையல்லவென்று அறியவேண்டும். (எ - று)

(அ - கை) முன்சொல்லிய சிரிப்பு, அழுகை முதலியதர்மமுள்ளசரீரத்தில் சிதாத்மாவுக்கு தாதாத்மியாத்யாசம் (நான் என்ற அபிமானம்) வர்ணிக்கப்படுகின்றது—

अतृष्यꣳस्तृष्यद्ध्यायत् । अस्माज्जाता मे मिथू चरन् ॥
पुत्रो निर्ऋत्या वैदेहः । अचेता यश्च चेतनः ॥

(ப - ரை) निर्ऋत्याः=அசுரர்களைப் போல் கெடுதலைச் செய்கின்ற மாயையின் पुत्रः=பிள்ளையும் वैदेहः=சரீரமற்ற சிதாத்மாவின் சம்பந்த முள்ளதும் अचेताः=உண்மையில் சைதன்ய மற்றதாயினும் चेतनः=சைதன்ய முள்ளது போலிருக்கின்றதுவுமான यः=யாதொரு அஹங்காரமுண்டோ அது (நான் என்ற விருத்தியுடன் கலந்த சைதன்யம்) अतृष्यत्=உண்மையில் எதிலும் ஆசை என்ற தாக மற்றதாயினும் तृष्यत्=தாகத்தை யடைகின்றது போலாகின்றது. अस्मात्=இந்த ஜடமான சரீரத்தினின்றும் जाताः=உண்டான சிரிப்பு முதலியவைகளை मे=என்னுடையது என்று ध्यायत्=தியானஞ் செய்கின்றது. मिथू=சித், ஜடமிவைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருப்பதால் चरन्=என்னைச் சேர்ந்தது என்று வீணில் எண்ணி அதற்கனுகுணமாய் நடந்து கொண்டிருக்கிறது.

(தா - ம்) நான் என்ற அந்தக்கரணத்தின் விருத்தியுடன் கூடிய சேதனன் 'ஜீவன்' எனப்படுவன். அந்த விருத்தியானது உண்மையில் சைதன்ய மற்றதாயினும் சேதனனுடன் நெருங்கின சம்பந்தத்தால் சைதன்ய முள்ளது போலாகின்றது. இந்த ஜீவன் சரீரத்தையே நான் என்று நினைப்பதால் அதன் தர்மங்களும்

அவனிடமிருப்பனவை போல் பாஸிக்கின்றன. அதாவது:— நான் தாகமுள்ளவனாக இருக்கிறேன்; நான் தியானஞ் செய்கின்றேன்; நான் சிரிக்கின்றேன்; நான் அழுகின்றேன் என்பன முதலிய அனுபவங்களுண்டாகின்றன. உண்மையிலோ மேல் கூறிய தர்மங்கள் சிதாத்மாவினிடங்கிடையா. (எ - று)

स तं मणिमविन्दत्। सोऽनङ्गुळिरावयत् ॥

सोग्रीवः प्रत्यमुञ्चत्। सोऽजिह्वो असश्चत ॥

(ப - ரை) (यः=அசேதனமான சரீரம் முதலியவற்றில் நான் என்ற அபிமானத்தை யடைந்த எந்தச் சம்சாரியான ஜீவனுண்டோ) सः=அவன் तंमणिम्=अन्धोमणिमविन्दत् என்ற மந்திரத்தில் சொல்லிய மணி முதலிய போக்யவஸ்துவை अविन्दत्=கண்ணால் பார்த்தான். सः=அவனே अनङ्गुलिः=உண்மையில் விரலில்லாதவனாயினும் (சரீரத்தில் நான் என்ற அபிமானத்தினால் சரீரத்தைச் சேர்ந்த விரல்களாலேயே) आवयत्=எடுத்துக்கொண்டான். सः= அந்த ஜீவன் अग्रीवः=உண்மையில் கழுத்தில்லாத வனாயினும் (சரீரத்தைச் சேர்ந்த கழுத்தில்) प्रत्यमुञ्चत्=தரித்துக் கொண்டான். सः=அவனே अजिह्वः=நாக்கில்லாத வனாயினும் (சரீரத்தைச் சேர்ந்த நாக்கினால்) असश्चत=ஸ்தோத்திரஞ் செய்தான்.

(அ - கை) பிறகு பிராம்மண வாக்யம் படிக்கப்படுகிறது:—

नैतमृर्षि विदित्वा नगरं प्रविशेत्। यदि प्रविशेत् ॥

मिथौ चरित्वा प्रविशेत्। तत्संभवस्य व्रतम् ॥

(ப - ரை) एतम्=முன் சொல்லிய ऋषिम्=விவேகக் ஞானத்தைப் போதிக்கின்ற மந்திரங்களை विदित्वा=அறிந்து (இவற்றின் பொருளை குருக்களின் முகத்தினின்று மறிந்து அதை அனுபவத்தில் கொண்டு வந்தவன்) नगरम्=பட்டணத்திற் கொப்பான சரீரத்தை नप्रविशेत्=அடையமாட்டான். (சரீரத்தில் நான் என்ற அபிமானத்தை வைக்கமாட்டான்) यदिप्रविशेत्=பிரபலமான முன் ஜன்மங்களின் வாசனையின் பலத்தால் சரீரத்தில் நான் என்ற அபிமானத்தைச் செய்தபோதிலும் मिथौचरित्वा=சாஸ்திரங்களின் கருத்தை நன்கு ஆராய்ந்து சரீரம் முதலியவைகள் பொய் என்று நிச்சயஞ் செய்து கொண்டு प्रविशेत्=பிராரப்த கர்மத்தை யனுபவித்து ஒழிப்பதற்காக லோகவியவஹாரத்தை நடத்துவான். तत्= இது संभवस्य=சம்பவர் என்ற மஹருஷியின் व्रतम्=ஆசரணை (சித்தாந்தம்)



(அ - கை) அக்னி பிரார்திக்கப்படுகின்றார்—

आतमग्ने रथं तिष्ठ। एकाश्वमेकयोजनम् ॥

एकचक्रमेकधुरम्। वातध्राजिगतिं विभो ॥

(ப - ரை) विभो=இத்தகையது என்று மனத்தாலுமளவிட முடியாத சக்திவாய்ந்த अग्ने=ஓ அக்கினியே! एकाश्वम्=உமது குதிரைகளுள் மிக்க பலம் வாய்ந்த சிறந்த ஒரு குதிரை கட்டியதும் एकयोजनम्=ஒரு நிமேஷத்திற்குள் ஒருயோஜனை தூரம் செல்லக்கூடியதும் एकचक्रम्=ஒரே சக்கிரமுள்ளதும் एकधुरम्=ஒரே நொகத்தடியுள்ளதும் वातध्राजिगतिम्=காற்றுப்போல் வேகமாகச் செல்லுகின்றதுவுமான तंरथम्=பிரசித்திபெற்றத் தேரை आतिष्ठ=என்னை அனுக்கிரஹிப்பதற்காக வரவேண்டி ஏறவேண்டும்.

न रिष्यति न व्यथते। नास्याक्षो यातु सज्जति ॥

यच्छ्वेतान्रोहिताꣳश्चाग्नेः। रथे युक्त्वाऽधितिष्ठति ॥

(ப - ரை) यत्=யாது காரணம்பற்றி अग्नेः=அக்னி श्वेतान्= வெண்ணிற முள்ளவைகளும் रोहितांश्च=சிவப்பு நிறமுள்ளவைகளுமான குதிரைகளை रथे=தேரில் युक्त्वा=கட்டி अधितिष्ठति=அந்தத்தேரிலேறிச்சஞ்சரிக்கின்றாரோ (तस्मात्=ஆகையால் अयम्=இந்த ஒரு சக்கிரமுள்ளத் தேர்) नरिष्यति=எவ்வளவுதூரம் பிரயானஞ் செய்தாலும் நாசத்தை யடைவதில்லை. नव्यथते=அங்குமிங்கும் அசைவதில்லை. अस्य=இந்த வண்டியினுடைய अक्षः=அச்சுக்கட்டை यातु=செல்லும்பொழுது नसज्जति=எதிலும் தடங்குதலையடைவதில்லை. இத்தகைய வண்டியில் ஏறிக்கொண்டு என்னை அனுக்கிரஹிப்பதற்காக அக்னிபகவான் வரவேண்டும்.

(அ - கை) வாயு பிரார்த்திக்கப் படுகின்றார்:—

एकया च दशभिश्च स्वभूते । द्वाभ्यामिष्टये विंशत्या च ॥
तिसृभिश्च वहसे त्रिंशता च । नियुद्भिर्वाय विह ता विमुञ्च ॥

(ப - ரை) **वायो !** ஓ வாயுவே **इष्टये=** என்னாலனுஷ்டிக்கப் படுகின்ற இஷ்டி முதலிய சத்கர்மத்தைக் குறித்து வருவதற்காக **स्वभूते**=உமக்குச் சொந்தமான ரதத்தில் **एकयाच**=ஒருசமயத்தில் ஒரு பெண் குதிரையையும் **दशभिश्च**=ஒரு சமயத்தில் பத்துப்பெண் குதிரைகளையும் **द्वाभ्याम्**=ஒரு சமயத்தில் இரண்டு பெண் குதிரைகளையும் **विंशत्याच**=ஒரு சமயத்தில் இருபது பெண் குதிரைகளையும் **तिसृभिर्नियुद्भिश्च**=ஒரு சமயத்தில் மூன்று பெண் குதிரைகளையும் **त्रिंशताच**=ஒரு சமயத்தில் முப்பது பெண் குதிரைகளையும் (**योजयित्वा**=கட்டி) **वहसे**=ஓட்டுகிறீர். **इह**=இங்கே (**आगत्य**=வந்து **ता:**=அந்தப் பெண் குதிரைகளை **विमुञ्च**=அவிழ்த்து விடுவீராக. ஓ வாயுவே உமதிஷ்டப்படிக் குதிரைகளைக் கட்டிச் சஞ்சரிப்பதற்குரிய ரதத்திலேறிக்கொண்டு என்னாலனுஷ்டிக்கப்படுகின்ற யாகத்தில் ஹவிர்பாகத்தைப் பெற்றுக்கொள்ள வருவீராக. (வாயுவைச்சேர்ந்தப் பெண் குதிரைகள் "நியுத்" எனப்படும்)

ततक्षुर्धीमहि नाम मे चिकेत गीतं प्रत्यमुञ्चद्व्यथते सप्त च ॥

அடிமுதல் 56 பஞ்சாசத்து களாகின்றன.

பதினொன்றாவது அனுவாகம் முற்றிற்று.

---

பன்னிரண்டாவது அனுவாகம்.

(அ - கை) இந்திரன் பிரார்த்திக்கப்படுன்றார்:—

आतनुष्व प्रतनुष्व । उद्धमाऽऽधम संधम ॥
आदित्ये चन्द्रवर्णानाम् । गर्भमाधेहि यः पुमान् ॥



(ப - ரை) (**हेइन्द्र**=ஓ இந்திரனே !) **आतनुष्व**=நான்கு பக்கங்களிலும் உமது சுவரூபத்தைப் புலப்படும்படிப் பரப்புவீராக (உமது சுவரூபத்தைக் காண்பித்து அனைவர்க்குமருள்புரிவீராக.) **प्रतनुष्व**=விசேஷமாய் யாகத்தில் சான்னித்தியஞ் செய்வீராக. **उद्धम**=நான் வந்து விட்டேன் என்று இரைந்து சத்தம் போடுவீராக. **आधम**=நேரில் வந்து சொல்லுவீராக. **संधम**=ஹிதமாய்ச் சொல்லுவீராக. (நான் உன்னை ரக்ஷிக்க வந்துவிட்டேன், பயப்படவேண்டாம் என்று நீரே சொல்லவேண்டுமென்பது **उद्धमाधमसंधम** என்ற பதங்களால் சொல்லப்படுகின்றது. இம் மூன்று பதங்களுக்கும் பெரும்பாலும் பொருள் ஒன்றேயாயினும் அதிகமான ஆதரவினால் மூன்று தடவை போடப்பட்டிருக்கின்றன.) **यः**=எந்த நீர் **पुमान्**=புருஷத்தன்மையுள்ளவரோ (**सः**=அந்த நீர்) **चन्द्रवर्णानाम्**=பிரகாசிக்கின்ற நிறமுள்ள ஜலங்களுடைய **गर्भम्**=கர்ப்பத்தை **आदित्ये**=சூரியனிடம் **आधेहि**=உண்டுபண்ணுவீராக. (சூரிய கிரணங்கள் வாயிலாக பூமியிலுள்ள ஜலத்தைச் சேகரிப்பீராக.)

इतस्सिक्तꣳसूर्यगतम् । चन्द्रमसे रसं कृधि ॥
वारादं जनयाग्रेऽग्निम् । य एको रुद्र उच्यते ॥

(ப - ரை) **इतः**=இந்தக் கர்மத்தில் **सिक्तम्**=ஹோமஞ் செய்யப்பட்ட நெய் முதலிய திரவ்வியத்தை **सूर्यगतम्**=சூரியனை யடைந்ததாகச் செய்து **चन्द्रमसे**=சந்திரனின் விருத்தி நிமித்தம் **रसम्**=ஜலத்தை **कृधि**=உண்டுபண்ணுவீராக. (அக்னியில் போடப்பட்ட ஆஜ்யம் முதலிய திரவ்வியம் சூரியனையடைந்துப் பிறகு ஜலமாக மாறி பூமியில் ஓஷதிகளையும், ஆகாசத்தில் சந்திரனையும் விருத்தி செய்கின்றதென்பது சாஸ்திரமுறை. அம்முறை இங்கு உபதேசிக்கப்படுகின்றது.) **यः**=எந்த அக்னி யானவர் **एकः**, **रुद्रः**=தனக்கு நிகராய் இரண்டாவது தேவனில்லாத ஸ்ரீருத்திரனாக **उच्यते**=சொல்லப்படுகின்றாரோ (**तम्**=அந்த) **वारादम्**=விரும்பிய பலன்களைக் கொடுக்கின்ற **अग्निम्**=அக்கினி என்றத்தேவனை **अग्रे**=எனக்கு முன்னிலையில் **जनय**=ஆவிர்ப்பாவத்தை யடையும்படிச் செய்வீராக.

असंख्याता स्सहस्राणि । स्मर्यते न च दृश्यते ॥ एवमेतं निबोधत ॥

(ப - ரை) (**अस्य**=இந்த ஸ்ரீருத்திரனுடைய) **सहस्राणि**=ஆயிரக்கணக்கான கணங்கள் **असंख्याताः**=எண்ணிக்கையிலடங்காதவைகளாயிருக்கின்றன. (**सः**=அந்த ஸ்ரீருத்திரன்) **स्मर्यते**=சுருதிஸ்மிருதிகள் வாயிலாக அறிந்து தியானிக்கப்படுகிறார். **नचदृश्यते**=மாம்ச திருஷ்டிக்குப் புலப்படக்கூடியவரல்ல. **एतम्**=இந்த அக்கினியை **एवम्**=மேற்சொல்லிய மஹிமை வாய்ந்த ஸ்ரீருத்திரனாக **निबोधत**=அறிவீர்களாக.

(தா - ம்) ஓ யஜமானர்களே! எந்த ஸ்ரீருத்திரனின் ஆயிரக் கணக்கான கணங்கள் எண்ணிக் கையிலடங்காம லிருக்கின்றனவோ, எவர் சுருதிஸ்மிருதிகள் வாயிலாக வறிந்து தியானிப்பவர்களின் தியானதிருஷ்டிக்கு மாத்திரம் புலப்படக்கூடிய வரோ, மாம்ச திருஷ்டிக்குப் புலப்படக்கூடாதவரோ அத்தகைய மஹிமைவாய்ந்த ஸ்ரீருத்திரனாகவே அக்னியைப் பாவிக்கவேண்டும். ஓ இந்திரனே! அந்த அக்கினியை நீர் அழைத்து வருவீராக. (எ - று)

आमन्द्रैरिन्द्र हरिभिः । याहि मयूररोमभिः ॥
मात्वाकेचिन्न्येमुरिन्न पाशिनः । दधन्वेव ता इहि ॥

(ப - ரை) **इन्द्र**=ஓ இந்திரனே! **मन्द्रैः**=உத்ஸாஹத்தை விருத்தி செய்யக்கூடியவைகளும் **मयूररोमभिः**=மயில்தோகையின் நிறத்திற் கொப்பான உரோமமுள்ள வைகளுமான **हरिभिः**=குதிரைகளால் **आयाहि**=எமது பூஜையைக் கிரஹித்துக் கொண்டு அருள் புரிய வருவீராக. (**आयान्तम्**=வருகின்ற) **त्वा**=உம்மை **केचित्**=ஒருவரும் **मा न्येमुः**=தடுக்காமலிருக்க வேண்டும். **पाशिनः**, **इत्**=குதிரையின் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கும் சாரதிகளும் **न न्येमुः**=தாமதஞ் செய்வதென்ற விக்னத்தைச் செய்யாம லிருக்கவேண்டும். **दधन्वेव**=சமஸ்தமான அபீஷ்டங்களையும் கொடுப்பவராகவே **ताः**=நாமிருக்கின்ற இடத்தை குறித்து **इहि**=வரவேண்டும்.

मा मन्द्रै रिन्द्र हरिभिः । यामि मयूररोमभिः ॥
मा मा केचिन्न्येमुरिन्न पाशिनः । निधन्वेव तां २ इमि ॥



(ப - ரை) **मा**=நான் **मन्द्रैः**=உத்ஸாஹத்தை விருத்திசெய்யக் கூடியவைகளும் **मयूररोमभिः**=மயில் தோகையின் நிறத்திற் கொப்பான உரோம முள்ளவைகளுமான **हरिभिः**=குதிரைகளால் **इन्द्र**=ஓ இந்திரனே! **यामि**=உன்னுடன்வருகிறேன். **मा**=என்னை **केचित्**=ஒருவரும் **मा न्येमुः**=தடுக்கவேண்டாம். **पाशिनः**,**इत्**=சாரதிகளும் **न न्येमुः**=என்னைத் தடுக்கவேண்டாம். **निधन्वेव**=புதையல் கிடைத்தவன் போல் ஸந்தோஷமடைந்து கொண்டு **तान्**=அந்தமேலான லோகங்களை **इमि**=அடைகிறேன்.

अणुभिश्च महद्भिश्च । निघृष्वैरसमायुतैः ॥
कालैर्हरित्वमापन्नैः । इन्द्रायाहि सहस्रयुक् ॥

(ப - ரை) **सहस्रयुक्**=ஆயிரம் கண்களையுடைய **इन्द्र**=ஓ இந்திரனே! **अणुभिश्च**=க்ஷணம் முஹூர்த்தம் என்ற சிறிய காலத்தை யபிமானிப்பதுபற்றி சூக்ஷ்மரூபமுள்ளவர்களாயும் **महद्भिश्च**=சம்வத்ஸரம் முதலிய பெரியகாலத்தை யபிமானிப்பது பற்றி பெரிய ரூபமுள்ளவர்களாயும் **निघृष्वैः**=மிகவும் காந்தி யுள்ளவர்களாயும் **असमायुतैः**=ஒருவரோ டொருவர் சேராதவர்களாயும் (நிகழும் காலத்தில் வருங்காலமோ, வருங்காலத்தில் சென்றகாலமோ சேருவதில்லை யாதலாலிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **हरित्वम्**, **आपन्नैः**=உமது "ஹரி" என்றக் குதிரையின் சுவரூபத்தைப் பெற்றவர்களாயு மிருக்கிற **कालैः**=காலாபிமானி தேவதைகளோடுகூட **आयाहि**=வருவீராக.

अग्निर्विभ्राष्टिवसनः । वायुः श्वेतसिकद्रुकः ॥
संवत्सरो विषूवर्णैः । नित्यास्तेऽनुचरास्तव ॥

(ப - ரை) (**हे इन्द्र**=ஓ இந்திரனே) **विभ्राष्टिवसनः**=நன்றாய்ப் பிரகாசிக்கின்ற வஸ்திரமுள்ள **अग्निः**=அக்னியும் **श्वेतसिकद्रुकः**=வெண்ணிறமான மண்ணைக்கரப்பவரான—அதாவது பலவிதமான புழுதியைக் கிளப்புவரான **वायुः**=காற்றும் **विषूवर्णैः**=பலவித நிறமுள்ள **संवत्सरः**=சம்வத்ஸராபிமானி தேவதையும் **ते**=உமக்கு **नित्या अनुचराः**=ஒருபொழுதும் விட்டுப்பிரியாமல் உம்முடன் சஞ்சரிக்கின்றவர்கள்.

सुब्रह्मण्योऽसुब्रह्मण्योऽसुब्रह्मण्योम् । इन्द्रागच्छ हरिव आगच्छ मेधातिथेः । मेष वृषणश्वस्य मेने । गौरावस्कन्दिन्नहल्यायै जार । कौशिकब्राह्मण गौतमब्रुवाण ।

(ப - ரை) ओं **सुब्रह्मण्य** = நல்லமார்க்கத்தை யுபதேசிக்கின்ற வேதத்திற்கு ஹிதமாக இருப்பவரே! அதாவது—வேதத்தைக் காப்பாற்றுகிறவரே, அல்லது அதனால் ஸ்துதிக்கப் படுகின்றவரே. (மற்று மிரண்டுதரம் படிக்கப்பட்டுள்ள ஷை பதத்திற்கும் இதேபொருள். அதிகமான ஆதரவைக் காண்பிப்பதற்காக மூன்று தடவை சம்போதனஞ் செய்யப்பட்டிருக்கிறது.) **इन्द्र**= அளவற்ற ஐசுவரியமுடையவரே **आगच्छ**=வரவேண்டும். **हरिवः**= "ஹரி" என்ற இரண்டு குதிரைகளை யுடையவரே! (சுக்கிலபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் இவைகளே இந்திரனுக்குக் குதிரைகளாயா கின்றன. அவைகள் ஹரி என்ற பதத்தால் சொல்லப்படுகின்றன.) **मेधातिथेः मेष**=மேதாதிதி என்பவரை ஏமாற்றுவதற்காக ஆட்டின் உருவமெடுத்தவரே! (கண்வரின் புத்திரரான மேதாதிதி என்பவரை இந்திரன் ஆட்டின்ரூப மெடுத்துக்கொண்டுவந்து ஏமாற்றி அழைத்துச்சென்று விட்டான் என்ற கதையை இங்குக் ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும்.) **वृषणश्वस्य मेने** = விருஷணச்வர் என்ற மஹருஷியின் கன்னிகையான "மேனகை" என்பவளை இச்சித்தவரே! **गौरावस्कन्दिन्**=வெண்ணிறமுள்ள மான்வேஷம் பூண்டு யாகபூமியில் நுழைந்து சோமத்தைக் குடித்து யாகத்தைக் கெடுத்தவரே! **अहल्यायैजार**=கௌதமரின் தர்மபத்தினியான அஹல்யையினிடம் ஜாரபுருஷனாகச் சென்றவரே! **कौशिकब्राह्मण**=கௌசிகர் என்ற மஹருஷியினிடம் பிராம்மண வேஷம் பூண்டுவந்தவரே! **गौतमब्रुवाण**=கௌதமர் என்ற மஹருஷியைப் பிரசன்னராய்ச் செய்வதற்காக ஸ்தோத்திரம் செய்தவரே! **आगच्छ**=வரவேண்டும்.

अरुणाश्वा इहागताः । वसवः पृथिविक्षितः ॥
अष्टौ दिग्वाससोऽग्नयः । अग्निश्च जातवेदाश्चेत्येते ॥

(ப - ரை) **अरुणाश्वाः**=சிவப்பு நிறமுள்ள குதிரைகளையுடையவர்களும் **वसवः**=பிராணிகள் பிழைத்திருப்பதற்குச் சாதனமானவர்களும் **पृथिविक्षितः**=பூமியில் வஸிக்கின்றவர்களும் **दिग्वाससः**= திக்குகளையே வஸ்திரமாக உடையவர்களுமான **अष्टौ अग्नयः**=எட்டுவிதமான அக்கினிகள் **इह**=என்னா லனுஷ்டிக்கப்படுகின்ற கர்மத்தில் **समागताः**=வந்துவிட்டார்கள். **एते**=இந்த 8 விதமான அக்னிகள் **अग्निश्च जातवेदाश्चेति**=**अग्निश्च जातवेदाश्च** என்று தொடங்கி சொல்லப்பட்டிருக்கின்றனர். (101-வதுபக்கம் பார்க்கவும்) ஓ இந்திரனே! ஆதலால் தாங்களும் சீக்கிரம் வரவேண்டும்.

(அ - கை) ஸ்ரீ ருத்திரனின் கணங்கள் பாபிகளை சிக்ஷிப்பதற்காக அங்குமிங்கும் சஞ்சரிக்கின்றனர். அவர்கள் நல்ல கர்மங்களைச் செய்கின்றவர்களுக்குத் தீங்கை விளைவிக்கமாட்டார்களாயினும் அவர்களின் கோரரூபத்தைக் காணுவதில் பயத்தினால் அவர்கள் என் சமீபம் விட்டுவிலக வேண்டு மென்று பிரார்த்திக்கப்படுகின்றனர்.

ताम्राश्वास्ताम्ररथाः । ताम्रवर्णास्तथाऽसिताः ॥
दण्डहस्ताः खादग्दतः । इतो रुद्राः परां गताः ॥
उक्तꣳस्थानं प्रमाणं च पुर इत ॥

(ப - ரை) **ताम्राश्वाः**=சிவப்பு நிறமுள்ள குதிரைகளை யுடையவர்களும் **ताम्ररथाः**=சிவப்பு நிறமுள்ள தேரை யுடையவர்களும் **ताम्रवर्णाः**=சிவப்பு நிறமுள்ளவர்களும் **तथा**=அவ்விதமே **असिताः**= சிலர் கருப்பு நிறமுள்ளவர்களும் **दण्डहस्ताः**=கதை என்ற ஆயுதத்தைக் கையில் தரித்தவர்களும் **खादग्दतः**=பல்லைக் கடிக்கின்றவர்களும் **इतः**=இந்தப் பூலோகத்தினின்றும் **परां (दिवम्)**=மேல்பாகத்திலுள்ள த்யுலோகத்தை **गताः**=வாசஸ்தானமா யடைந்தவர்களுமான **रुद्राः**=ஓ ருத்திரகணங்களே! (**युष्माकम्**=உங்களுடைய) **स्थानम्**=லோகமும், **प्रमाणंच**=அந்த லோகத்தின் அளவும் **उक्तम्**=சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (**ताः**) **पुरः**=அந்தப் பட்டணத்தை **इत**=அடைவீர்களாக.

(அ - கை) பிராம்மணவாக்யம் படிக்கப்படுகின்றது.

उक्तो वेषो वासांऽसि च। कालावयवानामितः प्रतीच्या ॥

वासात्या इत्यश्विनोः ॥

(ப - ரை) **कालावयवानाम्**=காலத்தின் அவயவமான வசந்தம் முதலிய ருதுக்களுடைய **वेषः**=சுவரூபமும் **वासांऽसिच**=வஸ்திரங்களும் **इतः प्रतीच्या**=இதற்கு முன்னுள்ள **साकंजानांऽसप्तथमाहुरेकजम्**=என்றது முதலிய அனுவாகத்தில் **उक्तः**=சொல்லப்பட்டது. (**ऋतुर्ऋतुना नुद्यमानः। विननादाभिधावः। षष्टिश्चत्रिंऽशकावल्गाः** என்றது முதலியவைகளால் சொல்லப்பட்ட ருதுக்களின் ஸ்வரூபம் **वेष** என்ற சப்தத்தால் சொல்லப்படுகின்றது. **साराग्वस्त्रैर्जरदष्टः** என்றது முதலியவைகளால் வஸ்திரமுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.) **वासात्या इति=वासात्यौ चित्रौ** என்றது முதலிய மந்திரங்களால் **अश्विनोः**=அச்வினீ தேவர்களுடைய (**वेषः**=சுவரூபம் **उक्तः**=சொல்லப்பட்டது.) இது ஒரு பிராம்மணவாக்கியம். இதனால் சொல்லப்படுகின்ற சமாசாரத்தால் சமீபத்தில் படிக்கப்பட்டுள்ள மந்திரத்திற்கு யாதுமுபகாரமில்லையாயினும் **उक्तस्थानम्** என்... முன் சொன்னதிலிருந்து பிரசங்க நியாயத்தை யனுசரித்து இந்தப் பிராம்மணவாக்ய மிங்கு படிக்கப்பட்டதா யறியவேண்டும்.

(அ - கை) கீழ்ப் படிக்கப்படும் மந்திரத்திற்கு அவதாரிகையாய் ஒரு பிராம்மணவாக்கியம் படிக்கப்படுகிறது:—

कोऽन्तरिक्षे शब्दं करोतीति। वासिष्ठो रौहिणो मीमांऽसां चक्रे।

तस्यैषाभवति।

(ப - ரை) **वासिष्ठः**=வசிஷ்ட கோத்திரத்தில் பிறந்தவரும் **रौहिणः**=ரோஹிணச்வர் என்ற மஹருஷியின் பிள்ளையுமானவர் (ஆகாசத்தில் ஓர்விதமான சத்தத்தைக்கேட்டு பிறகு) **अन्तरिक्षे**=ஆகாசத்தில் **कः**=யார் **शब्दम्**=சத்தத்தை **करोति**=செய்கிறான் **इति**=என்று **मीमांसां चक्रे**=ஆலோசனை செய்தார். **तस्य**=அவருடைய (விசாரத்தின் நிச்சயத்தை) **एषा**=இந்த ருக்கானது (**प्रतिपादिका**=நிரூபணஞ் செய்கின்றதாக) **भवति**=ஆகின்றது.



(அ - கை) அந்த ருக்கின் ஆரம்பத்தைக் காண்பிக்கிறார்—

वाश्रेव विद्युदिति

இம்மந்திரத்தின் மீதமுள்ள பாகங்கள் பின்வருமாறு—

वाश्रेव विद्युन्मिमाति वत्सं न माता सिषक्ति। उदेषां वृष्टिरसर्जि।
पर्वतश्चिन्महि वृद्धो बिभाय दिवश्चित्सानुरेजत स्वनेवः।

மூன்றாவது காண்டம் முதல் பிரச்னம் பதினொன்றாவது அனுவாகத்தில் இம்மந்திரம் படிக்கப்பட்டிருக்கிறது. இங்கு படிக்கப்பட்டுள்ள பாகத்திற்குமாத்திர மர்த்தம் எழுதுகிறோம். **वाश्रेव**=கத்தும் சுவபாவமுள்ள பசுபோல் **विद्युत्**=மின்னல் **मिमाति**=சப்தத்தை யுண்டுபண்ணுகிறது. மேகங்களிலிருக்கின்ற மின்னலினால் இடிச்சத்தமுண்டாகின்றது என்று தீர்மானித்தார்.

(அ - கை) சூரியன் ஸ்துதிக்கப்படுகிறான்:—

ब्रह्मण उदरणमसि। ब्रह्मण उदीरणमसि ॥
ब्रह्मण आस्तरणमसि। ब्रह्मण उपस्तरणमसि ॥

(ப - ரை) (**हे आदित्य**=ஓ சூரியனே! **त्वम्**=நீர்) **ब्रह्मणः**=பரப்பிரும்மத்தினுடைய **उदरणम्**=லோபமற்ற மூர்த்தியாக (உபாஸகர்களுக்கு அபீஷ்டங்களை வர்ஷிக்கின்ற மூர்த்தியாக) **असि**=இருக்கின்றீர். **ब्रह्मणः**=பிரும்மத்தினுடைய **उदीरणम्**=மற்ற மூர்த்திகளுட்சிறந்த மூர்த்தியாக **असि**=இருக்கின்றீர். **ब्रह्मणः**=பிரும்மத்தினுடைய **आस्तरणम्**=ஆசனமாக இருக்கின்றீர். **ब्रह्मणः**=பிரும்மத்தின் **उपस्तरणम्**=குடையாக **असि**=இருக்கின்றீர்.

**दृश्यते च मेने परांगताश्चक्रे षट्च ॥**

அடிமுதல் 60 பஞ்சாசத்துகளாகின்றன.

பன்னிரண்டாவது அனுவாகம் முற்றிற்று.

## பதின்மூன்றாவது அனுவாகம்

---

अष्टयोनीमष्टपुत्राम् । अष्टपत्नीमिमां महीम् ॥
अहं वेद न मे मृत्युः । नचामृत्युरघाहरत् ॥

(ப - ரை) **अष्टयोनीम्**=பிரகிருதி, மஹத், அஹங்காரம், பஞ்ச தந்மாத்திரை என்ற 8 விதமான காரணத்தையுடையவளும் (சாங்கிய சித்தாந்தத்தை யனுசரித்து இவ்விஷயஞ் சொல்லப்பட்டுள்ளது.) **अष्टपुत्राम्=मित्रश्चवरुणश्च** என்று சொல்லப்போகின்ற 8 புத்திரர்களையுடையவளும் **अष्टपत्नीम्**=இந்திரன், அக்னி முதலிய 8 திக்பதிகளை பாலகனாகவுடையவளுமான **इमां महीम्**=இந்தப்பூதேவியை **अहम्** = மந்திரத்தைக் கண்டுபிடித்த நான் **वेद**=அறிவேன். ஆகையால் **मे**=எனக்கு **मृत्युः**=சம்ஸாரம் **न**=கிடையாது. (முக்தனாகவே ஆகப்போகிறேன்) **अमृत्युः**=அபமிருத்யு **अघा**=பாபத்தை துக்கத்தை **नचाहरत्**=கொடுக்கமாட்டான்.

(தா - ம்) மந்திரத்தைச் சமாதியில் கண்டுபிடித்த மஹாருஷியொருவர் சொல்லுகிறார்—8 விதமான காரணம், 8 விதமான பிள்ளை 8விதமான பாலகர் இவைகளையுடையபூதேவியை யான் அறிவேன். அதனால் எனக்கு இனிச் சம்சாரபந்தம் விலகிவிட்டது. அபமிருத்யுவால் பாதையுமுண்டாகாது. இம்மந்திரத்தை எவர்கள் ஜபிக்கிறார்களோ அவர்களு மபமிருத்யுவை யடையமாட்டார்கள். (எ - று)

१ अष्टयोन्यष्टपुत्रम् । अष्टपदिदमन्तरिक्षम् ॥
अहं वेद न मे मृत्युः । नचाऽमृत्युरघा हरत् ॥

२ अष्टयोनीमष्टपुत्राम् । अष्टपत्नीममूं दिवम् ॥
अहं वेद नमे मृत्युः । नचामृत्युरघा हरत् ॥

முதல்மந்திரம், இரண்டாவது மந்திரம் இவைகளின் முதல் பகுதிக்கு மாத்திரம் பதம் பிரித்துக்காண்பிக்கிறோம். மற்றவைகளுக்கு முன்போலவே பதம்பிரித்துக் கொள்ளவேண்டும்:—
१. **अष्टयोनि, अष्टपुत्रम्, अष्टपत्, इदम्, अन्तरिक्षम्** । २. **अष्टयोनीम्, अष्टपुत्राम्, अष्टपत्नीम्, अमूम्, दिवम्** । இம்மந்திரங்களுக்கு முன் மந்திரம்போலவே அர்த்தங் கொள்ளவேண்டும். விசேஷமாயுள்ள பதத்திற்கு மாத்திரம் அர்த்தம் எழுதப்படுகிறது—**इदम्**=இந்த **अन्तरिक्षम्**=அந்தரிக்ஷலோகம் **अष्टपत्** = 8 விதமான பாலகர்களையுடையது **अमूंदिवम्**= அந்த த்யுலோகத்தை.



(அ - கை) இரண்டு மந்திரங்களின் ப்ரதீகம் (தொடக்கம்) மாத்திரம் காண்பிக்கப் படுகின்றது—

सुत्रामाणं महीमूषु ।

१ सुत्रामाणं पृथिवीं द्यामनेहसꣳसुशर्माणमदितिꣳसुप्रणीतिम् ।
दैवीं नावꣳस्वरित्रा मनागसमस्रवन्तीमारुहेमा स्वस्तये ॥

२ महीमूषुमातरꣳसुव्रतानामृतस्य पत्नीमवसे हुवेव ।
तुविक्षत्रामजरन्तीमुरूचीꣳसुशर्माणमदितिꣳसुप्रणीतिम् ॥

இம்மந்திரங்கள் தைத்திரீய சம்ஹிதையின் முதல் காண்டம் 5 வது பிரச்னம் 11 வது அனுவாகத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் அர்த்தத்தை அங்கு கண்டுகொள்க.

(அ - கை) அதிதி என்ற தேவதை ஸ்துதிக்கப்படுகின்றாள்—

अदितिर्द्यौरदितिरन्तरिक्षम् । अदितिर्माता स पिता स पुत्रः ।
विश्वेदेवा अदितिः पञ्चजनाः । अदितिर्जातमदितिर्जनित्वम् ॥

(ப - ரை) **अदितिः**=அதிதி என்ற தேவதை **द्यौः**=த்யுலோகமாகவும் **अदितिः**=அதிதி **अन्तरिक्षम्**=அந்தரிக்ஷலோகமாகவும் **अदितिः**=அதிதி **माता**=பிருதிவியாகவும், அல்லது தாயாகவும் **सः**=அந்த அதிதியே **पिता**=தகப்பனாகவும் **सः**=அந்த அதிதியே **पुत्रः**=பிள்ளையாகவும் **अदितिः** = அதிதி **विश्वेदेवाः**=எல்லாத் தேவர்களாகவும், **पञ्चजनाः** = பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன்

ஷிஷாதன் என்ற ஜாதி, இவைகளாகவும் **अदितिः**=அதிதி **जातम्**=உண்டான வஸ்துவாகவும் **अदितिः**=அதிதி **जनित्वम्**=உண்டாகின்ற வஸ்துவாகவும் (**भवति**=இருக்கின்றுள் உலகிலுள்ள எல்லாப்பொருளாகவு மதிதி இருக்கின்றுள் என்று கருத்து.)

अष्टौ पुत्रासो अदितेः । ये जातास्तन्वः परि ॥
देवां ३ उपप्रैत्सप्तभिः । परा मार्ताण्डमास्यत् ॥

(ப - ரை) **ये**=எவர்கள் **अदितेः**=அதிதியினுடைய **तन्वःपरि**=சரீரத்தினின்றும் **जाताः**=உண்டானவர்களோ **ते**=அந்த **पुत्रासः**=பிள்ளைகள் **अष्टौ**=8 பேர்கள். (**अदितिः**=அதிதி) **सप्तभिः पुत्रैः**=ஏழு பிள்ளைகளுடன் **देवान्, उपप्रैत्**=தேவர்களின் சமீபம்போய்ச் சேர்ந்தாள் (தேவலோகஞ்சென்றுள்) **मार्ताण्डम्**=மார்த்தாண்டன் என்ற 8வது பிள்ளையை **परास्यत्**=விட்டுவிட்டாள்.

(அ - கை) ஏழுபிள்ளைகளை மட்டும் எடுத்துக்கொண்டதற்கும், 8வது பிள்ளையை விட்டதற்கும் காரணஞ் சொல்லப்படுகின்றது—

सप्तभिः पुत्रैरदितिः । उपप्रैत्पूर्व्यं युगम् ।
प्रजायै मृत्यवे तत् । परा मार्ताण्डमाभरदिति ॥

(ப - ரை) **अदितिः**=அதிதிதேவி **सप्तभिः, पुत्रैः**=ஏழு பிள்ளைகளுக்காக **पूर्व्यं युगम्**=அவர்கள் உண்டாவதற்கு முன் வேண்டிய புருஷனின் சேர்க்கையை **उपप्रैत्**=சந்தோஷத்துட னடைந்தாள் **यत्**=யாதுகாரணம்பற்றி **तत्**=அந்த 8 வது மார்த்தாண்டன் என்ற பிள்ளை **प्रजायै**=பிரஜைகளுடைய **मृत्यवे**=மிருத்யுவின் பொருட்டு ஆகின்றுனே (**तस्मात्**=ஆகையினுல்) **मार्ताण्डम्** = மார்த்தாண்டன் என்ற பிள்ளையை **पराभरत्**=தள்ளிவிட்டாள். சூரியன் மார்த்தாண்டன் எனப்படுவன். அவனுடைய உதயாஸ்த மயங்களால் பிராணிகளின் ஆயுள் குறைவுபடுகின்றது. ஆதலால் அவன் மிருத்யுவுக்குச் சமானமாகின்றுன், பிரஜாபி விருத்திக்குச் சாதனமாவதில்லை. மற்ற ஏழு பிள்ளைகள் மாத்திரம் பிரஜாபிவிருத்திக்குச் சாதனமாகின்றனர். ஆதலால் 7 பிள்ளைகளை மட்டும் அதிதி எடுத்துக்கொண்டு தேவலோகஞ் சென்றுள். மந்திரத்தின் முடிவை காண்பிப்பதற்காக **इति** என்றபதம் போடப்பட்டிருக்கின்றது.



ताननुक्रमिष्यामः

**अष्टयोनीमष्टपुत्राम्** என்ற மந்திரத்தில் பூதேவிக்கு 8 பிள்ளைகளிருப்பதாய்ச் சொல்லப்பட்டது. அவர்களின் பெயர்கள் படிக்கப்படுகின்றன என்று சாயணபாஷ்யத்தில் வியாக்யானஞ் செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் **अष्टौ पुत्रासो अदितेः** என்ற விடத்தில் அதிதிதேவிக்கு 8 பிள்ளைகளிருப்பதாய் சொல்லப்பட்டிருப்பதால் அவர்களின் பெயர்கள் சொல்லப்படுகின்றன என்றும் வியாக்யானஞ் செய்ய இடமிருக்கிறது.

मित्रश्च वरुणश्च । धाता चार्यमा च ।
अꣳशश्च भगश्च । इन्द्रश्च विवस्वाꣳश्चेत्येते ॥

மித்திரன், வருணன், தாதா, அர்யமா, அம்சன், பகன், இந்திரன், விவஸ்வான், இவைகள் முறையே 8 குமாரர்களின் பெயர்கள்.

(அ - கை) பிறகு நான்கு மந்திரங்களின் தொடக்கத்தை மாத்திரம் காண்பிக்கிறுர்—

हिरण्यगर्भो हꣳसश्शुचिषत् । ब्रह्मजज्ञानं तदित्पदमिति ॥

இவைகளின் மீதமுள்ள பாகங்கள் பின்வருமாறு—

१ हिरण्यगर्भस्समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् ।
स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ॥
२ हꣳसश्शुचिषद्वसुरन्तरिक्षसद्धोता वेदिषदतिथिर्दुरोणसत् ।
नृषद्वरसदृतसद्व्योमसदब्जा गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥
३ ब्रह्मजज्ञानं प्रथमं पुरस्ताद्विसीमतः सुरुचो वेन आवः ।
स बुध्निया उपमा अस्य विष्ठास्सतश्च योनिमसतश्च विवः ॥

४ तदित्पदं न विचिकेत विद्वान्। यन्मृतः पुनरप्येति जीवान्।
त्रिवृद्यद्भुवनस्य रथवृत्। जीवोगर्भो न मृतः स जीवात्॥

இவைகளுள் முதல்மந்திரம் யஜுஸ் ஸம்ஹிதையின் ந[illegible] காவது காண்டம் 1-வது ப்ரச்னம் 8-வது அனுவாகத்திலும், இரண்டாவது மந்திரம் தைத்திரீயாரண்யகம் 10 வதுபிரச்னம் 12-வது அனுவாகத்திலும், மூன்றாவது, மந்திரம் தைத்திரீயாரண்யகம் 10-வது பிரச்னம் முதலனுவாகத்திலும் நான்காவது மந்திரம் தைத்திரீய பிராம்மணம் 3-வது அஷ்டகம் 7-வது பிரச்னம் 10-வது அனுவாகத்திலும் படிக்கப் பட்டுள்ளது. இவற்றின் அர்த்தத்தை அங்கு கண்டுகொள்க.

(அ - கை) பிறகு ஒருபிராம்மண வாக்யம் படிக்கப்படுகின்றது—

गर्भः प्राजापत्यः। अथ पुरुषः सप्त पुरुषः॥

(ப - ரை) **प्राजापत्यः**=பிரஜாபதியைச் சேர்ந்த **गर्भः**=கர்ப்பம் (**उक्तः**=சொல்லப்பட்டது) **हिरण्यगर्भः** என்ற மந்திரத்தில் பிரஜாபதியின்கர்ப்பம்சொல்லப்பட்டிருக்கிறது. **अथ**=மேல்அனுவாகத்தினால் **सप्त पुरुषः**=நக்ஷத்திரம், மாஸம், பக்ஷம், ருது வருஷம், பகல், இரவு இவைகளின் அபிமானிகளும், சேவகர்கள் போன்றவர்களுமான 7-புருஷர்களையுடைய **पुरुषः**=சூரியன் என்ற புருஷன் (**प्रतिपाद्यते** = சொல்லப்படுகின்றார்.) நக்ஷத்திரம் முதலியவைகளின் அபிமானி தேவர்களே சூர்யனது வேலைக்காரர்கள் போலாகின்றனர். அவர்களுடன் கூடிய சூரியன் மேல் அனுவாகத்தினால் பிரார்த்திக்கப்படுகின்றான்.

अमूं दिवꣳसप्तभिरेते चत्वारि च॥

அடிமுதல் 63 பஞ்சாசத்துகளாகின்றன.

பதின்மூன்றாவது அனுவாகம் முற்றிற்று.

---



பதினான்காவது அனுவாகம்.

(அ - கை) இவ்வனுவாகத்திலுள்ள மந்திரங்களைப் படித்துச் சூரியனை வணங்குகிறவனுக்கு விசேஷமாய் ஆயுஸ் விருத்தியடையும். முதலில் சூரியன் பிரார்த்திக்கப் படுகின்றார்—

योऽसौ तपन्नुदेति। स सर्वेषां भूतानां प्राणानादायोदेति।
मा मे प्रजाया मा पशूनाम्। मा मम प्राणानादायोद्गाः॥

(ப - ரை) **योऽसौ**=எந்தச்சூரியன் **तपन्** = தாபத்தை (வெப்பத்தை) க்கொடுத்துக் கொண்டு **उदेति**=காலையில் கிழக்கு திசையிலுதய மடைகின்றாரோ **सः**=அந்தச்சூரியன் **सर्वेषां भूतानाम्**=எல்லாப்பிராணிகளுடைய **प्राणान्**=பிராணங்களை **आदाय**=வாங்கிக்கொண்டு **उदेति**=உதயமடைகின்றார். (சூரியன் உதயமடைந்து விட்டால் முன்தினம் முடிவுபெற்று விடுகிறது. அதனால் ஜீவனுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஜீவனகாலம் குறைவு படுகிறபடியால் சூரியன் பிராணிகளின் பிராணங்களை வாங்கிக்கொண்டு உதயமடைவதாக இங்கு சொல்லப்படுகிறது. இவ்விதமே இனிவரும் மந்திரங்களிலும் கருத்து கொள்ளவேண்டும்) ஓ சூரியனே! ஆதலால் தங்களை இவ்விதம் பிரார்த்திக்கிறேன்—**मे**=என்னுடைய **प्रजायाः**=பிள்ளை, பேரன் முதலிய பிரஜைகளுடையவும் **पशूनाम्**=பசு, குதிரை முதலிய நாற்கால் பிராணிகளுடையவும் **मम**=என்னுடையவும் **प्राणान्**=பிராணங்களை **आदाय**=கிரஹித்துக்கொண்டு **मोद्गाः**=உதயமடைய வேண்டாம். (அதிகமான ஆதரவினால் **मा** என்ற வார்த்தை மூன்றுதடவை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஓ சூரியனே! உமது உதயாஸ்தமயங்களால் எனது ஆயுஸ் குறைவையடையவேண்டாம். அபமிருத்யு உண்டாகவேண்டாம் என்று பிரார்த்திப்பதில் கருத்துகொள்ளவும்.)

१ असौ योऽस्तमेति। स सर्वेषां भूतानां प्राणानादायाऽस्तमेति।
मा मे प्रजाया मा पशूनाम्। मा मम प्राणानादायाऽस्तङ्गाः॥

२ असौ य आपूर्यति । स सर्वेषां भूतानां प्राणैरापूर्यति ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरापूरिष्ठाः ॥

३ असौ योऽपक्षीयति । स सर्वेषां भूतानां प्राणैरपक्षीयति ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणै रपक्षेष्ठाः ॥

மேல்படிக்கப்பட்டுள்ள மந்திரங்களுக்கு பெரும்பாலும் முதல்மந்திரம் போலவே அர்த்தங்கண்டு கொள்ளவேண்டு மாதலால் விசேஷமான பதங்களுக்குமாத்திர முறை எழுதுகிறோம். 1 अस्तमेति=அஸ்தமனமடைகின்றானோ. मा, अस्तं गाः=அஸ்தமனத்தை யடையவேண்டாம். 2 आपूर्यति = உதயமடைய ஆரம்பித்தச் சூரியன் எவ்வளவு காலத்திற்குள் கிரணங்களால் நிறைவு பெறுகிறானோ, கிரணங்கள் விருத்தி யடைகின்றனவோ. मा, आपूरिष्ठाः= நிறைவுபெறவேண்டாம். 3 अपक्षीयति=மாலையில் கிரணங்களின் குறைவை யடைகிறானோ. मा, अपक्षेष्ठाः=குறைவை யடையவேண்டாம். ஒவ்வொருக்ஷணமும் ஆயுள் குறைவு பெறுவதற்கு நிமித்தமாகின்றது. ஆயினும் எனது ஆயுள் குறைவுபெற வேண்டாம் என்பது கருத்து.

(அ - கை) சூரியனுடன் சஞ்சரிக்கின்றவர்களும், அவரது சேவகர்களுமான நக்ஷத்திரம், மாதம், பக்ஷம், வருஷம், பகல் இரவு இவைகளின் அபிமானி தேவர்கள் முறையே பிரார்த்திக்கப்படுகின்றனர்—

१ अमूनि नक्षत्राणि । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पन्ति चोत्सर्पन्ति च ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरपप्रसृपत मोत्सृपत ॥

२ इमे मासाश्चार्धमासाश्च । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पन्ति चोत्सर्पन्ति च ।
मा मे प्रजाया मापशूनाम् । मा मम प्राणैरपप्रसृपत मोत्सृपत ॥

३ इम ऋतवः । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पन्ति चोत्सर्पन्ति च ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरपप्रसृपत मोत्सृपत ॥



४ अयꣳसंवत्सरः । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पति चोत्सर्पति च ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरपप्रसृप मोत्सृप ॥

५ इदमहः । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पति चोत्सर्पति च ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरपप्रसृप मोत्सृप ॥

६ इयꣳरात्रिः । सर्वेषां भूतानां प्राणैरपप्रसर्पति चोत्सर्पति च ।
मा मे प्रजाया मा पशूनाम् । मा मम प्राणैरपप्रसृप मेत्सृप ॥

(ப - ரை) (1) अमूनि नक्षत्राणि=ஆகாசத்தில் சஞ்சரிக்கின்றவைகளாய்க் காணப்படுகின்ற நக்ஷத்திரங்கள் सर्वेषां भूतानां प्राणैः= எல்லாவிதமான பிராணிகளின் பிராணங்களோடு अपप्रसर्पन्तिच= அஸ்தமன மடைகின்றன. उत्सर्पन्तिच=உதயமடைகின்றன. मे= என்னுடைய प्रजायाः=பிரஜைகளுடையவும், पशूनां=பசுக்களுடையவும் मम=என்னுடையவும் प्राणैः=பிராணங்களுடன் मा, अप प्रसृपत=அஸ்தமன மடையவேண்டாம். मोत्सृपत=உதயமடையவேண்டாம். ஓ நக்ஷத்திராபிமானி தேவதைகளே! உங்களுடைய உதயாஸ்தமயங்களால் ஆயுஸ் குறைவு படவேண்டாம். இனி வரும் மந்திரங்களுக்கு மிதேகருத்து. (2) இதனால் மாதம், பக்ஷம் இவைகளின் அபிமானி தேவதைகள் பிரார்த்திக்கப் படுகின்றனர்—इमे = இந்த मासाश्च = மாஸாபிமானி தேவதைகளும் अर्द्धमासाश्च = பக்ஷாபிமானி தேவதைகளும். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம் கொள்க. (3) ருதுவின் அபிமானி தேவதைகள் பிரார்த்திக்கப்படுகின்றனர்—इमे=இந்த ऋतवः=ருதுக்களின் அபிமானி தேவதைகள். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். (4) சம்வத்ஸரம் என்ற காலத்தின் அபிமானி தேவதை பிரார்த்திக்கப்படுகின்றது—अयम्=இந்த संवत्सरः=வருஷாபிமானி தேவதை. अपप्रसर्पतिच= அஸ்தமன மடைகின்றது. उत्सर्पतिच=உதய மடைகின்றது. मा, अपप्रसृप=அஸ்தமன மடையவேண்டாம் मोत्सृप= உதயமடையவேண்டாம். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். (5) பகலுக்கபிமானி தேவதை பிரார்த்திக்கப்படுகின்றது—इदम्= இந்த अहः=பகலுக்கபிமானி தேவதை. மற்றவைகளுக்கு முன்

போலர்த்தம். (6) ராத்திரியின் அபிமானி தேவதை பிரார்த்திக்கப்படுகின்றது. **इयम्**=இந்த **रात्रिः**=ராத்திரியின் அபிமானிதேவதை. மற்றவைகளுக்கு முன்போலர்த்தம்.

ओं भूर्भुवःस्वः ।

(ப - ரை) **ओं**=பிரணவத்தின் பொருளான பரமாத்மாவே **भूर्भुवस्वः**=பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்ற மூன்று லோக ஸ்வரூபமா யிருக்கின்றார். அந்தப் பரமாத்மா சூரியனிடம் விசேஷமாய்ச் சான்னித்யம் பெற்றிருப்பதால் அவரை ஆயுஸ்ஸின் விருத்தியைக் கருதியவர்கள் அவசிய முபாசிக்கவேண்டும்.

एतद्वो मिथुनं मा नो मिथुनꣳ रीढ्वम् ।

(ப - ரை) நக்ஷத்திரம், மாதம், பக்ஷம், ருது, வருஷம், பகல், இரவு இவைகளின் ஓ அபிமானிதேவர்களே! நீங்கள் பிரணவத்தின் பொருளான பிரும்மவடிவமாயுள்ள சூரியனுடன் சேர்ந்திருப்பதுண்டே **एतत्**=இந்த **वः**=உங்களுடைய **मिथुनम्**=சேர்கை (**उपकार्योपकारलक्षणः**=ஒருவருக்கொருவர் உபகாரத்தைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது. இதை தியானஞ் செய்கின்ற) **नः**=எங்களுடைய **मिथुनम्**=தாம்பத்யத்தை **मारीढ्वम्**=ஹிம்சிக்கவேண்டாம். நானோ எனது மனைவியோ அகால மிருத்யுவை யடைய வேண்டாம். வாழ்நாளில் மற்றெவ்வித கஷ்டமுமுண்டாக வேண்டாம் என்று கருத்து. இவ்விதமே இதுபோன்ற மேல் மந்திரங்களுக்குக் கருத்துகொள்ளவேண்டும்.

प्राणैरापूर्यति मोत्सृपत चोत्सर्पति च मोत्सृप द्वे च ॥
उदेत्यस्तमेत्यापूर्यत्यपक्षीयत्यमूनि नक्षत्राणीमे मासा
इम ऋतवोऽयꣳसंवत्सर इदमहरियꣳरात्रिर्दश ॥

அடிமுதல் 67பஞ்சாசத்துகளாகின்றன.

பதினான்காவது அனுவாகம் முற்றிற்று.

---



பதினைந்தாவது அனுவாகம்

अथादित्यस्याऽष्टपुरुषस्य ।

(ப - ரை) **अथ**=பிறகு **अष्टपुरुषस्य**=வசுமுதலிய 8 விதமான புருஷர்கள் வடிவமாயிருக்கின்ற **आदित्यस्य**=சூரியனுடைய—சூரியனை ஸ்துதிக்கின்ற (**मन्त्राः**=மந்திரங்கள் **पठ्यन्ते**=படிக்கப்படுகின்றன.)

१ वसूनामादित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। २ रुद्राणामादित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। ३ आदित्यानामादित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। ४ सताꣳसत्यानाम्। आदित्याꣳस्थाने स्वतेजसा भानि। ५ अभिधून्वतामभिघ्नताम्। वातवतां मरुताम्। आदित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। ६ ऋभूणामादित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। ७ विश्वेषां देवानाम्। आदित्यानाꣳस्थाने स्वतेजसा भानि। ८ संवत्सरस्य सवितुः। आदित्यस्य स्थाने स्वतेजसा भानि।

(ப - ரை) **वसन्तो वसुभिस्सह, शुक्लवासा रुद्रगणः** என்றது முதலியவைகளால் குறிக்கப்பட்ட யாதொரு வஸுருத்திரர்களுண்டோ அவர்கள் சூர்யனின் ஓர் விதமான மூர்த்திகளாகின்றனர். அவர்கள் இங்குள்ள மந்திரங்களால் முறையே குறிக்கப்படுகின்றனர். 1 **वसूनाम्**=அஷ்டவஸுக்கள் வடிவமாய் விளங்குகின்ற **आदित्यानाम्**=சூரியனின் மூர்த்திகளுடைய **स्थाने**=லோகத்தில் (**तिष्ठन्**=வஸித்துக்கொண்டு **अहम्**=நான் **तत्प्रसादलभ्येन**=அவர்களுடைய பிரசாதத்தினால் கிடைகின்ற) **स्वतेजसा**=எனக்குச் சொந்தமான காந்தியினால் **भानि**=காந்திபுள்ளவனாக விளங்கவேண்டும். ஓ ஆதித்யனே! அஷ்டவஸுக்கள் போலவே நானும் காந்தியுள்ளவனாய் அவர்களின் ஸ்தானத்தில் வஸிக்கும்படி தாங்கள் அருள்புரியவேண்டும். இனி வருகின்ற स्थाने स्वतेजसा भानि என்ற

தற்கு இவ்விதமே அர்த்தங் கொள்ளவேண்டும். ஆதலால் அப்பதங்களை விட்டு மற்றப்பதங்களுக்கு மட்டும் வியாக்யானஞ் செய்கின்றோம். 2 **रुद्राणाम्**=11 ருத்திரர்கள் வடிவமாய் விளங்குகி... **आदित्यानाम्**=சூரியனின் மூர்த்திகளுடைய. இனி வருகின்ற ... **दित्यानाम्** என்ற பதத்திற்கு இவ்விதமே அர்த்தங்கொள்ளவேண்டும். 3 **आदित्यानाम्**=துவாத சாதித்யாள் என்ற தேவர்கள் வடிவமாய் விளங்குகின்ற. 4 **सत्यानाम्**=உண்மை பேசுகின்றவர்களும் **सताम्**=லோகத்தாரால் வெகுமானிக்கப் பட்டவர்களுமான மஹருஷிகளின் வடிவமாய்விளங்குகின்ற. 5 **अभिधून्वताम्**=மேகத்தை அங்குமிங்கும் சஞ்சரிக்கும்படிச் செய்கின்றவர்களும் **अभिघ्नताम्**=வழியில் செல்லுகின்ற மனிதர்களை எதிரில்வந்து ஹிம்சிக்கின்றவர்களும் **वातवताम्**=காற்றிற்கு யஜமானர்களுமான **मरुताम्**=மருத்துக்களின் வடிவமாய் விளங்குகின்ற. 6 **ऋभूणाम्=ऋभूणां तन्निबोधत** என்று சொல்லப்பட்ட 'ருபு' என்ற தேவர்களின் வடிவமாய் விளங்குகின்ற. 7 **विश्वेषां देवानाम्**=விச்வே தேவர்களின் வடிவமாய் விளங்குகின்ற. 8 **सवितुः**=பிராணிகளை விருத்தி செய்கின்ற **संवत्सरस्य**=சம்வத்ஸரம் என்ற காலத்தின் அபிமானி தேவதையின் வடிவமாய் விளங்குகின்ற. **आदित्यस्य**=சூரியனுடைய **स्थाने**=லோகத்தில் (**तिष्ठन्**=வஸித்துக்கொண்டு **तत्प्रसादलभ्येन**=அவரது பிரசாதத்தினுல் கிடைக்கின்ற) **स्वतेजसा**=எனக்குச் சொந்தமான காந்தியினுல் **भानि**=பிரகாசமுள்ளவனுய் விளங்கவேண்டும்.

ओं भूर्भुवःस्वः । रश्मयो वो मिथुनं मानो मिथुनꣳरीढ्वम् ॥

(ப - ரை) **ओम्** = பிரணவத்தின் பொருளாயும் **भूर्भुवःस्वः**= பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், என்ற மூன்று லோக ஸ்வரூபியாயு (யஜமானராயு) மிருக்கின்ற சூரியனுடைய **रश्मयः**=ஓ கிரணங்களே! **वः**=உங்களுக்கு, (யஜமானனை சூரியனுடன்) **मिथुनम्**=ஸ்திரீ புருஷர்கள் போல் ஒருவருக்கொருவர் உபகரித்துக் கொள்ளும் தன்மை (**अस्ति**=இருக்கின்றது **तादृशाः**=அத்தகைய மஹிமை வாய்ந்த நீங்கள்) **नः**=எங்களுடைய **मिथुनम्**=தாம்பத்தியத்தை **मारीढ्वम्**=ஹிம்சிக்க வேண்டாம். இம் மந்திரத்தை இவ்வனுவாகத்தில் படிக்கப்பட்டுள்ள 8 மந்திரங்களிலும் கடைசியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



ऋभूणामादित्यानाꣳस्थाने स्वतेजसा भानि षट् च ॥

அடிமுதல் 68 பஞ்சாசத்துக ளாகின்றன.

பதினைந்தாவது அனுவாகம் முற்றிற்று.

---

## பதினறுவது அனுவாகம்

१ आरोगस्य स्थाने स्वतेजसा भानि । २ भ्राजस्य स्थाने स्वतेजसा भानि । ३ पटरस्य स्थाने स्वतेजसा भानि । ४ पतङ्गस्य स्थाने स्वतेजसा भानि । ५ स्वर्णरस्य स्थाने स्वतेजसा भानि । ६ ज्योतिषीमतस्य स्थाने स्वतेजसा भानि । ७ विभासस्य स्थाने स्वतेजसा भानि । ८ कश्यपस्य स्थाने स्वतेजसा भानि । ९ ओं भूर्भुवःस्वः । आपो वो मिथुनं मानो मिथुनꣳरीढ्वम् ।

(ப - ரை) **आरोगः, भ्राजः** முதலிய பதங்கள் **आरोगोभ्राजः** (69-வது பக்கம் பார்க்கவும்) என்றவிடத்தில் 8 விதமான சூரியர்களின் பெயர்களென்று நிரூபணஞ் செய்யப் பட்டிருக்கின்றன. அந்தப்பதங்களே இங்கு ஆருவது வேற்றுமை (விபக்தி) யுள்ளவைகளாய் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே **आरोगस्य**=ஆரோகன் என்ற சூரியனுடைய **स्थाने**=லோகத்தில் (**तिष्ठन्**=வஸித்துக்கொண்டு **अहम्**=நான் **तत्प्रसादलभ्येन**=அவனுடைய பிரசாதத்தால் கிடைக்கின்ற) **स्वतेजसा**=எனக்குச்சொந்தமான காந்தியால் **भानि**=பிரகாசமுள்ளவனுய் விளங்கவேண்டும். இவ்விதமே மற்ற எழு வாக்கியங்களுக்கு மர்த்த மறியவேண்டும். 9 **ओंभूर्भुवःस्वः**=பிரணவத்தின் பொருளாயும் மூன்று லோக ஸ்வரூபியாயு மிருக்கின்ற சூரியனுடன் **आपः**= ஓ ஜலாபிமானி தேவதைகளே ! **वः**= உங்களுக்கு **मिथुनम्**=ஸ்திரீ புருஷர்கள்போல் ஒருவருக் கொருவர்

உபகரித்துக் கொள்ளும் தன்மையானது (अस्ति=இருக்கின்றது तथाविधाः=அத்தகைய மஹிமை வாய்ந்த यूयम्=நீங்கள்) नः=எங்களுடைய मिथुनम्=தாம்பத்தியத்தை मारीढ्वम्=ஹிம்ஸிக்க வேண்டாம். இவ்விரண்டு வாக்கியங்களை இவ்வநுவாகத்தில் படிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்யத்தின் முடிவிலுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

आरोगस्य दश. அடிமுதல் 69 பஞ்சாசத்துகளாகின்றன.

பதினாறுவது அனுவாகம் முற்றிற்று

---

பதினேழாவது அனுவாகம்

---

अथ वायोरेकादशपुरुषस्यैकादशस्त्रीकस्य ॥

(ப - ரை) अथ=பிறகு एकादशपुरुषस्य=ப்ரப்ராஜமானன் முதலிய 11 ருத்திரர்களின் ஸ்வரூபமா யவதரித்தவரும் एकादशस्त्रीकस्य=அடி 11 ருத்திரர்களின் ஸ்திரீகளுடைய ஸ்வரூபமா யவதரித்தவருமான वायोः=வாயுவினுடைய (मन्त्राःपठ्यन्ते=மந்திரங்கள் படிக்கப்படுகின்றன.)

१ प्रभ्राजमानानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। २ व्यवदातानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ३ वासुकिवैद्युतानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ४ रजतानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ५ परुषाणाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ६ श्यामानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ७ कपिलाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ८ अतिलोहितानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ९ ऊर्ध्वानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। १० अवपतन्तानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। ११ वैद्युतानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भानि। १ प्रभ्राजमानीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। २ व्यवदातीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ३ वासुकिवैद्युतीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ४ रजतानाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ५ परुषाणाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ६ श्यामानाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ७ कपिलानाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ८ अतिलोहितीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ९ ऊर्ध्वानाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। १० अवपतन्तीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। ११ वैद्युतीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि। १२ ओं भूर्भुवःस्वः। रूपाणि वो मिथुनं मा नो मिथुनꣳरीढ्वम्।



1 ப்ரப்ராஜமானன், 2 வியவதாதன், 3 வாஸுகி வைத்யுதன், 4 ரஜதன், 5 பருஷன், 6 சியாமன், 7 கபிலன், 8 அதிலோஹிதன், 9 ஊர்த்வன், 10 அவபதந்தன், 11 வைத்யுதன் என்று முறையே பெயர்பூண்ட 11 ருத்திரர்களின் ஸ்வரூபமாயும்; 1 ப்ரப்ராஜமானீ, 2 வியவதாதீ, 3 வாஸுகி வைத்யுதீ, 4 ரஜதா, 5 பருஷா, 6 ச்யாமா, 7 கபிலா, 8 அதிலோஹிதீ, 9 ஊர்த்வா, 10 அவபதந்தீ, 11 வைத்யுதீ, என்று முறையே பெயர்பூண்ட மேல்குறிப்பிட்டருத்திரர்களின் பத்தினிகளின் ஸ்வரூபமாயும் வாயுபகவான் விளங்குகிறார். மேல்குறிப்பிட்ட ருத்திரர்களுக்கும், ருத்திரபத்தினிகளுக்கும் பல்லாயிரம் மூர்த்திகளுண்டு அவைகளைக் காண்பிக்கவே இங்குபஹுவசனம் (பன்மை) உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. சூரியனின் அம்சம் வாய்ந்த 11 ருத்திரர்கள் வேறு. வாயுவின் அம்சம் வாய்ந்த 11 ருத்திரர்கள்வேறு. ஆதலால் रुद्राणामादित्यानाम् என்றவிடத்தில் (56 பக்கம் பார்க்கவும்) "11 ருத்திரர்கள் வடிவமாயிருக்கின்ற சூரியமூர்த்திகள்" என்றுசொன்னதற்கும் இங்கு சொன்னதற்கும் விரோதமேற்படாது. இங்கு படிக்கப்பட்டுள்ள மந்திரங்களுக்கு பெரும்பாலும் அர்த்தம் ஒரேவிதமாக இருப்பதால் முதல் 11 மந்திரங்களுள் ஒருமந்திரத்திற்கும், இரண்டாவது 11 மந்திரங்களுள் ஒருமந்திரத்திற்கும் வியாக்கியானஞ் செய்கின்றோம். (1) प्रभ्राजमानानाम्= ப்ரப்ராஜமானன் என்று பெயர்பூண்டவர்களும், வாயுவின் அம்சம் வாய்ந்தவர்களுமான रुद्राणाम् = ருத்திரர்களு

டைய. மற்றப்பதங்களுக்கு முன்போலர்த்தம். இவ்விதமே மற்ற 10 மந்திரங்களுக்கு மர்த்தங்கொள்க. (1) **प्रभ्राजमानीनाम्**= ப்ரப்ராஜமானீ என்று பெயர்பூண்டவர்களும் வாயுவின் அம்சம் வாய்ந்தவர்களுமான **रुद्राणीनाम्**=ருத்திரபத்னிகளுடைய். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். 12 வது மந்திரத்தை இவ்வனுவாகத்தில் படிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மந்திரத்தின் முடிவிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதன் பொருள்:—**भूर्भुवःस्वः**=பூ:, புவ:, ஸுவ: என்று முறையே பெயருள்ள மூன்று லோகஸ்வரூபியாயிருக்கின்ற **ओम्**= பிரணவத்தின் பொருளான யாதொரு பரப்பிரும்ம வஸ்துவுண்டோ அதாகவே இருக்கின்ற **रूपाणि**= ஓ வாயுவின் அம்சம்வாய்ந்த ஸ்திரீபுருஷமூர்த்திகளே! **वः**=உங்கடைய **मिथुनम्**= மிதுனம் (புருஷன், பத்னீ இவ்விரண்டு பேர்களும் ஷிபதத்தின் பொருள்) **नः** = எங்களுடைய **मिथुनम्**= மிதுனத்தை **मारीढ्वम्**= ஹிம்ஸிக்கவேண்டாம்.

**ऊर्ध्वानाꣳरुद्राणाꣳस्थाने स्वतेजसा भान्यतिलोहितीनाꣳरुद्राणीनाꣳस्थाने स्वतेजसा भानि पञ्च च ।** அடிமுதல் 71 பஞ்சாசத்துகளாகின்றன.

பதினேழாவது அனுவாகம் முற்றிற்று.

---

## பதினெட்டாவது அனுவாகம்

अथाग्नेरष्टपुरुषस्य ।

(ப - ரை) **अथ**=வாயுவின் அம்சம்வாய்ந்த 11 ருத்திரர்களைப்பற்றிய மந்திரங்களைப்படித்த பிறகு **अष्टपुरुषस्य**=**अग्निश्चजातवेदाश्च** (101-வது பக்கம் பார்க்கவும்) என்ற மந்திரத்தில் படிக்கப்பட்டுள்ள 8 விதமான புருஷ மூர்த்திகளையுடைய **अग्नेः**=அக்னியினுடைய (**मन्त्राः पठ्यन्ते**=மந்திரங்கள் படிக்கப்படுகின்றன.) அவை பின் வருமாறு—



१ अग्नेः पूर्वदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। २ जातवेदस उपदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ३ सहोजसो दक्षिणदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ४ अजिराप्रभव उपदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ५ वैश्वानरस्याऽपरदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ६ नर्यापस उपदिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ७ पङ्क्तिराधस उदग्दिश्यस्य स्थाने स्वतेजसा भानि। ८ विसर्पिण उपदिश्यस्य स्थाने स्वतेजसा भानि । १२ ओं भूर्भुवःस्वः। दिशो वो मिथुनं मा नो मिथुनꣳरीढ्वम् ॥

(ப - ரை) **स्थाने स्वतेजसा भानि** என்ற பாகத்திற்குப் பல தடவை வியாக்யானஞ் செய்திருப்பதால் அதைவிடுத்து மற்றப் பாகங்களுக்கு மற்றிலு மர்த்தமெழுதுகிறோம். 1 **पूर्वदिश्यस्य**=கிழக்குதிசையிலிருக்கின்ற **अग्नेः**=பிரசித்த அக்கினி பகவானின் அம்சம் வாய்ந்த 'அக்னி' என்ற புருஷனுடைய. 2 **उपदिश्यस्य**=தென் கிழக்கு திசையில் இருக்கின்ற **जातवेदसः**=ஜாதவேதஸ் என்ற அக்கினி மூர்த்தியினுடைய. 3 **दक्षिणदिश्यस्य**=தெற்கு திசையிலிருக்கின்ற **सहोजसः**=சஹோஜஸ் என்ற அக்கினி மூர்த்தியினுடைய 4 **उपदिश्यस्य**=தென்மேற்கு திசையிலிருக்கின்ற **अजिराप्रभवः**=அஜிராப்பிரபவன் என்ற அக்கினி மூர்த்தியினுடைய. 5 **अपरदिश्यस्य**= மேற்கு திசையிலிருக்கின்ற **वैश्वानरस्य**=வைச்வாநரன் என்ற அக்கினி மூர்த்தியினுடைய. 6 **उपदिश्यस्य**=வடமேற்கு திசையிலிருக்கின்ற **नर्यापसः**=நர்யாபஸ் என்ற அக்கினி மூர்த்தியினுடைய. 7 **उदग्दिश्यस्य**=வடக்குதிசையிலுள்ள **पङ्क्तिराधसः**=பங்திராதஸ் என்ற அக்கினி மூர்த்தியினுடைய 8 **उपदिश्यस्य**=வடகிழக்கு திசையிலிருக்கின்ற **विसर्पिणः**=விஸர்ப்பீ என்ற அக்கினி மூர்த்தியினுடைய **स्थाने स्वतेजसा भानि**=லோகத்தில் வஸித்துக்கொண்டு அவர்களின் பிரசாதத்தால் கிடைக்கின்ற எனக்குச் சொந்தமான காந்தியால் விளங்கவேண்டும். கிழக்கு முதலிய 8 திக்குகளிலும் முறையே அக்கினி, ஜாதவேதஸ் முதலிய அக்கினி மூர்த்திகள் அதிபர்களாய் வஸிக்கின்றனர். அவர்களின் லோகத்தில் காந்தியுள்ளவனாய் நான் வஸிக்கவேண்டும் என்று கருத்து. 12 **भूर्भुवःस्वः**=பூ:, புவ:, ஸுவ: என்ற மூன்றுலோகங்கள் வடிவமாயுள்ள **ओम्**=பிர

ணவத்தின் பொருளான யாதொரு பரப்பிரும்மமுண்டோ அதன் ஸ்வரூபமாயிருக்கின்ற दिशः=ஓ திக்குகளே! वः=உங்களுடைய मिथुनम्=மிதுனம் (தத்தமது பதிகளுடன் கூடியிருக்குகை) नः=நங்களுடைய मिथुनम्=மிதுனத்தை मारीढ्वम्=ஹிம்ஸிக்கவேண்டாம். இம்மந்திரத்தை இங்கு படிக்கப்பட்டுள்ள 8 மந்திரங்களுள் ஒவ்வொரு மந்திரத்தின் முடிவிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அந்தந்த தேவதைகளின் பிரசாதத்தா லுண்டாகின்ற போகங்கள் எனக்கு உண்டாகவேண்டும் என்று பிரார்த்திப்பதில் 15, 16, 17, 18-வது அனுவாகங்களின் முக்கியமான கருத்து.

स्वरेकञ्च ॥ एतद्रश्मय आपो रूपाणि दिशः पञ्च ॥

அடிமுதல் 72 பஞ்சா சத்துகளாகின்றன

பதினெட்டாவது அனுவாகம் முற்றிற்று.

---

## பத்தொன்பதாவது அனுவாகம்.

(அ - கை) சூரியன் பிரார்த்திக்கப்படுகின்றார்—

१ दक्षिणपूर्वस्यां दिशि विसर्पी नरकः। तस्मान्नः परिपाहि। २ दक्षिणाऽपरस्यां दिश्यविसर्पी नरकः। तस्मान्नः परिपाहि। ३ उत्तर-पूर्वस्यां दिशि विषादी नरकः। तस्मान्नः परिपाहि। ४ उत्तरापरस्यां दिश्यविषादी नरकः। तस्मान्नः परिपाहि।

(ப - ரை) 1 दक्षिणपूर्वस्यां, दिशि=தென்கிழக்கு திசையில் विसर्पी, नरकः=‘விஸர்ப்பீ’ என்று பெயருள்ள நரகம் (இந்நரகத்தில் தள்ளப்பட்டப் பிராணிகள் வேதனையை சஹிக்கமுடியாமல் அங்குமிங்கும் ஓடுவார்கள். ஆதலாலிப்பெயர் அதற்கு ஏற்பட்டது.) இருக்கின்றது. तस्मात्=அதனின்றும் नः=எங்களை परिपाहि=காப்பாற்றுவீராக. 2 दक्षिणापरस्यां, दिशि=தென்மேற்கு திசையில் अविसर्पी, नरकः=“அவிஸர்ப்பீ” என்று பெயருள்ள நரகம் (இந்த நரகத்தில் தள்ளப்பட்டப் பிராணிகள் மிகுந்த துக்கத்தை யனுபவிப்பதால் அங்குமிங்கும் ஓடுவதற்குகூட் சக்தியற்றவர்களாகின்றனர். ஆதலாலிதற்கு “அவிஸர்ப்பீ” எனப் பெயர் ஏற்பட்டது.) இருக்கின்றது. तस्मात्=அதனின்றும் नः=எங்களை परिपाहि=காப்பாற்றுவீராக. 3 उत्तरपूर्वस्यां दिशि=வடகிழக்குதிசையில் विषादी-नरकः=விஷாதீ எனப்பெயருள்ள நரகம் (இந்த நரகத்தில் தள்ளப்பட்டப்பிராணிகள் நாம் எதற்காகப் பாபத்தைச் செய்தோம், துக்கம் சஹிக்கமுடியவில்லையே என்று நினைத்து வருந்துகின்றனர். ஆதலாலிதற்கு “விஷாதீ” எனப் பெயர் ஏற்பட்டது.) இருக்கின்றது. तस्मात्=அதனின்றும் नः=எங்களை परिपाहि=காப்பாற்றுவீராக. 4 उत्तरापरस्यां दिशि=வடமேற்கு திசையில் अविषादी नरकः=‘அவிஷாதீ’ எனப்பெயருள்ள நரகம் (இந்த நரகத்தில் தள்ளப்பட்டப் பிராணிகள் மிகுந்த துக்கானுபவத்தினால் தாம்செய்த பாபகாரியங்களை நினைத்து வருத்தமடைவதற்குகூட பிரக்ஞையற்றவர்களாகின்றனர். ஆதலாலிதற்கு ‘அவிஷாதீ’ எனப் பெயர் ஏற்பட்டது.) இருக்கின்றது. तस्मात्=அதனின்றும் नः=எங்களை परिपाहि=காப்பாற்றுவீராக.

(அ - கை) இரண்டு மந்திரங்களின் ப்ரதீகம் (தொடக்கம்) மட்டும் காண்பிக்கப்படுகின்றது. நாம் அம்மந்திரங்களின் மீத பாகங்களை எழுதி வியாக்யானஞ் செய்கின்றோம்—

आ यस्मिन्त्सप्त वासवा इन्द्रियाणि शतक्रतवित्येते ॥

१ आ यस्मिन्त्सप्त वासवास्तिष्ठन्ति स्वारुहो यथा।
ऋषिर्ह दीर्घश्रुत्तम इन्द्रस्य घर्मो अतिथिः ॥

२ इन्द्रियाणि शतक्रतो माते जनेषु पञ्चसु। इन्द्र ताति त आवृणे।

இம்மந்திரங்களால் இந்திரன் பிரார்த்திக்கப்படுகின்றான்:—

(1) (ப-ரை) स्वारुहः, यथा=சூரியனுக்கு பாதந்திரங்களாக இருந்தபோதிலும் நன்குபழக்கப்பட்டிருப்பதால் தாமாகவே செல்லுகின்றனவைகள் போலுள்ளவைகளும் वासवाः=சூரியனைத் தேரில் வைத்து இழுக்கின்றவைகளுமான सप्त=ஏழுகுதிரைகள் यस्मिन्=

எந்தச்சூரியனிடம் **आतिष्ठन्ति**=இருக்கின்றனவோ **ऋषिहः**=இந்திரியங்களாலறியக்கூடாத சென்றது, நடக்கப்போகின்றது முதலிய சமாசாரங்களை அறிந்து கொண்டவரும் **दीर्घश्रुत्तमः**=மூன்றுலோகங்களுக்கும் வெளிச்சத்தைக் கொடுப்பதால் பிரசித்திபெற்றவருமான **घर्मः**=பிரகாசிக்கின்றவருமான (**सः**=அந்தச் சூரியன்) **इन्द्रस्य**=இந்திரனுக்கு **अतिथिः**=அதிதியாக (**भवति**=ஆகின்றார்) இத்தகைய மஹிமைவாய்ந்த சூரியனும் தனக்கு வேண்டியவற்றை யாசிப்பதற்காக இந்திரனின் சமீபம் வருகின்றார். இந்திரனின் மஹிமை அளவிடத்தகாதது என்று கருத்து.

(2) (ப - ரை) **शतक्रतो** ஓ இந்திரனே ! **पञ्चसुजनेषु**=பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன், நிஷாதன் என்ற ஜாதி இவ்வைவர்களிடத்தில் **या**=எந்த **इन्द्रियाणि**=சக்திகள் (இருக்கின்றனவோ) **इन्द्र**=ஓ இந்திரனே ! **तानि**=அவைகளை **ते**=உமது அனுக்கிரஹத்தால் **आवृणे**=அடையவேண்டும்.

**दक्षिणपूर्वस्यां नव** அடிமுதல் 73 பஞ்சாசத்துகளாகின்றன.

பத்தோன்பதாவது அனுவாகம் முற்றிற்று.

---

## இருபதாவது அனுவாகம்.

(அ-கை) ஆருண கேதுக சயனம் என்று ஓர் கர்மா விதிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஜலத்தையே கல்லாகபாவித்து கருட சயனம் முதலியவற்றில் செங்கல்லை யடுக்குவதுபோல் சிறிய மண் பாத்திரங்களில் ஜலத்தைக் கிரஹித்துக்கொண்டு மந்திரத்தைச் சொல்லி குறிப்பிட்ட விடங்களில் வைக்கவேண்டுமென்று முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கர்மத்திற்கு சூரிய சாயுஜ்யத்தை யடைதல் பலனாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அக்கர்மாங்கமான மந்திரங்களுக்கும் பரம்பரையாய் சூரிய சம்பந்தமிருப்பதால் அவைகள் இங்குபடிக்கப்படுகின்றன. இவ்விதமே ஆருணகேதுக சயனத்தைப்பற்றி இனிவரும் பிராம்மணங்களை சூரியனை நமஸ்கரிக்கும் பொழுது படிப்பதற்கு கருத்துக் கொள்ள வேண்டும்.



ஜ ১ इन्द्रघोषा वो वसुभिः पुरस्तादुपदधताम्। २ मनोजवसो वः पितृभिर्दक्षिणत उपदधताम्। ३ प्रचेता वो रुद्रैः पश्चादुपदधताम्। ४ विश्वकर्मा व आदित्यैरुत्तरत उपदधताम्। ५ त्वष्टा वो रूपैरुपरिष्टादुपदधताम्। ६ संज्ञानं वः पश्चादिति।

(ப - ரை) 1 (हे **अविष्टकाः**= ஜலரூபமான ஓ கல்லுகளே !) **वः**=உங்களை **पुरस्तात्**=கிழக்கு திசையில் **इन्द्रघोषाः**=இந்திரகோஷா எனப் பெயர்பூண்ட தேவர்கள் **वसुभिः**=வஸு என்ற தேவர்களுடன் **उपदधताम्**=ஸ்தாபிக்கட்டும். 2 **मनोजवसः** = "மனோஜவஸ்" என்று பெயர்பூண்ட தேவர்கள் **पितृभिः**=பிதுருக்களுடன் **वः**=உங்களை **दक्षिणतः**=தெற்குதிசையில் **उपदधताम्**=ஸ்தாபிக்கட்டும். 3 **प्रचेताः**=வருணன் **रुद्रैः**=ருத்திரர்களுடன் **वः**=உங்களை **पश्चात्**=மேற்குதிசையில் **उपदधताम्**=ஸ்தாபிக்கட்டும். 4 **विश्वकर्मा**=விச்வகர்மா என்ற தேவன் **आदित्यैः**=ஆதித்யர்களுடன் **वः**=உங்களை **उत्तरतः**=வடக்குதிசையில் **उपदधताम्**=ஸ்தாபிக்கட்டும். 5 **त्वष्टा**="த்வஷ்டா" என்ற தேவன் **रूपैः**="ரூப" என்ற தேவர்களுடன் **वः**=உங்களை **उपरिष्टात्**=மேல்திசையில் **उपदधताम्** = ஸ்தாபிக்கட்டும். 6 **संज्ञानम्**=சிறந்த அறிவுள்ள தேவதை **वः**=உங்களை **पश्चात्**=கீழ் திசையில் (**उपदधताम्**=ஸ்தாபிக்கட்டும்) **उपदधताम्**=என்ற பதத்தைச் சேர்த்துக்கொள்வதற்காக **इति** என்ற பதம் போடப்பட்டிருக்கிறது. இந்தச் சத்கர்மத்தை ஒழுங்காய் நடத்த எனக்குச் சக்தியில்லையாதலால் வஸு முதலிய தேவர்களே நடத்திவைக்கின்றனர் என்றபாவனையுடன் நடத்தவேண்டும். அவ்விதபாவனையிருக்குமாயின் குற்றங்குறைகள் ஏற்படுமாயினும் அதனால் அனுஷ்டிப்பவனுக்கு எவ்விதக் குறைவும் நேரிடாது என்று கருத்து.

आदित्यस्सर्वोऽग्निः पृथिव्याम्। वायुरन्तरिक्षे। सूर्यो दिवि।
चन्द्रमा दिक्षु। नक्षत्राणि स्वलोके॥

(ப - ரை) **आदित्यः**=சூர்யஸ்வரூபியான **सर्वोऽग्निः**=எல்லாவிதமான அக்னியும் (**अग्निश्च जातवेदाश्च** என்றதால் சொல்லப்பட்ட

8 வித அக்னிமூர்த்திகளும்)**पृथिव्याम्**=பூமியில் (**उपदधातु**=ஸ்தாபிக்கட்டும்.) **वायुः**=வாயு என்ற தேவன் **अन्तरिक्षे**=அந்தரிக்ஷலோகத்தில் (ஸ்தாபிக்கட்டும்.) **सूर्यः**=சூரியன் **दिवि**=சுவர்க்கலோகத்தில் (ஸ்தாபிக்கட்டும்)**चन्द्रमाः**=சந்திரன் **दिक्षु**=திக்குகளில்(ஸ்தாபிக்கட்டும்.) **नक्षत्राणि**=நக்ஷத்திரங்கள் **स्वलोके**=தமது லோகத்தில் (ஸ்தாபிக்கட்டும்.) ஓ ஜலமயமான இஷ்டகைகளே! உங்களை அந்தந்த தேவர்கள் அந்தந்த ஸ்தானங்களில் ஸ்தாபிக்கவேண்டும். அதன் மூலம் எனக்கும் அந்தந்த லோகங்களில் பிரதிஷ்டையுண்டாகவேண்டும். என்பது கருத்து. சிறியமண்பாத்திரத்தில் கிரஹிக்கப்பட்ட ஜலம் "ஜலமயமான கல்" என்று சொல்லப்படுகின்றது.

एवा ह्येव। एवा ह्यग्ने। एवा हि वायो। एवा हीन्द्र।
एवा हि पूषन्। एवा हि देवाः।

(ப - ரை) **एव**=சஞ்சரிக்கும் சுவபாவமுள்ள ஓ ஆதித்யனே! **एवा हि**=அடையவேண்டிய பொருள்களுக்குக் காரணமாக இருக்கின்றீர் என்பது பிரசித்தம். தங்களையுபாஸிப்பவன் சகலவித போகங்களையும் பெறுவான் என்பது கருத்து. இவ்விதமே இனி வரும் பாகங்களுக்குத் தாத்பர்யங் கொள்ளவேண்டும். **अग्ने**=ஓ அக்னியே! **एवा हि**=நீர் அடையவேண்டிய காமங்களுக்குக் காரணமாக இருக்கின்றீர் என்பது பிரசித்தம். **वायो**=ஓ வாயுவே! **एवा हि**=அடையவேண்டிய காமங்களுக்குக் காரணமாக இருக்கின்றீர் என்பது பிரசித்தம். **इन्द्र**=ஓ இந்திரனே! **एवा हि**=அடையவேண்டிய காமங்களுக்குக் காரணமாக இருக்கின்றீர் என்பது பிரசித்தம். **पूषन्**=ஓ பூஷா என்ற தேவனே! **एवा हि**=நீர் அடையவேண்டிய காமங்களுக்குக் காரணமாக இருக்கின்றீர் என்பது பிரசித்தம். **देवाः**=மற்றுமுள்ள ஓ தேவர்களே! **एवा हि**=நீங்கள் அடையவேண்டிய காமங்களுக்குக் காரணமாக இருக்கின்றீர்கள் என்பது பிரசித்தம்.

**दिक्षु सप्त च**। அடிமுதல் 74 பஞ்சாசத்துகளாகின்றன.

இருபதாவது அனுவாகம் முற்றிற்று.



## இருபத்தோன்றாவது அனுவாகம்

आपमापामपस्सर्वाः। अस्मादस्मादितोऽमुतः। अग्निर्वायुश्च सूर्यश्च। सह संचस्करर्द्धिया। वाय्वश्वा रश्मिपतयः। मरीच्यात्मानो अद्रुहः। देवीर्भुवनसूवरीः। पुत्रवत्वाय मे सुत। महानाम्नीर्महामानाः। महसो महसः स्वः। देवीः पर्जन्यसूवरीः। पुत्रवत्वाय मे सुत। *अपाऽश्युष्णिमपारक्षः। अपाऽश्युष्णिमपारघम्। अपाघ्रामपचाऽवर्तिम्। अपदेवीरितो हित। वज्रं देवीरजीताꣳश्च। भुवनं देवसूवरीः। आदित्यानदितिं देवीम्। योनिनोर्ध्वमुदीषत। भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाऽक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्तिनस्तार्क्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु।

இம்மந்திரங்கள் முதலனுவாகத்திலும் படிக்கப்பட்டிருப்பதால் இவைகட்கு அங்கு உரைஎழுதி இருக்கிறோம். ஆதலால் மறுபடியு முரை எழுதாமல் விட்டு விடுகிறோம்.

केतवो अरुणासश्च। ऋषयो वातरशनाः।
प्रतिष्ठाꣳशतधा हि। समाहितासो सहस्रधायसम्॥

(ப - ரை) **केतवः**="கேது" என்றுப் பெயருள்ளவர்களும் **अरुणासश्च**="அருண" என்றுப் பெயருள்ளவர்களும் **वातरशनाः**="வாதரசன" என்றுப் பெயர்பூண்டவர்களுமான **ऋषयः**=ருஷிகள் **समाहितासः**=அனுக்கிரஹிக்கவேண்டுமென்ற சங்கல்பமுள்ளவர்களாய்க்கொண்டு **शतधा**=நூறுவிதமாயும் **सहस्रधायसम्**=ஆயிரம் விதமாயுமுள்ள **प्रतिष्ठाम्**=பிரதிஷ்டையை(கீர்த்தியை) (**संपादयन्तु**=உண்டுபண்ணட்டும்.) அவர்களை வணங்குகிறேன்.

---

**अपाश्नुष्णिम्** என்றும் பாடமிருக்கிறது. மேல் போட்டிருப்பதே பாஷ்ய சம்மதபாடம்.

१. शिवा नश्शन्तमा भवन्तु । दिव्या आप ओषधयः ॥
२. सुमृडीका सरस्वति । माते व्योम संदृशि ॥

இம்மந்திரங்களுக்கு 13 வது பக்கத்தில் வியாக்யானம் செய்திருக்கிறோம்.

स्वरुदीपत वातरशनाः षट् च । 77 பஞ்சாசத்துகளாகின்றன.

இருபத்தோன்றாவது அனுவாகம் முற்றிற்று

---

## இருபத்திரண்டாவது அனுவாகம்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்தில் ஜலத்தையே செங்கல்லாகப் பாவித்து அந்தந்தவிடங்களில் ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பதால் அந்த ஜலம் இவ்வனுவாகத்தால் பலவாறாக ஸ்துதிக்கப்படுகின்றது—

योऽपां पुष्पं वेद । पुष्पवान् प्रजावान् पशुमान् भवति । चन्द्रमा वा अपां पुष्पम् । पुष्पवान् प्रजावान् पशुमान् भवति । य एवं वेद ॥

(ப - ரை) **यः**=எவன் **अपाम्**=ஜலத்தினுடைய **पुष्पम्**=புஷ்பத்தை **वेद**=அறிவனோ (**सः**=அவன்) **पुष्पवान्**=ஜாதீ மல்லிகை, சம்பகம் முதலிய புஷ்பங்களையுடையவனாகவும் **प्रजावान्**=பெண், பிள்ளை, பேரன் முதலிய சந்ததிகளையுடைய வனாகவும், **पशुमान्**=பசு, குதிரை, முதலிய நாற்கால் பிராணிகளுள்ளவனாகவும் **भवति**=ஆகின்றான். **चन्द्रमाः**=சந்திரன் **अपाम्**=ஜலத்தினுடைய **पुष्पम्**=புஷ்பம் (பூ) என்று **वा**=பிரசித்தம். **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனோ (**सः**=அவன்) **पुष्पवान्**, **प्रजावान्**, **पशुमान्**, **भवति** முன்போலர்த்தம். சந்திரமண்டலம் ஜலமயமாக இருப்பதாலும், புஷ்பம் போல் பிரகாசிக்கின்றதாக இருப்பதாலும் ஆனந்தத்தைக் கொடுப்பதாலும் ஜலத்தின் புஷ்பமாயாகின்றது. இவ்வித சந்திரமண்



டலத்தை ஜலத்தின் புஷ்பமாக எவன் அறிகிறானோ அவன் நித்தியம் நல்ல புஷ்பங்களை அணிந்து அனுபவிப்பதற்குரிய பாக்யம் பெற்றவனாகவும், சந்ததியுள்ளவனாகவும், பசு குதிரை முதலிய சம்பத்துள்ளவனாகவுமாவான். ஜலம் இத்தகைய மஹிமை வாய்ந்தது என்று கருத்து. "ஜலத்தின் புஷ்பமாக சந்திரனாகின்றான்" என்பதை அறிவதில் ருசியை யுண்டுபண்ணுவதற்காக முதலில் பலன் சொல்லப்பட்டது. உபசம்ஹாரத்திற் (முடிவுக்) காக இரண்டாவது தடவை பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

योऽपामायतनं वेद । आयतनवान् भवति । अग्निर्वा अपामायनम् । अयतनवान् भवति । २ योऽग्नेरायतनं वेद । आयतनवान् भवति । आपो वा अग्नेरायतनम् । आयतनवान् भवति । य एवं वेद ॥

(ப - ரை) **यः**=எவன் **अपाम्**=ஜலத்தினுடைய **आयतनम्**=ஆதாரத்தை **वेद**=அறிவனோ (**सः**=அவன்) **आयतनवान्**=எவ்விஷயத்திலும் நிலைபெற்றிருத்தல், அல்லது வீடு இஃதுள்ளவனாக **भवति**=ஆகின்றான். **अग्निर्वा**=அக்னி **अपाम्**=ஜலத்திற்கு **आयतनम्**=ஸ்தானம் (**इति**=என்று **यः**=எவன் **वेद**=அறிவனோ **सः**=அவன்) **आयतनवान्**=வீடுள்ளவனாக **भवति**=ஆகின்றான். ஜகத்சிருஷ்டியை நிரூபணஞ் செய்கின்ற பிரகரணத்தில் **अग्नेरापः**=அக்னியினிடமிருந்து ஜலமுண்டாயிற்று என்று சொல்லியிருப்பதால் அக்னி ஜலத்திற்குக் காரணமாகின்றது பற்றி ஆதாரமாகின்றது. இதை யறிந்தவன் உலகில் நிலைத்திருந்து சுகம்பெறுவான். தங்க இடமன்னியில் கஷ்டப்படமாட்டான். இனிவரும் **आयतनवान् भवति** என்றதற்கு மிதே கருத்துக் கொள்ளவேண்டும். அக்னி ஜலத்திற்கு ஆதாரமாகின்றது என்பதை அறிவதில் ருசியை யுண்டுபண்ணுவதற்காக தொடக்கத்தில் **आयतनवान् भवति** என்றதால் பலன் சொல்லப்பட்டது. உபசம்ஹாரத்திற் (முடிவுக்)காக இரண்டாவது தடவை **आयतनवान् भवति**=என்றதால் பலன் சொல்லப்பட்டது. இவ்விதமே இனிவரும் மந்திரங்களில் இரண்டுதரம் **आयतनवान् भवति** என்றதைப் படித்ததற்குத் தாத்பர்யங் கொள்ளவேண்டும்.

2 மேல்படித்த மந்திரத்திலுள்ள பதங்களே இனிவரும் மந்திரங்களில் திரும்பித்திரும்பி வருகின்றபடியாலும் அவைகட்கு அர்த்தபேதமில்லாமையாலும் அவைகளை விடுத்து விசேஷமா[ன] பதங்களுக்கு பொருள்செய்து அந்வயக்கிரமத்தையும் காண்பிக்கிறேம்:—यः, अग्नेः=அக்னியினுடைய आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति, आपः वा=ஜலம் अग्नेः=நெருப்புக்கு आयतनम्, एवम्, यः वेद,(सः) आयतनवान्, भवति। மஹாசிருஷ்டியில் அக்னியினிடமிருந்து ஜலமுண்டாகின்றதாயினும் பிருமாண்டம் முதலிய அவாந்தர சிருஷ்டியில் आपो वा इदमासीत्सलिलमेव என்றதால் ஜலமே எல்லாவற்றிற்கும் காரணமாகின்றது என்று சொல்லியிருப்பதை யனுசரித்து நம்மால் காணப்படுகின்ற அக்னி ஜலத்தின் காரியமாகின்றமையால் அக்னிக்கு ஜலமாதாரமாகின்றது என்று இங்கு ஸ்துதிக்கப்படுகின்றது.

१. योऽपामायतनं वेद। आयतनवान् भवति। वायुर्वा अपामायतनम्। आयतनवान् भवति। २. यो वायोरायतनं वेद। आयतनवान् भवति। आपो वै वायोरायतनम्। आयतनवान् भवति। य एवं वेद॥

(ப - ரை) 1 यः, अपाम्, आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति। वायुः वा=காற்று अपाम्, आयतनम्, (इति, यः, वेद, सः) आयतनवान्, भवति, மற்றப்பதங்களுக்கு முன் மந்திரதின் முதல் பாகதில் பெருள் செய்திருகிறபடி பொருள் கொள்ளவும்.

(தா - ம்) மஹா சிருஷ்டிக்கிரமத்தை உபதேசிக்குமிடத்தில் वायोरग्निः, अग्नेरापः காற்றிலிருந்து நெருப்புண்டாயிற்று, நெருப்பிலிருந்து ஜலமுண்டாயிற்று என்று சொல்லியிருப்பதால் அக்னி வாயிலாக காற்றும் ஜலத்திற்குக் காரணமாகின்றது பற்றி ஜலத்திற் காதாரமாக இங்குவர்ணிக்கப்படுகின்றது. காற்றினல் மழையுண்டாவதால் ஜலத்திற்குக் காற்று ஆதாரமாக வர்ணிக்கப்படுவதாய் கொள்ளலும் பொருந்தக்கூடியதே. 2 यः, वायोः=காற்றினுடைய आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति। आपः, वै, वायोः=காற்றிற்கு आयतनम्, एवम्, यः, वेद, (सः) आयतनवान्, भवति மற்றவைகளுக்கு முன்மந்திரத்தின் இரண்டாவது பாகம் போலர்தம். முன்சொல்லியபடி அவாந்தர சிருஷ்டியில் ஜலம் எல்லா



வற்றிற்கும் காரணமாகின்றமையால் காற்றிற்கும் காரணமாகின்றது பற்றி காற்றிற்கு ஆதாரமாகின்றது.

६

१. योऽपामायतनं वेद। आयतनवान् भवति। असौ वै तपन्नपामायतनम्। आयतनवान् भवति। २. योऽमुष्य तपत आयतनं वेद। आयतनवान् भवति। आपो वा अमुष्य तपत आयतनम्। आयतनवान् भवति। य एवं वेद।

(ப - ரை) 1. முதல் இரண்டு வாக்யங்களுக்கு முன்போல் பதம்பிரித்து அர்த்தங்கொள்ளவும். तपन्=தாபத்தை (உஷ்ணத்தை)க்கொடுக்கின்ற असौवै=யாவராலும் நேரில் காணப்படுகின்ற இந்தச்சூரியன். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். आदित्याज्जायते वृष्टिः சூரியனல் மழையுண்டாகின்றது என்ற வசனப்படியும், சூரியகிரணத்தால் பூமியிலுள்ள ஜலம் ஆவியாகமாறி பிறகு அதுவே மேகரூபத்தையடைந்து மழைஜலமாகபூமியில் விழுகின்றது என்ற யுக்திப்படியும் சூரியன் ஜலத்திற்குக் காரணமாகின்றபடியால் அவர்ஜலத்திற்கு அச்ரயமாகவுமாகின்றார். 2 यः, तपतः=தாபத்தைக்கொடுக்கிற, அல்லது பிரகாசிக்கின்ற अमुष्य=இந்தச்சூரியனுடைய आयतनम् वेद,(सः) आयतनवान् भवति। आपः, वा, तपतः=தாபத்தைக்கொடுக்கின்ற अमुष्य=இந்தச் சூரியனுக்கு आयतनम् (इति), एवं, यः, वेद, (सः) आयतनवान् भवति। மற்றவைகளுக்கு முன் மந்திரத்தின் இரண்டாவது பாகம் போலர்த்தம். அவாந்தர சிருஷ்டியில் ஜலம் எல்லாவற்றிகும் காரணமாகின்றபடியால் சூரியனுக்கும் காரணமாகின்றது பற்றி "சூரியனுக்கு ஜலம் ஆதாரம்" என்று சொல்லப்படுகின்றது.

१. योऽपामायतनं वेद। आयतनवान् भवति। चन्द्रमा वा अपामायतनम्। आयतनवान् भवति। २. यश्चन्द्रमस आयतनं वेद। आयतनवान् भवति। आपोवै चन्द्रमस आयतनम्। आयतनवान् भवति। य एवं वेद॥

1 चन्द्रमाः=சந்திரன். மற்றவைகளுக்கு முன்போலர்த்தமுமந்வயமும்கொள்க. சந்திரகிரணம் குளுமையாயிருப்பதுபற்றி

சந்திரமண்டலத்தில் ஜலமிருப்பதாயனுமிக்கிறோம். ஆதலால் சந்திரன் ஜலத்திற்கு ஆதாரமாகின்றான் 2 **यः, चन्द्रमसः** = சந்திரனுடைய **आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति । आपः, वै, चन्द्रमसः** சந்திரனுக்கு **आयतनम्, एवम्, यः, वेद, (सः) आयतनवान्, भवति** மற்றவைகளுக்கு முன் மந்திரத்தின் இரண்டாவதுபாகம். போலர்த்தம். முன்சொல்லிய அவாந்தர ஸிருஷ்டிக்கிரமத்தை யனுசரித்து ஜலம் சந்திரனுக்கு ஆதாரம் என்று வர்ணிக்கப்படுகின்றது.

१. योऽपामायतनं वेद । आयतनवान् भवति । नक्षत्राणि वा अपामायतनम् । आयतनवान् भवति । २. यो नक्षत्राणामायतनं वेद । आयतनवान् भवति । आपो वै नक्षत्राणामायतनम् । आयतनवान् भवति । य एवं वेद ॥

(ப - ரை) 1 **नक्षत्राणिवा**=நக்ஷத்திரங்கள். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். பூசம், திருவாதிரை முதலிய மஹா நக்ஷத்திரங்களில் மழைபெய்வதற்கு யோகம் நேர்ந்தால் அதிகமாய் மழைபெயுமாதலால் நக்ஷத்திரங்கள் ஜலத்திற்குக் காரணமாகின்றன. 2 **यः, नक्षत्राणाम्** = நக்ஷத்திரங்களுடைய **आयतनम्, वेद (सः) आयतनवान् भवति । आपः, वै, नक्षत्राणाम्**=நக்ஷத்திரங்களுக்கு **आयतनम्, एवम्, यः, वेद, सः, आयतनवान् भवति ॥** மற்றவைகளுக்கு முன் மந்திரத்தின் இரண்டாவதுபாகம் போலர்த்தம் முன். சொல்லியபடி அவாந்தர ஸிருஷ்டிக்கிரமத்தை யனுசரித்து ஜலம் நக்ஷத்திரத்திற்கு ஆதாரம் என்று வர்ணிக்கப்படுகின்றது.

१. योऽपामायतनं वेद । आयतनवान् भवति । पर्जन्यो वा अपामायतनम् । आयतनवान् भवति । २. यः पर्जन्यस्यायतनं वेद । आयतनवान् भवति । आपो वै पर्जन्यस्याऽऽयतनम् । आयतनवान् भवति । य एवं वेद ॥

(ப - ரை) 1 **पर्जन्यः**=மேகம். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். மேகம் மழையைப் பொழிவதால் ஜலத்திற்கு ஆதாரமாகின்றதென்பது பிரசித்தம். 2 **यः, पर्जन्यस्य** = மேகத்தினுடைய, **आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति । आपः, वै, पर्जन्यस्य**=மேகத்திற்கு **आयतनम्, एवम्, यः, वेद, (सः) आयतनवान्, भवति ।** மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். முன்சொல்லியபடி அவாந்தர ஸிருஷ்டிக்கிரமத்தை யனுசரித்தோ, **धूमज्योतिस्सलिलमरुतां सन्निपातः मेघः** புகை, நெருப்பு, ஜலம், காற்று இவைகளின் சேர்க்கையால் மேகம் என்ற வஸ்துவுண்டாகின்றது என்ற முறையை யனுசரித்தோ ஜலம் மேகத்திற்கு ஆதாரம் என்று வர்ணிக்கப்படுகின்றது.



१. योऽपामायतनं वेद । आयतनवान् भवति । संवत्सरो वा अपामायतनम् । आयतनवान् भवति । २. यस्संवत्सरस्यायतनं वेद । आयतनवान् भवति । आपो वै संवत्सरस्याऽऽयतनम् । आयतनवान् भवति । य एवं वेद ॥

(ப - ரை) 1 **संवत्सरोवा**=ஸம்வத்ஸரம் என்ற காலம். மற்றவைகளுக்கு முன்போலர்த்தம். ஸம்வத்ஸரம் என்றகாலத்திலடங்கிய வர்ஷ ருது மழைக்குக் காரணமாகின்றபடியால் ஸம்வத்ஸரம் ஜலத்திற்காதாரமென்று வர்ணிக்கப்படுகின்றது. 2 **यः, संवत्सरस्य**=ஸம்வத்ஸரத்தினுடைய. **आयतनम्, वेद, (सः) आयतनवान्, भवति । आपः, वै, संवत्सरस्य**=ஸம்வத்ஸரத்திற்கு **आयतनम्, एवम्, यः, वेद, (सः) आयतनवान् भवति, ।** மற்றவைகளுக்கு முன் மந்திரத்தின் இரண்டாவது பாகம் போலர்த்தம். முன் சொல்லியபடி அவாந்தர ஸிருஷ்டிக்கிரமத்தை யனுசரித்து "ஜலம் ஸம்வத்ஸரம் என்ற காலத்திற்கு ஆதாரம்" என்று வர்ணிக்கப்படுகின்றது.

योऽप्सु नावं प्रतिष्ठितां वेद । प्रत्येव तिष्ठति ।
इमे वै लोका अप्सु प्रतिष्ठिताः । तदेषाऽभ्यनूक्ता ॥

(ப - ரை) **यः**=எவன் **अप्सु**=ஜலத்தில் **प्रतिष्ठिताम्**=ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்ட **नावम्**=ஓடத்தை அல்லது கப்பலை **वेद**=அறிவனோ (**सः**=அவன்) **प्रतितिष्ठति एव**=நிச்சயமாய் நிலையை, அல்லது கீர்த்தியை யடைவான். ஜலத்தில் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்ட ஓடம் யாது? என்றால் பதிலளிக்கப்படுகிறது. **इमे लोकाः**=நம்மால் நேரில்பார்க்கப்படுகின்ற பூமி அந்தரிக்ஷம் முதலிய லோகங்கள் **अप्सु**=ஜலத்தில் **प्रतिष्ठिताः**=ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. (**इति**=என்

பது) वै=பிரசித்தம். இப் பூலோகம் முதலியவைகள் ஜலத்தில் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பற்றி ஓடம் போலாகின்றன. இவ்விதம் ஜலம் எல்லா லோகத்திற்கு மாதாரமாகின்றது என்று எவன் அறிகிறானோ அவன் உலகில் கீர்த்தியைப் பெறுவான். ஆறு, குளம் முதலியவற்றைக் கடப்பதற்காக நம்மால் சம்பாதிக்கப்பட்ட ஓடம் போக்கு வரத்துக்களால் அசைந்து கொண்டிருக்கின்றது. ஆதலால் அது ஸ்திரமாக ஓரிடத்திலிருப்பதில்லை. எல்லாலோக ஸ்வரூபவான ஓடமோவெனில் ஒரு சமயத்திலு மசைவற்றதாய் ஜலத்தில் ஸ்திரமாக இருக்கின்றது. ஆவரணமானச் சுவருடன்கூடிய பிரும்மாண்டம் கனோதகம் என்று சொல்லக்கூடிய பெரிய ஜலத்தில் மெதக்கின்றது என்று பௌராணிகர் சொல்வதற்கு இவ்வேதவாக்கியமே ஆதாரம். तत्=எல்லா ஜகத்திற்கும் ஜலமே ஆதாரம் என்ற விஷயத்தில் एषा=பின்படிக்கப்படுகின்ற ஒரு ருக்கு अभ्यनूक्ता=வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. அந்த ருக்காவது—

अपाꣳरसमुदयꣳसन्। सूर्ये शुक्रꣳसमाभृतम्।

अपाꣳरसस्य यो रसः। तं वो गृह्णाम्युत्तममिति॥

(ப - ரை) अपाम्=ஜலத்தினுடைய रसम्=சாராம்சத்தை (நிமித்தமாகக்கொண்டு எல்லா லோகங்களும்) उदयꣳसन्=உண்டாயின. அந்தலோகம் सूर्ये=சூரியனிடம் समाभृतम्=ஸ்தாபிக்கபட்டதாயும், शुक्रम्=ரோகம் முதலிய கெடுதலாகிற தோஷமற்றதாயும் (இருக்கின்றது.) சூரியன் ஆரோக்யத்தைக்கொடுத்து லோகத்தைக் காப்பாற்றுகிறபடியால் லோகங்கள் சூரியனை யாச்ரயித்திருக்கின்றன வென்று சொல்லப்பட்டது. अपाम्=ஜலத்தின் रसस्य=சாராம்சமான மூன்று லோகத்தினுடைய रसः=சாராம்சமான यः=யாதொரு சோமரசமுண்டோ तम्=அந்த उत्तमम्=சிறந்தசோமரசத்தை वः=உங்களுக்காக गृह्णामि=அந்தந்தப் பாத்திரங்களில் கிரஹிக்கிறேன். மந்திரத்தின் முடிவைக்காண்பிப்பதற்காக इति என்றபதம் போடப்பட்டிருக்கிறது.



(தா - ம்) சோமரசத்தைக் கிரஹிக்கும்பொழுது பொதுவில் தேவதைகளைப் பிரார்த்திப்பதற்காக இம்மந்திரம் ஏற்பட்டதென்று லிங்கம் என்றப்பிரமாணத்தாலறியப் படுகின்றது. ஓதேவர்களே ! ஜலத்தின் சாராம்சம் கெட்டியாக ஆயிற்று. அதனின்றும் ஜகத்துக்களுண்டாயின. அந்தலோகங்கள் சூரியனால் பரிபாலிக்கப்படுகின்றன. அந்தலோகத்தின் சாராம்சமான யாதொரு சோமரசமுண்டோ அதைத்தங்களுக்குக் கொடுப்பதற்காக கிரஹிக்கிறேன். (எ - று) இம்மந்திரத்தில் ஜலத்தின் சாராம்சம் உலகம் என்று சொன்னதிலிருந்து ஜலம் தான் ஜகத்திற்காதாரம் என்று சொன்னதாய் ஏற்படுகின்றது.

इमे वै लोका अपाꣳरसः। तेऽमुष्मिन्नादित्ये समाभृताः।

(ப - ரை) மேல்படித்த மந்திரத்தின் கருத்து இதனால் விளக்கப்படுகின்றது—इमे=இந்த लोकाः वै=லோகங்கள் अपाम्=ஜலத்தினுடைய रसः=சாராம்சம். பாலின் சாராம்சம் கெட்டிப்பட்டால் வெண்ணெயாக ஆவதுபோல் ஜலத்தின் சாராம்சம் கெட்டிப்பட்டு பிருமாண்ட கோளரூபமாய் மாறிற்று. ते = அந்த லோகங்கள் अमुष्मिन्=யாவராலும் நேரில் பார்க்கக்கூடிய आदित्ये=சூரியனிடம் समाभृताः=ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சூரியன் லோகத்திற்கு ஆரோக்யத்தைக் கொடுப்பதுபற்றி இவ்விதஞ் சொல்லப் பட்டது.

जानुदघ्नीमुत्तरवेदीं खात्वा। अपां पूरयित्वा गुल्फदघ्नम्। पुष्करपर्णैः पुष्करदण्डैः पुष्करैश्च सꣳस्तीर्य। तस्मिन्विहायसे। अग्निं प्रणीयोपसमाधाय॥

(ப - ரை) ஆருணகேதுக சயனம் என்ற கர்மாவின் அனுஷ்டிக்கவேண்டியமுறை இனி உபதேசிக்கப்படுகின்றது. उत्तरवेदीम्=உத்தரவேதீ என்றவிடத்தை जानुदघ्नीम्=முழங்காலளவு खात्वा=தோண்டி गुल्फदघ्नम्=குதிகாலளவு अपाम्=ஜலத்தினால் पूरयित्वा=நிரப்பி पुष्करपर्णैः=(முதலில்) தாமரையிலைகளாலும் पुष्करदण्डैः=(அதன்மேல்)தாமரைத்தண்டுகளாலும் पुष्करैश्च=(அதற்கும்

மேல்) இலை, தண்டு, வேர் இவைகளுடன் கூடிய தாமரைகளாலும் **संस्तीर्य**=மறைத்து **तस्मिन्**=அதன்மேல் (வைக்கப்பட்டுள்ள) **विहायसे**=மண்ணால் பூசப்பட்ட பலகையின்மேல் **अग्निम्**=நெருப்பை **प्रणीय**=மந்திரத்தைச்சொல்லி எடுத்துவைத்து **उपसमाधाय**=இந்தனத்தினால் விருத்திசெய்து (**अवीष्टका उपदध्यात्**=ஜலமயமான கல்லுகளை மந்திரோச்சாரணத்தை முன்னிட்டு ஸ்தாபிக்கவேண்டும்)

ब्रह्मवादिनो वदन्ति । कस्मात्प्रणीतेयमग्निश्चीयते । साप्प्रणीतेयमप्सुह्ययं चीयते । असौ भुवनेष्यनाहिताग्निरेताः । तमभित एता अबीष्टका उपदधाति ।

(ப-ரை) ஆக்ஷேபம் சமாதானமிவைகளை முன்னிட்டு ஷி ஆருணகேதுகசயன பிரயோகமிதனால் விதிக்கப் படுகின்றது— **प्रणीते**=நெருப்பை எடுத்து வைத்துக்கொண்ட பிறகு **अयमग्निः**= இந்த ஆருணகேதுகம் என்ற அக்னியானது **कस्मात्**=யாதுகாரணம்பற்றி **चीयते**=அடுக்கப்படுகின்றது (**इति**=என்று) **ब्रह्मवादिनः**=வேதார்த்தத்தை விசாரஞ்செய்கின்ற மஹருஷிகள் **वदन्ति**=ஒருவரையொருவர் பிரச்னஞ் செய்துகொண்டனர். மந்திரோச்சாரணத்தை முன்னிட்டு கல்லையோ சிறிய மண் பாத்திரத்தில் ஜலத்தைக்கிரஹித்து அதையோ அடுக்குவதால் ஏற்படும் உருவத்திற்கும் "அக்னி" என்று பெயருண்டு. பிரகிருதஸ்தலத்தில் ஜலத்தினால் ஏற்படும் உருவம் "ஆருணகேதுகாக்னி" என்று சொல்லப்படுகின்றது. சயனம் என்ற கர்மம் நாசிகேதசயனம், ஸாவித்திரசயனம், சாதுர்ஹோத்திரியசயனம் என்று பலவாறாக இருக்கின்றது. அவற்றுள் ஆருணகேதுகசயனம் என்பதொன்று. இவ்வாருணகேதுகசயனம் தவிற மற்றச் சயனங்களில் மந்திரத்தைச்சொல்லிக் கல்லையடுக்கிய பிறகு அதனால் ஏற்படும் உருவத்தின்மேல் நெருப்பை மந்திர பூர்வகமாய் ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமாறாக ஆருணகேதுகசயனத்தில் நெருப்பை ஸ்தாபனஞ்செய்த பிறகு மறுபடியும் நான்கு பக்கங்களிலும் ஜலமயமானகற்களை ஸ்தாபனஞ் செய்யவேண்டுமென்று எக்காரணம்பற்றிச் சொல்



லப்படுகின்றது என்று பிரும்மவாதிகள் ஒருவரையொருவர் பிரச்னஞ்செய்து கொண்டனர். உத்தரம்—(**यस्मात्**=யாதுகாரணம் பற்றி) **अयम्**=இந்த நெருப்பு **साप्**=ஜலத்துடன் கூடியிருக்கின்றதோ (அதனால்) **प्रणीते**=நெருப்பை ஸ்தாபனஞ்செய்தபிறகு (**अग्निः**, **चीयते**=ஆருணகேதுகம் என்ற அக்னி அடுக்கப்படுகின்றது) முன்சொல்லியசமாதானமே திரும்பவும் தெளிவாகச் சொல்லப்படுகின்றது—**अप्सु हि**=ஜலத்திலல்லவா **अयम्**=இந்த நெருப்பு **चीयते**=வைக்கப்படுகின்றது. ஜலத்தின்மேல் பலகையைவைத்து அதன்மேல் நெருப்பை ஸ்தாபனஞ் செய்தாலும் பரம்பரையாய் ஜலத்திலேயே ஸ்தாபன்ஞ் செய்ததாயாகின்றதுபற்றி **अप्सुह्ययं चीयते** ஜலத்திலல்லவா ஸ்தாபிக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. (தா-ம்) மற்றச் சயனங்களில் நெருப்பு ஜலத்தின்மேல் ஸ்தாபிக்கப்படுவதில்லை. ஆருணகேதுக சயனத்தில் ஜலத்தின் மேல் ஸ்தாபிக்கப்படுகின்றது. ஆதலால் நெருப்பை ஸ்தாபனஞ்செய்த பிறகும் சில ஜலமயமான கற்களை நான்கு பக்கங்களிலும் ஸ்தாபனஞ் செய்யவேண்டும். (எ-று) (ப-ரை) நெருப்பை ஸ்தாபனஞ் செய்த பிறகும் நான்கு பக்கங்களிலும் ஜலமயமான கற்களை வைக்காவிடில் பாதகம் நேரிடுமென்று சொல்லுகிறார்— பின்னிட்டு ஜலமயமான கற்களை ஸ்தாபனஞ் செய்யாவிடில் **असौ**=இந்த நெருப்பு **अनाहिताग्निः**=நிலையற்றதாய்க்கொண்டு **भुवनेऽपि**=யாகபூமிக்கு வெளியிலும் **एताः**= சென்றுவிடும். மற்றச் சயனங்களில் ஸ்தாபிக்கப்படுகின்ற நெருப்புக்கு சமீபத்தில் ஜலமில்லாமையால் பயமேற்படுவதில்லை. ஆதலால் அது யாகபூமிக்கு வெளியில் சென்றுவிடாது. ஆருணகேதுகசயனத்திலோவெனில் சமீபத்தில் ஜலமிருப்பதால் அக்னி பயந்து வெளியில் சென்றுவிடும். அதை வளியேற விடாமல் தடுப்பதற்காகவே அக்னிஸ்தாபனமான பிறகும் சில ஜலமயமான கற்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. **तमभितः**=அந்த அக்னிக்கு நான்குபக்கங்களிலும் **एताः**=இந்த **अवीष्टकाः**=ஜலமயமானகற்களை **उपदधाति**=மந்திரத்தைச்சொல்லி ஸ்தாபனஞ் செய்யவேண்டும்.

अग्निहोत्रे दर्शपूर्णमासयोः । पशुबंधे चातुर्मास्येषु ।
अथो आहुः । सर्वेषु यज्ञक्रतुष्विति ॥

(ப - ரை) இந்த ஆருணகேதுக சயனமின்னின்ன கர்மத்திற் கங்கமாகின்றதென்று சொல்லப்படுகின்றது—**अग्निहोत्रे**=அக்னிஹோத்திரம் என்ற கர்மத்திலும் **दर्शपूर्णमासयोः**=தர்சபூர்ண மாஸம் என்ற கர்மத்திலும் **पशुबंधे**=பசுபந்தம் என்ற கர்மத்திலும் **चातुर्मास्येषु**=சாதுர்மாஸ்யம் என்ற கர்மத்திலும் (இதை யனுஷ்டிக்கலாம்) **सर्वेषु**=சமஸ்தமான **यज्ञक्रतुषु**–**यज्ञ**=யூபஸ்தம்பமற்றக் கர்மங்களிலும் **क्रतुषु**= யூபஸ்தம்பமுள்ள கர்மங்களிலும் இதை யனுஷ்டிக்கலாம் **इति**=என்று (**आहुः**=பிரும்மவாதிகள் சொல்லுகின்றனர்.)

(அ - கை) ஏழுவிதமான வினுவிடைகளால், "ஆருணகேதுகசயனம் அதிகபலனுள்ளது" என்று ஸ்தாபிக்கப்படுகின்றது. அவற்றுள் முதலாவது வினுவிடை காண்பிக்கப்படுகின்றது.

एतद्ध स्म वा आहुश्शंडिलाः । कमग्निं चिनुते ।
सत्रियमग्निं चिन्वानः । संवत्सरं प्रत्यक्षेण ॥

(ப - ரை) **शण्डिलाः**=சண்டிலர் என்ற மஹருஷியின் வம்சத்தில் பிறந்தவர்கள் **एतत्**=இந்த ஆருணகேதுகம் என்ற கர்மத்தின் பலத்தை (நிச்சயிப்பதற்காக) **आहुः**, **स्म**=ஒருவரையொருவர் பிரச்னஞ் செய்துகொண்டனர். **ह**, **स्म**, **वै**, என்ற மூன்று பதத்திற்கும் விசேஷமான அர்த்தங்கிடையாது. கேழ்வைக்குறியாக உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. பிரச்னம்—**सत्रियम्**=துவாதசாஹம் முதலிய "ஸத்திரம்" என்ற கர்மத்திற்கு அங்கமான *अग्निम्=மஹாக்னியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப் பலத்திற்குச்

---

* கல்லை யடுக்குவதால் ஏற்படும் உருவம் இங்குள்ள அக்னி என்ற பதத்தால் சொல்லப்படுகின்றது. இனிவரும் அக்னி என்ற பதத்திற்கு இடத்தை யனுசரித்து இப்பொருள் கொள்ளவேண்டும்.



சாதனமான **अग्निम्**=அக்னியை **चिनुते**=அடுக்கினவனாக ஆகின்றான். ஸத்திரம் என்ற கர்மாவுக்கு அங்கமாக அனுஷ்டிக்கப்படுகின்ற மஹாக்னி என்ற சயனத்தை யனுஷ்டித்தவன் எந்தப்பயனைப்பெறுவான்? உத்தரம்—**प्रत्यक्षेण**=நேராய் **संवत्सरम्**=சம்வத்ஸரம் என்ற பிரஜாபதியின் சாயுஜ்யத்தை யடைவதற்குச் சாதனமான அக்னியை (**चिनुते**=அடுக்கினவனாகின்றான்.) அந்த மஹாக்னியை யனுஷ்டிப்பவன் ஸம்வத்ஸரம் என்ற பிரஜாபதியின் சாயுஜ்யத்தையடைவான் என்று கருத்து.

कमग्निं चिनुते । सावित्रमग्निं चिन्वानः । अमुमादित्यं प्रत्यक्षेण ॥

(ப - ரை) இரண்டாவது வினுவிடை உபதேசிக்கப்படுகின்றது. பிரச்னம்—**सावित्रम्**=சாவித்ரம் என்ற **अग्निम्**=அக்கினியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்கினியை **चिनुते**=அடுக்கினவனாகின்றான்? சாவித்திரசயனானுஷ்டானத்தின் பயன் என்ன? உத்தரம்—**प्रत्यक्षेण**=நேராய் **अमुम्**=இந்த **आदित्यम्**=ஆதித்ய சாயுஜ்யத்தை யடைவதற்குச் சாதனமான அக்கினியை (**चिनुते**=அடுக்கினவனாகின்றான். சாவித்ரசயனத்தை யனுஷ்டித்தால் ஆதித்ய ஸாயுஜ்யத்தைப் பெறுவான் என்று கருத்து.

कमग्निं चिनुते । नाचिकेतमग्निं चिन्वानः । प्राणान्प्रत्यक्षेण ॥

(ப - ரை) மூன்ருவது வினுவிடை உபதேசிக்கப்படுகின்றது. பிரச்னம்—**नाचिकेतम्**= நாசிகேதம் என்ற **अग्निम्**=அக்கினியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்னியை **चिनुते**=அடுக்கினவனாகின்றான். நாசிகேதம் என்ற சயனானுஷ்டானத்தின் பயன் என்ன? உத்தரம்—**प्रत्यक्षेण**=நேராய் **प्राणान्**=வாயு சாயுஜ்யத்தை யடைவதற்குச் சாதனமான அக்னியை (**चिनुते**=அடுக்கினவனாகின்றான்) நாசிகேத சயனத்தை யனுஷ்டித்தவன் வாயு சாயுஜ்யத்தைப் பெறுவான் என்று கருத்து.

कमग्निं चिनुते। चातुर्होत्रियमग्निं चिन्वानः । ब्रह्म प्रत्यक्षेण ॥

(ப - ரை) நான்காவது வினாவிடை உபதேசிக்கப் படுகின்றது. பிரச்னம்—**चातुर्होत्रियम्**=சாதுர்ஹோத்திரியம் என்ற **अग्निम्**=அக்கினியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப் பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்கினியை **चिनुते**=அடுக்கினவனா யாகின்றான். சாதுர்ஹோத்திரியம் என்ற சயனத்தை யனுஷ்டிப்பதற்கு என்ன பலன்? உத்தரம்—**प्रत्यक्षेण**=நேரில் **ब्रह्म**=வேதபுருஷனின் சாயுஜ்யத்தை யடைவதற்குச் சாதனமான அக்கினியை (**चिनुते** = அடுக்கினவனா யாகின்றான்.) சாதுர் ஹோத்திரியம் என்ற சயனத்தை யனுஷ்டித்தவன் வேதபுருஷனின் சாயுஜ்யத்தைப் பெறுவான் என்று கருத்து.

कमग्निं चिनुते। वैश्वसृजमग्निं चिन्वानः। शरीरं प्रत्क्षेण।

(ப - ரை) ஐந்தாவது வினாவிடை உபதேசிக்கப்படுகின்றது. பிரச்னம்—**वैश्वसृजम्**=வைச்வஸிருஜம் என்ற **अग्निम्**=அக்கினியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்னியை **चिनुते**=அடுக்கினவனா யாகின்றான். வைச்வஸிருஜம் என்ற சயனத்தை யனுஷ்டித்தவன் எந்தப்பயனை யடைகிறான்? உத்தரம்—**प्रत्क्षेण** = நேராய் **शरीरम्**=ஹிரண்யகர்ப்பரின் சரீரத்தை யடைவதற்குச் சாதனமான அக்கினியை (**चिनुते**=அடுக்கினவனா யாகின்றான்.) பிரும்மாண்டத்தையே சரீரமாகவுடைய ஜீவன் ஹிரண்யகர்ப்பன் எனப்படுவன். அந்த ஸ்தானத்தை வைச்வஸிருஜம் என்ற சயனத்தை யனுஷ்டித்தவன் பெறுவான் என்று கருத்து.

कमग्निं चिनुते। उपानुवाक्यमाशुमग्निं चिन्वानः। इमान् लोकान् प्रत्यक्षेण

(ப - ரை) ஆறாவது வினாவிடை உபதேசிக்கப்படுகின்றது. பிரச்னம்—**आशुम्**=சீக்கிரமாய் பலனைத்தருகின்றதாயும் **उपानुवाक्यम्**=உபானுவாக்யகாண்டம் என்றதில் சொல்லப்பட்டதாயுமிருக்கிற **अग्निम्**=அக்கினியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப் பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்னியை **चिनुते**=அடுக்கினவனா யாகின்றான். உபானுவாக்யம் என்ற காண்டத்தில் படிக்கப்பட்ட சயனத்தை யனுஷ்டிப்பவன் எவ்விதப்பயனை யடைகிறான்? உத்தரம்—**प्रत्यक्षेण**=நேராய் **इमान्**=இந்த **लोकान्** = லோகங்களை யடைவதற்குச் சாதனமான அக்னியை (**चिनुते**=அடுக்கினவனா யாகின்றான்.) உபானுவாக்ய காண்டத்தில் படிக்கப்பட்ட சயனத்தை யனுஷ்டித்தவன் எல்லா லோகங்களையு மடைவான்.



कमग्निं चिनुते। इममारुणकेतुकमग्निं चिन्वान इति ॥
य एवासौ। इतश्चाऽमुतश्चाऽव्यतीपती। तमिति ॥

(ப - ரை) ஏழாவது வினாவிடை உபதேசிக்கப்படுகின்றது. பிரச்னம்—**इमम्** = இந்த **आरुणकेतुकम्** = ஆருணகேதுகம் என்ற **अग्निम्**=அக்னியை **चिन्वानः**=அடுக்கினவன் **कम्**=எந்தப் பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=அக்னியை **चिनुते**=அடுக்கினவனா யாகின்றான் **इति**=என்று (**आहुः**=பிரச்னஞ்செய்து கொண்டனர்.) ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவன் எவ்விதப்பயனை யடைவான்? உத்தரம்—**इतः च**=இந்த லோகத்தையும் **अमुतः च**=சுவர்க்க லோகத்தையும் **यः**, **असौ**=எந்தச்சூரியன் **एव**=நிச்சயமாய் **अव्यतीपाती**=அதிக்கிரமிக்கிறதில்லையோ **तम्**=அந்தச் சூரியனை யடைவதற்குச் சாதனமான அக்னியை (**चिनुते**=அனுஷ்டித்தவனா யாகின்றான்) **इति**=என்று (**प्रत्यवादिषुः**=பதில் சொன்னார்கள்.) ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவன் பூலோகம் சுவர்க்கலோக மிவைகட்கு வெளிச்சத்தை கொடுத்துக்கொண்டு சஞ்சரிக்கின்ற சூரியனின் சாயுஜ்யத்தைப்பெறுவான் என்று கருத்து.

योऽग्नेर्मिथूया वेद। मिथुनवान् भवति।
आपो वा अग्नेर्मिथूयाः। मिथुनवान् भवति। य एवं वेद ॥

(ப - ரை) ஆருணகேதுகம் என்ற அக்னி ஜலத்தினாலனுஷ்டிக்கப்படுகின்றது என்று முன்சொல்லி இருக்கிறோம். அதை யொட்டி ஜலத்திற்கும் ஆருணகேதுகம் என்ற அக்னிக்கும் நேருகின்ற' சம்பந்தத்தை யறிவதை ஸ்துதிக்கிறார்—**यः**=எவன் **अग्नेः**=ஆருணகேதுகம் என்ற அக்னியுடன் **मिथूयाः**=சேர்ந்திருக்

கின்றதை **वेद**=அறிவனே (**सः**=அவன்) **मिथुनवान्**=பத்தினியின் பிரிவை யடையாதவனுக **भवति**=ஆகின்றான். **आपः वा**=ஜலம் **अग्नेः** = அக்னியுடன் **मिथूयाः**=சேர்ந்திருக்கின்றது. **यः** = எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனே (**सः**=அவன்) **मिथुनवान्**=பத்தினியின் பிரிவைபடையாதவனுக **भवति**=ஆகின்றான்.

वेद भवत्यायतनमायतनवान्भवति वेद वेद तिष्ठति गुल्फदघ्नं चातुर्मास्येष्व सुमादित्यं प्रत्यक्षेण कमग्निं चिनुत उपानुवाक्यमाशुमग्निं चिन्वानो मिथूया मिथुनवान् भवत्येकं च ॥ पुष्पमग्निर्वासुरसौ वै तपन्चन्द्रमा नक्षत्राणि पर्जन्यः संवत्सरस्तिष्ठति सवित्रियꣳसंवत्सरꣳसावित्रममुं नाचिकेतं प्राणाꣳश्चातुर्होत्रियं ब्रह्म वैश्वसृजꣳशरीरमुपानुवाक्यमाशुमिमान् लोकानिममारुणकेतुकं य एवासौ ॥ இது இவ்வனுவாகத்தின் கோவை.

அடிமுதல் 89 பஞ்சா சத்துகளாகின்றன.

இருபத்திரண்டாவது அனுவாகம் முற்றிற்று.

---

## இருபத்திமுன்ருவது அனுவாகம்.

(அ - கை) இவ்வனுவாகத்தினுலும் சிருஷ்டியை உபன்யசித்தல் வாயிலாக ஆருணகேதுகம் என்ற சயனமும், அதை யனுஷ்டிப்பதற்குச் சாதனமான ஜலமும் ஸ்துதிக்கப்படுகின்றது—

आपो वा इदमासीत्सलिलमेव । स प्रजापतिरेकः पुष्करपर्णे समभवत् । तस्यान्तर्मनसि कामस्समवर्तत । इदꣳसृजेयमिति । तस्माद्यत्पुरुषो मनसाभिगच्छति । तद्वाचा वदति । तत्कर्मणा करोति । तदेषाऽभ्यनूक्ता ॥

(ப - ரை) **इदम्**=நம்மால் நேரில் பார்க்கப்படுகின்ற இந்த லோகம் (உண்டாவதற்குமுன்) **आपः, वा**=ஜலமயமாகவே **आसत्**=இருந்தது. ஐந்து பூதங்களின் காரியமான தேவன், மனுஷ்யன், பசு, பக்ஷி, செடி, கொடி, மரம் முதலியன வொன்றுமில்லை. ஜலத்தைத்தவிர்த்து பிருதிவீ, தேஜஸ் முதலிய மஹா பூதங்கள்கூட அச்சமயத்திலில்லை என்று உபதேசிப்பதற்காக **सलिलमेव** என்றபதம் போடப்பட்டது. ஜலந்தானிருந்தது என்று அதன்பொருள். **पुष्करपर्णे**=தாமரையிலையில் **सः, प्रजापतिः**=பிரசித்தரான பிரஜாபதி என்ற தேவன் **एकः**=தனிமையாகவே **समभवत्**=ஆவிர்பாவமடைந்து வஸித்துவந்தார். அந்த ஜலத்தில் ஓர் தாமரையிலையைத்தெப்பமாக ஏற்படுத்திக்கொண்டு பிரஜாபதி என்ற தேவன் ஆவிர்பாவமடைந்தார். **इदम्**=இந்த ஜகத்தை **सृजेयम्**=மறுபடியும் சிருஷ்டிப்போம் **इति**=என்று **तस्य**=அவருடைய **मनसि, अन्तः**=மனத்தின்நடுவில் **कामः**=சங்கல்பம் (விருப்பம்) **समवर्तत**=உண்டாயிற்று. **तस्मात्**=ஜகத்சிருஷ்டி ஏற்படுவதற்குமுன் சங்கல்பம் ஏற்பட்டபடியாலேயே **पुरुषः**=பிரஜாபதியின் வம்சத்தில் பிறந்த மனிதன் **यत्**=எதை **मनसा**=மனத்தினுல் **अभिगच्छति**=விரும்புகிறானே **तत्**=அதை **वाचा**=வாக்கினுல் **वदति** = சொல்லுகிறான். **तत्**=அதை **कर्मणा**=செய்கையினுல் (சரீர வியாபாரத்தினுல்) **करोति**=செய்கிறான். பிரஜாபதி என்ற தேவனுக்கு வாக், சரீரம், இவைகளில் அவையவைகட் கனுகுணமான பிரவிருத்தி ஏற்படுவதற்குமுன் சங்கல்பமுண்டானபடியாலேயே அவருடைய சந்ததியில் பிறந்த ஒவ்வொரு ஜீவனுக்கும் வாக் சரீரமிவைகளில் பிரவிருத்தியுண்டாவதற்குமுன் சங்கல்பமுண்டாகின்றது. **तत्**=பிரஜாபதிக்குச் சங்கல்பம்தான் முதலிலுண்டாயிற்று என்ற விஷயத்தில் **एषा**=பின்படிக்கப்படுகின்ற ஒரு ருக்கும் **अभ्यनूक्ता**=வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. அந்தருக் பின்வருமாறு—



कामस्तदग्रे समवर्तताधि । मनसो रेतः प्रथमं यदासीत् ।
सतो बंधुमसति निरविन्दन् । हृदि प्रतीष्या कवयो मनीषेति ॥

(ப - ரை) **तत्**=சிருஷ்டிகாலத்தில் (**प्रजापतेः**=பிரஜாபதிக்கு) **अग्रे**=முதலில் **कामः**=எல்லாலோகத்தையும் சிருஷ்டிப்போம் என்ற சங்கல்பம் **अधिसमवर्तत**=உண்டாயிற்று. **यत्**=எந்தச்சங்கல்பம் **मनसः**=மனத்தினுடைய **प्रथमम्**=முதலாவதான **रेतः**=காரியமாக **आसीत्**=இருந்ததோ. முன்படைத்த லோகம் ஜகத்திற்குக் காரண

மான அவ்யக்தத்தினிடம் லயமடைந்தபிறகு சிருஷ்டிக்கப்பட வேண்டிய பிராணிகளின் கர்மங்கள் பயன் கொடுப்பதற்காக தலைக்கிளப்பும்பொழுது பிரஜாபதி மறுபடியும் ஜகத்தைப் படைப்போம் என்று சங்கல்பித்தார். **मनीषा**=மனத்தைத் தன்வசமாக்கிக் கொண்டவர்களும் **कवयः**=எல்லாவற்றையு மறிந்தவர்களுமான பிரஜாபதிகள் **हृदि**=மனத்தில் **प्रतीष्य**=சிருஷ்டிக்கவேண்டிய ஒவ்வொரு வஸ்துவையும்பற்றி நிர்ணயஞ் செய்துகொண்டு **सतः**=சூக்ஷ்மரூபமாயிருக்கின்ற ஜகதிற்கு**बन्धुम्**=ஸ்தூலரூபத்தை யடைவிப்பதற்குக்காரணமான சங்கல்பத்தை **असति**=அவ்யக்தம் என்ற ஜகத்காரணத்தினிடம் **निरविन्दन्**=அடைந்தனர். இந்தச் சிருஷ்டி ஏற்படும் காலத்திலுள்ள பிரஜாபதி மட்டும் சங்கல்பத்தை முதலில் செய்தார் என்பதில்லை. இதற்குமுன் ஏற்பட்டுள்ள ஒவ்வொரு சிருஷ்டியிலுமிருந்த அந்தந்தப் பிரஜாபதிகள் முதலில் 'ஜகத்காரணமான அவ்யக்தத்தினின்றும் ஜகத்தையுண்டு பண்ணுவோம்' என்றே சங்கல்பம் செய்தனர் என்று கருத்து. மந்திரத்தின் முடிவைக் காண்பிப்பதற்காக **इति**=என்றபதம் போடப்பட்டிருக்கிறது.

उपैनं तदुपनमति। यत्कामो भवति। य एवं वेद ॥

(ப - ரை) மேற்சொல்லியபடி காமனையின் மஹாத்மியத்தையறிதலை ஸ்துதிக்கின்றார்—**यः**=எந்தமனிதன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனோ (**सः**=அந்தமனிதன்) **यत्कामः**=எந்தவஸ்துவில் விருப்பமுள்ளவனாக **भवति** ஆகின்றானோ **एनम्**=அம்மனிதனை **तत्**=அந்த விரும்பியபொருள் **उप**=சமீபகாலத்திற்குள் **उपनमति**=சமீபதேசத்தை வந்தடைந்து விடுகிறது. மேற்சொல்லிய பிரகாரம் சங்கல்ப மாஹாத்மியத்தை யறிந்தவன் எந்தப்பொருளை விரும்புகிறானோ அதை சமீபகாலத்திற்குள் தனது சமீபதேசத்திலேயேப் பெற்றுவிடுவான்.

स तपोऽतप्यत। स तपस्तप्त्वा। शरीरमधूनुत। तस्य यन्मांसमासीत्। ततोऽरुणाः केतवो वातरशना ऋषय उदतिष्ठन्। ये नखाः। ते वैखानसाः। ये वालाः। ते वालखिल्याः। यो रसः। सोऽपाम्।



(ப - ரை) **सः**=அந்தபிரஜாபதி **तपः**=நாம் சிருஷ்டிக்கவேண்டிய பொருள்களை எந்தெந்த விதமாகச் சிருஷ்டிக்கவேண்டுமென்ற ஆலோசனையை **अतप्यत**=செய்தார். **सः**=அவர் **तपः**=ஆலோசனையை **तप्त्वा**=செய்து **शरीरम्**=சரீரத்தை **अधूनुत**=அசக்கினார். **तस्य**=அந்தப் பிரஜாபதியின் சரீரத்தினுடைய **यन्मांसम्**=எந்த மாம்ஸம் **आसीत्**=இருந்ததோ **ततः**=அதனின்றும் **अरुणाः**='அருணர்' என்றுப்பெயருள்ள **ऋषयः**=ருஷிகளும் **केतवः**='கேது' என்றுப் பெயருள்ள ருஷிகளும் **वातरशनाः**='வாதரசனர்' என்றுப் பெயருள்ள ருஷிகளும் **उदतिष्ठन्**=உண்டாயினர். பிரஜாபதி என்ற தேவன், தான் எதை மனத்தால் நினைக்கிறானோ அதை அவ்விதமே படைப்பதற்குச் சக்திவாய்ந்த வனாகையால் அவனது சங்கல்பத்தையொட்டி அந்தந்த வஸ்துக்களுண்டாகலாம். ஆதலால் மாம்ஸத்தினின்றும் எவ்விதம் ருஷிகளுண்டாகக் கூடுமென்ற சந்தேஹத்திற்கிடமில்லை. **ये**=எந்த **नखाः**=நகங்களுண்டோ **ते**=அவைகள் **वैखानसाः**='வைகாநஸர்' என்றுப்பெயருள்ள ருஷிகளாக(**अभवन्**=ஆயின) பிரஜாபதியின் நகத்தினின்றும் 'வைகானஸர்' என்ற மஹருஷிகளுண்டாயினர். **ये**=பிரஜாபதியின் சரீரத்திலிருக்கின்ற எந்த **वालाः**=உரோமங்களுண்டோ **ते**=அவைகள் **वालखिल्याः**='வாலகில்யர்' என்ற மஹருஷிளாக (**अभवन्**=ஆயின) **यः**=பிரஜாபதியின் சரீரத்தினுடைய எந்தச் சாராம்சமுண்டோ **सः**=அது **अपाम्**=ஜலத்தின் நடுவில் (**कूर्मोऽभूत्**=ஆமையாக ஆயிற்று.) அந்தந்த அங்கங்களினின்று மவரவர்களுண்டாயினர் என்று கருத்து.

अन्तरतः कूर्मं भूतꣳसर्पन्तम्। तमब्रवीत्। मम वै त्वङ्माꣳसा। समभूत्। नेत्यब्रवीत्। पूर्वमेवाहमिहासमिति। तत्पुरुषस्य पुरुषत्वम्। स सहस्रशीर्षा पुरुषः। सहस्राक्षः सहस्रपात्। भूत्वोदतिष्ठत्। तमब्रवीत्। त्वं वै पूर्वꣳसम-भूः। त्वमिदं पूर्वः कुरुष्वेति॥

(ப - ரை) ஆமைரூபமாயவதரித்த பரமாத்மாவிற்கும், பிரஜாபதிக்கும் நடந்த சம்பாஷணை உபதேசிக்கப்படுகின்றது—**अन्तरतः**=ஜலத்தின் மத்தியில் **कूर्मम्**=ஆமையாக **भूतम्**=அவதரித்தவரும் **सर्पन्तम्**=அங்குமிங்கும் சஞ்சரிக்கின்றவருமான **तम्**=அந்தப்

பரமபுருஷனை (प्रजापतिः=பிரஜாபதி) मम=என்னுடைய त्वङ्मांसा=தோல் மாம்ஸம் (இவைகளின் சராம்சத்தினின்றும்) समभूत्=நீ உண்டானாய் (इति=என்று) अब्रवीत्=சொன்னார். அப்பொழுது அந்த ஆமை न इति=இல்லை என்றும், पूर्वमेव=முன்னமேயே इह இவ்விடத்தில் अहम्=நான் आसम्=இருந்தேன் इति என்றும் अब्रवीत्=சொல்லிற்று. "நான் உனது சரீரத்தினின்று முண்டாகவில்லை. எனது ஆமைவடிவமான இச்சரீரமே யுண்டாயிற்று. நானோவெனில் எங்கும் எப்பொழுது மிருக்கின்ற சைதன்ய ஸ்வரூபமாயிருப்பதால் உமது சரீரத்தினின்று மிந்த ஆமைவடிவம் உண்டாவதற்கு முன்னமேயும் உனது சரீரமுண்டாவதற்கு முன்னமேயும் இங்குஇருந்தவனே" என்று ஆமை ப்ரஜாபதியைப் பார்த்துச் சொல்லிற்று. तत्=அவ்விதம் சொன்னபடியால் (முன்னமேயே இருந்தேன் என்று சொன்னபடியால்) पुरुषस्य=பரமாத்மாவிற்கு पुरुषत्वम्='புருஷ' என்றப்பெயர் (உண்டாயிற்று.) இவ்விதம் சொல்லி सः=அந்த ஆமையின் சரீரத்திலிருக்கின்ற पुरुषः=பரமாத்மா (தனது மஹாத்மியத்தை வெளியிடுவதற்காக) सहस्रशीर्षा=ஆயிரக் கணக்கான சிரஸ்ஸையுடையவராகவும் सहस्राक्षः=ஆயிரக்கணக்கான கண்களையுடையவராகவும் सहस्रपात्=ஆயிரக்கணக்கான பாதங்களையுடையவராகவும் भूत्वा=ஆகி उदतिष्ठत्=ஆவிர்ப்பாவத்தையடைந்தார். 'விராட்' என்று சொல்லப்படும் ரூபத்தை ஸ்வீகரித்துக்கொண்டார். அந்த விராட் ரூபத்தைக் கண்டு பிரஜாபதி சொல்லுகிறார்—पूर्वम्=எனது சரீரமுண்டாவதற்கு முன்னமேயும் त्वंवै=நீர்தான் समभूः=இருந்தீர். (अतः=ஆகையால்)पूर्वः=எனது சரீரமுண்டாவதற்கு முந்தியுமிருக்கின்ற त्वम्=நீர் इदम्=இந்த எல்லாலோகத்தையும் कुरुष्व=சிருஷ்டி செய்யும் इति=என்று तम्=அந்த ஆமைவடிவமான பரமாத்மாவை अब्रवीत्=பிரஜாபதி சொன்னார்.

१स इत आदायापः। अञ्जलिना पुरस्तादुपादधात्। एवाह्येवेति। तत आदित्य उदतिष्ठत्। सा प्राचीदिक्। २अथाऽरुणःकेतुर्दक्षिणत उपादधात। एवाह्यग्ने इति! ततो वा अग्निरुदतिष्ठत्। सा दक्षिणा दिक्। ३ अथारुणः केतुः



पश्चादुपादधात्। एवाहि वायो इति। ततो वायुरुदतिष्ठत्। सा प्रतीचीदिक्। ४ अथारुणः केतुरुत्तरत उपादधात्। एवाहीन्द्रेति। ततो वा इन्द्र उदतिष्ठत्। सोदीची दिक्। ५ अथारुणः केतुर्मध्य उपादधात्। एवाहि पूषन्निति। ततो वै पूषोदतिष्ठत्। सेयं दिक्। ६ अथारुणः केतुरुपरिष्टादुपादधात्। एवाहि देवा इति। ततो देवमनुष्याः पितरः। गन्धर्वाप्सरसश्चोदतिष्ठन्। सोर्ध्वा दिक्॥

(ப - ரை) இவ்விதம் பிரஜாபதி ஆமையின் வடிவமெடுத்து வந்த பரமேசுவரனைப்பார்த்துச் சொன்னவுடன் அந்தப் பரமேசுவரன் எவ்விதம் லோகத்தைப்படைத்தாரோ அம்முறை உபதேசிக்கப்படுகின்றது—(1)सः=அந்தவிராட் ரூபமெடுத்த பரமேசுவரன் इतः=லோகங்களுண்டாவதற்கு முன்னிருந்த மஹா ஜலத்தினின்றும் अञ्जलिना=அஞ்சலியால் (ஜலந்தேங்கும்படி இரண்டு கைகளையும் சேர்த்துவைத்துக்கொள்வது 'அஞ்சலி' எனப்படும்) अपः=ஜலத்தை आदाय=எடுத்து पुरस्तात्=கிழக்குதிசை என்றப்பெயரை யடையப்போகின்றதிக்கில் (சிருஷ்டிக்குமுன் கிழக்கு மேற்கு முதலிய திக்கின் பிரிவினைகள் கிடையாதாகையால் 'கிழக்குதிசையில் ஜலத்தை யள்ளிவிட்டார்' என்று சொல்வது பொருந்தாமல் போய்விடும். அதற்காக இவ்விதம் பொருள் கொள்ளப்பட்டது.) एव="சஞ்சரிக்கும் சுவபாவமுடைய ஓ சூரியனே एवाहि=கிளம்பிவருவாயாக" इति=என்றுசொல்லி उपादधात्=விட்டார். ततः=இவ்விதம் தீர்த்தத்தை விட்டதிலிருந்து आदित्यः=சூரியன் उदतिष्ठत्=உண்டானான். सा=அந்தச் சூரியனுண்டானதிசை प्राचीदिक्=கிழக்குதிசையாக अभूत्=ஆயிற்று (தா - ம்) விராட் புருஷன் சிருஷ்டிக்கத் தொடங்கும் பொழுது ஜலத்தைத் தவிர்த்து வேறு ஒன்றுமே கிடையாதாகையால் இரண்டு கைகளிலும் ஜலத்தை எடுத்து ஏதோ ஒரு திசையில் விட்டார். அதனின்றும் சூரியனுண்டானான். எந்தத்திசையிலிருந்துச் சூரியனுண்டானானோ அந்தத்திசை "கிழக்குதிசை" என்றப் பெயரை யடைந்தது. (எ - று) இவ்விதமே பின்வரும் மந்திரங்களிலும் கருத்துக்கொள்ள வேண்டும். (2) अथ=பிறகு आरुणःकेतुः=ஆருணகேதுகம்

என்ற கர்மத்தால் ஆராதிக்கப்படுகின்ற அந்த விராட்புருஷன் (கையில் ஜலத்தை எடுத்து) दक्षिणतः=தெற்குதிசை என்றப் பெய ரையடையப் போகின்ற திசையில் "अग्ने=ஓ அக்னியே एवाहि=கிளம்பிவருவாயாக" इति=என்று சொல்லி उपादधात्=விட்டார். ततः=அதனின்றும் अग्निः=அக்னி उदतिष्ठत्=உண்டானான் सा=அந் தத்திசை दक्षिणा दिक्=தெற்குதிசையாக (अभूत्=ஆயிற்று) वா என்றபதத்திற்கு விசேஷார்த்த மொன்றும் கிடையாது (3) अथ= பிறகு आरुणः केतुः=ஆருணகேதுகம் என்ற கர்மத்தாலாராதிக்கப் படுகின்ற அந்த விராட் புருஷன் (கையில் ஜலத்தை எடுத்து) पश्चात्=மேற்குதிசை என்றப்பெயரை யடையப்போகின்ற திசை யில் "वायो=ஓ வாயுவே एवाहि=கிளம்பி வருவாயாக" इति=என் றுசொல்லி उपादधात्=விட்டார். ततः=அதனின்றும் वायुः=வாயு என்றதேவன் उदतिष्ठत्=உண்டானான். सा=அது प्रतीची दिक्= மேற்கு திசையாக (अभूत=ஆயிற்று) (4) अथ=பிறகு आरुणःकेतुः= ஆருணகேதுகம் என்ற கர்மத்தினாலாராதிக்கப்படுகின்ற அந்த விராட் புருஷன் (கையில் ஜலத்தை எடுத்து) उत्तरतः=வடக்கு திசை என்றப் பெயரை யடையப்போகின்ற திசையில் "इन्द्र=ஓ இந்திரனே! एवाहि=கிளம்பிவருவாயாக" इति=என்று சொல்லி उपादधात्=விட்டார். ततः=அதனின்றும் इन्द्रः=இந்திரன் उदतिष्ठत्= உண்டானான். सा=அது उदीची दिक्=வடக்குதிசையாக (अभूत= ஆயிற்று) (5) अथ=பிறகு आरुणः केतुः=ஆருணகேதுகம் என்ற கர்மத்தாலாராதிக்கப்படுகின்ற அந்த விராட்புருஷன் (கையில் ஜலத்தை எடுத்து) मध्ये=இந் நான்குதிக்குகளின் மத்தியில் "पूषन्= ஓ பூஷா என்ற தேவனே! एवाहि=கிளம்பி வருவாயாக" इति= என்றுசொல்லி उपादधात्=விட்டார். ततः=அதனின்றும் पूषा= பூஷா என்ற தேவன் उदतिष्ठत्=உண்டானான். सा=அது इयं दिक्= கீழ்திசையாக (अभूत्=ஆயிற்று) (6) अथ=பிறகு आरुणः केतुः= ஆருணகேதுகம் என்ற கர்மத்தா லாராதிக்கப்படுகின்ற அந்த விராட்புருஷன் (கையில் ஜலத்தை எடுத்து) उपरिष्टात्=மேலே "देवाः=ஓ தேவர்களே! एवाहि=கிளம்பி வாருங்கள்" इति=என் று சொல்லி उपादधात्=விட்டார். ततः=அதனின்றும் देवमनुष्याः= தேவர்களும் மனிதர்களும், पितरः=பிதுருக்களும் गन्धर्वाप्सरसश्च=



கந்தர்வன் அப்ஸரஸ் இவர்களும் उदतिष्ठन्=உண்டாயினர். सा= அது ऊर्ध्वा दिक्=மேல்திசையாக (अभूत्=ஆயிற்று)

सो विप्रुषो विपरापतन्। ताभ्योऽसुरा रक्षांसि पिशाचाश्चोदतिष्ठन्। तस्मात्ते पराभवन्। विप्रुड्भ्यो हि ते समभवन्। तदेषाभ्यनूक्ता ॥

(ப - ரை) தேவர்களின் சிருஷ்டியைச் சொல்லி அசுரர்களின் சிருஷ்டி சொல்லப்படுகின்றது—याः=எந்த विप्रुषः=ஜலத்திவலைகள் विपरातन्=நான்கு பக்கங்களிலும் சிதறி விழுந்தனவோ ताभ्यः= அவைகளினின்றும் असुराः=அசுரர்களும் रक्षांसि=ராக்ஷஸர்களும் पिशाचाश्च=பிசாசங்களும் उदतिष्ठन्=உண்டாயினர். तस्मात्=சித றுண்ட ஜலத்தினின்றுமுண்டானபடியால் ते=அந்த அசுரர் முத லியவர்கள் पराभवन्=கீழ்பட்ட நிலையையடைந்தனர். ते=அவர் கள் विप्रुड्भ्यो हि=ஜலத்திவிலைகளினின்றுமல்லவா समभवन्=உண் டாயினர். तत्=ஜலத்தினின்றும் எல்லாமுண்டாயிற்று என்ற விஷ யத்தில்एषा=பின் படிக்கப்படுகின்ற ஒரு ருக்கும் अभ्यनूक्ता=வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது.

(தா - ம்) விராட்புருஷன் கைகளில் ஜலத்தை எடுத்து அந்த ந்தத் திசைகளில் விடும்பொழுது நான்குபக்கங்களிலும் சிறியது ளிகள் சிதறி விழுந்தன. அதனின்றும் அசுரர்களும், ராக்ஷஸர்க ளும், பிசாசங்களும் உண்டாயினர். சிதறுண்ட ஜலத்தினின்று முண்டானபடியால் அவர்கள் கீழ்பட்டவர்களாயாயினர். ஜலத்தி னின்றுமே எல்லாமுண்டாயிற்று என்றதைப்பற்றி ஒருருக்கும் வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. ஜலத்தின் மஹிமை இத்தகையது. (எ - று) வேறுசாகையில் படிக்கப்பட்டுள்ள ருக் கைக்காண்பிக்கிறார்—

अपो ह यद्बृहतीर्गर्भमायन्। दक्षं दधाना जनयन्तीः स्वयंभुम्। तत इमेऽध्यसृज्यन्त सर्गाः। अद्भ्यो वा इदंसमभूत्। तस्मादिदंसर्वं ब्रह्म स्वयंभ्विति ॥

(ப - ரை) **दक्षम्**=சர்வவல்லமையுள்ள **स्वयंभुम्** = ஆமையின் வடிவமெடுத்த பரமாத்மாவை **जनयन्तीः**=ஆவிர்பாவமடையும்படிச் செய்ததாயும், **दधानाः**=தரிக்கின்றதாயுமிருக்கிற **बृहतीः आपः**=மஹா ஜலம் **यत्**=எந்த ஜகத்தை **गर्भम्**=கர்பமாக **आयन्**=அடைந்ததோ (**ते**) **सर्गाः**=அந்த ஜகத்துக்கள் **ततः**=அந்தப்பரமேசுவரனால் **अभ्यसृज्यन्त**=படைக்கப்பட்டன. **इदम्**=நம்மால் நேரில் பார்க்கப்படுகின்ற ஜகத்து **अद्भ्योवा**=ஜலத்தினின்றும் தான் **समभूत्**=உண்டாயிற்று **तस्मात्**=ஆகையினால் **इदं सर्वम्**=இந்த லோகமெல்லாம் **स्वयंभु**=நித்தியமான **ब्रह्म**=பிரும்மமாகவே (இருக்கின்றது) **इति**=என்று வேறுசாகையில் படிக்கப்பட்டிருக்கிறது.

(தா - ம்) ஜகத்துக்கள் படைக்கப்படுவதற்கு முன்னிருந்த ஜலத்திற்கு "மஹாஜலம்" என்று பெயர். அதில் எல்லாலோகங்களும் சூக்ஷ்மமான நிலையிலடங்கிக்கிடந்தன. அச்சமயத்தில் சர்வவல்லமையுள்ள பரமேசுவரன் விராட்ரூபமாய் ஆவிர்பாவமடைந்து இந்தலோகங்களைப் படைத்தார். (எ - று) **अद्भ्योवाइदꣳसमभूत्** என்பது பிராம்மண வாக்கியமாக இருந்தபோதிலும் மந்திரத்தின் கருத்தை வெளியிடுவதற்காக நடுவிலேயே படிக்கப்பட்டிருக்கிறது.

तस्मादिदꣳसर्वं शिथिलमिवाध्रुवमिवाभवत्। प्रजापतिर्वाव तत्।
आत्मनात्मानंविधाय। तदेवानुप्राविशत्। तदेषाभ्यनूक्ता॥

(ப - ரை) **तस्मात्**=ஆகையினால் **इदं सर्वम्**=இந்தலோகம் யாவும் **शिथिलमिव**=உறுதியற்றதாகவே **अभवत्**=ஆயிற்று. **शिथिलमिव** என்றபதத்தின் பொருளை விளக்குவதற்காக **अध्रुवमिव** என்ற பதம் போடப்பட்டிருக்கிறது. பொருள் ஒன்றே. உறுதியற்ற ஜலத்தினின்று முண்டான உலகங்கள்யாவும் உறுதியற்றவைகளாயும் கார்யத்திற்கு உபயோக மற்றவைகளாயு மிருந்தன. அச்சமயத்தில் பிரஜாபதி அவைகளில் பிரவேசித்து உறுதியைக் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது—**प्रजापतिः वाव**=பிரஜாபதி



**आत्मना**=தனது சாமர்த்யத்தினால் **आत्मानम्**=தனதுசரீரமான உலகத்தை **विधाय**=படைத்து **तत्**=அப்பொழுது **तदेव**=அந்த ஜகத்தையே **अनुप्राविशत्**=ஜீவரூபமாய் பிரவேசித்தார். பிரஜாபதி தனது சக்தியால் ஜகத்திற்கு நாமரூபாம்சத்தைக் கொடுத்துத் தானே அவைகளில் ஜீவரூபமாய்ப் பிரவேசித்தார். அதனால் அதற்கு உறுதி ஏற்பட்டது. **तत्**=இதைப்பற்றி **एषा**=பின் படிக்கப்படுகின்ற ஒருருக்கும் **अभ्यनूक्ता**=வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. அந்தருக்கு பின்வருமாறு—

विधाय लोकान्विधाय भूतानि। विधाय सर्वाः प्रदिशो दिशश्च।
प्रजापतिः प्रथमजा ऋतस्य। आत्मनात्मानमभिसंविवेशेति॥

(ப - ரை) **ऋतस्य**=முக்காலங்களினு மிருக்கிற பரப்பிரும்மத்தினுடைய (**सकाशात्**=சமீபத்திலிருந்து) **प्रथमजा**=முதலிலுண்டானவரான **प्रजापतिः**=பிரஜாபதி என்றதேவன் **लोकान्**=பூமி, அந்தரிக்ஷம் முதலியலோகங்களை **विधाय**=படைத்தும், **भूतानि**=பிராணிகளை **विधाय** = படைத்தும், **सर्वाः**=சமஸ்தமான **प्रदिशः**=கிழக்கு, தெற்கு முதலிய மஹாதிக்குகளையும் **दिशश्च**=தென்கிழக்கு, தென்மேற்கு முதலிய மூலைதிக்குகளையும் **विधाय**=படைத்தும் **आत्मानम्**=தனது சரீரமான ஜகத்தை **आत्मना**=தனது சித்சக்தியால் **अभि**=எங்கும் **संविवेश**=பிரவேசித்தார் **इति**=என்றவாறு.

(அ - கை) மேற்சொல்லிய பிரகாரம் ஜகத் சிருஷ்டியையறிதலை ஸ்துதிக்கிறார்—

सर्वमेवेदमाप्त्वा। सर्वमवरुध्य। तदेवानुप्रविशति। य एवं वेद॥

(ப - ரை) **यः**=எவன் **एवम्**=மேற்சொல்லிய பிரகாரம் பிரஜாபதியின் சிருஷ்டியை **वेद**=அறிவனோ **सः**=அவன் **सर्वमेव**=சமஸ்தமான **इदम्**=லோகத்தில் நேரில் காணப்படுகின்ற பலன்களை **आप्त्वा**=அடைந்து **सर्वम्**=அவையாவையும் **अवरुध्य**=தனக்கு வசமாக்கிக்கொண்டு **तदेव**=அந்த ஜகத்தையே **अनुप्रविशति**=அடைந்து

விடுகிறான். எல்லாவற்றிலு மாத்மவஸ்துவாக விளங்குகின்ற பிரும்மமாகவே ஆகிவிடுகிறான்.

அடிமுதல் 98 பஞ்சா சத்துகளாகின்றன.

இருபத்து மூன்றாவது அனுவாகம் முற்றிற்று.

---

## இருபத்து நான்காவது அனுவாகம்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்க வேண்டிய முறை உபதேசிக்கப்படுகின்றது.

१ चतुष्टय्य आपो गृह्णाति। चत्वारि वा अपाꣳरूपाणि।
मेघो विद्युत्। स्तनयित्नुर्वृष्टिः। तान्येवावरुंधे॥

(ப - ரை) **चतुष्टय्यः**=நான்குவிதமான **अपः**=ஜலங்களை **गृह्णाति** சம்பாதிக்கவேண்டும். (நான்குவிதமான ஜலமின்னின்னது என்று பின்னர் சொல்லப்படும்) **मेघः**=மேகம் **विद्युत्**=மின்னல் **स्तनयित्नुः**=இடி **वृष्टिः**=மழை (**इति**=என்று) **अपाम्**=ஜலத்திற்கு **चत्वारि रूपाणि**=நான்குவிதகாரியங்கள் **वा**=பிரசித்தம். பின்னர் சொல்லப்போகும் நான்குவிதமான ஜலங்களைச் சம்பாதித்தவன் **तान्येव**=மேற் சொல்லிய மேகம் முதலிய நான்கு வஸ்துக்களையே **अवरुंधे**=தனக்குச் சுவாதீனமாயடைகிறான்.

(அ - கை) நான்குவிதமான ஜலங்களுள் முதல் ஜலத்தை உபதேசிக்கிறார்—

२ आतपति वर्ष्या गृह्णाति। ताः पुरस्तादुपदधाति। एता वै ब्रह्मवर्चस्या आपः। मुखत एव ब्रह्मवर्चसमवरुन्धे। तस्मान्मुखतो ब्रह्मवर्चसितरः॥

(ப - ரை) **आतपति**=வெய்யிலடிக்கும்பொழுது **वर्ष्याः**=மழையினுலுண்டான ஜலத்தை **गृह्णाति**=ஓர் பாத்திரத்தில் சம்பாதித்து



வைத்துக் கொள்ளவேண்டும். வெய்யிலடித்துக் கொண்டிருக்கும் பொழுதே சில சமயங்களில் மழைபொழிவதை நாம் கண்டிருக்கிறோம். ஆருண கேதுக சயனத்தை யனுஷ்டிக்க விருப்பமுள்ள யஜமானன் வெய்யிலடிக்கும் பொழுதே பேயும் மழை ஜலத்தை ஒரு பெரிய பாத்திரத்தில் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும். **ताः**=அந்த ஜலத்தை **पुरस्तात्**=கிழக்கு திசையில் **उपदधाति**=(சிறிய மண் கலயத்தில் கிரஹித்து) வைக்கவேண்டும். கிழக்கு திசையில் ஜலமயமான கற்களைவைக்கவேண்டும் என்று எங்கு சொல்லப்படுகின்றதோ அவ்விடங்களில் ஷெ மழை ஜலத்தைச் சிறியமண் பாத்திரத்தில் கிரஹித்து வைக்கவேண்டுமெனக் கொள்ளவும். **एताः**=வெய்யிலுள்ள இடத்தில் பொழியப்பட்ட **आपः**=ஜலம் **ब्रह्मवर्चस्याः वै**=பிரும்மவர்ச்சஸ் போல் காந்தியுள்ளதாயிருக்கின்றது. (வெய்யிலின் சம்பந்தம் பெற்றிருப்பதாலிவ்விதஞ்சொல்லப்பட்டது) அவைகளைக் கிழக்குதிசையில் வைப்பதால் **मुखत एव**=அக்னியின் முகத்திலேயே **ब्रह्मवर्चसम्**=வேதம், சாஸ்திரமிவைகளைப் பயிலுவதாலுண்டாகும் ஓர் விதமான காந்தியை **अवरुंधे**=சம்பாதித்துவைத்தவனு யாகின்றான். **तस्मात्**=ஆகையினுல் (**लोकेऽपि**=லோகத்திலும் **पुमान्**=புருஷன்) **मुखतः**=முகத்தில் **ब्रह्मवर्चसितरः**=வேதம் சாஸ்திர மிவைகளைப் பயிலுவதாலுண்டாகும் தேஜஸ்ஸுள்ளவனுக (**भवति**=ஆகின்றான்.) ஆருணகேதுக சயனத்தில் பிரும்மவர்சஸம் என்ற தேஜஸ்ஸுபோலுள்ள வெய்யிலின் சம்பந்தம் பெற்ற மழை ஜலத்தை அக்னியின் முன்னிலையில் வைக்கவேண்டுமென்று விதித்த படியாலேயே லோகத்திலுள்ள மனிதர்களிடமும் பிரும்மவர்ச்சஸம் என்ற தேஜஸ் முகத்திலேயே படைக்கப் பட்டிருக்கிறது. லோகத்திலவ்வவற்றை அந்தந்த விதமாய்ப் பிரும்மதேவன் படைத்ததற்குக் கர்மவிதியே மூலப்பிரமாண மென்று இதனுலுபதேசிக்கப்படுவதாய் ஊஹிக்கிறோம். பின்வரும் மந்திரங்களிலும் இதே கருத்துக்கொள்ளவும்.

(அ - கை) இரண்டாவது ஜலத்தை உபதேசிக்கிறார்—

३ कूप्या गृह्णाति। ता दक्षिणत उपदधाति। एता वै तेजस्विनीरापः।
तेज एवाऽस्य दक्षिणतो दधाति। तस्माद्दक्षिणोऽर्धस्तेजस्वितरः।

(ப - ரை) **कूप्याः**=கிணற்றிலுள்ள ஜலத்தை **गृह्णाति**=கிரஹித்து வைத்துக்கொள்ள வேண்டும். **ताः**=அதை **दक्षिणतः**=தெற்குதிசையில் **उपदधाति**=(சிறியமண் பாத்திரத்தில் கிரஹித்து) வைக்கவேண்டும். எங்கெந்த விடங்களில் தெற்குதிசையில் ஜலமயமான கற்களை வைக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றதோ அவ்விடங்களில் ஷை ஜலத்தைச் சிறிய மண் பாத்திரத்தில் கிரஹித்து வைக்கவேண்டுமெனக் கருத்துக்கொள்ளவேண்டும். **एताः आपः वै**=இந்தக் கிணற்று ஜலம் **तेजस्विनीः**=பலவிதமான வீட்டுக் காரியங்களுக்குச் சாதனமாயிருப்பதுபற்றி விசேஷசக்தியுள்ளதாயிருக்கின்றது. அதைத் தெற்குதிசையில் வைப்பதால் **अस्य**=இந்த அக்னியினுடைய **दक्षिणतः**=வலதுபாகத்தில் **तेजः, एव**=சக்தியையே **दधाति**=சம்பாதித்து வைத்தவனா யாகின்றான் **तस्मात्**=ஆனதுபற்றியே (**लोकेऽपि**=லோகத்திலும் **पुरुषस्य**=மனிதனுடைய) **दक्षिण अर्धः**=வலது பாகம் **तेजस्वितरः**=அதிகச் சக்திவாய்ந்ததாயிருக்கின்றது. இம்மந்திரத்திற்கும் முன் மந்திரம் போலவே கருத்து.

(அ - கை) மூன்றாவது ஜலமுபதேசிக்கப் படுகின்றது—

४ स्थावरा गृह्णाति । ताः पश्चादुपदधाति ।
प्रतिष्ठिता वै स्थावराः । पश्चादेव प्रतितिष्ठति ॥

(ப - ரை) **स्थावराः**=ஆறுகளிலுள்ள மடுக்களில் தேங்கிக்கிடக்கின்ற ஜலத்தை **गृह्णाति**=கிரஹித்து வைத்துக் கொள்ளவேண்டும். **ताः**=அந்த ஜலத்தை **पश्चात्**=மேற்குதிசையில் **उपदधाति**=(சிறிய மண்பாத்திரத்தில் கிரஹித்து)வைக்கவேண்டும். எங்கெந்தவிடங்களில்மேற்குத்திசையில் ஜலமயமான கற்களைவைக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றதோ அவ்விடங்களில் ஷை ஜலத்தைச் சிறிய மண் பாத்திரத்தில் கிரஹித்து வைக்கவேண்டு மெனக் கருத்துக் கொள்ளவும். **स्थावराः**=மடுவின் ஜலம் **प्रतिष्ठिताः**=வேறு இடத்திற்கு ஓடாமல் ஒரே இடத்தில் ஸ்திரமாய்த் தங்கிக் கிடப்பதாய் **वै**=பிரசித்தம். அந்த ஜலத்தை மேற்கு திசையில் வைப்பதால் தன்னைச் சேர்ந்தவர்கள் யாவர்க்கும் பிரதிஷ்டை (கீர்த்தி, அல்லது எதிலும் நிலைபெற்றிருத்தல்) யைச்சம்பாதித்துக் கொடுத்தானும் **पश्चात्**=பிறகு **प्रतितिष्ठति एव**=நிச்சயமாய் பிரதிஷ்டையை யடைவான்.



(அ - கை) நான்காவது ஜலமுபதேசிக்கப் படுகின்றது—

५ वहन्तीर्गृह्णाति । ता उत्तरत उपदधाति । ओजसा वा एता वहन्ती-
रिवोद्धतीरिव आकूजन्तीरिव धावन्तीः । ओज एवास्योत्तरतोदधाति । तस्मा-
दुत्तरोर्ध ओजस्वितरः ॥

(ப - ரை) **वहन्तीः**=ஆற்றில் ஓடுகின்ற ஜலத்தை ஒருபாத்திரத்தில் **गृह्णाति**=கிரஹித்து வைத்துக் கொள்ளவேண்டும். **ताः**=அந்த ஜலத்தை **उत्तरतः**=வடதிசையில் (**उपदधाति**=சிறிய மண்பாத்திரத்தில் கிரஹித்து) வைக்கவேண்டும். எங்கெந்த விடங்களில் ஜலமயமான கற்களை வடக்கு திசையில் வைக்கவேண்டு மென்று விதிக்கப்படுகின்றதோ அவ்விடங்களில் ஷை ஜலத்தைச் சிறிய மண்பாத்திரத்தில் கிரஹித்து வைக்கவேண்டுமென்று உபதேசித்ததாய்க் கருத்துக் கொள்ளவும். **एताः**=நதிகளில் ஓடுகின்ற ஜலம் **ओजसा वा**=ஓர்விதமான சக்தியாலல்லவா **वहन्तीः, इव**=மரங்களை இழுத்துக்கொண்டு செல்லுவதாகவும், **उद्धतीः, इव**=எதிராக இருக்கும் பாறைகளில் மோதுண்ட பொழுது மேல்கிளம்புகிறதாகவும் **आकूजन्तीः इव**=மேடு பள்ளங்களில் சஞ்சரிக்கும் பொழுது சத்தம் போடுகின்ற தாகவும் (**भवन्ति**=ஆகின்றது) **तस्मात्**=ஆருணகேதுக சயனத்தில் அதிகச் சக்திவாய்ந்த ஜலத்தை இடது பக்கத்தில் ஸ்தாபனஞ் செய்வதாலேயே (**लोकेऽपि**=லோகத்திலும் **पुरुषस्य**=மனிதனுடைய) **उत्तरः अर्धः**=வலதுபக்கம் **ओजस्वितरः**=சிலகாரியங்களைச் செய்வதில் அதிகச் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது. இம்மந்திரத்திற்கு இரண்டாவது மந்திரம் போல் கருத்துக் கொள்ளவேண்டும்.

(அ - கை) முன்படித்த **चतुष्टय आपो गृह्णाति** என்ற வாக்கியத்தில் நான்கு விதமான ஜலங்களைக் கிரஹிக்கவேண்டு மென்று சொல்லப்பட்டிருந்த போதிலும் 6 விதமான ஜலங்கள் பின்னர்

படிக்கப் பட்டிருப்பதால் **चतुष्टय** என்ற பதத்தை உபலக்ஷண மாக வைத்துக்கொண்டு ஆறு விதமான ஜலம் என்று பொருள் கொள்ளவேண்டும். ஆகவே 5 வது ஜலம் உபதேசிக்கப்படு கின்றது—

६ संभार्या गृह्णाति । ता मध्य उपदधाति ॥
इयं वै संभार्याः । अस्यामेव प्रतितिष्ठति ॥

(ப - ரை) **संभार्याः**=வீட்டில் குடம் முதலிய வற்றில் வீட்டுக் காரியத்திற்காக சேகரித்து வைக்கப்பட்ட ஜலத்தை **गृह्णाति**=சிறியமண்பாத்திரத்தில் கிரஹிக்கவேண்டும். **ताः**=அதை **मध्ये**=நான்கு திக்குகளின் மத்தியில் **उपदधाति**=வைக்கவேண்டும். எங்கெந்த விடங்களில் மத்தியில் ஜலமயமான கற்களை வைக்கவேண்டுமென்று விதிக்கப்படுகின்றதோ அவ்விடங்களில் ஷை ஜலத்தைச் சிறிய மண்பாத்திரங்களில் கிரஹித்து வைக்கவேண்டுமென்று சொன்னதாயறியவும். **संभार्याः**=குடங்களிலிருக்கின்ற ஜலம் **इयं वै**=இந்தப்பூமியாகவே ஆகின்றது. அதாவது பூமியைப் போல் ஸ்திரமாய் அசைவற்றிருக்கின்றது. அந்த ஜலத்தைக் கிரஹித்துவைப்பதால் **अस्याम्**=இப்பூமியில் **प्रतितिष्ठति एव**=நிச்சயமாய்ப் பிரதிஷ்டையைப் பெறுவான்.

(அ - கை) ஆறுவது ஜலமுபதேசிக்கப்படுகின்றது—

पल्वल्या गृह्णाति । ता उपरिष्टादुपादधाति ।
असौ वै पल्वल्याः । अमुष्यामेव प्रतितिष्ठति ॥

(ப - ரை) **पल्वल्याः**=என்றைக்கும் வற்றாத ஊற்றுள்ள இடத்திலிருக்கின்ற ஜலத்தை **गृह्णाति**=கிரஹித்து வைத்துக்கொள்ள வேண்டும். **ताः**=அந்தஜலத்தை **उपरिष्टात्**=நடுவில் வைக்கப்பட்டிருக்கின்றஜலமயமானகற்களின்மேல் **उपादधाति**=(சிறியமண்பாத்திரத்தில் கிரஹித்து) வைக்கவேண்டும். **पल्वल्याः**=வற்றாத ஊற்றுள்ள இடத்திலிருக்கின்ற ஜலம் **असौवै**=சுவர்க்கலோகம்போல் மேலே இருக்கின்றது. மலையரிவி ஊற்றினாலுண்டாகின்றது. மஹாநதியின் உத்பத்தி ஸ்தானத்திலிருக்கின்ற அரிவி ஒருபொழுதும் வற்றுவ



தில்லை. அது மலை முதலிய உயர்விடங்களிலேயே இருக்கின்றது அந்தத்தீர்த்தத்தைச் சிறிய மண்பாத்திரத்தில் கிரஹித்து வைக்கவேண்டுமென்று இங்கு சொல்லப்படுகின்றது. அந்தத்தீர்த்தத்தைக்கிரஹித்துவைப்பதால் **अमुष्याम्**=சுவர்க்கலோகத்தில் **प्रतितिष्ठति एव**=நிச்சயமாய் பிரதிஷ்டையைப் பெறுவான்.

(அ - கை) மேற்சொல்லியபடி அந்தந்ததிக்குகளில் அந்தந்த விதமான ஜலத்தைச் சிறியமண் பாத்திரத்தில் கிரஹித்து வைப்பதை ஸ்துதிக்கிறார்.

दिक्षूपदधाति । दिक्षुवा आपः । अन्नंवा आपः । अद्भ्योवा अन्नं जायते । यदेवाद्भ्योऽन्नं जायते । तदवरुंधे ॥

(ப - ரை) **दिक्षु**=கிழக்குமுதலிய திக்குகளில் **उपदधाति**=(சிறியமண் பாத்திரத்தில் ஜலத்தைக் கிரஹித்து) வைக்கவேண்டும். **आपः**=ஜலம் **दिक्षु**=திக்குகளில் (இருப்பதாய்) **वा**=பிரசித்தம் **आपः**=ஜலம் **अन्नम्**=உணவுபொருளாக (இருக்கின்றது என்பது) **वा**=பிரசித்தம். ஜலம் எவ்விதமுணவு பொருளாகின்றது என்றால் அதை நிரூபணஞ் செய்கிறார்—**अन्नम्**=உணவுபொருள் **अद्भ्यः वा**=ஜலத்தினின்றுமல்லவா **जायते**=உண்டாகின்றது. **अद्भ्यः**=ஜலத்தினின்றும் **यत् अन्नम्**=எந்த உணவுபொருள் **जायते**=உண்டாகின்றதோ **तत्**=அதை **अवरुन्धे**=அடைகிறான்.

(தா - ம்) உணவுபொருள்கள் விருத்தியடைவதற்கு ஜலமின்றி யமையாத சாதனமாயிருக்கின்ற தென்பது பிரசித்தம். அது திக்குகளில் இருக்கின்றது. ஆருணகேதுக சயனத்தில் அந்தந்த திக்குகளில் ஜலத்தைக் கிரஹித்து வைத்தலால் உணவு பொருள்களைவேண்டிய வளவு பெறுவான். ஆதலாலிதை யனுஷ்டிக்கவேண்டும். (எ - று)

तं वा एतमरुणाः केतवो वातरशना ऋषयोऽचिन्वन् । तस्मादारुणकेतुकः ।
तदेषाभ्यनूक्ता

(ப - ரை) **तमेतम्**=ஆருணகேதுகம் என்ற இந்த அக்னியை **अरुणाः**=‘அருணர்’ என்றுப்பெயருள்ள **ऋषयः**=ருஷிகளும் **केतवः**=

'கேது' என்றுப் பெயருள்ள ऋषयः=ருஷிகளும் वातरशनाः 'வாதரசனர்' எனப் பெயருள்ள ऋषयः=ருஷிகளும் अचिन्वन्=அடுக்கினர். तस्मात्=ஆகையினால் आरुणकेतुकः=ஆருணகேதுகம் என்றப் பெயர் ஏற்பட்டது. ஆருணகேதுகம் என்ற கர்மத்தை அருணர், கேது, வாதரசனர் என்ற மஹாருஷிகள் முதலிலனுஷ்டித்துப் பயன் பெற்றனர். ஆதலாலிந்தக் கர்மத்திற்கு ஆருணகேதுகம் என்ற பெயர் ஏற்பட்டது. அவ்விதமாயின் "வாதரசனருணகேதுகம்" என்று அல்லவோ பெயர் ஏற்பட வேண்டும். வாதரசனரைத் தள்ளி ஆருண கேதுகம் என்றுப் பெயரிட்டது எங்ஙனமென்றால் அம்மூவரில் இரண்டுபேர்களே மிக்கப் பிரசித்தி பெற்றவர்கள். ஆதலால் இரண்டுபேர்களின் பெயரினால் மட்டும் இக்கர்மம் அழைக்கப்படுகின்றது. तत्=இவ்விஷயத்தைப் பற்றி एषा= பின் படிக்கப்படுகின்ற ஒருருக்கும் अभ्यनूक्ता=வேறு சாகையில் படிக்கப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு—

केतवो अरुणासश्च । ऋषयो वातरशनाः । प्रतिष्ठाꣳशतधाहि ।

समाहितासो सहस्रधायसम् ।

(ப - ரை) केतवः="கேது" என்றுப்பெயருள்ள ऋषयः=ருஷிகளும் अरुणासश्च= "அருணர்" என்றுப் பெயருள்ள ऋषयः=ருஷிகளும் वातरशनाः="வாதரசனர்" என்றுப் பெயருள்ள ऋषयः=ருஷிகளும் समाहितासः=மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய்க்கொண்டு शतधा=நூறுவிதமாயும் प्रतिष्ठाम्=நிலைபெறுவதற்குச் சாதனமாயும் सहस्रधायसम्=ஆயிரக்கணக்கான பயனைக் கொடுக்கின்றதாயுமிருக்கிற (अग्निकाम्=ஜலமயமான கற்களை अचिन्वन्=அடுக்கினர்.) ஆருணகேதுக சயனத்தை ஷி ருஷிகள் அனுஷ்டித்தனர்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்தையும், அதையறிவதையும் ஸ்துதிக்கின்றார்—

शतशचैव सहस्रशश्च प्रतितिष्ठति । य एतमग्निं चिनुते ।

य उचैनमेवं वेद ॥



(ப - ரை) यः=எந்தப்புருஷன் एतम्=இந்த अग्निम्=அக்னிக்கு ஆதாரமானகட்டிடத்தை चिनुते=அடுக்குகிறானோ (எவன் ஆருணகேதுகசயனத்தை யனுஷ்டிக்கின்றானோ) यः उ=எவன் एनम्=இந்தச்சயனத்தை एवम्=மேற்சொல்லியபிரகாரம் वेद=அறிவனோ सः=அவன் शतशश्चैव=நூறுவிதமாயும் सहस्रशश्च=ஆயிரம் விதமாயும் प्रतितिष्ठति एव=எவ்விஷயத்திலும் நிச்சமாய் நிலைபெறுவான் எப்பொருளும் இம்மஹாபுருஷனிடம் ஸ்திரமாக இருக்கும் என்று கருத்து.

ब्रह्मवर्चसितरो वहन्तीर्गृभ्णाति ता उपरिष्टादुपादधात्यारुणकेतुकोऽग्नौ च ॥

அடிமுதல் 102 பஞ்சாசத்துக்களாகின்றன.

இருபத்து நான்காவது அனுவாகம் முற்றிற்று.

---

இருபத்தைந்தாவது அனுவாகம்.

(அ - கை) சென்ற அனுவாகத்தில் ஜலமயமானகற்களுபதேசிக்கப்பட்டன. இவ்வனுவாகத்தில் தாமரையிலை முதலியவற்றையுமடுக்க வேண்டுமென்பது விதிக்கப்படுகின்றது. முதலில் உத்தரவேதி என்ற விடத்தில் பள்ளந்தோண்ட வேண்டுமென்று முன்னரே விதித்ததை ஸ்துதிக்கின்றார்—

जानुदघ्नीमुत्तरवेदीं खात्वा । अपां पूरयति । अपाꣳसर्वत्वाय ॥

(ப - ரை) उत्तरवेदीम्=உத்திரவேதி என்ற விடத்தில் जानुदघ्नीम्=முழங்காலளவு खात्वा=பள்ளந்தோண்டி अपाम्=ஜலத்திற்கு सर्वत्वाय = எல்லா வடிவமாயிருக்குகையை வெளியிடுவதற்காக अपाम्=ஜலத்தினால் पूरयति = நிறப்பவேண்டும். உலகமெல்லாம் ஜலத்தினிடமிருந்தே உண்டாயிற்று என்பதை முன்னர் சொல்லியிருக்கிறோம். அதை ஊர்ஜிதப்படுத்துவதற்காக உத்தரவேதி என்ற விடத்திற் பள்ளந்தோண்டி ஜலத்தினால் நிறப்பவேண்டும் என்று கருத்து.

पुष्करपर्णंरुक्मं पुरुषमित्युपदधाति। तपो वै पुष्करपर्णम्। सत्यंरुक्मः। अमृतं पुरुषः। एतावद्वा वास्ति। यावदेतत्। यावदेवास्ति। तदवरुन्धे॥

(ப-ரை) **पुष्करपर्णम्**=தாமரையிலை, **रुक्मम्**=தங்கம், **पुरुषम्**=தங்கத்தால் செய்யப்பட்ட புருஷவிக்ரஹம் **इति** = இவைகளை **उपदधाति**=வைக்கவேண்டும். பின் பாகங்களால் ஷெ தாமரையிலை முதலியவைகள் ஸ்துதிக்கப்படுகின்றன—**पुष्करपर्णम्**=தாமரையிலை **तपः**=தபஸ் என்ற கர்மம்போல் மிகவும் பரிசுத்தமாக இருக்கின்றது (**इति**=என்பது) **वै**=பிரசித்தம். **रुक्मः**=தங்கம் **सत्यम्**=மற்ற லோஹங்களைக்காட்டிலும் அழிவற்றதாயிருக்கின்றது. **पुरुषः**=தங்கத்தால் செய்யப்பட்ட புருஷவிக்கிரஹம் **अमृतम्**=நாசமற்றதாயிருக்கின்றது. தங்கத்தைஎவ்வளவு நேரம் அக்னியில் காய்ச்சினாலும் நாசமடைவதில்லை. அதாவது நிறைகுறைவு படுவதில்லையாகையால் **सत्यम्**, **अमृतम्**=என்று இங்கு ஸ்துதிக்கப்பட்டது. மேற் சொல்லியவைகளை உபதானஞ் செய்வதாலேற்படுகின்ற பயன் உபதேசிக்கப்படுகின்றது-**यावदेतत्**=தபஸ், சத்தியம் அமிருதம் என்பது யாதுண்டோ **एतावद्वा**=அதுதான் **अस्ति**=உண்மையிலிருக்கின்றது என்று சொல்லக்கூடிதாக இருக்கின்றது. **यावदेव**=எவ்வளவு **अस्ति**=உண்மையிலிருக்கின்றதோ **तत्**=அதை **अवरुन्धे**=நிச்சயமாய் அடைந்துவிடுவான். தபஸ் சத்தியமிவைகளே லோகத்தில் நிலைத்திருக்கக்கூடியவஸ்துக்களாகையால் அவைகளைமட்டுமே இருக்குகையுள்ளதாகக் கருதவேண்டும். ஷெ தபஸ், சத்தியமிவைகளுக்கொப்பான தாமரையிலை முதலியவற்றை உபதானஞ் செய்வதால் யஜமானன் தபஸ், சத்தியம் இவைகளைப் பெறுவான் என்று கருத்து.

कूर्ममुपदधाति। अपामेव मेधमवरुन्धे। अथो स्वर्गस्य लोकस्य समष्ट्यै।

(ப-ரை) **कूर्मम्**=ஆமையை **उपदधाति**=உபதானஞ் செய்யவேண்டும். (வைக்கவேண்டும்) ஆருண கேதுக சயனத்தில் எந்தவிடத்தில் சிறியமண்பாத்திரத்தில் ஜலத்தைக் கிரஹித்து வைக்கவேண்டுமோ அவ்விடத்தில் முதலில் ஆமையைப் பிடித்து வைக்கவேண்டும். (**तदुपधानेन**=ஆமையை வைப்பதால்) **अपाम्**=ஜலத்தினுடைய **मेधम्**=சாராம்சத்தை **अवरुन्ध एव**=நிச்சயமாய் அடைவான். ஆமை என்பது ஜலத்தின் சாரபாகமாக இருக்கின்றதுபற்றி அதை வைப்பதால் யஜமானன் ஜலத்தின் சாராம்சத்தைப் பெற்று ஆரோக்யத்தைப் பெறுவான். **अथो**=மேலும் **स्वर्गस्य लोकस्य**=சுவர்க்கலோகத்தின் **समष्ट्यै**=லாபத்தின் பொருட்டும் (**भवति**=ஆகின்றது.) ஆமையை வைப்பதால் சுவர்க்க லோகமும் கிடைக்கும்.



आपमापामपस्सर्वाः। अस्मादस्मादितोऽमुतः। अग्निर्वायुश्च सूर्यश्च! सहसंचस्करर्द्धिया इति। वाय्वश्वा रश्मिपतयः।

இம்மந்திரங்களின் பொருளை 7-வது பக்கத்தில் பார்த்துக்கொள்ளவும். இதுபோன்ற மந்திரங்களைச் சொல்லி சிறிய மண் பாத்திரத்தில் ஜலத்தைக் கிரஹித்து வைக்கவேண்டும் என்பது கருத்து.

(அ-கை) "லோகம் பிருணே" என்ற ஜலம் நிறைந்த சிறிய மண்பாத்திரத்தை வைக்கும்பொழுது படிக்கவேண்டிய மந்திர முபதேசிக்கப்படுகின்றது—

लोकं पृण छिद्रं पृण। यास्तिस्रः परमजाः।

(ப-ரை) (**हे इष्टके**=ஓ கல்லே! உபதானஞ் செய்யப்படாதவிடத்தை) **पृण**=நிறப்புவாயாக. (**तत्पूरणेन**=அவ்விடத்தை நிறப்புவதால்) **छिद्रं पृण**=சிதி என்ற கட்டிடத்தின் இடைவெளியை பூர்த்தி செய்வாயாக. **परमजाः**=முதலடுக்கு, இரண்டாவது அடுக்கு, மூன்றாவது அடுக்கு என்ற மூன்று அடுக்குகளில் வைக்கவேண்டியிருப்பதுபற்றி சிறந்ததா யுண்டானவைகளான **तिस्रः**=மூன்று **याः**=எந்த 'ஸ்வயமாதிருண்ணை' என்றகற்களுண்டோ அவைகளின் இடைவெளியையும் **पूरय**=பூர்த்தி செய்வாயாக. சுவர்கட்டும்பொழுது மத்தியில் ஏற்படுகின்ற இடைவெளிகளைச் சிறிய கற்களைக்கொண்டு எவ்விதம் பூர்த்தி செய்துகொள்ளுகிறோமோ அவ்

விதமே இந்தச் சயனத்திலும் ஜலம் நிறைந்த மண் பாத்திரங்களை எடுத்து அடுக்கிவரும்பொழுது மத்தியில் ஏற்படுகின்ற இடைவெளிகளை லோகம் பிருணை என்ற கல்லால் பூர்த்திசெய்யவேண்டும். **लोकंपृणा, स्वयमातृण्णा** முதலிய பதங்கள் அடுக்கவேண்டிய சிற்சில கற்களின் பெயர்கள். அதன் விவரத்தை யாக்ஞிகர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

इन्द्रघोषा वो वसुभिरेवाह्येवेति ।

**इन्द्रघोषा वो वसुभिः पुरस्तादुपदधताम्**=என்ற மந்திரத்தினுலும் **एवाह्येव** என்ற மந்திரத்தாலும் சிறியமண்பாத்திரத்தில் ஜலத்தைக் கிரஹித்துவைக்கவேண்டும். இம்மந்திரங்கள் 20வது அனுவாகத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. அர்த்தமும் அங்கு எழுதப்பட்டிருக்கிறது.

पञ्च चितय उपदधाति। पाङ्क्तोऽग्निः। यावानेवाग्निः। तं चिनुते।

(ப - ரை) **पञ्च**=ஐந்து **चितयः**=அடுக்குகள் **उपदधाति**=அடுக்கவேண்டும். **अग्निः**=அக்னி **पाङ्क्तः**=ஐந்து எண்ணுள்ளதாக இருக்கின்றது. **अग्निः**=அக்னி **यावान्**=எவ்வளவோ **तम्**=அவ்வளவு அக்னியைக்குறித்து **चिनुत एव**=சயனத்தை யனுஷ்டித்தவனு யாகின்றுன்.

(தா - ம்) உத்தரவேதீ என்றவிடத்தில் முழங்காலளவு பள்ளந்தோண்டி அதில் குதிகாளவு ஜலத்தைவிட்டு அதன்மேல் தாமரையிலை, தாமரைத்தண்டு முதலியவற்றைப்போட்டு அதன் மேற்சிறிய மண்பாத்திரங்களில் ஜலத்தைக் கிரஹித்து மந்திரங்களையுச் சரித்துவைக்கவேண்டும். எவ்வளவு கலசங்களைவைக்க வேண்டுமென்று விதிஏற்பட்டிருக்கின்றதோ அவ்வளவு கலசங்களைவைத்தபிறகு அவைகளின் மேல் முன்போல் தாமரையிலை முதலியவற்றைப்போட்டு மண்பாத்திரங்களில் ஜலத்தைக் கிரஹித்து வைக்கவேண்டும். இவ்விதம் ஐந்து அடுக்குகளையடுக்கியபிறகு அதன் மேல் பலகையைப்போட்டு பலகையின்மேல் மண்ணைக்கொட்டிப் பரப்பவேண்டும், அதன்மேல் அக்னிபை



எடுத்துவைத்து அதற்கு நான்கு பக்கங்களிலும் சிறியமண்பாத்திரத்தில் ஜலத்தைக்கிரஹித்து வைக்கவேண்டும். இவ்விதமனுஷ்டித்தால் அக்னி ஐந்து அடுக்குகளுள்ளதாக ஆகின்றது. இவ்விதம் ஐந்து அடுக்குகள் எதற்காக அடுக்கவேண்டுமென்றுல், அக்னியானது- கார்ஹபத்தியம், தக்ஷிணுக்னி, ஆஹவநீயம், ஸப்யம், ஆவஸத்யம் என்று ஐந்து விதமாக இருக்கின்ற படியால் அக்னிக்கு ஆதாரமான சிதி என்ற கட்டிடமும் ஐந்து அடுக்குள்ளதாக இருக்கவேண்டும் என்பது பற்றியே. (எ - று)

लोकं पृणया द्वितीयामुपदधाति। पञ्च पदा वै विराट् । तस्या वा इयं पादः। अन्तरिक्षं पादः। द्यौः पादः। दिशः पादः। परोरजाः पादः॥

(ப - ரை) **द्वितीयाम्**=இரண்டாவது அடுக்கை **लोकंपृणया**=லோகம் பிருணை என்ற கற்களால் **उपदधाति**=அடுக்கவேண்டும். (**लोकंपृणा**=லோகம்பிருணை என்றகல் **विराट्देहरूपा**=விராட் புருஷனின் சரீரமாக இருக்கின்றது.) அந்தவிராட் புருஷனின் சுவரூபம் வர்ணிக்கப்படுகின்றது—**विराट्**=விராட் என்ற பகவன்மூர்த்தி **पञ्चपदा**=ஐந்துபாகமுள்ளதாக **वै**=பிரசித்தம். **तस्याः**=அந்தவிராட்மூர்த்திக்கு **इयम्**=இந்தப்பூலோகம் **पादः**=ஒருபாகமாகவும்; **अन्तरिक्षम्**=ஆகாசம் **पादः**=ஒருபாகமாகவும் **द्यौः**=சுவர்க்கலோகம் **पादः**=ஒருபாகமாகவும், **दिशः**=திக்குகள் **पादः**=ஒருபாகமாகவும் **परोरजाः**=ரஜோகுணசம்பந்தம் பெற்ற சம்சாரத்திற்கு வெளிப்பட்ட **त्रिपात्** என்ற விபூதி **पादः**=ஒரு பாகமாகவும் (**अस्ति**=இருக்கின்றது) இத்தகைய மஹிமைவாய்ந்த விராட் புருஷனின் சரீரமாக லோகம் பிருணை என்ற கற்களிருக்கின்றன என்பது கருத்து.

विराज्येव प्रतितिष्ठति। य एतमग्निं चिनुते।

य उचैनमेवं वेद ॥

(ப - ரை) **यः**=எவன் **एतम्**=இந்த **अग्निम्**=அக்னிக்கு ஆதாரமான சிதி என்ற கட்டிடத்தை **चिनुते**=அடுக்குகிறுனே, **यः**=எவன் **एनम्**=இதை **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனே (**सः**=அவன்) **विरा-**

**जि**=விராட் புருஷனிடம் **प्रतितिष्ठति एव**=நிச்சயமாய் பிரதிஷ்டையைப்பெறுவான். விராட் புருஷனை யடைந்து விடுவான்.

**अस्ति पृणान्तरिक्षं पादः षट् च ।**

அடிமுதல் 105 பஞ்சாசத்துக்களாகின்றன.

இருபத்தைந்தாவது அனுவாகம் முற்றிற்று

---

## இருபத்தாறுவது அனுவாகம்

(அ - கை) இவ்வனுவாகத்தில் சயனத்தின் பலன்களும், விரதங்களும் உபதேசிக்கப்படுகின்றன. முதலில் முன்விதித்த சமாசாரங்களே சிலவிசேஷங்களை யுபதேசிப்பதற்காக மறுபடியும் படிக்கப்படுகின்றன—

अग्निं प्रणीयोपसमाधाय । तमभित एता अबीष्टका उपदधाति अग्निहोत्रे दर्शपूर्णमासयोः । पशुबंधे चातुर्मास्येषु । अथो आहुः । सर्वेषु यज्ञक्रतुष्विति ॥

175 வது பக்கத்திலும், 178வது பக்கத்திலும் இவைகட்குப்பொருள் எழுதப்பட்டிருக்கிறது. அங்குகண்டு கொள்ளவும்.

(அ - கை) ஆருணகேதுகம் என்ற கர்மாவைச் சுதந்திரமாய் யாகத்திற்கு அங்கமாக அனுஷ்டிக்கலாம் என்பதை ஆக்ஷேப சமாதானம் வாயிலாக ஸ்திரப்படுத்துவதற்காக இரண்டு மதத்தையுபதேதிக்கிறார்—

अथ हस्माहारुणः स्वायंभुवः । सावित्रः सर्वोऽग्निरित्यननुषङ्गं मन्यामहे । नाना वा एतेषां वीर्याणि ॥



(ப - ரை) **स्वायंभुवः**=பிரும்மதேவனின் பிள்ளையான **अरुणः**=அருணர் என்ற மஹருஷி **सर्वः**=எல்லாவிதமான **अग्निः**=அக்னிக்கு ஆதாரமான பிரதேசம் ஏற்படுவதற்காக அனுஷ்டிக்கப்படுகின்ற சயனம் என்ற கர்மங்கள் யாவும் **सावित्रः**=சாவித்திரம் என்ற சயனமாகவே ஆகின்றது. **इति**=என்று **आहस्म**=சொன்னார். சாவித்திரம், நாசிகேதம், சாதுர்ஹோத்திரியம், வைச்வஸிருஜம், ஆருணகேதுகம் என்று ஐந்துவிதமான சயனங்கள் காடகம் என்றப் பிரகரணத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சாவித்திரம் என்ற சயனம் தான் யாகத்திற்கு அங்கமாகுமேயல்லாது மற்றவையாகமாட்டாது. ஏனென்றால் மற்றசயனங்களை யனுஷ்டிப்பவன் சாவித்தரசயனத்தையு மனுஷடித்தேதீரவேண்டும். சாவித்திரசயனமன்னியில் அவைகளை யனுஷ்டிக்க முடியாது. சாவித்திர சயனத்திலோ மற்றச்சயனங்கள் அனுஷ்டிக்கப்படுவதில்லை. இவற்றால் சுதந்திரமாயனுஷ்டிப்பதற் குரிமை சாவித்திரசயனத்திற்கே இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. ஆதலால் மற்றச் சயனங்களை யாகத்திற்கு அங்கமாகக் கூறுவது உசிதமல்ல. சாவித்திரசயனத்தையே அவ்விதங் கூறவேண்டும் என்று அருணர் என்ற மஹருஷி சொல்லுகிறார். இதற்குமேல் பிரும்மவாதிகள் பதிலளிக்கின்றனர். **अननुषङ्गम्**=நாசி கேதம் முதலிய சயனங்களில் சாவித்ரசயனத்திற்குச் சம்பந்தமில்லாமையை **मन्यामहे**=கருதுகிறோம். நாசிகேதம் முதலிய சயனத்திலும் சாவித்திரசயன மனுஷ்டிக்கப்படவேண்டு மென்று நினைத்துக் கொண்டல்லவோ இவ்விதம் நீர் சொல்லுகிறீர். மற்றச் சயனங்களில் சாவித்ரசயனத்தை யனுஷ்டிக்கவேண்டு மென்பதை நாம் ஒப்பவில்லை. **एतेषाम्**=இவைகட்கு **वीर्याणि**=பலன்கள் **नाना**=பலவிதமாக இருக்கின்றன என்பது **वा**=பிரசித்தம். நாசிகேதம், சாதுர் ஹோத்திரியம் முதலிய சயனங்களுக்கு வெவ்வேறான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதம் தனித்தனியாகப் பலன் உபதேசிக்கப்பட்டிருப்பதிலிருந்து தனித்தனியே இவைகளை யனுஷ்டிக்கலாம் என்று ஏற்படுகின்றது. ஆதலால் சாவித்திரசயனம்போல் ஆருணகேதுக சயனத்தையும் யாகத்திற்கு அங்கமாயனுஷ்டிக்கலாம்.

(அ - கை) **योऽपां पुष्पं वेद** என்ற அனுவாகத்தில் **संवत्सरं प्रत्यक्षेण** என்று தொடங்கி இன்னின்ன சயனத்திற்கு இன்னின்னது பயன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையே மறுபடியு முபதேசிக்கிறார்—

कमग्निं चिनुते । सत्रियमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । सावित्रमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । नाचिकेतमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । चातुर्होत्रियमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । वैश्वसृजमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । उपानुवाक्यमाशुमग्निं चिन्वानः । कमग्निं चिनुते । इममारुणकेतुकमग्निं चिन्वान इति ॥

(ப - ரை) (**हे अरुण**=அருணர் என்ற மஹருஷியே) **सत्रियम्**=த்வாதசாஹம் முதலிய சத்திரம் என்ற கர்மத்திற்கு அங்கமாக அனுஷ்டிக்கப்படுகின்ற சயனத்தை **चिन्वानः** = அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் (என்றும்) **सावित्रमग्निम्**=சாவித்திரம் என்றசயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் (என்றும்) **नाचिकेतम्**, **अग्निम्**=நாசிகேதம் என்ற சயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் (என்றும்) **चातुर्होत्रियम्**, **अग्निम्**=சாதுர் ஹோத்திரியம் என்ற சயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான். (என்றும்) **वैश्वसृजम्**=வைச்வஸிருஜம் என்ற **अग्निम्**=சயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் (என்றும்) **उपानुवाक्यम्** = உபானுவாக்யம் என்ற காண்டத்தில் விதிக்கப்பட்டதும் **आशुम्**=சீக்கிரமாய் பயனைக்கொடுக்கின்றதுமான **अग्निम्**=சயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலதிற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் (என்றும்) **इमम्**=இந்த ஆருணகேதுகம் என்ற



**अग्निम्**=சயனத்தை **चिन्वानः**=அனுஷ்டித்தவன் **कम्**=எந்தப்பலத்திற்குச் சாதனமான **अग्निम्**=சயனத்தை **चिनुते**=அனுஷ்டித்தவனாயாகின்றான் **इति** என்றும் **विचारय**=நன்கு ஆலோசித்துப்பாரும். அருணமஹருஷியே! சத்திரியம், நாசிகேதம், சாவித்திரம் முதலிய சயனங்களின் பலன் என்னவென்பதைச் சற்றுக்கவனித்துப் பாரும் என்று கருத்து. இவ்விதம் நாசிகேதம் முதலிய சயனங்கள் வெவ்வேறான பயனையுடையனவாக இருப்பதால் அவைகளுக்குத் தனித்தனியே யாகத்திற்கு அங்கமாயிருக்குகை சம்பவிக்கலாமென்று நிச்சயிக்கவேண்டும்.

(அ - கை) சாவித்திர சயனத்தை வேறு சயனத்தி லனுஷ்டித்தால் தீமையும் சம்பவிக்கும் என்று உபதேசிக்கப்படுகின்றது—

वृषा वा अग्निः । वृषाणौ सꣳस्फालयेत् । हन्येतास्य यज्ञः । तस्मान्नानुषज्यः ।

(ப - ரை) **अग्निः**=சயனஞ் செய்கின்ற யஜமானன் **वृषा**=வீர்யத்தை ஸ்திரீயின் கர்ப்பாசயத்தில் செலுத்தி சந்ததியை யுண்டுபண்ணுகிறவனாக இருக்கின்றான். மற்றச் சயனங்களில் சாவித்திரசயனத்தை யனுஷ்டித்தால் யஜமானனுடைய **वृषाणौ**=இரண்டு விரைகளையும் (அவனுடைய சத்துரு) **संस्फालयेत्**=பிசைந்துவிடுவான். **अस्य**=இந்த யஜமானனுடைய **यज्ञः**=யாகம் **हन्येत**=கெட்டுப்போய்விடும். **तस्मात्**=ஆகையால் **नानुषज्यः**=சாவித்ரசயனத்தை மற்றச் சயனங்களிலும் அனுஷ்டிக்கக்கூடாது. சாவித்திர சயனத்தை மற்ற சயனங்களை யனுஷ்டிக்கும்பொழுது மனுஷ்டித்தால் சந்ததி விருத்திசெய்வதற்குரிய சக்தியையிழந்து விடுவான். சத்துருபீடை ஏற்படும். அனுஷ்டித்த கர்மமும் பயன் தரு என்று கருத்து.

सोत्तरवेदिषु क्रतुषु चिन्वीत । उत्तरवेद्याꣳह्यग्निश्चीयते ।

(ப - ரை) **सोत्तरवेदिषु**=உத்திரவேதியுடன் கூடிய **क्रतुषु**=பசுபந்தம் முதலியகர்மங்களில் **चिन्वीत**=அனுஷ்டிக்கவேண்டும். **उत्त-**

**रवेद्यांहि**=உத்தரவேதி என்ற விடத்திலல்லவா **अग्निः**=சயனம் **चीयते**=அனுஷ்டிக்கப்படுகின்றது. **जानुदघ्नीमुत्तरवेदीं खात्वा** என்றதால் உத்தரவேதீ என்றவிடத்திலேயே சயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். என்று விதிக்கப்பட்டிருப்பதால் உத்தரவேதியுள்ள பசுபந்தம் முதலிய கர்மங்களிலேயே இதை யனுஷ்டிக்கவேண்டும். அவ்விதமாயின், உத்தரவேதியில்லாத அக்னிஹோத்திரம், தர்சபூர்ணமாஸம் முதலிய கர்மத்திற்கு அங்கமாகவும் சயனத்தை யனுஷ்டிக்கலாம் என்று முன் சொன்னது எவ்விதம் பொருந்தும் என்ருல்-அவைகளில் சயனத்தை யனுஷ்டித்தாலு மனுஷ்டிக்கலாம், அல்லது அனுஷ்டிக்காமலுமிருக்கலாம் என்று விகல்பத்தை யங்கீகரிக்கவேண்டும்.

(அ - கை) இனி ஆருணகேதுக சயனத்தை இன்னின்ன பலன்களையுத்தேசித்து அனுஷ்டிக்கலாமென்பது உபதேசிக்கப்படுகின்றது.

प्रजाकामश्चिन्वीत। प्राजापत्यो वा एषोऽग्निः। प्राजापत्याः प्रजाः।
प्रजावान् भवति। य एवं वेद।

(ப - ரை) **प्रजाकामः**=சந்ததியை விரும்பியவன் **चिन्वीत**=இந்த ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். **एषः**=இந்த **अग्निः**=சயனம் **प्राजापत्यः**=பிரஜாபதியால் படைக்கப்பட்டது என்பது **वा**=பிரசித்தம். **प्रजाः**=பிரஜைகள் **प्राजापत्याः**=பிரும்ம தேவனுல் படைக்கப்படுகின்றன. (**अतः**=ஆகையினுல் **एतच्चयनानुष्ठाता**=இந்தச் சயனத்தை யனுஷ்டித்தவன்) **प्रजावान्**=சந்ததியுள்ளவனுக **भवति**=ஆகின்ருன். **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனே (**सोपि**=அவனும் **प्रजावान् भवति**=சந்ததியுள்ளவனு யாகின்ருன்).

पशुकामश्चिन्वीत। संज्ञानं वा एतत्पशूनाम्। यदापः।
पशूनामेव संज्ञानेऽग्निं चिनुते। पशुमान् भवति। य एवं वेद॥

(ப - ரை) **पशुकामः**=பசுவை விரும்பியவன் **चिन्वीत**=இந்த ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். **यत्**, **आपः**=



யாதொரு ஜலமுண்டோ **एतत्**=இது **पशूनाम्**=பசுக்களுக்கு **संज्ञानम्**=நன்ருய் அறிவுண்டாவதற்குச் சாதனமாயிருக்கின்றது. (**एतदनुष्ठाता** = இந்த ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டிப்பவன்) **पशूनाम्**=பசுக்களுடைய **संज्ञाने**, **एव**=நன்ருய் அறிவு ஏற்படுவதற்குச் சாதனமான வஸ்துவிலேயே. **अग्निंचिनुते**=சயனத்தை யனுஷ்டிக்கின்ருன். (**अतः**=ஆகையினுல்) **पशुमान्**=பசுக்களுடன்கூடினவனுக **भवति**=ஆகின்ருன். **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனே **सोऽपि**=அவனும் **पशुमान्भवति**=பசுவுள்ளவனு யாவான்) தாகத்தால் பீடிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பசுக்கள் பிரக்ஞையை யிழந்து விடுகின்றன. அப்பொழுது தீர்த்தத்தையுட்கொண்டால் நன்ருய் அறிவுபெறுகின்றன. ஆதலால் பசுக்கள் அறிவு பெறுவதற்குத் தீர்த்தம் இன்றியமையாச் சாதனமாகின்றது. ஆருணகேதுக சயனமோ ஜலத்தின்மேல் ஜலமயமானகற்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆகவே இவ்வாருணகேதுக சயனுனுஷ்டானத்தினுல் பசுக்கள் கிடைப்பதென்பது மிகவும் பொருத்தமுள்ளதாயாகின்றது என்பது கருத்து.

वृष्टिकामश्चिन्वीत। अपो वै वृष्टिः। पर्जन्यो वर्षुको भवति। य एवं वेद॥

(ப - ரை) **वृष्टिकामः**=மழையை விரும்புகிறவன் **चिन्वीत**=இவ்வாருணகேதுகசயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். **वृष्टिः**=மழை **आपः**=ஜலமயமாயிருக்கின்றது என்பது **वै**=பிரசித்தம். **पर्जन्यः**=மேகம் **वर्षुकः**=மழையைப் பொழிகின்றதாக **भवति**=ஆகின்றது. **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद**=அறிவனே (**तस्यापि**=அவன் விஷயத்திலும் **पर्जन्यः**=மேகம் **वर्षुकः**=மழையைப் பொழிகின்றதாக **भवति**=ஆகின்றது.) ஆருணகேதுகசயனம் ஜலத்தினு லனுஷ்டிக்கப்படுகின்ற படியால் இதை யனுஷ்டித்தவன் எந்தத்தேசத்தில் வஸிக்கின்ருனே அங்கு ஏராளமாய் மழைபொழியும் என்று கருத்து.

आमयावी चिन्वीत। आपो वै भेषजम्।
भेषजमेवास्मै करोति। सर्वमायुरेति।

(ப - ரை) आमयावी=வியாதியாற் பீடிக்கப்பட்டவன் चिन्वीत=இவ்வாருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். आपः=ஜலம் भेषजम्=மருந்தாக இருக்கின்றது என்பது वै=பிரசித்தம் சுத்தமான ஜலம் ஆரோக்யத்திற்குச் சாதனமானதால் மருந்தென்று சொல்லப்பட்டது. (एतदनुष्ठानात्=இந்த ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டிப்பதால்) भेषजमेव=மருந்தையே अस्मै=தனக்கு करोति=சம்பாதித்து வைத்துக்கொள்ளுகிறான். सर्वम्=எல்லாவிதமான (பூர்ணமான) आयुः=ஆயுளை एति=அடைகிறான். ஆருணகேதுகசயனம் ஜலத்தினாலனுஷ்டிக்கப்படுகின்ற படியாலும், ஜலம் ஆரோக்யத்திற்கு இன்றியமையாச் சாதனமாகையாலும் இக்கர்மத்தையனுஷ்டித்தவன் ஆரோக்யத்தையும், நீண்ட ஆயுளையும் பெறுவான் என்று கருத்து.

अभिचरंश्चिन्वीत। वज्रो वा आपः। वज्रमेव भ्रातृव्येभ्यः प्रहरति। स्तृणुत एनम्॥

(ப-ரை) अभिचरन्=சத்துருவின் மரணத்தை விரும்பியவன் चिन्वीत=ஆருணகேதுகசயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். आपः=ஜலம் वज्रः=வஜ்ரம் என்ற ஆயுதமாக மாறுகின்றது என்பது वा=பிரசித்தம். ता एता आपो वज्रीभूत्वा என்றதால் சந்தியாவந்தனஞ் செய்யும்பொழுது விடப்படும் அர்க்யஜலம் வஜ்ரம் என்ற ஆயுதமாக மாறி மந்தேஹர்முதலிய அரக்கர்களை நாசஞ்செய்கின்றது என்று சொல்லி இருப்பதுபோல் இங்கும் ஆருணகேதுக சயனத்திலுபயோகிக்கப்படும் ஜலம் வஜ்ரம் என்ற ஆயுதமாக மாறி சத்துருக்களை நாசஞ்செய்வதா யுபதேசிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். (एतदनुष्ठाता=இக்கர்மத்தை யனுஷ்டித்தவன்) वज्रम्=வஜ்ரம் என்ற ஆயுதத்தை भ्रातृव्येभ्यः=சத்துருவினிடம் प्रहरत्येव=நிச்சயமாய் பிரயோகித்தவனு யாகின்றான். एनम्=இந்தச் சத்துருவை स्तृणुते=கொன்றுவிடுகிறான்.

तेजस्कामो यशस्कामः। ब्रह्मवर्चसकामः स्वर्गकामश्चिन्वीत। एतावद्वा वास्ति। यावदेतत् यावदेवाऽस्ति। तदवरुन्धे॥



(ப - ரை) तेजस्कामः=தேஜஸ்ஸை விரும்பியவனும்(பலத்தை விரும்பியவனும்) यशस्कामः=யசஸ்ஸைவிரும்பியவனும் ब्रह्मवर्चसकामः=பிரும்மதேஜஸ்ஸை விரும்பியவனும் स्वर्गकामः=சுவர்க்கத்தை விரும்பியவனும் चिन्वीत = இவ்வாருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்கவேண்டும். यावदेतत्=மேற்சொல்லிய பலன்கள் எவையுண்டோ एतावद्वा=அவைகளே (उत्तमम्=சிறந்தவைகளாக) अस्ति=இருக்கின்றன. यावदेव=எவ்வளவு अस्ति=இதனிலும் சிறந்ததாக இருக்கின்றதோ तत् = அதையும் अवरुन्धे=அடைவான். இங்கு உபதேசிக்கப்பட்ட பலன்களைத் தவிர்த்து வேறு பலன்களை யுத்தேசித்தும் இவ்வாருணகேதுக சயனத்தை யனுஷ்டிக்கலாம்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவன் அனுசரிக்கவேண்டிய சில நியமங்கள் உபதேசிக்கப்படுகின்றன—

तस्यैतद्व्रतम्। वर्षति न धावेत्। अमृतं वा आपः। अमृतस्यानन्तरित्यै॥

(ப - ரை) तस्य=ஆருணகேதுகம் என்ற சயனத்தை யனுஷ்டித்தவனுக்கு एतत्=மேற்சொல்லப் போகின்றது व्रतम्=அவசியமாயனுசரிக்கவேண்டிய விதி—वर्षति=வழியிற் செல்லும்பொழுது மழை பொழிந்தால் (அதனால் சரீரம் நனைந்துவிடும் என்று பயந்து) नधावेत्=ஓடக்கூடாது. பின்வரும் பாகத்தினால் அதற்குக் காரண முபதேசிக்கப்படுகின்றது—आपः=ஜலம் अमृतंवा=அமிருதத்திற்கொப்பான சக்தியுள்ளதாக இருக்கின்றது. अमृतस्य=சுவர்க்கசுகத்தினுடைய अनन्तरित्यै=நாசம் ஏற்படாமைக்காக (एतदनुष्ठेयम्=மேற்சொல்லியதை யனுஷ்டிக்கவேண்டும்.) மழை பொழியும்பொழுது அதனிடமிருந்துபயந்து ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவன் ஓடுவானாகில் அமிருதத்திற்கொப்பான ஜலத்தை அலக்ஷியஞ் செய்ததாயாகுமதலால் ஜலத்தினாலனுஷ்டிக்கப்படுகிற சயன மூலம் ஏற்படுகின்ற சுவர்க்க சுகம் கிடைக்காமல் போய்விடும். ஆதலால் மழைபொழிந்தால் ஓடக்கூடாது.

नाप्सु मूत्रपुरीषं कुर्यात् । न निष्ठीवेत् । न विवसनः स्नायात् ।
गुह्यो वा एषोऽग्निः । एतस्याग्नेरनतिदाहाय ॥

(ப - ரை) अप्सु=ஜலத்தில் मूत्रपुरीषम्=மூத்திரம் மலம் இவைகளை नकुर्यात्=செய்யக்கூடாது. न निष्ठीवेत्=காறி உமியக்கூடாது. विवसनः=இடுப்பில் வஸ்திரமின்றி न स्नायात्=ஸ்னானஞ் செய்யக்கூடாது. மேற்சொல்லியவற்றிற்குக் காரணம் பின்வரும் பாகத்தினால் உபதேசிக்கப்படுகின்றது—एषअग्निः=ஆருணகேதுக சயனத்தால் ஏற்படும் கட்டிடத்தில் ஸ்தாபிக்கபடுகின்ற அக்னி गुह्यः=ஜலத்தில் மறைந்திருக்கின்றது. एतस्य, अग्नेः=இந்த அக்னியினுடைய अनतिदाहाय=அதிகமான தாபம் ஏற்படாமலிருப்பதற்காக (एतान्यनुष्ठेयानि=இவைகளை யனுஷ்டிக்கவேண்டும்.) ஜலத்தில் மலமூத்திரங்களை விடக்கூடாது என்று பொதுவில் எல்லோர்விஷயத்திலும் விலக்கு விதி இருக்கும் பொழுது மறுபடியும் விதித்தது எதற்காக வென்றால் ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவன் மேற்சொல்லியவற்றை யனுஷ்டித்தால் அதிகமான கெடுதலுண்டாகும் என்பதைத் தெரியப்படுத்துவதற்காக என்க.

न पुष्करपर्णानि हिरण्यं वाधितिष्ठेत् । एतस्याग्नेरनभ्यारोहाय ।

(ப - ரை) पुष्करपर्णानि=தாமரையிலைகளையோ हिरण्यंवा=தங்கத்தையோ नाधितिष्ठेत्=காலால்ஏறிமிதிக்கக்கூடாது एतस्य अग्नेः=ஆருணகேதுக சயனத்தால் ஏற்படும் கட்டிடத்தின்மேல் ஸ்தாபிக்கப்படுகின்ற அக்னியை अनभ्यारोहाय=ஏறிமுதியாதவனாவதற்காக (एतदनुष्ठेयम्=இதை யனுஷ்டிக்கவேண்டும்) ஆருணகேதுக சயனத்தில் தாமரையிலைக்கு உபயோகம் முன்சொல்லப்பட்டிருப்பதால் இந்தச் சயனத்தை யனுஷ்டித்தவன் தாமரையிலையின்மேல் நிற்றலோ, அதன்மேல் உட்காருதலோ கூடாது. அவ்விதம் தாமரையின்மேல் நின்றால் அக்னியின் மேல் நின்றவனாவான் என்று கருத்து.

न कूर्मस्याश्नीयात् । नोदकस्याघातुकान्येनमोदकानि भवन्ति ।
अघातुका आपः । य एतमग्निं चिनुते । य उचैनमेवं वेद ॥



(ப - ரை) कूर्मस्य = ஆமையினுடைய (किञ्चिदप्यंशम् = ஒரு அவயவத்தையும்) नाश्नीयात्=சாப்பிடக்கூடாது उदकस्य=ஜலத்தில் வஸிக்கின்ற மற்ற மீன் முதலிய பிராணிகளின் (அங்கத்தையும்) नाश्नीयात्=சாப்பிடக்கூடாது. यः=எவன் एतम्=இந்த अग्निम्=ஆருணகேதுக சயனத்தை चिनुते=அனுஷ்டிக்கின்றானோ यउच எவன் एवम्=இவ்விதம் एनम् = இவ்வாருணகேதுக சயனத்தை वेद=அறிவானோ एनम्=அம்மனிதனைக்குறித்து ओदकानि=ஜலத்திலுண்டான பிராணிகள் अघातुकानि=ஹிம்ஸிக்காதவைகளாக भवन्ति=ஆகின்றன. आपः=ஜலமும் अघातुकाः=ஹிம்ஸிக்காதவைகளாக (भवन्ति=ஆகின்றன) ஆருணகேதுக சயனத்தை யனுஷ்டித்தவனுக்கும், அதைத்தெரிந்து கொண்டவனுக்கும் ஜலசரமான பிராணிகளாலோ, ஜலத்தினாலோ மரணம் ஏற்படாது என்று கருத்து.

चिनुते चिनुते प्रजाकामश्चिन्वीत य एवं वेदापोधावेदश्नीयाच्चत्वारि च ॥

அடிமுதல் 112 பஞ்சா சத்துக்களாகின்றன

இருபத்தாறாவது அனுவாகம் முற்றிற்று.

---

இருபத்தேழாவது அனுவாகம்,

इमा नुकं भुवना सीषधेम । इन्द्रश्च विश्वे च देवाः ।

(ப - ரை) इन्द्रश्च=இந்திரனும் विश्वे देवाश्च=மற்றுமுள்ள எல்லாத்தேவர்களும் इमाः=இந்த நாமும் भुवना=லோகத்தை नुकम्=சுகத்திற்குச் சாதனமாயிருக்கும்படி सीषधेम=சம்பாதித்துக்கொள்ளுவோமாக. இந்திரனும், மற்றுமுள்ள எல்லாத் தேவர்களும் நானும் அவரவர்க்குரிய லோகத்தில் சுகமாய் வஸிப்போமாக என்று கருத்து.

यज्ञं च नस्तन्वं च प्रजां च । आदित्यैरिन्द्रः सह सीषधातु ॥

(ப - ரை) **इन्द्रः**=இந்திரன் **आदित्यैः**=ஆதித்யாள் என்ற தேவர்களுடன் **सह**=கூட **नः**=எங்களுக்கு **यज्ञंच**=யாகத்தையும் **तन्वंच**=சரீரத்தையும் **प्रजां च**=சந்ததியையும் **सीषधातु**=கொடுக்கவேண்டும். யாகம் முதலிய சத்கர்மங்களை யனுஷ்டிப்பதற்கு வேண்டிய சௌகரியத்தையும், சந்ததியையும், இந்திரன் ஆதித்யாள் இவர்கள் கொடுக்கவேண்டும்.

आदित्यैरिन्द्रस्सगणो मरुद्भिः । अस्माकं भूत्ववविता तनूनात् ॥

(ப - ரை) **आदित्यैः** = ஆதித்யாள் என்ற தேவர்களுட[illegible] **मरुद्भिः**=மருத் என்ற தேவர்களுடனும் (**युक्तत्वात्**=கூடியிருப்ப[illegible] பற்றி) **सगणः**=சைன்யமுள்ள **इन्द्रः**=இந்திரன். **तनूनाम्**=சரீரத்தை **अविता** = காப்பாற்றுகிறவனுக **भूतु**=ஆகவேண்டும். ஆதித்யாள் மருத் என்ற தேவர்களைச் சைன்யமாயுடைய இந்திரன் எனது சரீரத்தையும் என்னைச்சேர்ந்தவர்களின் சரீரத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று கருத்து.

(அ - கை) மனிதவர்க்கத்தைப் பார்த்து பின்வரும்மந்திரங்களால் சில அருமையான விஷங்கள் உபதேசிக்கப்படுகின்றன—

आप्लवस्य प्रप्लवस्व । आण्डीभव ज मा मुहुः ।
सुखादीं दुःखनिधनाम् । प्रतिमुञ्चस्व स्वां पुरम् ॥

(ப - ரை) **ज**=பிறப்புள்ள ஓ மனிதனே ! **मुहुः**=அடிக்கடி **मा आप्लवस्व**=பிறவியை யடையாதே. **मा प्रप्लवस्व**=அடிக்கடி மரணத்தை யடையாதே. **मा आण्डीभव**=அடிக்கடி பிருமாண்டமத்தியில் பிறந்தவனுயாகாதே. **सुखादीम्**=ஆரம்பதசையில் சுகமுள்ளதுபோல்தோன்றுகின்றதும் **दुःखनिधनाम्**=துக்கத்தை முடிவில் உடையதுமான **स्वाम्** உனக்குச் சொந்தமான **पुरीम्** சரீரத்தை **प्रतिमुञ्चस्व** விட்டுவிடு.

(தா - ம்) ஓ மனிதனே! வண்டியின் சக்கிரம் சுற்றிவருவதுபோல் திரும்பித் திரும்பி வருகின்ற பிறப்பு இறப்பு இவை



களை யொழிப்பதற்கு வேண்டிய மார்க்கத்தைத்தேடி அறிந்து அதன்படி நட. துர்லபமான இம்மானிட ஜந்மங்கிடைத்தும் ஜனனமரணத்தை யொழிக்க முயர்ச்சி செய்யாமல் இந்த ஜந்[illegible]த்தை வீணுக்கி விடாதே. சரீரத்தில் அபிமானம் வைத்து அதனிஷ்டப்படி நடப்பது உனக்குமுதலில் சுகமாயிருப்பது போல் தோன்றும். அதனுல் முடிவில் துக்கமேயுண்டாகும். ஆதலால் சரீராபிமானத்தை யொழித்து இனி இச்சரீரமுண்டாகாமலிருப்பதற்கு எது உபாயமோ அதை யனுஷ்டிப்பாயாக (எ-று)

मरीचयः स्वायंभुवाः । ये शरीराण्यकल्पयन् ।
ते ते देहं कल्पयन्तु । मा च ते ख्या स्म तीरिषत ॥

(ப - ரை) **स्वायंभुवाः**=சூரியமண்டலத்தில் வஸிக்கின்ற பரமாத்மாவினுடைய **ये**=எந்த **मरीचयः**=கிரணங்கள் **शरीराणि**=ஆத்மோபாஸனஞ் செய்கின்றவர்களின் சரீரத்தை **अकल्पयन्**=சிருஷ்டித்தனவோ **ते**=அவைகள் **ते**=உன்னுடைய **देहम्** = சரீரத்தை **कल्पयन्तु**=உண்டுபண்ணட்டும். **ते**=உனக்கு **ख्या**=சம்சாரத்தைக் கடக்கவேண்டுமென்ற எண்ணம் **स्म**=உறுதியாய் **मातीरिषत्**=நாசத்தையடையவேண்டாம். சூர்யமண்டலத்தில் வஸிக்கின்ற பரமாத்மாவின் அனுக்ரஹத்தால் தேஜோமயமான சரீரமுண்டாகுமாறு ஆத்மோபாஸனஞ் செய்வதில் முயர்ச்சிப்பாயாக என்பது கருத்து.

उत्तिष्ठत मा स्वप्त । अग्निमिच्छध्वं भारताः ।
राज्ञः सोमस्य तृप्तासः । सूर्येण सयुजोषसः ॥

(ப - ரை) **भारताः**=ஓ மனிதர்களே ! **उत्तिष्ठत** = எழுங்கள் **मास्वप्त**=தூங்காதீர்கள். **राज्ञः**=ஓஷதிகளுக்கதிபதியான **सोमस्य**=சோமத்தை (அதன் சாரை) (**पानेन**=குடிப்பதால்) **तृप्तासः**=திருப்தியை யடைந்தவர்களாக (**भूत्वा**=ஆகி) **सूर्येण**=சூர்யமண்டலத்தில் [illegible]ஸிக்கின்ற பரமாத்மாவினுடன் **सयुजोषसः**=சமானமான ஆனந்தத்தையுடையவர்களாக (**भवितुम्**=ஆவதற்கு) **अग्निम्** = தன்னையுபாஸிப்பவர்களை மேலான நிலைக்குக்கொண்டுவருகின்ற பரமாத்

மாவை **इच्छध्वम्**=விரும்புங்கள். அதாவது உபாஸியுங்கள். யாகம் முதலியகர்மங்களை அனுஷ்டித்து ஈச்வரார்ப்பணஞ் செய்து அத ஞல் சித்த சுத்தியையடைந்து பிறகு பரமாத்மாவை உபாஸனஞ் செய்ய ஆரம்பஞ் செய்யவேண்டும். அவ்விதம் பரமாத்மாவை உபாஸிப்பவன் பரமானந்தத்தைப் பெறுவான் என்று கருத்து.

युवा सुवासाः ।

இது ஒரு மந்திரத்தின் ஆரம்பம். இதன் மீதமுள்ளபாகங் களையு மெழுதி வியாக்யானஞ் செய்கிறோம்—

युवा सुवासाः परिवीत आगात् । स उ श्रेयान् भवति जायमानः ।
तं धीरासः कवय उन्नयन्ति । स्वाधियो मनसा देवयन्तः ।

(ப-ரை) (**ब्रह्मवित्**=பரப்பிரும்மத்தை யறிந்தவன்) **सुवासाः**= நல்ல வஸ்திரம் தரித்திருக்கின்ற **युवा**=யௌவனப் பருவத்தி லுள்ள புருஷனைப்போல் **परिवीतः**=காந்தியால் சூழப்பட்டவனய்க் கொண்டு **आगात्** = பரமாத்மாவை யடைந்துவிடுகிறுன். **सउ**= அவன்தான் **जायमानः**=பிறவியை யடைந்தவர்களுள் **श्रेयान्**=சிறந் தவனுக **भवति**=ஆகின்றுன். **तम्**=அந்தப் பரமாத்மாவை **धीरासः**= தைரியமுள்ளவர்களும் **स्वाधियः**=தன் வசத்திலிருக்கின்ற புத் தியை யுடையவர்களும் **मनसा**=மனத்திஞல் **देवयन्तः**=தேவதை களை யாராதிக்கின்றவர்களுமான **कवयः**=மஹருஷிகள் **उन्नयन्ति**= அறிகின்றனர்.

अष्टाचक्रा नवद्वारा । देवानां पूरयोध्या ।
तस्याꣳहिरण्मयः कोशः । स्वर्गो लोको ज्योतिषाऽवृतः ॥

(ப - ரை) **देवानाम्**=ஜீவ வர்க்கங்களுடைய **पूः**=சரீரம் **अष्टा-चक्रा**=தோல், ரக்தம், மாம்ஸம், மேதஸ், எலும்பு, மஜ்ஜா, சுக்கி லம், ஓஜஸ் என்ற 8 தாதுக்களுள்ளதாகவும், **नवद्वारा**=கண்ணின் துவாரம் 2. காதின் துவாரம் 2. மூக்கின் துவாரம் 2. வாயின் துவாரம் 1. குதத்தின் துவாரம் 1. ஆண்குறி, அல்லது பெண் குறி, இதந் துவாரம் 1. ஆக 9 துவார முள்ளதாகவும் **अयोध्या**= பிராரப்தகர்மத்தின் முடிவு ஏற்படாவிடில் நாசமடையாததாக வும், (**अस्ति**=இருக்கின்றது.) **तस्याम्**=அந்தச்சரீரத்தில் **हिरण्मयः**= தங்கத்திஞற் செய்யப்பட்ட வஸ்துவுக்கொப்பான **कोशः**=ஒரு மொட்டுபபோலுள்ளவஸ்து, அதாவது ஹிருதயகமலம் **अस्ति**= இருக்கின்றது. **तस्य**=அந்த ஹிருதயகமலத்திஞுடைய) **लोकः**= உள்ளிருக்கும் ஓரிடம் **स्वर्गः**=சுகமயமாகவும் **ज्योतिषा**=பிரகாசி க்கின்ற ஜீவசைதன்யத்தால் **आवृतः**=சூழப்பட்டதாகவும் (**अस्ति**= இருக்கின்றது)



यो वै तां ब्रह्मणो वेद । अमृतेनाऽऽवृतां पुरीम् ।
तस्मै ब्रह्म च ब्रह्मा च । आयुः कीर्तिं प्रजां ददुः ॥

(ப - ரை) **यः**=எவன் **ब्रह्मणः**=பரமாத்மாவி னுடையதாயும், **अमृतेन**=பரமானந்தத்தால் **आवृताम्**=சூழப்பட்டதாயு மிருக்கின்ற **तांपुरीम्**=அந்தப் பட்டணத்தை (அந்த ஸ்தானத்தை) **वेद**=அறி வனே **तस्मै**=அவனுக்கு **ब्रह्मच**=பரமாத்மாவும் **ब्रह्माच**=நான்முகன் முதலிய தேவர்களும் **आयुः**=நீண்ட ஆயுளையும் **कीर्तिम्**=கீர்த்தி யையும் **प्रजाम्**=சந்ததியையும் **ददुः**=கொடுக்கின்றனர். பரமாத் மாவை ஹிருதயகமலத்தில் தியானஞ் செய்பவன் நீண்ட ஆயுள் நற்கீர்த்தி, சந்ததி முதலியவற்றைப்பெறுவான் என்று கருத்து.

विभ्राजमानाꣳहरिणीम् । यशसा संपरीवृताम् ।
पुरꣳहिरण्मयीं ब्रह्मा । विवेशाऽपराजिता ॥

(ப - ரை) **ब्रह्मा**=பிரஜாபதி **विभ्राजमानाम्**=பிரகாசிக்கின்றதா யும் **हरिणीम्**=மனோஹரமாயும், **यशसा**=கீர்த்தியால் **संपरीवृताम्**= நான்கு பக்கங்களிலும் சூழப்பட்டதாயும் **हिरण्मयीम्**=சுவர்ண மயமான வஸ்துவுக்குச் சமானமானதாயும், **अपराजिता**=பிராரப் தகர்மத்தின் முடிவு ஏற்படாவிடில் நாசமடையாததாயு மிருக்கிற **पुरीम्**=சரீரத்தை **विवेश**=அடைந்தார். பிரஜாபதி என்று சொன் னதை உபலக்ஷணமாகவைத்துக்கொண்டு ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு சரீரத்தைப்பற்றிக்கொண்டிருக்கிறுன் என்று உபதே சிக்கப்படுவதாகக் கருத்துக் கொள்ளவேண்டும்.

पराङेत्यज्यामयी । पराङेत्यनाशकी ।

इहचामुत्रचान्वेति । विद्वान् देवासुरानुभयान् ॥

(ப - ரை) **विद्वान्** = பரப்பிரும்ம தத்துவத்தை யறிந்தவன் **अज्यामयी**=ஜரை வியாதி இவைகளற்றவனுயும் **पराङ्**=திரும்பவும் ஜன்மமற்றவனுயும் **एति**=பரப்பிரும்மத்தை யடைந்து விடுகிறுன். **विद्वान्**=பரப்பிரும்மதத்துவத்தை யறிந்தவன் **अनाशकी**=கர்மங்களற்றவனுயும், **पराङ्**=திரும்பவும் ஜன்மமற்றவனுயும் **एति**=பரப்பிரும்மத்தை யடைந்து விடுகிறுன். பிரும்மத்தையறிந்தவனுக்குச் சரீரமே ஆத்மா என்ற பிரமம் விலகிவிட்டபடியால் ஜரை, வியாதி, மரணம் முதலியவைகள் சரீரதர்மமென்று உணர்ச்சியுண்டாகின்றது. ஆதலாலவைகளற்றவனுகவே இருந்து கொண்டு பிராரப்தகர்மம் முடிந்தவுடன் மறுபடியும் திரும்பிவருதலற்ற ஸ்தானமான பிரும்மத்தையடைந்து விடுகிறுன் என்றுகருத்து. **विद्वान्**=பிரும்மதத்துவத்தை யறிந்தவன் **इहच**=இந்த லோகத்திலும், **अमुत्रच**=பரலோகத்திலும் **देवाऽसुरानुभयान्**=தேவர்கள், அசுரர்கள் இரண்டுபேர்களையும் **अन्वेति**=அனுசரிக்கிறுன. அதாவது எல்லா ஜீவர்களிடத்தும் நாமே வஸிக்கின்றோம் என்று உணர்கின்றுன்.

यत्कुमारी मन्द्रयते । यद्योषिद्यत्पतिव्रता ।

अरिष्टं यत्किंच क्रियते । अग्निस्तदनुवेधति ॥

(ப - ரை) **कुमारी**=விவாஹமாகாத கன்னிகை **यत्**=எவ்விதமான-புருஷ சம்போக ரூபமான-பாபகாரியத்தில் **मन्द्रयते**=ஆசைப்படுகிறுளோ **योषित्**=விவாஹமான யுவதி **यत्**=எவ்விதமான—வேறு புருஷனுடன் சேருவதென்ற—பாப காரியத்தில்(**मन्द्रयते**=ஆசைப்படுகிறுளோ) **पतिव्रता**=பதிவிரதையான ஸ்திரீ **यत्**=எவ்விதமான—தனதுபர்த்தாவுடன் சேராமையால் தனதுஉயிரை விட்டுவிடுவதென்ற—பாபகாரியத்தில் (**मन्द्रयते** = ஆசைப்படுகிறுளோ) **अरिष्टम्**=தானம் முதலியவற்றுல் போக்கடிக்க முடியாத **यत्किंच**=எவ்வித பாபம் **क्रियते**=அனுஷ்டிக்கப்படுகின்றதோ **तत्**=அந்தப்



பாபங்கள் யாவையும் **अग्निः**=பரமாத்மா **अनु वेधति**=நாசஞ் செய்கிறுர்.

(தா - ம்) விவாஹமாகாத பெண் புருஷ சம்போகத்தை விரும்புவதாலும், விவாஹமானபெண் பரபுருஷ சம்போகத்தை விரும்புவதாலும், பதிவிரதையான ஸ்திரீ புருஷனைவிட்டுப்பிரிந்திருக்கமனமில்லாமல் உயிரைமாய்த்துக் கொள்ளவிரும்புவதாலும், மற்றுமிது போலுள்ள பாபகாரியங்களைச் செய்வதாலும் எவ்விதப் பாபங்களுண்டாகுமோ அவ்விதப்பாபங்கள் யாவையும் பரமாத்மோபாசனம் துலைத்து விடும். (எ - று)

अश्रृतासः श्रृतासश्च । यज्वानो येऽप्ययज्वनः ।

स्वर्यन्तो नापेक्षन्ते । इन्द्रमग्निं च ये विदुः ॥

(ப - ரை) **येच**=எவர்கள் **अश्रृतासः**=பரிபாகமடையாச் சித்தமுள்ளவர்களாகவோ **श्रृतासश्च**=பரிபாகமடைந்த சித்தமுள்ளவர்களாகவோ **यज्वानः**=சுருதிஸ்மிருதி இவைகளில் விதிக்கப்பட்ட கர்மங்களை யனுஷ்டிக்கின்றவர்களாகவோ **ये**=எவர்கள் **अयज्वनः**=சத்கர்மங்களை யனுஷ்டிக்காதவர்களாகவோ (**भवन्ति**=ஆகின்றனரோ **ते**=அவர்கள்) **अग्निम्**=தன்னையுபாஸிப்பவர்களை மேலான பதவியில் சேர்த்துவைக்கின்ற **इन्द्रम्**=பரமாத்மாவை **विदुः (यदि)**=அறிவார்களேயானுல் **स्वर्यन्तः**=சுவர்க்கத்தையோ, அல்லது மோக்ஷத்தையோ அடைவதற்கு **नापेक्षन्ते**=ஞானத்தைத் தவிர்த்து வேறுவிதமான சாதனத்தை யபேக்ஷிப்பதில்லை. மனிதன் எந்த நிலையிலிருந்தாலும் அவன் பரமாத்மாவை யறிவானேயாகில் அதனுலேயே மோக்ஷம் என்ற சிறந்த புருஷார்த்தத்தை யடைந்து விடுவான் என்று கருத்து.

सिकता इव संयन्ति । रश्मिभिस्समुदीरिताः ।

अस्माल्लोकादमुष्माच्च । ऋषिभिरदात्पृश्निभिः ॥

(ப - ரை) (**जीवाः**=ஜீவன்கள்) **रश्मिभिः** = கயிறுபோலுள்ள கர்மங்களால் **समुदीरिताः**=தூண்டப்பட்டவர்களாய்க்கொண்டு **सि-**

कता इव=மணல்கள்போல் अस्मात्=இந்த लोकात्=உலகினின்றும், अमुष्माल्लोकाच्च=மேலுலகினின்றும் (तदातदानिर्गत्य = அவ்வப்பொழுது வெளிவந்து) संयन्ति=ஒன்று சேருகின்றன. (तेषां सर्वे[ष]ामनुग्रहाय परमेश्वरः=அந்த எல்லா ஜீவர்களையு மனுக்கிரஹிப்பதற்காக பரமேச்வரன்) पृश्निभिः=தத்துவத்தைப் பிரகாசப்படுத்துகின்ற ऋषिभिः=மந்திரங்களால் अदात्=அறிவைக் கொடுக்கின்றார்.

(தா - ம்) பெரும்காற்றினால் தூண்டப்பட்ட மணல்கள் எவ்விதம் ஓரிடம் விட்டு மற்றோரிடத்திலும், அவ்விடம் விட்டு மறுபடியும் முன்னிருந்த விடத்திலும் வந்து குவியுமோ அவ்விதமே ஜீவன்களும் புண்யபாபரூபமான கர்மத்தினால் தூண்டப்பட்டு இவ்வுலகினின்றும் மேலுலகிலும் மேலுலகினின்றும் இவ்வுலகிலும் வந்து ஒன்று சேருகின்றனர் அதாவது சக்கிரம் சுழலுவதுபோல்திரும்பத்திரும்பஜன்மமரணங்களை யனுபவித்து வருகின்றனர். இந்த ஜீவவர்க்கத்தினிடம் பகவான் தயை கூர்ந்து இச்சம்சாரத்தைக் கடப்பதற்குச் சாதனமானக் ஞானத்தை வேதமந்திரங்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறார். (எ - று)

अपेत वीत विचसर्पतातः । येऽत्रस्थ पुराणा ये च नूतनाः ।
अहोभिरद्भिरक्तुभिर्व्यक्तम् । यमो ददात्ववसानमस्मै ॥

(ப - ரை) யமனால் கொஞ்சகாலத்திற்கு முன்னும், வெகுகாலத்திற்குமுன்னும் நியமனஞ்செய்யப் பட்டவர்களும், இப்பூமியில் எங்கும் வியாபரித்திருக்கின்றவர்களுமான யமதூதர்கள் இதனால் பிரார்த்திக்கப்படுகின்றனர்—(हे यमदूताः=ஓ யமதூதர்களே!) ये=எந்த நீங்கள் अत्र=இவ்விடத்தில் पुराणाः=வெகுகாலமாய் स्थ=வஸித்து வருகிறீர்களோ ये=எந்த நீங்கள் अत्र=இவ்விடத்தில் नूतनाः=புதியதாய் स्थ=வஸித்து வருகிறீர்களோ ते सर्वे यूयम्=அந்த நீங்கள்யாவரும் अतः=இவ்விடத்தினின்றும் अपेत=வேறிடத்திற்குச்சென்று விடுங்கள். वीत=ஒருவருடன் மற்றவர் சேராவண்ணம் பிரிந்து சென்று விடுங்கள் विसर्पत च=வெகுதூரஞ்சென்று விடுங்கள். यमः=யமன் अद्भिः=ஜலத்துடன் (ஜலம் முதலிய போக்யவஸ்துக்களுடன்) व्यक्तम्=சேர்ந்திருக்கின்ற अहो-



भिः=அநேகம் பகல், अक्तुभिः=அநேகம் இரவு (என்ற) अवसानम्=காலத்தை ददातु=கொடுக்கட்டும். தர்மராஜனின் அனுக்கிரஹத்தினால் நீண்ட ஆயுளும் போக்ய வஸ்துக்களு முண்டாகவேண்டும் என்பது கருத்து.

नृ मुणन्तु नृ पात्वर्यः । अकृष्टा ये च कृष्टजाः ।
कुमारीषु कनीनीषु । जारिणीषु च ये हिताः ॥

(ப - ரை) नृ=மனிதன் என்று மாத்திரம் சொல்லக்கூடிய நிலையிலுள்ளவர்கள் அதாவது பிறரை ஹிம்ஸித்தோ, பிறருக்கு அடிமையாக ஆகியோ ஜீவனஞ்செய்கின்றவர்களும், யாவராலும் நிந்திக்கக்கூடியவர்களுமான புருஷர்கள் मुणन्तु=இவ்விடம் விட்டு வேறு இடத்திற்குச் செல்லட்டும். नृ=மேற்கூறிய நீசபுருஷர்களுக்கு अर्यः=தலைவன் पातु=இவ்விடம் விட்டு விலகிச்சென்று எங்களைக் காக்கவேண்டும். ये=எவர்கள் अकृष्टाः=சத்கர்மங்களைச் செய்வதற்கு அதிகாரமற்றவர்களோ அதாவது கெட்டகுலத்தில் பிறந்தவர்களோ ये च=எவர்கள் நல்லகுலத்தில் பிறந்தவர்களாயிருந்தும் ஊமை, குருடு முதலியன வாயிருப்பதாலோ, மஹாபாதகங்களையனுஷ்டிப்பதாலோ கர்மாதிகார மற்றவர்களோ कुमारीषु=கல்யாணமாகாப் பெண்களிடத்திலும், कनीनीषु = கல்யாணமாகாத பேத்திகளிடத்திலும் जारिणीषु च=வியபிசாரிகளிடத்திலும் ये=எவர்கள் हिताः=கர்பரூமாய் வஸித்து வெளிவந்தவர்களோ (ते सर्वेऽपीतोऽपगच्छन्तु = அவர்களெல்லோரும் இவ்விடம் விட்டு வேறிடத்திற்குச் செல்லவேண்டும்.) மேற் சொல்லிய பாபபுருஷர்களின் சேர்க்கை எனக்கு ஏற்படவேண்டாம் என்று கருத்து.

रेतःपीता आण्डपीताः । अङ्गारेषु च ये हुताः ।
उभयान् पुत्रपौत्रकान् । युवेऽहं यमराजगान् ॥

(ப - கை) रेतः पीताः=ரேதஸ் எனப்படும் புருஷ வீர்யத்தைப் பானஞ் செய்தவர்களும், आण्डपीताः=அண்ட சம்பந்தம் பெற்ற ஜலத்தைப்பானஞ் செய்தவர்களும் (इतोऽपगच्छन्तु=இவ்

விடம் விட்டு வேறு இடத்திற்குச் செல்லட்டும்.) உட்கொள்ளக் கூடாதபொருள்களை யுட்கொள்ளுகின்ற மஹாபாபிகளின் சம்பந்தம் ஏற்படவேண்டாம் என்று கருத்து. ये=எந்த ஜீவ்கள் अग्निरेषु=நெருப்பில் (சாஸ்திரமுறையை யனுசரிக்காமல்) हुताः=போடப்பட்டவைகளாய்க் கொண்டு पिशाचादिभावेन=பிசாசம் முதலியவற்றின் வடிவமாக் वर्तन्ते=இருக்கின்றனவோ तेपीता गच्छन्तु=அவைகளும் இவ்விடம் விட்டு வேறிடத்திற்குச் சேல்லட்டும்.) पुत्रपौत्रकान् उभयन्=நல்லபடிப்பு, சீலம், நன்னடத்தை முதலியவைகளற்ற பிள்ளை பேரன் இரண்டு பேர்களையும் अहम्=நான் युवे=பிரித்து வைக்கிறேன். அவர்களுடன் நான் சம்பந்திக்கவில்லை. அல்லது அத்தகைய பிள்ளை பேரன்கள் எனக்குண்டாகவேண்டாம் என்றுகொள்ளவும். यमराजगान्=தர்மராஜனால் சிக்ஷிக்கத்தகுந்த மற்றுமுள்ள பாபிகளையும் युवे=பிரித்துவிடுகிறேன். அந்தப் பாபிகளின் சம்பந்தம் எனக்கு நேரவேண்டாம் என்று கருத்து.

शतमिन्नु शरदः ।

இது ஓர் மந்திரத்தின் ஆரம்பம். இதன் மீதமுள்ள பாகங்களையுமெழுதி வியாக்யானஞ் செய்கிறோம்—

शतमिन्नु शरदो अन्ति देवा यत्रा नश्चक्रा जरसं तनूनाम् ।
पुत्रासो यत्र पितरो भवन्ति मा नो मध्यारीरिषतायुर्गन्तोः ॥

(ப - ரை) (हेदेवाः! ஓதேவர்களே!) यत्र=எந்த நூறு வயதுக்குள் नः=நம்முடைய तनूनाम्=சரீரத்திற்கு जरसम्=கிழத்தன்மையை चक्र=செய்துவிடுகின்றீர்களோ, கொடுக்கின்றீர்களோ यत्र=எந்தக் கிழப்பருவத்தில் पुत्रासः=பிள்ளைகள் पितरः=ரக்ஷகர்களாக भवन्ति=ஆகின்றரோ (அந்த) शतमिन्नुशरदः=நூறு வருஷங்களும் अन्ति=ரொம்பவும் சமீபத்திலிருக்கின்றன. நூறு வருஷத்தின் முடிவு சீக்கிரமாகவே ஏற்பட்டுவிடுகின்றது என்று தாத்பர்யம். आयुः மிகவும் சுவல்பமான நூறுவருஷ ஆயுளையும் गन्तोः=



முடியப்பெறுவதற்கு (इच्छावर्तते=விருப்பமிருக்கின்றது.) மிகவும் ஸ்வல்பமான நூறுவருஷ காலமாவது பிழைத்திருக்கவேண்டும் என்ற எண்ணமிருக்கின்றது. मध्या=நூறுவருஷத்திற்கு மத்தியில் नः=எங்களை मारीरिषत=ஹிம்ஸிக்கவேண்டாம். இம்மந்திரத்தால் பொதுவில் தேவதைகள் ஆயுர்விருத்தியைக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகின்றனர் என்று கொள்ளவும்.

अदो यद्ब्रह्म विलबम् । पितृणां च यमस्य च ।
वरुणस्याश्विनोरग्नेः । मरुतां च विहायसाम् ॥

(ப - ரை) अदः=இந்த यद्ब्रह्म=யாதொரு பிரும்ம முண்டோ (तत्=அது தான்) पितृणांच=பிதருதேவதைகளுக்கும், यमस्यच=யமனுக்கும், वरुणस्य = வருணனுக்கும் अश्विनोः=அச்வினீ தேவர்களுக்கும், अग्नेः=அக்னிக்கும், मरुतां च=மருத் என்ற தேவர்களுக்கும் विहायसाम्=கந்தர்வர்களுக்கும் विलबम्=ஆதாரமாயிருக்கின்றது. எல்லாப் பிராணிகளும் பரப்பிரும்மத்தை யண்டியே ஜீவிக்கின்றன என்பதுகருத்து.

कामप्रयवणं मे अस्तु । स ह्येवास्मि सनातनः ।
इति नाको ब्रह्मिश्रवो रायो धनम् । पुत्रानापो देवीरिहाऽऽहिता ॥

(ப - ரை) हि=யாதுகாரணம் பற்றி सनातनः=ஆதியற்றதான स एव=அந்தப் பரப்பிரும்மமாகவே अस्मि=நானிருக்கின்றேனோ (ஆகையினால்) कामप्रयवणम् =(அந்தப் பரப்பிரும்மமே) எனக்கு வேண்டிய போக்யவஸ்துக்களைக் கொடுப்பதாக अस्तु=ஏற்படட்டும். आपोदेवीः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! नाकः=துக்கசம்பந்தமற்ற லோகத்தையும், ब्रह्मिश्रवः=பிரும்மவிசார வாக்கியங்களின் கேள்வியையும், रायः=பணத்தையும் धनम्=சந்தோஷத்திற்குச் சாதனமான வீடு ஸ்திரீ முதலியவற்றையும் पुत्रान्=பிள்ளைகளையும் इति=இதுபோன்ற மற்றுமுள்ள போக்கியவஸ்துக்களையும் इह=இப்பொழுது आहित=கொடுங்கள்.

पुरं नवद्वारा ब्रह्मा च व्यक्तꣳशरदोऽष्टौ च ॥
அடிமுதல் 118 பஞ்சாசத்துக்களாகின்றன.
இருபத்தேழாவது அனுவாகம் முற்றிற்று

## இருபத்தெட்டாவது அனுவாகம்.

---

विशीर्ष्णीं गृध्रशीर्ष्णीं च । अपेतो निर्ऋतिꣳहथः ।
परिबाधꣳश्वेतकुक्षम् । निजङ्घꣳशबलोदरम् ॥

(ப-ரை) அக்னி பிரார்த்திக்கப்படுகின்றார்—(अग्ने=ஓ அக்னியே) **विशीर्ष्णीम्**=தலையற்றதாயும், **गृध्रशीर्ष्णीं च**=கழுகின் தலைக்கொப்பான தலையுள்ளதாயுமிருக்கிற **निर्ऋतिम्**=தாரித்திரியத்திற்கு யஜமானியான ராக்ஷஸியை அதாவது - அலக்ஷ்மியை **इत:**= என்னிடமிருந்து **अपजहि**=விரட்டுவீராக. நாசஞ்செய்வீராக. **परिबाधम्**=நான்கு பக்கங்களிலும் ஹிம்ஸிக்கின்றதாயும், **श्वेतकुक्षम्**=சிலவைகள் வெண்ணிறமான வயிறுள்ளதாயும், **निजङ्घम्**=கோணலான கணுக்காலையுடையதாயும் **शबलोदरम्**=சிலவைகள் சிவப்பு, வெளுப்பு இவ்விரண்டு நிறம் கலந்த வயிறுள்ளதாயுமிருக்கிற நிருருதியின் கணத்தையும் (**अपजहि**=நாசஞ்செய்வீராக) தீமையை விளைவிக்கின்ற நிருருதி என்ற ராக்ஷஸிகளிற் சிலர் தலையே இல்லாதவர்களாயும், சிலர் கழுகின் தலைக்கொப்பான தலையையுடையவர்களாயு மிருக்கின்றனர். அவர்களின் கணங்களில் சிலர் வெண்ணிறமான வயிறுள்ளவர்களாயும், சிலர் தவிட்டு நிறமான வயிறுள்ளவர்களாயும், மற்றவர்களுக்குத் தீமைவிளைவிப்பதையே தொழிலாக வுடையவர்களாயு மிருக்கின்றனர். ஓ அக்னியே அவர்களை என்னிடம் வராவண்ணம் தடுப்பதுடன் என்னிடம் வந்திருப்பவர்களையும் நாசஞ்செய்ய வேண்டும் என்று கருத்து.

स तान्वाच्यायया सह । अग्ने नाशय संदशः । ईर्ष्यासूये बुभुक्षाम् ॥
मन्युं कृत्यां च दीधिरे । रथेन किꣳशुकावता । अग्ने नाशय संदशः ॥

(ப-ரை) **अग्ने**=ஓ அக்னியே! **सः (त्वम्)**=அந்த நீர் **संदशः**= எனக்குக் கெடுதலைச் செய்வதற்கு வேண்டிய வழியை நன்றாய்க் கவனித்துக் கொண்டிருக்கின்ற **तान्**=முன்சொல்லிய நிருருதியின் கணங்களை **वाच्यायया**=யாவராலும் நிந்திக்கக் கூடிய பரிபாதன் முதலியவர்களைப் பிள்ளை என்று அபிமானிக்கின்ற நிருருதி



என்ற அலக்ஷ்மியுடன் **नाशय**=நாசஞ் செய்யவேண்டும். (**ये द्विषिणः**=எந்தச்சத்ருக்கள் **अस्मान् प्रति**=நம்மைக்குறித்து) **ईर्ष्यासूये** - [illegible]=நமது நல்லகுணங்களில் பொறாமை **असूया**=நமது நல்ல குணங்களில் பழிசுமத்தல் இவைகளையும், **बुभुक्षाम्**=நமக்குக் கிடைக்கவேண்டிய உணவுபொருள்களை கிடைக்காவண்ணம் தடுத்துப் பசியையும், **मन्युम्**=நம்மைப்பற்றிக் கோபத்தையும், **कृत्यां च**=ஆபிசாரப்பிரயோகத்தையும் **दीधिरे**=விருத்தி செய்கின்றனரோ (**तान्**) **संदशः**=எனக்குத் தீமை விளைவிப்பதில் ஜாகரூகர்களான அந்தச் சத்துருக்களை **अग्ने**=ஓ அக்னியே! **किंशुकावता**=ஹிம்ஸிக்கின்ற கிளிபோலுள்ள பக்ஷிகளையுடைய **रथेन**=ரதத்தினால் **नाशय**=நாசஞ் செய்வீராக.

(தா-ம்) ஓ அக்னியே அலக்ஷ்மியையும், அலக்ஷ்மியின் புத்திரர்களான முன்மந்திரத்தில் சொல்லிய பரிபாதன் முதலியவர்களையும் நாசஞ்செய்யவேண்டும். அத்துடன் எந்த எனது சத்துருக்கள் என்னிடம் பொறாமை, அசூயை, கோபம் இவைகளையடைந்து எனக்குக் கிடைக்கவேண்டிய உணவுபொருள்களைக் கிடைக்காவண்ணம் தடைசெய்து பசியால்வருந்தும்படி செய்கின்றனரோ, எவர்கள் ஆபிசாரப்பிரயோகம் செய்கின்றனரோ அவர்கள் யாவரையும் ஹிம்ஸிக்கின்ற பறவையுடன் கூடிய ரதத்தில் ஏறிக்கொண்டு நாசஞ்செய்யவேண்டும். (எ - று)

**विशीर्ष्णीं दश** அடிமுதல் 119 பஞ்சாசத்துக்களாகின்றன

இருபத்தெட்டாவது அனுவாகம் முற்றிற்று.

## இருபத்தொன்பதாவது அனுவாகம்.

---

पर्जन्याय प्रगायत । दिवस्पुत्राय मीढुषे । स नो यवसमिच्छतु ।

(ப-ரை) பர்ஜன்யன் என்ற தேவன் பிரார்த்திக்கப்படுகின்றான் (**हे मानवाः**=ஓ மனிதர்களே!) **दिवस्पुत्राय**=த்யுலோகத்தின் பிள்

னையாயும் (ஆகாசத்தி லிருப்பதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது) **मीढुषे**=ஜலத்தை வர்ஷிக்கின்றதாயு மிருக்கிற **पर्जन्याय**=பர்ஜன்யன் என்ற தேவதையின் பொருட்டு **सः**=அந்த பர்ஜன்யன் என்ற தேவன் **नः**=நமக்கு **यवसम्**=உணவை (**दातुम्**=கொடுப்பதற்கு) **इच्छतु**=சங்கற்பிக்கவேண்டும் (**इति**=என்று) **प्रगायत**=ஸ்தோத்திரஞ் செய்வீர்களாக.

इदं वचः पर्जन्याय स्वराजे । हृदो अस्त्वन्तरं तद्युयोत ।

मयोभूर्वातो विश्वकृष्टयस्सन्त्वस्मे । सुपिप्पला ओषधीर्देवगोपाः ।

(ப - ரை) **स्वराजे**=யஜமானனான **पर्जन्याय**=பர்ஜன்யன் என்ற தேவனையும் பொருட்டு (**अस्माभिरुक्तम्**=நம்மாற் சொல்லப்பட்ட) **इदम्**=இந்த **वचः**=ஸ்தோத்திர ரூபமான வார்த்தை **हृदः**, **अन्तरम्**=பர்ஜன்யதேவதையின் ஹிருதயத்திற்குள் நுழைந்ததாக **अस्तु**=ஆகவேண்டும். **तत्**=அதற்காக **युयोत** = முயற்சி செய்யுங்கள், **वातः**=காற்று **अस्मे**=நம்மிடம் **मयोभूः**=சுகத்தை யுண்டுபண்ணுவதாக (**अस्तु**=ஆகவேண்டும்) **विश्वकृष्टयः**=எல்லா மனிதர்களும், (**अस्मासु**=நம்மிடம் **मयोभुवः**=சுகத்தைக் கொடுக்கின்றவர்களாக) **सन्तु**=ஆகவேண்டும் **ओषधीः**=பயிர்கள் **सुपिप्पलाः**=நல்லவிளைவுடன் கூடினவைகளாகவும், **देवगोपाः**=தேவதைகளைக் காப்பாற்றுகின்றவைகளாகவும் (ஓஷதிகளின் தான்யம் முதலியனவற்றால் ஹவிஸ்ஸை சம்பாதித்து யக்ஞம் முதலிய சத்கர்மங்களில் தேவதைகளாராதிக்கப்படுவதா லிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **सन्तु** = ஆகவேண்டும்.

यो गर्भमोषधीनाम् । गवां कृणोत्यर्वताम् । पर्जन्यः पुरुषीणाम् ।

(ப - ரை) **यः**=எந்த பர்ஜன்யன் என்ற தேவன் **ओषधीनाम्**=பயிர்களுக்கும், **गवाम्**=பசுக்களுக்கும், **अर्वताम्**=பெண் குதிரைகளுக்கும் **पुरुषीणाम्**=மனுஷ்ய ஸ்திரீகளுக்கும் **गर्भम्**=கர்ப்பத்தை **कृणोति**=செய்கிறானோ (**सः**=அந்த பர்ஜன்யன் என்ற தேவன் **मयोभूः**=சுகத்தைக் கொடுக்கின்றவனாக **भवतु**=ஆகவேண்டும்.) ஓஷதிகள் செழிப்பாய் வளர்ந்து அதனதன் பலன்களைக் கொடுப்பதற்கோ, பசு, மனிதன் முதலிய பிராணிகள் சந்ததி விருத்தியுடன் சுகமாய் ஜீவிப்பதற்கோ மழை இன்றியமையாச் சாதனமானதாலும், அம்மழை பர்ஜன்யன் என்ற தேவனின் அனுக்கிரஹத்தா லேற்படவேண்டி இருப்பதாலும் பர்ஜன்யன் என்ற தேவனே கர்ப்பத்தை யுண்டுபண்ணுவதாய் வர்ணிக்கப்படுகின்றது.



**पर्जन्याय दश** அடிமுதல் 120 பஞ்சாசத்துக்களாகின்றன.

இருபத்தோன்பதாவது அனுவாகம் முற்றிற்று.

முப்பதாவது அனுவாகம்.

(அ-கை) பின்படிக்கப்படும் மந்திரங்களால் வீர்யம் (சுக்லம்) விருத்தியடையவேண்டுமென்று பிரார்த்திக்கப் படுகின்றது. ஸ்மிருதிகளில் ஸ்வப்னம் முதலியவற்றில் வீர்யஸ்கலித முண்டானால் மறுதினம் காலையில் ஸ்நானஞ்செய்து இம்மந்திரங்களை ஜபிக்கவேண்டுமென்று பிராயச்சித்தமாகவு முபதேசிக்கப் பட்டிருக்கிறது.

पुनर्मामैत्विन्द्रियम् । पुनरायुः पुनर्भगः । पुनर्ब्राह्मणमैतु मा ।

पुनर्द्रविणमैतु मा ।

(ப - ரை) **इन्द्रियम्**=(நாசத்தையடைந்த) வீர்யம் **पुनः**=மறுபடியும் **माम्**=என்னை **एतु**=வந்து அடையட்டும். **पुनः**=மறுபடியும் **आयुः**=(சென்ற) ஆயுஸும், **पुनः**=மறுபடியும் **भगः**=(நாசமடைந்த) பாக்யமும் **एतु**=வந்தடையட்டும். **मा**=என்னை **पुनः**=மறுபடியும் **ब्राह्मणम्**=பிரும்ம தேஜஸ்ஸானது **एतु**=வந்தடையட்டும். **मा**=என்னை **पुनः**=மறுபடியும் **द्रविणम्**=பணம் **एतु**=வந்தடையட்டும். ஓ சூர்யமண்டலத்தில் வஸிக்கின்ற சர்வேச்வரனே ! தங்களுடைய அனுக்கிரஹத்தால் நாசமடைந்த வீர்யம் முதலியவைகள் மறுபடியும் கிடைக்கவேண்டும்.

यन्मेऽद्यरेतः पृथिवीमस्कान्। यदोषधीरप्यसरद्यदापः ।

इदं तत्पुनराददे। दीर्घायुत्वाय वर्चसे ॥

(ப - ரை) अद्य=இன்றைதினம் मे=என்னுடைய यद्रेतः=எந்த வீரியம் पृथिवीम्=பிருதிவியில் अस्कान्=தவறிவிழுந்ததோ यत्=எந்தவீரியம் ओषधीः अपि=ஓஷதிகளிலும் असरत्=சம்பந்தித்ததோ यत्=எந்த வீரியம் आपः=ஜலங்களில் असरत्=சம்பந்தித்ததோ तदिदम्=அந்தரேதஸ்ஸை दीर्घायुत्वाय=ஆயுளின் விருத்திக்காகவும் वर्चसे=பிரும்மதேஜஸ்ஸிற்காகவும் अहम्=நான் पुनः=மறுபடியும் आददे=ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும். அடையவேண்டும். ஓ பரமாத்மாவே! தங்களுடைய அனுக்கிரஹத்தால் மறுபடியும் சரீரத்தில் வீரிய விர்த்தியையடைந்து நீண்ட ஆயுளையும், பிரும்ம தேஜஸ்ஸையு மடையவேண்டும். விரிய விருத்தி இல்லாதவருக்கு நீண்ட ஆயுளும், சரீரகாந்தியுமுண்டாவதில்லை என்பது அனுபவசித்தம் என்றுகருத்து.

यन्मे रेतः प्रसिच्यते। यन्म आजायते पुनः ॥

तेन माममृतं कुरु। तेन सुप्रजसं कुरु ॥

(ப - ரை) मे=என்னுடைய यद्रेतः=எந்தவீரியம் प्रसिच्यते=கர்ப்பாசயத்தில் செலுத்தப்படுமோ, मे=என்னுடைய यत्=எந்தவீரியம் पुनः=மறுபடியும் आजायते=புத்திரரூபமாயுண்டாகுமோ तेन=அந்தவீரியத்தால் माम्=என்னை अमृतम्=சுகமுள்ளவனாகவும் सुप्रजसम्=நல்லசந்ததியுள்ளவனாகவும் कुरु=செய்வீராக. ஓ பரமாத்மாவே! எந்த வீரியம் ஸ்திரீயின் கர்ப்பாசயத்தில் சென்று சத்புத்திர ரூபமாய் வெளிவந்து என்னைச் சுகப்படுத்துமோ அத்தகைய வீரியம் விருத்தியடையுமாறு அனுக்கிரஹிக்கவேண்டும் என்று கருத்து.

पुनर्द्वेच ॥ அடி-முதல் 121 பஞ்சாசத்துக்களாகின்றன.

முப்பதாவது அனுவாகம் முற்றிற்று.

---



முப்பத்தோன்றாவது அனுவாகம்.

(அ-கை) இவ்வனுவாகத்தில் வைச்ரவணயக்ஞம் என்ற கர்மத்திற்கு அங்கமான மந்திரங்கள் படிக்கப்படுகின்றன. முதல் நான்கு மந்திரங்களால் வைச்ரவணன் என்ற தேவனை ஆவாஹனஞ் செய்யவேண்டும்.

अद्धयस्तिरोधा जायत। तव वैश्रवणस्सदा।

तिरोधेहि सपत्नान्नः। ये अपोऽश्नन्ति केच न ॥

(ப - ரை) (हेकुबेर !=ஓ குபேரனே! त्वयागृहीतः=உம்மால் ஸ்வீகரிக்கப்பட்ட) वैश्रवणः = (விச்ரவஸ் என்பவரின்பிள்ளையான) யாதொரு வைச்ரவணனுண்டோ (सः=அவன்) सदा=எப்பொழுதும் तव=உம்முடைய अद्धयः=கர்மங்களை तिरोधाः=மறைக்கின்றவனாக अजायत=ஏற்பட்டான். नः=எங்களுடைய सपत्नान्=சத்துருக்களை तिरोधेहि=நாசஞ்செய்வீராக. ये केचन=மற்றுமுள்ள எவர்கள் अपः=என்னாலனுஷ்டிக்கப் படுகின்ற சத்கர்மங்களை अश्नन्ति=நாசஞ் செய்கின்றனரோ (तानपितिरोधेहि=அவர்களையும் நாசஞ் செய்வீராக.)

(தா-ம்) ஓ குபேரனே! உம்மிடமிருக்கின்ற வைச்ரவணன் என்றவன் தங்களைக்குறித்து எந்தக்கர்மத்தையு மனுஷ்டிக்காவண்ணம் எல்லோருக்கும் தடைசெய்து கொண்டிருக்கிறான். அவனை அவ்விதம் தடைசெய்யா வண்ணம் தடுத்து எனது சத்துருக்களைத் தலைப்பதில் தூண்டவேண்டும். மற்றுமெவர்கள் சத்கர்மங்களுக்கு விக்னஞ்செய்கின்றனரோ அவர்களை நாசஞ்செய்ய வேண்டும். (எ - று)

त्वाष्ट्रीं मायां वैश्रवणः। रथꣳसहस्र*वन्धुरम्।

पुरुश्चक्रꣳसहस्राश्वम्। आस्थायायाहि नो बलिम् ॥

---

* सहस्रबन्धुरम्=என்னும் பாடமிருக்கின்றது. மேல் போட்டிருப்பதே பாஷ்ய சம்மதபாடம்.

(ப - ரை) (हे कुबेर=ஓ குபேரனே! त्वम्=நீர்) वैश्रवणः=வைச்ரவணன் என்றவனுடன் सहस्रवन्धुरम्=அநேகம் குறுக்குச் சட்டங்களுடன் கூடின சக்கிரமுள்ள ஏற்காலையுடையதாயும் पुरुश्चक्रम्=அநேகம் சக்கிரங்களுடன் கூடினதாயும், सहस्राश्वम्=ஆயிரக்கணக்கான குதிரைகள் கட்டப்பட்டுள்ளதாயுமிருக்கிற रथम्=தேரை आस्थाय=ஏறிக்கொண்டு नः=எங்களுடைய बलिम्=பூஜையை (ग्रहीतुम्=பெற்றுக்கொள்வதற்காக) आयाहि=வருவீராக.

यस्मै भूतानि बलिमावहन्ति। धनं गावो हस्तिहिरण्यमश्वान्।
असामसुमतौ यज्ञियस्य। श्रियं बिभ्रतोऽन्नमुखीं विराजम्॥

(ப - ரை) यस्मै=எந்தக்குபேரனுக்கு भूतानि=எல்லாப்பிராணிகளும் धनम्=பணத்தையும் गावः = பசுக்களையும் हस्तिहिरण्यम्=யானை சுவர்ணம் இவைகளையும் अश्वान्=குதிரைகளையும் बलिम्=பலியாக (பூஜாத்திரவ்யமாக) आहरन्ति=சமர்ப்பிக்கின்றனவோ अन्नमुखीम्=அன்னத்தைப் பிரதானமாயுடையதாயும் विराजम्=நன்ருய்ப் பிரகாசிக்கின்றதாயும் (விருத்தியுள்ளதாயும்) இருக்கிற श्रियम्=சம்பத்தை बिभ्रतः=தரித்துக் கொண்டிருக்கிறவரும் यज्ञियस्य=யாகம் முதலிய சத்கர்மங்களாலாராதிக்கத் தகுந்தவருமான (तस्य=அந்தக்குபேரனுடைய सुमतौ=அனுக்கிரஹ சங்கல்பத்தில் असाम=நாமிருக்கவேண்டும். எல்லாப் பிராணிகளும் எந்தக்குபேரனிடம் தம்மிடமுள்ள எல்லாப்பொருள்களையு மர்ப்பணஞ் செய்து பூஜைசெய்கின்றவோ அந்தக் குபேரன் என்விஷயத்தில் அனுக்ரஹ சங்கல்பத்தைச் செய்யவேண்டும் என்று கருத்து.

सुदर्शने च क्रौञ्चे च। मैनाके च महागिरौ।
सतद्वाट्टारगमन्ता। सꣳहार्यं नगरं तव॥

(ப - ரை) (हे कुबेर=ஓ குபேரனே!) सुदर्शने च = சுதர்சனம் என்ற மலையிலும், क्रौञ्चेच=கிரௌஞ்சம் என்ற மலையிலும், महागिरौ=பெரியமலையான मैनाकेच=மைனாகம் என்ற மலையிலும் இருக்கின்ற सतद्वाट्टारगमन्ता—सत=நூற்றுக்கணக்கான द्वा=வாயிற்படிகள் अट्टार=கட்டுகள் गमन्ता=வீதிகள் இவைகளையுடைய तव=உமமுடைய नगरम्=பட்டணம் संहार्यम्=விடத்தக்கது. ஓ குபேரனே! சுதர்சனம், மைனாகம் முதலிய பெரியமலைகளில் நூற்றுக்கணக்கான வாயிற்படிகள், கட்டுகள், வீதிகள் இவை முதலியவற்றுடன் விசித்திரமாய் கட்டப்பட்டுள்ள உமது நகரத்தினின்றும் கிளம்பி என்னை அனுக்கிரஹிப்பதற்காக வரவேண்டும் என்று கருத்து.



इति मन्त्राः। कल्पोऽत ऊर्ध्वम्।

(ப - ரை) கேட்கின்றவர்களின் புத்திக்கு ஐகாக்கிரியம் ஏற்படுவதற்காக இதுவரையில் சொன்னது இன்னது, இனி சொல்லப்போவது இன்னது என்று பிரித்துக் காண்பிக்கிறுர்—इति=மேற் படிக்கப்பட்டவைகள் मन्त्राः=மந்திரங்கள். अतः=இதற்கு ऊर्ध्वम्=பின் படிக்கப்படும் பாகம் कल्पः=வைச்ரவணயக்ஞத்தின் அனுஷ்டிக்கவேண்டிய முறையை உபதேசிக்கின்ற பிராம்மணம். இதுவரையில் வைச்ரவண யக்ஞத்தின் மந்திரங்கள் படிக்கப்பட்டன. இனி ஷை யக்ஞத்தின் அனுஷ்டானப் பிரகாரத்தைப் போதிக்கின்ற பிராம்மண வாக்யங்கள் படிக்கப்படுகின்றன.

यदि बलिꣳ हरेत्। हिरण्यनाभये वितुदये कौबेरायायं बलिः।
सर्वभूताधिपतये नम इति। अथ बलिꣳहृत्वोपतिष्ठेत॥

(ப - ரை) बलिम्=பலியை यदि हरेत्=போடுவதாக இருந்தால் हिरण्यनाभये சுவர்ணமயமான ஆபரணத்தை உந்தியில் தரித்துக்கொண்டிருப்பவனும், वितुदये=தனம் கிடைக்காவண்ணம் எல்லாப் பிராணிகளையும் ஹிம்ஸிப்பவனுமான कौबेराय=குபேரனைச் சேர்ந்த வைச்ரவணன் என்றவனுக்கு अयंबलिः=இந்தப்பலி (दत्तोऽस्तु=கொடுக்கப்பட்டதா யாகவேண்டும்) सर्वभूताधिपतये=எல்லாப்பிராணிகளுக்கும் யஜமானனுன வைச்ரவணனுக்கு नमः=நமஸ்காரம். इति=என்ற மந்திரத்தைச்சொல்லி (बलिम्=பலியை हरेत्=போடவேண்டும்.) बलिम्=பலியை हृत्वा=போட்டு अथ=பிறகு उपतिष्ठेत=பின் படிக்கப்படும் மந்திரத்தால் ஸ்தோத்திரஞ் செய்யவேண்டும்.

त्रातं क्षत्रं वैश्रवणः। ब्राह्मणा वयंस्मः॥
नमस्ते अस्तु मा मा हिंसीः। अस्मात्प्रविश्यान्नमद्धीति॥

(ப - ரை) **वैश्रवणः**=வைச்ரவணன் என்று பெயருள்ள நீர் **त्रातम्** = உபத்திரவத்தினின்றும் காப்பாற்றுகிறவராகவும் **त्रातम्**= க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்தவராகவும் (**असि** = இருக்கின்றீர்) **वयम्**=நாங்கள் **ब्राह्मणाः**=பிராம்மண ஜாதியைச்சேர்ந்தவர்களாக **स्मः**=இருக்கின்றோம். ஆதலால் தங்களால் பரிபாலிக்கத் தகுந்தவர்களாக இருக்கிறோம். **ते**=உமக்கு **नमः**=நமஸ்காரம் **अस्तु** = இருக்கட்டும். **मा**=என்னை **माहिंसीः** = ஹிம்ஸிக்கவேண்டாம். **अस्मात्** = தங்களை நமஸ்கரிப்பதாலும், பிராம்மணனுயிருப்பதாலும் (**अत्र**=இவ்விடத்தில்) **प्रविश्य** = வந்து **अन्नम्** = அன்னத்தை **अद्धि**=சாப்பிடவேண்டும் **इति**=என்ற மந்திரத்தால் (**उपतिष्ठेत**=ஸ்தோத்திரஞ்செய்யவும்.) ஓ வைச்ரவணனே! நீர் அனைவரையும் உபத்திரவத்தினின்றும் காப்பாற்றுகிரவராகவும் க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்தவராகவுமிருக்கின்றீர். நானோ பிராம்மணனுயிருப்பதுபற்றி தங்களால் பரிபாலிக்கத்தகுந்தவனுகவும், நமஸ்கரிக்கின்றவனுகவுமிருக்கிறேன். ஆதலால் என்னுல் கொடுக்கப்படும் அன்ன ரூபமான பலியைப் பெற்றுக்கொண்டு எனக்கு எவ்வித தீங்கு மிழைக்காமல் கார்க்கவேண்டும் என்று கருத்து.

अथ तमग्निमादधीत। यस्मिन्नेतत्कर्म प्रयुंजीत।

(ப - ரை) **यस्मिन्**=எந்த அக்னியில் **एतत्कर्म**=இந்த வைச்ரவணயக்ஞத்தை **प्रयुंजीत**=அனுஷ்டிக்கிறுனே **अथ** = முற்கூறிய ஸ்தோத்திரத்தையனுஷ்டித்து முடித்தபிறகு **तमग्निम्**=அந்த அக்னியை **आदधीत**=பூமியில் ஸ்தாபனஞ் செய்துவிடவேண்டும்.

(அ - கை) அக்னியை பூமியில் ஸ்தாபனஞ் செய்யும் பொழுது படிக்கவேண்டிய மந்திரமுபதேசிக்கப்படுகின்றது—

तिरोधा भूः। तिरोधा भुवः। तिरोधा स्वः।
तिरोधा भूर्भुवस्स्वः। सर्वेषां लोकानामाधिपत्ये सीदेति॥



(ப - ரை) (**हे अग्ने!** ஓ அக்னியே!) **भूः** = பூலோகத்தை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **भुवः**=புவர்லோகத்தை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **स्वः**=சுவர்க்கலோகத்தை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **भूर्भुवस्स्वः**=பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் இவைகளை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **सर्वेषाम्**=சமஸ்தமான **लोकानाम्**=லோகங்களை **आधिपत्ये**=ரக்ஷிப்பதற்காக **सीद**=இங்கு உட்காரவேண்டும். **इति**=இது அக்னியைப் பூமியில் வைப்பதற்காக ஏற்பட்டமந்திரம்.

अथ तमग्निमिन्धीत। यस्मिन्नेतत्कर्म प्रयुंजीत॥

(ப - ரை) **यस्मिन्**=எந்த அக்கினியில் **एतत्** = இந்த **कर्म** = "வைச்ரவணபலி" என்ற இந்தக்கர்மாவை **प्रयुंजीत**=அனுஷ்டிப்பானே **तम्**=அந்த **अग्निम्**=அக்கினியை **इन्धीत**=பின் படிக்கப்படும் மந்திரங்களைச் சொல்லி சமித்தை ஹோமஞ் செய்யும் வாயிலாக ஜ்வலிக்கும்படி செய்யவேண்டும். அம்மந்திரமாவது—

तिरोधा भूः स्वाहा। तिरोधा भुवस्स्वाहा। तिरोधा भूर्भुवस्स्वः स्वाहा॥

(ப - ரை) (**हे अग्ने!** ஓ அக்னியே!) **भूः** = பூலோகத்தை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **स्वाहा**=இந்த ஸமித்தானது ஹோமஞ் செய்யப்பட்டதா யாகவேண்டும். **भुवः**=புவர்லோகத்தை **तिरोधाः**=உமது காந்தியால் மறைப்பீராக. **स्वाहा**=இந்த ஸமித்தானது ஹோமஞ் செய்யப்பட்டதா யாகவேண்டும். **स्वः**=சுவர்க்கலோகத்தை **तिरोधाः** = உமது காந்தியால் மறைப்பீராக. **स्वाहा**=இந்த ஸமித்தானது ஹோமஞ் செய்யப்பட்டதாயாகவேண்டும். **भूर्भुवस्स्वः**=பூலோகம், புவர்லோகம் சுவர்லோகம் இவைகளை **तिरोधाः**=சேர்ந்தபடியாய் உமது காந்தியால் மறைப்பீராக. **स्वाहा**=இந்த ஸமித்தானது ஹோமஞ் செய்யப்பட்டதாயாகவேண்டும்.

(அ - கை) வைச்ரவணயக்ஞத்தை அனுஷ்டிப்பதற்குரிய கால முபதேசிக்கப்படுகிறது—

यस्मिन्नस्य काले सर्वाआहुतीर्हुता भवेयुः। अपि ब्राह्मणमुखीनाः।
तस्मिन्नह्नः काले प्रयुंजीत॥ परस्सुप्तजनाद्वेपि॥

(ப - ரை) **अस्य**=இந்த ஆருணகேதுக சயனத்தினுடைய **ब्राह्मणमुखीनाः=रुद्रो वा एष यदग्निः स एतर्हि जातः**=என்றது முதலிய பிராம்மண வாக்யங்களால் உபதேசிக்கப்பட்ட சதருத்ரீய ஹோமம் முதலிய **सर्वाः**=சமஸ்தமான **आहुतीः**=ஆஹுதிகள் **यस्मिन् काले**=எப்பொழுது **हुताः**=அனுஷ்டிக்கப்பட்டவைகளாக **भवेयुः**=ஆகுமோ **अह्नः**=அந்தப் பகலைச்சேர்ந்த **तस्मिन्, काले**=அந்தக்காலத்திலோ, **वेपि**=அல்லது **सुप्तजनात्**=எல்லா ஜனங்களும் தூங்கியதற்கு **परः**=பிறகாவது **प्रयुंजीत**=இந்த "வைச்ரவணயக்ஞம்" என்ற கர்மத்தை யனுஷ்டிக்கவேண்டும்.

मास्म प्रमाद्यन्तमाध्यापयेत्। सर्वार्थास्सिद्ध्यन्ते। य एवं वेद।
क्षुध्यन्निदमजानताम्। सर्वार्था न सिद्ध्यन्ते॥

(ப - ரை) **प्रमाद्यन्त्यम्**=தவறுதலான நடத்தையுள்ள அதாவது-கெட்டநடத்தையுள்ள புருஷனை **मास्माध्यापयेत्**=படிப்பிக்கக்கூடாது. ஒழுங்கான நடத்தையில்லாத புருஷனுக்கு இந்த வைச்ரவண யக்ஞபாகத்தை அத்யயனஞ் செய்விக்கக்கூடாது. **यः**=எவன் **एवम्**=இவ்விதம் **वेद** = அறிவனோ (**तस्य**=அவனுக்கு) **सर्वार्थाः**=சமஸ்தமான அபீஷ்டங்களும் **सिद्ध्यन्ते**=சித்தி பெறுகின்றன. **इदम्**=இந்த வைச்ரவணயக்ஞத்தை **अजानताम्**=குருவின் முகத்தினின்று அறியாதவர்களும் (**अत एव** = ஆனதுபற்றியே) **क्षुध्यन्**=அன்னங் கிடைக்காமையால் பசியால்வருந்துகின்றவர்களுமானபுருஷர்களுக்கு **सर्वार्थाः**=எல்லா அபீஷ்டங்களும் **नसिद्ध्यन्ते**=சித்திபெறாது. இந்த வைச்ரவணயக்ஞத்தை ஆசாரியரின் முகத்தினின்றும் நன்றாயறிந்தவன் சகலவிதமான போக போக்யங்களுடன் இவ்வுலகில் ஜீவித்திருப்பான். இதை அறியாதவர்கள் உண்ண உணவு கூடக் கிடைக்காமல் மிகுந்த கஷ்டத்தையனுபவிப்பார்கள் என்று கருத்து.

(அ - கை) வைச்ரவணனுக்கு பலி போடும்பொழுது பின் எழுதப்படும் மந்திரத்தைப்படிக்கவேண்டும்—



यस्ते विघातुको भ्राता। ममान्तर्हृदये श्रितः।
तस्मा इममग्रपिण्डं जुहोमि। समेऽर्थान्माविवधीत्। मयि स्वाहा॥

(ப - ரை) (**हे कुवेर**=ஓ குபேரனே !) **विघातुकः**=அனைவருக்கும் பொருள் கிடைக்காவண்ணம் விக்னஞ் செய்கின்ற **ते**=உன்னுடைய **यः**=எந்த **भ्राता**=தம்பியான வைச்ரவணனுண்டோ (**सः**=அவன்) **मम**=என்னுடைய **अन्तर्हृदये**=ஹிருதயத்தில் **श्रितः**=வஸிக்கின்றான். அதாவது—அவனை நான் தியானஞ் செய்கிறேன். **तस्मै**=அந்த வைச்ரவணனைக் குறித்து **इदम्**=இந்த **अग्र-पिण्डम्**=சிறந்ததான அன்னபிண்டத்தை **जुहोमि**=ஹோமஞ் செய்கிறேன். **सः**=அந்த வைச்ரவணன் **मे**=என்னுடைய **अर्थान्**=கிடைக்கவேண்டிய பொருள்களை **माविवधीत्** = நாசஞ்செய்ய வேண்டாம். (**किन्तु**=ஆனால்) **मयि**=என்னிடம் (**संपादयतु**=கிடைக்கும்படி செய்யட்டும்.) பலதுறைகளிலும் எனக்குப்பொருள் கிடைக்கும் வண்ணம் அனுக்கிரஹிக்கவேண்டும். (**तदर्थम्**=அதற்காக) **स्वाहा**=இந்தப்பிண்டம் அக்னியில் போடப்பட்டதா யாகவேண்டும்.

(அ - கை) பலியைப்போட்ட பிறகு பின் எழுதப்படும் மந்திரத்தைப்படித்து வைச்ரவணனை உபஸ்தானஞ் செய்யவேண்டும்—

राजाधिराजाय प्रसह्यसाहिने। नमो वयं वैश्रवणाय कुर्महे। स मे कामान्कामकामाय मह्यम्। कामेश्वरो वैश्रवणो ददातु। कुबेराय वैश्रवणाय। महाराजाय नमः। केतवो अरुणासश्च। ऋषयो वातरशनाः। प्रतिष्ठाꣳशतधा हि। समाहितासो सहस्रधायसम्। शिवानश्शन्तमा भवन्तु। दिव्या आप ओषधयः। सुमृडीका सरस्वति। मा ते व्योम संदृशि।

(ப-ரை) **राजाधिराजाय**=அரசர்களுக்கும் அரசனும் **प्रसह्यसाहिने**=சமஸ்தமான லாபங்களையும் பலாத்காரமாய் தடுக்கின்றவனுமான **वैश्रवणाय**=வைச்ரவணனுக்கு **नमः**=நமஸ்காரத்தை **वयम्**=நாங்கள் **कुर्महे**=செய்கின்றோம். **कामेश्वरः**=சமஸ்தமான அபீஷ்டங்க

ளுக்கும் நாயகனான, அதாவது சமஸ்த அபீஷ்டங்களையும் கொடுக்கின்றவரான **वैश्रवण**:=வைச்ரவணன் என்றதேவன் **काम-कामाय**=அபீஷ்டங்களை விரும்புகின்ற **मह्यम्**=எனக்கு **मे**=என்னால் விரும்பப்பட்ட **कामान्**=காமங்களை **ददातु**=கொடுக்கட்டும். **कुबे-राय**=குபேரனைச்சேர்ந்தவரும், **महाराजाय**=மஹாராஜனுமான வைச்ரவணனுக்கு **नमः**=நமஸ்காரம். **केतवः**="கேது" என்று பெயர் பூண்டவர்களும் **अरुणासः**="அருண" என்று ,பெயர் பூண்டவர்களும் **वातरशनाः**="வாதரசனர்" என்று பெயர் பூண்டவர்களுமான **ऋषयः**=ருஷிகள் **समाहितासः** = அனுக்கிரஹிக்க வேண்டுமென்ற சங்கல்பமுள்ளவர்களாய்க் கொண்டு **शतधा**=நூறுவிதமாயும் **सहस्रधायसम्**=ஆயிரம் விதமாயுமுள்ள **प्रतिष्ठाम्**=பிரதிஷ்டையை (கீர்த்தியை) (**संपादयन्तु**=உண்டு பண்ணட்டும்) மீதமுள்ள பாகங்களுக்கு 13வது பக்கத்தில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

अश्वान् वल्तिर्भुवो भवेयुः श्रितश्च सत्तच।

அடிமுதல் 127 பஞ்சாசத்துக்களாகின்றன.

முப்பத்தோன்றுவது அனுவாகம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது அனுவாகம்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்திற்கு அங்கபூதமான விரதம் உபதேசிக்கப்படுகின்றது—

संवत्सरमेतद्व्रतं चरेत् द्वौ वा मासौ। नियमः समासेन॥

(ப - ரை) எவன் ஆருணகேதுக சயனத்தை அனுஷ்டிப்பதாய் சங்கல்பிக்கிறுனோ அவன் அதிகாரம் சித்திப்பதற்காக **एतद्-व्रतम्**=கீழ் சொல்லப்படும் விரதத்தை **संवत्सरम्**=ஒருவருஷகாலம் **वा**=அல்லது **द्वौमासौ**=இரண்டு மாதமாவது **चरेत्**=அனுஷ்டிக்கவேண்டும். விரதசப்தத்தின் அர்த்தம் சொல்லப்படுகிறது—



**नियमः**=நியமம் என்பது **समासेन**=சுருக்கமாய் (**व्रत शब्दार्थः**=விரதம் என்ற சப்தத்தின் பொருள்.)

(அ - கை) இன்னின்னதை அனுஷ்டிக்கவேண்டுமென்று விஸ்தரித்து உபதேசிக்கப்படுகிறது—

तस्मिन्नियमविशेषाः। त्रिषवणमुदकोपस्पर्शी। चतुर्थकालपानभक्तः स्यात्। अहरहर्वा भैक्षमश्नीयात्। औदुंबरीभिस्समिद्भिरग्निं परिचरेत। पुनर्मामैत्विन्द्रियमित्येतेनाऽनुवाकेन। उद्धृतपरिपूताभिरद्भिः कार्यं कुर्वीत। असंचयवान्। अग्नये वायवे सूर्याय। ब्रह्मणे प्रजापतये। चन्द्रमसे नक्षत्रेभ्यः। ऋतुभ्यस्संवत्सराय। वरुणायारुणायेति व्रतहोमाः। प्रवर्ग्यवदादेशः। अरुणाः काण्डऋषयः॥

(ப - ரை) **तस्मिन्**=அனுஷ்டிக்கவேண்டிய அந்த விரதத்தில் **नियमविशेषाः**=நியமத்தின் உட்பிரிவுகள் (**उच्यन्ते**=சொல்லப்படுகின்றன) அவையாவன—**त्रिषवणम्**=காலை, நடுப்பகல், மாலை என்ற மூன்று காலங்களில் **उदकोपस्पर्शी**=ஜலத்தினால் ஸ்னானஞ் செய்பவனாக (**स्यात्**=இருக்கவேண்டும்) **चतुर्थकालपानभक्तः** 4வது காலத்தில் பால் முதலியதிரவத்திரவ்யத்தைக் குடித்தல், அன்னத்தைப் புஜித்தல் இவைகளையுடையவனாக **स्यात्**=இருக்கவேண்டும். சாஸ்திரங்களில் காலை மாலை இரண்டு காலங்களில் மட்டும் போஜனத்தை யுட்கொள்ளுமாறு விதித்திருக்கின்றது. இன்று காலையிலிருந்து மறுதினம் மாலை போஜனத்திற்காக விதிக்கப் பட்டகாலத்தில் 4வது காலமாக ஆகின்றது. ஆகவே இன்று காலையில் ஆஹாரஞ்செய்தால் மறுதினம்மாலையில்தான் மறுபடியும் ஆஹாரஞ் செய்யவேண்டும் அதன் மத்தியில் ஆஹாரஞ் செய்யக்கூடாது. இவ்விதமே மறுதினம் மாலையில் ஆஹாரஞ்செய்தால் 4வது தினம் காலையில்போஜனஞ் செய்யவேண்டும். ஆகவே இவ்விதமே ஒருவருஷகாலமோ இரண்டுமாதமோ புஜித்துவரவும். இவ்விதம் 4வது காலத்தில் புஜித்துக்கொண்டிருக்க சக்தியில்லாவிடில் **अहरहर्वा**=ஒவ்வொருதினமும் **भैक्षम्**=பல வீடுகள் சென்று யாசித்துக்கிடைத்த அன்னத்தை **अश्नीयात्**=சாப்பிட வேண்டும்.

औदुंबरीभिःसमिद्भिः=அத்திமரத்தின் குச்சிகளால் अग्निम्=அக்னியை पुनर्मामैत्विन्द्रिय मित्येतेनानुवाकेन=पुनर्मामैत्विन्द्रयम्=என்ற அனுவாகத்தினுல் परिचरेत्=பூஜிக்கவேண்டும். पुनर्मामैत्विन्द्रियम्=என்ற அனுவாகத்தில் படிக்கப்பட்ட மந்திரங்களைப்படித்து அத்திசமித்துகளை அக்னியில் ஹோமஞ் செய்யவேண்டும். पुनर्मामैत्विन्द्रियम् முதலியமந்திரங்கள் 227வதுபக்கத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. பொருளும் அங்கு எழுதப்பட்டிருக்கிறது. उद्धृतपरिपूताभिः=பாத்திரத்தில் கிரஹிக்கப்பட்டதும், துணியால் வடிக்கட்டப்பட்டதுமான अद्भिः=ஜலத்தினுல் कार्यम्=சந்தியாவந்தனம், ஆசமனம் முதலிய கார்யத்தை कुर्वीत=செய்யவேண்டும். असंचयवान्=பிக்ஷா பாத்திரம் தவிர்த்து மற்றதில் ஆஹாரத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ளாதவனுக स्यात्=இருக்கவேண்டும். அதாவது அதிகமாய்ப் பொருளைச் சேகரித்து வைத்துக்கொள்ளக் கூடாது. अग्नये=அக்னியைக்குறித்தும், वायवे=வாயுவைக்குறித்தும் सूर्याय=சூரியனைக்குறித்தும் ब्रह्मणे=பிரும்மதேவனைக்குறித்தும் प्रजापतये=பிரஜாபதி என்ற தேவனைக்குறித்தும், चन्द्रमसे=சந்திரனைக்குறித்தும் नक्षत्रेभ्यः=நக்ஷத்திரங்களைக்குறித்திம், ऋतुभ्यः=ருதுக்களின் அபிமானிதேவர்களைக்குறித்தும், संवत्सराय=சம்வத்ஸரம் என்ற காலத்திற்கு அபிமானியான தேவனைக்குறித்தும் वरुणाय=வருணனைக்குறித்தும் अरुणाय=அருணன் என்ற தேவனைக்குறித்தும் इति=இவ்விதம் व्रतहोमाः=விரதத்திற்கு அங்கமான ஹோமத்தைச் செய்யவேண்டும். अग्नये, वायवे என்று 4வது விபக்தியுள்ளதாய் மேற்குறிப்பிடப்பட்ட சப்தங்களுடன் स्वाहा என்ற சப்தத்தைச் சேர்த்துக்கொண்டு अग्नयेस्वाहा, वायवेस्वाहा என்று சொல்லி அக்னியில் பிரதிதினமும் ஹோமஞ் செய்யவேண்டும். आदेशः=அநுஷ்டிக்கவேண்டிய மற்றுமுள்ள நியமம் प्रवर्ग्यवत्=பிரவர்க்கியம் என்ற கர்மத்தை உபதேசிக்கின்ற வேதபாகத்தைப்போல் இருக்கின்றது. அதாவது பிரவர்க்ய காண்டத்தை அத்யயனஞ் செய்யும் பொழுது எந்த நியமங்களை யனுசரிக்கவேண்டு மென்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளை இங்கு மனுஷ்டிக்கவேண்டும். பிரவர்க்யகாண்டாத்யயன தர்மங்கள் ஆபஸ்தம்பரால் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. अरुणाः=அருணர் என்று பெயருள்ள काण्ड-



ऋषयः=இந்தக் காண்டத்தை வெளியிட்ட ருஷிகள் (यष्टव्याः=பூஜிக்கத்தகுந்தவர்கள்) ஆருணகாண்டத்தை வெளியிட்ட மஹருஷிகளைக்குறித்தும் ஹோமஞ் செய்யவேண்டும்.

(அ - கை) ஆருணகேதுக சயனத்தை உபதேசிக்கின்ற பாகத்தை அத்யயனஞ் செய்யும்பொழுது அனுசரிக்கவேண்டிய நியமங்கள் உபதேசிக்கப்படுகின்றன—

अरण्ये ऽधीयीरन्। भन्द्रं कर्णेभिरिति द्वे जपित्वा। महानाम्नीभिरुदकꣳसंꣳस्पृश्य। तमाचार्यो दद्यात्। शिवानश्शन्तमेत्योषधीरालभते। सुमृडीकेति भूमिम्। एवमपवर्गे। धेनुर्दक्षिणा। कꣳसंवासश्च क्षौमम्। अन्यद्वा शुक्लम्। यथाशक्ति वा। एवꣳस्वाध्यायधर्मेण। अरण्येऽधीयीत। तपस्वी पुण्यो भवति तपस्वी पुण्यो भवति ॥

(ப - ரை) ஆருணகேதுக சயனத்தை உபதேசிக்கின்ற கிரந்த பாகத்தை अरण्ये=காட்டில் अधीयीरन्=அத்யயனஞ் செய்ய வேண்டும். கிராமத்திலிருந்து அத்யயனஞ் செய்யக்கூடாது. भद्रंकर्णेभिरितिद्वे=भद्रंकर्णेभिः शृणुयामदेवाःஎன்று தொடங்கப்படும் மந்திரத்தையும், स्वस्तिनइन्द्रोवृद्धश्रवाः என்ற மந்திரத்தையும் जपित्वा=சிஷ்யனை ஜபிக்கும்படி செய்து महानाम्नीभिः=महानाम्नीर्महामानाः என்று தொடங்கப்படும் மந்திரத்தைச்சொல்லி उदकम्=ஜலத்தை संस्पृश्य=தொடும்படி செய்து आचार्यः=ஆசாரியன் तम्=அந்த வேதபாகத்தை दद्यात्=உபதேசிக்க வேண்டும். शिवानश्शन्तमेति=शिवान श्शन्तमाभवन्तु என்ற மந்திரத்தைச்சொல்லி ओषधीः=ஓஷதிகளை आलभते=தொடவேண்டும். सुमृडीकेति=सुमृडीका सरस्वति என்றுசொல்லி भूमिम्=பூமியை (आलभेत=தொடவேண்டும்.) अपवर्गे=அத்யயனத்தின் முடிவிலும் एवम् = இவ்விதம்—ஆரம்பத்தில் அனுஷ்டித்தகர்மங்கள் யாவையும் (अनुतिष्ठेत्=அனுஷ்டிக்கவேண்டும்) धेनुर्दक्षिणा=இந்தக் கிரந்தத்தை அத்யயனஞ்செய்து முடித்த பிறகு நல்ல பசுமாட்டை தக்ஷிணையாக ஆசாரியருக்குக் கொடுக்க வேண்டும். कꣳसम्=சாப்பிடுவதற்காக வெங்கலபாத்திரத்தையும் क्षौमंवासश्च=வெண்பட்டையும் (दद्यात् = சிஷ்யன் ஆசாரியனுக்குக் கொடுக்க வேண்டும்.) वा=வெண்பட்டைக்கொடுக்க சக்தி

இல்லாவிடில் शुक्लम्=வெளுத்த अन्यत्=மற்ற பஞ்சு நூலால் செய்யப்பட்ட வஸ்திரத்தை (दद्यात्=கொடுக்கவேண்டும்) மிகவும் தரித்திரனாய் இருந்து மேற்சொல்லிய தக்ஷிணையைக்கொடுக்கச் சக்தி இல்லாவிடில் यथाशक्तिवा=தன்னால் இயன்றதை யாவது (दद्यात्=கொடுக்கவேண்டும்.) एवम्=இவ்விதம் स्वाध्यायधर्मेण=அத்யயனதர்மத்தோடு अरण्ये=விவிக்தமான ஸ்தலத்தில் अधीयीत=அத்யயனஞ் செய்யவேண்டும். (एवमधीयानः=இவ்வித மத்யயனஞ் செய்பவன்) तपस्वी=தபஸ்வியாகவும் पुण्यः=புண்யசாலியாகவும் भवति=ஆகிறான். तपस्वीपुण्यो भवति என்று மறுபடியும் படித்ததற்கு முன்போலர்த்தம். மேற்சொல்லிய பலம் நிச்சயமாய் ஏற்படும் என்பதைத் தெரிவிப்பதற்காக तपस्स्वी पुण्यो भवति என்ற பாகம் இருதடவை படிக்கப்பட்டிருக்கிறது.

कुर्वीत जपित्वा स्वाध्यायधर्मेण द्वेच ।

அடிமுதல் 130 பஞ்சாசத்துக் களாகின்றன.

முப்பத்திரண்டாவது அனுவாகம் முற்றிற்று.

---

भद्रं कर्णेभिः श्रृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्गैस्तुष्टुवाꣳसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः ॥

स्वस्ति न इन्द्रोवृद्धश्रवाः । स्वस्तिनः पूषा विश्ववेदाः ।
स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः । स्वस्ति नो बृहस्पतिर्दधातु ॥

॥ ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ हरिः ओम् ॥

தைத்திரீ யாரண்யகம் முதல் பிரச்னம் முற்றிற்று.

சுபம்

---

श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः



# त्रिवेदिसंध्यावन्दनम्

# முவ்வேதிகளின் சந்தியாவந்தனம்

தமிழுரையுடன்

இச்சிறந்த உரை

மஹாமஹோபாத்யாய வேதாந்தகேசரி

பிரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்

அவர்களின் முக்கியசிஷ்யரும்,

வியாகரண வேதாந்த பாரங்கதரும், பாகவத

பகவத்கீதோபன்யாசகரும், சோதிட

மந்திர சாஸ்திர வித்வானும்

'ஆர்யமத சம்வர்த்தனீ' பத்திராதிபருமான

பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றி

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1924

காபிரைட்] [விலை ரூ. 1-4.

சிறுமணவூர் முனிசாமி முதலியார் அண்டு சன்ஸ்
: சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| "சந்தியாவந்தனம்" என்றபதத்தின் அர்த்தம் ... ... | 1 |
| "சந்தியா" என்றபதம் தேவதாவாசகம் என்று நிருபணம் ... | 2 |
| சந்தியா தேவிக்குக் காலபேதத்தை யனுசரித்து காயத்திரீ மு.தலிய நாமபேத மேற்படுதல் ... ... | 3 |
| சந்தியாவந்தனத்தில் பிரதானம் எது என்ற விசாரம் ... ... | 4 |
| மாத்யாந்ஹிக சந்தியாநுஷ்டானத்தில் பிரமாணம் ... ... | 5 |
| உப நயனதினத் தன்று வைதிகர்கள் மாத்யாந்ஹிகத்தை முதலில் அனுஷ்டித்து வைப்பதற்குப்பிரமாணம். ... | 5 |
| மாத்யாந் ஹிகம் நித்யம் என்று நிருபணம் ... ... | 6 |
| 8வது வயது முதற்கொண்டே சந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமென்று விகித்த சாஸ்திரதாத்பர்ய நிருபணம் | 7 |
| வேதத்தைக் கற்காதவனும் காயத்திரீ உபதேசம் பெறவேண்டும் | 13 |
| உதாஹரணமாய் கதை கூறுதல்மூலம் சந்தியாவந்தன மஹிமா நிருபணம். ... ... | 15 |
| சந்தியா மந்திரங்களின் பொருடங்கிய வேறு பாஷையை மந்திரமா யுபயோகிக்கக் கூடாது. ... ... | 18 |
| ஷை விஷயத்தை உதாஹரணத்துடன் நிருபணம் ... | 19 |
| த்விஜரல்லாதார் காயத்திரியை ஜபிக்கக்கூடாது என்பதை ஸ்தாபித்தல் ... ... | 22 |
| ஆசாரியனின் முகத்தினின்றும் பெறப்படாதது வேத மாகாது ... | 26 |
| ஷை. விஷயமாய் லோகானு பவங்கூறல் ... ... | 27 |
| சந்தியாவந்தனம் நித்தியகர்மா என்று நிருபணம் ... ... | 28 |
| சந்தியாவந்தனத்தின் பல நிருபணம் ... ... | 29 |
| நித்யம் காம்யம் இவற்றின் வியவஸ்தை ... ... | 33 |
| மந்திரார்த்த மறிதல் அவசியம் ... ... | 34 |
| பிராதஸ்ஞனத்தின் குணம் ... ... | 36 |
| புண்டரதாரணத்தின் ரஹஸ்யம் ... ... | 38 |
| ருஷி, சந்தஸ், தேவதை இவைகளை தலைமுதலிய அவயவங்களில் நியாசஞ்செய்து கொள்வதின் கருத்து ... ... | 41 |
| பிராணயாம விசாரம் ... ... | 42 |
| பியாணயாம மந்திரார்த்தம் ... ... | 53 |

| | | | |
|---|---|---|---|
| आपोहिष्ठा என்ற மந்திரார்த்தம் | ... | ... | 59 |
| सूर्यश्च என்ற மந்திரார்த்தம் | ... | ... | 62 |
| आपः पुनन्तु என்ற மந்திரார்த்தம் | ... | ... | 63 |
| अग्निश्च என்றமந்திரார்த்தம் | ... | ... | 64 |
| दधिक्राव्णा என்ற மந்திரார்த்தம் | ... | ... | 65 |
| ऋतं च என்றமந்திரார்த்தம் | ... | ... | 67 |
| அர்க்யம் விடுதல் | ... | ... | 68 |
| அர்க்யம் விடுதலைப்பற்றிய விசாரம் | ... | ... | 69 |
| சந்தியாத் யானம் | ... | ... | 74 |
| ஆதித்யாதி தர்ப்பணம் | ... | ... | 75 |
| சாமவேதிகளின் சந்தியாவந்தனம் | ... | ... | 76 |
| ருக் வேதிகளின் சந்தியாவந்தனம் | ... | ... | 82 |
| காயத்திரீ ஜபாரம்பம் | ... | ... | 90 |
| ஆசனக் கிரமம் | ... | ... | 91 |
| பூதசுத்தி செய்யவேண்டிய முறை | ... | ... | 93 |
| आयातु என்ற மந்திரார்த்தம் | ... | ... | 96 |
| கரநியாசத்தின் தாத்பர்யம் | ... | ... | 98 |
| அங்கநியாசத்தின் தாத்பர்யம் | ... | ... | 100 |
| பிரணவத்தியானம், வியாஹிருதித்யானம் | ... | ... | 104 |
| காயத்திரியின் வியஷ்டித்யானம் | ... | ... | 105 |
| காயத்திரியின் சமஷ்டித்யானம் | ... | ... | 107 |
| காயத்திரியின் அர்த்தம் | ... | ... | 108 |
| ஜப விசாரம் | ... | ... | 112 |
| मित्रस्य என்ற மந்திராத்தம் | ... | ... | 114 |
| आसत्येन என்றமந்திரார்த்தம் | ... | ... | 116 |
| इमं मेवरुण என்ற மந்திரார்த்தம் | ... | ... | 119 |
| ருக்வேதிகளின் உபஸ்தான மந்திரார்த்தம் | ... | ... | 121 |
| சாமவேதிகளின் உபஸ்தான மந்திராத்தம் | ... | ... | 132 |
| संध्यायै नमः முதலிய மந்திரங்களின் அர்த்தம். | ... | ... | 137 |


ॐ



உ

சுபம்.

ஸ்ரீ கோபாலன் துணை

शाश्वतधर्मगोप्त्रे श्रीमते राधाकृष्णपरब्रह्मणे नमः ।

# சந்தியா வந்தனம்

संध्यावन्दनम्. संध्यायाः=मूर्तित्रयातीतायाः चिच्छक्तिरूपायाः देवतायाः वन्दनम्=स्तुतिनमस्कारादिकं वैदिकं कर्म संध्यावन्दनमित्युच्यते.

மும்மூர்த்திகளுக்கும் மேலானவும், சித்சக்தி வடிவமானவுமான தேவதையினது நமஸ்கார ஸ்தோத்திரரூபமான வைதிக கர்மமே "சந்தியாவந்தனம்" எனப் பெரியோர் நிச்சயித்திருக்கின்றனர். இவ்விதமே—

या संध्या सा जगत्सूतिः मायातीता तु निष्कला ।
ऐश्वरी केवला शक्तिस्तत्वत्रयसमुद्भवा ॥

तस्मात्सर्वप्रयत्नेन संध्योपासनमाचरेत ।
ध्यात्वार्कमण्डलगतां सावित्रीं वै जपेद्बुधः ॥

"சூரியமண்டலத்தில் அபிவ்யக்தியை யடைந்த ஆதித்யன் என்ற தேவனைப் போதிக்கின்ற "ஆதித்யன்" முதலிய சப்தங்களாற் சொல்லப் படுகின்றவளும், மாயாசம்பந்தமற்றவளும், எல்லா லோகத்திற்கும் காரணபூதையும், ஜீவன், ஈசுவரன், பிரகிருதி என்ற மூன்று தத்துவங்களுக்குங் காரணபூதையும் ஒப்புயர்வற்

றுத் தனிமையில் பிரகாசிக்கின்றவளுமான யர்தொரு சக்தியு
ண்டோ அச்சக்தியே संध्या எனப்படுவள். அவ்விதசக்தியை
சூரியமண்டலத்தி லிருக்கின்றவளாகவும், மண்டலாபிமானி
தேவதையையும் தூண்டுகிறவளாகவும் தியானஞ் செய்து அவ
ளது சுவரூபத்தைப் போதிக்கின்ற காயத்திரீ மஹாமந்திரத்தை
அறிவுள்ளவன் ஜபிக்கக்கடவன்" என்று காச்யபர் முதலிய
மஹான்களுமுபதேசித்திருக்கின்றனர். ஆகவே இவ்வித சித்
சக்தியைத் தியானஞ் செய்கிறவனுய் ஆசமனம் முதல் அபிவா
தனமீருகச்செய்யும் கர்மமே "சந்தியாவந்தனம்" எனப் பெரி
யோர் நிச்சயித்தனர் என்று ஏற்படுகிறது. இங்குசந்தியா என்ற
பதமானது,

अहोरात्रस्य यस्संधिः सूर्यनक्षत्रवर्जितः ।
सा तु संध्या समाख्याता मुनिभिस्तत्वदर्शिभिः ॥

"பகலும் இரவுஞ் சேரும் காலமாகிய சூரியன் நக்ஷத்திரங்களற்ற
சமயமே "சந்தியை" எனத்தத்துவமறிந்த முனிகளாற் சொல்ல
ப்படுகின்றது" என்ற வசனப்படி காலவிசேஷத்தைக் குறிக்கு
மாயினும்,

संधौ संध्यामुपासीत नास्तगे नोद्गते रवौ ।
ब्रह्मणोपास्यते संध्या विष्णुना शंकरेण च ॥
कस्मान्नोपासयेद्देवीं श्रेयस्कामो द्विजोत्तमः ।

"இரவும் பகலுஞ் சேரும் காலமான சந்தியில் சந்தியா என்ற
தேவியை உத்தமப் பிராம்மண குலத்தில் ஜநித்தவன் தியானஞ்
செய்யக்கடவன். சூரியன் மறைந்தபின்னர் மாலையிலும், உதய
மானபின்னர்க் காலையிலும் சந்தியா தேவியைத் தியானித்தல்
கூடாது. பிரும்மா, விஷ்ணு, சங்கரன் இவர்களே சந்தியா தேவி
யைத் தியானித்தனர் என்றால் மேலான நிலையைப்பெற விருப்
முள்ளவன் இத்தேவியை உபாஸிக்காது (தியானிக்காது) இருத்
தல் என்பது எங்ஙனம்?" என்று யோகயாக்ஞ்யவல்கியர் கூறி
யிருப்பதிலிருந்து சந்தியா என்ற பதத்திற்கு "சந்தியா" எனப்



பெயர் பூண்டதேவதையே பொருளென்றும், முறைப்படி அத்
தேவதையை தியானுதிகளால் ஆராதித்தலே வந்தனமென்
றுந் தெளிவாகின்றது மேலும்,

प्राक्कूलेषु ततस्स्थित्वा दर्भेषु सुसमाहितः ।
प्राणायामत्रयं कृत्वा ध्यायेत्संध्यामिति श्रुतिः ॥
न भिन्नां प्रतिपद्येत संध्यां वै ब्रह्मणा सह ।
साहमस्मीत्युपासीत विधिनानेन वै द्विजः ॥

"த்விஜன் (பிராம்மணன்) கிழக்கு நுனியாகப் பரப்பின தர்ப்ப
ங்களில் நின்று கொண்டு மனதை ஒருமுகப்படுத்தியும், மூன்று
பிராணாயாமஞ் செய்தும் சந்தியையை உபாஸிக்க (த்யானிக்க)
க்கடவன். அவ்விதம் உபாஸிக்கும் பொழுது சந்தியை வேறு
பிர்ம்மம் வேறு என்று நினையாது ஒன்ருகவே தியானஞ் செய்து
அந்தப் பிர்ம்மரூபமான சந்தியையே நான், நானே அந்தச் சந்
தியை என்ற தேவதை என்று இடைவிடாது பாவிக்கவேண்டும்"
என்று வியாசர் முதலியோருஞ் சொல்லி இருக்கின்றனர்.
ஆகவே சந்தியா என்ற பதமானது காலத்தைக் குறிப்பிடுவதாக
உலகில் பிரசித்தி இருப்பதுபோலவே சாஸ்திரங்களில் தேவ
தையைக் குறிப்பிடுவதாகப் பிரசித்தி இருப்பதாலும், பெரும்
பாலும் சேதனத்தினிடமே பொருந்துகின்ற வந்தன சப்தத்தின்
சேர்க்கையைக் கொண்டும் சைதன்யமுள்ள தேவதையைக் குறி
ப்பதாகக் கொள்ளப்பட்டது. இவ்வளவு தூரஞ் சொன்னதிலி
ருந்து மும்மூர்த்திகளாலும் உபாஸிக்கப்பெற்ற சந்தியாதே
வியை ஸ்துதி நமஸ்காராதிகளால் உபாஸித்தலே "சந்தியா வந்
தனம்" என்று ஏற்படுகின்றது. இத்தகைய சந்தியாதேவி கால
பேதத்தை யொட்டி நாமரூப பேதங்களையுமடைகிருள் :—
அதாவது :—

गायत्री नाम पूर्वाह्णे सावित्री मध्यमे दिने ।
सरस्वती च सायाह्ने सैव संध्या त्रिषु स्मृता ॥

என்றபடி அந்தச் சந்தியாதேவீ முற்பகலில் காயத்திரீ என்றும்,

நடுப்பகலில் சாவித்திரீ என்றும், மாலையில் சரஸ்வதீ என்றும் சொல்லப்படுகிறாள்.

இந்தச் சந்தியாவந்தனத்தில் உபாசனம் (தியானம்) ஒன்று மாத்திரம் பிரதானம் (அங்கி) என்றும், ப்ரோக்ஷணம் முதலியவை அங்கம் என்றும் சிலரும்; அர்க்கியம்விடுதல், சந்தியாதேவியைத் தியானித்தல், காயத்திரீ ஜபம், உபஸ்தானம் (தேவதாஸ்தோத்திரம்) இந்நான்கும் பிரதானம் மற்றவை அங்கம் என்றுஞ்சொல்லி அவற்றுள் गायत्रिया अभिमन्त्रिता आप ऊर्ध्वं विक्षिपन्ति "காயத்திரியால் அபிமந்திரணஞ் செய்து (சக்திவிசேஷத்தை உண்டு பண்ணி) ஜலத்தை உயரத்தூக்கி எறிகின்றனர்" என்ற வேதம் அர்க்கியத்தை மட்டும் தனியா யுபதேசித்திருப்பதாலும், மஹாபாரதத்தில் யுத்தகாலத்தில் "பிரதானமாய்க் கூறப்படும் மற்றவைகளை அநுஷ்டிக்க முடியாவிடினும் அவற்றுள் மிகவும் முக்கியமான அர்க்கிய தானத்தை அதற்கு வேண்டிய ஜலங் கிடைக்காவிடினும் மண்ணைக் கொண்டாவது செய்தே தீரவேண்டும்" என்று உபதேசித் திருப்பதாலும், चतुर्ष्वेतेषु अर्घ्यप्रक्षेपणं बलवत्प्रधानम् । "முற் கூறிய நான்கு பிரதானங்களுள் அர்க்கியம் விடுதல் அதிகமுக்கியம்" என்று சிலரும் கூறுகின்றனர். ஆகவே இதுவரை சொன்னதிலிருந்து ஆசமனந் தொடங்கி அர்க்கியதானம், சந்தியா தேவியை த்யானித்தல், காயத்திரீ ஜபம், உபஸ்தானம் இவைகளைச் செய்து அபிவாதனமீறாகச் செய்யுங் கர்மமே "சந்தியா வந்தனம்" எனப் பெறப்பட்டது.

இவ்வித சந்தியா வந்தனத்தை த்விஜர் என்ற பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர் எனமூவரும் முறையே கர்ப்பாஷ்டமம், கர்ப்பைகாதசம், கர்ப்பத்வாதசம் இந்த வயது தொடங்கி உயிருள்ளவரை காலை, நடுப்பகல், மாலை இம்மூன்று காலங்களிலும் செய்தே தீரவேண்டுமென்று சாஸ்திரங்கள் கட்டளையிடுகின்றன.

சங்கை:—उद्यन्तमस्तंयन्तमादित्यमभिध्यायन् "உதயமாகின்ற, அஸ்தமனமடைகின்ற சூரியனை த்யானஞ் செய்பவனாய்" என்று



வேதங்கூறியதிலிருந்து காலைமாலை இரண்டுகாலங்களில் மாத்திரமே சந்தியாநுஷ்டானத்தைச் சுருதிவிதித்திருப்பதால் மாத்யந்தினசந்தியானுஷ்டானமும் செய்யவேண்டுமெனச் சொன்னது எங்ஙனம்?

உத்தரம்:—சந்தியாவந்தனம் என்பது ச்ரௌதமென்றும் ஸ்மார்த்தமென்றும் இருவகைப்படும். அவற்றுள் காலைமாலைகளிற் செய்வது ச்ரௌதம். (சுருதியால் உபதேசிக்கப்படுவது) நடுப்பகலிற் செய்வது ஸ்மார்த்தம். (ஸ்மிருதியால் உபதேசிக்கப்படுவது) சுருதியினால் காலைமாலை இவ்விரண்டு சந்தியாநுஷ்டானமேவிதிக்கப்பட்ட போதிலும்

संध्यात्रयं न कर्तव्यं यावन्मौञ्जी निबध्यते ।
संध्यात्रयं तु कर्तव्यं सायमादि ततः परम् ॥

"மௌஞ்ஜீபந்தனம் (காயத்திரீஉபதேசம்) வரைமூன்று சந்திகளையும் அநுஷ்டிக்கவேண்டாம் மௌஞ்ஜீபந்தனத்திற்குப் பின்னர் மூன்று சந்திகளையும் சாயஞ் சந்திதொடங்கிச் செய்யவேண்டும்" என "கௌதமர்" முதலிய மஹரிஷிகள் கூறியிருப்பதிலிருந்து மாத்தியந்தின சந்தியாநுஷ்டானம் ஸ்மார்த்தமென்றும், அதையும் நாம் அநுஷ்டிக்கவேண்டுவதவசியந்தானென்றும் ஏற்படுகின்றது.

சங்கை:—உலகில் நமது வைதிககுடும்பத்தில் உபநயநதினத்தன்று மாத்தியந்தின காலமே முன்னர்வருவதால் அதையே முதன்முதலில் தொடங்கிப்பிறகு பெரியோர் அன்றேசாயஞ் சந்தியையும் உபதேசிக்கின்றனர். மேற்சொன்ன கௌதம வசனப்படியும், மற்றுமுள்ள மஹருஷிகளின் வசனப்படியும், சாயஞ் சந்தியையே முதன்முதலிற் றொடங்கவேண்டுமென ஏற்படுவதால் இவ்வைதிகர்கள் இவ்விதம் செய்வது நியாயமாகுமா?

உத்தரம்:—यावद्ब्रह्मोपदेशस्तु तावत्संध्यादिकं नहि ।
ततो मध्यान्हसंध्यादि सर्वं कर्म समारभेत् ॥

"பிரும்மோபதேசமாகும்வரை சந்தியாநுஷ்டானங் கிடையா; பிரும்மோபதேசத்திற்குப் பின்னரே அன்று மாத்தியந்தின சந்தியாநுஷ்டானந்தொடங்கி முறையேயாவையும் செய்துவர வேண்டும்" என்ற ஜைமினிவசநத்தைப்பிரமாணமாகக்கொண்டே இவ்வைதிகர் இவ்விதஞ் செய்துவருகின்றனர் என்று ஏற்படுகின்றது. ஆகவே பிரும்மோபதேசதினத்தன்று மாத்தியந்தின சந்தியாநுஷ்டானந் தொடங்கி முறையே செய்யவேண்டுமென்று சொல்லி இருப்பதாலும், ஏனையருஷிகள் அன்று மாத்தியந்தின சந்தியாநுஷ்டானங் கூடாதென்றும், அவ்விதஞ் செய்தால் பாபம்வரும்என்றும் சொல்லாததாலும், நல்லகார்யஞ்செய்வதில் **अधिकस्याधिकं फलं भवति** "அதிககாரியத்திற்குப்பலன் அதிகமுண்டாகும்" என்ற யுக்திப்படியும் நம் வைதிககுடும்பங்களில் அவ்விதஞ் செய்து வருகின்றனர் என்று ஏற்படுவதால் மேற்சொன்ன வாசங்கைக்கிடமில்லை.

சங்கை—மாத்தியந்தின சந்தியாநுஷ்டானத்தைச் சுருதி விதிக்காததால் அதைநித்தியமெனவெண்ணிக் கட்டாயமாகச் செய்யவேண்டுவதில்லையன்றோ?

உத்தரம்—சாஸ்திரரஹஸ்யமறிய விருப்பமுள்ள ஆஸ்திகனுக்குமுதலிற் சமாதானங்கூறுவாம். பிரத்யக்ஷச் சுருதி சித்தமென்றும், அநுமிதச்சுருதி சித்தமென்றும் கர்மம் இருவகைப்படும். அவற்றுள் காலைமாலை சந்தியானுஷ்டானம் **अहरहस्संध्यामुपासीत** என்ற பிரத்தியக்ஷச்சுருதியால் விதிக்கப்பட்டிருப்பதால் பிரத்யக்ஷச்சுருதி சித்தமெனப்படும். மஹாநுஷிவசனங்களைக் கொண்டு அதற்குமூலச் சுருதியிருப்பதாகவே ஊஹித்து ஸ்மிருதியாற் சொல்லப்பட்டதும் சுருதியாற் சொல்லப்பட்டதே என்று கொள்ளப்படுவதே அநுமிதச்சுருதி சித்தமெனப்படும். ஆதலால் ஸ்மிருதிவசனங்களே மாத்தியந்தின சந்தியாநுஷ்டானத்தை விதித்திருப்பினும் அதுவும் அநுமிதச்சுருதி சித்தமாயாகின்றது பற்றி ச்ரௌதமாகவே ஏற்படுகின்றது. அதுடன் சந்தியாநுஷ்டானத்திற்கு வேண்டிய யோக்யதையையடைந்த பின்னர் ஒரு சந்தியானுஷ்டானத்தைக்கூட விட்டுவிட மன



இருப்பதிலிருந்து சந்தியா என்ற பதத்திற்கு "சந்தியா"எனப் மில்லாத ஜைமினியானவர் 'பிரும்மோபதேசதினத்தன்றே மாத்தியந்தின சந்தியாநுஷ்டானத்தைச் செய்யத்தொடங்குக' என்று விதித்தார்.

शास्त्रं हि वत्सलतरं मातापितृसहस्रतः ।

"ஆயிரம் மாதாபிதாவினும் சாஸ்திரமான துஜீவனிடத்தில் நிரம்பவும் பிரேமையுள்ளதன்றோ" என்று பெரியோர் கூறியபடி அச்சந்தியாநுஷ்டானத்தையும் நாம் செய்வதால் அதிகம் குணமல்லவோ ஏற்படும்! இரண்டாவது சமாதானமாவது:—சத்கர்மானுஷ்டானத்திற் சிரத்தையில்லாது வீணில் ஆக்ஷேபஞ்செய்கின்றவனுக்குச் சுருதி சொல்லுவதும், ஸ்மிருதி சொல்லுவதும் ஒன்றுதானாயினும் கௌதமர், வியாசர், பிரசேதஸ், மற்றும்பல ஸ்மிருதிக்காரர்கள் பிர்ம்மோபதேசதினத்தன்று சாயஞ்சந்தியாநுஷ்டானத்தையே முதன் முதலிற் றொடங்கவேண்டுமென்று சொல்லி இருப்பதாலும், ஜைமினியொருவரே மாத்தியந்தின சந்தியானுஷ்டானத்தை முதலில் விதித்திருப்பதாலும், அநேகர் சொல்லும்படியே செய்வது நலமென்று ஒருவனது மனது ஆஸ்திக்யத்துடன் உறுதிசெய்யுமாயின் அவ்விதம் செய்வதில் தவறுயாதுமில்லை என்றே எண்ண இடமிருக்கிறது.

சங்கை—ஒவ்வொரு பிராம்மணனுக்கும் 8வதுவயதில் பிரும்மோபதேசஞ் செய்வித்து அது முதலேசந்தியானுஷ்டானஞ்செய்யவேண்டுமெனவிதித்த சாஸ்திரத்தின்கருத்து என்னை?

உத்தரம்:—அதனுண்மையை இங்கு கூறுவாம். **जायमानोह वै ब्राह्मणः त्रिभिः ऋणवा जायते ब्रह्मचर्येण ऋषिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः** "ஜந்மமெடுக்கும் பிராம்மணன் மூன்று கடமைகளாற்கடனுள்ளவனாகவே ஜனிக்கின்றான். அக்கடன்களுள் பிரும்மசரியத்தால் ருஷிகளின் கடனையும், பிரஜையினால் பிதிருக்களின் கடனையும், யாகத்தால்தேவர்கடனையும் போக்கக்கடவன்" என்ற வேதமொழிப்படியும்,

மில்லாத ஜைமிநியானவர் 'பிரும்மோபதேசதினத்தன்றே மாத்தியந்தின சந்தியாநுஷ்டானத்தைச் செய்யத்தொடங்குக' என்று விதித்தார்.

शास्त्रं हि वत्सलतरं मातापितृसहस्रतः ।

"ஆயிரம் மாதாபிதாவினும் சாஸ்திரமானது ஜீவனிடத்தில் நிரம்பவும் பிரேமையுள்ளதன்றோ?" என்று பெரியோர் கூறியபடி அச்சந்தியாநுஷ்டானத்தையும் நாம் செய்வதால் அதிகம் குணமல்லவோ ஏற்படும்! இரண்டாவது சமாதானமாவது:—சத் கர்மானுஷ்டானத்திற் சிரத்தையில்லாது வீணில் ஆக்ஷேபஞ் செய்கின்றவனுக்குச் சுருதி சொல்லுவதும், ஸ்மிருதி சொல்லுவதும் ஒன்றுதானாயினும் கௌதமர், வியாசர், பிரசேதஸ், மற்றும் பல ஸ்மிருதிக்காரர்கள் பிர்ம்மோபதேசதினத்தன்று சாயஞ்சந்தியாநுஷ்டானத்தையே முதன் முதலிற் றொடங்கவேண்டுமென்று சொல்லியிருப்பதாலும், ஜைமிநியொருவரே மாத்தியந்தின சந்தியானுஷ்டானத்தை முதலில் விதித்திருப்பதாலும், அநேகர் சொல்லுகிறபடியே செய்வது நலமென்று ஒருவனது மனது ஆஸ்திக்யத்துடன் உறுதிசெய்யுமாயின் அவ்விதம் செய்வதில் தவறு யாதுமில்லை என்றே எண்ண இடமிருக்கிறது.

சங்கை—ஒவ்வொரு பிராம்மணனுக்கும் 8வது வயதில் பிரும்மோபதேசஞ் செய்வித்து அதுமுதலே சந்தியானுஷ்டானஞ்செய்யவேண்டுமெனவிதித்த சாஸ்திரத்தின்கருத்து என்னை?

உத்தரம்:—அதனுண்மையை இங்கு கூறுவாம். **जायमानो-वै ब्राह्मणः त्रिभिः ऋणवा जायते ब्रह्मचर्येण ऋषिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः** "ஜந்மமெடுக்கும் பிராம்மணன் மூன்று கடமைகளாற்கடனுள்ளவனாகவே ஜநிக்கின்றான். அக்கடன்களுள் பிரும்மசரியத்தால் ருஷிகளின் கடனையும், பிரஜையினால் பிதிருக்களின் கடனையும், யாகத்தால்தேவர்கடனையும் போக்கக்கடவன்" என்ற வேதமொழிப்படியும்,



ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानः पतत्यधः ॥

"முக்கடனையும் விலக்கியே மோக்ஷத்தில் மனதைச்செலுத்த வேண்டும். முக்கடனையும் விலக்காது மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவன் கீழ்விழுந்து விடுவான் (நரகத்தையடைவான்)" என்றமகான்களின் திருமொழிப்படியும் ஜந்மமெடுத்த ஒவ்வொரு பிராம்மணனும் முக்கடனையும் விலக்கியே தீரவேண்டுமென்று ஏற்படுகின்றது. அவற்றுள் முதன்மையான ருஷிகளின் கடனைவிலக்குவதென்பது முழுமுதற் கடவுளான ஸ்ரீமந்நாராயணந்தொடங்கி மனுமுதலிய மஹருஷிகளின் பரம்பரையாய்த் தொண்டுதொட்டு நாளிதுவரை குரு சிஷ்யபரம்பரையாய் வருகின்றவேதத்தைக் கற்றே அதைத்தீர்க்கவேண்டும்.

சங்கை:—**ब्रह्मचर्येण ऋषिभ्यः** "பிரும்மசரியத்தைக் கைக்கொள்வதால ருஷிகளின் கடனைத் தீர்க்கவேண்டும்" என்று மட்டுமே சொல்லப் படுவதாலும், **ब्रह्मचर्य** என்ற பதத்திற்கு பிரும்ம=வேதத்தை, சர= கற்பதற்காக வேண்டிய நியமம் (விரதம்) என்று பொருள் ஏற்படுவதாலும், வேதத்தைக் கற்பதால் ருஷிக்கடன் தீர்க்கப் படவேண்டுமென்பது எங்ஙனம்,

உத்தரம்—பிரும்மசரியம் என்ற பதத்திற்கு பிரும்ம=வேதத்தை, சர=கற்குங்கால், ய=அதைக் கற்பிக்கும் தனது ஆசானுக்கும், அவனாற் கற்பிக்கப் படும் வேதபாகத்திற்கும் தனது முன்னேற்றத்திற்கும் தக்கபடி சிஷ்டன் செய்யவேண்டிய கடமைகளே (விரதங்களே) பொருள் எனப் பெரியோர் கூறி இருக்கின்றனர். ஆகவே **ब्रह्मचर्येण** பிரும்மசரியத்தாலென்றால் வேதத்தைக் கற்பதால் என்ற பொருளும் தொக்கி நிற்கின்றமையின் பிரும்மசரியத்தால் ருஷிகளின் கடனைத் தீர்க்கவேண்டுமென்று சொன்னதில் யாதுந் தோஷமில்லை.

சங்கை—ஒருவனிடமிருந்து ஒருபொருளைத் தனக்கு வேண்டிய சமயத்தில் பெற்றுக் கொண்டவன் எவனோ அவனே

ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानः पतत्यधः ॥

"முக்கடனையும் விலக்கியே மோக்ஷத்தில் மனதைச்செலுத்த வேண்டும். முக்கடனையும் விலக்காது மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவன் கீழ்விழுந்து விடுவான் (நரகத்தையடைவான்)" என்ற மகான்களின் திருமொழிப்படியும் ஜங்மமெடுத்த ஒவ்வொரு பிராம்மணனும் முக்கடனையும் விலக்கியே தீரவேண்டுமென்று ஏற்படுகின்றது. அவற்றுள் முதன்மையான ருஷிகளின் கடனைவிலக்குவதென்பது முழுமுதற் கடவுளான ஸ்ரீமங் நாராயணன்தொடங்கி மனுமுதலிய மஹருஷிகளின் பரம்பரையாய்த் தொண்டுதொட்டு நாளிதுவரை குரு சீடபரம்பரையாய் வருகின்ற வேதத்தைக் கற்றே அதைத் தீர்க்கவேண்டும்.

சங்கை:—**ब्रह्मचर्येण ऋषिभ्यः** "பிரும்மசரியத்தைக் கைக்கொள்வதால் ருஷிகளின் கடனைத் தீர்க்கவேண்டும்" என்று மட்டுமே சொல்லப் படுவதாலும், **ब्रह्मचर्य** என்ற பதத்திற்கு பிரும்ம=வேதத்தை, சர=கற்பதற்காக வேண்டிய நியமம் (விரதம்) என்று பொருள் ஏற்படுவதாலும், வேதத்தைக் கற்பதால் ருஷிக் கடன் தீர்க்கப் படவேண்டுமென்பது எங்ஙனம்?

உத்தரம்—பிரும்மசரியம் என்ற பதத்திற்கு பிரும்ம=வேதத்தை, சர=கற்குங்கால், ய=அதைக் கற்பிக்கும் தனது ஆசானுக்கும், அவனாற் கற்பிக்கப்படும் வேதபாகத்திற்கும் தனது முன்னேற்றத்திற்கும் தக்கபடி சீடன் செய்யவேண்டிய கடமைகளே (விரதங்களே) பொருள் எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆகவே **ब्रह्मचर्येण** பிரும்மசரியத்தாலென்றால் வேதத்தைக் கற்பதால் என்ற பொருளும் தொக்கி நிற்கின்றமையின் பிரும்மசரியத்தால் ருஷிகளின் கடனைத் தீர்க்கவேண்டுமென்று சொன்னதில் யாதுங் தோஷமில்லை.

சங்கை—ஒருவனிடமிருந்து ஒருபொருளைத் தனக்கு வேண்டிய சமத்தில் பெற்றுக் கொண்டவன் எவனோ அவனே



கடன் வாங்கினவன் என்றும், அவனால் வாங்கப்பட்ட பொருளே கடன் வஸ்துவென்றும் உலகில் வழங்கி வருவது பிரசித்தம். அவ்விதமிருக்க அதற்கு மாறாக இந்தவிடத்தில் ருஷிகளிடமிருந்து நாம் ஒன்றையும் பெறுமுன்னரே நம்மைக் கடன் காரர்களாகச் சொன்னது எங்ஙனம்?

உத்தரம்:—ஒருவன் தக்க நாணயமுள்ள ஒருவனிடம் வட்டிக்குப் பணத்தைக் கொடுக்கும்பொழுது குறித்த கெடுவில் பணத்தைக் கொடுத்து விட வேண்டுமென எழுதி வாங்கிப் பணத்தைக் கொடுக்கிறான் என்றே வைத்துக் கொள்வோம். பணத்தை வாங்கினவன் குறித்த கெடுவிற்குள் பணக்காரனிடம் தான் வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்குங்கால் கடன் கொடுத்தவன் அதை வாங்கிக் கொள்ளத் தாமதிப்பானேல் பணம் வாங்கினவன் கடன் கொடுத்தவனை நோக்கி "கடன்காரன், நாம் தருகிறோமென்றாலும் வாங்கிக் கொள்ளுகிறான் இல்லையே, என் செய்வோம், இக்கடன்காரன் தொல்லையே பெருந் தொல்லையாகி விட்டதே" என்று சொல்லும் உலகவார்த்தையை அறியாதாருமுளரோ! இங்கு பணத்தைப் பெற்றுக் கொண்டவன் திருப்பிக் கொடுக்கத் தயாராகவிருக்கும்பொழுதும் வாங்க வேண்டியவன் அதை வாங்கத் தவறினபடியால் அவன் கடன்காரன் என்றே எண்ணப்படுவது போலவே பகவதாக்ஞாரூபமான வேததனத்தை நம்மிடங் கொடுக்கத் தயாராக விருக்கும் பொழுது அதைவாங்கி (கற்று) க்கொள்ளக் கடமைப் பட்ட நாம் வாங்காவிடில் அம்மஹர்ஷிகள் விஷயத்தில் கடன்காரர்களே யாகின்றோம் என்பதில் யாதும் ஆக்ஷேபமுண்டோ! ஆனது பற்றியே ப்ரும்மசர்யத்தால் ருஷிக் கடனைத் தீர்க்கவேண்டும் எனச் சாஸ்திரம் கூறினதாகச் சொல்லப்பட்டது.

மேலும் வடமொழியில் **ऋण** என்ற பதத்திற்கு **अवश्य देयद्रव्यम्** "கட்டாயம் கொடுக்கவேண்டிய பொருள்" எனப் பொருள் கொள்ளப்படுவதால் பகவதாக்ஞையை யொட்டி நம்மிடம் கட்டாயம் ஒப்படைக்கும்படி கிடைத்த வேத ரூபமான

தனத்தை மகருஷிகள் வைத்துக் காத்துக்கொண்டிருப்பதால் அதை நாம் வாங்காவிடில் அவர்கள் விஷயத்தில் கடன்காரர்களாகவே ஆகின்றோம் எனச் சாஸ்திரங் கூறிற்று. இங்கு மற்றும் லோகானுபவமொன்று கூறுவாம். ஒருவன் தன்னிடமுள்ள சொத்துக்களைப் போதுமான வயது வந்ததும் தனது புத்திரனிடங் கொடுத்துவிடும்படி தனது நண்பனிடங் கொடுத்து தேசாந்தரஞ் சென்றான் என்று வைத்துக்கொள்வோம். அந்நண்பந் தன்னிடம் சொத்தை ஒப்படைத்தவனின் புத்திரனுக்குப் போதுமான வயது வந்ததும் அப்புத்திரன் அதைத் தன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளாவிடில் அப்பையனை நோக்கி "கடன்காரன். என்னிடமுள்ள பொருளை வாங்கிக்கொள்ளாமலிருக்கின்றானே! இதற்கு நான் என்ன செய்வேன். இக்கடன்காரன் தொல்லையே அதிகமாகிவிட்டது. அவனது பிதாவின் கட்டளைப்படி அவனது சொத்தைத் திரும்பவும் அவனிடம் கொடுத்து என்றைக்குச் சுகமாய் நமது காரியத்தைக் கவனிப்பது" என்று ஒரு யோக்யனான மனிதன் கவலைப்படுவதை நாம் உலகில் கண்டிருக்கின்றோமன்றோ! அதுபோலவே சர்வலோக பிதாவான ஸ்ரீமந்நாராயணன் தமது ஆக்ஞாரூபமும் உயிர்களுஜ்ஜீவிப்பதற்கு உத்தமசாதனமுமான இவ்வேத தனத்தைத் தன்போன்ற மஹருஷிகளிடத்திற் கொடுத்து வைத்திருக்கின்றார். ஆகலின் நாம் நமது பிதாவின் சொத்தான வேததனத்தை அவர்களிடமிருந்து பெறாவிடில் நம்மை மஹருஷிகள் கடன்காரன் என்றே எண்ணுவார்கள் என்பதில் ஐயமுண்டோ! ஆனதுபற்றியே குருபரம்பரையாய் முறைப்படி அதைப்பெற்று அக்கடனை விலக்கவேண்டுமெனச் சாஸ்திரங்கள் கூறின.

சங்கை:—உலகில் வேதத்தைக் கற்போர் யாவரும் ருஷிகளிடமிருந்து கற்றாலன்றோ மேற்கூறியது பொருந்தும். அவ்விதமல்லாது யாதோ ஒருவரிடமிருந்து தானே நாம் அதைப் பெறுகின்றோம். அவ்விதமிருக்க இதிலிருந்து ருஷிக்கடன் தீர்த்ததாக நினைப்பது எங்ஙனம்?

உத்தரம்:—வேதமென்பது ஸ்வரம், வர்ணம், ஆநுபூர்வி (தொடர்ச்சி) இவைகளுடன் "ஒருவர் சொல்ல மற்றவர் கேட்க"



என்ற முறையுடையதாக லோககர்த்தாவான ஸ்ரீமந்நாராயணன் றொடங்கி நமது ஆசானீறாக வருவதாலும், ஆனதுபற்றியே இதற்கு "அநுச்ரவம் (குருவின் உச்சாரணத்தையொட்டிச் சீடனும் உச்சரித்துப் பெறப்படுவது)" என்று மற்றுமோர் பெயரிடப்பட்டிருப்பதாலும், அவ்வித வேதத்தை முறைப்படி சீடனுக்குக் கற்பிக்கும் ஆசானே "ருஷி" எனப்படுவன். ஆனதுபற்றி அவ்வாசானிடமிருந்து கற்பதே ருஷியினிடமிருந்து கற்பதாகின்றமையின் அவ்விதங் கற்றலாலேயே ருஷியின் (மந்திரோபதேசஞ் செய்யக் கடமைப்பட்டவரின்) கடனைச் செலுத்தினவர்களாக நாமாகின்றோம். இவ்விதம் வேதத்தைக் கற்றல் மூலம் ருஷிக்கடனைத் தீர்க்கவேண்டியவர்களாக நாமிருப்பதால் அதைப் பெறுவதற்குரிய யோக்யதையைத் தேடிக்கொள்வது அவச்யமாகின்றது. மேலும் வேதத்தை ஆசானிடமிருந்து கற்கக்கடமைப்பட்ட ஒவ்வொரு ஜீவனும் பிதாவின் சுக்கிலத்திற்றங்கி அதினின்றும் தாயின் கற்பக் குழியில் பலமாதந் துன்புற்று அங்கிருந்து ஆண்டவனருளால் வெளிவருகின்றான். அவ்விதம் தாயின் கர்ப்பத்தில் வசிக்கும்பொழுது கர்ப்பாசயத்திலுள்ள மலம், ஜலம் முதலியவற்றால் நனைவுற்று அசுத்தியடைந்திருப்பதாலும், கர்ப்பத்தினின்று வெளிவந்தபிறகும் சுமார் 8 வயதுவரை அசுத்தமான ஆஹாரவியவஹாரமுள்ளவனாய்ப் பெரும்பாலுமிருப்பதாலும் ஒவ்வொரு ஜீவனுக்கும் இயற்கையில் நேரக்கூடிய அசுத்தியைப்போக்கியே மிக்கப் பரிசுத்தமானதும், ஸ்ரீமந்நாராயணன் றொடங்கி நமது ஆசானீறாக ஸ்வர, வர்ண, ஆனுபூர்வியுடன் தொடர்ச்சியாக வருகின்றதும், அறம், பொருள், இன்பம் என்ற புருஷார்த்தங்களை அடைதற்குரிய உத்தமசாதனங்களைப் போதிக்கின்றதும், முடிவில் இப்பிறவிக் கடலினின்றும் கரையேறுதற்குரிய ஆத்மக்ஞானத்தை உபதேசிக்கின்றதுமான இந்த வேதத்தைக் கற்கவேண்டுவதவசியமாகின்றது. இவ்விதமே,

गार्भैर्होमैर्जातकर्मचौलमौञ्जीनिबंधनैः ।
गार्भिकं बैजिकं चैनो द्विजानामपमृज्यते ॥

"த்விஜர்கட்குக் கர்ப்பவாசத்தாலும், பிதாவின் பீஜசம்பந்தத்தாலும் நேரும் தோஷமானது, பும்சவன, சீமந்தகாலத்திய ஹோமத்தாலும், ஜாதகர்மம், சௌளம், மௌஞ்ஜீபந்தனம் இவற்றின் ஹோமத்தாலும் போக்கப்படுகின்றது" என்று மனுவும் சொல்லி இருக்கிறார். ஆகவே மேற்சொல்லிய ஜாதகர்மம், மௌஞ்ஜீபந்தனம் முதலிய ஸம்ஸ்காரங்களால் தோஷத்தை விலக்கினபிறகே காயத்திரீ முதலிய மஹா மந்திரோபதேசம் பெறல் வேண்டும். அவ்விதம் காயத்திரியின் உபதேசம் பெற்றவனே த்விஜன் எனப்படுவன்.

ब्राह्मण्यां ब्राह्मणाज्जातः ब्राह्मणः परिकीर्तितः ।

என்றபடி பிராம்மண ஸ்திரீயினிடத்து பிராம்மணனான புமானுக்குண்டானவன் பிராம்மணன் எனப்படுவனாயினும்

जन्मना जायते शूद्रः कर्मणा जायते द्विजः ॥
मातुरग्रेऽधिजननं द्वितीयं मौञ्जिबंधनात् ।
तत्रास्य माता सावित्री पितात्वाचार्य उच्यते ॥

"பிராம்மண ஜாதியைச் சேர்ந்த ஸ்திரீயினிடம் பிராம்மண வகுப்பைச் சேர்ந்த புருஷனுக்குப் பிறந்ததால் மட்டுமே வேதத்தைக் கற்பதற்குரிய யோக்கியதை அவனுக்கு வந்துவிடுவதில்லை. வேதத்தைக் கற்கும் விஷயத்தில் சூத்திரன்போலவே அதிகாரமற்றவனாகின்றான். பிரும்மோபதேசம் என்ற சம்ஸ்காரத்தாலேயே த்விஜன் என்ற பெயரை யடைந்து வேதோபதேசம் பெறுவதற்குரிய யோக்யதையையடைகின்றான். தாயினிடமிருந்துண்டாவது முதற்பிறவி என்றும், சாவித்திரீ (காயத்திரீ) உபதேசத்தாலுண்டாவது இரண்டாவது பிறவி என்றும், இவனுக்கிங்கு ஆசானே பிதாவென்றும், சாவித்திரியே மாதாவென்றும் சொல்லப்படும்" என்ற மனு வசனப்படி காயத்திரீ உபதேசத்திற்குப் பின்னரே ஒவ்வொரு த்விஜனும் குருவினிடமிருந்து முறைப்படி வேதத்தைக் கற்று அதன்படி ஒழுகி அதன்மூலம் சர்வலோக பிதாவான ஸ்ரீமந்நாராயணனுடைய அருளைப் பெற



வேண்டியவனாயிருக்கின்றான். இங்ஙனமிருத்தலாலேயே வேதத்தைக் கற்குமுன்னர் * ஜாதிப் பிராம்மண மரபிலுதித்தோர் யாவரும் காயத்திரீ உபதேசம்பெற்றும், அதை ஒவ்வொருதினமும் முறைப்படி அனுஷ்டித்தும் அதற்குப் பின்னர் முறைப்படி வேதத்தை ஓதியும் வருகின்றனர்.

சங்கை.—இதுவரை கூறியதிலிருந்து வேதத்தைக் கற்பவர் எவரோ அவரே காயத்திரீ உபதேசம் பெறவேண்டுமென்று ஏற்படுகின்றது. இக்காலத்திலோ வேறு பல காரணங்களால் பெரும்பாலும் ஏனைய வித்தைகளைக் கற்கவேண்டியவர்களாகவோ, கற்கின்றவர்களாகவோ இருக்கும் நமக்கு இந்தக் காயத்திரீ உபதேச மவசியமில்லை என்று ஏன் கொள்ளக்கூடாது ?

உத்தரம்.—இதற்கு இரண்டுவிதமாகச் சமாதானங் கூறுவாம். ஒன்று—சுயநலங் கருதாது உலகக்ஷேமத்திற்கென்றே தமது வாழ்நாளைச் செலவுசெய்து பாடுபட்ட மஹான்களான மஹருஷிகள் "சந்தியாநுஷ்டானத்தை முன்னிட்டு நியமத்துடன் வேதமந்திரங்களை ஆசானிடமிருந்து கற்று அதன்படி ஒழுகி வருவாயேல் அவ்வொழுக்க மஹிமையால் இம்மையில் ஆரோக்யம், பாக்யம், புத்திரன் பௌத்திரன் முதலிய சந்தானம் இவைகளுடன் வாழ்ந்தும், வேதத்தைக் கற்குங்காலனுஷ்டித்த பிரும்மசரியப் பிரபாவத்தால் முறையே சித்தசுத்திவைராக்யம் முதலியவற்றையடைந்தும் அதன் வாயிலாக பகவத்யானம் முதலிய உத்தம சாதனானுஷ்டான மஹிமையால் மேலான பதவியைப்பெறுவாயாக" என்று இஷ்டன்போலுபதேசித்திருக்க நாம் அதைவிடுத்து ஏனையவித்தைகளைப் படித்து சகலத்தையுமிழந்து நீடித்த ரோகிகளாகவும், அற்பாயுளையுடை

---

* பிராம்மண்யம் முதலிய ஜாதியானது பிறவியிலேற்பட்டதா? இடையிற் றொழிற்குணங்களாலுண்டாவதா வென்பதைப் பலர்பலவாறு கூறுகின்றனர். ஆயினும் ஜாதி பிறவியிலேற்பட்டதேயன்றி இடையிற் றொழிற்குணம் முதலியவற்றால் உண்டாகக் கூடியதல்லவென்பதை நமது 'ஜாதிநிர்ணயம்' என்ற உபன்யாசத்திற் கண்டுதெளிக.

யவர்களாகவும், தரித்திரர்களாகவும், சாசுவதமான அடிமைத்தனமுள்ளவர்களாகவு மாவோமென்றால் அத்தோஷம் ருஷிகளைச் சேர்ந்ததாகுமா? அவர்கள் சொன்னபடி அனுஷ்டிக்காததால் அம்மஹான்களுக்கு யாதானும் குறைவுதானுண்டாகுமோ? ஆகவே பகவதாக்ஞா ரூபமான வேதத்தைக் கற்காது விடுத்து வேறுவித்தையைப் படிப்பவர்க்கு சந்தியானுஷ்டானம் வேண்டியதில்லை என்று சொல்லும் வாதத்திற்கு வேதத்தைக் கற்கவேண்டுவதவச்யமென்றும், அவ்விதம் வேதத்தைக் கற்கத் தொடங்குமுன்னர் காயத்திரீ உபதேசம் முதலிய சம்ஸ்காரங்களைப்பெற்றே தீரவேண்டுமென்றும் ஏற்படுகிறது. இரண்டாவது சமாதானம் :—

परिहाप्यापि वेदांस्त्रीन् साङ्गांश्च सपदक्रमान् ।
गायत्रीमात्रसारोऽपि वरो विप्रो नसंशयः ॥

"சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் முதலிய அங்கங்களுடனும் பதம், கிரமம் இவைகளுடனும் (அவசியங் கற்கவேண்டிய) மூன்று வேதங்களையும் ஒருவன் கற்காவிடினும், காயத்திரியை மட்டுமாவது வலுவாகக் கைக்கொண்டானேல் மேலான பிராம்மணனாகின்றான். இதில் யாதும் சந்தேஹமில்லை" என்ற வசனப்படி வேதமாதாவும், வேதத்திற் சேர்ந்ததுவுமான இந்த காயத்திரியை அர்த்தானுசந்தானத்துடன் ஜபித்து வருவதால் சர்வக்ஷேமத்தையு மடையலாமென்று ஏற்படுவதால் வேதாத்யயனஞ் செய்யாதவனும் இதைமட்டுமாவது ஜபித்தே வரவேண்டுமென்பது அவசியமாகின்றது. மேலும் காயத்திரீ மந்திரோபதேசம்பெற்றவனே வேதத்தைக் கற்கத் தகுதியுள்ளவனாக ஆகின்றான் என்றுமட்டும் அதன் கருத்தேயன்றி வேதத்தைக் கற்கின்றவன்தான் காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்று சொன்னதாகக் கொள்ளுதல் கூடாது. அஃதுடன்

ऋषयो दीर्घसंध्यात्वादायुर्दीर्घमवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेवच ॥



"ருஷிகள் நீண்டகாலம் சந்தியானுஷ்டானஞ் செய்ததால்தான் நீண்ட ஆயுள், நல்லறிவு, கீர்த்தி, யசஸ், பிரும்மதேஜஸ் இவைகளடைந்தனர்" என்ற மனுவசனப்படி இத்தகைய சந்தியானுஷ்டானத்தால் ஆயுர்விருத்தி, நல்லறிவு, நற்கீர்த்தி, பிரும்மதேஜஸ் (பிராம்மண ஜாதிக்குரிய நிக்கிரஹ அநுக்கிரஹசக்தி) இவைகளையடைந்து க்ஷேமத்தையடையலா மென்றும் வெளியாவதால் வேதாத்யயனம் செய்யாதவனும் காயத்திரீ உபதேசம் பெறவேண்டுவ தவசியமென்றும், அவ்விதகாயத்திரீ ஜபத்தால் மட்டுமே எண்ணிறந்தபயன் இவனுக்குண்டாவது நிச்சயமென்றும், அவ்விதமே நமதுதேசத்தில் நாளிதுவரை மஹான்கள் அவற்றை அடைந்தும் வந்தனர் என்றும் நாம் அதை இழந்ததாலேயே எதற்கும் சக்தியற்றவர்களாயும், மஹாமூடர்களும் கண்டுநகைக்கக்கூடிய நிலைமை பெற்றவர்களாயும் இருக்கின்றோமென்றும் தெளிவாய் ஏற்படுகின்றது.

இங்கு நங்குலத்திலுதித்த பெரியோரால் நேரிலனுபவித்ததாக நமக்குச் சொல்லப்பட்ட லோகானுபவமொன்று கூறுவாம். அதாவது :—ஒரு ஊரில் ஒரு பிராம்மணனுக்கு பிரும்மராக்ஷசன் என்ற பிசாசம் பிடிக்க அதுகாரணம்பற்றி அப்பிராம்மணர் எவருக்கு மடங்காது பிசாசம் பிடித்தவனுக்குரிய முறைப்படி யெல்லாம் நடந்துவருங்காலையில் ஒருசமயம் தாம் வைதிககாரியத்தை முன்னிட்டு அவ்வூர்சென்று வசிக்கும் பொழுது அவ்வூரில் யாதோ ஒரு வேதியர் வெளிப்பார்வைக்குச் சாமான்யமான தோற்றமுடையராய் வீடுவீடாய்ச் சென்று பிக்ஷை எடுத்துவரும் சந்தர்ப்பத்தில் பிரம்மராக்ஷஸன் என்ற பிசாசம்பிடித்த பிராம்மணன் வீட்டண்டை வருங்காலையில் இதுகாறும் எவ்வளவோ எண்ணிறந்த மந்திரவாதிகளைக் கொண்டு மந்திரப்பிரயோகஞ் செய்தும் எதற்கு மஞ்சாது அந்தந்த மாந்திரிகர்களைப் பரிஹஸித்தும் தான் செய்யும் முறையையே விடாதுசெய்தும் வந்த அப்பிசாசம்பிடித்தவன் இவ்வேழைவேதியர் தான்வசிக்கும் வீட்டின் வாயிற்படியில் அடிவைத்ததும் "அந்தோ! உடம்பு எரிகின்றதே! இப்பாபியை

இங்கு எவர் வரும்படிச்செய்தவர். நான் ஓடிவிடுகின்றேன்" என்று பலவாறு கூக்குரலிடவே அவ்வூர் ஜனங்களெல்லாம் உடனே ஓடோடியும்வந்து கூட்டமாகக்கூடி அவ்வேழை வேதியரைநோக்கி ஸ்வாமிகாள்! தாங்கள் மஹா மந்திரவாதிகளெனத் தோன்றுகிறது. ஆகையாற் றாங்கள் இப்பிராம்மணனுக்குப் பிடித்திருக்கும் பிரும்மராக்ஷசத்தைப் போக்கி இவனது குடும்பத்தைக் காப்பதுடன் இவ்வூரையே காக்கவேண்டுமென அவரை வேண்டிக்கொள்ளவே உடனே அவ்வேழை வேதியர் "ஓ கிராமவாஸிகளே! நான் மந்திரவாதியுமல்லன், செப்பிடு வித்தைக்காரனுமல்லன். எனக்கு ஒன்றும்தெரியாது. வேதாத்யயனங்கூட நான் முற்றிலும் பண்ணியதில்லை. உபனயனமானது முதற் றவறாது எனதுபிதா முதலியவர்களாலுபதேசிக்கப்பெற்றபடி ஒவ்வொருதினமும் சந்தியானுஷ்டானஞ்செய்து ஆயிரம் ஆவிருத்தி காயத்ரீஜபஞ் செய்துவருகின்றேன்; இதுதான் எனக்குத்தெரியும்" எனவே அதுகேட்ட அக்கிராமவாஸிகள் அவர் என்னசொல்லியும் அவரை விடாது வேண்டத்தொடங்கினர். உடனே அவ்வேழைவேதியர் ஒருவாறு தன் மனதைத் தேற்றிக்கொண்டு பிரும்மராக்ஷஸம்பிடித்த அப்பிராம்மணனைநோக்கி "அடா! நீ இந்தப்பிராம்மணனை விட்டுப்போக வேண்டும்; இதற்கு என்னசொல்லுகிறாய்" என்று கேட்கவே பிராம்மண சரீரத்திலுள்ள அப்பிசாசமானது "நான்போகிறேன், போகிறேன்" என்று சொல்லவே அச்சமயம் அங்கிருந்த அக்கிராமவாசிகள் இவ்வேழை வேதியனைநோக்கிச் சொன்னதாவது "ஓ சுவாமிகாள்! இப்பிசாசம் போய்விடுவது உண்மையானால் இவ்வூர் ஆற்றின் கரையிலுள்ள ஒருபெரிய அரசின்கிளையானது சமீபத்திலடித்த புயற்காற்றால் ஆற்றில் முறிந்து விழுந்து கிடக்கின்றது; இதை இப்பிசாசம் ஒருவரும் அறியாது தூக்கிப்போட்டு விட்டாற்றான் இப்பிசாசம் இவனை விட்டுப்போனதாக நாங்கள்நம்பக்கூடும். ஆகையாற்றாங்கள் அவ்விதஞ் செய்யும்படி இதற்குக்கட்டளையிட வேண்டும்" எனப் பிரார்த்திக்க அவ்விதமே அவ்வேழைவேதியரும் கட்டளையிட அன்றிரவே ஆற்றில் விழுந்து கிடந்ததும் சுமார் 200 ஜனங்கள்



சேர்ந்துப் புரட்டக்கூடியதுவுமான அரசின்கிளையானது காலையில் அவ்வூரார் நதிக்கு வருவதற்குமுன்னதாகவே கரையிற் கொண்டுசேர்க்கப்பட்டிருந்தது. அதைமறுநாள் நதியில் ஸ்நானஞ் செய்யச்சென்றிருந்த நானும், அவ்வூர்வாசிகளும், அவ்வேழை வேதியரும் கண்கூடாகக்கண்டு ஆச்சரியமடையுந் தருணத்தில் அவ்வேழைவேதியர் அக்கிராமவாசிகளை நோக்கி "ஓ கிராமவாசிகளே! இனி நீங்கள் இப்பிசாசத்திற்குப் பயப்பட வேண்டாம். அது இப்பக்கமே இனிவராது" என்று சொல்லிப் பின்னர் சொன்னதாவது:—"நான் ஒரு ஏழைப்பிர்மசாரிப் பிராம்மணன். முறைப்படி காயத்ரீ ஜபஞ்செய்ததைத் தவிர்த்து வேறு எதையும் அறியேன். நீங்களும் இப்பிசாசம்பிடித்த பிராம்மணனும் உபதேசமுறை தவறாதுமட்டும் காயத்ரியை ஜபித்து வந்திருந்தால் இக்கஷ்டம் வந்திருக்குமா வென்பதைக் கவனித்துப்பார்த்து இனியாவது காயத்ரியை ஜபித்துவாருங்கள். இவ்விதகாயத்திரீ ஜபத்தின் மஹிமையாலன்றோ விசுவாமித்திரர் வசிஷ்டர் முதலிய மகருஷிகள் சக்கிரவர்த்திகளுங் கண்டு நடுங்கக்கூடிய மேலானநிலையை அடைந்தனர் என்பதைப் புராணங்கள்வாயிலாக நான்பலதடவை கேட்டிருக்கின்றேன்" என்று சொல்லி அவர் வேறு ஊர் சென்றார். அதுமுதற்கொண்டு அவ்வூர்வாசிகள் யாவரும் சந்தியானுஷ்டானத்தை முறைதவறாது செய்துவந்தனர். நானும் அதற்குப்பின்னரே மிக்கஊக்கத்துடன் காயத்ரியை ஜபிக்கவாரம்பித்தேன். மேற்சொன்னதை நான் நேறில் கண்கூடாகக்கண்டிருப்பதால் இதிற் சந்தேகங் கொள்ளாது நீயும் இவ்விதமே செய்துவருவாயாக வென்று எனக்கும் உபதேசித்தார் என்பதேயாம்.(1)

ஆகவே மனுவசனத்திற் சொல்லிய **ब्रह्मवर्चसमेव च** பிராம்மணனுக்குரிய நிக்கிரஹாநுக்கிரஹ சக்தியை காயத்திரீ ஜப

(1) குறிப்பு:—இதைப்படிக்கும் ஒவ்வொரு ஆஸ்திகனும் ஏதோ இது ஒருகதையென்று எண்ணாது இதைநேரில்பார்த்தவொருபெரியவர் கூறி விஷயமாதலால் ஒவ்வொருப் பிராம்மணனும் இவ்விதசக்தியை அடைவதற்கு முயற்சிசெய்யவேண்டுமென்றே இக்கதையை இங்கு எழுதினோம் என்று கண்டுகொள்ளவும்.

மாத்திரத்தால் நந்தேயத்திற் பலர் அடைந்திருக்கின்றனர். ஆதல்பற்றி வேதாத்யயனஞ் செய்யாத நாம் எதற்குக் காயத்திரீ ஜபஞ் செய்யவேண்டுமென்ற வீண்வாதத்தை விடுத்து மேற்கண்ட நிக்கிரஹாநுக்கிரஹ சக்தி ரூபமான பிரும்மவர்ச்சஸ்ஸைத் தரத்தக்க சந்தியாநுஷ்டானத்தை முறைதவறாது செய்துவர வேண்டுவதவசியமென்று ஏற்படுகின்றது. ஆகையாற்றான் ஆர்ய குலத்திலுதித்த ஒவ்வொரு ஜாதிப்பிராம்மணனும், க்ஷத்திரிய வைசியர்களும் இவ்வித மஹாசக்தியை யடையவேண்டுவதவசியமெனக் கருதியே பிராம்மணன் 8-வது வயது முதற்கொண்டும், க்ஷத்திரியன் 11-வது வயது முதற்கொண்டும் வைசியன் 12வது வயது முதற்கொண்டும் காயத்திரீ மஹாமந்திரோபதேசத்தைப் பெற்று முறைப்படி அதை ஜபித்துவரவேண்டுமென நம் பெரியார் விதித்தனர்.

சங்கை:—மேற்சொல்லிய காயத்திரீ மந்திரமும், சந்தியா நுஷ்டான காலத்திற் சொல்லப்படும் ஏனைய மந்திரங்களும் வடமொழியிலேயே இருப்பதுடன், அம்மந்திரங்களை யுச்சரிக்குங்கால் உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், என்ற சிலஸ்வரங்களும் அதுடன் சேர்க்கப்பட்டிருப்பதால் மேற்கண்ட ஸ்வர விசேஷங்களை எளிதிற் கற்கக்கூடாத நஞ்சிறுவர்கள் காயத்திரீ முதலிய வேதமந்திரங்களை அவரவர்க்குப் பழக்கத்திலிருந்து வரும் ஏனைய பாஷைகளில் மொழி பெயர்த்து அம்மொழி பெயர்ப்பைக்கொண்டு ஏன் சந்தியாநுஷ்டானஞ் செய்யக்கூடாது? எவ்விதமாயினும் எல்லாம்வல்ல தேவதையைத் தியானஞ் செய்யவேண்டுவதுதானே முக்கியமானது. தேவதாத்தியானஞ் செய்தலை எவ்வழியாற் செய்தாலென்னை?

உத்தரம்:—இந்த வடமொழியை "கீர்வாணபாஷை" என்றும், "தேவபாஷை" என்றும் சொல்வதை உலகில் எதிலும் நடுநிலைமை வஹித்து உண்மை யறிதலையே முக்கிய நோக்கமாகக்கொண்ட உத்தம மேதாவிகள் ஒப்பவேண்டியதும், ஒப்பியதுமாதல்பற்றி தேவதையைத் தியானஞ்செய்தும் அத்தேவதையின் ஸ்வரூபத்தைப் போதிக்கின்ற மந்திரங்களை ஜபித்தும்,



அத்தேவதையினிடமிருந்து யாதோ ஒரு பயனை எதிர்பார்த்துமிற்கும் நாம் அத்தேவபாஷையிலுள்ள மந்திரங்களை ஜபித்து அப்பாஷை மூலம் அவர்களை அழைத்தாலன்றோ அத்தேவர்கட்கு அதன்மூலம் நம்மிடத்தில் விசேஷமானப் பிரீதியுண்டாகி நாம் கோறியவைகளை அவர்கள் கொடுக்கக்கூடும். அவ்விதமன்றி அவர்கட்குப் பழக்கமில்லாத வேறு பாஷைகள் மூலம் அவர்களை ஆராதிக்கத் தொடங்குவோமாயின் நம்மால் உச்சரிக்கப்படும் பாஷையானது அவர்களா லறியக்கூடாததாக இருக்கின்றதுடன், அவர்களிடம் எப்பாஷையை உச்சரிக்க வேண்டுமோ அம்முறைதவறி நடந்தவர்களாகவும் நாமாகிவிடுவோமாதல்பற்றி அதன் மூலம் தேவதாப்பிரசாதத்தை யடையக்கூடாதவர்களாயாவதுடன் சுருங்கச்சொல்லின் அவர்களின் கோபத்திற்குமல்லவா பாத்திரர்களாகவேண்டிவரும். ஆகவே தேவதையின் பிரசாதத்தையடைய விருப்பமுள்ளவன் தேவபாஷையிலுள்ள மந்திரங்களை யுச்சரித்தே அதை அடைய வேண்டுவது அவசியமாகின்றது.

சங்கை—"பொதுவாய்த் தேவதைகள் மனிதர்களைவிட மேலான சக்தி, அறிவு இவைகளுள்ளவர்" எனச்சாஸ்திரங்கள் கூறுகின்றன. மனிதருள் எண்ணிறந்தமேதாவிகள் ஒரே சமயத்தில் பலபாஷைகளைக் கற்றிருக்கின்றனர் என்பதைக்கண்கூடாகக்கண்டும், கேட்டுமிருக்கின்றோம். षट्भाषाचतुरस्स एव भुवने न ज्ञायते केन वा. "ஆறு பாஷைகளிற்சதுரரான அவர் உலகில் எவராற்றான் அறியப்படவில்லை" என்று "ராஜசூடாமணி தீக்ஷிதர்" என்றகவி தற்புகழ்ச்சிசெய்துகொண்டிருக்கின்றார். ஆகவே பலதுறைகளிலும் தேவர்களைவிடக் கீழ்நிலையிலுள்ள மனிதரே பலபாஷைகளையறிந்தவர்களாக இருக்கக்கூடுமானால் எத்துறைகளிலும் மனிதரைவிடமிக்கமேலான தேவதைகள் உலகிலுள்ள எப்பாஷைகளையும் அறிந்திருக்கவேண்டுவதவசியமாகின்றதன்றோ. ஆகையால் மேற்சொன்னமந்திரங்களை ஒவ்வொருவரும் தத்தமக்குப்பழக்கமான தேசபாஷையில் மொழிபெயர்த்து ஜபித்துவந்தபோதிலும் அதைத்தேவர்கள்சு

ளுவில் அறிந்துகொள்ளக்கூடுமாதல்பற்றி அதன்மூலம்தேவதைகளின் பிரசாதமுண்டாகவேண்டுவ தவசியமாயிருக்க அது உண்டாகாதென்று சொன்னது எங்ஙனம்?

உத்தரம்:— உலகில் நியாயஸ்தலத்தில் தலைமை அதிகாரம் வஹிக்கும் பெரியஅதிகாரியானவர் (judge) தான் ஏனையதேச பாஷைகளைக்கற்றவராயினும் "நியாயஸ்தலத்தில் ஆங்கிலத்தைத் தவிர்த்துவேறு எந்தப்பாஷையாலும் வாதஞ் செய்தல்கூடாது" என்று உத்தரவிட்டிருந்தால் அவ்வுத்தரவை மீறி'த்தாமும் இந்நியாயாதிகாரியும் ஒரேதமிழ்த்தேசத்திற்றான் ஜனித்திருக்கிறோம்; தமக்குப்பழக்கமானத் தமிழ்பாஷை அவருக்கும் தெரியுமாதலால் தாம்சொல்லும் வாதத்தை தமிழில் ஏன் சொல்லக்கூடாது' எனவெண்ணி ஒருநியாயவாதி (Vakil) தமது வாதத்தைத்தமிழில் சொல்லுவாரேல் அவ்வாதத்தை அந்த நியாயாதிகாரி காது கொடுத்துக்கேட்பாரா? கேட்கமாட்டார். அதுமட்டுமென்றி கோர்ட்டாரை அவமதித்ததாகக்கூட அந்த நியாயவாதியினிடத்துக் குற்றஞ்சாட்டுவாரன்றோ! ஆகவே ராஜாங்க பாஷையிற் பேசுவதற்குவேண்டிய அதிகாரம் (பட்டம்) பெற்ற நியாயவாதி வேறுபாஷையிற்பேசுவது தவறாக ஆவதுடன் அது அவர்கோறியபலனைத் தராததாகவும் ஆகின்றது. அப்பாஷையில் பேசுவதற்கறியாத வாதிப்பிரதிவாதிகள் விஷயத்திலோவெனின் அவர்கள் பேசுவதை ஜட்ஜ் அறிந்திருந்தபோதிலும் ராஜாக்ஞையையொட்டி அதை ராஜபாஷையில் மொழிபெயர்த்துமாற்றி விடுவதென்பது பெரியநியாயஸ்தலங்களில் நடந்துவருவதுபோலவே இங்கும் **यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै** "எவர் பிரும்மதேவனைப்படைத்து அவருக்கு வேதங்களை உபதேசித்தாரோ" என்று சொன்னபடி சர்வலோகராஜாவான ஸ்ரீமந்நாராயணனுடைய முகத்தினின்றும் தேவபாஷைவடிவமாக வெளிவந்தவேதத்தை உச்சரிக்கக்கடமைப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும் அத்தேவபாஷையிலேயே அதை உச்சரிக்கவேண்டுமென்றும், அதை உச்சரிக்கும்பொழுது அதற்குரிய உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் முதலியஸ்வரங்களுடனேயே 'குருசொல்லத்தாமும் அவ்விதமே திருப்பிச்சொல்ல' என்ற



முறையையொட்டிச் சொல்லவேண்டுவ தவசியமென்றும், பகவத்பிரசாத ஹேதுவான கர்மகாலங்களில் தேவபாஷைக்குப் புறம்பான ஏனையதேச பாஷைகளில் பேசக்கூடாதென்று **न म्लेच्छतवै** என்பதாலும், தேவபாஷையிலும் அசுத்தமாகப்பேசக்கூடாதென்று **नापभाषतवै** என்பதாலும்விலக்கிக் கூறியிருப்பதிலிருந்தும் தேவதாசார்வ பௌமனான் ஸ்ரீமந்நாராயணனுடையவோ, **अङ्गान्यन्यादेवताः** என்றபடி பகவதங்க பூதர்களான தேவர்களுடையவோ பிரசாதத்தையடையவிரும்பும் ஒவ்வொருஜீவனும் பகவத்பிரசாதத்தை உண்டுபண்ணக் கூடியவைதிககர்மகாலங்களில் **श्रुतिस्मृती ममैवाज्ञा** என்றபடி பகவதாக்ஞாரூபமானவேதமானது எந்தப் பாஷையில் வெளிவந்திருக்கின்றதோ அப் பாஷையில்தான் அதை உச்சரிக்க வேண்டுமென்றும், ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து உச்சரித்தல் என்பது பகவதாக்ஞா ரூபமான சப்தத்தை மீறினதாக ஆகும் என்றும் ஏற்படுவதால் தேவதாப் பிரசாதத்தை விரும்பும் நாம் தேவபாஷையிலேயே அதைச் சொல்லவேண்டுவ தவசியமாகின்றது.

மேலும் மந்திரஜபம், மந்திரார்த்தாநுசந்தானம் என்று இரண்டு காரியங்கள்இச்சந்தியாநுஷ்டானத்தில் அடங்கி இருக்கின்றன. மந்திரத்தின் பொருளை அநுசந்தித்தல் (தியானித்தல்) என்ற விடத்தில் வேண்டுமானால் நீ சொல்வது ஒருவாறு பொருந்தலாம். மந்திரஜபம் என்பது—எந்தப் பாஷையில் மந்திரம் ஏற்பட்டிருக்கின்றதோ அப்பாஷையிலேயே வர்ணஆநுபூர்வியுடன் மந்திரத்தை மனதில் வாங்கி இடை விடாது ஆவிருத்திசெய்தல் ரூபமாயிருக்கிறபடியாலும் இங்கு காயத்திரீ மந்திரஜபம் அதன் அர்த்தானுசந்தானம் இரண்டினாலேயே மேற்கூறியபயன் வரும் என்று சாஸ்திரங்கள் சொல்லுவதாலும் அவ்வித மஹாமந்திரத்தை வேறு பாஷையில் மொழிபெயர்த்தால் அதுகாயத்திரீ மந்திரமாக ஆகாததுடன், காயத்திரீ ஜபத்தால் ஒருவன் அடையவேண்டிய பயனை பாஷாந்தரமொழிபெயர்ப்பால் அடையமுடியாததாகவும் ஆகுமன்றோ! இங்கு லோகானுபவமொன்று கூறுவாம். பள்ளியிற்படிக்கும் மாண

வனுக்கு உபாத்தியாயர் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியவர்களின் புத்தகங்களைப் பாடங் கற்பிக்கும்பொழுது அப்புத்தகத்திலுள்ள சிலபாடல்களை நாளை ஒப்பிவிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டார் என வைத்துக்கொள்வோம். அதற்கு அந்த மாணவன் வேறு ஒருவரைக்கொண்டு அப்புத்தகத்தைத் தனக்குச் சுளுவான ஒருபாஷையில் மொழிபெயர்த்து அம்மொழிபெயர்ப்பை மறுநாள் ஒப்பிவிப்பானேயாகில் அதை ஷேக்ஸ்பியர் பாடல் ஒப்பிவித்ததாகவே எண்ணி உபாத்தியாயர் சந்தோஷப் படுவாரா? அவனிடம் கோபங்கொள்ளுதல்கூட அவசியமாகி விடுமன்றோ! அதுபோலவே காயத்திரீ முதலிய மந்திரங்களை ஜபிக்கவேண்டுமென்றால் அது எந்தப்பாஷையில் எந்தவர்ண ஆநுபூர்வி (தொடர்ச்சி)யுடன் இருக்கின்றதோ அப்பாஷையில் அவ்வர்ண ஆநுபூர்வி யுடனேயே அதை ஜபிக்கவேண்டுமேயல்லாது மொழிபெயர்ப்பை யுச்சரித்தால் அது காயத்திரீ மந்திராவிருத்தியாக ஆகாததுடன் காயத்திரீ ஜபத்திற்குரிய பலன் அவனுக்கு வராதென்பதுவும் திண்ணமல்லவா! ஆகவே காயத்திரீ முதலிய மஹாமந்திரங்களை வடமொழியில்தான் ஜபிக்க வேண்டுமென்பது ஏற்படுகின்றது.

சங்கை:—காயத்திரீ முதலிய மந்திரங்களைத்விஜர்கள் தான் ஜபிக்கவேண்டுமென்றும், மற்றவர் ஜபிக்கக்கூடாதென்றும், மற்றவர் அதை ஜபித்தால் அவருக்கு அம்மந்திர ஜபம் பயன்தருவென்றும் சொன்னது எங்ஙனம்?

உத்தரம்:—இவ்விஷயத்தில் லோகானுபவமொன்று உண்டு. அதாவது:—ஒரு ஊரில் த்விஜரல்லாத ஜமீன்தாரொருவரிருந்தார். அவரிடத்தில் வெகுகாலமாக வேலைபார்த்துவந்த ஒரு த்விஜருடைய ஸ்தானம் காலியாகவே அந்த ஸ்தானத்தில் குடும்பியும், ஏழையுமான ஓர்த்விஜர் வேலைபார்த்துவரப் புதிதாக அமர்ந்தார். புதிதாக வேலைபார்த்துவரும் அந்த த்விஜர் "ஒவ்வொரு தினமும் காலையில் 7மணிக்கு வரவேண்டுமென்று" விதி ஏற்பட்டிருந்தும் சுமார் 8மணிக்கு மேலேயே வந்துகொண்டிருந்தார். அதுகண்ட ஜமீன்தார் அந்த த்விஜனை



நோக்கி 'ஓ த்விஜரே! முன்னர் உமது ஸ்தானத்தில் வேலை பார்த்துவந்தவர் யாவரும் 7மணிக்கே தவறாதுவந்து வேலை பார்த்திருக்க நீங்கள் மட்டும் ஒவ்வொருதினமும் 8மணிக்கு வருகின்றீர்களே! அதன் காரணம் யாது?' என்று கேட்டார். அதுகேட்ட அந்த த்விஜர் ஓ பிரபுவே! நான் ஒவ்வொருநாளும் வழுவாது காயத்திரீ ஜபம் செய்துவருகின்றேன்; ஆகையால் ஒரு நாழிகையாகி விடுகின்றது என்றார். அதுகேட்ட ஜமீந்தார் த்விஜரை நோக்கி காயத்திரீ என்பது என்னை? அதைச் சொல்லுங்கள்; கேட்ப்போம்; எனவே அதற்கு அந்த த்விஜர் காயத்திரீ என்பது ஒரு மஹாமந்திரமென்றும், அதை த்விஜர் தவிர மற்றவர் சொல்லவோ கேட்க்கவோ கூடாதென்றும், அவ்விதம் சொல்வதால் மற்றவற்கு அதுபயன்தரா வென்றும் சொன்னார். இதைக் கேட்டவுடன் ஜமீந்தார் சினங்கொண்டு ஆண்டவன் யாவற்கும் பொது வாகையால் அவர் சொன்ன (வெளியிட்ட) காயத்திரீ நும்வாயினாற் சொன்னாற்றான் பயன் தருமென்றும் என்வாயினாலுச்சரித்தால் பயன் தருவென்றுஞ் சொன்னது எங்ஙனம்? இதைநீவிர்பிரத்யக்ஷமாக நிரூபணஞ் செய்யாவிட்டால் உம்மை வேலையினின்றும் கட்டாயம் நீக்கி விடுவேன் என்றார். அதுகேட்ட அந்தத்விஜர் இன்று முதல் எட்டு தினங்களுள் அதை அநுபவத்தில் காட்டிவிடுகின்றேன்; ஆனால் தாங்கள் குறித்த தினத்தில் தங்கள் ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் யாவரையும் வரவழைத்து எனக்குத் தெரிவித்தால் அன்று நான் யாவருமறிய அதை நிரூபணஞ் செய்வதில் யாதுந் தடையில்லை என்றார். அதுகேட்ட ஜமீன்தாரும் அவ்விதமே யாவரையும் வரவழைக்கவே யாவரும் வந்து கூடினர். அப்பொழுது அந்தத்விஜர் சபையில் ஜமீந்தாரின் அருகில் எழுந்துநின்றுகொண்டு சபையிலுள்ளோர் யாவரும் கேட்கும்படி சமீபத்தில் நின்றுகொண்டிருந்த சேவகனை நோக்கி ஜமீன்தாரை விரலால் குறிப்பிட்டு "அடா! நீ இம்மனிதனைக் கழுத்திற் கையைக்கொடுத்து வெளியிற் கொண்டுதள்ளு" என்று ஒருதடவை சொன்னார். அதைக்கேட்ட சபையிலுள்ளோர் யாவரும் திடுக்கிட்டு 'அந்தோ! இஃதென்னை. இந்த த்விஜர் தனது யஜமானனை இவ்விதஞ்

சொல்லுகின்றாரே. இவர் இவ்விதஞ் சொல்வது மிகவும் அன்னியாயமாயிற்றே' என வெண்ணினவர்களாய் என்ன நடக்கின்றது பார்ப்போம் என்று சும்மாயிருந்தனர். ஒருதரஞ் சொன்னதில் பயன் ஏற்படாததைக் கண்டு அந்த த்விஜர் சேவகனைப் பார்த்து முன் சொன்னதையேத் திரும்பவும் திரும்பவும் சொனனார். இவர் என்ன சொல்லியும் இவர் வார்த்தையானது பயன்படாதிருந்ததுடன் அச்சபையிலுள்ளோர் யாவரும் இந்த த்விஜன் செய்வது ரொம்பவும் அன்னியாயமென்றும் சொல்லி அவரைத் தூற்றவும் தலைப்பட்டுவிட்டனர். அவ்விதம் பல தடவை சொல்லக் கேட்ட அந்த ஜமீன்தாரருஞ் சினங்கொண்டு தனதருகில் நிற்கின்ற சேவகனை நோக்கி "அடா! இம்மனிதனைக் கழுத்திற் கையைக் கொடுத்து வெளியிற் கொண்டு தள்ளு" என்று சொல்லவே அதுகேட்ட சேவகன் உடனே இந்த த்விஜரின் கழுத்திற் கையைக்கொடுத்து வெளியிற்றள்ள எத்தனஞ் செய்தான். அப்பொழுது அந்த த்விஜர் சபையிலுள்ளோரையும் ஜமீந்தாரரையும் நோக்கி "ஒ ஜமீந்தாரர் அவர்களே! சபையிலுள்ளோர்களே! கேளுங்கள் 'இம்மனிதனைக் கழுத்திற்கையைக் கொடுத்து வெளியிற்கொண்டு தள்ளு' என்ற ஒரேவார்த்தை எனது வாயிலிருந்து வந்தபொழுது அவ்விதம் ஒன்றும் சேவகன் செய்யாதிருந்ததுடன் இச்சபையில் வீற்றிருக்கும் யாவருங் கோபத்தையும் அடைந்தீர்கள். பிறகு அதே வார்த்தை ஜமீந்தார் அவர்கள் வாயினின்றும் வந்ததும் சேவகன் அம்மொழிப்படியே எனது கழுத்திற் கையைக் கொடுத்து வெளியிற்கொண்டுதள்ள வாரம்பித்துவிட்டதுடன் சபையிலுள்ள நீங்கள்யாவரும் சந்தோஷத்தையு மடைந்தீர்கள். மேலும் இது நியாயந்தான் என்றும் எண்ணுகின்றீர்கள். இவ்விடத்தில் ஒருவிஷயத்தை யோஜித்துப்பாருங்கள். "இம்மனிதனைக் கழுத்திற் கையைக்கொடுத்து வெளியிற்கொண்டு தள்ளு" என்ற ஒரேவார்த்தை எனது வாயினின்றும் பல தடவை வந்தபொழுதும் பயன்தறவில்லை. அதே வார்த்தை அதிகாரப் பதவியிலுள்ள இந்த ஜமீன்தாரர் வாயினின்றும் வந்ததும் பயன் தரத்தக்கதாக ஆயிற்று. இவ்விதமே காயத்ரீ என்ற மகா மந்திரமானது



அதை உச்சரிக்கத்தக்க அதிகாரம்பெற்ற எனது வாயினின்றும் வந்தால் பயன்தருமா, அதை உச்சரிக்கத்தக்க அதிகாரம் பெறாதவரின் வாயினின்றும் வந்தால் பயன்தருமாவென்பதை நீங்களே யோஜித்துப் பார்த்து இச்சபையில் யாவருமறியுமாறு பதிலுரைக்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். அது கேட்ட ஜமீந்தார் அவர்களும், சபையிலுள்ளோரும் திகைப்படைந்து இந்த த்விஜர் சொல்வது நியாயந்தான் என்று சொல்லி, வார்த்தை ஒன்றாகவிருந்தாலும் ஒருவன் வாயிலிருந்து வந்தால் அது பயன் தருவதில்லையென்றும், அதற்கதிகாரியான மனிதன் வாயினின்றும் வந்தாற்றான் உள்ளபடி பயன் தரும் என்றும் நாம் இங்கு கண்கூடாகக் கண்டுவிட்டபடியால், காயத்ரீ முதலிய வைதிகமந்திரங்களை உச்சரிக்கத்தக்க வதிகாரம் பெற்ற த்விஜர்கள் உச்சரித்தாற்றான் அது பயன்தருமென்றும், மற்றவர் உச்சரித்தாற் பயன்தராவென்றும் தீர்மானஞ் செய்தனர். ஜமீந்தார் அவர்களும் அந்த த்விஜரைப் புகழ்ந்து அன்று தொடங்கி அவரை "காயத்ரியை முறைதவறாது அனுஷ்டித்து வாருங்கள். உங்களுக்கு வேண்டிய பொருளை நீங்களிருக்குமிடத்திற்கே அனுப்பிவிடுகிறேன்" என்று சொல்லி அந்த த்விஜரை அனுப்பிவிட்டார் என்பதேயாம். இந்த விருத்தாந்தத்திலிருந்து காயத்ரீ முதலிய மகாமந்திரங்களை உபநயனம் முதலிய சம்ஸ்காரங்களைப் பெற்ற ஜாதி த்விஜர்களே ஜபித்துவரவேண்டுமென்று தெளிவாகின்றது. ஆகவே காயத்ரீ முதலிய வைதிக மந்திரங்களை த்விஜர் தவிர மற்றவர் ஏன் ஜபிக்கக்கூடாதென்பதற்கு இதனால் சமாதானஞ் சொல்லப்பட்டது.

சங்கை:—காயத்ரீ முதலிய மந்திரங்களை த்விஜர் தவிர மற்றவர் ஜபிக்கக்கூடாதென்றால் மேற்குத் தேசத்திலுள்ளவர்களில் எண்ணிறந்தவர்கள் தற்காலம் ருக்வேதம் முதலிய வேதங்களையும், அதன் பாஷ்யங்களையும் நன்கு கற்று அதை அவர்கட்குரிய தேச பாஷைகளில் மொழிபெயர்த்தும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். மேலும் நீங்களும் இந்த ஆர்யமதசம்வர்த்தனீ என்ற மாதாந்தத்தமிழ்சஞ்சிகையில் வேதங்களைத்தமிழில்மொழி

பெயர்த்தும் வெளியிடுகின்றீர்கள். த்விஜரல்லாதார் வேதமந்திரங்களைச் சொல்லக்கூடாதென்றுஞ் சொல்லிவிட்டு இச்சஞ்சிகையில் அதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால் த்விஜரல்லாதாரும் அவ்வைதிக மந்திரங்களை உச்சரிக்கக்கூடுமன்றே. அவ்விதம் செய்வது தகுமா?

உத்தரம்:—இம்மந்திரங்களின் சமுதாயத்திற்கு "வேதம்" என்றும், "அநுச்ரவம்" என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் வேதம் என்றதற்கு **विदन्ति अनेन धर्मादीन् चतुरः पुरुषार्थान् इति वेदः** "இதனால் அறம் முதலிய நான்கு புருஷார்த்தங்களையும் அரிகின்றனர்" என்பதால் புருஷார்த்தங்களை அறிதற்குச் சாதனமாயிருப்பது என்றும், அநுச்ரவம் என்றதற்கு **गुरूच्चारणमनुसृत्य शिष्येणश्रूयत इत्यनुश्रवः** "குருவின் உச்சாரணத்தை பொட்டிச் சீடனும் உச்சரித்துப் பெறப்படுவது" என்றதால் குரூச்சாரணத்தால் பெறப்படுவது என்றும் பொருள் ஏற்படுகின்றது. ஆகவே,

मन्त्रो हीनः स्वरतो वर्णतो वा मिथ्याप्रयुक्तोनतमर्थमाह

என்றபடி வேதத்தை ஸ்வரத்துடனேயே சொல்லவேண்டும்; ஸ்வரம் தவறினால் அதுவேதமாகாததுடன் அதை யுச்சரிப்பதனால் பயன் எதுவும் இவனுக்கு உண்டாகாதென்றும் சொன்னதிலிருந்து உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் முதலிய ஸ்வரகளுடனும், வர்ணாநுபூர்வியுடனும் குருவினிடமிருந்து முறைப்படி கற்கப்படுவதே வேதமாகுமென்றும், அவ்விதம் கற்பதில் த்விஜரல்லாதார்க்கு அதிகாரமில்லையென்றும், அந்தந்த தேசத்தில் அவரவர்க்குரிய பழக்கத்திலுள்ள சில சங்கேதமான எழுத்துக்களில் அதை எழுதியோ அச்சிட்டோ வைத்துக்கொண்டு அதன்பொருளை அறிந்துகொள்வதில் தோஷம் யாதுமில்லையென்றும், இம்முறைப்படி அதன்பொருளை யறியலாமே யல்லாது அதன்மூலம் அவர்கள்வேதம்வந்த வைதிகர்களாகமாட்டார்களென்றும், இவர்களைக்கொண்டு சுவாமி சன்னிதியில் வேதபாராயணஞ் செய்விக்கவோ மற்றும் வேதபாராயண ரூபமான



சத்கர்மத்தால் பகவதாராதனம் முதலிய சத்கர்மங்களைச் செய்வதோ தகாதென்றும் கொள்ளவும். ஆகையாற்றான் நாமும் வேதத்தின் பொருளை மட்டுமாவது மற்றவரும் அறியட்டும் எனக் கருதியே ஆர்யமதசம்வர்த்தனீ என்னும் சஞ்சிகையில் வேதத்தையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட முன்வந்தோம். ஆகவே வேதத்தைக் கற்க வதிகாரம் பெற்ற த்விஜர் குரு முகமாய் ஸ்வர வர்ண ஆநுபூர்வியுடன் முறைப்படி அதைக்கற்று, அதன் பொருளை வடமொழியிலுள்ள பாஷ்ய க்ரந்தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ளப் போதிய சவுகரியமில்லாதவர்கள் இதன்மூலம் தெரிந்துகொள்ளக்கூடும் என்றும், அதைக் கற்க வதிகாரம் பெறா த்விஜரல்லாதாரும் இம்மொழிபெயர்ப்பின் மூலம் அதன் பொருளைமட்டுமாவது தெரிந்துகொள்ளட்டும் என்றும். இவ்வேலையில் நாம் இரங்கினோம். ஆகவே நாம் செய்வதிலோ மற்றவர் செய்ததிலோ குணமிருக்கின்றதே யொழிய தவறு எதுவுமில்லை யென்றே கண்டுகொள்க.

இவ்விஷயத்தில் லோகானுபவம் ஒன்று கூறுவாம். சங்கீதத்தில் பிரியமுள்ளவொருவன் தியாகராஜசுவாமிகள், தீர்த்தநாராயணசுவாமிகள், ஜயதேவர் முதலியவர்களால் அந்தந்தப்பாஷையில் ஏற்படுத்தப்பெற்ற கீர்த்தனங்களைப்பிறர் பாடக்கேட்டுத் தானும் பாட வெண்ணங்கொண்டவனாய் புஸ்தகத்தில் அச்சிட்டோ எழுதிவைத்தோ இருக்கும் கீர்த்தனங்களைப்படித்தும் அக்கீர்த்தனங்கள் எந்தராகத்திற் பாடப்படுகின்றனவோ அந்த ராகங்களின் லக்ஷணங்களையும் அதைப்பற்றிய வேறுகிரந்தங்கள்மூலம் தெரிந்துகொண்டானேயானால் அவ்விதம்தெரிந்துகொண்டவனும் சங்கீதவித்வாந்தான் எனக்கருதி அவனைக் கச்சேரியில் பாடும்படி ஏராளமாகப் பணங்கொடுத்து ஏற்பாடு செய்யலாகுமா. அவன்பாடினாலும் அதையும்பாட்டுத்தான் எனவெண்ணி சங்கீதப்ரியர் (அதன் லக்ஷணமறிந்தவர்) சந்தோஷிப்பாரா! இக்கீர்த்தனவிஷயத்தில் இவனுஞ்கொஞ்சம் பாடுபட்டிருக்கிறான்; சங்கீதமென்பது இன்னதென்றும் அறியாதவனைவிட இவன் எவ்வளவோமேலானவன் என்றுமட்டுந்தானே

அவன் எண்ணப்படுவான். அதுபோலவே ஸ்வரம் முதலியதுடன் குருவினிடமிருந்து முறைப்படிக் கிரஹிக்கப்படுவதே வேதமென்றும், அதைப்பாராயணஞ் செய்வதாலேயே வேத வேத்யனான ஸ்ரீமந்நாராயணன் ப்ரீதியடைந்து அருள் புரிவாரென்றும் ஏற்படுகின்றது. அஃதுடன் மற்றவரும் அதன் பொருள் முதலியவற்றை இம்மாதிரி மொழிபெயர்ப்புகள் மூலம் அறிந்து பகவன் மகிமையிலீடுபட்டு பகவதாராதனத்திற்குரியபடி தத்தமக்கேற்பட்டவழியில் எம்பெருமானை ஆராதித்து அவனதருளைப் பெற்றுய்யலாம் என்பதில்யாதும் சந்தேகமில்லை. ஆகவே காயத்திரீ முதலியமஹாமந்திரங்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து உச்சரித்தல் தகாவென்றும், வடமொழியிற்றான் உச்சரிக்கவேண்டுமென்றும் பெறப்பட்டது.

பொதுவாய் வேதத்திற் சொல்லியகர்மங்கள், நித்யம் நைமித்திகம், காம்யம் எனமூன்றுவிதமான பிரிவையுடையனவாயிருக்கின்றன. அவற்றுள் **यावज्जीवमग्निहोत्रं जुहोति** "உயிருள்ளவரை அக்நிஹோத்திரஞ் செய்யவேண்டும்" என்றதால் விதிக்கப்பட்டகர்மம் "நித்யம்" எனப்படும். **सोमोपरागे स्नायात्** "சந்திரக்கிரஹண முண்டானதும் ஸ்நானஞ்செய்யவேண்டும்" என்றதால்விதிக்கப்பட்டது "நைமித்திகம்" எனப்படும். **वृष्टिकामः करीर्या यजेत** "மழையில்விருப்பமுள்ளவன் "காரீரீ" என்ற இஷ்டியைச் செய்யவேண்டும்" என்றதால் விதிக்கப்பட்டது "காம்யம்" எனப்படும். ஆகவே**अहरह स्संध्यामुपासीत**"ஒவ்வொரு தினமும் சந்தியோபாஸனைஞ் செய்யவேண்டும்" என்றதால் விதிக்கப்பட்ட சந்தியோபாஸனம் சாயங்காலம், பிராதக்காலம் என்ற நிமித்தமானது அவச்யம் வரக்கூடியதாதல்பற்றி முற்கூறியமூன்றுவித கர்மங்களுள் நித்யகர்மத்திற்கு கூறிய **नियत निमित्तकं कर्म नित्यम्** "அவச்யம் வரக்கூடிய நிமித்தத்தையொட்டி செய்யப்படும்கர்மம் நித்யம்" என்ற லக்ஷணமிருப்பதாலும் **अहरहः** ஒவ்வொருதினமும் என்று திருப்பிச்சொல்லியதிலிருந்தும் நித்யம் என்றே ஏற்படுகின்றது. நித்யகர்மாவான இத்



தகைய சந்தியாநுஷ்டானத்தை ஒவ்வொருத்விஜனும் உபநயனந் தொடங்கி ஒவ்வொருநாளும் மூன்றுசந்தியாகாலங்களிலும் அநுஷ்டித்தேதீரவேண்டும் என்று சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன.

சங்கை:—**प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते**"பயனை எதிர்பாராது மந்தனும் பிரவிருத்திசெய்வதில்லை" என்பதுபொதுவாய் யாவருமறிந்தவிஷயம். இவ்விதமிருக்க கர்மகாண்டரஹஸ்யங்களையுபதேசிக்கவந்தகர்ம மீமாம்சகர்கள்

येषां च कर्मणां करणे फलाभावः, अकरणे च प्रत्यवायबाहुल्यं, तान्येव च कर्माणि नित्यानि।

"எந்தக்கர்மங்களைச் செய்தால் பயன்கிடையாவோ, எவைகளைச் செய்யாவிடில் பிரத்யவாயம் என்றபாபம்வருமோ அவைகளே "நித்யம்" எனப்படும்" என்றல்லவோ கூறுகின்றனர். இவர்கள் சொல்வதை உற்றுநோக்குங்கால் சந்தியாநுஷ்டானமும் நித்தியகர்மமாயாகின்றதுபற்றி இதை அநுஷ்டித்தால் பயன் யாதுமில்லை என்று ஏற்படுகின்றதே? அவ்விதமாயின் பயன் தருக்கர்மத்தை நாம்செய்யவேண்டுவதவசியமில்லையன்றோ?

உத்தரம்—சந்தியாநுஷ்டானத்தால் பயன் எதுவுமில்லாவிடினும் செய்யாவிட்டால் தோஷம்வருமாதலால் அத்தோஷம் வராமலிருப்பதற்காக அதை நாம்செய்யவேண்டுவதவசியமாகின்றது.

சங்கை:—சந்தியாநுஷ்டானத்தால் பயன் உண்டா இல்லையா? என்றால், செய்யாவிடில் தோஷம் வருமல்லவா? அது வராமலிருக்கவேண்டியே அதைச் செய்யவேண்டும் என்று சொல்வது பொருந்துமா? ஒருவன் ஒரு கர்மத்தைச் செய்யாமலிருப்பதற்காகவே பிரத்யவாயம் என்ற பாபம் வருமாயின் வைதிகர்களென்றும், சாஸ்திரவச்யர்களென்றும் சொல்லிக்கொள்ளுகின்றவர்களாலும் எவ்வளவோ சாஸ்திரவிஹிதகர்மங்கள் செய்யப்படாமலிருக்கின்றனவாதல்பற்றி சாஸ்திர

விஹிதமான சந்தியோபாஸனம் அக்கிஹோத்திரம் முதலிய இரண்டொரு கர்மங்களைச் செய்தபோதிலும் சாஸ்திர விஹித ஏனைய கர்மங்களைச் செய்யாமை மூலம் அவர்கட்குப் பாபமே அதிகமாகி பாபபலனான நரகாதிகளையே அநுபவிக்கவேண்டியவர்களாக ஏற்படுவார்களேயொழிய சந்தியோபாஸனம் முதலிய இரண்டொரு கர்மங்களால் மட்டும் புண்யவான்களாக ஆவதற்கிடமில்லை. மேலும் எவன் எந்த வேலையைச் செய்யவில்லையோ அதனால் அவ்வேலையின் மூலம் கிடைக்கக்கூடிய பயன் கிடையாவென்று மட்டும் சொல்வது பொருந்துமேயல்லாது அதைச் செய்யாமையாலேயே பாபம் வரும் என்று சொன்னது பொருந்துமா?

உத்தரம்:—

अकुर्वन् विहितं कर्म निन्दितं च समाचरन् ।
प्रसजंश्चेन्द्रियार्थेषु नरः पतनमृच्छति ॥

"சாஸ்திரவிஹிதகர்மாவைச் செய்யாதவன் பதனத்தை (பாபத்தை) அடைவான்" என்று மனு கூறுவதால் சாஸ்திரங்கள் எந்தக் கர்மத்தைச் செய்தே தீரவேண்டுமென்று விதித்தனவோ அதைச் செய்யாதிருத்தல் மூலம் பாபம் வரும் என்று சொல்வதில் யாதுதடை.

சங்கை.—மேற்சொன்ன மனு வசனத்தை உற்றுநோக்குங்கால் நீங்கள் சொல்லும் பொருள் ஏற்படாது வேறுவிதமாக வல்லவோ பொருள் ஏற்படுகின்றது. அதாவது:—**विहितमकुर्वन्** விஹித கர்மத்தைச் செய்யாதவனாய் என்றவிடத்திலுள்ள **अकुर्वन्** என்ற சப்தமானது **कृ** என்ற தாதுவின்பேரில் **शतृ** என்ற பிரத்யம் வைத்து ஏற்பட்டது. அந்த **कृ** என்ற தாதுவின்மேலிருக்கும் **शतृ** பிரத்யத்திற்கு வியாகரண சாஸ்திரத்தில் **लक्षणम्**, **हेतु** என்ற இரண்டு பொருள்களே கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் **लक्षणम्** என்ற அர்த்தத்தைக்கொண்டு யோஜிப்போமாயின் "விஹிதகர்மத்தைச் செய்யாதிருத்தலானது பதனம் (பாபம்) வரும் என்பதற்கு க்ஞாபகம்" என்று



மட்டும் பொருள் ஏற்படுகின்றதேயொழிய விஹிதகர்மத்தைச் செய்யாதிருத்தல் என்ற **अभाव** அபாவத்திலிருந்து பிரத்யவாயம் (பாபம்) என்ற **भाव** வஸ்துவானது உண்டாகின்றதென்று பொருள் ஏற்படவில்லை.

அப்படியாயின் இந்தச் சுலோகத்தின் கருத்துத்தான் என்னை எனின்? அதனுண்மை இங்கு கூறுவாம்.

न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत्

"எவனும் க்ஷணமேனும் கர்மம் செய்யாது ஒருபோதுமிரான்" என்ற கீதாவசனப்படி விஹிதகர்மத்தைச் செய்யவேண்டிய காலத்தில் சாஸ்திர விஹிதமல்லாத (அசாஸ்திரீயமான) கர்மத்தைச் செய்தல் மூலம் அவ்வசாஸ்திரீய கர்மத்தின் பயனான பாபமானது வந்துவிடும் என்பதை இந்த **अकुर्वन्** என்றவிடத்திலுள்ள **शतृप्रत्यय** மானது க்ஞாபகப்படுத்துகின்றது என்று ஏற்படுகின்றது.

இரண்டாவதான **हेतु** என்ற பொருளை **शतृप्रत्यय** த்திற்குக் கொள்வோமாயினும் கர்மமீமாம்சகர்கள் சொல்லுகிறபடி சொல்வதற்கிடமில்லை. ஏனெனில்:—ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையில் பல ஜன்மங்களிற் செய்த பாபகர்மங்களிருக்கக்கூடுமாதல்பற்றி அதன்பயனான துக்கத்தை வரவிடாது தடைசெய்துகொண்டிருந்த விஹிதகர்மகரணத்தை (அநுஷ்டானத்தை) நெருத்தியதிலிருந்து பல ஜன்மங்களிற் செய்த பாபகர்மபலனான துக்கம் வந்து சேர்ந்துவிடுவதற்கு விஹிதகர்மத்தைச் செய்யாதிலிருத்தல் காரணமாகின்றமையால் வேறு ஜன்மங்களிற் செய்த பாபகர்மபலனான துக்கத்தைத் தடுப்பதற்கு வேண்டியே விஹிதகர்மத்தைச் செய்யவேண்டுமென்று பொருள் கொள்வதவசியமாகின்றது. இவ்விதம் பொருள் கொள்ளாவிடில் **नह्यसतः सञ्जायेत, नासतो विद्यते भावः** "அபாவத்தினின்றும் பாவமுண்டாகாதன்றோ!" என்ற சுருதி ஸ்மிருதி வசனங்கள் வீணாவதுடன் அபாவம் என்பது எல்லாவிடத்திலும் சுலபமாதலால் **शृङ्गेऽपि स्तनकार्यं कुर्यात्** கொம்பினின்

றும் பாலைக் கறக்கலாமாதல்பற்றி பால்கறக்கும் பசுமுதலியன தேவையில்லை என்றும் ஏற்பட்டுவிடும். ஆகவே நித்திய கர்மத்தைச் செய்யாதிருத்தல் என்ற अभाव த்தினின்று பிரத்யவாயம் என்ற (भाव) பாவரூபமான பாபம் வரும் என்று சொன்னது பொருந்தாதாகையால் நாம் சொன்னபடியே பொருள் கூறவேண்டிய தவசியமாகின்றது. ஆகவே சந்தியானுஷ்டானத்திற்கும் பயன் உண்டென்றும் பயனைத் தரத்தக்க அக்கர்மத்தைச் செய்யவேண்டிய தவசியந்தானென்றும் கொள்வதில் ஆக்ஷேபமில்லையென்றும் ஏற்பட்டுவிட்டது.

சங்கை:—நித்யகர்மத்திற்கும் பயன் உண்டென்றால், நித்யம் என்றும், காம்யம்என்றும், நைமித்திகம் என்றும் கர்மத்தை மூன்றுவிதமாக சாஸ்திரம் கூறினது முற்றிலும் வீணாகிவிடுவதாலும், நித்யம் காம்யமாகவும், காம்யம் நித்யமாகவும் ஆகிவிடுவதாலும், நித்யகர்மத்திற்குப் பயன்கிடையாவென்று சொன்ன கர்மமீமாம்சகர்களின் சித்தாந்தத்திற்கு விரோதமேற்படுவதாலும் இவ்விதங் சொல்வது அவசியமாகின்றதன்றோ ?

உத்தரம்:—கர்மமீமாம்ஸகர்கள் சரீரத்துடன் கூடிய இந்திரன் முதலியதேவர்கள் தனிமையில் இல்லைஎன்றும், அசேதனமான(ஜடமான)அபூர்வமே பலனைத்தருகின்றதென்றும் न कदाचिदनीदृशं जगत् உலகமானது இப்பொழுதிருக்கும் நிலைக்கு மாறாக ஒருபொழுதுமில்லை. அதாவது:—அதற்கு அழிவுமில்லை சிருஷ்டியுமில்லை, ஆதல்பற்றி சிருஷ்டிகர்த்தாவுமில்லை என்ற பல விஷயங்களை உபநிஷத்விருத்தமாகச் சொல்லுகின்றனர். அவ்விதமவர்கள் சொல்வதைவேறு எந்த ஆஸ்திகதர்சனக்காரருமங்கீகரிக்கவுமில்லை. அஃதுடன் நித்யகர்மத்திற்குப் பயனில்லை என்று அவர்கள் சொல்வதற்குமாறாக आम्रे फलार्थे निमिते छाया-गन्धावनूत्पद्येते एवं धर्मं चर्यमाणं अर्था अप्यनूत्पद्यन्ते மாமரத்தைப் பழத்திற்காகப் பயிரிட்டால் நிழலும் வாஸனையுமுண்டாவதுபோல தர்மத்தைச்செய்தால் அதன்பயனும் இவன் எதிர்பாரா விடினும் வந்தேதீரும் என்றும் ஆபஸ்தம்பர் சொல்லி இருக்கிறார்.



இவ்விதமே சங்கர பகவத் பூஜ்யபாதாசார்ய ஸ்வாமிகளவர்களும் நித்தியகர்மத்திற்குப் பயன் உண்டென்றே தமது பாஷ்யக் கிரந்தங்களில் ஸ்தாபித்து மிருக்கின்றனர். ஆதலால் நித்திய கர்மத்திற்கும் பயன் உண்டென்று கொள்வதுதான் உத்தமம் என்று ஏற்பட்டுவிட்டது.

சங்கை:—அவ்விதமாயின் நித்தியமென்றும், காம்மியமென்றும் கர்மங்களை இரண்டுவிதமாகப் பிரித்ததின் எண்ணம் என்னை ?

உத்தரம் :—அதனுண்மையை இங்கு கூறுவாம்.

न हि कर्मणां काम्यत्वनित्यत्वकृतभेदोऽस्ति । फलेच्छया कृतं कर्म काम्यम् । फलेच्छाविरहितं कर्म नित्यम् ॥

என்ற சங்கரபாஷ்ய வசனப்படி பலத்தில் விருப்பதுடன் செய்தால் காம்யமென்றும், பலத்தில் விருப்பமின்றிச் செய்தால் நித்தியமென்றும் ஒரே கர்மம் கூறப்படும். ஆதலால் பலத்தில் விருப்பமும், அஃதின்மையுமே கர்மங்களின் காம்யத்துவத்திற்கும், நித்யத்வத்திற்கும் காரணமாகின்றது என்று கொள்ளவும். ஆகவே பயனற்ற கர்மத்தையே சாஸ்திரம் விதிக்கவில்லை என்றும், எந்தக் கர்மத்திற்கும் அததற்குரிய பயன் உண்டென்றும், பயனில்லாக் கர்மம் ஒன்றுண்டெனச் சொல்லும் கர்மமீமாம்சகமதம் அவைதிகமென்றும் ஏற்படுகின்றது.

அஃதுண்மையாயின் சந்தியாவந்தனம் நித்தியமாயிற்றே; அதற்கும் பயனுண்டோவெனின் பயனுண்டென்றே அடியிற்காட்டிய வியாசர், மனு முதலியோரின் வசனங்களுபதேசிக்கின்றன. அவ்வசனங்களாவன.—

व्यासः—दशकृत्वःप्रजप्ता सा त्रियहाद्यत्कृतं लघु ।
तत्पापं प्रणुदत्याशु नात्र कार्या विचारणा ॥

शतं जप्ता तु सा देवी पापौघशमना स्मृता ।
सहस्रजप्ता सा देवी ह्युपपातकनाशिनी ॥

कोटिजापेन गायत्र्या यदिच्छति तदाप्नुयात् ।
यक्षविद्याधरत्वं वा गन्धर्वत्वमथापि वा ॥
देवत्वमथवा राज्यं भूलोकं चाप्यकण्टकम् ॥ इति ॥

मनुः—योऽधीतेऽहन्यहन्येतां त्रीणि वर्षाण्यतन्द्रितः ।
स ब्रह्म परमभ्येति वायुभूतः खमूर्तिमान् ॥ इति ॥

"பத்துமுறை காயத்ரீ ஜபிக்கப்பட்டதாயின் மூன்று தினங்களிற் செய்த சகல பாபங்களையும் தொலைக்குமென்பதில் சற்றும் ஐயமில்லை. நூறு தடவை ஜபித்தானாயின் சகலபாதகங்களையும் போக்கும். ஆயிரம் தடவை ஜபித்தானாயின் உபபாதகங்களுடன் சகல பாதகங்களும் விலகும். கோடி முறை ஜபித்தானாயின் யக்ஷர், வித்யாதரர், கந்தர்வர், தேவர் இவர்களின் தன்மையைக் கோரினபோதிலும், ராஜ்யத்தை அபேக்ஷித்தபோதிலும், இப்பூமண்டலத்தையே இச்சித்தபோதிலும் யாதொரு தடையுமன்றியே அடைந்துவிடுவன். எவனொருவன் சோம்பலன்றியே மூன்று வருஷம் ஒவ்வொரு தினமும் (ஆயிரம் தடவை வீதம்) காயத்திரீ ஜபஞ் செய்வனோ, அவன் சகல பந்தங்களும் நீங்கினவனாய்ப் பிர்ம்மத்தை அடைவான்" என்பனவாம். ஆகவே மேற்கூரிய வசனங்களினின்றும் இச்சந்தியானுஷ்டானமானது விசேஷப் பயனைத் தரத்தக்கதென்று ஏற்பட்டுவிட்டது.

ஆகையாற்றான் விசேஷப் பயனைத் தரத்தக்க இந்தக் காயத்ரீ உபாஸனத்தை ஒவ்வொருவனும் தவறாது அனுஷ்டித்து இம்மை மறுமைகளிற் சகல க்ஷேமங்களையும் அடையவேண்டியது அவசியமெனக் கருதியே நம் பெரியார் இதை 8-வயது முதற்கொண்டே நமக்கு ஏற்படுத்தி இருக்கின்றனர். ஆகவே சந்தியானுஷ்டானத்தில் உபயோகிக்கப்படும் மந்திரங்களை

यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवति । अर्थज्ञ इत्सकलं भद्रमश्नुते स नाकमेति ज्ञानविधूतपाप्मा ।



"அர்த்தமறிந்தவன் சகல க்ஷேமத்தையும் அடைவதுடன் ஞானத்தால் விலகின பாபமுள்ளவனாய் மேலானபதவியை அடைகிறான்" என்றபடி அர்த்தானு சந்தானத்துடன் ஜபித்தல் அவசியமாகின்றதால் அம்மந்திரங்களின் அர்த்தத்தை எளிதில் யாவரும் அறியுமாறு மகான்களால் இயற்றப்பெற்ற பல பாஷ்யங்களுக்கிணங்க சம்பிர்தாயத்தையும், எனது தெய்வமான ஸ்ரீ கோபாலனுடையவும் எனது குருநாதனுடையவும் கிருபையையும் முன்னிட்டு எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கத் தொடங்குகிறோம்.

இம் மொழிபெயர்ப்பில் ருக், யஜுஸ், சாமசாகைகளையொட்டி இச்சந்தியானுஷ்டானத்தில் உபயோகிக்கப்படும் மந்திரங்களையும் மொழிபெயர்ப்பதாகச் சங்கற்பித்திருக்கின்றோமாயினும் முதன் முதலில் யஜுர்வேதிகளின் சம்பிரதாயப்படி மொழிபெயர்த்து அம் மொழிப்பெயர்ப்புகளில் வராத மற்ற பாகங்களுக்கு, "ருக்" என்ற அடையாளமிட்டு ருக்வேத சம்பிரதாயமந்திரங்களையும், "ஸாம" என்ற அடையாளமிட்டு ஸாமவேத சம்பிரதாய மந்திரங்களையும் அவசியம் மொழிபெயர்த்து வெளியிடுவதாகவும் தீர்மானித்துள்ளோம்.

பொதுவாய் மந்திரத்தை யுச்சரித்து ஒருவன் ஒரு கர்மத்தைச் செய்யத்தொடங்கு முன்னர் அந்தந்த மந்திரத்திற்குரிய ருஷி, சந்தஸ், தேவதை, விநியோகம், இவைகளையறிந்தே செய்யவேண்டு மென்றும் அவ்விதஞ் செய்யாதவன் அதன் பயனை யடைவதில்லை என்றும் யோகயாக்ஞ்ய வல்கியர், ஹாரீதர் முதலிய மஹருஷிகள்

अविदित्वा ऋषिच्छन्दोदैवतं योगमेवच ।
नाध्यापयेद्यजेद्वापि पापीयान् जायते तु सः ॥

என்றதால் சொல்லி இருப்பதால் அவ்விதமே செய்யவேண்டுவ அவசியமாகின்றது. ஆனதுபற்றியே ஒவ்வொரு மந்திரத்திற்கும் ருஷி, சந்தஸ், தேவதை இவைகளைச் சாஸ்திரங்களிற் சொல்லியபடி குறிப்பிட்டு வியாக்கியானஞ் செய்கிறோம்.

अथसंध्यानुष्ठानक्रमः

இனி சந்தியாநுஷ்டானஞ் செய்யவேண்டிய முறை.

ब्राह्मे मुहूर्ते चोत्थाय चिन्तयेदात्मनो हितम् ।

"ஸூரியோதயத்திற்கு முன் நான்காவது நாழிகை 'பிராம்ம முஹூர்த்தம்' எனப்படும். பிராம்ம முஹூர்த்தத்தில் படுக்கையை விட்டெழுந்து தமக்கு ஹிதமாயுள்ளதை மனதாற் சிந்திக்கக்கடவன்" என்ற மனுவசனப்படி ஒவ்வொருவனும் பிராம்ம முஹூர்த்தத்திற் படுக்கையை விட்டெழுந்து தமக்கு ஹிதமானவற்றைச் சிந்தித்தல் வேண்டும். பிறகு,

दूरादावसथान्मूत्रं दूरादावसथान्मलम् ।

என்ற வசனப்படி வீட்டிற்கு வெகுதூரஞ் சென்று மலமூத்திரங்களைக் கழித்துக்கொண்டும்,

गन्धलेपक्षयकरं शौचं कुर्याद्यथाविधि ।

என்றபடி நாற்றத்தின் பற்றறச் சௌசத்தை முறைப்படி செய்துகொண்டும்,

सततं प्रातरुत्थाय दन्तधावनपूर्वकम् । आचरेदुषसि स्नानं तर्पयेद्देवमानुषान् ॥

என்ற ஜாபாலியின் வசனப்படி முதலில் பல் துலக்கிக்கொண்டு பிறகு ஸ்நாநஞ்செய்து தேவருஷி பிதிருக்களை யுத்தேசித்துத் தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

क्षुभ्यन्ति हि सुषुप्तस्य स्वेन्द्रियाणि स्रवन्ति च ।
अङ्गानि समतां यान्ति ह्युत्तमान्यधमैस्सह ।

अत्यन्तमलिनः कायो नवच्छिद्रसमन्वितः
स्रवत्येव दिवारात्रं प्रातस्स्नानं विशोधनम् ॥

प्रातस्स्नानं प्रशंसन्ति दृष्टादृष्टकरं हि तत् ॥



"மனிதன் தூங்குகையில் இந்திரியங்கள்யாவும் கலக்கத்தையடைந்து, பரிசுத்தமான இந்திரியம், தாழ்மையான இந்திரியம் எல்லாம் சமமாகவேயாகின்றன. ஆகையாற்றான் ஒன்பது த்வாரங்களடர்ந்த சரீரம் மாலிந்யத்தை யடைகின்றது. இவைகளைச் சுத்திசெய்து சரீரத்திற்கு மிகுந்த ஆரோக்யத்தை யளிப்பதற்கு ஸ்நானத்தைவிட மேலானது எதுவு மில்லை. ஆகையாற்றான் முதலில் திருஷ்டமான பயனைத்தந்து பின்னர் அதிருஷ்டமான பயனைத்தரும் அந்த ஸ்நானத்தைப் பெரியார் புகழ்கின்றனர்" என்று தக்ஷரும்,

गुणा दश स्नानपरस्य साध्या रूपं च तेजश्च बलं च शौचम् ।
आयुष्यमारोग्यमलोलुपत्वं दुःस्वप्ननाशश्च धृतिश्च मेधा ॥

"ஸ்நாநஞ் செய்துகொண்டு வருகின்றவனுக்கு ரூபம், காந்தி, பலம், சௌசம், ஆயுள், ஆரோக்கியம், தைரியம், துஸ்வப்ன நாசம், தாரணை, அறிவு ஆகிய பத்து குணங்களுமுண்டாகின்றன." என்று அத்திரி முதலிய மஹருஷிகள் ஸ்நாநத்தைப் புகழ்ந்திருப்பதாலும், பிராதஸ்நானஞ் செய்கின்றவர்களிடத்து இங்கு சொல்லிய திருஷ்டபலனைக் கண்கூடாகக் கண்டு மிருப்பதாலும் பிராதஸ்நான மவச்யமாகின்றது. மேலும்,

अस्नात्वा नाचरेत्कर्म जपहोमादि किंचन ।

"ஸ்நானஞ் செய்யாமல் ஜபம் ஹோமம் முதலிய எக்கர்மத்தையும் செய்தல் தகா" என்று தக்ஷர் முதலியோர் தடுத்திருப்பதால் சந்தியாநுஷ்டானஞ் செய்தற்கு முன்னர் ஸ்நானஞ் செய்தே தீரவேண்டுமென்று ஏற்படுகிறது. பிறகு தேவருஷி பிருது தர்ப்பணஞ்செய்தும்,

यन्मया दूषितं तोयं शारीरमलसंचयैः ।
तद्दोषपरिहाराय यक्ष्माणं तर्पयाम्यहम् ॥

என்ற ச்லோகரூபமான மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு யக்ஷ்ம தர்ப்பணஞ் செய்தும்,

................वाससः । खण्डद्वयेन क्रमशश्शिरोऽङ्गं परिमार्जयेत् ॥

என்ற வசனப்படி இருதுண்டான வஸ்திரங்களின் ஓர் துண்டால் தலையையும் மற்றொரு துண்டால் மற்ற அங்கங்களையும் துடைத்துக்கொண்டும், வெண்ணிறமுள்ளதும், உணர்ந்ததுமான வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டும், காலை அலம்பி ஆசமனஞ் செய்துகொண்டும், தத்தமது பரம்பராக்கிரமத்தையொட்டி புண்டரதாரணஞ் செய்துகொள்ளவேண்டும்.

புரண்டரதாரணஞ் செய்யும் விஷயத்தில்,

शिखां पुड्ं च सूत्रं च समयाचारमेव च ।
पूर्वैराचरितं कुर्यादन्यथा पतितो भवेत् ॥

என்ற வசனத்தை யொட்டி தத்தம்பெரியோர் செய்து வந்த முறைப்படியே **विभूति** (விபூதி) கோபீசந்தனம், திருமண் முதலியவற்றுள் யாதானுமொன்றைக்கொண்டே புண்ட்ரதாரணஞ் செய்யவேண்டு மென்பது அவசியமாகின்றது.

சங்கை—இப்புண்ட்ரதாரண விஷயத்திற் சிலர் திருபுண்ட்ரத்தையும், சிலர் ஊர்த்வ புண்ட்ரத்தையும், புகழ்ந்து மிகழ்ந்து இருக்கின்றனரே. இவ்விஷயத்தில் எதை உத்தமமாகக்கொள்வது. மேலும் அப்புண்ட்ரதாரணத்தை விதித்தவர் கருத்துத் தானென்னை?

உத்தரம்:—மஹாராஜா முதலியவர்களை ஓர் ஊரிலுள்ள தனது வீட்டில் வரவழைத்து அவருக்கு மரியாதை செய்யும் வாயிலாகத் தனது அபீஷ்டங்களை அவரிடமிருந்து அடைய விருப்பமுள்ளவன், அம்மஹாராஜன் வந்து தங்குமிடமானது தனது வீட்டினுள்ளில் ஏதோ ஒரு இடமாயினும் தனது வீடு முழுவதையுமே பெருக்கி, மொழுகி, இழைக்கோலத்தாலோ, மாவுக்கோலத்தாலோ, காவி சுண்ணம்பு இவைகளால் பட்டையடித்தோ அலங்கரிக்கின்றோமன்றோ. அதுபோலவே ஆதிகர்த்தாவான பரம்பொருளைத் தமது சரீரமாகிற வீட்டின் ஏகதேசமான மனதில் வரும்படி வேண்டி வரவழைத்துத் தியானஞ் செய்து அத்தியானப் பிரபாவற்றால் தாம் கோறியதை அவரிடமிருந்து அடைய விருப்பமுள்ள இந்த ஜீவர்கள் அவர் வந்து தங்குமிடமான இச்சரீரத்தில் மாவாற்கோலம்போடுவதுபோல விபூதியைப் பூசியோ, இழைக்கோலம் போடுவதுபோலக் கோபீ முதலியதை யிட்டோ அலங்கரித்தல் அவசியமெனச் சாஸ்திரம் விதித்தமையால், அவ்விஷயத்தில் என் கோலம் மேலானது, உன் கோலம் கீழானது என்று வீணில் வாதஞ் செய்வதில் பயன் யாதுமில்லை என்றும், எவரெவர் எதெதை வழக்கமாகச் செய்யக் கூடுமோ அததையே செய்யவேண்டுமே யல்லாது மற்றவர் செய்வதைத் தூஷிக்கவோ பூஷிக்கவோ செய்வது முற்றும் பொருத்தமான காரியமல்ல வென்பதைக் காட்டவே சர்வக்ஞர்களான மஹருஷிகள் இவ்விஷயத்தில் ஒருமைப்படாது பற்பல அபிப்பிராயங்களை வெளியிட்டனர் என்று கொள்ளவேண்டும். ஆகவே தத்தமது குலாசாரத்தை யொட்டிப் புண்ட்ரதாரணஞ் செய்துகொள்வதுதான் உத்தமமென்று ஏற்படுகின்றது.



अथ प्राङ्मुख उदङ्मुखो वा उपविश्य संध्योपासनमारभमाणः यथा-संप्रदायमाचमनं कुयात्

பிறகு கிழக்குமுகமாகவோ, வடக்குமுகமாகவோ உட்கார்ந்து சந்தியோபாசனஞ் செய்யத் தொடங்குகின்றவன் சம்பிரதாயத்தை யொட்டி ஆசமனஞ் செய்து கொள்ளவேண்டும்.

(१) अथाचमन मन्त्रः

अच्युताय नमः । अनन्ताय नमः । गोविन्दाय नमः । केशव । नारायण । माधव । गोविन्द । विष्णो । मधुसूदन । त्रिविक्रम । वामन श्रीधर । हृषीकेश । पद्मनाभ । दामोदर ।

பிறகு ஸ்மார்த்த சம்பிரதாயப்படி

(1) ஆசமன விஷயமாகச் சொல்லவேண்டிய சிலவற்றை இப்புத்தகத்தின் முடிவிற் சொல்லுவதாகச் சங்கற்பித்திருக்கிறோம்.

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥

என்றதை ஜபிக்கவேண்டும்.(இதன்பொருள்)**शुक्लांबरधरम्**=வெண்ணிறமான வஸ்திரத்தைத்தரித்தவரும் **विष्णुम्**=எங்கும் நிறைந்தவரும் **शशिवर्णम्**=சந்திரன்போன்ற நிறமுள்ளவரும் **चतुर्भुजम्**=நான்கு கைகளுள்ளவருமான **प्रसन्नवदनम्**=யானை முகத்தோனை (விநாயகரை) **सर्वविघ्नोपशान्तये**=எல்லா இடையூறுகளும் விலக வேண்டி **ध्यायेत्**=தியானஞ் செய்யக்கடவன்.

अथप्राणायामः

பிறகுப் பிராணாயாமஞ் செய்யவேண்டும். அதன் மந்திரமும் ருஷி, சந்தஸ் தேவதைகளும் பின்வருமாறு—

प्रणवस्य ऋषिर्ब्रह्मा । देवी गायत्री च्छन्दः । परमात्मा देवता । प्राणायामे विनियोगः । भूरादिसप्तव्याहृतीनां अत्रि-भृगु-कुत्स-वसिष्ठ-गौतम-काश्यप-अङ्गिरसः ऋषयः । गायत्री-उष्णिक्-अनुष्टुप्-बृहती-पङ्क्ति-त्रिष्टुप्-जगत्यः-छन्दांसि । अग्नि-वायु-अर्क-वागीश-वरुण-इन्द्र-विश्वदेवा देवताः । गायत्र्या ऋषिर्विश्वामित्रः । देवी गायत्री च्छन्दः । सविता देवता । प्राणायामेविनियोगः । शिरो मन्त्रस्य, ऋषिः प्रजापतिः । यजुश्छन्दः । अग्नि-वायु-सूर्या देवताः । प्राणायामे विनियोगः । ओं भूः । ओं भुवः । ओं सुवः । ओं महः । ओं जनः । ओं तपः । ओंऽसत्यम् । ओं तत्सवितुर्वरेण्यं, भर्गो-देवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात् । ओमापो ज्योतीरसोऽमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम् ।

பிராணாயாமமந்திரத்தின் முதலிலிருக்கின்ற பிரணவத்திற்கு ருஷிபிரும்மா. தேவீகாயத்திரீ சந்தஸ். பரமாத்மாதேவதை. பிராணாயாமத்தில் உபயோகம். பிறகு படிக்கவேண்டிய **भूः** முதலிய 7 வியாஹிருதிகளுள் **भूः**என்ற வியாஹிருதிக்கு அத்திரியும், **भुवः** என்றதற்கு பிருகுவும், **सुवः** என்றதற்கு குத்ஸரும், **महः** என்றதற்கு வசிஷ்டரும், **जनः** என்றதற்கு கௌதமரும், **तपः** என்றதற்குக் காச்யபரும், **सत्यम्** என்றதற்கு அங்கிரஸ்ஸும் ருஷிகள். **भूः** முதலிய 7 வியாஹிருதிகளுக்கு காயத்திரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், பிருஹதீ, பங்தி, திருஷ்டுப், ஜகதீ இவை முறையே சந்தஸ்ஸுகள். ஷ மந்திரங்களுக்கு அக்னி, வாயு, அர்க்கன், வாகீசன், வருணன், இந்திரன், விச்வதேவன் இவர்கள் முறையே தேவர்கள். பிராணாயாமத்தில் உபயோகம். காயத்திரீ மந்த்ரத்திற்கு ருஷிவிச்வாமித்திரர். காயத்ரீ சந்தஸ் சவிதா தேவதை. பிராணாயாமத்தில் விநியோகம். ஜபகாலத்தில் மாத்திரம் **परमात्मा देवता** என்றும், **जपे विनियोगः** என்றும் மாற்றிக்கொள்ளவேண்டும். சிரோமந்திரத்திற்கு ருஷி பிரஜாபதி. யஜுஸ்சந்தஸ். அக்னி, வாயு, சூரியன் இவர்கள் முறையே தேவதைகள் என்று சொல்லிக்கொள்ளவேண்டும். **ओं भूः** என்றது முதல் **भूर्भुवस्सुवरोम्** என்றது வரையுள்ள மந்திரங்கள் பிராணாயாம மந்திரங்களெனப்படும். அவைகளைப் பிறகு மனதால் படிக்கவேண்டும்.

**ऋषिः** என்று சொல்லித் தலையிலும், **छन्दः** என்று சொல்லி (1)நாவின் நுனியிலும், **देवता** என்று சொல்லி ஹிருதயத்திலும் (நடுமார்பிலும்) கையால்த்தொடவேண்டும். இதற்கு அங்கந்நியாசம் என்றுபெயர். இவ்விதஞ்சொன்னதின் கருத்து என்னை? எனின்:—மந்திரத்தை ஜபித்து அதன்மூலம் தாம் விசேஷப்பயனையடைந்ததுபோலவே எல்லா ஜீவர்களுமடையட்டும் என்ற கருணையால் அதன் ரஹஸ்யத்தை மஹருஷிகள் வெளியிட்டனராதல் பற்றி குருவாகின்றனர். தயாமூர்த்தியான குருவைச் சிரமேல் வைத்துக் கொண்டாடுகிறேன் என்று காட்டவே ருஷி என்று சொல்லிச் சிரஸ் தொடப்படுகின்றது. எம்மந்திரஜபத்தால் ருஷிகள் விசேஷப்பயனையடைந்தனரோ அம்மந்திரம் நாவினுலுச்சரிக்கப்படுவதாலும், பகவானின் முகத்திலிருந்து

(1)நாவின் நுனியைத் தொடவேண்டுமென்று பிரபஞ்சசாரம் என்ற மந்திரசாஸ்திரம் கூறுவதால், அதன்படி நாவின் நுனியைத்தொடுவதே உசிதமாயினும் தத்காலமுள்ள சிஷ்டர்கள் மூக்கின் நுனியையே தொடுகின்றனர். அதன் பிரமாணத்தை அவர்களிடமே கேட்கவேண்டும்.

வெளிவந்திருப்பது பற்றி நித்தியமாகையாலும் நித்தியமான அம்மந்த்ரஜபத்தால் விசேஷப்பயனை நாம் அடைவது நிச்சயம் என்று காட்டவே छन्दः என்று நாவின் நுணியில் நியாசஞ் செய்யப்படுகின்றது. மந்திரத்தின் பொருளானதேவதை வெளி தேசத்திலிருக்குமாயின் ஒரு சமயம் தான் செய்யவேண்டிய கர்மத்தை உதாசீனம் செய்யக்கூடுமாதல்பற்றி அத்தேவதை தனது ஹிருதயாகாசத்தில் பிரவேசித்திருப்பதாக வெண்ணி மனதால் த்யானிக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தால் देवता என்று சொல்லி ஹிருதயமிருக்குமிடமான மார்பில் நியாசஞ் செய்யவேண்டும். இவ்விதமே பிரபஞ்ச ஸாரம் என்ற மந்திர சாஸ்திரத்தில்,

ऋषिर्गुरुत्वाच्छिरसैव धार्यश्छन्दोऽक्षरत्वात् रसनागतं स्यात् ।
धियावगन्तव्यतया सदैव हृदि प्रविष्टा मनुदेवता च । (पटल१.श्लो२. ॥

என்றதால் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளவர்கள் கூறியிருக்கின்றனர். இவ்விதமே இனி சொல்லப்படும் ருஷி, சந்தஸ் தேவதை இவைகளை யுச்சரிக்கும்பொழுது அவ்வவற்றிற்குரிய விடங்களைத் தொட்டுக்கொள்வதுடன் மேற்சொல்லியதே அவற்றின் கருத்தென்றும் அறியவேண்டும்.

பிராணாயாம விசாரம்.

प्राणो वायुश्शरीरस्थः आयामः तस्य निग्रहः ।
प्राणायाम इति प्रोक्तो द्विविधः प्रोच्यते हि सः ॥

अगर्भश्च सगर्भश्च द्वितीयः प्रोच्यते वरः ।
जपध्यानादिभिर्युक्तं सगर्भं ते विदुर्बुधाः ॥

तदपेतं विगर्भं स्यात् प्राणायामं परे विदुः ।

பிராணன் என்றால் சரீரத்திலுள்ள காற்று. ஆயாமம் என்றால் அதனை அடக்குவது. இந்தப் பிராணாயாமம் அகர்ப்பம் என்றும், ஸகர்ப்பம் என்று மிருவகைப்படும். இவற்றுள் ஸகர்ப்பம்



மிகவும் சிறந்தது. ஜபம், தியானம் இவற்றுடன் செய்வது ஸகர்ப்பம் என்றும், இவையல்லாது செய்வது அகர்ப்பம் என்றும் நாரதர் சொன்னதிலிருந்து ஜபமவச்யமென்றும் ஜபத்துடன் செய்யப்படும்பிராணாயாமமே உத்தமமென்றும் ஏற்படுகின்றது.

भूर्भुवस्स्वर्महर्जनस्तपस्सत्यं तथैव च ।
प्रत्योङ्कारसमायुक्तं तथा तत्सवितुः परम् ॥
ओमापोज्योतिरित्येतच्छिरः पश्चात्प्रयोजयेत् ।
ओमापोज्योतिरित्येषमन्त्रो वै तैत्तिरीयकः ॥
त्रिरावर्तनयोगात्तु प्राणायामस्स शब्दितः।

"ஒவ்வொன்றிற்கும் பிரணவத்தைமுன்னிட்டு 7வியாஹிருதிகளையும், பிறகு காயத்ரியையும், அதன்பிறகு காயத்திரியின் சிரஸ்ஸையும் மும்முறை ஜபித்தாலுயின் அதுவே "பிராணாயாமம்" எனப்படும். காயத்ரீசிரஸ் என்பது யஜுர்வேதம் தைத்திரீயாரண்யகத்தில் பிரசித்தமானது" என்று யோகயாக்ஞ்யவல்க்யரும்,

मुखनासिकासंचारिणं वायुं निरुध्य प्रतिव्याहृति प्रणवेन संयुक्तां गायत्रीं त्रिः जपेत् इत्ययं सर्वत्र प्राणायामः

"முகம், நாசிகை இவைவாயிலாகச் சஞ்சரிக்கின்ற காற்றை நெறுத்தி பிரணவத்துடன்கலந்த ஒவ்வொரு வியாஹிருதியையும், காயத்ரியையும் ओमापोज्योतिः என்றசிரோமந்திரத்தையும் மனதால்மூன்றுதடவை ஜபிக்கவேண்டும். இதுவே எல்லாவிடங்களிலும் பிராணாயாமம் எனப்படும்" என்று விக்ஞானேச்வரரும் சொல்லி இருப்பதால் மேற்கூறிய மந்திரஜபம், மந்திரார்த்தத்தை அநுசந்தித்தல் இவைகளுடன் பிராணாயாமஞ் செய்யவேண்டும். அந்தப்பிராணாயாமம் பூரகம், கும்பகம், ரேசகம் என மூவகைப்படும். அவற்றுள்

नासिकाकृष्ट उच्छ्वासो ध्मातः पूरक उच्यते ।
कुंभको निश्चलश्वासो रिच्यमानस्तु रेचकः ॥

बाह्यस्थितं प्राणपुटेन वायुमाकृष्य यत्नेन शनैस्समस्तम् ।
नाड्यश्च सर्वाः परिपूरणीयाः स पूरको नाम महान्निरोधः ॥

आकेशाग्रान्नखाग्राच्च निरोधश्शस्यते बुधैः ।
निरोधाज्जायते वायुर्वायोरग्निश्च जायते ॥

अग्नेरापश्च जायन्ते ततोऽन्तश्शुध्यते त्रिभिः ।

"நாசியால் சுவாசத்தை உள்ளுக்கு வாங்குதல் பூரகமெனப்படும். சுவாசத்தை உள்ளுக்கு வாங்காமலும் வெளியில் விடாமலும் அசையாது தரித்தல் கும்பகமாகும். சுவாசத்தை வெளிவிடுதலே ரேசகமாகும். சுத்தமான காற்றை வெளியிலிருந்து நாசியால் வெகு சாவதானமாய் முழுமையுமிழுத்து எல்லா நாடிகளையும் நிறப்புவதே பூரகமென்றும், மஹாப்ராணுயாமம் என்றும் சொல்லப்படும். இப்பூரக மஹாப்பிராணுயாமத்தில் சரீரத்தில் தலைமுதல் கால்நுணிவரை நிறைந்திருக்கும்படி வாயுவைத் இழுத்து அடக்கவேண்டும். அங்ஙனம் சரீரம்முழுவதும் வியாபித்தவாயுவினின்றும் அக்னி (ஓர்விதசூடு) உண்டாகும். அதினின்றும் ஜலம் (வியர்வை) உண்டாகும். அவ்விதமுண்டானதும் உள்ளடக்கினவாயு, அதனின்றுமுண்டான உஷ்ணம், வியர்வை இவைகளால் மிகவும் சுத்தியையடைகிறுன்'' என்றுயோகயாக்ஞயவல்க்யர் கூறியிருக்கிருர். ஆயினும் இவ்விஷயத்தில்,

क्रमादभ्यस्यतः पुंसः देहे स्वेदोद्गमोऽधमः ।
मध्यमः कंपसंयुक्तः भूमित्यागः परो मतः ॥

முறையே பிராணுயாமத்தையப்பியசிக்கின்ற மனிதனுக்கு சரீரத்தில் வியர்வையுண்டாவது அதமம் (அதாவது பிராணுயாமசித்தியின் ஆரம்பநிலை) என்றும், சரீரத்தில் அசைவுண்டாவது நடுநிலை என்றும், பூமியைவிட்டு உயரக்கிளம்புவது உத்தமநிலை என்றும் யோகசாஸ்திரத்தில் சொல்லி இருப்பதைபொட்டு மேற்கூறிய யோகயாக்ஞ்ய வல்க்யவசனமானது பிராணுயாமசித்தியின் ஆரம்பநிலையைக் குறிக்கின்றதாகக் கொள்ளவேண்டும்.



மேற்கூறிய பூரகம், ரேசகம், கும்பம் என்ற பிராணுயாமம் எளிதில் வருவதுகஷ்டமாதலால் அதைப்பழக்கத்தில் கொண்டுவரவேண்டிய முறையைப் பதஞ்சலிதனது யோகசாஸ்திரத்தில் மூன்று சூத்திரங்களால் சொல்லி மற்றுமிரண்டு சூத்திரங்களால் அதன்பயனையும் சொல்லி இருக்கிருர். அச்சூத்திரங்களாவன:—

तस्मिन् सति श्वासप्रश्वासयोर्गतिविच्छेदः प्राणायामः ।

बाह्याभ्यन्तरस्तंभवृत्तिर्देशकालसंख्याभिः परिदृष्टो दीर्घसूक्ष्मः ।

बाह्याभ्यन्तरविषयाक्षेपी चतुर्थः ।

ततः क्षीयते प्रकाशावरणम् ।

धारणासु च योग्यता मनसः । (योगसूत्रे १ पादे ४९-५३)

வெளியிலுள்ள வாயுவை உள்ளிழுத்தல் ச்வாசம். சரீரத்திற்கு உள்ளிருக்கும் வாயுவை வெளிவிடுதல் பிரச்வாசம். ஆசனஜயம் வந்தபிறகு இவ்விரண்டு வாயுக்களின் கதியைத்தடுத்தலே பிராணுயாமம் எனமுதல் சூத்திரத்தால் பொதுவாய்ச்சொல்லி சுகமாய் அறியுமாறு மேல்சூத்திரங்களால் தெளிவுபட உபதேசிக்கிருர். வெளியில் விருத்தியை (சஞ்சாரத்தை) யுடைய சுவாசம் ரேசகம் என்றும், சரீரத்திற்குள் விருத்தியையுடைய பிரச்வாசம் பூரகமென்றும், உள்ளில் அசைவற்ற விருத்தியையுடைய வாயு கும்பகம் என்றும் சொல்லப்படும். குடத்தில்வைத்த ஜலம் அசைவற்றிருப்பதுபோல ஸ்தம்ப விருத்தி ரூபமான கும்பகத்தில் வாயுவானது அசைவற்றதாய் நிலைத்து நிறுத்தப்படுகின்றதுபற்றி அதற்குக் கும்பகம் என்ற பெயர் பொருத்தமுள்ளதாகின்றது. மேற் சொல்லிய ரேசகம் பூரகம், கும்பகம் என்ற மூன்று விதப்பிராணுயாமமும் தேசம், காலம், எண் இவைகளுள்ளதாகச் செய்யும்பொழுது தீர்க்க ஸூக்ஷமம் என்ற பெயருள்ளதாக ஆகின்றது. அவற்றுள் தேசத்தை முன்னிட்டுச் செய்வது யாது என்பதை முதலில் தெளிவுபடுத்துவாம்.

சரீரத்தில் குதத்திற்கு இரண்டு அங்குல அளவிற்கு மேலும், மேட்ரத்திற்கு இரண்டு அங்குலம் கீழுமுள்ளவிடத்தில் நான்கு அங்குல விஸ்தாரமுள்ளதாயும் கோழிமுட்டையின் வடிவமுள்ளதாயும் ஓர் வஸ்து இருக்கின்றது. அதற்கு "கந்த மூலம்" என்று பெயர். அதினின்றும் எழுபத்தீராயிரம் நாடிகள் உண்டாகின்றன. அந்தக் கந்தமூலத்தினின்றும் கழுத்து வரை நீளமுள்ளதாயிருக்கின்ற முதுகின் நடுவிலுள்ள பெரிய எலும்புக்கு "மேரு" என்றும், "வீணாதண்டம்" என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. அம்முதுகெலும்பின் துவாரத்தில் கந்த மூலத்தினின்றும் கிளம்பின "சுஷும்னை" என்ற நாடி செல்லுகின்றது. அந்த மேருவின் வெளிப்பாகம் இடது பக்கத்தில் "இளா" என்ற நாடியும், வலதுபக்கத்தில் "பிங்களா" என்ற நாடியும் செல்லுகின்றது. அந்த இளா நாடியானது சந்திரன் போல் வெண்ணிறமுள்ளதென்றும், சக்தியின் சுவரூபமென்றும் அமுதப் பெருக்கத்தைத்தருந் தன்மையுள்ளதென்றும் சொல்லப்படும். வலதுபக்கம் செல்லுகின்ற பிங்களா நாடியானது சூரியஸ்வரூப முள்ளதென்றும், மாதளந்தாதின் நிறமுள்ளதென்றும் ருத்திரனின் சுவரூபமென்றும் சொல்லப்படும். இளை, பிங்களை என்ற இவ்விரண்டு நாடிகளும் கந்தமூலத்தினின்றும் ஒழுங்காய் ஆக்ஞாசக்கிரம்வரை வந்து அங்கிருந்து இளை இடது நாசித்வாரத்தையும், பிங்களை வலது நாசித்வாரத்தையுமடைந்திருக்கின்றது. இவ்விதமிருப்பதால் இடது நாசியின் துவாரத்திலிருக்கின்ற இளை என்ற நாடியால் வாயுவை இழுத்துப் பூரகஞ்செய்து, புருவத்தின் நடுவிலிருக்கும் சுஷும்னை நாடியில் நிறுத்தி கும்பகஞ்செய்து வலதுபக்கம் நாசித்துவாரத்திலிருக்கும் "பிங்களை" என்ற நாடிவழியாக ரேசகஞ் செய்ய வேண்டும். மேலும் இளை பிங்களை என்ற நாடி விஷயத்தில் மற்றுஞ் சில விசேஷங்களிருக்கின்றன. அவையாவன:—

இளை பிங்களை என்ற இவ்விரண்டு நாடிகளும் *मूलाधारम्

* மூலாதார சக்கிரமென்பது சரீரத்தின் உள்பாகத்தில் குதத்திற்கு மேலும் ஆண்குறிக்கு கீழுமுள்ள நான்கு அங்குல மளவுள்ள இடம்.



(மூலாதாரம்) स्वाधिष्ठानम् (சுவாதிஷ்டானம்) मणिपूरकम् (மணிபூரகம்) अनाहतम् (அநாஹதம்) विशुद्धि (விசுத்தி) आज्ञाचक्रम् (ஆக்ஞாசக்கிரம்) என்ற 6 ஆதாரசக்கிர கமலங்களிலும் சுற்றிக்கொண்டே (அதாவது மூலாதாரம் முதல் ஆக்ஞாசக்கிரம்வரை வந்தே) நாசித்துவாரங்களை வந்தடைகின்றன என்று ஒரு மந்திர சாஸ்திர சித்தாந்தம். வேறு மந்திரசாஸ்திரத்தில் இளை பிங்களை என்ற இவ்விரண்டு நாடிகளுள் இளை என்ற நாடியானது இடதுபக்கத்திலுள்ள அண்டத்திலிருந்து கிளம்பி மேருவின் உட் செல்லுகின்ற சுஷும்னையின் சம்பந்தம் பெற்று வலது பக்கத்திலுள்ள தோளிற்கும் கழுத்திற்கும் பூட்டான 'ஜத்ரு' என்ற இடம் வரைவந்து அங்கிருந்து இடதுபக்கத்து ஜத்ருவரை வந்து அங்கிருந்து ஆக்ஞாசக்கிரம்வரை சென்று அங்கிருந்து வலது நாசித்வாரத்தை வந்தடைகின்றது. அதுபோலவே பிங்களா நாடியும் வலதுபக்கத்திலுள்ள அண்டத்தினின்றும் கிளம்பி சுஷும்னை என்ற நாடியின் சம்பந்தமடைந்து இடது பக்கத்திலுள்ள தோளிற்கும் கழுத்திற்கும் பூட்டான 'ஜத்ரு' என்ற இடம் வரைவந்து அங்கிருந்து வலதுபக்கத்து ஜத்ரு வரை வந்து பிறகு ஆக்ஞாசக்கிரம்வரை சென்று அங்கிருந்து இடது நாசித்வாரத்தை வந்தடைகின்றது. ஆனது பற்றியே இவ்விரண்டு நாடிகளும் வில்வளைவாகவே மூலாதரம் முதல் நாசித்வாரம்வரை வருகின்றன. ஆகவே இளை பிங்களை என்ற இவ்விரண்டு நாடிகளும் மேருவின் நடுவிலுள்ள ஓட்டையின் வழியாகவரும் சுஷும்னை நாடியும் புருவத்தின் நடுவில் பின்னல்போலவாகி அதினின்றும் பிரிந்து இளை பிங்களை என்ற

2. சுவாதிஷ்டான மென்பது ஆண்குறிக்கு நேராகவும் மூலாதாரத்துக்கு மேலும் சரீரத்திற்குள்ளிருக்குமிடம். 3 மணிபூரகமென்பது உந்திக்கு நேராகவும், சுவாதிஷ்டானத்திற்கு மேலாகவும் சரீரத்திற் குள்ளிருக்குமிடம். அநாஹத சக்கிரமென்பது மணிபூரகத்திற்கு மேலும், மார்பின் நடுக்குழிக்கு நேராகவும் சரீரத்திற்குள் ளிருககுமிடம். அதுவே ஹிருதயமெனப்படும். விசுத்தி சக்கிரமென்பது அநாஹதத்திற்கு மேலும், கழுத்திலுள்ள குழிக்கு நேராகவும் சரீரத்திற்குள்ளிருக்குமிடம். ஆக்ஞா சக்கிரமென்பது புருவத்தின் நடுவிற்கு நேராக உள்பிரதேசத்திலிருக்குமிடம்.

நாடிகள் நாசிதுவாரத்தை வந்தடைகின்றன. புருவத்தின் நடுவில் ஏற்படும் இளை, பிங்களை, சுஷும்னை இந்த நாடிகளின் சேர்க்கையைப்பற்றிய,

इलायां यमुना देवी पिङ्गलायां सरस्वती ।
सुषुम्णायां वसेद्गङ्गा तासां योगस्त्रिधा भवेत् ॥
संगता ध्वजमूले च विमुक्ता भ्रूवियोगतः ।
त्रिवेणीयोगः स प्रोक्तस्तत्र स्नानं महाफलम् ॥

என்ற ராஜயோக சாஸ்திர வசனப்படி இளையில் யமுனையும், பிங்களையில் சரஸ்வதியும், சுஷும்னையில் கங்கையும் வஸிக்கின்றன. அந்நாடிகளின் சேர்க்கை "த்ரிவேணீயோகம்" எனப்படும். அந்த த்ரிவேணீயோகம் புருவத்தின் நடுவிலேற்படுகின்றது. அங்கு ஸ்நானஞ் செய்வது அதிகப் பலனைத் தரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பனவாம்.

ஆகவே மேற் சொன்ன எந்த முறைப்படியும் இளை பிங்களை என்ற நாடிகள் நாசித்து வாரத்தி லிருப்பன வாகவே ஏற்படுகின்றன வாதலால் அந்த நாடிகளுள் இளை என்ற நாடியால் வெளியிலுள்ள வாயுவை உள்ளுக் கிழுத்து பூரகஞ் செய்யும் காலத்தும் பிங்களையால் ரேசகஞ் செய்யும் காலத்தும் இயற்கையில் வாயுவின் கதியானது எவ்வளவு தூரத்தில் முடிவடையக்கூடுமோ அத்தேசத்தைவிட அதிக தேசம் செல்லும்படி பழக்கத்தில் கொண்டுவர வேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையில் சுவாசமானது நாசித்துவாரத்தினின்றும் 6 (1) அங்குல தூரமே வெளிவருகின்றது. அவ்விதமே 6 அங்குல தூரம் வெளியிலிருந்து உட் செல்லுகின்றது. இத்தகைய வாயுவின் கதியை (ஓட்டத்தை) தன் முயற்சியால் ஒவ்வொரு தினமும் மேற்சொல்லிய மந்திரஜபம், மந்திரார்த்தானு சந்தானம் இவைகளுடன் நாளடைவில் 12, 24 அங்குல தூரம் சரீரத்திற்குள் செல்லும்படி பழக்கி வருவதுடன் சரீரத்திற்கு வெளியிலும் 6 அங்குல தூர மியற்கையில் செ-

(1) 12அங்குல தூரம் வெளிவருகின்றதென்றும் அவ்விதமே அனுபவமிருக்கின்றதென்றும் சொல்லுவாருமுளர்.



வதை ஒவ்வொருதினமும் மேற்சொல்லிய மந்திர ஜபம், மந்திரார்த்தானுஸந்தானம் இவைகளுடன் நாளடைவில் 12, 24 அங்குல தூரஞ் சரீரத்திற்கு வெளியிலும் செல்லும்படி பழக்கிவரவேண்டும். அதனால் பிராணகதியை தன்வசமாக்கிக்கொண்டு சுஷும்னு நாடி இருக்கும் புருவ மத்தியில் மேற்கூறிய இருவித கதியுமின்றி வாயுவை நிறுத்திவரவேண்டும். இதுவே கும்பகமெனப்படும். அவ்விடம் நிறுத்தப்படும் பிராணன் எவ்வளவு காலம் அசைவற்றிருக்கின்றதென்பதைக் கண்டு கொள்வதற்கு அடியில் காட்டிய முறைப்படி மாத்திராகாலந் தெரிந்து அதினின்று வாயு நிற்கும் காலத்தையு மறிந்துகொள்வது அவசியம். மாத்திராகாலமாவது :—தனது முழங்காலை அதிக வேகமில்லாமலும், அதிக விளம்பமில்லாமலும் கையால் ஒரு தடவை சுற்றிக் கைவிரலைச் சொடுக்குவதற்கு நேரும் காலம். இவ்விதம் 12, 24, 36, 48, 64 என்ற முறையில் கும்பகத்தை யப்யசிக்க வேண்டும். ரேசகம், பூரகம் இவ்விரண்டிற்கும் இம்மாத்திராகாலம் உபயோகப்படலாம். அவ்வளவு மாத்திராகாலம் ரேசகம், பூரகம், கும்பகம் இவைகளைச் செய்யப் பயிற்சிபெறின் அதனின்றும் சாஸ்திரங்களிற் சொல்லிய சில சித்தி விசேஷங்களையும் நேரில் அனுபவிக்கலாம். ஆயினும் இவ்விதப் பிராணுயாம சித்திவிரைவிலுண்டாக வேண்டுமென்று ஆசைகொண்டு ஆலோசனையின்றித் தனது சக்திக்குமீறி அதிகக்காலம் பிராணநிரோதஞ் செய்யக்கூடாது. அவ்விதஞ் செய்தால்,

हठान्निरुध्यमानस्तु कुष्ठादि जनयत्यपि ।
तत्प्रत्याययितव्योऽसौ क्रमेणारण्यहस्तिवत् ॥

"பிடிவாதத்துடன் அதிகக் காலமடக்கப்பட்ட வாயுவானது குஷ்டம் முதலிய ரோகங்களை யுண்டுபண்ணும். ஆதலால் காட்டில் தனது இஷ்டப்படி சஞ்சரித்த யானையைப் பிடித்துப் பழக்குவதுபோலவே இவ்வாயு விஷயத்திலும் சாவதானமாய் நடத்தலவச்யமாகின்றது" என்று யோக சாஸ்திரத்தில் சொல்லியபடி தீங்கே நேருமென்று அறியவும். ஆகவே இவ்விதம் ஒவ்வொரு தினமுஞ் செய்துவருவதே "தீர்க்க சூக்ஷ்ம பிராணு

யாமம்" என்று பதஞ்சலி உபதேசித்தார். பழக்கத்திற்குத்
தக்கபடி ரேசகத்தையோ பூரகத்தையோ செய்து ஒருவித சல
னமுமில்லாது வாயுவை நிறுத்தவேண்டும்.ரேசகத்தை முன்
னிட்டுக் கும்பகஞ் செய்தால் அது ரேசக கும்பகமென்று
பூரகத்தை முன்னிட்டுக் கும்பகஞ் செய்தால் பூரககும்பகம் என்
றும் கும்பகமிரண்டுவிதமாகின்றது. இவ்விதமல்லாது நீண்ட
காலப் பழக்கத்தை யொட்டி ரேசகத்தையோ, பூரகத்தையோ
செய்யாது தனிமையில் கும்பகத்தைமட்டுமனுஷ்டித்தால் அது
சுத்தக் கும்பகமெனப்படும் என்று யோக சூத்திரத்திற் சொல்
லப்பட்டிருக்கிறது. மேலும்

नातितृप्तः क्षुधार्तो वा न विण्मूत्रप्रबाधितः ।
नाध्वखिन्नो न चिन्तार्तः प्राणायामं समभ्यसेत् ॥

அதிகம் ஆஹாரத்தை உட்கொண்டு திருப்தியையடைந்த
காலத்தோ, அதிகம் பசியிருக்கும் காலத்தோ, மலஜலபாதை
இருக்கின்ற காலத்தோ, வழிநடந்து களைப்படைந்த காலத்தோ,
மனக்கவலை யுள்ளபொழுதோ பிராணாயாமஞ் செய்தல் கூடா
தென்றும் யோக சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது. ரேசக
பூரகங்களை யனுஷ்டிக்கும்பொழுது

इडया कर्षयेद्वायुं बाह्यं षोडशमात्रया ।
धारयेत्पूरितं योगी चतुःषष्ट्या तु मात्रया ॥
सुषुम्नामध्यगं सम्यग्द्वात्रिंशन्मात्रया शनैः ।
नाड्या पिङ्गलया चैनं रेचयेद्योगवित्तमः ॥
भूयो भूयः क्रमात्तस्य व्यत्यासेन समाचरेत् ।
स्रवत्पीयूषधारौघं ध्यायंश्चन्द्रमसं भ्रुवि ॥
प्राणायामेन योगीन्द्रस्सुखमाप्नोति तत्क्षणात् ।
ज्वलज्ज्वलनपुंजाभं शोषयन्तुष्णगुं हृदि ॥
रविणा प्राणमाकृष्य पूरयेदौदरीं गुहाम् ।
पूरयित्वा शनैः पश्चाद्योगी चन्द्रेण रेचयेत् ॥



इत्थं मासत्रयाभ्यासादुभयायामसेवनात् ।
शुद्धनाडीगणो योगी सिद्धप्राणोऽभिधीयते ॥

यथेष्टधारणं वायोर्ज्वलनस्य प्रदीपनम् ।
नादाभिव्यक्तिरारोग्यं भवेन्नाडीविशोधनात् ॥

रेचकादिलयाभ्यासः नाडीशोधनपूर्वकः ।
स्वेच्छोत्क्रमणपर्यन्तः प्रोक्तो योगानुशासने ॥

வெளியிலுள்ள வாயுவை 16 மாத்திராகாலமுள்ளிழுத்துப் பூர
கஞ் செய்யவேண்டும். அவ்விதமிழுத்த வாயுவை 64 மாத்திரா
காலம் உள் நிறுத்தல் வேண்டும். 32 மாத்திராகாலம்
சுஷும்ந நாடியின் நடுவில் நிறுத்திக் கும்பகஞ் செய்து அவ்
விதக் கும்பககாலத்திலேயே **कुंभकेन जपं कुर्यात्** கும்பகத்
தால் ஜபஞ் செய்ய வேண்டுமென்ற வசனப்படி **ओंभूः** முதல்
தொடங்கி **सुवरोम्** வரையுள்ள மந்திரத்தை ஜபித்து பிங்களா
நாடியால் ரேசகம் (வாயுவை வெளியிடுதல்) செய்யவேண்டும்.
இவ்விதம் பூரகம், ரேசகம் இவைகளைச் செய்யும்பொழுது
நாசித்துவாரத்தை அடிக்கடி மாற்றிக்கொள்ளவேண்டும். அதா
வது:—முதலில் இடது நாசியால் இழுத்து வலது நாசியால்
விட்டு, பிறகு வலது நாசியால் இழுத்து இடது நாசியால் விட்டு
இவ்விதமே ஒவ்வொரு பூரகரேசகங்களையும் மாற்றிமாற்றிச்
செய்துப் பழக்கவேண்டும். இடது பக்கத்து நாசியாலிழுக்
கும்பொழுது அமுதப்பெருக்குடன் கூடின சந்திரனைப் புருவத்
தின் நடுவில் தியானித்தும், வலதுபக்கத்து நாசியா லிழுக்கும்
பொழுது பிரகாசத்துடன் கூடின நெருப்புக்கூட்டத்தின் ஒளி
யுள்ள சூரியனை ஹிருதயத்தில் தியானித்தும் வரவேண்டும்.
பிறகு **ओंभूः** முதலிய மந்திரங்களைச் சொல்லி மெதுவாகக் கும்ப
கஞ் செய்து இடது நாசியால் விடவேண்டும். இவ்விதம் மூன்று
மாதகாலம் இடது வலது பக்கங்களை மாற்றி மாற்றி அப்ய
சித்து வருவானேல் சரீரத்திலுள்ள நாடிகள் சுத்தியையடைவ
துடன் பிராணாயாம சித்தியையும் பெறுவான். இதனால்

வாயுவை இஷ்டப்படி நிறுத்தவும், ஜாடராக்னியை விருத்தி செய்துகொண்டு எவ்வளவு ஆஹாரத்தை உட்கொண்டாலும் அவைகளை யுடனே ஜீரணிக்கவும் சக்தியைப் பெறுவதுடன் வீணை, வேணு, கண்டா முதலியவற்றின் ஒலியை அனுபவித்தலும், ஆரோக்யமும், நினைத்தபடி உயரக் கிளம்புதல் வரையுள்ள சித்தி விசேஷங்களு முண்டாகுமென்றும் சாஸ்திரங்கள் சொல்வதால் இளைபிங்களை இந்நாடிகளை மாற்றிக்கொள்வ தவசியம். மேலும்,

तपो न परं प्राणायामात्, ततो विशुद्धिर्मलानां दीप्तिश्च ज्ञानस्य

பிராணாயாமத்தைக்காட்டிலும் மேலான தவமில்லை. அதனால் காமம், குரோதம் முதலிய மலங்கள் யாவும் விலகி மனந்தெளியும். அதனால் க்ஞானப்பிரகாச முண்டாகும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்விதப் பிராணாயாமத்தை 8-வது வயதில் உபனயனஞ் செய்விக்கப்பட்டச் சிறுவனும், மற்று மசக்தர்களும் செய்வது அசாத்யமாதலால்,

अशक्तिस्स्याद्यदि प्रोक्तप्रणायामे द्विजन्मनः ।
बालस्य चेतरेषां च दशकृत्वो जपस्स्मृतः ॥
त्रिरावर्तनयोगात्तु प्राणायामस्स कल्पितः ।

மேற்சொல்லிய முறைப்படி செய்யச் சக்தியற்றச் சிறுவனும் மற்றவர்களும் ओं भूः முதல் सुवरोम् வரையுள்ள மந்திரத்தை மூன்றுதடவை ஒரே மூச்சில் ஜபிப்பது என்ற முறைப்படி 10 தடவை ஜபிப்பார்களேயானால் அவர்கட்கும் முறையே 'மேற்சொல்லிய பிராணாயாமாப்பாச சக்தி யுண்டாகுமென்று சாஸ்திரஞ் சொல்லியதை யொட்டி நமது ஆர்ய மஹான்கள் சிறுவர்க்கும் மற்றவர்க்கும் பத்துத்தடவை மந்திர ஜபத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். ஆகவே பிராணாயாமம் அதிகப்பலனைத் தரத்தக்கதாக இருப்பதால் சக்திக்குத் தக்கபடி அப்யசித்து வரவேண்டுவது அவசியமானது.



(अथ प्राणायाममन्त्रार्थः—பிராணாயாம மந்திரத்தின் பொருள்)

ओम्=இதற்குப் பிரணவம் என்றும், தாரம் என்றும் பெயருண்டு. இந்த ओम्=என்ற மந்திரத்தில் अ, उ, म्, என்ற அக்ஷரங்களடங்கி இருக்கின்றன. அவற்றுள் अ என்றதற்குப் பிரும்மதேவன் என்றும், उ என்றதற்கு விஷ்ணு என்றும், म् என்றதற்கு மஹாதேவன் என்றும் தனித்தனியே பொருள். ஆகவே अ, उ, म्, என்ற இம்மூன்று அக்ஷரங்களும் சேர்ந்து ओम् என்ற ஒரு ஸ்வரூபத்தை யடைந்திருப்பதாலதற்கு பிரும்மா விஷ்ணு சிவன் என்ற மும்மூர்த்திகளின் சுவரூபமாகவும் விளங்கும் பரமாத்மாவே பொருள் என்று ஏற்படுகின்றது. அதனின்றும் பிரும்ம விஷ்ணு மஹேச்வர வடிவமான யாதொரு பரமாத்மாவுண்டோ அவருக்கு இந்தப்பிரணவம் வாசகம் (பெயர்) என்று மேற்படுகின்றது. भूः=பூலோகமும், भुवः=புவர்லோகமும், सुवः=சுவர்லோகமும், महः=மஹர்லோகமும், जनः=ஜனலோகமும், तपः=தபோலோகமும் सत्यम्=சத்தியலோகமும் ओम्=பிரணவத்தின் பொருளான பரமாத்வைவிட வேறல்லாதது. அதாவது:—விராட் ஜீவாந்தர்யாமியான பரமாத்மாவின் சரீரமே. மேற்கூறிய பொருளை வெளியிட வேண்டியே भुवः=முதலிய ஒவ்வொரு வியாஹிருதியிலும் பிரணவம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ओम्=பிரணவத்தின் பொருளான यः=யாதொரு பரமாத்மா नः=எங்களுடைய धियः=புத்தி விருத்திகளை प्रचोदयात्=அந்தந்தக்காரியங்களிற் தூண்டுகின்றாரோ तत्=அவர்தான் देवस्य=தனது பிரகாசத்தால் இருளைப் போக்குகின்ற सवितुः=ஜகத்தின் பிரவிருத்தியை யுண்டுபண்ணுகின்ற சூரியனுடையதும் அதாவது:—சூரிய மண்டலாபிமானி ஜீவாந்தர்யாமியும், वरेण्यम्=யாவராலும் பிரார்த்திக்கத் தகுந்ததுவுமான भर्गः=சைதன்யம் (इति=என்று) धीमहि=தியானஞ் செய்யக்கடவோம். आपः=ஜலமும், ज्योतिः=அக்னியும், रसः=பூமியும் 'अमृतम्=மரணதர்மமற்ற வாயுவும் ब्रह्म-(बृहत्वाद्ब्रह्म=பெரிதாயிருப்பதால் பிரும்ம மெனப்படும் என்றபடி) ஆகாசமும் भूः=பிருதிவீ முதலிய தத்வங்களுக்குக் காரணமான அஹந்தத்துவமும் भुवः=தனது காரியங்களில் வியாபித்திருக்கின்ற மஹத்தத்துவமும், सुवः=எல்லாவற்றையும்

பிரளயத்தில் தன்னிடம் அடக்கிவைத்துச் சிருஷ்டிகாலத்தில் வெளியிடுவதுபற்றிப் பிரகிருதியும் ओम्=பிரணவவாச்ய பரமாத்மாவே அதாவது:—பரமாத்மாவின் சரீரமே.

(தா-ம்)जितासनो जितश्वासो जितसंगो जितेन्द्रियः ।
स्थूले भगवतो रूपे मनस्संधारयेद्धिया ॥

वैराजः पुरुषो योऽसौ भगवान् धारणाश्रयः ॥

ஆசன ஜயம், பிராண ஜயம் இவைகள் வந்த பிறகு ஸ்தூலமான பகவத் ஸ்வரூபத்தில் அதாவது:—விராட்தேஹம், அதர்க்கபிமானியான ஜீவன் இவ்விரண்டிற்கும் அந்தர்யாமியான பகவத் சுவரூபத்தில் மனதை நெருத்தவேண்டும் என்று தொடங்கி

पातालमेतस्य हि पादमूलं पठन्ति पार्ष्णिप्रपदे रसातलम् ।
महातलं विश्वसृजोऽथगुल्फौ तलातलं वै पुरुषस्य जंघे ॥

द्वे जानुनी सुतलं विश्वमूर्तेरूरुद्वयं वितलं चातलं च ।
महीतलं तज्जघनं महीपते नभःस्थलं नाभिसरो गृणन्ति ॥

उरःस्थलं ज्योतिरनीकमस्य ग्रीवा महर्वदनं वै जनोऽस्य ।
तपो रराटिं विदुरादिपुंसः सत्यं तु शीर्षाणि सहस्रशीर्ष्णः ॥

பாதாளலோகத்தை விராட்தேஹ ஜீவாந்தர்யாமியான ஸ்ரீமன் நாராயணனுடைய பாதமூலமாகவும், ரசாதலத்தைப் பாதத்தின் முன்பாகம் பின்பாகம் இவைகளாகவும், மஹாதலத்தை குதிக்கால்களாகவும், தலாதலத்தைக் கணுக்கால்களாகவும், சுதலத்தை முழங்கால்களாகவும், விதலத்தைத் துடையின் மேல்பாகமாகவும், அதலத்தைத் துடையின் கீழ்பாகமாகவும், பூலோகத்தைப் பிருஷ்டமாகவும், புவர்லோகத்தை உந்தியாகவும், சுவர்லோகத்தை மார்புப் பிரதேசமாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோலோகத்தை நெத்திப்பிரதேசமாகவும், சத்யலோகத்தைத் தலைபாகவும் வேதங்கள்



கூறுகின்றன என்று ஸ்ரீ பாகவதம் 2 ஸ்கந்தம் முதலத்யாயத்திற் சொல்லி அவ்விடத்திலேயே 38-வது சுலோகத்தில்

इयानसावीश्वरविग्रहस्य यस्सन्निवेशः कथितो मया ते ।
संधार्यतेऽस्मिन्वपुषि स्थविष्ठे मनः स्वबुद्ध्या न यतोऽस्ति किंचित ॥

பிரகிருதி, பிராகிருதம் என்ற சகலபதார்த்த வடிவமான விராட்தேஹம், அதர்க் கபிமானி ஜீவன் இவற்றிற்கு அந்தர்யாமியாக ஸ்ரீமன் நாராயணனிருப்பதால் தனது சாஞ்சல்ய தோஷத்தால் மனது எங்கெந்த விஷயங்களிற் சென்ற போதிலும் பகவானின் அவயவத்தையே த்யானித்ததாக ஆகின்றதென்றும், அவ்விதம் தியானஞ் செய்கின்றவனுக்குப் பொறாமை, அசூயை முதலிய தோஷங்கள் விலகி முறையே அந்தர்யாமியான பகவானின் பிரசாதமுண்டாகும் என்று முபதேசித்தபடி இங்கு மவ்விதமே பூலோகம் முதலிய 7-லோகங்களும், அந்தர்யாமியும் பிரணவவாச்யனுமான பகவானின் சரீரமாகின்றனவென்று சொன்னதிலிருந்து பாதாளம் முதலிய லோகங்களையும் ஸ்ரீபாகவதத்திற் சொல்லியபடி சேர்த்து பகவானின் சரீரமாக த்யானஞ்செய்வதவசியமென்று வியாஹிருதிகளாலும்,

स सर्वधीवृत्यनुभूतसर्व आत्मा यथा स्वप्नजनेक्षितैकः ।
तं सत्यमानन्दनिधिं भजेत नान्यत्र सज्जेद्यत आत्मपातः ॥

எல்லாப்பிராணிகளுடைய புத்தி விருத்தியின் சாக்ஷியாயிருந்து எல்லாவற்றையும் நேரில் அனுபவிக்கின்ற ஆனந்த நிதியான ஸ்ரீமன் நாராயணனை த்யானஞ் செய்யவேண்டுமென்று ஸ்ரீபாகவதத்திற் சொன்னபடி காயத்ரீ மந்திரத்தாலுமுபதேசித்து, மேலுள்ள சிரோமந்திரத்தால் எல்லாவற்றிற்கும் காரணமவரே என்றும், அவரது த்யானமே சகலவிதமான க்ஷேமத்தையும் தருமென்று முபதேசிக்கப் படுகிறது.

पादयोर्जंघयोर्जान्वोस्तथैव जठरेऽपि च ।
कण्ठे मुखे तथा मूर्ध्नि क्रमेण व्याहृतीर्न्यसेत् ॥

शिरस्तस्यास्तु सर्वाङ्गे प्रणायामपरो न्यसेत् ॥

**ओं भूः** என்று சொல்லிப்பாதங்களிலும், **ओं भुवः** என்று சொல்லி இரண்டு முழங்கால்களிலும், **ओं सुवः** என்று சொல்லி இரண்டுக் கணுக்கால்களிலும், **ओं महः** என்று சொல்லி வயிற்றிலும், **ओं जनः** என்று சொல்லிக் கழுத்திலும், **ओं तपः** என்று சொல்லி முகத்திலும் (நெற்றியிலும்) **ओं सत्यं** என்று சொல்லித் தலையிலும், **ओं मापोज्योतीरसोऽमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम्** என்று சொல்லி எல்லா அங்கங்களிலும் நியாசஞ் செய்யவேண்டுமென்று யோகயாக்ஞவல்க்யர் சொல்லிய நியாச விதியைக்கொண்டும் 'அண்டத்திலுள்ளதே பிண்டத்திலும்' என்ற முறைப்படி 7வியாஹிருதிகளாலும் பூமி முதலிய 7லோகங்கள் குறிக்கப்படுகின்றன வென்றும், அவ்வேழுலோகங்களும் சர்வ பிரபஞ்ச சரீரியான ஸ்ரீமந் நாராயணனுடைய பாதம் முதல் தலைவரையுள்ள அங்கங்களாகின்றன வென்றும், சிரோமந்திரத்தால் சர்வப்பிரபஞ்சபரிணாமயுபாதானமான பஞ்சபூதங்கள், அஹந்தத்துவம், மஹத்தத்துவம், பிரகிருதி இவைகள் சொல்லப்படுகின்றன வென்றும் அந்த 8 பதார்த்தங்களும் பகவானுடைய ஸ்தூல சரீரமாகின்றன வென்றும், காயத்ரீ மந்திரத்தால் ஆதித்யமண்டலத்திலும், ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அந்தர்யாமியாக இருந்து பிரேரணை செய்வதால் அவரையே த்யானஞ் செய்யக்கடவோம் என்றும் பொருள்கொள்ளுத லவச்யமாகின்றது. எ-று.

மேற்சொல்லிய மந்திரத்தை மூன்றுதடவை சொல்லிப் பிராணாயாமஞ் செய்துகொண்டு பிறகு சங்கற்பஞ் செய்யவேண்டும். தான் செய்யப்போகும் கர்மம் இன்னதென்றும் அதன் பயன் இன்னதென்றும் மனதால் எண்ணிக்கொள்வதே சங்கற்பம் எனப்படும்.

(சங்கல்பமந்திரம்) **ममोपात्तसमस्तदुरितक्षयद्वारा परमेश्वरप्रीत्यर्थं प्रातस्संध्यामुपासिष्ये** என்று காலையிலும், **माध्यन्दिनसंध्यामुपासिष्ये** என்று மத்தியாந்நத்திலும், **सायं संध्यामुपासिष्ये** என்று மாலையிலும் சொல்லிக்கொண்டு சங்கல்பம் செய்து கொள்ளவும்.



(இதன் பொருள்.) **मम**=என்னுடைய (செய்கையாலேயே) **उपात्तसमस्तदुरितक्षयद्वारा—उपात्त** = அடையப்பட்ட **समस्तदुरित**= எல்லாப்பாபங்களுடைய **क्षय**=தேய்தலின் வாயிலாக **परमेश्वरप्रीत्यर्थम्—परम**=எல்லாவற்றிற்கும் மேலான **ईश्वर**=நியந்தாவினுடைய **प्रीत्यर्थम्**=பிரசாதத்திற்குவேண்டி **प्रातस्संध्यां**=காலைச் சந்தியாதேவியை * **उपासिष्ये**=தியானிக்கப்போகின்றேன்.

வடகலையார் சம்பிரதாயம் **श्रीभगवदाज्ञया भगवत्प्रीत्यर्थं प्रातस्संध्यामुपासिष्ये।** (இ-ள்) **भगवदाज्ञया**=பகவத்சப்த வாச்யனான ஸ்ரீமந் நாராயணனுடைய ஆக்ஞையை முன்னிட்டு **भगवत्प्रीत्यर्थम्**=பகவானுடைய பிரசாதத்தை யடையவேண்டி (அவனது திருவுள்ளம் ஒப்பத்தக்கபடி.) மற்றவைகளுக்கு முன்போலர்த்தம் கொள்க.

(ஸ்மா-ம்) **ओं श्रीकेशवायनमः** என்று சொல்லி நடுவிரலால், அல்லது பவித்திரவிரலால் ஜலத்தில் பிரணவத்தை எழுதி அத்தீர்த்தத்தை இரண்டு புருவங்களின் மத்தியில் தடவிக்கொள்ள வேண்டும். **अथमार्जनम्।** இனி மார்ஜனம் சொல்லப்படுகிறது.

उत्तानदेवतीर्थेन दर्भाग्रैर्मूर्ध्नि विप्रुषाम्।
स्पृष्ट्वापामूर्ध्वं विक्षेपः उल्लेख्यमितिसूरयः ॥

"உயரவெடுக்கப்பட்ட தேவதீர்த்தத்துடன் (நுனிவிரல் சம்பந்தமடைந்த ஜலம்) சேர்ந்ததர்ப்பத்தின் நுனிகளால் சிரஸில் தீர்த்தத்துளிகளை உயர ப்ரோக்ஷித்தலே 'உல்லேக்யம்' மார்ஜனம் எனப்படும்" என்று ஸ்மிருத்யர்த்தசாரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே இனிசொல்லப்படும் **आपोहिष्ठा** என்ற மந்திரத்தை ஒன்பது பாதங்களாகப்பிரித்து ஒன்றுமுதல் 7பாதம்வரை சொல்லித் தலையிலும், 8வதுபாதத்தால் இரண்டுபாதங்களிலும், 9வது பாதத்தால் திரும்பவும் தலையிலும் மார்ஜனம் (ப்ரோக்ஷணம்) செய்துகொள்ளவேண்டும். ஒவ்வொருபாதத்தின் முடிவிலும் மேற்குறிப்பிட்ட விடங்களில் ப்ரோக்ஷணஞ் செய்துகொள்ள

---

* **उपासे** என்றும் பாடமிருக்கிறது. அதன்படி உபாசிக்கத் துவக்குகின்றேன் என்று பொருள்.

வேண்டுவதவசியமென்றும், மார்ஜனம் செய்துகொள்ளும் தீர்த்தமானது பூமியிற்படாமல் உடம்பிலேயே படும்படிசெய்து கொள்ளவேண்டுமென்றும், பூமியிற் பட்டால் அதிகம் தோஷம் வருமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(அ - கை) **तदेषां तन्नप्रियं यदेतन्मनुष्या विद्युः** "மனிதர் பரமாத்மானுசந்தானஞ் செய்வது இந்தத் தேவர்கட்குப் பிரியமில்லாதது" என்று பிருஹதாரண்யகோபனிடதத்திற் சொல்லியவிடத்தில்

यं तु मुमोचयिषन्ति तं श्रद्धादिभिर्योक्ष्यन्ति विपरीतमश्रद्धादिभिः । तस्मान्मुमुक्षुर्देवाराधनपरः श्रद्धाभक्तिपरः प्रणेयः अप्रमादी स्यात् विद्याप्राप्तिं प्रति विद्यां प्रतीतिवा काक्वा एतत्प्रदर्शितं भवति देवाप्रियवाक्येन ॥

எவனை மோக்ஷமடையும்படிச் செய்ய விரும்புகின்றனரோ அவனைக் குருசாஸ்திரம் இவை முதயிலவைகளில் நம்பிக்கையுள்ளவனாக்குகின்றனர். மாறானவனைக் குருசாஸ்திரம் இவை முதலியவைகளில் நம்பிக்கையற்றவனாகச் செய்கின்றனர். ஆதலால் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன் தேவதாராதனஞ் செய்கின்றவனாகவும், சிரத்தை பக்தி இவைகளுள்ளவனாகவும், வணக்கமுள்ளவனாகவும், முற்கூறியவற்றில் தவறாதவனாகவும், வித்யாப் பிராப்தியைக்குறித்தோ வித்தையைக்குறித்தோ நடக்கவேண்டுமென்பது "தேவதைகளுக்குப் பிரியமில்லை" என்ற வாக்யத்தால் குறிப்பிடப்பட்டது என்று ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பூஜ்யபாதாசாரிய ஸ்வாமிகளவர்கள் உபனிஷத் பாஷ்யத்திற் சொல்லியிருக்கின்றனர். ஆகவே மனித ஜன்மமெடுத்ததே ஒப்புயர்வற்ற மோக்ஷத்தை யடையவேண்டியே யாதலாலும் **रसोवैसः, रसंह्येवायंलब्ध्वाऽऽनन्दी भवति** அவரே ரஸரூபி; ரஸரூபியான அவரை யடைந்தே ஆனந்தமுள்ளவனாகின்றான் என்றபடி ரஸரூபியான பரமாத்மானுபவமே மோக்ஷமாதலாலும், அவ்வனுபவம் வருவதற்கு வேண்டியே அவ்வழியில் சாஸ்திரமானது ஜீவனைத் தயார் செய்யத் தொடங்கியிருப்பதாலும் அவ்வழியிற் செல்லுகின்ற மோக்ஷாதிகாரியான இந்த ஜீவன் **अग्नीन्यन्यादेवताः** என்றபடி பகவ



தங்க பூதர்களான எல்லாத்தேவர்களையும் ஆராதிக்கத்தொடங்கினவனாய் ஜலாபிமானி தேவதையைப் பிரார்த்தனைரூபமான ஆராதனஞ் செய்கின்றான்.

आपो हिष्ठेति मन्त्रस्य, सिंधुद्वीप ऋषिः, गायत्री च्छन्दः, आपो देवता, मार्जने विनियोगः । (मन्त्रः) आपो हि ष्ठा मयोभुवः । तान ऊर्जे दधातन । महे रणाय चक्षसे । यो वः शिवतमो रसः । तस्य भाजयतेह नः उशतीरिव मातरः । तस्मा अरं गमाम वः । यस्य क्षयाय जिन्वथ । आपो जनयथाच नः ।

இம்மந்திரத்தைச்சொல்லி மார்ஜனஞ் செய்துகொண்டு **ओं भूर्भुवस्सुवः** என்று சொல்லி ஜலத்தை எடுத்துச் சுற்றிக்கொள்ள வேண்டும்.

(ப-ரை) (हे) **आपः**=ஓ ஜலாபிமானி தேவதைகளே! **हि**=யாதுகாரணத்தால் (**याः**=யாதொரு **यूयम्**=நீங்கள்) **मयो भुवः**=சுகத்தை யுண்டுபண்ணுகின்றவர்களாக **स्थ**=இருக்கின்றீர்களோ (**तस्मात्**=அந்தக் காரணத்தால்) **ताः**=அந்த நீங்கள் **नः**=எங்களுக்கு **महे**=பெரிதாயும் **रणाय**=களங்கமற்றதுவுமான **चक्षसे**=ஞானத்திற்காக **ऊर्जे**=அன்னத்தை (போக்ய வஸ்துவை) **दधातन**=கொடுப்பீர்களாக. **वः**=உங்களுடைய **यः**=யாதொரு **शिवतमः**=மிக்க க்ஷேமத்தைத் தாத்தக்கதான **रसः**=ரசானுபவ (பரமாத்மானுபவ) முண்டோ **तस्य**=அந்தப்பரமாத்மானுபவத்திற்கு **नः**=எங்களையும் **उशतीः**=இயற்கையில் ஸ்நேஹமுள்ள **मातर इव**=அன்னைகள்போல **इह**=இப்பிறவியிலேயே **भाजयथ**=தக்கவர்களாகச் செய்யுங்கள். **यस्य**=எந்த ரஸத்தினுடைய (பரமாத்மாவினுடைய) **क्षयाय**=அனுபவத்தினால் (**यूयम्**=நீங்கள்) **जिन्वथ**=பரமானந்தத்தில் மூழ்குகின்றீர்களோ **तस्मै**=அந்தரஸானுபவத்தின்பொருட்டு **वः**=உங்களை **अरम्**=மிகவும் **गमाम**=சேவிக்கின்றோம். (किं)**च**=மேலும் **आपः**=ஓ ஜலாபிமானி தேவதைகளே! **नः**=எங்களை **जनयथ**=நல்ல ஜன்மமடைந்தவர்களாகச் செய்யுங்கள்.

(தா-ம்) न हि भिक्षुको भिक्षुकान्तरं याचते ஓர் பிச்சைக்காரன் பிச்சையெடுக்கும் மற்றவனை யாசிப்பதில்லை என்ற நியாயப்படி எவனிடம் எவ்வஸ்து நிறைந்திருக்கின்றதோ அவனிடமே அவ்வஸ்துவையாசிப்பது நியாயமும் உசிதமுமாகையால் இந்த அதிகாரியான ஜீவன் பகவதங்கபூத ஜலாபிமானிதேவதைகளைப் பிரார்த்திக்கவேண்டுமென்பதைச் சுருதி கருணையா லுபதேசிக்கத்தொடங்கி, பரமாத்மானுபவஞ்செய்து அதன் மஹிமையை நன்கறிந்திருக்கும் ஜலாபிமானி தேவதைகளைப் பார்த்து, "தாங்கள் அனுபவித்த அப்பரமாத்மாவின் அனுபவம் எங்களுக்குமுண்டாகும்படிச் செய்வதுடன் அவ்வழியிற்செல்லும் எங்களுக்கு அதற்குவேண்டியபோக்யவஸ்துக்கள் யாவையுந்தந்து சாதனனுஷ்டானஞ்செய்வித்து ஒப்புயர்வற்ற இப்பிறவியிலேயே தங்களைப்போலவே எங்களையும் பரமாத்மானுபவத்தி லீடுபட்டவர்களாகச் செய்துரக்ஷிக்க வேண்டுமென்றும், உலகில் தாயானவள் குழந்தைகள் கோராவிடினும் அவர்களின் நன்மைகளைத்தாங்களே அறிந்துசெய்வது போலவே நீங்களும் எங்கள் விஷயத்தில் எந்தெந்தவிதத்தி லுபகரித்தால் நாங்கள் பரமாத்மானுபவஞ்செய்து க்ஷேமத்தை யடையக்கூடுமோ அவ்விதமெல்லாம் செய்தருள் புரியவேண்டுமென்றும் பிரார்த்திக்க வேண்டும்" என்று உபதேசித்தது.

குறிப்பு—இம்மந்திரத்தைச் சொல்லித் தீர்த்தத்தைப் புரோக்ஷணஞ்செய்து கொள்வதனால் அதிகாரியான ஜீவனுடைய சாரீர தோஷமெல்லாம்விலகி அவனது சரீரம் மேற் செய்யவேண்டிய கர்மத்திற்கு யோக்யதையைப் பெருகின்றது என்று அறியவும். अथ अपां प्राशनम् (வலதுகையில் ஜலத்தைக் கிரஹித்துப் பின்வரும் மந்திரத்தைச்சொல்லி உட்கொள்ளவேண்டும். கையிலெடுக்கப்படும் ஜலம் நெஞ்சுக்குக் கீழ்போகாதவளவு இருக்கவேண்டுமென்றும், வலது உள்ளங்கையிலிருக்கிற "மாஷம்" எனப் பெயரிய ஓர் சிறுரேகை நனையக்கூடியவளவுள்ள ஜலத்தையே உட்கொள்ளவேண்டும் என்றும்

हस्तमध्यगता रेखा माष इत्यभिधीयते ।
तावन्मात्रं जलं पेयमन्यथा दोषभाग्भवेत् ॥



என்ற வசனங் கூறுகின்றது.

(அ-கை) आपोहिष्ठा என்ற மந்திரத்தைச்சொல்லி மார்ஜனஞ்செய்துகொள்வதால் பாஹ்யமான சரீர சுத்திமட்டு முண்டாகக் கூடுமாயினும் அதனின்றும் ஆந்தர (மனஸ்) சுத்தியுண்டாகமாட்டாது. மானஸமான தோஷமே இல்லை என்றுஞ் சொல்வதற்கில்லை. ஏனெனில்— பிறர்க்குத் தீங்கு நினைத்தல் முதலிய மானஸ சங்கல்பமானது பெரும்பாலும் யாவர்க்குமுண்டென்பது வெளிப்படை. அந்தமானஸ தோஷம் விலகாவிடில் மனதால்தேவதையைத் தியானித்தல் முதலியகார்யங்கள் நடைபெறா. மேலும் சாஸ்திரங்களால் விலக்கப்பட்ட ஆஹாரத்தையுட்கொள்ளல்,மற்றும் எதிர்பார்த்தும், பாராமலும் சில விபரீதமான காரியங்களைச் செய்தல் இவைகள் மூலம் நேர்ந்தப்பாபங்கள் பலவுள. இவையெல்லாமிருக்கும்பொழுது மெற்சொல்லப்போகும் காயத்திரீத் தியானம் முதலிய நல்லகர்மங்களால் அதற்குரிய நல்லப்பயனை அதிகாரியான ஜீவன் அடைவதெங்ஙனம் என்ற சந்தேஹத்தை விளக்கவேண்டிச் சகலதோஷத்தையும் விலக்கக்கூடிய தீர்த்தப்பிராசனத்தைச் சாஸ்திரம்விதித்தது. ஆகவே முற்கூறியபடி ஜலத்தைக் கையிலெடுத்து அர்த்தானுசந்தானத்துடன் பின்சொல்லப்படும் மந்திரத்தையும் ஜபித்து உட்கொண்டால் சகலதோஷங்களும் விலகி க்ஷேமத்தை யடையலாமெனக் கருதியே இந்தத்தீர்த்தப்பிராசன கர்மாவில் இம்மந்திரத்தை ஏற்படுத்தி இருப்பதால் அம்மந்திரமும் அதன்பொருளும் இனி உபதேசிக்கப்படுகின்றது.

सूर्यश्चेत्यनुवाकस्य, अग्निः ऋषिः, गायत्री छन्दः, सूर्यो देवता, अपां प्राशने विनियोगः ॥ என்று ருஷி, சந்தஸ், தேவதை இவைகளைச் சொல்லிக்கொண்டு பிறகு மந்திரத்தை ஜபிக்கவேண்டும். (காலையில்)

सूर्यश्च मा मन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः । पापेभ्यो रक्षन्ताम् । यद्रात्र्या पापमकार्षम् । मनसा वाचा हस्ताभ्याम् । पद्भ्यामुदरेण*

* शिश्ना என்றும் சிஷ்ட சம்பிரதாய பாடமிருக்கிறது. பொருள் ஒன்றே.

शिश्ना । रात्रिस्तदवलुंपतु । यत्किंच दुरितं मयि । इदमहं माममृतयोनौ । सूर्ये ज्योतिषि जुहोमि स्वाहा ॥

(ப-ரை) सूर्यश्च=சூரிய மண்டலாபிமானி தேவனும் मन्युश्च=மன்யு என்றதேவனும் मन्युपतयश्च=கோபத்திற்கு யஜமானர்களானதேவர்களும் मन्युकृतेभ्यः=கோபத்தாற்செய்யப்பட்டவைகளான पापेभ्यः=பாபங்களினின்றும் मा=என்னை रक्षन्ताम्=காப்பாற்றட்டும். (பாபங்களை விலக்கட்டும்) रात्र्या=ராத்திரியில் मनसा=மனத்தினுலும், वाचा=வாக்கினுலும் हस्ताभ्याम्=கைகளாலும் पद्भ्याम्=கால்களாலும் शिश्ना=ஆண்குறியினுலும் यत्=எந்த पापम्=பாபத்தை अकार्षम्=செய்தேனே. किंच=மேலும் मयि=என்னிடத்தில் यत्, दुरितम्=இவையல்லாதமற்ற எந்தப்பாபங்களுண்டோ அவைகளை रात्रिः=ராத்திரியின் அபிமானி தேவதை अवलुंपतु=போக்கவேண்டும். इदम्=இந்தப்பாபங்கள் யாவையும் माम्=பாபங்களைச் செய்த அஹங்காரத்தையும் अमृतयोनौ—अमृत=மரணமற்றதாயும் योनौ=ஜகத்காரணமாயும் सूर्ये=அந்தர்யாமியாயிருந்து ஜகத்தைத் தூண்டுகிறதுவுமான ज्योतिषि=ஜ்யோதிர்வடிவமான பரமாத்மாவினிடம் अहम्=நான் जुहोमि=ஹோமஞ் செய்கின்றேன். स्वाहा=செய்யப்பட்ட ஹோமமானது நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாயாக வேண்டும்.

(தா-ம்) சூரியன், மன்யு என்றதேவதை, கோபத்திற்கு அபிமானிகளானதேவர்கள் இவர்கள் யாவரும் அறிந்தும் அறியாமலும் சரீரம், வாக்கு, மனது என்ற முக்காரணங்களைக்கொண்டு என்னுற் செய்யப்பட்டபாபங்கள் யாவையும் போக்கவேண்டும். அவ்விதமவர்கள் பாபத்தை விலக்கிவிட்டால் இனி இம்மாதிரி பாபங்கள் நேராமலிருப்பதற்குவேண்டிப் பாபஞ் செய்வதற்கு இன்றியமையாச்சாதனமான அஹங்காரத்தையும், அதன்மூலம் நேரும்பாபங்களையும் சர்வப்பிரபஞ்ச காரணபூதரான ஸ்ரீமன் நாராயணனிட மொப்படைத்து இனிப்பாபமே வருவண்ணஞ் செய்துகொண்டு அவரையே இடைவிடாதுத்தியானஞ் செய்வேனுக. (எ-று)



(மத்தியாங்ஹத்தில்) आपः पुनन्तु इति मन्त्रस्य, विश्वेदेवा ऋषयः, अनुष्टुप् छन्दः, आपो देवता, अपां प्राशने विनियोगः என்று ருஷி, சந்தஸ், தேவதை இவைகளைச் சொல்லிக்கொண்டுப் பின்வரும் மந்திரத்தைச் சொல்லித் தீர்த்தப்பிராசனஞ் செய்யவேண்டும்.

आपः पुनन्तु पृथिवीं पृथिवी पूता पुनातु माम् । पुनन्तु ब्रह्मणस्पतिर्ब्रह्म पूता पुनातु माम् । यदुच्छिष्ट मभोज्यं यद्वा दुश्चरितं मम । सर्वं पुनन्तु ममापोऽसतां च प्रतिग्रहंस्वाहा ।

(ப-ரை) आपः=ஜலம் पृथिवीम्=பிருதிவியின் விகாரமானசரீரத்தை पुनन्तु=பரிசுத்தமாகச் செய்யட்டும் (கர்மங்களை யனுஷ்டிப்பதற்குத் தகுதியுள்ளதாகச் செய்யட்டும்) पूता=பரிசுத்தஞ் செய்யப்பட்ட पृथिवी=பிருதிவியின் விகாரமான சரீரம் माम्=என்னை (லிங்க சரீரத்தை) पुनातु=பரிசுத்தமாகச் செய்யட்டும். (आपः=ஜலம்) ब्रह्मणः=வேதத்தை पतिः=உபதேசஞ் செய்த ஆசாரியனை पुनन्तु=பரிசுத்தஞ் செய்யட்டும். पूता=(ஆசாரியனுலுபதேசிக்கப்பட்டதுபற்றி) பரிசுத்தமான ब्रह्म=வேதம் माम्=மந்திரஜபஞ் செய்கின்ற என்னை पुनातु=பரிசுத்தஞ் செய்யட்டும் उच्छिष्टम्=சாப்பிட்டு மீதமுள்ளதும் अभोज्यम्=சாப்பிடத் தகாததுவுமான यत्=எந்த வஸ்து (मयाभुक्तम्=என்னுல் சாப்பிடப்பட்டதோ) (अथ) वा=அல்லது मम=என்னுடைய यत्=யாதொரு दुश्चरितम्=சாஸ்திர விருத்தமான அனுஷ்டானமுண்டோ किंच=மேலும் असताम्=அசத்துக்களுடைய प्रतिग्रहम्=பிரதிக்கிரஹம். (அசத்துக்களிடமிருந்து ஒன்றைவாங்கிக் கொள்வதால் நேரும்பாபம்) (यत्=யாதுண்டோ तत्)सर्वम्=அவையாவையும் (अपोह्य=விலக்கி) माम्=என்னை आपः=ஜலாபிமானிதேவதை पुनन्तु=பரிசுத்தனுகச் செய்யட்டும். (तदर्थम्=அதன் நிமித்தம்) स्वाहा=இந்தத் தீர்த்தத்தை யுட்கொள்ளுகின்றேன்.

(தா-ம்) ஜலாபிமானிதேவதை இம்மந்திரத்தைச் சொல்லித் தீர்த்தப்பிராசனஞ் செய்கின்ற என்னுடைய ஸ்தூலசரீரம், சூக்ஷ்மசரீரமான மனது இவைகளைச்சுத்தமாக்குவதுடன், மந்திரோப

தேசஞ் செய்கின்றனது ஆசாரியனைப் பரிசுத்தமாக்குவதன் மூலம் அவரிடமிருந்து பெற்றதுபற்றிப் பரிசுத்தமான இம்மந்திரத்தை ஜபித்து தீர்த்தப்பிராசனஞ் செய்கின்ற எனக்குத்தகா காரியத்தைச் செய்தல்மூலமும், ஒருவர்சாப்பிட்டு எஞ்சியவ... ரத்தை உட்கொள்ளுதல் மூலமும், அசத்துக்களிடமிருந்து பொருளைக்கிரஹித்தல் மூலமும், மற்றுமுள்ள சாஸ்திரவிருத்தமானக்கர்மங்களை யனுஷ்டித்தல் மூலமும் நேருந்தோஷங்கள் யாவையும் நாசஞ் செய்துக் காயத்திரீ மந்திரத்தின் பொருளான பரமாத்மாவைத்தியானஞ் செய்யத்தக்கவனகச் செய்யட்டும் என்று இதனல் பிரார்த்திக்கப்பட்டது (எ-று)

(மாலையில்) **अग्निश्चेत्यादिमन्त्रस्य—सूर्य ऋषिः, गायत्री च्छन्दः, अग्निर्देवता, अपां प्राशने विनियोगः** என்று ருஷி, சந்தஸ், தேவதை, இவைகளைச்சொல்லி நியாசஞ் செய்துகொண்டுப்பின்வரும் மந்திரத்தைப்படித்துத் தீர்த்தப்பிராசனஞ் செய்யவேண்டும்.

(मन्त्रः) अग्निश्च मामन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः । पापेभ्यो रक्षन्ताम् । यदन्हा पापमकार्षम् । मनसा वाचा हस्ताभ्याम् । पद्भ्यामुदरेण शिश्ना । अहस्तदवलुंपतु । यत्किंच दुरितं मयि । इदमहं माममृतयोनौ । सत्ये ज्योतिषि जुहोमि स्वाहा ॥

(ப-ரை) **अग्निश्च**=அக்னியும், **मन्युश्च**=மன்யு என்ற தேவனும் **मन्युपतयश्च**=கோபத்திற்குக் காரணபூதர்களான தேவர்களும் **पापेभ्यः**=பாபங்களினின்றும் **रक्षन्ताम्**=காக்கவேண்டும் (பாபங்களை விலக்கவேண்டும்.) **अन्हा**=பகலில் **मनसा**=மனத்தினலும் **वाचा**=வாக்கினலும் **उदरेण**=வயிற்றினலும் **शिश्ना**=ஆண்குறியினலும் **यत्**=எந்த **पापम्**=பாபத்தை **अकार्षम्**=செய்தேனே. **किंच**=மேலும் **मयि**=என்னிடத்தில் **यत्**=மற்றுமுள்ள எந்தப்பாபமுண்டோ **तत्**=அந்தப்பாபத்தை **अहः**=பகலுக்கபிமானியான தேவதை **अवलुंपतु**=நாசஞ் செய்யட்டும். **इदम्**=மேற்கூறிய பாபங்களையும் **माम्**=பாபங்களைச்செய்த அஹங்காரத்தையும் **अमृतयोनौ—अमृत**=மரணமற்றதாயும் **योनौ**=ஜகத்காரணமாயும் **सत्ये**=முக்காலத்திலும்



நிலைத்து நிற்கின்றதாயுமிருக்கிற **ज्योतिषि**=ஜ்யோதிர் வடிவமான பரமாத்மாவினிடம் **जुहोमि**=ஹோமஞ்செய்கின்றேன். **स्वाहा**=நான் அனுஷ்டித்தஹோமம் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதா யாகவேண்டும். **सूर्यश्च** என்ற மந்திரத்திற்குப்போல் இதற்கும் தாத்பர்யங் கொள்ளவேண்டும்.

குறிப்பு—பொதுவில் பாபம் மானஸிகம், வாசிகம், காயிகம் எனமூன்று விதமாகப்பிரிக்கப்படும். அவற்றுள் பிறற்குத் தீங்கிழைக்கவேண்டுமெனச் சங்கற்பிப்பது முதலியன மானஸிகமெனப்படும். பிறற்குப் பிரியமில்லாமலும், பொய்யாயும் பேசுதல் முதலியன வாசிகம் எனப்படும். கையால்பிரயோஜனமின்றித்துரும்பைக்கிள்ளுதல்; காலால் பசு, மாதா, பிதா, பெரியோர் முதலியோரை உதைத்தல்; சாஸ்திரங்களால் விலக்கப்பட்ட ஆஹாரங்களையுட்கொள்ளுதல்; சேரக்கூடாதவிடத்திற் சேர்ந்து சயனித்தல் முதலியனகாயிகமெனப்படும். இம்மூன்றுவித பாபங்களும் விலகவேண்டும் என்று **मनसा वाचा हस्ताभ्यां, पद्भ्या मुदरेण शिश्ना, रात्रिस्तदवलुंपतु, अहस्तदवलुंपतु** என்றபாகத்தால் பிரார்த்திக்கப்பட்டதா யறியவும்.

காலை, நடுப்பகல், மாலை இம்மூன்று காலங்களிலும் அததற்குரிய மந்திரத்தைச் சொல்லித் தீர்த்தத்தையுட்கொண்டவுடன் இரண்டுமுறை ஆசமனஞ் செய்துகொண்டு **दधिक्राव्ण** என்ற மந்திரத்தால் ப்ரோக்ஷணஞ் செய்துகொள்ளவேண்டும். **दधिक्राव्ण इति मन्त्रस्य—वामदेव ऋषिः, अनुष्टुप् छन्दः, विश्वेदेवा देवता, मार्जने विनियोगः** என்று ருஷி, சந்தஸ், தேவதை, இவைகளை நியாசஞ் செய்துகொண்டுப் பின்வரும் மந்திரத்தால் ப்ரோக்ஷணஞ்செய்துகொள்ளவேண்டும்.

(मन्त्रः) दधिक्राव्णो अकारिषम् । जिष्णोरश्वस्य वाजिनः । सुरभि नो मुखा करत् । प्रण आयूंषि तारिषत् । आपो हि ष्ठा........जनयथा च नः । ओं भूर्भुवस्सुवः ॥

(ப-ரை) **दधिक्राव्णः—दधि**=ஹோமத்திற்கு யோக்யமான தயிர்முதலியத் திரவியங்களை **क्राव्णः**=அடைகின்றவரும் **जिष्णोः**=ஜயிக்

கும் சுவபாவமுடையவரும் (மேன்மை தங்கியவரும்) **अश्वस्य**=எங்கும் நிறைந்தவரும் **वाजिनः**=அன்ன முள்ளவரும், அல்லது வேகமாகச் செல்லுகின்றவருமான **अग्नेः**=அக்னியினுடைய ஸ்துதியை **अकारिषम्**=செய்கின்றேன். **सः**=அந்த அக்னி **नः**=எங்களுடைய **मुखा**=முக்கியமான க்ஞானேந்திரியம் கர்மேந்திரியம் இவைகளை **सुरभि**=வாசனை யுள்ளவைகளாக, அதாவது அததற்குரிய விஷயங்களைக் கிரஹிக்கத் தக்கவைகளாக **करत्**=செய்யவேண்டும். **नः**=எங்களுடைய **आयूंषि**=ஆயுளையும் **प्रतारिषत्**=விருத்திசெய்ய வேண்டும். மேலுள்ள **आपोहिष्ठा** முதலிய மந்திரங்களுக்கு அர்த்தம் முன்னரே கூறப்பட்டுள்ளது.

(தா-ம்) **दिवाग्निरादित्यं गतः, रात्रावादित्यस्तम्** (பகலில் அக்னி சூரியனை அடைகின்றான். இரவில் சூரியன் அக்னியை யடைகின்றான்) என்றபடி சூரியனுடைய சக்தியை யடைந்தராத்திரியின் அபிமானியான அக்னி என்ற தேவன்நான் செய்கின்ற ஸ்தோத்திரத்தினால் பிரீதியையடைந்து எனது கர்மேந்திரியக் ஞானேந்திரியங்கள் எவ்விதக் கெடுதலுமின்றித் தத்தமது விஷயங்களைக் கிரஹிக்கும்படி செய்வதுடன் அத்தகைய இந்திரியங்களைக் கொண்டு நீண்டகாலம் நல்லவிஷயானுபவஞ் செய்யும்படி நீண்ட ஆயுளையும் தரவேண்டும். (எ-று)

பிறகு. जलपूर्वं तथा हस्तं नासिकाग्रे समर्पयेत् ॥

ऋतं चेति पठित्वा तु*तज्जलं निरृतौ क्षिपेत् ॥

என்று சாஸ்திரம் விதித்திருப்பதால் கையில் ஜலத்தைக் கிரஹித்துக்கொண்டு பின்வரும் **ऋतंच** என்ற மந்திரத்தை ஜபித்து ஆக்கிராணஞ் செய்து (முகர்ந்து) நிருருதி (தென்மேற்கு) திசையில் விடவேண்டும். **ऋतंचेति मन्त्रस्य, अघमर्षणऋषिः, अनुष्टुप् छन्दः, भाववृत्तः परमात्मा देवता, पापपुरुषविसर्जने विनियोगः** என்று ருஷி, சந்தஸ், தேவதை இவைகளை நியாசஞ் செய்துகொண்டுப் பின் எழுதப்படும் மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

---

* **तज्जलं तु क्षितौ क्षिपेत्**=என்றும் பாடமிருக்கின்றது.



ऋतं च सत्यं चाभीद्धात्तपसोऽध्यजायत । ततो रात्रिरजायत ततस्समुद्रो अर्णवः । समुद्रादर्णवादधिसंवत्सरो अजायत । अहोरात्राणि विदधद्विश्वस्य मिषतो वशी । सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत् । दिवं च पृथिवीं चान्तरिक्षमथो सुवः ॥

(ப-ரை) **अभीद्धात्**=பிராணியின் கர்மத்தை யனுசரித்து நாலாபக்கத்திலும் பிரகாசத்தையடைந்த **तपसः**=பரமாத்மாவின் சங்கல்பத்தினின்றும் **ऋतंच**=அசேதனமானப் பிரகிருதியும் **सत्यंच**=சேதனவர்க்கமும் **अध्यजायत**=உண்டாயிற்று. **ततः**=பிறகு **रात्रिः**=அக்ஞான ஹேதுவான மஹத்தத்துவம் முதலியவஸ்து **अजायत**=உண்டாயிற்று. **ततः**=அதினின்றும் **समुद्रः**=ஐந்து பூதங்களும் **अर्णवः**=பிரும்மாண்டமும் (**अध्यजायत**=உண்டாயிற்று) **समुद्रात्, अर्णवात्**=மேற்சொல்லிய ஐந்துபூதம், பிரும்மாண்டம் இவைகளினின்றும் **संवत्सरः**=பிரும்மாண்டாதிபதியான விராட்ஜீவன் **अध्यजायत**=உண்டானார். **मिषतः**=நிலையை யடைந்த **विश्वस्य**=ஜகத்திற்கு **वशी**=யஜமானரான **धाता**=ஹிரண்யகர்ப்பர் **अहोरात्राणि**=பகல் இரவுகளை **विदधत्**=சிருஷ்டிக்கத்தொடங்கி **यथापूर्वम्**=முன் கல்பத்திலிருந்தபடியே **सूर्याचन्द्रमसौ** = சூரியன் சந்திரன் இவர்களையும் **दिवंच**=த்யுலோகத்தையும் **पृथिवींच**=பூலோகத்தையும் **अन्तरिक्षम्**=அந்தரிக்ஷ லோகத்தையும் **अथो**=பிறகு **सुवः**=சுவர்லோகத்தையும் **अकल्पयत्**=சிருஷ்டித்தார்.

(தா-ம்) **सोकामयत, बहुस्यां प्रजायेयेति, स तपोऽतप्यत, सतपस्तप्त्वा, इदꣳसर्वमसृजत ।** சூக்ஷ்மசித சித்சரீரியான ஸ்ரீமன் நாராயணன் ஸ்தூலசித சித்சரீரியாக ஆகவேண்டுமென்று சங்கற்பித்து இவையாவையும் சிருஷ்டித்தார் என்றபடி இந்த மந்திரத்தாலுபசேசித்து பரமாத்மாவின் சரீரமான அக்கினி முதலிய தேவர்களையாராதித்தல் மூலம் அக்னி முதலியவற்றைச் சரீரமாகவுடைய ஸ்ரீமன் நாராயணனையே பிரார்த்தித்ததாக ஆகுமென்றும், அவ்வித பகவானின் ஆராதனத்தால் தனக்கு சர்வானுகூல்யங்களுமுண்டாகு மென்றும் எண்ணவேண்டும், (எ-று)

**अथार्घ्यप्रदानम् । अर्घ्यप्रदानं करिष्ये** என்று சங்கர்ப்பஞ் செய்ய வேண்டுமெனச் சில சிஷ்டர்களின் சம்பிரதாயம். வேறு சிலர் அர்க்யம் விடுதல், காயத்ரீ ஜபம், உபஸ்தானம் என்ற மூன்று கர்மங்களே சந்தியோபாசனத்தில் பிரதானமென்று சொல்லப்பட்டிருப்பதால், தொடக்கத்தில் **संध्यामुपासिष्ये** "சந்தியோபாசனஞ் செய்கின்றேன்" என்று சங்கல்பம் செய்திருப்பதைத் தவிர்த்து இங்குத் தனியாய் சங்கர்பஞ் செய்யவேண்டுவதில்லை என்கின்றனர். ஆதலால் தத்தமது வழக்கம்போல் செய்யவும். இங்கு பிராணயாமஞ் செய்யவேண்டுமென்று சிலரும், அது வேண்டுவதில்லை என்று சிலரும் சொல்லுகின்றனர். இவ்விஷயத்திலும் வழக்கத்தை யனுசரிக்கவும். **गायत्र्या ऋषिर्विश्वामित्रः, निचृद्गायत्री च्छन्दः, सविता देवता । अर्घ्यप्रदाने विनियोगः ।** இவ்விதம் ருஷி, சந்தஸ், தேவதை, விநியோகம் இவைகளைச்சொல்லி அந்தந்த விடங்களில் நியாசஞ் செய்துகொண்டு, பிறகு

ओं । भूर्भुवस्सुवः । तत्सवितुर्वरेण्यम् । भर्गोदेवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात् ॥

என்றமந்திரத்தைஜபித்துக் காலையில்மூன்று அர்க்யமும், நடுப்பகலில் இரண்டு அர்க்யமும்(ஒரு அர்க்யம் என்று சொல்லுவாருமுளர்) சாயங்காலத்தில் மூன்று அர்க்யமும் விடவேண்டும்.பிறகு ஒருதடவை ஆசமனஞ் செய்து **कालातीतप्रायश्चित्तार्घ्यं करिष्ये** (காலங்கடந்ததால் நேர்ந்த பாபத்தைப் போக்கிக் கொள்வதற்காகத் திரும்பவும் அர்க்யம் விடுகின்றேன்) என்றுச் சங்கற்பஞ் செய்து கொண்டு, ஒருதடவைப் பிராணயாமஞ்செய்து **गायत्र्या ऋषिर्विश्वामित्रः, देवी गायत्री च्छन्दः, सविता देवता, प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः** என்று சொல்லிக்கொண்டு, பிறகு

ओं भूः । ओं भुवः । ओं॰सुवः । ओं महः । ओं जनः । ओं तपः । ओं॰सत्यम् । ओं, तत्सवितुर्वरेणियं । भर्गो देवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात् । ओमापो ज्योतीरसोमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम् ॥

என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிராயச்சித்தார்க்யம் விட



வேண்டும். பிறகு **ओं भूर्भुवस्सुवः** என்று சொல்லி ஆத்மப்பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். இவ்விடத்தில் சிலர் சிரத்தையின் மேலீட்டால் மேற்கூறிய மந்திரத்தைச்சொல்லி ஜலத்தைக் கையிலெடுத்து ஆத்மப்பிரதக்ஷிணஞ் செய்கின்றனர்.

அர்க்யம் விடுதலைப்பற்றிய விசாரம்.

सूर्यायैव तु गायत्र्या त्रिसंध्यास्वंजलिं क्षिपेत् ।
प्रातर्मध्यान्हयोस्तिष्ठन् सायमासीन एव च ॥

मन्देहानां वधार्थाय प्रक्षिपेदुदकांजलिम् ।
प्रायश्चित्तार्थमाचम्य मुच्यते दैत्यहत्यया ॥

प्रणवव्याहृतीभिश्च कृत्वात्मानं प्रदक्षिणम् ॥
आचम्यैव ततस्तिष्ठन्ध्यायेत्संध्यां समाहितः ॥

சூரியன் பொருட்டாகவே காயத்திரியால் முச்சந்திகளிலும் ஜலாஞ்சலிகளை உயரத்தூக்கி விடவேண்டும். காலை, மத்தியான்ஹம் இவ்விரண்டு காலங்களிலும் நின்றுகொண்டும், சாயங்காலத்தில் உட்கார்ந்துகொண்டுமே அர்க்யதானஞ் செய்யவேண்டும். இவ்விதம் அர்க்யம்விடுவதால் மந்தேஹர் என்ற அசுரர்கள்வதைக்கப்படுகின்றனர். உடனே ஆசமனஞ் செய்வதால் அசுரவதத்தாலுண்டான தோஷம் விலகுகின்றது. பிறகு பிரணவம், வியாஹ்ருதி இவைகளால் தன்னைப் பிரதக்ஷிணஞ்செய்து, ஆசமனஞ் செய்து நின்றுகொண்டே சந்தியாதேவியைத் தியானஞ்செய்ய வேண்டும் என்று சங்கரும்

ईषन्नम्रः प्रभाते तु मध्यान्हे तु ऋजुस्तथा ।
गायत्र्या प्रक्षिपेदर्घ्यं सायंतूपविशन् भुवि ॥

गोश्रृङ्गमात्रमुद्धृत्य रविं दृष्ट्वा जलांजलिम् ।
द्वौ पादौ च समुद्धृत्य पार्ष्णी उद्धृत्य प्रक्षिपेत् ॥

காலையில் கொஞ்சம் வணங்கினவனும், மத்தியான்ஹத்தில் மிகவும் ஒழுங்காயும் (வணங்காமலும்) சாயங்காலத்திற் பூமியிலுட்

கார்ந்துகொண்டும் காயத்திரியால் அபிமந்திரணஞ்செய்த ஜலத்தை உயரத்தூக்கிவிடவேண்டும். இவ்விதஞ் செய்யும்பொழுது புருவம்வரை உயரத்தூக்கிச் சூரியனைப் பார்த்துக்கொண்டு, இரு பாதங்களின் குதிக்கால்கள் பூமியிற் படாவண்ணம் எழுந்து ஜலத்தின் மத்தியில் ஜலாஞ்ஜலியை விடவேண்டும். जलाभा शुचिस्थले ஜலமில்லாவிடில் சுத்தமான இடத்திலாவது அர்க்ய தானஞ் செய்யவேண்டும். (காலையிலும், மத்யான்ஹத்திலும் ஜலத்திலும், சாயந்திரம் பூமியிலும் அர்க்யத்தை விடவேண்டுமெனச் சில சிஷ்டர்கள் உறுதிகூறுகின்றனர்) அவ்வித மர்க்யம் விடும்பொழுது கட்டைவிரலும் ஆள்க்காட்டிவிரலும் சேர்க்கப்பட்டால் "ராக்ஷஸீமுத்திரை" என்றும், அவ்விதஞ் செய்தலால் எவ்விதப்பயனு முண்டாகாதென்றும் பாரிஜாதம் முதலியக்கிரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே மேற்கூறியபடியே அர்க்யம் விடவேண்டும்.

சங்கை:—'சங்கர்' என்ற மஹருஷியின் வசனத்தில் 'மந்தேஹர்' என்ற அசுரவகுப்பாரை இந்த அர்க்ய ஜலத்தால் வதைப்பதாயும் அந்தவதத்தால் நேருகின்ற பாபத்தைப் பிராணயாமத்தாற் போக்கவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. அந்த 'மந்தேஹர்' என்பவர் யாவர்? எங்கிருக்கின்றனர்? என்ன செய்கின்றனர்? எதற்காக அவர்களை வதைசெய்யவேண்டும்?

உத்தரம்:—முன்னொரு சமயம் 'மந்தேஹர்' என்ற அரக்கர்கள் பிரும்மதேவனைக் குறித்துத் தவஞ்செய்தனர். அத்தவத்திற்கிணங்கிப் பிரும்மதேவன் அவ்வரக்கர்களை நோக்கி வேண்டியவரைக் கேட்டுக்கொள்ளுங்கள்; தருகிறோம் எனவே அவ்வரக்கர்கள் சூரியனுடன் சண்டை செய்யும்படி அருள்புரிய வேண்டும் என்றனர். பிரும்மதேவனும் அவ்விதமே சண்டை செய்யுங்கள் என்று வரமளித்தார். அதுமுதல் உதயமாகும் பொழுதும், அஸ்தமனமடையும் பொழுதும் சூரியனுடன் சண்டைசெய்யு மவ்வரக்கர்கள் காயத்திரியால் ஜபிக்கப்பட்ட ஜலத்தை விடுவதால் சாந்தியை யடைகின்றனர் (சக்தியை இழக்கின்றனர்) ஆகையால் தான் உலகிலுள்ள வேதியர் யாவரும் காலையில்



கிழக்குமுகமாக நின்றுகொண்டு காயத்ரீ மந்திரத்தால் ஜலத்தை உயரத் தூக்கி விடுகின்றனர். அவ்விதம் வேதியர்களால் விடப்பட்ட அந்த ஜலமானது காயத்திரீ மந்திரத்தின் பிரபாவத்தால் வஜ்ராயுதமாகமாறி அவ்வரக்கர்களை அவர்கட்குச் சொந்தமான 'அருணம்' என்றத் தீவில் தள்ளிவிடுகின்றது. அவ்விதம் அர்க்யம் விட்டபிறகு தன்னைப் பிரதக்ஷிணஞ் செய்துகொள்வதால் அரக்கர் என்ற ஜீவனை ஹிம்ஸித்ததா லுண்டாகின்ற தோஷம் விலகினபிறகு உதயமாகின்றவனும், அஸ்தமனமடைகின்றவனுமானச் சூரியனைத் தியானஞ்செய்கின்ற வேதியன் சகல க்ஷேமங்களையுமடைகின்றான் என்று தைத்திரீயாரண்யகம் 2-வது பிரச்னம் 2-வது அனுவாகத்திற் சொல்லப்பட்டிருப்பதால் 'மந்தேஹர்' என்ற அரக்கர்களை நாசமாக்கவேண்டியே அர்க்யப் பிரதானஞ் செய்கின்றோம்.

சங்கை:—அங்ஙனமாயின் யோக்யரான யாதாவதொரு வேதியர் அவ்விதஞ் செய்வதாலேயே அவ்வரக்கர் நாசமடையக் கூடுமாதல்பற்றி எல்லா வேதியருமே அவ்விதஞ் செய்யவேண்டுவதவசியமில்லை யன்றோ?

உத்தரம்:—வேதத்தில் रक्षांसि என்று பன்மையை உபயோகித்திருப்பதால் ராக்ஷஸர்கள் அநேகர் (அளவுகடந்தவர்கள்) என்று ஏற்படுவதாலும், அவர்களை விரட்டுவதற்கு வேண்டியே ब्रह्मवादिनः என்ற விடத்தும் பன்மையை உபயோகித்திருப்பதாலும், அளவுகடந்த அநேகர் சேர்ந்தே காயத்திரீ மந்திரப்பிரபாவத்தா லவர்களை வெரட்டவேண்டுவ தவசியமாகின்றது. ஆகவே எல்லாவேதியரும் அர்க்யதான மவச்யம் செய்தே தீரவேண்டும்.

சங்கை—யாவரும் ஒன்றுசேர்ந்து ஒருதின மவ்வித மர்க்யதானஞ் செய்வதிலிருந்தே அவர்கள் நாசமடையக் கூடுமாதல்பற்றி ஒவ்வொரு தினமுஞ் செய்யவேண்டுமென்ப தவசியமில்லை யன்றோ?

உத்தரம்:—गायत्र्या अभिमन्त्रितेनांभसा शाम्यन्ति காயத்திரியால் அபிமந்திரணஞ் செய்த ஜலத்தால் சாந்தமாகின்றனர்

**मन्देहाऽरुणे द्वीपे प्रक्षिपन्ति** அருணம் என்ற தங்களுக்குச் சொந்தமான தீவில் தள்ளப்படுகின்றனர் என்று மட்டும் சொல்வி இருப்பதால் மந்திரப் பிரபாவத்தால் அவ்வரக்கர்கள் முற்றிலுமழிவதில்லை என்றும், ஒருதினத்திற் செய்த அர்க்யப்பிரதானத்தால் அன்று அவர்களுடைய பலம் குன்றிவிடுவதுடன் அவர்களுக்குச் சொந்தமான தீவில்கொண்டு தள்ளப்பட்டும் விடுகின்றனர். அவ்வரக்கர்கள் அசுரசுவபாவத்தை முன்னிட்டும் பிரும்மதேவரின் வரத்தினுலும் மறுதினமும் சூரியனுடைய கதியைத்தடை செய்ய வரக்கூடுமாதலால் அன்றும் நாம் முன்போலவே தடுக்க வேண்டுவதவசியம். ஆகவே அசுரர்கள் காயத்ரீ தீர்த்தத்தின் பிரபாவத்தால் அடியோடு நாசமடைந்தாலல்லவா "ஒரு நாள் செய்தாலேபோதும், மறுநாள் செய்யவேண்டாம்" என்றவா சங்கைபொருந்தும். அவ்விதமல்லாது தீர்த்தப் பிரபாவத்தால் தத்காலம் சாந்தமாகி மறுபடியும் ஒவ்வொருதினமும் சூரியனின் கதியைத் தடைசெய்யவருவதால் அவர்களைத் தடைசெய்யவேண்டிப் பிரதிதினமும் அர்க்யப்பிரதான மவசியமென்றே ஏற்படுகின்றது.

சங்கை:—சூரியனை அரக்கர் தடைசெய்கின்றனர் என்றால் சூரியன் உதயமாகாமலும் அஸ்தமன மடையாமலுமிருந்து வேதியர் செய்யும் அர்க்யதானத்தை முன்னிட்டே வெளிவந்திருந்தாலல்லவா மேலேசொன்னது பொருந்தும். அவ்விதமொன்றையும் நாம் அனுபவத்திற் காணவில்லை. வேதியர் அர்க்யம் விட்டபோதிலும், விடாவிடினும் சூரியன் உதயமாகிக்கொண்டு தானே இருக்கின்றான். ஆதலால் மேற் குறிப்பிட்ட வேதவாக்யத்திற் சொல்லியவைகள் வெறுங்கதை என ஏன் கொள்ளக்கூடாது ?

உத்தரம்:—**सूर्यः सहस्रकिरणः** சூரியன் ஆயிரக்கணக்கான கிரணங்களையுடையவர் என்று சொல்லி இருப்பதாலும், வடமொழியில் **शतंसहस्रम युतमेते ह्यानन्त्यवाचकाः** நூறு, ஆயிரம், பதினுயிரம் முதலிய பதங்கள் ஆனந்த்யத்தை (அளவில்லாமையை)க் குறிக்குமென்று சொல்லப்பட்டிருப்பதாலும் சூரியனிடத்தில் உலக க்ஷேமத்திற்காக ஈசுவரனுல் ஏற்படுத்தப்பட்ட அநேகங்கிரணங்



களிருக்கின்றன வென்று ஏற்படுகின்றது. இவ்விதமே தைத்திரீயாரண்யகம் முதல் பிரச்னத்தாலும் அனுபவத்தாலும் வெளியாகின்றது. அவைகளுள் ஒவ்வொரு ஜீவனுக்கும் தனித்தனியே நன்மையைப் பயக்கின்ற இத்தகைய ஒவ்வொரு சூரியகிரணத்திற்கும் ஒவ்வொரு அரக்கர்வீதம் நன்மையைப் பயக்காமலிருக்கும்படி அவைகளைத் தடைசெய்கின்றனர். ஆகவே ஒவ்வொரு வேதிய ஜீவனும் தத்தமக்கு நன்மைசெய்யும் சூரிய கிரணங்களைத் தடைசெய்கின்ற அரக்கர்களை அர்க்யப் பிரதானத்தால் சக்தியை இழந்தவர்களாக்கி அவர்களது தீவில் தள்ளிவிடுவதால் அவரவற்கென்று ஏற்பட்ட சூரியனது அக்கிரணங்கள் அவரவற்கு ஆரோக்யம் முதலிய நன்மையைப் பயக்குகின்றது. அதன் மூலம் அவர்கள் நீண்ட ஆயுளையும், நற்கீர்த்தியையும், பிரும்ம தேஜஸ்ஸையு மடைகின்றனர். இவ்விதமே மனுவும்

ऋषयो दीर्घसंध्यात्वादायुर्दीर्घमवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेवच ॥

என்றதால் கூறி இருக்கின்றார். ஆகையாற்றான் ஒவ்வொரு தினமும் இவ்வித மர்க்யதானஞ் செய்யவேண்டுமெனச் சாஸ்திரம் கூறிற்று.

சங்கை—அங்ஙனமாயின் காயத்திரீ முதலிய வேதமந்திரங்களை த்விஜரல்லாதார் ஜபிக்கக்கூடாதென்று தாங்களே முன்னர் சொல்லி இருக்கின்றீர்கள். த்விஜரல்லாதாரையும் ஆண்டவனே அவரவர்கள் கர்மமூலம் படைத்திருப்பதாலும், அவர்கட்கும் ஆரோக்யம் முதலியன உண்டாகவேண்டுவ தவசியமாதலாலும் அதற்குச் சாதனமாய் மந்திரபூதமான ஜலத்தை விடுவதற்கு அதிகாரம் அவர்கட்கு இல்லாததால் அவர்கட்கென்றுத் தனியே ஏற்பட்ட சூரிய கிரணங்கள் அரக்கர்களால் தடைசெய்யப்பட்டவைக வாகுமல்லவா? அவ்வரக்கர்களின் தடையை த்விஜரல்லாதார் எந்தச் சாதனத்தை அனுஷ்டித்தல் மூலம்போக்கி க்ஷேமமடைவது?

உத்தரம்:—உலகிலுள்ள எல்லா ஜீவர்களும் க்ஷேமமடைய வேண்டுமென்றே பகவான் சாஸ்திரங்களை வெளியிட்டிருக்கிறார் என்பது உண்மையே. ஆயினும் த்விஜர் வேதமூலமும், த்விஜரல்லாதார் இதிஹாஸ புராணங்கள் மூலமும் நன்மையையடையட்டும் என்று ஆண்டவனாலேயே வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே த்விஜரல்லாதார் இதிஹாச புராணங்களைக்கொண்டு முக்காலத்திலும் சூரியனைக்குறித்து அர்க்யதானம் முதலியவற்றைச் செய்து அதன்மூலம் தங்களுக்கு க்ஷேமத்தைத் தரக்கூடிய சூரியகிரணத்தைத் தடைசெய்துகொண்டிருந்த அவ்வரக்கர்தடையை விலக்கி க்ஷேமமடையலாம் என்று கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜீவனுக்கும் க்ஷேமமுண்டாகவேண்டும் என்பது மட்டும் அவசியமேயல்லாது ஒருவன் எக்கார்யத்தால் க்ஷேமமடைந்தானோ, அடைந்தும் வருகின்றானோ அவ்வழியால்தான் மற்றவனும் அடையக்கூடும் என்று எண்ணுவது லோகானுபவத்திற்குப் பொருந்துமா? த்விஜரல்லாதாற்கு க்ஷேமமுண்டாவதற்கு வேண்டிய முறையைச் சாஸ்திரஞ் சொல்லாமலிருந்தாலல்லவா நீ சொல்லுமாசங்கைக்கிடமுண்டு. அவர்களும் க்ஷேமமடைவதற்கு வேண்டியச் சாதனத்தை வேறுவிதமாக உபதேசித்திருப்பதால் அவ்வழியால் அவர்களும் க்ஷேமமடையக்கூடும். ஆகவே மேற்சொல்லிய வாசங்கைக் கிடமில்லை. சூத்திரதர்ம நிரூபணஞ்செய்யும் பொழுது இதனை விரித்து எழுதுவாம். ஆதலால் ஒவ்வொருதினமும் அர்க்யம் விடுவதவசியம் என்று ஏற்பட்டது.

பிறகு **संध्यां मनसाध्यायेत्** சந்தியாதேவியை மனத்தால் தியானஞ் செய்யவேண்டும். தியானஞ் செய்யும்பொழுது

गायत्री, रक्तवर्णा, ब्रह्मस्वरूपा, असावादित्यो ब्रह्म, साहमस्मि, ब्रह्मैवाहमस्मि (इति प्रातः) सावित्री, शुक्लवर्णा, रुद्रस्वरूपा, असावादित्यो ब्रह्म, साहमस्मि, ब्रह्मैवाहमस्मि । (इति मध्यान्हे) सरस्वती, कृष्णवर्णा, विष्णुस्वरूपा, साहमस्मि ब्रह्मैवाहमस्मि (इति सायम्.) (हृदयमभिमृश्य पश्चाद्द्विराचामेत् ।)



சந்தியாதேவீ காயத்ரீ எனப்பெயருள்ளவள்; சிவந்த நிறமுள்ளவள்; பிரும்மதேவனின் சுவரூபமுள்ளவள்; இந்தச்சூரியன் பிரும்மம்; அந்தச் சந்தியாதேவியே நான்; பிரும்மமாகவே நான் இருக்கிறேன்; என்று காலையிலும், சாவித்திரீ எனப் பெயருள்ளவள்; வெண்ணிறமுள்ளவள்; ருத்திரனின் சுவரூபமுள்ளவள்; இந்தச்சூரியன் பிரும்மம்; அந்தச் சந்தியாதேவியே நான்; பிரும்மமாகவே நான் இருக்கின்றேன் என்று மத்தியான்ஹத்திலும், சரஸ்வதீ எனப் பெயருள்ளவள்; கருநிறம் விஷ்ணுவின் சுவரூப மிவையுள்ளவள்; இந்தச்சூரியன் பிரும்மம்; அந்தப் பிரும்மமாகவே நான் இருக்கிறேன் என்று மாலையிலும் சேர்த்து தியானஞ் செய்யவேண்டும். அச்சமயம் ஹிருதயத்தைத் தொட்டுக் கொள்வதவசியம். தியான மந்திரத்தின்பொருளை உள்ளபடி கூறுவதானால் கிரந்தம் விரிவடையுமாதலாலும், இம்மாதிரியான விஷயத்தை "மஹா வாக்யார்த்தரஹஸ்யம்," என்ற உபன்யாசத்தில் விரிவாய் எழுதியிருப்பதை இந்தச் சஞ்சிகையில் பின்னர் வெளியிடுவதாகச் சங்கற்ப்பித்திருப்பதாலும் இங்கு எழுதாமல் குறுக்கப்பட்டது. இரண்டுதடவை ஆசமனஞ் செய்துகொண்டு பிறகு நவக்கிரக தர்ப்பணமும், கேசவாதி தர்ப்பணமுஞ் செய்யவேண்டும். அதன் மந்திரம் பின்வருமாறு—

आदित्यं तर्पयामि । सोमं तर्पयामि । अङ्गारकं तर्पयामि । बुधं तर्पयामि । बृहस्पतिं तर्पयामि । शुक्रं तर्पयामि । शनैश्चरं तर्पयामि । राहुं तर्पयामि । केतुं तर्पयामि । केशवं तर्पयामि । नारायणं तर्पयामि । माधवं तर्पयामि । गोविन्दं तर्पयामि । विष्णुं तर्पयामि । मधुसूदनं तर्पयामि । त्रिविक्रमं तर्पयामि । वामनं तर्पयामि । श्रीधरं तर्पयामि । हृषीकेशं तर्पयामि । पद्मनाभं तर्पयामि । दामोदरं तर्पयामि ।

(தா-ம்) अङ्गान्यन्या देवताः "எல்லாத் தேவர்களும் பகவானின் அங்கங்களாகின்றனர்" என்றபடி பகவதங்க பூதர்களான நவக்கிரக தேவதைகளைக்குறித்துத் தர்ப்பணஞ்செய்வது சர்வசரீரியான பகவானைக்குறித்தே செய்ததாகும் என்று ஏற்படுவதால் அவ்விதஞ்செய்வது மிகவுமவசியம். மார்கழிமுதல் கார்த்திகை

வரையுள்ள 12 மாதங்களுக்கும் கேசவன் முதலிய 12 பகவன் மூர்த்திகள் அதிபதிகளாதலால் அவர்கட்க்கும் தர்ப்பணஞ் செய்வது அவசியமே. பிறகு ஒருதடவை ஆசமனஞ் செய்யவேண்டும். முடிவில் **श्रीकृष्णार्पणमस्तु** என்றும், **ओं तत्सद्ब्रह्मार्पणमस्तु** என்றுஞ் சொல்லவேண்டும்.

யஜுர் வேதிகளின் சந்தியாவந்தனத்தின்
ஒருபாகம் முடிவு பெற்றது.

## சாமவேத சந்தியாவந்தனம்.

சாமவேதிகளின் சந்தியாவந்தனக் கிரமம் பெரும்பாலும் யஜுர்வேதிகளின் சந்தியானுஷ்டானக் கிரமம் போலவே இருக்குமாயினும் சிலவிடங்களில் மட்டும் ஜபிக்கவேண்டிய மந்திரங்களில்மாறுதல் ஏற்படுவதால் அம்மந்திரங்களையும், அவற்றின் பொருளையும் எழுதுகிறோம். முதலில் கைகால்களை அலம்பிச் சுத்தஞ் செய்து கொண்டு பிறகு

अच्युताय नमः। अनन्ताय नमः। गोविन्दाय नमः।

என்றுசொல்லி கொஞ்சம் தீர்த்தத்தை வலது கையிலெடுத்து ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு தடவை வீதம் மூன்று தடவை யுட்கொள்ளவேண்டும். பிறகு

केशव। नारायण। माधव। गोविन्द। विष्णो। मधुसूदन।
त्रिविक्रम। वामन। श्रीधर। हृषीकेश। पद्मनाभ। दामोदर।

என்று சொல்லி முறையே வலதுகன்னம் இடதுகன்னம், வலதுகண் இடதுகண், வலதுநாசி இடதுநாசி, வலதுகாது இடதுகாது, வலதுதோள் இடதுதோள் இவைகளை முறையே கட்டைவிரல், பவித்திரவிரல், ஆள்க்காட்டிவிரல், சுண்டிவிரல்,



நடுவிரல் இவைகளால் ஒவ்வொரு விரலால் இரண்டு அங்கம் வீதம் தொட்டுக்கொண்டு மீதமுள்ள **पद्मनाभ** என்றமந்திரத்தைச் சொல்லி எல்லா விரலாலும் மார்பையும், **दामोदर** என்று சொல்லி முன்போலவே எல்லாவிரலாலும் சிரஸ்ஸையும் தொட்டுக்கொள்ளவேண்டும். இவ்விதஞ் செய்து முடிப்பது "ஆசமனம்" எனப்படும். இவ்வித மிரண்டுதடவை ஆசமனஞ் செய்யவேண்டும். பிறகு

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम्।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये॥

என்று சொல்லி நெற்றியில் குட்டிக்கொண்டு (இதன் பொருளை 40-ம் பக்கத்தில் பார்க்க) பிறகு பிராணாயாமஞ் செய்யவேண்டும். பிராணாயாமஞ் செய்யவேண்டிய முறையை 42-ம் பக்கம் முதல் தொடங்கப்பட்டிருக்கும் பிராணாயாமவிசாரத்தில் கண்டுகொள்க. பிராணாயாமமந்திரம் பின்வருமாறு:—

ओं भूः। ओं भुवः। ओंऽसुवः। ओं महः। ओं जनः। ओं तपः। ओंऽसत्यम्। ओं तत्सवितुर्वरेण्यम्। भर्गो देवस्य धीमहि। धियो यो नः प्रचोदयात्। ओमापो ज्योतीरसोऽमृतंब्रह्म भूर्भुवस्सुवरोम्।

(இதன் பொருளை 53-ம் பக்கத்தில் பார்க்க) பிறகு **ममोपात्त समस्तदुरितक्षयद्वारा परमेश्वरप्रीत्यर्थं प्रातस्संध्यामुपासिष्ये** என்று காலையிலும், **माध्यन्दिनसंध्यामुपासिष्ये** என்று நடுப்பகலிலும் **सायं संध्यामुपासिष्ये** என்றுமாலையிலும் சொல்லி சங்கற்பஞ் செய்துகொள்ளவேண்டும். (இதன்பொருளை 57-வது பக்கத்தில் பார்க்க) இனிருஷி என்று சொல்லுமிடத்தில் தலையையும், சந்தஸ் என்று சொல்லுமிடத்தில் மூக்கின் நுனியையும், தேவதா என்று சொல்லுமிடத்தில் மார்பையும் தொட்டுக்கொள்ளவேண்டுமென்று கண்டுகொள்ளவும். பிறகு

अपवित्रः पवित्रो वा सर्वावस्थां गतोऽपि वा।
यस्स्मरेत्पुण्डरीकाक्षं स बाह्याभ्यन्तरश्शुचिः॥ ओं श्रीकेशवाय नमः।

என்று சொல்லி நடுவிரலால் அல்லது பவித்திரவிரலால் ஜலத்தில் பிரணவத்தை எழுதி புருவமத்தியில் தடவிக் கொள்ள வேண்டும் (இதன்பொருள்) **यः**=எவன் **अपवित्रः**=பரிசுத்தனாக இல்லாதவனோ (**यः**=எவன்) **पवित्रोवा**=பரிசுத்தியுள்ளவனோ (**यः**=எவன்) **सर्वावस्थाम्**=சகலவிதமான கஷ்டத்தை **गतोऽपिवा**=அடைந்தவனோ **सः**=அவன் **पुण्डरीकाक्षम्**=ஸ்ரீமந்நாராயணனை **स्मरेत्**=ஸ்மரித்தால் **बाह्याभ्यन्तरश्शुचिः—बाह्य** = வெளியிலும் **अभ्यन्तरः** = மனத்திலும் **शुचिः**=சுத்தியுள்ளவனாக (**भवति**=ஆகின்றான்) **श्रीकेशवाय**=லக்ஷ்மீயுடன்கூடிய ஸ்ரீமந்நாராயணனுக்கு **नमः**=நமஸ்காரம். பிறகு காலையிலும் மாலையிலும்

आपो हिष्ठेति मन्त्रस्य,—सिंधुद्वीप ऋषिः, देवी गायत्री च्छन्दः, आपो देवता, प्रोक्षणे विनियोगः। (मन्त्रः) आपो हि ष्ठा मयोभुवः। ता न ऊर्जे दधातन। महे रणाय चक्षसे। यो वः शिवतमो रसः। तस्य भाजयतेह नः। उशतीरिव मातरः। तस्मा अरं गमाम वः। यस्य क्षयाय जिन्वथ। आपो जनयथाच नः। ओं भूर्भुवस्वः।

என்று சொல்லி 7-பாதங்களால் சிரஸ்ஸிலும், 8-வது பாதத்தால் இரண்டு பாதங்களிலும், 9-வது பாதத்தினால் திருப்பவும் சிரஸ்ஸிலும், வியாஹ்ருதியினால் எல்லா அங்கங்களிலும் ப்ரோக்ஷணஞ் செய்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் மேற்குறிப்பிட்டவிடங்களில் ப்ரோக்ஷணஞ் செய்து கொள்வது அவசியம். (இதன் பொருளை 59-ம் பக்கத்தில் பார்க்க) மத்தியாஹ்னத்தில்

तरत्समेत्येतेषाम्—वामदेव ऋषिः। गायत्री च्छन्दः। सोमो देवता। आपो हि ष्ठेति मन्त्रस्य —सिंधुद्वीप ऋषिः। गायत्री च्छन्दः। आपो देवता। मार्जने विनियोगः। (मन्त्रः) ओं तरत्समन्दी धावति। धारासु तस्यांधसः। तरत्समन्दी धावति। उस्रा वेद वसूनाम्। मर्तस्य देव्यवसः। तरत्समन्दी धावति। उभयोः पुरुषन्त्योः। आ सहस्राणि दद्महे। तरत्सम-



न्दी धावति। आ ययोस्त्रिंशतं तना। सहस्राणि च दद्महे। तरत्समन्दी धावति। आपोहिष्ठा........जनयथाच नः। ओं भूर्भुवस्वः।

என்றுப்ரோக்ஷணஞ் செய்து கொள்ளவேண்டும். பிறகு காலையில்

अहश्च मा आदित्यश्च पुनातु स्वाहा ॥

என்று சொல்லி தீர்த்தத்தைப் ப்ராசனஞ் செய்ய வேண்டும் (இதன்பொருள்) **अहश्च**=பகலுக்கபிமானியும் **आदित्यश्च**=ஆதித்யன் என்று பெயருள்ளவனுமான தேவன் **मा**=என்னை **पुनातु**=பரிசுத்தனாக்கட்டும். **स्वाहा**=அதற்காக தீர்த்தத்தை யுட்கொள்ளுகிறேன். மத்தியாஹ்னத்தில்

आपः पुनन्तु इति मन्त्रस्य—विश्वेदेवा ऋषयः। अनुष्टुप् च्छन्दः। आपो देवता। अपां प्राशने विनियोगः। (मन्त्रः) आपः पुनन्तु पृथिवीं पृथिवी पूता पुनातु माम्। पुनन्तु ब्रह्मणस्पतिर्ब्रह्म पूता पुनातु माम्। यदुच्छिष्ट मभोज्यं यद्वा दुश्चरितं मम। सर्वं पुनन्तु मामापोऽसतां च प्रतिग्रहंस्वाहा।

என்றதைச் சொல்லி தீர்த்தத்தையுட் கொள்ளவேண்டும். (இதன்பொருளை 6?-வது பக்கத்தில் பார்க்கவும்) சாயங்காலத்தில்

रात्रिश्च मा वरुणश्च पुनातु स्वाहा।

என்ற மந்திரத்தைச் சொல்லி தீர்த்தத்தை யுட்கொள்ள வேண்டும். (இதன்பொருள்) **रात्रिश्च**=ராத்திரியின் அபிமானியும் **वरुणश्च**=வருணன் என்று சொல்லப்படுபவனுமான தேவன் **मा**=என்னை **पुनातु**=பரிசுத்தனாக்கட்டும். **स्वाहा**=அதற்காக தீர்த்தத்தை யுட்கொள்ளுகிறேன். பிறகு

இரண்டு தடவை ஆசமனஞ் செய்யவேண்டும். அதற்கும் பிறகு.

दधिक्राव्ण इति मन्त्रस्य—वामदेव ऋषिः। अनुष्टुप् छन्दः। विश्वे

देवा देवता। मार्जने विनियोगः। (मन्त्रः) दधिक्राव्णो अकारिषम्। जिष्णोरश्वस्य वाजिनः। सुरभि णो मुखा करत्। प्र न आयूंषि तारिषत्। आपोहिष्ठा........जनयथाच नः॥ ओंभूर्भुवस्स्वः।

என்று சொல்லி ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் ப்ரோக்ஷணஞ் செய்து கொள்ளவேண்டும். (இதன்பொருளை 65வது பக்கத்தில் பார்க்க) பிறகு கையில் ஜலத்தை எடுத்துக்கொண்டு

ऋतंचेत्यस्य—अघमर्षण ऋषिः। अनुष्टुप् च्छन्दः। भाववृत्तः परमात्मा देवता। पापपुरुषविसर्जने विनियोगः। (मन्त्रः) ओं ऋतं च सत्यं चाभीद्धात्तपसोऽध्यजायत। ततो रात्रिरजायत ततस्समुद्रो अर्णवः। समुद्रादर्णवादधिसंवत्सरो अजायत। अहोरात्राणिविदधद्विश्वस्य मिषतो वशी। सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत्। दिवं च पृथिवीं चान्तरिक्षमथो सुवः।

என்று ஜபித்து முகர்ந்து பார்த்து தென்மேற்கு திசையில் விடவேண்டும். (இதன்பொருளை 67-வது பக்கத்தில் பார்க்க) பிறகு **अर्घ्यप्रदानंकरिष्ये** என்று சொல்லி சங்கற்பஞ் செய்து கொண்டு பிறகு

गायत्र्याः—विश्वामित्र ऋषिः। निचृद्गायत्री च्छन्दः। सविता देवता। अर्घ्यप्रदाने विनियोगः। (मन्त्रः) ओं भूर्भुवस्सुवः। तत्सवितुर्वरेण्यम्। भर्गो देवस्य धीमहि। धियो यो नः प्रचोदयात्।

என்று சொல்லி காலையில் மூன்று தடவையும், மத்தியாந்ஹத்தில் இரண்டு தடவையும், மாலையில் மூன்று தடவையும் அர்க்யம் விடவேண்டும். பிறகு ஒருதடவை ஆசமனஞ் செய்து பிராணயாமஞ் செய்யவேண்டும். பிறகு

यद्देत्यस्य—शौनक ऋषिः। गायत्री च्छन्दः। सूर्यो देवता। प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः। (मन्त्रः) ओं यदद्य कच्च वृत्रहन्। उदगा



अभिसूर्य। सर्वंतदिन्द्र ते वशे। என்று காலையிலும் उद्घेदभीत्यस्य—श्रुतकक्ष ऋषिः। गायत्री च्छन्दः। सूर्यो देवता। प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः। ओं, उद्घेदभिश्रुतामघम्। वृषभं नर्यापसम्। अस्तारमेषि सूर्य। என்று மத்தியாந்ஹத்திலும் नतस्येत्यस्य—विश्वमना ऋषिः। उष्णिक्छन्दः। अग्निर्देवता। प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः। ओं नतस्य मायया चन। रिपुरीशीतमर्त्यः। यो अग्नये ददाश हव्यदातये என்று மாலையிலும் சொல்லிப் பிராயச்சித்தார்க்யம் விட்டுப் பிறகு ओं भूर्भुवस्वः என்று சொல்லி ஜலத்தைக் கையிலெடுத்துத் தன்னைச் சுற்றிக்கொள்ளவேண்டும்.

(இதன்பொருள்) **वृत्रहन्=वृणोति सर्वं जगदिति वृत्रः।** (எல்லா லோகத்தையும் மறைப்பதுபற்றி விருத்திரன் எனப்படும்) என்றபடி **वृत्र**=உலகத்தை மறைக்கும் இருளை **हन्**=நாசஞ் செய்கின்றவரும், **इन्द्र**=மேலான ஐசுவரியமுள்ளவருமான **सूर्य**=ஓ சூரியனே **अद्य**=இப்பொழுது **यत्**=யாதுகாரணம்பற்றி **कच्च**=இருளைப்போக்கி ரக்ஷித்தல் என்ற காரியத்தைச் செய்கின்றவராய் **अभि**=நான்கு பக்கங்களிலும் பிரகாசித்துக்கொண்டு **उदगाः**=வெளிவந்தீரோ **तत्**=அக்காரணம்பற்றி **सर्वम्**=எல்லாஜகத்தும் **ते**=உம்முடைய **वशे**=ஆதீனத்திலிருக்கின்றது.

(தா - ம்) உலகத்தைமறைத்துக்கொண்டு எக்காரியத்தையும் செய்யவிடாது தடைசெய்து கொண்டிருந்த இருளைப்போக்கி உலகிற்கு ஒளியைத்தந்து உபகரிப்பதால் உலகம் யாவும் தங்கள் வசத்திலேயே இருக்கின்றது. ஆதலால் அவ்வுலகிற் சேர்ந்த நானும் தங்களையாராதிக்கக்கடமைப் பட்டுவிட்டேன். அதனால் திருப்தியையடைந்து க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டும் (எ - று)

பிறகு ஒருதடவை ஆசமனஞ்செய்து மூன்று தடவைப் பிராணயாமஞ் செய்யவேண்டும். பிறகு சந்தியாதேவியைக் காலையில் காயத்திரீ என்று பெயருள்ளவளாகவும், சிவப்பு நிறமுள்ளவளாகவும், பிரும்மாவின் சுவரூபையாகவும்; மத்தியாந்ஹத்தில் ஸாவித்திரீ என்று பெயருள்ளவளாகவும், வெண்ணிறமுள்ளவ

ளாகவும், ருத்திரனின் சுவரூபமுள்ளவளாகவும்; சாயங்காலத்தில் சரஸ்வதி என்று பெயருள்ளவளாகவும்; கருப்பு நிறமுள்ளவளாகவும், விஷ்ணுவின் சுவரூபமுள்ளவளாகவும் தியானஞ் செய்துகொண்டு

असावादित्यो ब्रह्म । सोऽहमस्मि । ब्रह्मैवाहमस्मि ।

என்ற மந்திரத்தைச்சொல்லி மார்ப்பைத் தொட்டுக்கொள்ள வேண்டும். (இதன்பொருளை 75வது பக்கத்தில் பார்க்கவும்) பிறகு இரண்டுதடவை ஆசமனஞ்செய்து

आदित्यं तर्पयामि । सोमं तर्पयामि । अङ्गारकं तर्पयामि । बुधं तर्पयामि । बृहस्पतिं तर्पयामि । शुक्रं तर्पयामि । शनैश्चरं तर्पयामि । राहुं तर्पयामि । केतुं तर्पयामि । केशवं तर्पयामि । नारायणं तर्पयामि । माधवं तर्पयामि । गोविन्दं तर्पयामि । विष्णुं तर्पयामि । मधुसूदनं तर्पयामि । त्रिविक्रमं तर्पयामि । वामनं तर्पयामि । श्रीधरं तर्पयामि । हृषीकेशं तर्पयामि । पद्मनाभं तर्पयामि । दामोदरं तर्पयामि ॥

என்ற மந்திரத்தைச்சொல்லி நவக்கிரஹ தர்ப்பணமும், கேசவாதி தர்ப்பணமுஞ் செய்யவேண்டும். (இதன்கருத்து 75வதுபக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது) பிறகு ஒருதடவை ஆசமனஞ்செய்து முடிவில் **श्रीकृष्णार्पणमस्तु** என்றும் **ओं तत्सद्ब्रह्मार्पणमस्तु** என்றும் சொல்லித் தீர்த்தத்தைக் கீழே விடவேண்டும்.

சாமவேத சந்தியாவந்தனத்தின் ஒருபாகம் முற்றிற்று.

## ருக்வேதிகளின் சந்தியா வந்தனம்.

முதலில் கைகால்களை யலம்பிச் சுத்தஞ் செய்து கொள்ள வேண்டும். பிறகு **अच्युताय नमः । अनन्ताय नमः । गोविन्दाय नमः ।** என்ற மந்திரத்தைச்சொல்லி ஆசமனஞ் செய்யவேண்டும். பிறகு



**केशव । नारायण । माधव । गोविन्द । विष्णो । मधुसूदन । त्रिविक्रम । वामन । श्रीधर । हृषीकेश । पद्मनाभ । दामोदर** என்று சொல்லி 76 வது பக்கத்தில் சொல்லியப் பிரகாரம் அந்தந்த அங்கங்களைத் தொட்டுக் கொள்ளவேண்டும். இவ்வித மிரண்டுதடவை ஆசமனஞ்செய்யவேண்டும். பிறகு

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥

என்றுசொல்லி நெற்றியில் குட்டிக்கொண்டு (இதன்பொருளை 40 வது பக்கத்தில் பார்க்கவும்) பிறகு பிராணாயாமஞ் செய்ய வேண்டும். பிராணாயாமஞ் செய்யவேண்டிய முறையை 42-ம் பக்கம் முதல் தொடங்கப்பட்டிருக்கும். பிராணாயாமவிசாரத்திற் கண்டுகொள்க. பிராணாயாமமந்திரம் பின்வருமாறு—

ओं भूः । ओं भुवः । ओंसुवः । ओं महः । ओं जनः । ओं तपः । ओंसत्यम् । ओं तत्सवितुर्वरेण्यम् । भर्गो देवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात् । ओमापो ज्योतीरसोऽमृतं ब्रह्म भूर्भुवस्सुवरोम् ।

(இதன்பொருளை 53-வது பக்கத்தில் பார்க்கவும்) பிறகு **ममोपात्तसमस्तदुरितक्षयद्वारा परमेश्वरप्रीत्यर्थं प्रातस्संध्यामुपासिष्ये** என்று காலையிலும், **माध्यन्दिनसंध्यामुपासिष्ये** என்று நடுப்பகலிலும், **सायं संध्यामुपासिष्ये** என்று மாலையிலும் சொல்லி சங்கற்பஞ் செய்துகொள்ள வேண்டும். (இதன் பொருளை 57-வது பக்கத்தில் பார்க்கவும்) இனி ருஷி என்று சொல்லுமிடத்தில் தலையையும், சந்தஸ் என்று சொல்லுமிடத்தில் நாவின் நுனியையும், தேவதா என்று சொல்லுமிடத்தில் மார்பையும் தொட்டுக்கொள்ள வேண்டுமெனக் கண்டு கொள்ளவும். பிறகு **ओं श्रीकेशवाय नमः** என்று சொல்லி நடுவிரலால் அல்லது பவித்திரவிரலால் ஜலத்தில் பிரணவத்தை எழுதி புருவமத்தியில் தடவிக் கொள்ள வேண்டும். பிறகு

आपोहिष्ठेति मन्त्रस्य—सिंधुद्वीप ऋषिः । देवीगायत्री च्छन्दः । आपो देवता । प्रोक्षणे विनियोगः । (मन्त्रः) आपो हि ष्ठा मयोभुवः ।

ता न ऊर्जे दधातन। महे रणाय चक्षसे। यो वः शिवतमो रसः। तस्य भाजयतेह नः। उशतीरिव मातरः। तस्मा अरङ्गमाम वः। यस्य क्षयाय जिन्वथ। आपो जनयथाच नः।

என்று சொல்லி 7 பாதங்களால் சிரஸ்ஸிலும், 8-வது பாதத்தால் இரண்டு பாதங்களிலும், 9-வது பாதத்தால் திரும்பவும் சிரஸ்ஸிலும், வியாஹிருதியால் எல்லா அங்கங்களிலும் ப்ரோக்ஷணஞ் செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் மேற்குறிப்பிட்ட விடங்களில் ப்ரோக்ஷணஞ் செய்துகொள்வது அவசியம். (இதன் பொருளை 59-வது பக்கத்தில்பார்க்கவும்.) பிறகு காலையில்

सूर्यश्चेत्यनुवाकस्य। अग्निः ऋषिः। गायत्री च्छन्दः। सूर्यो देवता। अपां प्राशने विनियोगः। (मन्त्रः) सूर्यश्च मा मन्युश्चमन्युपतयश्च मन्युकृतेभ्यः। पापेभ्यो रक्षन्ताम्। यद्रात्र्या पापमकार्षम्। मनसा वाचा हस्ताभ्याम्। पद्भ्यामुदरेण शिश्ना। रात्रिस्तदवलुंपतु। यत्किंच दुरितं मयि। इदमहं माममृतयोनौ। सूर्ये ज्योतिषि जुहोमि स्वाहा॥

என்று சொல்லி தீர்த்தத்தைப்ராசனஞ் செய்யவேண்டும். (இதன் பொருளை 62வது பக்கத்தில் பார்த்துக்கொள்ளவும்) மத்தியாங்ஹத்தில்

आपः पुनन्तु इति मन्त्रस्य—विश्वेदेवा ऋषयः, अनुष्टुप् छन्दः, आपो देवता, अपां प्राशने विनियोगः। (मन्त्रः) आपः पुनन्तु पृथिवीं पृथिवी पूता पुनातु माम्। पुनन्तु ब्रह्मणस्पतिर्ब्रह्म पूता पुनातु माम्। यदुच्छिष्टमभोज्यं यद्वा दुश्चरितं मम। सर्वं पुनन्तु मामापोऽसतां च प्रतिग्रहꣳ स्वाहा॥

என்றமந்திரத்தைச்சொல்லித் தீர்த்தத்தையுட்கொள்ளவேண்டும். (இதன்பொருளை 63வது பக்கத்தில் பார்த்துக்கொள்ளவும்) சாயங்காலத்தில்



अग्निश्चेत्यस्य—सूर्यः ऋषिः, गायत्री च्छन्दः, अग्निर्देवता, अपां प्राशने विनियोगः। (मन्त्रः) अग्निश्च मा मन्युश्च मन्युपतयश्च मन्युकृतेभ्यः। पापेभ्यो रक्षन्ताम्। यदह्ना पापमकार्षम्। मनसा वाचा हस्ताभ्याम्। पद्भ्यामुदरेण शिश्ना। अहस्तदवलुंपतु। यत्किंच दुरितं मयि। इदमहं माममृतयोनौ। सत्ये ज्योतिषि जुहोमि स्वाहा॥

என்ற மந்திரத்தைச்சொல்லித்தீர்த்தத்தையுட்கொள்ளவேண்டும். (இதன்பொருளை 64வது பக்கத்தில் பார்த்துக்கொள்ளவும்) பிறகு இரண்டுதடவை ஆசமனஞ்செய்யவேண்டும். அதற்குப் பிறகு

दधिक्राव्ण इति मन्त्रस्य—वामदेव ऋषिः, अनुष्टुप् छन्दः, विश्वे देवा देवता, मार्जने विनियोगः। (मन्त्रः) दधिक्राव्णो अकारिषम्। जिष्णोरश्वस्य वाजिनः। सुरभि नो मुखा करत्। प्रण आयूꣳषितारिषत्। आपो हिष्ठा........जनयथा च नः।

என்றதுவரையில் சொல்லிப்ரோக்ஷணஞ் செய்துகொண்டு பின் எழுதப்படும் மந்திரத்தைப்படித்தும் ப்ரோக்ஷணஞ் செய்துகொள்ளவேண்டும்—

१ शन्नो देवीरभिष्टय आपो भवन्तु पीतये। शंयोरभिस्रवन्तु नः।

२ ईशाना वार्याणां क्षयन्तीश्चर्षणीनाम्। अपो याचामि भेषजम्।

३ अप्सु मे सोमो अब्रवीदन्तर्विश्वानि भेषजा। अग्निं च विश्वशंभुवम्

४ आपः पृणीत भेषजं वरूथं तन्वे मम। ज्योक् च सूर्यं दृशे।

५ इदमापः प्रवहत यत्किंच दुरितं मयि। यद्वाहमभिदुद्रोह। यद्वा शेप [उताऽनृतम्।

६ अपो अद्यान्वचारिषं रसेन समगस्महि। पयस्वानग्न आगहि तं मा संसृज वर्चसा॥

७ ससृषीस्तदपसो दिवानक्तं च ससृषीः। वरेण्यक्रतूरहमादेवीरवसे हुवे।

८ भद्रं नो अपिवातय मनः

(ப - ரை) देवीः=பிரகாசிக்கின்ற आपः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! नः=எங்களுக்கு शम्=சுகத்தை (दात्र्यः=கொடுக்கின்றவர்களாகவும்) अभिष्टये=இஷ்டப்ராப்தியின் பொருட்டும் पीतये=பரமாத்ம ஸ்வரூபானந்த பானத்தையும் பொருட்டும் (भवत=ஆக வேண்டும்.) அதாவது அவைகளை எங்களுக்குண்டாக்கவேண்டும். नः=எங்களுக்கு शम्=சுகத்தையும், योः=துக்கத்தின் சமனத்தையும் अभिस्रवन्तु=பெருக்ச்செய்யவேண்டும். (2) अपः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! अहम्=நான் वार्याणाम्=வேண்டத்தகுந்த ஞானம் பக்தி முதலியவைகளை क्षयन्तीः=உண்டுபண்ணுகின்றவர்களாயும் चर्षणीनाम्=மனிதர்களுக்கு ईशानाः=நியந்தாக்களுமான वः = உங்களை भेषजम्=சம்சாரரோகத்தைப் போக்குகின்ற மருந்தை याचामि=வேண்டுகிறேன். (3) अप्सु=ஜலங்களில் अन्तः=உள்ளில் विश्वानि=எல்லாவிதமான भेषजा=ரோகங்களை நாசமாக்குகின்ற மருந்தும், विश्वशंभुवम्=எல்லாவற்றிற்கும் சுகத்தைத்தருகின்ற अग्निंच=அக்னியும் (இருப்பதாய்) मे=எனக்கு सोमः=சந்திரன் अब्रवीत्=சொன்னான். (4) आपः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! ज्योक्=சீக்கிரமாக सूर्यम्=பரமாத்மாவை दृशे=உபாஸிப்பதற்காக मम=என்னுடைய तन्वे=சரீரத்திற்கு भेषजम्=மருந்தை वरूथम्=மிகுதியாக पृणीत=விருத்திசெய்வீர்களாக. (கொடுப்பீர்களாக)(5) आपः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! मयि=என்னிடத்தில் यत्किंच दुरितम्=யாதேனுமிருக்கின்ற பாபத்தையும், यद्वा=அல்லது अहम्=நான் अभिदुद्रोह=துரோஹஞ்செய்தேன் என்பது யாதுண்டோ वा=அல்லது शेपे=பிறரைச் சபித்தேன் என்பது यत्=யாதுண்டோ उत=அல்லது अनृतम्=பொய்பேசுவதானது (यत्=யாதுண்டோ). இவையாவையும் प्रवहत = நாசஞ்செய்துவிடுங்கள். (6) अपः=ஓ ஜலாபிமானி தேவதைகளே! (अहम्=நான்) अद्य=இப்பொழுது अन्वचारिषम्=உங்களைச் சேவித்தவனாக இருக்கின்றேன். रसेन=பரமாத்மானுபவத்துடன் समगस्महि=சேரப்போகின்றோம். पयस्वान्=ஜலத்திலிருக்கின்ற अग्ने=ஓ அக்னியே आगहि=என்மனத்தில் தோன்றுவீராக. तम्=உம்மை உபாஸிக்கின்ற मा=என்னை वर्चसे=பிரும்மதேஜஸ்ஸுடன் संसृज=சேர்த்து வைப்பீராக. (7) अप्सः=வேறு இடத்திலிருக்கின்ற तत्=அந்தப் பிரும்மதேஜஸ்ஸை



ससुषीः=உண்டுபண்ணுங்கள். (அவ்விதம் உண்டு பண்ணும் பிரும்மதேஜஸ்ஸை) दिवा=பகலிலும் नक्तंच=ராத்திரியிலும் ससुषीः=(விடாது) உண்டுபண்ணுங்கள். देवीः=பிரகாசிக்கின்ற ஓ ஜலாபிமானி தேவதைகளே! वरेण्यक्रतूः-वरेण्य=யாவராலும் வரிக்கத்தக்க பரமாத்மாவை क्रतूः=தியானஞ்செய்கின்ற अहम्=நான் आ=பலவிதத்திலும் अवसे=நிச்சயஸ்வரூபமான பரமாத்மாவினிடம் हुवे=எல்லாவற்றையும் ஒப்படைத்தல் என்ற ஹோமத்தைச் செய்கின்றேன். (8) मनः=ஓ மனோபிமானி ருத்திரனே! नः=எங்களுக்கு भद्रम्=க்ஷேமத்தை अपिवातय = உண்டுபண்ணும். பிறகு கையில் ஜலத்தை எடுத்துக்கொண்டு

ऋतं चेत्यस्य—अघमर्षण ऋषिः, अनुष्टुप् छन्दः, भाववृत्तः परमात्मा देवता, पाप पुरुषविसर्जने विनियोगः। (मन्त्रः) ऋतं च सत्यंचाभीद्धात्तपसोऽध्यजायत। ततो रात्रिरजायत ततस्समुद्रो अर्णवः। समुद्रादर्णवादधिसंवत्सरो अजायत। अहोरात्राणि विदधद्विश्वस्य मिषतो वशी। सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत्। दिवं च पृथिवीं चान्तरिक्षमथो सुवः॥

என்ற மந்திரத்தை ஜபித்து முகர்ந்துபார்த்து தென்மேற்கு திசையில் விடவேண்டும். (இதன் பொருளை 67வது பக்கத்தில் பார்த்துக் கொள்ளவும்) பிறகு பிராணாயாமஞ்செய்து अर्घ्य प्रदानं करिष्ये என்று சங்கற்பஞ் செய்துகொண்டு तिष्ठन्नर्घ्यत्रयं कुर्या त्त्रिषु कालेषु बह्वृचः "ருக்வேதிகள் மூன்றுகாலங்களிலும் நின்றுகொண்டே அர்க்யம்விடவேண்டும்" என்று ஆச்வலாயன தர்மத்தில் சொல்லி இருக்கிறபடி நின்றபடியே மூன்று காலங்களிலும் அர்க்கயம் விடவேண்டும். அவ்விதம் விடும்பொழுது காலையிலும் மாலையிலும் மூன்று அர்க்யமும், மத்தியான்ஹத்தில் இரண்டு அர்க்யமும் விடவேண்டும். அதன் மந்திரம் பின்வருமாறு—

गायत्र्याः विश्वामित्रः ऋषिः, निचृद्गायत्री च्छन्दः, सविता देवता अर्घ्यप्रदाने विनियोगः, (मन्त्रः) ओंभूर्भुवस्सुवः। तत्सवितुर्वरेण्यम्। भर्गो देवस्य धीमहि। धियो यो नः प्रचोदयात्॥

பிறகு ஒரு தடவை ஆசமனஞ்செய்து ப்ராணாயாமஞ் செய்யவேண்டும். பிறகு காலையில் **प्रातस्संध्याकालातीतदोष प्रायश्चित्तार्घ्य प्रदानं करिष्ये** என்று சங்கற்பஞ்செய்து கொண்டு

यदद्येत्यस्य मन्त्रस्य—शौनकः ऋषिः, गायत्री च्छन्दः, सूर्यो देवता, प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः। (मन्त्रः) यदद्यकच्च वृत्रहन्। उदगा अभिसूर्य। सर्वं तदिन्द्र ते वशे।

என்ற மந்திரத்தைச்சொல்லி ஓர் அர்க்யம் விடவேண்டும். மத்தியாந்ஹத்தில் **माध्यान्हिककालातीतदोषप्रायश्चित्तार्घ्य प्रदानं करिष्ये** என்று சங்கற்பஞ்செய்து—

उद्घेदभीत्यस्य—श्रुतकक्षः ऋषिः, गायत्री च्छन्दः सूर्यो देवता, प्रायश्चित्तार्घ्यप्रदाने विनियोगः। (मन्त्रः) उद्घेदभिश्रुतामघम। वृषभं नर्यापसम्। अस्तारमेषि सूर्य।

என்ற மந்திரத்தைச் சொல்லி ஓர் அர்க்யம் விடவேண்டும். சாயங்காலத்தில் **सायं संध्याकालातीतदोष प्रायश्चित्तार्घ्यप्रदानं करिष्ये** என்று சங்கற்பஞ் செய்துகொண்டு

न तस्येत्यस्य—विश्वमनाः ऋषिः, उष्णिक् छन्दः, अग्निर्देवता, प्रायश्चित्तार्घ्यप्रनाने विनियोगः। (मन्त्रः) न तस्य मायया चन। रिपुरीशीतमर्त्यः। यो अग्नये ददाश हव्यदातिभिः॥

என்ற மந்திரத்தைச் சொல்லி ஓர் அர்க்யம் விடவேண்டும். பிறகு **ओं भूर्भुवस्वः** என்று சொல்லி ஜலத்தைக் கையிலெடுத்துத் தன்னைச் சுற்றிக்கொள்ளவேண்டும். பிறகு ஒருதடவைப் ஆசமனஞ் செய்து மூன்றுதடவைப் பிராணாயாமஞ் செய்யவேண்டும்; பிறகு சந்தியாதேவியைக் காலையில் காயத்ரீ என்றுப் பெயருள்ளவளாகவும், சிவப்பு நிறமுள்ளவளாகவும், பிரும்மாவின் ஸ்வரூபமுள்ளவளாகவும், மத்தியாந்ஹத்தில் சாவித்திரீ என்றுப் பெயருள்ளவளாகவும், வெண்ணிற முள்ளவளாகவும், ருத்திரனின் சுவரூபமுள்ளவளாகவும்; சாயங்காலத்தில் ஸரஸ்வதீ என்றுப் பெயருள்ளவளாகவும், கருப்பு நிறமுள்ளவளாகவும், விஷ்ணுவின் சுவரூபமுள்ளவளாகவும் தியானஞ் செய்துகொண்டு



असावादित्यो ब्रह्म। सोऽहमस्मि। ब्रह्मैवाऽहमस्मि।

என்ற மந்திரத்தைச் சொல்லி மார்பைத் தொட்டுகொள்ளவேண்டும் (இதன்பொருளை 75வது பக்கத்தில் பார்க்கவும்) பிறகு இரண்டுதடவை ஆசமனஞ் செய்து

आदित्यं तर्पयामि। सोमं तर्पयामि। अङ्गारकं तर्पयामि। बुधं तर्पयामि। बृहस्पतिं तर्पयामि। शुक्रं तर्पयामि। शनैश्चरं तर्पयामि। राहुं तर्पयामि। केतुं तर्पयामि। केशवं तर्पयामि। नारायणं तर्पयामि। माधवं तर्पयामि। गोविन्दं तर्पयामि। विष्णुं तर्पयामि। मधुसूदनं तर्पयामि। त्रिविक्रमं तर्पयामि। वामनं तर्पयामि। श्रीधरं तर्पयामि। हृषीकेशं तर्पयामि। पद्मनाभं तर्पयामि। दामोदरं तर्पयामि।

என்ற மந்திரத்தைச்சொல்லி நவக்கிரஹ தர்ப்பணமும் கேசவாதி தர்ப்பணமுஞ் செய்யவேண்டும். (இதன் கருத்து 75வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது) பிறகு ஒருதடவை ஆசமனஞ் செய்து முடிவில் **श्रीकृष्णार्पणमस्तु** என்றும், **ओं तत्सद्ब्रह्मार्पणमस்तु** என்றும் சொல்லித் தீர்த்தத்தைக் கீழே விடவேண்டும்.

குறிப்பு—நவக்கிரஹ தர்ப்பணமும் கேசவாதி தர்ப்பணமும் முடிந்தபிறகு ருக், யஜுஸ், சாமசாகிகளிற் சிலர் மூன்று சந்தியா காலங்களிலும் பின்வரும் தர்ப்பணங்களையும் செய்கின்றனர்—

यमाय नमः तर्पयामि। धर्मराजाय नमः तर्पयामि। मृत्यवे नमः तर्पयामि। अन्तकाय नमः तर्पयामि। वैवस्वताय नमः तर्पयामि। कालाय नमः तर्पयामि। सर्वभूतक्षयाय नमः तर्पयामि। औदुंबराय नमः तर्पयामि। दध्नाय नमः तर्पयामि। नीलाय नमः तर्पयामि। परमेष्ठिने नमः तर्पयामि।

वृकोदराय नमः तर्पयामि। चित्राय नमः तर्पयामि। चित्रगुप्ताय नमः तर्पयामि ॥

மேற்கண்ட தர்ப்பணங்களை ஒவ்வொரு தினத்திலுமாவது, கிருஷ்ணபக்ஷத்தில் சதுர்த்தசி திதியும் செவ்வாய்க்கிழமையுஞ்சேர்ந்து வரும் தினமாகிய கிருஷ்ணங்காரகசதுர்த்தசி தினத்திலாவது செய்யவேண்டுவது அவசியம். ஷெ தர்ப்பணங்களைச் செய்வதால் அபமிருத்யு தோஷம் விலகுவதுடன் ஆயுள்விருத்தி ஆரோக்யம் இவையுண்டாகுமென்று பிரபஞ்சசாரம் முதலிய மந்திர சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

ருக்வேதிகளின் சந்தியா வந்தனத்தின் ஒருபாகம் முற்றிற்று.

---

## காயத்திரீ ஜபம்

இனி மூன்று வேதிகளின் காயத்திரீ ஜபஞ் செய்யவேண்டியமுறை எழுதப்படுகின்றது. முதலில்

आब्रह्मलोकादाशेषादालोकालोकपर्वतात्।
ये वसन्ति द्विजा देवास्तेभ्यो नित्यं नमो नमः ॥

(பிரும்ம லோகம் முதல் ஆதிசேஷ லோகம் வரையிலும், லோகாலோகம் என்ற பர்வதம் வரையிலும் வஸிக்கின்ற தேவர் பிராம்மணர் எவர்களுண்டோ அவர்களுக்கு எப்பொழுதும் நமஸ்காரம்) என்றச் சுலோகத்தைச் சொல்லித்தேவர் பிராம்மணர் இவர்களை நமஸ்கரித்துக்கொண்டு, பிறகு

अपसर्पन्तु ते भूता ये भूता भुवि संस्थिताः।
ये भूता विघ्नकर्तारः तेगच्छन्तु शिवाज्ञया ॥
उग्रभूतपिशाचाद्या ये च वै भूमिभारकाः।
एतेषामविरोधेन ब्रह्मकर्म समारभे ॥



(எந்தப் பூதங்கள் பூமியில் இருக்கின்றனவோ அவைகள் சிவனுடைய ஆக்ஞையால் விலகட்டும். எந்தப் பூதங்கள் இடையூர் செய்கின்றனவோ அவைகளும் சிவனுடைய ஆணையால் வேறு இடம் போகட்டும். (2) பூமியைச் சுமக்கின்ற உக்கிரர், பூதம், பிசாசம் முதலியவை எவைகளுண்டோ அவைகளுக்குத் தீங்கு இழையாவண்ணமே ஜபம் என்ற கர்மத்தைச் செய்யத் தொடங்குகின்றேன்) என்றச் சுலோகரூபமான மந்திரங்களைச் சொல்லி இடதுகாலால் பூமியை மூன்றுதடவை தட்டவேண்டும்.

பிறகு ஆஸனக்கிரமம்.

संकल्प्यैवं जपेत्सम्यक् मन्त्रार्थगतमानसः।
कुशाजिनांबरेणाढ्यं कल्पयेदासनं बुधः ॥
सर्वसिद्ध्यै व्याघ्रचर्म ज्ञानसिद्ध्यै मृगाजिनम्।
नादीक्षितस्य गृहिणः कृष्णसाराजिनं स्मृतम् ॥
वस्त्रासनं रोगहरं कंबलं दुःखमोचनम्।
स्वस्तिकाद्यासनेनात्र विशेत्तत्र निराकुलः ॥
वीरासनं स्वस्तिकं वा बध्वाऽन्यतरदासनम्।
पद्मं वा मुक्तकं वापि बध्वा जपमथाचरेत् ॥

இவ்விதம் சங்கற்பஞ் செய்துகொண்டு மந்திரார்த்தத்தில் மனத்தை நிறுத்தி ஜபத்தைச்செய்ய முயற்சிக்கவேண்டும். முதலில் தர்ப்பை, அதன் மேல் மான் தோல், அதன் மேல் வஸ்திரம் இவைகளைப்போட்டு ஆசனத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். புலித்தோல் எல்லாவிதச் சித்தியையும் கொடுக்கும். மாந்தோல் க்ஞான சித்தியையளிக்கும். யக்ஞஞ்செய்து தீக்ஷிதர் என்ற பதவியைப் பெறுதப் பிராம்மணன் மாந்தோலையாசனமாயடையக்கூடாது. வஸ்திராஸனம் ரோகத்தைப் போக்கும். கம்பளம் துக்கத்தை விலக்கும். இவ்வித மாஸனத்திலமர்ந்து ஜபஞ் செய்யும்பொழுது ஸ்வஸ்திகம், வீரம், பத்மம், முக்தகம் முதலிய ஆஸனங்களிலொன்றை அனுசரித்து உட்காரவேண்டும்

(என்று இதன்கருத்து.) ஸ்வஸ்திகம் முதலிய ஆஸனத்தின் லக்ஷணம் பின்வருமாறு (1) துடைமுழந்தாட்களின் சந்தியில் வுவாக இரண்டுபாதங்களையும் வைத்து உட்காருவது "ஸ்வஸ்திகாஸனம்" எனப்படும். (2) ஒருபாதத்தை ஒருதுடையின் மீதும் மற்றொரு பாதத்தின்மேல் ஒரு துடையையும் வைத்துட்காருவது "வீராஸனம்" எனப்படும். (3) இரண்டு பாதங்களையும் இரு துடைகளின் மேல் வைத்துட்காருதல் எல்லா ஆஸனங்களுட் சிறந்த "பத்மாசனம்" எனப்படும். (4) ஸீவினீ (குஹ்யத்தின் கீழுள்ள சூத்திரம்) யை குல்ப (காலின்கணு) த்தால்பிடித்து வீற்றிருத்தல் "முக்தகாஸனம்" எனப்படும். இங்ஙனம் விரிக்கப் பட்ட யாதானுமோர் ஆஸனத்தில் அமர்ந்து சித்த சுத்தியை (மனத்திற்கு அசைவற்ற நிலையை) சம்பாதித்துக் கொள்ளவேண்டும். பிறகு

पृथिव्याः—मेरुपृष्ठः ऋषिः, अतलं छन्दः, कूर्मो देवता । आसने विनियोगः । (मन्त्रः) पृथ्वि त्वया धृता लोका देवित्वं विष्णुना धृता । त्वं च धारय मां देवि पवित्रं चासनं कुरु ॥

என்ற மந்திரத்தைச் சொல்லிப் பூதேவியைப் பிரார்த்தனை செய்துகொள்ளவேண்டும். (இதன் பொருள்) ஓ பூதேவியே உன்னால் லோகங்கள் சுமக்கப்படுகின்றன. ஓதேவியே நீ விஷ்ணுவால் சுமக்கப்படுகின்றாய். ஓதேவியே நீ என்னைச் சுமக்க வேண்டும். மேலும் எனது ஆசனத்தை (இருக்கும் ஸ்தலத்தை) பரிசுத்தமாகச் செய்வாயாக (எ - று) பிறகு

**गुरुभ्यो नमः** என்று சொல்லி இருகைகளாலும் நடுமார்பிலும் **गणपतये नमः, सरस्वत्यै नमः** என்று சொல்லி வலது தோளிலும் **दुर्गायै नमः क्षेत्रपालाय नमः** என்று சொல்லி இடது தோளிலும் **मातृकामन्त्ररूपिण्यै नमः** என்று சொல்லி இரண்டுகைகளைச் சேர்த்தும் நியாசஞ் செய்துகொண்டு **ब्रह्मैवाहमस्मि** என்று மனத்தால் தியானஞ் செய்யவேண்டும். பிறகு பூதசுத்தி செய்து கொள்ளவேண்டும். அதன் முறை பின்வருமாறு—



धर्मकन्दं ज्ञाननाळं वैराग्यकर्णिकं हृदयांबुजमुकुळं प्रणवेन विकसितं ध्यात्वा कर्णिकायां चैतन्यात्मकं जीवं प्लुतप्रणवोच्चारणेन सुषुम्नानाडी-मार्गेण निस्सार्य तज्जीवं द्वादशान्तस्थितसहस्रदळकमलनिष्ठपरमात्मना सह "हंसः" इति मन्त्रेण एकीकृत्य स्वशरीरस्थकल्मषजातं पुरुषाकारेण विचिन्त्य शोषण, दाहन, प्लावनतां कुर्यात् ।

ब्रह्महत्याशिरस्कं च स्वर्णस्तेयभुजद्वयम् ।
सुरापानहृदा युक्तं गुरुतल्पकटिद्वयम् ॥
तत्संयोगपदद्वंद्वं प्रत्यङ्गसमपातकम् ।
उपपातकरोमाणं नव श्मश्रुविलोचनम् ॥
खड्गचर्मधरं कृष्णं कुक्षौ पापं विचिन्तयेत् ।

तं पापपुरुषं नाभिदेशस्थितषट्कोणान्तर्गतं "यम्" इति वायुबीजेन वायुना शोषयित्वा, पुनस्तं त्रिकोणगतं "रम्" इति अग्निबीजोत्थितवन्हिना दाहयित्वा तद्भस्म दक्षिणनासापुटान्निस्सार्य हृन्मध्यस्थार्धचन्द्राकाराऽमृतमण्डलान्तस्थं "वम्" इत्यमृतबीजोत्थितया अमृतधारया निष्कल्मषं स्वशरीरमाप्लाव्य शुद्धिं कृत्वाद्वादशान्तनीतमात्मानं सुषुम्नानाडीमार्गेण हृदयकमले "सोऽहम्" इति मन्त्रेण स्थापयेत् ।

(இ - ள்) தர்மத்தைக் கிழங்காகவும், ஞானத்தைத் தண்டாகவும் வைராக்யத்தைக் கர்ணிகை (தாது) யாகவு முடைய ஹிருதயாம்புஜத்தின் மொக்கை பிரணவத்தினால் மலர்ந்ததாக த்யானஞ் செய்துகொண்டு அதன் கர்ணிகையிலிருக்கின்ற சைதன்ய வடிவமான ஜீவனை *ப்லுதமாய் பிரணவத்தைச் சொல்லுவதால் இடைபிங்கலை என்ற நாடிகளுக்கிடையிலுள்ள ஸுஷும்னா நாடிவழியாக வெளிக்கிளப்பி இந்த ஜீவனை த்வாதசாந்தம் எனப்

* மூன்று மாத்திராகாலம் பிரணவத்தை யுச்சரிப்பது "ப்லுதப் பிரணவோச்சாரணம்" எனப்படும்.

படும் இடத்திலிருக்கின்ற ஆயிரம் இதழுள்ள கமலத்திலிருக்கின்ற பரமாத்மாவுடன் "हंसः" என்ற மந்திரத்தால் ஒன்று சேர்த்துப் பிறகு தனது சரீரத்திலிருக்கின்ற பாபசமூஹத்தைப் புருஷ ரூபமுள்ளதாக எண்ணி உணங்குதல், பொசுக்குதல், நனைத்தல் என்ற இவைகளைச்செய்து போக்கடிக்க வேண்டும். அதாவது—பிரும்மஹத்தி என்ற பாபத்தைத் தலையாகவுடையவனாகவும், சுவர்ணஸ்தேயத்தாலுண்டகும் பாபத்தை இரண்டு கைகளாயுடையவனாகவும், சுராபானத்தாலுண்டாகும் பாபமாகிற மனத்துடன் கூடினவனாகவும், குருபத்தினியைப் புணருவதாலுண்டாகும் பாபத்தை இரண்டு பின்தட்டுகளா யுடையவனாகவும், மேற்கூறிய நான்குவிதப்பாபங்களைச் செய்தவர்களுடன் சேருவதாலுண்டான பாபத்தை இரண்டு பாதங்களா யுடையவனாகவும், சமபாதகம் என்ற பாபத்தை மற்ற அங்கங்களாயுடையவனாகவும், உபபாதகம் என்ற பாபத்தை உரோமங்களாயுடையவனாகவும், ஜாதிப் பிரம்சகரம் முதலிய 9 வித பாபங்களை மீசைகளாயுடையவனாகவும் கண்களாயுடையவனாகவும் பாப புருஷனை நினைத்து அவனை வயிற்றிலிருப்பதாகத் தியானித்துக்கொண்டு, அதிலும் தொப்பிள் பிரதேசத்திலிருக்கின்ற காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறுகோண தேவதைகளால் பிரகாசிக்கின்ற ஷட்கோண சக்கிரத்திலிருப்பதாக் த்யானித்து यम् என்ற வாயுவின் பீஜாக்ஷரத்தால் வாயுவை த்யானித்து அதனால் ஒணங்கப்படுபவனாகஷ்டி பாபபுருஷனை த்யானிக்கவேண்டும். பிறகு அப்பாப புருஷனை ஹிருதய தேசத்திலிருக்கின்ற திரிகோண சக்கிரத்தையடைந்தவனாக த்யானித்து रम् என்ற அக்கினி பீஜத்தை யுச்சரிப்பதாலுண்டான அக்னியால் பொசுக்கி, பொசுக்கின அந்தச் சாம்பலை வலதுபக்கத்து நாசித்வாரம் வழியாக வெளியில் விட்டு, பிறகு ஹிருதயத்தின் மத்தியிலிருக்கின்ற அர்த்த சந்திர வடிவமான அமிருத மண்டலத்திலிருக்கின்ற वम् என்ற அமிருத பீஜத்தை யுச்சரிப்பதால் உண்டான அமுதப்பெருக்கால் தனது சரீரம் நனைவு பெற்றிருப்பதாக த்தியானித்தல் மூலம் ஒருவித பாபமுமற்றதாகவும், சுத்தமானதாகவும் எண்ணிக்கொண்டு,



பிறகு துவாதசாந்தம் என்ற விடத்தில் பரமாத்மாவுடன் சேர்த்துவைத்த ஜீவாத்மாவை சுஷும்னு நாடிவழியாகவே सोहम् என்ற மந்திரத்தால் ஹிருதய கமலத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும். இவ்விதஞ் செய்வது பூத சுத்தி எனப்படும்.

குறிப்பு—இவ்விதப் பூத சுத்தியை ஒவ்வொரு தினமுஞ் செய்வதால் பாபம் விலகுவதுடன், இம்மாதிரியான பாபகாரியத்தில் பிரவிருத்தி மறுபடியு முண்டாகாமலிருப்பதற்கும் இது சாதனமாகின்றபடியால் இதை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். இவ்விதம் பூதசுத்தியைச் செய்துகொண்டு பிறகு பிராணப்ரதிஷ்டைசெய்து கொள்ளவேண்டும். அதன்முறையைப் பின்வரும் தேவபூஜை என்றப் பிரகாணத்தில் கண்டுகொள்க. பிறகு

शुक्लांबरधरं........ये। ओं भूः × सुवरोम्। ममो पात्त × प्रीत्यर्थं प्रातस्संध्यागायत्रीमहामन्त्रजपं करिष्ये என்று காலையிலும், माध्यन्दिनसंध्यागायत्री महामन्त्रजपं करिष्ये என்று மத்தியாஹ்னத்திலும் सायंसंध्यागायत्रीमहामन्त्रजपं करिष्ये என்று சாயங்காலத்திலும் சங்கற்பஞ் செய்து கொள்ளவேண்டும். பிறகு प्रणवस्य ऋषिर्ब्रह्मा × भूर्भुवस्सुवरोम् என்றதுவரை 40வது பக்கத்திற் சொல்லியபடி சொல்லி 10 தடவை பிராணாயாமஞ் செய்யவேண்டும். ஆனால் ஜப காலத்தில் பிராணாயாமஞ் செய்யும்பொழுது निचृद्गायत्रीछन्दः என்று மாற்றிக் கொள்ளவும். பிறகு

अयात्वित्यनुवाकस्य—वामदेव ऋषिः, अनुष्टुप् छन्दः, गायत्री देवता, आवाहने विनियोगः। (मन्त्रः) ओं आयातु वरदा देवी अक्षरं ब्रह्मसंमितम्। गायत्रीं च्छन्दसां मातेदं ब्रह्म जुषस्व मे*। यदन्हात्कुरुते पापं तदन्हात्प्रतिमुच्यते। यद्रात्र्यात्कुरुते पापं तद्रात्रियात्प्रतिमुच्यते। सर्ववर्णे महादेवि संध्याविद्ये सरस्वति। ओजोऽसि सहोसि बलमसि भ्राजोऽसि

---

* என்று படிப்பதும் சம்பிரதாயத்தி லிருக்கின்றது.

देवानां धाम नामासि विश्वमसि विश्वायुस्सर्वमसि सर्वायुरभिभूरों गायत्रीमावाहयामि (इति प्रातः) सावित्रीमावाहयामि (इति मध्यान्हे) सरस्वतीमावाहयामि (इतिसायम्) ॥

(ப - ரை) वरदा=உபாஸகர்களுக்கு விரும்பிய பலன்களைத் தருகின்றவளும் अक्षरम्=நாசமற்றவளும் ब्रह्मसंमितम्—ब्रह्म=வேதாந்தப் பிரமாணம் ஒன்றினால்மட்டும் संमितम्=நன்கு அறியப்பட்டவளும் छन्दसाम्=எல்லா வேதங்களுக்கும் माता=தாய்போன்றவளும் देवी=நித்யானந்த முள்ளவளுமான गायत्रीम्=*காயத்திரியின் அபிமானிதேவதை आयातु=அனுக்கிரஹிக்கவேண்டி எனது அருகில் வரட்டும். (आगत्य=வந்து) मे=என்னுடைய इदम्=இந்த ब्रह्म=ஸ்தோத்திரத்தை जुषस्व=அங்கீகரிப்பாளாக सर्ववर्णे=எல்லா அக்ஷரசுவரூபியும் संध्याविद्ये=சாயம் பிராதச் சந்தியிற் செய்யப்படும் உபாஸனரூபமான வித்யாஸ்வரூபியும் सरस्वति=சரஸ்வதீரூபியுமான ஓ காயத்திரியின் அபிமானி தேவதையே (त्वदुपासकः=உன்னை யுபாஸிக்கின்றவன்) अन्हात् = பகலில் यत्=யாதொரு पापम्=பாபத்தை कुरुते=செய்கிறானோ तत्=அந்தப் பாபத்தினின்றும் अन्हात्=பகலில் प्रतिमुच्यते=விடுபடுகிறான். रात्र्यात्= இரவில் यत्=யாதொரு पापम्=பாபத்தை कुरुते=செய்கின்றானோ तत्=அந்தப் பாபத்தினின்றும் रात्र्यात्=இரவில் प्रतिमुच्यते=விடுபடுகிறான். (हेगायत्रि=ஓ காயத்திரியே ! त्वम्=நீ) ओजः=பலத்திற்கு ஹேதுவான 8வது தாதுரூபமாக असि=இருக்கிறாய். सहः=சத்துருக்களையடக்கும் சக்திரூபமாக असि=இருக்கிறாய். बलम्=சரீரத்திற்குரிய சக்திவடிவமாக असि=இருக்கின்றாய். भ्राजः=காந்திவடிவமாக असि=இருக்கின்றாய் देवानाम्=அக்னி இந்திரன் முதலிய தேவர்களுக்கு धामनाम=தேஜோரூபமான யாதொரு பெயருண்டோ அந்தவடிவமாக असि=இருக்கின்றாய். विश्वम्=எல்லா லோகமாகவும் असि=இருக்கின்றாய் विश्वायुः=சம்பூர்ண ஆயுள் சுவரூபையாகவும் असि=இருக்கின்றாய் सर्वम्=எல்லாப் பொருள்

* வேதமாகையால் பிரதமாவிபக்திக்குப் பதிலாகத்விதீயா விபக்தி உபயோகிக்கப்பட்டிருக்கிறது.



களின் வடிவமாகவும் असि=இருக்கின்றாய். सर्वायुः=எல்லோருடைய அயுளுக்குக்காரணமாகவும் असि=இருக்கின்றாய். अभिभूः= எல்லாப் பாபத்தையும் நாசஞ் செய்கின்றவளாகவும் ओम्=பரமாத்மாவின் சுவரூபையாகவும் असि=இருக்கின்றாய். (तादृशीम्= அத்தகைய மஹிமைவாய்ந்த) गायत्रीम्=காயத்திரீதேவியை आवाहयामि=மனத்தில் வந்து வஸிக்கும்படிச் செய்கிறேன். सावित्रीम्=சூரியனுக்கும் பிரகாசத்தைத்தரும் தேவியை आवाहयामि= மனத்தில் வந்து வஸிக்கும்படிச் செய்கிறேன். सरस्वतीम्=வாக்ரூபியான தேவியை आवाहयामि=மனத்தில் வந்து வஸிக்கும்படிச் செய்கிறேன்.

பிறகு பின்வருவனவற்றைச் சொல்லி கரந்யாசம், அங்கந்யாஸமிவைகளைச் செய்யவேண்டும்.

गायत्र्या ऋषिर्विश्वामित्रः, निचृद्गायत्री च्छन्दः, सविता देवता, जपे विनियोगः என்று காலையிலும், மத்தியாந்ஹத்திலும் சொல்லிக் கொள்ளவும். மாலையில் மட்டும் परमात्मादेवता என்று மாற்றிக் கொள்ளவும். ओं भूः, अङ्गुष्ठाभ्यां नमः। ओंभुवः, तर्जनीभ्यां नमः। ओंसुवः, मध्यमाभ्यां नमः। तत्सवितुर्वरेण्यम्, अनामिकाभ्यां नमः। भर्गो देवस्य धीमहि, कनिष्ठिकाभ्यां नमः। धियो यो नः प्रचोदयात्, करतलकरपृष्ठाभ्यां नमः। [इति करन्यासः] अथाङ्गन्यासः—ओंभूः, हृदयाय नमः, ओंभुवः, शिरसे स्वाहा। ओंसुवः, शिखायै वषट्। तत्सवितुर्वरेण्यम्, कवचाय हुम्। भर्गो देवस्य धीमहि, नेत्रत्रयाय वौषट्। धियो यो नः प्रचोदयात्, अस्त्राय फट्। परोरजसेऽसावदोम्, इति सर्वाङ्गे ॥

கரன்யாசஞ் செய்யவேண்டிய முறையும் அதன்பொருளும் எழுதப்படுகின்றது. ओंभूः, अङ्गुष्ठाभ्यां नमः என்று சொல்லி இரண்டு கைகளின் ஆள்காட்டி விரலின் நுனியால் இரண்டு கட்டை விரல்களை அடிமுதல் நுனிவரைத் தடவிக்கொள்ளவேண்டும். ओं भुवः, तर्जनीभ्यां नमः என்று சொல்லி இரண்டு கட்டைவிரல்களின் நுனியால் இரண்டு ஆள்காட்டி விரல்களை அடி

முதல் நுணிவரைத் தடவவேண்டும். ओंस्सुवः मध्यमाभ्यां नमः என்று சொல்லி இரண்டு கட்டைவிரல்களின் நுணியால் இரண்டு நடுவிரல்களை அடிமுதல் நுணிவரைத் தடவவேண்டும் ओं तत्सवितुर्वरेण्यम्, अनामिकाभ्यां नमः என்று சொல்லி இரண்டு கட்டை விரல்களின் நுணியால் இரண்டு பவித்திரவிரல்களை அடிமுதல் நுணிவரைத் தடவவேண்டும். भर्गोदेवस्यधीमहि, कनिष्ठिकाभ्यां नमः என்று சொல்லி இரண்டு கட்டைவிரல்களின் நுணியால் இரண்டு சுண்டிவிரல்களை அடிமுதல் நுணிவரைத் தடவவேண்டும். धियो यो नः प्रचोदयात् करतलकरपृष्ठाभ्यांनमः என்று சொல்லி இரண்டு கைகளிலுள்ள விரல்களையெல்லாம் ஒன்று சேர்த்து இரண்டு கைகளின் உள்ளங்கை, புரங்கை இவைகளைத் தடவிக் கொள்ளவேண்டும். இவ்விதஞ் செய்வது கரன்யாசம் எனப்படும்.

கரன்யாசத்தின் தாத்பர்யம்—ओम्=பிரணவத்தின் பொருளான பரமாத்மாவின் சரீரமான भूः=பிருதிவீ தத்துவாபிமானி தேவதை अङ्गुष्ठाभ्याम्=உபாஸகனை யனுக்கிரஹிப்பதற்காக இரண்டு கட்டை விரல்களிலும் வந்து வசிப்பதால் பிருதிவீ தத்துவாபிமானி தேவதைக்கு இருப்பிடமான இரண்டு கட்டை விரல்களுக்கும் नमः=நமஸ்காரம். ओम्=பிரணவத்தின் பொருளான பரமாத்மாவின் சரீரமான भुवः=ஆகாச தத்துவாபிமானி தேவதை तर्जनीभ्याम्=உபாஸகனை யனுக்கிரஹிப்பதற்காக அவ்வப்பொழுது ஆள்காட்டிவிரலில் வசிப்பதால் ஆகாச தத்துவாபிமானி தேவதைக் கிருப்பிடமான இரண்டு ஆள்காட்டி விரல்களுக்கும் नमः=நமஸ்காரம். ओम्=பிரணவத்தின் பொருளான பரமாத்மாவின் சரீரமான सुवः=வாயு தத்துவாபிமானி தேவதை मध्यमाभ्याम्=இரண்டு நடுவிரல்களிலும் வந்து வசிப்பதால் வாயு தத்துவாபிமானி தேவதையின் இருப்பிடமான இரண்டு நடுவிரல்களுக்கும் नमः=நமஸ்காரம். तत्सवितुर्वरेण्यम्=ஜகத்தையுண்டுபண்ணின பரமாத்மாவின் சரீரமான தேஜஸ் தத்துவத்தின் அபிமானி தேவதை आनामिकाभ्याम्=இரண்டு பவித்திர விரல்களில் வந்து வஸிப்பதால் தேஜஸ் தத்துவத்திற் கபிமானி தேவதைக் கிருப்பிடமான பவித்திர விரல்களுக்கு नमः=நமஸ்காரம். भर्गोदेवस्य



धीमहि=சர்வ வியாபகமான அப்தத்துவாபிமானி தேவதை कनिष्ठिकाभ्याम्=சுண்டி விரல்களில் வசிப்பதால் அப்தத்துவாபிமானி தேவதைக் கிருப்பிடமான சுண்டி விரல்களுக்கு नमः=நமஸ்காரம். धियो योनः प्रचोदयात् பஞ்சபூத காரணமானதும் பஞ்ச தத்துவாபிமானி தேவதைகளைச் சரீரமாயுடையது மான பரமாத்மா பஞ்சபூதங்களுக்கு உள்ளிலும் வெளியிலும் வசிக்கின்றார் என்ற புத்தியை அவரே பிரேரணை செய்கின்றார் என்ற மந்திரத்தைச் சொல்லி பஞ்ச தத்துவாபிமானி தேவதைகளைத் தனித்தனியே நியாசஞ்செய்த ஐந்து விரல்களையு மொன்றுசேர்த்து இரண்டு கைகளிலுமுள்ள உள்ளங்கை புறங்கை இவைகளைத் தடவவேண்டும்.

இதன் கருத்து—தத்தமது கர்மங்காரணமாக பாஞ்சபௌதிகமான இந்தச் சரீரத்தையடைந்த ஒவ்வொரு ஜீவனும், பஞ்ச தத்துவாபிமானி தேவதைகளையும், அவைகளைச் சரீரமாயுடைய பரமாத்மாவையும் ஆராதனஞ் செய்யும் வாயிலாகச் சகலக்ஷேமங்களையுமடைய வேண்டுமென்பதே.

சங்கை—சரீரம் முழுதும் பஞ்ச பூதங்களாலேயே ஏற்பட்டிருப்பது பற்றி மேற்கண்ட மந்திரங்களைச் சொல்லி கால்விரல்களில் ஏன் நியாசஞ் செய்யக்கூடாது ?

உத்தரம்—சரீரம் பஞ்ச பூதங்களாலுண்டானதாயினும் பஞ்சபூதகார்யமான சரீராவயவங்களுள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு இருக்கின்றதென்பதை நாம் அனுபவமூலம் ஒற்றுக் கொள்ளவேண்டும். உலகில் நமது நண்பனுக்கு நமது கையால் மாலைபோட்டு மரியாதை செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் சரீரத்திலுள்ள எந்த அவயமும் பஞ்சபூதங்களா லுண்டானது தானேஎனக் கருதி காலால்மாலையை எடுத்து மார்பிலிடலாமா? அவ்விதம் காலால் போடுவதை அவன் மரியாதையாகக் கொள்வானா? அதுபோலவே சாஸ்திரங்களிற் சொல்லியபடி கைகளில்த்தான் ஷடி நியாசங்களைச் செய்யவேண்டுமே யல்லாது கால் விரல்களில் செய்யக்கூடாது என்று கொள்ளவும். மேலும்

கவர்னர் முதலிய பெரிய அதிகாரி வெளிவந்தால் அவருடைய ஆள்கைக் குட்பட்டவரும், அவரிடம் வேலைபார்த்து அவருடையப் பிரீதியைச் சம்பாதிக்க வெண்ணங் கொண்டவருமான கீழ், அதிகாரிகள் யாவரும் அக்கவர்னருக்கு ஒன்று தானுபினும் போலீஷ்வழியில் வேலை பார்ப்புவர்கள் கவர்னரைக் கண்டதும் இரண்டு கால்களையு மொன்றுசேர்த்து இடது கையை முழங் கால்வறைத் தொங்கவிட்டு வலது கையை உயரத்தூக்கி உள்ளங் கை வெளியில் தெரியும்படி நெற்றியில்வைத்து மர்யாதை செய்ய வேண்டு மென்றும், மற்ற முனிசிப் முதலிய அதிகாரிகள் சாதாரணமாய் சலாம்போட்டாலே போதுமானது என்று முள்ள லோகானுபவத்தைக் காண்கிறோமே? இதில் போலீஸ் அதிகாரிகள் தாம் செய்யவேண்டிய முறைதவறிச் செய்தார்களேயானுல் மேல் அதிகாரிக்குப் பிரீதியை யுண்டு பண்ணுததுடன் அவருடைய கோபத்திற்கு மாளாகிவிடுகின்றனர் "எவனும் எதிலும் முறைதவறிச் செய்தல்தகா" என்ற ராஜாக்ஞையே இதற்குக் காரணமாகின்றது. இவ்விதமே இந்தத்தியான காரியத்திலும் கர்மபல தாதாவான ஸ்ரீமந்நாராயணனுடைய ஆஞையான சாஸ்திரத்திற் சொல்லியபடி கைகளில்தான் அவ்விதம் நியாசஞ் செய்யவேண்டு மென்றும், கால்விரல்களிற் செய்தல் தகா வென்றும், கைகளிற் செய்தாலல்லாது அவர்களின் பிரீதியை நாம் அடைதல் முடியாதென்றும் சாஸ்திரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

இதுவரை கரன்யாசத்தைப்பற்றிச் சொன்னேம்.

இனி அங்கந்யாசத்தைப்பற்றிச் சொல்லுவாம்.

हृदयशिरसोशिशखायां कवचाक्ष्यस्त्रेषु सहचतुर्थीषु ।
नत्या हुत्या च वषट् हुंवौषट्फट्पदैः षडङ्गविधिः ॥

என்ற பிரபஞ்சசார வசனப்படியும்

अङ्गुलीभिश्चतसृभिः द्वयोर्हृदयशीर्षयोः ।
मुष्टेरङ्गुष्ठशिरसा पश्चिमे तस्य वर्मभिः ॥



द्वाभ्यांकराभ्यां दृक्फालमध्ये मध्याङ्गुलैस्त्रिभिः ।
अङ्गुष्ठतर्जन्यग्राभ्यां सशब्दं दिक्षुपार्श्वयोः ॥
षडङ्गन्यासमित्युक्तमिदमेतत्प्रकाशतः ॥

एवं विन्यस्य गायत्रीमावाह्य च यथाविधि ।
ध्यात्वोपचारं सकलं कृत्वाऽथो जपमाचरेत् ॥

ஹிருதயம், சிரஸ் இவைகளில் **हृदयायनमः**, **शिरसेस्वाहा** என்று சொல்லிக் கட்டை விரலை நீக்கி பாக்கியுள்ள நான்கு விரல்களாலும் நியாசஞ் செய்துகொள்ளவேண்டும். கட்டை விரலைத்தவிர்த்து பாக்கியுள்ள நான்குவிரல்களையும் மடக்கினுல் அது "முஷ்டி" எனப்படும். அவ்விதம் முஷ்டியைச் செய்துகொண்டு மடக்கப்படாத கட்டை விரலின் நுனியால் **शिखायैवषट्** என்றதைச் சொல்லி சிகையின் நுனியில் நியாசஞ் செய்துகொள்ளவேண்டும். முற்கூறியபடி முஷ்டியாக்கிக் கொண்ட இரண்டு கைகளையும் மாற்றிக்கொண்டு **कवचाय हुम्** என்று சொல்லி கவசந்யாஸஞ் செய்துகொள்ளவேண்டும். கட்டைவிரல் சுண்டிவிரல் இரண்டையும் நீக்கி மீதமுள்ள மூன்று விரல்களுள் பவித்திரவிரல் ஆள்காட்டிவிரல் இவைகளால் இரண்டுகண்களிலும்; நடுவிரலால் நெற்றியிலும் **नेत्रत्रयाय वौषट्** என்றதைச்சொல்லி ந்யாஸஞ் செய்து கொள்ளவேண்டும். கட்டைவிரல் ஆள்காட்டிவிரல் இவைகளின் நுனியால் சப்தத்துடன் கூடி இருக்கும்படி செய்து சரீரத்தின் இருபக்கங்களிலும் **अस्त्राय फट्** என்றதைச்சொல்லி சுற்றிக்கொள்ள வேண்டும். இவ்விதஞ் செய்வது சரீரத்திற்கு வெளியிற் செய்யப்படும் நியாஸங்களில் "ஆறு அங்க நியாஸம்" எனப்படும். இவ்விதமங்கந்யாஸஞ் செய்துபிறகுக் காயத்திரியைத் தியானஞ் செய்யவேண்டும். பிறகு உபசாரங்களைச் செய்து ஜபஞ்செய்யவேண்டும். என்ற பாரத்வாஜரின் வசனப்படியும் ஆறு அங்கந்யாசங்களை அததற்குச் சொல்லிய முறை தவறாது விரல்முதலிய வற்றால் செய்யவேண்டும்.

**हृदयाय नमः** என்றது முதலிய மந்திரங்களைச் சொல்லி ஆறு அங்கங்களைத் தொடவேண்டும் என்று சொன்னதின் கருத்து

என்னே? எனின் பிரபஞ்சசாரம் என்ற மந்திரசாஸ்திரத்தில் 6வது படலத்தில் 7வது சுலோகம் முதல் 12½சுலோகம் வரை ஷெ விஷயமாய் உபதேசிக்கப் பட்டிருப்பதைப்பற்றி இங்கு கூறுவாம்.

हृदयं बुद्धिगम्यत्वात्प्रणामस्स्यान्नमः पदम् ।
क्रियते हृदयेनातो बुद्धिगम्या नमस्क्रिया ॥

அறிவுக்குப் புலப்படுவதுபற்றி **हृदयम्** என்றபதம் பரமாத்மாவைக்குறிக்கும் **नमः** என்றபதம் நமஸ்காரத்தைக் குறிக்கும். ஆனது பற்றியே அறிவுக்கெட்டிய பரமாத்மாவைக் குறித்து வணக்கமானது, ஹிருதயம் என்ற மாம்ச பிண்டமிருக்கின்ற நடுமார்பில் நியாசஞ் செய்வதா லனுஷ்டிக்கப்பட்டதா யாகின்றது.

तुङ्गार्थत्वाच्छिरः स्वे स्वे विषयाहरणे द्विठः ।
शिरोमन्त्रेण चोत्तुङ्गविषयाहृतिरीरिता ॥

உயர்ந்த புருஷார்த்த ரூபமாயிருப்பதுபற்றி **शिरः** என்ற பதத்தால் பரவஸ்து சொல்லப்படும். **द्विठः (स्वाहा)** என்ற பதம் தனக்குரிய விஷயானுபவத்தைக் குறிக்கின்றது. ஆகவே **शिरसे स्वाहा** என்ற மந்திரத்தால் உயர்ந்த விஷயமான புருஷார்த்தானுபவஞ் சொல்லப்பட்டதாயாகின்றது பற்றி சரீரத்தில் உத்தம அங்கமான சிரஸ்ஸில் நியாஸஞ் செய்யப்படுகின்றது.

शिखा तेजस्समुद्दिष्टा वषडित्यङ्गमुच्यते ।
तत्तोजोऽस्य तनुः प्रोक्ता शिखामन्त्रेण मन्त्रिणः ॥

**शिखा** என்றபதம் ஒளியைக்குறிப்பிடும். **वषट्** என்றபதம் அங்கத்தைக்குறிக்கும். அந்தத் தேஜஸ்ஸானது (ஒளியானது) மந்திரப் பிரதிபாத்யமான இந்தவஸ்து வினுடைய சரீரமாகச் சொல்லப் பட்டதாயாகின்றது. ஆனதுபற்றியே சரீரத்திற்குள்ளிருக்கும் முக்யமான உஷ்ணபாகத்தை வெளிவிடாமலும் வெளியிலுள்ள



உஷ்ணத்தை உள் விடாமலும் தடை செய்துகொண்டிருக்கும் சிகையில் நியாசஞ் செய்யப்படுகின்றது.

कवग्रहण इत्यस्माद्धातोः कवचसंभवः ।
हुं तेजः तेजसा देहो गृह्यते क्रवचं ततः ॥

**कव** என்ற தாதுவுக்குக் கிரஹிப்பது என்று பொருள். அந்தத் தாதுவினிடமிருந்து **कवच** என்ற சப்தமுண்டாகின்றது. **हुम्** என்ற பதத்திற்கு தேஜஸ் என்று பொருள். ஆகவே இம்மந்திரத்தை ஜபிப்பதால் மந்திரத்தின் பொருளான தேவதையின் தேஜஸ்ஸினுல் இவனது சரீரம் கிரஹிக்கப்படுகின்றது. ஆனதுபற்றி கவசம் எனப்படும்.

नेत्रं दृष्टिस्समुद्दिष्टा वौषट् दर्शनमुच्यते ।
दर्शनं दृशि येन स्यात्तत्तेजो नेत्रवाचकम् ॥

**नेत्रम्** என்பது பார்வையைக்குறிக்கும். **वौषट्** என்பது அதனுலுண்டாகும் அறிவைக்குறிக்கும். மந்திரத்தின் பொருளான எந்தப் பரமாத்ம வஸ்துவினுல் கண்ணின் பார்வைமூலம் அறிவுண்டாகின்றதோ தேஜோரூபியான (சைதன்ய வடிவமான) அந்த வஸ்துவையே **नेत्रम्** என்றபதம் குறிப்பிடும்.

असुत्रसादिकौ धातू स्तः क्षेपचलनार्थकौ ।
ताभ्यामनिष्टमाक्षिप्य चालयेत्फट्पदाग्निना ॥

**असु** என்றும் **त्रस** என்றும் இரண்டு தாதுக்களுக்கும் முறையே அசைத்தலும், தள்ளுதலும் பொருள். **असु, त्रस** என்ற தாதுவாலுண்டான **अस्त्रम्** என்ற பதத்தால் எல்லாவிதமான அனர்த்தத்திற்கும் மூலகாரணமான அக்ஞானத்தை அசைத்துத்தள்ளி **फट्** என்ற பதத்தால் குறிக்கப்படும் அக்னியால் (சைதன்யத்தால்) பொசுக்கவேண்டும்.

अङ्गमन्त्रा इमे प्रोक्तास्सर्वमन्त्रेषु सूरिभिः ।

எல்லா மந்திரங்களிலும் முற்கூறியவைகளே அங்கமந்திரங்களெனப் பண்டிதர்களாற் சொல்லப்படுகின்றது. இவ்விதம் கரன்யாஸம் அங்கந்யாஸம் இவைகளைச் செய்துகொண்டுப் பிரணவம், வியாஹிருதி, காயத்திரீ என்ற மந்திரங்களால் சொல்லப்படும் தேவதைகளைப் பின் உபதேசிக்கும் முறைப்படித் தியானஞ் செய்யவேண்டும். பிரணவத்தியானமாவது—

विष्णुं भास्वत्किरीटाङ्गदवलयगळाकल्पहारोदरांघ्रि
श्रोणीभूषंसुवक्षोमणिमकुटमहाकुण्डलामण्डिताङ्गम् ।
हस्तोद्यच्छंखचक्रांबुजगदममलं पीतकौशेयवीतं
विद्योतद्भासमुद्यद्दिनकरसदृशं पद्मसंस्थं नमामि ॥

(இ - ள்) பிரகாசிக்கின்ற கிரீடம், தோள்வளை, கைவளை, கழுத்திலணியும் நகை, முத்துமாலையுடன் கூடிய வயிறு, இடையில் ஒட்டியாணம் இவையுள்ளவரும், அழகியமார்பு, இரத்னங்களிழைத்த கிரீடம், விலையுயர்ந்த கர்ணகுண்டலம் (காதிலணியும் நகை) இவைகளா லலங்கரிக்கப்பட்டவரும், கையால் உயரெடுக்கப்பட்ட சங்கம், சக்கிரம், தாமரைப்பூ, கதை, இவைகளையுடையவரும், தோஷ குணங்களற்றவரும், பீதாம்பரம்தரித்தவரும், மிக்கப்பிரகாசிக்கின்ற காந்தியுள்ளவரும், உதயமாகின்ற சூரியனுக் கொப்பானவரும், பத்மாசனத்திலிருப்பவருமான விஷ்ணுவை வணங்குகின்றேன்.

வியாஹிருதித்தியானம்

स्वस्वोक्तवर्णतनवो रूपयौवनसंयुताः ।
क्षौमवस्त्रपरीधानास्सर्वाभरणभूषिताः ॥

दिव्यचन्दनलिप्ताङ्गा दिव्यमाल्यैरलंकृताः ।
सितोपवीतहृदयास्सपवित्राः चतुष्कराः ॥

उन्निन्द्रवदनांभोजप्रभामण्डलमण्डिताः ।



जटाकलापपूर्णेन्दुप्रभापूरितदिङ्मुखाः ।
अभयाक्षस्त्रगप्पात्रवरहस्तसरोरुहाः ॥

एवं होमे जपारंभे ध्येया व्याहृतयो द्विजैः ।

(தா - ம்) தத்தமக்குச் சொல்லப்பட்ட அக்ஷரங்களையே சரீரமாயுடையவர்களாகவும், ரூபம் யௌவனம் இவைகளுடன் கூடினவர்களாகவும், வெண்பட்டுடித்தியவர்களாகவும், எல்லா ஆபரணங்களாலு மலங்கரிக்கப்பட்டவர்களாகவும், மேலான சந்தனத்தால் பூசப்பட்ட சரீரமுள்ளவர்களாகவும், மேலான பூமாலையால் அலங்கரிக்கப்பட்டவர்களாகவும், வெளுத்தபூணூலைமார்பிலணிந்தவர்களாகவும், பவித்திரத்தைக் கையிலணிந்தவர்களாகவும், நான்குகைகளுள்ளவர்களாகவும், மலர்ந்ததாமரைப்பூ போன்ற முகத்தின்காந்தியால் சோபிக்கின்றவர்களாகவும், ஜடாமண்டலங்களில் தரிக்கப்பட்டுள்ள பூர்ண சந்திரனின் காந்தியால் திக்குகளையலங்கரிக்கின்றவர்களாகவும், அபயமுத்திரை, அக்ஷமாலை, ஜலபாத்திரம் (கமண்டலு) வரதானமுத்திரை இவைகளையுடைய தாமரைப்பூ போன்றகைகளையுடையவர்களாகவும், வியாஹிருதிகளின் அபிமானி தேவதைகள் பிராம்மணர்களால் ஹோமம் ஜபாரம்பம் இந்தக்காலங்களில் தியானஞ் செய்யத்தக்கவைகள் (எ-று) மேற்கூறியபடி மூன்று காலங்களிலும் தியானஞ் செய்ய வேண்டும். பிறகு

காலையில் காயத்திரியின் வியஷ்டித்தியானம்—

गायत्री, बाला, बालादित्यमण्डलस्था, रक्तवर्णा, रक्तांबरानुलेपन-स्रगाभरणा, चतुर्वक्त्रा, दण्ड-कमण्डलु-अक्षसूत्र अभयाङ्कचतुर्भुजा, हंसासनारूढा, ब्रह्मदेवत्या, ऋग्वेदमुदाहरन्ती, भूलोकाधिष्ठात्री, ब्रह्मात्मिका-देवता, हृदि साहमस्मि ब्रह्मैवाहमस्मि (इति प्रातः ।)

காயத்திரியின் அபிமானிதேவதை இளம்பருவத்திலுள்ளவளாகவும், இளஞ்சூரிய மண்டலத்திலிருப்பவளாகவும், சிவந்தநிறமுள்ளவளாகவும், சிவந்தவஸ்திரம், சந்தனம், மாலை ஆபரணம் இவை

களையணிந்தவளாகவும், நான்குமுகமுள்ளவளாகவும், தண்டம் கமண்டலு, ஜபமாலை, அபயமுத்திரை இவைகளைநான்குகைகளிலுள்ளவளாகவும், ஹம்சவாகனமேறியவளாகவும், பிரும்மாவைத் தேவதையாகவுடையவளாகவும், ருக்வேதத்தையுச்சரிப்பவளாகவும், பூலோகத்திற்கு அதிஷ்டான தேவதையாகவும், பிரும்ம சுவரூபமுள்ளவளாகவும் தியானஞ் செய்யத்தக்கவள். ஹிருதயத்தில் பிரகாசிக்கின்ற நான் (ஜீவன்) காயத்திரீயே, நான் (சுத்தஜீவன்) பிரும்மமாகவே இருக்கிறேன்.

மத்தியாந்ஹத்தில் காயத்திரியின் வியஷ்டித்தியானம்.

सावित्री युवतिः, युवादित्यमण्डलस्था, श्वेतवर्णा, श्वेतांबरानुलेपनस्रगाभरणा, पञ्चवक्त्रा, प्रतिवक्त्रं त्रिणेत्रा, पंचशेखरा, शूलखड्गखट्वाङ्गडमरुकाङ्कचतुर्भुजा, वृषभासनारूढा, रुद्रदेवत्या, यजुर्वेदमुदाहरन्ती भुवोलोकाऽधिष्ठात्री ब्रह्मात्मिकादेवता, हृदि साहमस्मि, ब्रह्मैवाहमस्मि (इति मध्यान्हे ।)

(தா - ம்) காயத்திரீ தேவதை மத்தியாந்ஹத்தில்சாவித்திரீ எனப்பெயரிவளாகவும், யுவதி என்றும், யௌவனசூர்ய :மண்டலத்திலிருப்பவளென்றும், வெண்ணிறமுள்ளவளென்றும் வெளுத்த வஸ்திரம், சந்தனம், மாலை, ஆபரணம் இவைகளுள்ளவளென்றும், ஐந்து முகமுள்ளவளென்றும், ஒவ்வொருமுகத்திற்கும் மூன்றுநேத்திர முள்ளவளென்றும், ஐந்து கிரீடமுள்ளவளென்றும், சூலம், கத்தி, கட்வாங்கம், டமருகம் இவையுள்ள நான்கு கைகளையுடையவளாகவும், விருஷபத்தின்மேல் உட்கார்ந்திருப்பவளாகவும், ருத்திரனை அதிதேவதையாகவுடையவளாகவும், யஜுர் வேதத்தைச் சொல்லிக்கொண்டிருப்பவளாகவும், பிரும்ம சுவரூபியாகவும் தியானஞ் செய்யத்தக்கவள். ஹிருதயத்திற் பிரகாசிக்கின்ற நான் (ஜீவன்) சாவித்திரியே நான் (சுத்தஜீவன்) பிரும்மமாகவே இருக்கிறேன்.

சாயங்காலத்தில் காயத்திரியின் வியஷ்டித்தியானம்.



सरस्वती, वृद्धा, वृद्धादित्यमण्डलस्था, श्यामवर्णा, श्यामांबरानुलेपनस्रगाभरणा, एकवक्त्रा, शंखचक्रगदापद्माङ्कचतुर्भुजा, गरुडासनारूढा विष्णुदेवत्या, सामवेदमुदाहरन्ती, स्वर्लोकाधिष्ठात्री, ब्रह्मात्मिकादेवता हृदि साहमस्मि, ब्रह्मैवाहमस्मि (इति सायम्,)

(தா - ம்) காயத்திரியானவள் சாயங்காலத்தில் சாஸ்வதி என்றுப் பெயரிவளென்றும், முதிர்ந்த சூரியமண்டலத்திலிருப்பவளென்றும், கருநிறமுள்ளவளென்றும், கருத்தவஸ்திரம், சந்தனம், மாலை, ஆபரணம் இவையுள்ளவளென்றும், ஒருமுகமுள்ளவளென்றும், சங்கம், சக்கிரம், கதை, பத்மம் இவைகளைத்தரித்திருக்கின்ற நான்கு கைகளை யுடையவளென்றும், கருடாசனத்திலேறி இருப்பவளென்றும், விஷ்ணுவை அதிஷ்டான தேவதையாகவுடையவளென்றும், சாமவேதத்தை உச்சரித்துக்கொண்டிருப்பவளென்றும், சுவர்க்கலோகத்தில் வஸிப்பவளென்றும், பிரும்மசுவரூபி என்றும் தியானஞ் செய்யத்தக்கவள். ஹிருதயத்தில் பிரகாசிக்கின்ற நான் சாஸ்வதியே. நான் சுத்தஜீவன் பிரும்மமாகவே இருக்கின்றேன். (எ - று)

இவ்விதம் மூன்று காலங்களிலும் வியஷ்டித்யானஞ் செய்துகொண்டு பிறகு காயத்திரியின் சமஷ்டித்தியானஞ் செய்யவேண்டும். அதுபின்வருமாறு—

मुक्ताविद्रुमहेमनीलधवलच्छायैर्मुखैस्त्रीक्षणै
युक्तामिन्दुकलानिबद्धमकुटां तत्वार्थवर्णात्मिकाम् ।
गायत्रीं वरदाऽभयाङ्कुशकशाश्शुभ्रं कपालं गुणं
शंखं चक्रमथारविन्दयुगलं हस्तैर्वहन्तीं भजे ॥

(தா - ம்) முத்து, பவழம், தங்கம், நீலம், வெளுப்பு இந்த நிறமுள்ளதும், மூன்றுகண்ணுள்ளதுமான முகங்களுடன் கூடியவளும், சந்திரகலையுடன் சம்பந்தித்த கிரீடமுள்ளவளும், தத்வார்த்தமுள்ளவர்ண (எழுத்து)ங்களின் சுவரூபியும், வரதான முத்திரை, அபயதான முத்திரை, அங்குசம், சாட்டை இவை

களையும், வெண்ணிறமான கபாலத்தையும், சங்கத்தையும், சக்கிரத்தையும், இரண்டுதாமரைப் புஷ்பத்தையும் கைகளிலணிந்திருப்பவளுமான காயத்திரியின் அபிமானி தேவதையைத் தியானஞ் செய்கின்றேன். (எ - று) பிறகு

तुरीयगायत्र्याः—विमल ऋषिः, तुरीयं च्छन्दः, परमात्मा देवता, मोक्षे विनियोगः। (मन्त्रः) परोरजसेऽसावदोम्॥

என்ற மந்திரத்தை மூன்று தடவை ஜபித்து, பிறகு **आध्यात्मिकाधिदैविकसाक्षिसच्चिदानन्दपरमात्मैवाहम्** - சரீரத்திலுள்ளதும், அதற்கு வெளியிலுள்ளதுமான எல்லாவஸ்துக்களுக்கும் சாக்ஷியும், உண்மையறிவானந்த வடிவமுமான பரமாத்மாவாகவே நானிருகிறேன் என்ற அதன் பொருளையும் நினைத்துக்கொள்ளவேண்டும்.

(अथ गयत्रीमंत्रः) ओं भूर्भुवस्सुवः। तत्सवितुर्वरेण्यम्।
भर्गो देवस्य धीमहि। धियो यो नः प्रचोदयात्॥

இவ்விதம் 1008 தடவையாது, 108தடவையாவது, 28 தடவையாவது அவரவர்க்கு வழக்கமான ஜபமாலையினலோ, விரல்களின் கணுக்களாலோ எண்ணிக்கொண்டு ஜபிக்கவேண்டும்.

காயத்திரியின் அர்த்தம்.

गायन्तं त्रायते यस्माद्गायत्रीत्यभिधीयते।

"தன்னையுச்சரிப்பவனைக் காப்பதுபற்றி காயத்திரீ எனப்படும்" என்றதால் இந்தக்காயத்திரீமந்திரம் அர்த்தானு சந்தானத்துடன் ஜபிக்கின்ற அதிகாரியான ஜீவனைப்பிறப் பிறப்பாலேற்படுகின்ற சகலகஷ்டங்களையும் போக்கி ரக்ஷிக்கின்றது என்று பொதுவானபொருள் ஏற்படுகின்றது. இந்த காயத்திரீ மஹாமந்திரத்திற்கு ஆர்யசம் பிரதாயத்தில் 1 சூர்யபரமாயும், 2 சிவபரமாயும், 3 விஷ்ணுபரமாயும், 4 நிர்குணப்பிரும்மபரமாயும் ஆகநான்கு விதமாய் பொருள் கூறப்பட்டிருக்கிறது. அவைகளை இங்கு எழுதுகிறோம்.



(1) சூரிய பரமானபொருள்—**यः**=எந்தச்சூரியனின் தேஜஸ்ஸானது **नः**=உபாஸகர்களான எங்களுடைய **धियः**=புத்திகளை **प्रचोदयात्** = சகல சத்கர்மங்களை யனுஷ்டிப்பதில் திறமையுள்ளனவாகவும், துஷ்கர்மங்களில் பற்றில்லாதவைகளாகவும் ஆகும்படி செய்கின்றதோ **देवस्य**=பிரகாசிக்கின்றவரும், அல்லது த்யுலோகத்திலிருக்கின்றவரும் **सवितुः**=சகலஜகத்தின் அபிவிருத்திக்கும் முக்கிய சாதனமானமழையை உண்டு பண்ணுகின்ற வருமான சூரியனுடைய **वरेण्यम्** = புருஷார்த்தத்தில் விருப்பமுள்ளவர்களால் தியானிக்கத்தகுந்த **तत्**=அந்த **भर्गः**=தேஜஸ்ஸை **धीमहि**= தியானஞ் செய்கிறோம்.

(தா-ம்) यो देवः सविता ऽस्माकं धियो धर्मादिगोचराः।
प्रेरयेत्तस्य यद्भर्गस्तद्वरेण्यमुपास्महे॥ (इति अगस्त्यः)

देवस्य सवितुस्तेजो वरेण्यं भर्गसंज्ञितम्।
ध्यायेमहीति शब्दोक्तौ धीमहीत्यर्थ उच्यते॥

यश्शब्दश्च यदित्यर्थे लिङ्गव्यत्ययतो भवेत्। (मन्त्रदीपिकायाम्)

எந்தத்தேவனான சூரியன் எங்களுடைய புத்திகளை தர்மாதிகளில் பற்றுள்ளதாகச் செய்கின்றாரோ அந்தச் சூரியனுடைய சிரேஷ்டமானயாதொருதேஜஸ் உண்டோ அதை உபாஸிக்கின்றோம் என்று அகஸ்த்யரும், தேவனான சூரியனுடைய பர்க்கம் எனப் பெயரியமேலான தேஜஸ்ஸைத்தியானஞ் செய்கின்றோம், **धीमहि** என்ற சப்தம் **ध्यायेमहि** என்ற சப்தத்தின் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது, **यः** என்ற சப்தம் **यत्** என்றசப்தத்தின் அர்த்தத்தில் லிங்கத்தை மாற்றி உபயோகிக்கப் பட்டிருக்கிறது என்று மந்திரதீபிகாகாரரும் சொல்லி இருப்பதையொட்டி மேற்கண்டபடி சூர்யபரமாகப் பொருள் கொண்டுத் தியானஞ் செய்யவேண்டும். (எ-று)

(2) சிவபரமான அர்த்தம்—**देवस्य**=பிரகாசிக்கின்ற **सवितुः**= சூரியனுடைய (மண்டலத்தில் வஸிப்பவரான) **यः**=எந்த **भर्गः**=

மஹாதேவன் **नः**=நமது **धियः**=புத்தி விருத்திகளை **प्रचोदयात्**=பிரேரணை செய்கின்றாரோ **वरेण्यम्**=எல்லாத்தேவர்களுள் சிறந்தவரான **तत् (तम्)** அந்த மஹாதேவனை **धीमहि**=தியானஞ்செய்யக்கடவோம்.

(தா-ம்) सौरमण्डलमध्यस्थं सांबं संसारभेषजम् ।
नीलग्रीवं विरूपाक्षं नमामि शिवमव्ययम् ॥

मण्डलान्तरगतं हिरण्मयं भ्राजमानवपुषं शुचिस्मितम् ।
चण्डदीधितिमखण्डविग्रहं चिन्तयेन्मुनिसहस्रसेवितम् ॥

என்ற சுருதி வாக்யங்களாலும்,

देवस्य सवितुर्मध्ये यो भर्गो नो धियः स्वयम् ।
प्रचोदयात्तं वरेण्यं धीमहीत्यन्वयक्रमः ॥ (यज्ञवल्क्यः)

धर्मादिगोचरा यो नो धियो भर्गः प्रचोदयात् ।
देवस्य सवितुश्चापि वरेण्यं तमुपास्महे ॥ (शातातपः)

என்றஸ்மிருதி வசங்களாலும் நாம் மேற் சொல்லிய சிவபரமான அர்த்தம் பொருந்துகின்றது. மேலும் இந்த காயத்ரீமந்திரத்திலுள்ள **यः** என்ற பும்லிங்கசப்தத்திற்கனுகுணமாய் **भर्गः** என்ற சப்தமிருப்பதாலும், நாமலிங்கானு சாஸனம் என்ற அமரத்தில் மஹாதேவனுடைய பர்யாயநாமங்களைப் படிக்குமிடத்தில் **हरः**, **स्मरहरः**, **भर्गः** என்று அகாராந்த சப்தமாகப் படித்திருப்பதாலும், இந்த காயத்ரீ மந்திரம் மஹாதேவபரம் என்று சொல்வதில் யாது மாக்ஷேபமில்லை என்று ஏற்படுகிறது.

குறிப்பு—மேற் சொல்லிய அர்த்தத்தில் **यः** என்ற பும்லிங்க பதத்தை முக்கியமாகக் கொண்டு **भर्गः** என்றதை அகாராந்தமாக ஸ்வீகரித்து **हरः स्मरहरोभर्गः** என்ற அமரவாக்யத்தை ஆதாரமாகக் கொண்டு சிவபரமென்று சொல்லப்பட்டது. ஆனால் உபக்கிரமத்தில் (தொடக்கத்தில்) உள்ள **तत्** என்றதை புல்லிங்கமாக மாற்ற வேண்டி வருவதுடன் நபும்ஸகலிங்கத்தின் சமீபத்தில் படிக்கப்பட்ட **वरेण्यम्** என்ற சப்தத்தையும் புல்லிங்கமாகமாற்றிக் கொள்ள வேண்டி வருகிறது. மேலும் பூர்வவாக்யத்திலுள்ள **भर्गः** என்ற சப்தத்தை உத்தரவாக்யத்திலுள்ள **यः** என்ற சப்தத்துடன் சேர்ப்பதால் வ்யவஹிதாந்வயம் (அதாவது ஒரேவாக்யத்திலுள்ளதும் நபும்சகலிங்க முள்ளதுமான **तत्**, **वरेण्यम्** என்ற இரண்டு பதங்களுடன் சம்பவிக்கும் அன்வயத்தைவிட்டு வேறுவாக்யத்திலிருக்கும் **यः** என்றபதத்துடன் அந்வயஞ் செய்தல்) என்ற தோஷம் ஏற்படுவதாகச் சிலர் சொல்லுகின்றனர்.



(3) விஷ்ணுபரமான அர்த்தம்—**यः**=எந்தத் தேஜஸ் **नः**=எங்களுடைய **धियः**=புத்தி விருத்திகளை அல்லது க்ஞானேந்திரியங்களை **प्रचोदयात्** = அததற்குரிய விஷயங்களில் செல்லும்படி தூண்டுகின்றதோ **वरेण्यम्** = யாவராலும் உபாஸிக்கத்தக்கதும், அல்லது பிரார்த்திக்கத் தக்கதும், **देवस्य सवितुः**=பிரகாசிக்கின்ற சூரியனின் மண்டலத்தி லிருப்பதுமான **तत्**=அந்த **भर्गः**=தேஜஸ்ஸை, ஸ்ரீமன்நாராயணனுடைய சுவரூபத்தை **धीमहि**=தியானஞ் செய்யக்கடவோம்.

ध्येयस्सदा सवितृमण्डलमध्यवर्ती नारायणः सरसिजासनसंन्निविष्टः ।
केयूरवान्मकरकुण्डलवान् किरीटी हारी हिरण्मयवपुर्धृतशंखचक्रः ॥

என்றுப் பிரதிதினமும் சந்தியாவந்தனத்தின் முடிவில் சொல்லி வருகின்ற சுலோகம் காயத்ரீ நாராயணபரம் என்று கொள்வதில் ஆதாரமாகின்றது. ஆனால் இவ்வர்த்தத்திலும் **यः** என்ற பும்லிங்கசப்தத்தை நபும்ஸகலிங்கமாக மாற்றிக்கொள்வது என்ற தோஷமிருப்பதாய்ச் சிலர் சொல்லுகின்றனர்.

(4)நிர்க்குணப்பிரும்ம பரமான அர்த்தம் **यः**=எந்தப் பரமாத்மா **नः**=எங்களுடைய **धियः**=புத்திவிருத்திகளை **प्रचोदयात्**=பிரேரணை செய்கின்றாரோ (**सः**=அவரும்) **देवस्य**=பிரகாசிக்கின்ற **सवितुः**=சூரியனுடைய மண்டத்திலிருப்பதும் **वरेण्यम्**=ஆனந்தரூபமாயிருப்பது பற்றி யாவராலும் எதிர்பார்க்கப்படுகின்றதும் **भर्गः**=சித்ரூபமாருயிப்பதுபற்றி அக்ஞானம், அதன் கார்ய மிவைகளற்றதுமான **तत्** = அந்தப் பிரும்மமும் (**एकमिति**=ஒன்று என்று) **धीमहि**=சிந்திக்கிறோம்.

(தா - ம்) **सयश्चायं पुरुषे, यश्चासावादित्ये, स एकः** ஜீவாந்தர்யாமியாயிருப்பவரும், சூர்யாந்தர்யாமியாக இருப்பவரும் ஒருவரே என்று உபனிஷத்தில் சொல்லி யிருப்பதை யொட்டியும்

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धिमामकम् ॥

என்றகீதாசாஸ்திர வசனத்தையொட்டியும் சூரியனிடத்திலும் ஜீவனிடத்திலும் அந்தர்யாமியாய் பிரகாசிக்கின்ற வஸ்து ஒன்றே என்றுத்தியானஞ் செய்யும் வாயிலாக ஜனனமரணரூபமான சம்சாரபந்தத்தை விட்டு விலகினவனாக ஆகின்றேன். (என்று)

ஆகவே நாம் இங்கு எழுதிய நான்கு விதமான அர்த்தங்களுள் அவரவர்க்கு க்குருபதேசமூலம் கிடைத்தபொருளையே முக்கியமாகக் கொண்டு காயத்திரியை ஜபிக்க வேண்டும்.

ஜபவிசாரம்

**जपमानसेच** என்ற தாதுப்படி மந்திராக்ஷரங்களை மனத்தில்வாங்கி மனோவிருத்தியையும் அக்ஷரத்தையுமொன்றாக்கி மனோவிருத்தியை ஆவிருத்தி செய்தலே ஜபம் எனப்படும். ஆயினும் அவ்விதம் முக்கிய ஜபஞ்செய்ய வியலாதவர் விஷயத்தில் அதற்கடுத்தபடி வேறுவிதமான மார்க்கமும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது—

वाचिकाख्य उपांशुश्च मानसश्च त्रयःस्मृताः ।
त्रयाणां जपयज्ञानां श्रेयान् स्यादुत्तरोत्तरः ॥

வாசிகம், உபாம்சு, மானஸம் என ஜபம் மூன்றுவகைப்படும். இவைகளுள் மேன்மேலுள்ளதே மேலானதாகும் என்றுகூறி

यदुच्चनीचस्वरितैः स्पष्टस्पष्टपदाक्षरैः ।
मन्त्रमुच्चारयेद्वाचा जपयज्ञस्स वाचिकः ॥



உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் இவைகளை நன்கு உச்சரித்து ஒவ்வொரு அக்ஷரத்தையும் திருத்தமாய் தொனியுடன் வாக்கினால் சொல்வது "வாசிகம்" எனப்படும்.

शनैरुदीरयेन्मन्त्रमीषदोष्ठौ प्रचालयेत् ।
किञ्चिच्छब्दं स्वयं विद्यादुपांशुस्स जपस्स्मृतः ॥

மிகவும் மெதுவாக மந்திரங்களையுச்சரிக்குங் காலையில் உதடுகள் கொஞ்சமசையும்படியாகவும், உச்சரிக்கும் தொனி தனது செவிக்குமட்டும் படும்படியாகவும் ஜபிப்பது "உபாம்சு" எனப்படும்.

धिया यदक्षरश्रेण्या वर्णाद्वर्णं पदात्पदम् ।
मन्त्रार्थचिन्तनं भूयः कथ्यते मानसो जपः ॥

மந்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரங்களையும், ஒவ்வொரு பாதங்களையும் மனத்தால் சிந்தித்து அதன் அர்த்தத்தையும் பாவிப்பது "மானஸம்" எனப்படும். இவற்றுள்

उत्तमं मानसं जप्यमुपांशुर्मध्यमस्स्मृतः ।
अधमं वाचिकं प्राहुस्सर्वमन्त्रेषु वै द्विजाः ॥
वाचिकस्यैकमेकं स्यादुपांशोश्शतमुच्यते ।
मानसस्य सहस्रं स्यादित्युक्तं नारदादिभिः ॥

"மானஸம்" மேலானது "உபாம்சு" மத்யமம், "வாசிகம்" அதமம், இந்தவிதி எல்லா மந்திரங்களுக்கும் பொதுவானது என்றும், வாசிகஜபம் அதற்குரிய பலனைமட்டும் அளிக்கும். உபாம்சு ஜபம் நூறு பங்கு அதிகப்பலனைத்தரும். மானஸமோவெனில் ஆயிரம் பங்கு பலனை விருத்திசெய்யும். இதுவே நாரதர் முதலியோரின் சித்தாந்தம் என்று சொல்லப்பட்டிருப்பதால் அவரவர் பழக்கத்திற்கும், சக்திக்கும் தக்கபடி மந்திரங்களை மேலான முறையில் ஜபஞ்செய்துவருதலே உத்தமம் என்று ஏற்பட்டது. இவ்விதம் ஜபஞ் செய்து முடிந்த பிறகு மூன்று பிரா

ணயாமஞ் செய்து गायत्र्युपस्थानं करिष्ये என்று சங்கற்பித்துக் கொள்ளவும்.

उत्तम इत्यनुवाकस्य—वामदेव ऋषिः, अनुष्टुप्छन्दः, गायत्री देवता। उपस्थाने विनियोगः। (मन्त्रः) ओं, उत्तमे शिखरे देवी भूम्यां पर्वतमूर्द्धनि। ब्राह्मणेभ्योह्यनुज्ञानं गच्छदेवि यथासुखम्॥

இதுமூன்று வேதிகளுக்கும் முக்காலங்களிலும் சமானம். ஆனால் ருக்கு வேதிகளும் ஸாம வேதிகளும் **ब्राह्मणेभ्योभ्यनुज्ञानं** என்று மாற்றிப்படித்துக் கொள்ளவேண்டும். இதன் பொருள் **देवी**=பிரகாசிக்கின்ற ஓ காயத்திரியே! **भूम्याम्**=பூமியில் (**आगत्य**=வந்து) **ब्राह्मणेभ्यः**=பரப்பிரும்மோபாஸனம் செய்கின்ற (**अस्मभ्यम्**=எங்களுக்கு) **अनुज्ञानम्**=அனுக்கிரஹத்தை (**कृत्वा**=செய்து) **उत्तमे**=சிறப்புவாய்ந்ததாயும் **शिखरे**=மற்றெல்லாச் சிகரங்களிலும் உயர்ந்ததாயுமிருக்கிற **पर्वतमूर्धनि**=மஹாமேருமலையின் சிகரத்தில் **यथासुखम्**=சுகமாய்**गच्छ**=செல்வாயாக.

பிறகு யஜுர்வேதிகள்

मित्रस्येत्यादितृचस्य—विश्वामित्रः ऋषिः। हिरुड्गायत्रीत्रिष्टुभौ च्छन्दांऽसि। मित्रो देवता। उपस्थाने विनियोगः (मन्त्रः) मित्रस्य चर्षणी धृतः श्रवो देवस्य सानसिम्। सत्यं चित्रश्रवस्तमम्। मित्रो जनान् यातयति प्रजानन्मित्रोदाधार पृथिवीमुतद्याम्। मित्रः कृष्टीरनिमिषाऽभिचष्टे। सत्याय हव्यं घृतवद्विधेम। प्रसमित्र मर्तो अस्तु प्रयस्वान् यस्त आदित्य शिक्षति व्रतेन। न हन्यते न जीयते त्वोतो नैनमंऽहो अश्नोत्यन्तितो न दूरात्॥

என்ற மந்திரத்தைச் சொல்லிக் காலையில் மித்திரனை உபஸ்தானம் (ஸ்துதிசெய்தல்) செய்யவேண்டும். இதன்பொருள்-**चर्षणीधृतः**=(மழையைப். பொழிதல் முதலிய கார்யங்களால்) மனிதர்களைக் காப்பாற்றுகின்றவரும் **देवस्य**=பிரகாசிக்கின்றவருமான **मित्रस्य**=பதிலுபகாரத்தை எதிர்பாராமலே எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸ்நேகமுள்ள ஸூர்யனுடைய **सानसिम्**=யோகிகளாலடையக்



கூடியதும் **सत्यम्** = நாசமற்றதும் **चित्रश्रवस्तमम्** = விசித்திரமான காந்தியுள்ள அக்னி, சந்திரன் முதலியவற்றினும் மேலானதுமான **श्रवः**=பிரகாசமுள்ள மண்டலத்தை (**वयंवन्दामहे**=நாங்கள் நமஸ்கரிக்கின்றோம்.) **मित्रः**=அந்த மித்திரன் என்றதேவன் **प्रजानन्**=எல்லாவற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலறிந்து கொண்டு **जनान्**=பிறவியையடைந்த எல்லாப் பிராணிகளையும் **यातयति**=அதற்குறிய வியாபாரங்களில் தூண்டுகிறார். **मित्रः**=மித்திரன் என்ற தேவன் **पृथिवीम्**=பூமியிலுள்ள எல்லாப்பிராணிகளையும் **उतद्याम्**=த்யுலோகத்தையும் **दाधार**=மழையைப் பொழிந்து காப்பாற்றுகிறார் **मित्रः**=மித்திரன் என்றதேவன் **कृष्टीः**=புண்யம் பாபமிவைகளில் இருக்கின்ற மனிதர்களை **अनिमिषा**=திவ்யதிருஷ்டியால் **अभिचष्टे**=நேரில் பார்க்கின்றான். **सत्याय**=நாசமற்ற காந்தியையுடைய சூரியனுக்கு **घृतवत्**=நெய்யுடன் கலந்த **हव्यम्**=சரு புரோடாசம் முதலியவற்றை **विधेम**=கொடுக்கிறோம். **आदित्य**=அதிதியின் புத்திரனான ஓ! சூரியனே! **यः**=எந்த யஜமானன் **ते**=உமக்கு **व्रतेन**=நியமத்துடன் (**घृतवद्धविः**=நெய்புடன்கலந்த ஹவிஸ்ஸை) **शिक्षति**=கொடுக்கிறானோ **मित्र**=ஓ! சூரியனே! **सः** அந்த **मर्तः**=மனிதன் **प्रयस्वान्**=அன்னஸமிருத்தி உள்ளவனாக **प्रास्तु**=ஆகவேண்டும். தங்களையாராதிக்கின்றவன் அன்னங்கிடைக்காமல் ஒரு பொழுதும் திண்டாடமாட்டான். மற்றவர்களுக்கும் அன்னத்தைக் கொடுக்குமளவு அன்னசமிருத்தியைப் பெறுவான் என்று கருத்து. (**किंच**=மேலும்) **त्वोतः**=தங்களையாராதிப்பதுபற்றி தங்களால் ரக்ஷிக்கப்பட்ட ஜீவன் **नहन्यते**=அபமிருத்யுவால் கொல்லப்படமாட்டான். அல்லது யமனால் விதிக்கப்படும் சிக்ஷைகளுக்குள்ளாக மாட்டான். **नजीयते**=ஆறுவயதில் குறைவு அடைய மாட்டான். அல்லது சத்துருக்களா லவமதிக்கப்படமாட்டான். **एनम्**=தங்களை யாராதிக்கின்றவனை **अन्तितः** = சமீபத்திலும், அதாவது இந்த ஜன்மத்திலும், **दूरात्**=தூரத்திலும் அதாவது முன் ஜன்மங்களிலும் (**कृतम्**=அனுஷ்டிக்கப்பட்ட) **अंहः**=பாபம் **नाश्नोति**=சம்பந்திக்காது. ஸூர்யோபாஸனஞ் செய்கின்றவன் சகலவிதமான பாபங்களினின்றும் விடுபட்டு புண்யலோகங்களைப் பெறுவான் என்றுகருத்து.

மத்தியாங்ஹத்தில்

आसत्येन, उद्वयं, उदुत्यं, चित्रं, तच्चक्षुरिति मन्त्रणाम्—हिरण्यस्तूप ऋषिः, द्वौ त्रिष्टुभौ गायत्री जगत्युष्णिहः च्छन्दांसि। आदित्यो देवता, उपस्थाने विनियोगः। (मन्त्रः) ओं आसत्येन रजसा वर्तमानो निवेशयन्नमृतं मर्त्यञ्च। हिरण्ययेन सविता रथेनादेवो याति भुवना विपश्यन्॥ २ उद्वयं तमसस्परि पश्यन्तो ज्योतिरुत्तरम्। देवं देवत्रा सूर्यमगन्म ज्योतिरुत्तमम्। उदुत्यं जातवेदसं देवं वहन्ति केतवः। दृशे विश्वाय सूर्यम्। ३ चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः। आप्रा द्यावापृथिवी अन्तरिक्षंसूर्य आत्मा जगतस्तस्थुषश्च। ४ तच्चक्षुर्देवहितं पुरस्ताच्छुक्रमुच्चरत्। पश्येम शरदश्शतं जीवेम शरदश्शतं नन्दाम शरदश्शतं मोदाम शरदश्शतं भवाम शरदश्शतंश्शृणवाम शरदश्शतं प्रब्रवाम शरदश्शतमजीतास्याम शरदश्शतं ज्योक्च सूर्यं दृशे। य उदगान्महतोऽर्णवाद्विभ्राजमानस्सरिरस्य मध्यात्समावृषभो लोहिताक्षः सूर्योविपश्चिन्मनसा पुनातु॥

என்ற மந்திரத்தைச் சொல்லி ஸூர்யோபஸ்தானஞ் செய்யவேண்டும். இதன்பொருள் (1) **सत्येन**=நித்தியமான **रजसा**=தேஜஸ்ஸினால் **आवर्तमानः**=எங்குமிருந்து கொண்டும், **अमृतम्**=மரணமற்ற தேவர்களையும், **मर्त्यं च**=மனிதர்களையும் **निवेशयन्**=அவரவர்களுக்குரிய கர்மங்களில் ஸ்தாபித்துக்கொண்டும் (ஸூர்யன் உதித்தவுடன் அந்தந்தப் பிராணிகள் தத்தமக்குரிய கார்யங்களைச் செய்வதற்குத் தொடங்குவதாலிவ்விதஞ் சொல்லப்பட்டது.) **सविता**=கர்மபலன்களைக் கொடுக்கின்றவரும் **देवः**=சுவயமாய் பிரகாசிக்கின்றவருமான ஸூரியன் **हिरण्ययेन**=தங்கமயமான **रथेन**=தேரினால் **भुवना**=14 உலகங்களை **विपश्यन्**=பார்த்துக்கொண்டு **आयाति**=வருகிறார்.

(2) **तमसः**=இருட்டை **परि**=நாசஞ் செய்து **उत्**=வெளிக்கிளம்பினவரும், **उत्तरम्**=பிரகாசமுள்ள மற்றவஸ்துக்களுள் அதிகப்பிரகாசமுள்ளவரும் **देवत्रा**=தேவர்களையும் காப்பாற்றுகின்றவரும் **देवम्**=சுவயமாய் பிரகாசிக்கின்றவரும் **ज्योतिः** = தேஜோமயமாக இருக்கின்றவரும் **सूर्यम्**=எல்லோரையும் தூண்டுகின்றவருமான



ஸூரியனை **पश्यन्तः**=பார்க்கின்ற **वयम्**=நாங்கள் **उत्तमम्**=ஜகத்காரணமாக இருக்கின்ற **ज्योतिः**=எனது ஆத்மபூதமான பிரும்மஜ்ஜோதிஸ்ஸை **अगन्म**=அடைவோமாக.

(3) **जातवेदसम्**=எல்லாப் பிராணிகளையும் அறிகின்றவரும் **देवम्**=பிரகாசிக்கின்றவரும், **सूर्यम्**=எல்லாப்பிராணிகளையும் தூண்டுகின்றவருமான **त्यम्**=அந்த ஆதித்யனை **केतवः**=ஆயிரங்கிரணங்கள் **विश्वाय**=சமஸ்தமான பிராணிகளுடைய **दृशे** = அறிவுக்காக **उत्**=மேல் ஸ்தானத்தில் **वहन्ति**=வஹிக்கின்றன. வெளிச்சமில்லாவிடில் கண்ணால் ஒருவஸ்துவையும் யறியமுடியாதானதுபற்றிக் கண்ணால் ஏற்படும் அறிவுக்கு இன்றியமையாச் சாதனமானப் பிரகாசத்தைக் கொடுப்பதற்காக மிகவும் உன்னதமான பாகத்தில் ஆயிரக்கணக்கான கிரணங்களுடன் ஸூரியன் பிரகாசிக்கின்றார் என்று கருத்து.

(4) **देवानाम्** = தேவர்களுடைய **अनीकम्**=சைன்யம் போலிருப்பதாயும் **मित्रस्य**=மித்திரன் என்ற தேவனுடையவும் **वरुणस्य**=வருணனுடையவும் **अग्नेः**=அக்னியினுடையவும் **चक्षुः**=கண்ணாக இருப்பதாயும் **चित्रम्**=பிரகாசமுள்ள மற்றவஸ்துக்களில் சிறந்ததாயுமிருக்கிற ஸூர்யமண்டலம் **उदगात्**=கிழக்கு திசையிலுதிக்கின்றது. (**तत्**=அந்த மண்டலம்) **द्यावापृथिवी**=த்யுலோகம் பூலோகம் இரண்டையும் (**स्वकीयप्रकाशेन**=தனது பிரகாசத்தால் **आप्राः**=எங்கும் வியாபரித்திருக்கின்றது. **सूर्यः**=அத்தகைய மண்டலத்திற்கதிபனான ஸூர்யன் **जगतः**=அசையும்பொருளுக்கும் **तस्थुषश्च**=அசையாப்பொருளுக்கும் **आत्मा**=ஆத்மவஸ்துவாக விளங்குகிறார்.

(தா - ம்) தேவர்களின் சைன்யம் எவ்விதம் கருத்த சரீரமுள்ள விருத்திராசுரனை நாசஞ் செய்கின்றதோ அவ்விதமே ஸூர்யமண்டலம் கருப்பான இருளை நாசஞ் செய்வதால் தேவசைன்யம் போலிருப்பதாய் இங்குவர்ணிக்கப்படுகின்றது. மித்திரன் முதலியதேவர்களுக்கு இருளைப்போக்கிக் கண்ணால் வஸ்துக்களையறிவதற்கு உபகாரஞ் செய்வதால் மித்திரன் முதலியோரின் கண்ணாக இருப்பதாயும் உபதேசிக்கப்பட்டது. இங்கு இவ்

விதஞ் சொன்னதை உபலக்ஷணமாக வைத்துக் கொண்டு எல்லோருடைய கண்ணாகவும் சூர்யமண்டல மிருக்கின்றது என்று அறியவேண்டும்.

(5) **चक्षुः**=எல்லாக் கர்மங்களுக்கும் சாக்ஷியாயும் **देवहितम्**=(அக்னிஹோத்திரம் முதலிய கர்மங்களுக்குரிய காலத்தைப் பிரித்துக்கொடுத்து தேவதைகளுக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கும்படி செய்வதுபற்றி) தேவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்கின்றதும் **पुरस्तात्**=கிழக்குதிசையில் **उच्चरत्**=ஒவ்வொருதினமும் வெளிக்கிளம்புகிறதாயும் **शुक्रम्**=வெண்ணிறமுள்ளதாயுமிருக்கிற **तत्**=ஆதித்யன் என்றதேஜஸ்ஸை **शतम्**=நூறு **शरदः** = வருஷங்கள் **पश्येम** = பார்ப்போமாக. **शतम्** = நூறு **शरदः** = வருஷங்கள் **जीवेम**=சகலவிதமான சம்பத்துக்களுடன் பிழைத்திருக்கவேண்டும். **शतंशरदः**=நூறு வருஷங்கள் **नन्दाम**=எதிலும் குறைவற்றவர்களாக இருக்கவேண்டும். **शतं शरदः**=நூறு வருஷங்கள் **मोदाम**=சந்தோஷமுள்ளவர்களாக இருக்கவேண்டும். **शतं शरदः**=நூறு வருஷங்கள் **भवाम**=நல்லகீர்த்தியைப்பெற வேண்டும். **शतं शरदः**=நூறு வருஷங்கள் **शृणवाम**=மங்கள சமாசாரத்தைக் கேட்கவேண்டும். **शतं शरदः**=நூறு வருஷங்கள் **प्रब्रवाम** = லோகத்தார்க்கு ஸத்விஷயங்களை நன்றாய் எடுத்துரைப்பவனாக ஆகவேண்டும் **शतं शरदः**=நூறு வருஷங்கள் **अजीताः**=சத்ருக்களால் ஜயிக்கப் படாதவர்களாக **स्याम** = இருக்கவேண்டும். **ज्योक्च** = நீண்டகாலம் **सूर्यम्**=சூர்யனை **दृशे**=பார்க்கவேண்டும். அதாவது நீண்டகாலம் ஜீவித்திருக்க வேண்டும். **महतः**=பெரிதான **अर्णवात्**=சமுத்திரத்தினின்றும் **सरिरस्य**=ஜலத்தினுடைய **मध्यात्**=நடுவினின்றும் **यः**=எந்தச் சூரியன் **उदगात्**=காலையில் உதயமடைந்தாரோ (காலையில் சூரியனுதமாகும் பொழுது சமுத்திரக்கரையில் நின்று பார்த்தால் சமுத்திர ஜலத்தின் மத்தியினின்றும் வெளிவருவதாய்ப்புலப்படுவதை யொட்டி இங்கு சமுத்திர ஜலத்தினின்று முண்டாவதாய் வர்ணிக்கப்படுகின்றது) **वृषभः**=உபாஸகர்களுக்கு அபீஷ்டங்களை வர்ஷிப்பவரும் **लोहिताक्षः** = மலர்ந்த செந்தாமரைப் புஷ்பம் போல் சிவந்த கண்களையுடையவரும் **विपश्चित्**=எல்லாவற்றையுமறிந்தவருமான **सः**=அந்த **सूर्यः**=சூரியன் **मनसा**=அனு



க்கிரஹ சங்கல்பத்தால் **पुनातु**=என்னைச் சகலவிதமான பாபங்களினின்றும் விலக்கிப் பரிசுத்தனாக்கட்டும்.

### சாயங்காலத்தில்

इमं मे, तत्वायामि, यच्चिद्धि, यत्किंच, कितवास इति मन्त्राणाम्—शुनश्शेफ वसिष्ठ अत्रयः ऋषयः। गायत्री त्रिष्टुप्गायत्री त्रिष्टुभौ छन्दांसि। वरुणो देवता। उपस्थाने विनियोगः। [मन्त्रः] १ ओं इमंमे वरुण श्रुधी हव मद्याच मृडय। त्वामवस्युराचके। २ तत्वायामि ब्रह्मणा वन्दमानस्तदाशास्ते यजमानो हविर्भिः। अहेडमानो वरुणेहबोध्युरुशंस मान आयुः प्रमोषीः। ३ यच्चिद्धि ते विशोयथा प्रदेव वरुणव्रतम्। मिनीमसि द्यविद्यवि। ४ यत्किंचेदं वरुणदैव्ये जनेभिद्रोहं मनुष्याश्चरामसि। अचित्ती यत्तव धर्मा युयोपिम मानस्तस्मादेनसो देव रीरिषः। ५ कितवासो यद्रिरिपुर्न दिवि यद्वाघा सत्यमुतयन्न विद्म। सर्वा ता विष्य शिथिरेव देवाऽथातेस्याम वरुण प्रियासः॥

1 என்ற மந்திரத்தைச் சொல்லி வருணோபஸ்தானஞ் செய்ய வேண்டும். இதன் பொருள்—**वरुण**=ஹே! வருணனே! **मे**=என்னுடைய **इमम्**=இந்த **हवम्**=ஸ்தோத்திரத்தை. **श्रुधि**=கேட்கவேண்டும் (**श्रुत्वाच**=கேட்டபிறகு) **अद्याच**=இப்பொழுதே **मृडय**=சுகத்தைக் கொடுக்கவேண்டும். **अवस्युः**=என்னைக் காப்பாற்றிக் கொள்வதில் விருப்பமுள்ளவனாய்க் கொண்டு **त्वाम्**=உம்மை **आचके**=பிரார்த்திக்கின்றேன்.

2 (**अहम्**=நான்) **ब्रह्मणा**=வேதமந்திரத்தால் **वन्दमानः**=ஸ்தோத்திரஞ் செய்து கொண்டு **तत्**=என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக **त्वा**=உம்மை **यामि**=சரணமடைகிறேன். **यजमानः**=யாகத்தையனுஷ்டிக்கின்றவன் **हविर्भिः**=சரு புரோடாசம் முதலியவற்றால் **तत्**=தன்னைக் காப்பாற்றிக் கொள்வதையே **आशास्ते**=விரும்புகிறான். யாகஞ்செய்கின்ற யஜமானர்கள் சரு புரோடாசம் முதலியவற்றைத்தங்களை யுத்தேசித்து அக்னியில் ஹோமஞ் செய்து தன்னைக் காப்பாற்ற வேண்டு மென்றே பிரார்த்திக்கின்றனர். அதையே நானும் வேதமந்திரங்களால் ஸ்துதி செய்யும்வாயிலாக

பிரார்த்திக்கிறேன். उरुशंस=அநேகம் யஜமானர்களால் ஸ்துதிக்கப்பட்ட ஓ வருணனே अहेडमानः=செய் என்று விதித்த கர்மங்களைச் செய்யாதிருத்தல் முதலிய குற்றங்களால் என்னிடம் கோபமடையாமல் इह=இப்பொழுது बोधि=என்னைக் கவனிக்க வேண்டும் नः=என்னுடைய आयुः=ஆயுஸ்ஸை मा प्रमोषीः=திருடி விடாதே. எனக்கு ஏற்பட்ட ஆயுளைக்குறைத்து விடாதே.

3 देव वरुण=தேவனான ஓ வருணனே! विशः यथा=விவேகமற்ற மனிதர்களைப்போல் यत्=எத்தகைய ते=உம்முடைய व्रतम्=பூஜாரூபமான கர்மாவை यवियवि=ஒவ்வொரு தினமும் प्रमिनीमसि=அனுஷ்டிக்காமல் விட்டு வந்தோமோ

वरुण=ஓ வருணனே! दैव्ये=தேவசமூஹத்தினிடமும், जने=பிறவியையடைந்த மற்றப் பிராணிகளிடத்திலும் मनुष्याः=மனிதர்களான நாங்கள் यत्किचेदम्=எத்தகைய अभिद्रोहम्=கெடுதலை चरामसि=செய்தோமோ अचित्ती=அக்ஞானிகளான நாங்கள் तव=உன்னுடைய यत्=எத்தகைய धर्मा=பூஜாரூபமான எந்ததர்மத்தை युयोपिम=கெடுத்துவிட்டோமோ देव=எல்லாவற்றையு மறிந்த ஓ வருணனே! तस्मादेनसः=அத்தகைய பாபத்தினால் नः=எங்களை मारीरिषः=ஹிம்ஸிக்காதே. ஓ வருணனே! தங்களையோ மற்றுமுள்ள தேவர்களையோ குறித்துச் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்ட கர்மங்களை யனுஷ்டிக்காமலிருத்தல் மூலம் எத்தகைய துரோஹத்தை யனுஷ்டித்தவனாகின்றேனோ, மற்று முள்ளப் பிராணிகளிடத்தில் செலுத்த வேண்டியகடமையைச் செலுத்தாமலிருத்தல் மூலம் அவைகட்குத் துரோஹத்தைச் செய்தவனாகின்றேனோ அதனால் என்னிடம் கோபங்கொண்டு ஹிம்ஸையைச் செய்ய வேண்டாம். தாங்கள் சர்வக்ஞராக இருக்கின்றீர்கள். நானோ அக்ஞானியாக இருக்கின்றேன். ஆதலால் என்னைக் காப்பாற்றவேண்டும்.

4 दिवि=சூதாடு மிடத்தில் कितवासः=சூதாடுகிறவர்கள் न=எவ்விதம் (दोषमारोपयन्ति = தோஷத்தைச் சுமத்துகின்றனரோ तथा=அவ்விதம்) कितवासः=சத்துருக்கள் यत्=எந்தப்பாபத்தை रिरिपुः=சுமத்துகின்றனரோ यद्वा=எந்த अघा=பாபம் सत्यम्=உண்மையோ उत=மேலும் यत्=எந்தப் பாபத்தை नविद्म=அறியவில்லையோ ताः, सर्वाः=அந்தப் பாபங்கள் யாவையும் शिथिरेव=பலமற்ற வஸ்துவைப்போல் विष्य=நாசஞ்செய்ய வேண்டும். देव=தேவனான वरुण=ஓ வருணனே! अथ=பிறகு ते=உமக்கு प्रियासः=பிரியர்களாக स्याम=ஆவோமாக. ஓ வருணனே! சூதாடுமிடத்தில் வஸிக்கின்ற சூதாடும் மனிதர்கள் எவ்விதம் அபாண்டமாகவே ஒருவர்மேல் ஒருவர் குற்றத்தைச் சுமத்துவார்களோ அவ்விதமே எனது சத்துருக்களால் பொய்யாகவே சுமத்தப்பட்டு லோகத்தில் பிரசித்தியை யடைந்த பாபம் எதுவோ அதையும் (அதாவது லோகத்திலேற்பட்டுள்ள அகீர்த்தியையும்) என்னிடம் உண்மையிலுள்ள பாபத்தையும், என்னால் அறியப்படாத பாபத்தையும் மடித்த கட்டை முதலியவற்றை அனாயாசமாய் உடைத்துத் தள்ளுவதுபோல் நாசஞ்செய்து என்னிடம் ப்ரீதியைச் செலுத்த வேண்டும் என்று கருத்து.



இனிருக்வேதிகள் காலை, மத்தியான்ஹம், மாலை இம்மூன்று காலங்களிலும் உபஸ்தானஞ் செய்யும்பொழுது படிக்கவேண்டிய மந்திரங்களை எழுதி அவைகட்குப் பொருள் கூறப்படுகிறது—

காலையில்

१ मित्रस्य चर्षणीधृतोऽवोदेवस्य सानसि। द्युम्नं चित्रश्रवस्तमम् ॥
२ अभि यो महिना दिवं मित्रो बभूव सप्रथाः। अभिश्रवोभिः पृथिवीम् ॥
३ मित्राय पञ्च येमिरे जना अभिष्टिशवसे। स देवान्विश्वान् बिभर्ति ॥
४ मित्रो देवेष्वायुषु जनाय वृक्तबर्हिषे। इंष इष्टव्रता अकः ॥

என்ற மந்திரத்தைச்சொல்லி மித்திரோபஸ்தானஞ் செய்யவேண்டும்.

(ப - ரை) चर्षणीधृतः=மழையைப்பொழிதல் முதலிய கார்யங்களால் மனிதர்களைத் தரிக்கின்றவரும்-அதாவது ரக்ஷிக்கின்றவரும் देवस्य=பிரகாசிக்கின்றவரும் मित्रस्य=பதிலுபகாரத்தை எதிர்பாராமலே எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸ்நேஹமுள்ளவருமான சூரியனுடைய अवः=ரக்ஷணமும் चित्रश्रवस्तमम्=அதிகமாய்

கீர்த்திவாய்ந்த **द्युम्नम्**=பணமும் **सानसि**=ஸேவிக்கத் தகுந்தது. சூரியனுடைய அனுக்கிரஹத்தால் கிடைக்கின்ற பொருள் நல்ல கீர்த்தியைத் தரத்தக்கதாக இருக்குமாதலாலும் அவருடைய சம்ரக்ஷணை யாவர்க்கும் அவச்யமாதலாலும் மேற்கூறிய இரண்டும் சித்திப்பதற்காக சூரியனை வணங்குவோமாக என்று கருத்து.

(2) **यः मित्रः**=எந்த மித்திரன் என்ற தேவன் **सप्रथाः**=கீர்த்தியுள்ளவனாய்க்கொண்டு **महिना**=காந்தியால் **दिवमभि**=ஆகாசம் எங்கும் வியாபரித்து **बभूव**=இருக்கின்றாரோ **श्रवोभिः**=காந்தியால் **पृथिवीम्, अभि**=பூலோகமெங்கும் வியாபரித்து (**बभूव**=இருக்கின்றாரோ **तस्मै**=அந்தத்தேவனுக்கு **नमः**=நமஸ்காரம்)

(3) **पञ्चजनाः**=பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன், நிஷாதன் என்ற ஐந்து வகுப்புள்ள மனிதர்கள் **अभिष्टिशवसे** = சத்துருக்களை எதிர்க்கின்ற பலமுள்ள **मित्राय** = மித்திரன் என்ற தேவனைக்குறித்து **येमिरे**=ஹவிஸ்ஸைக் கொடுக்கின்றனர். **सः**=அந்தத் தேவன் **विश्वान् देवान्**=சமஸ்தமான தேவர்களையும் **बिभर्ति**=தரிக்கின்றார். சூரியனின் மண்டலத்தில் சகல தேவர்களும் வாஸஞ்செய்கின்றனர் என்று கருத்து.

(4) **आयुषु**=மனிதர்களுள் (**यः**=எவன்) **देवेषु**=தேவர்களைக்குறித்து யாகஞ்செய்வதற்காக (**वृक्तबर्हिः**=அறுக்கப்பட்ட தர்ப்பத்தையுடையவனோ **तस्मै**=அந்த) **वृक्तबर्हिषे**=அறுக்கப்பட்ட தர்ப்பத்தையுடைய மனிதனுக்கு **मित्रः**=மித்திரன் **इष्टव्रताः**=யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு உபயோகப்படக்கூடிய **इषः**=அன்னத்தை **अकः**= கொடுக்கிறார்.

இதற்குமேல் பின் எழுதப்படும் மந்திரங்களையும் சிலர் படிக்கின்றனர்—

१ मित्रो जनान्यातयति ब्रुवाणो मित्रो दाधार पृथिवीमुतद्याम् ।
मित्रः कृष्टीरनिमिषाभिचष्टे मित्राय हव्यं घृतवज्जुहोत ।

२ प्रसमित्र मर्तो अस्तु प्रयस्वान् यस्त आदित्य शिक्षति व्रतेन ।
न हन्यते न जीयते त्वोतो नैनमंहो अश्नोत्यन्तितो न दूरात् ॥



**ब्रुवाणः**=அவரவர்க்குரிய கார்யங்களை யனுஷ்டியுங்கள் என்று சொல்லிக்கொண்டு **जनान् यातयति** = ஜனங்களைத் தூண்டுகிறார். மற்றவைகளுக்கு 115 வது பக்கத்தில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. பிறகு பின் எழுதப்படும் மந்திரங்களையும் படிக்க வேண்டும்.

१ जातवेदस इत्यस्य । कश्यप ऋषिः । त्रिष्टुप् च्छन्दः । दुर्गा देवता । संध्योपस्थाने विनियोगः । (मन्त्रः) । जातवेदसे सुनवाम सोममरातीयतो निदहाति वेदः । स नः पर्षदति दुर्गाणि विश्वा नावेव सिंधुं दुरितात्यग्निः । २ पिशंगभृष्टिमंभृणं पिशाचि मिन्द्र संमृण । सर्वं रक्षो निबर्हय । ३ भद्रं कर्णेभिः शृणुयाम देवा भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गै स्तुष्टुवाꣳसस्तनूभिर्व्यशेम देवहितं यदायुः । ४ केश्यग्निं केशी वृषं केशी बिभर्ति रोदसी । केशी विश्वं स्वर्दृशेकेशीदं ज्योतिरुच्यते ।

(ப - ரை) (1) **वेदः**=சர்வக்ஞராக இருக்கின்ற (**यः**=எந்தப் பரமேச்வரன்) **अरातीयतः** = எங்களிடத்தில் சத்துருத் தன்மையைச் செய்யவிருப்ப முள்ளவர்களை **निदहाति**=நாசஞ் செய்கின்றாரோ **सोमम्**=சந்திரகலையை (**शिरसिधृतवन्तम्**=சிரஸ்ஸில் தரித்தவரும்) **जातवेदसे**=நித்ய சித்தக்ஞான முள்ளவருமான (**तस्मै**=அந்தப்பரமேச்வரனின் பொருட்டு) **सुनवाम** = ஸ்தோத்திரஞ் செய்வோமாக. **अग्निः**=தன்னை யுபாஸிப்பவர்களை மேலான நிலைக்குக் கொண்டு வருகிறவரான **सः**=அவர் **नः**=எங்களுடைய **विश्वा**=சமஸ்தமான **दुर्गाणि**=கஷ்டங்களையும் **अतिपर्षत्**=நன்றாய் நாசஞ் செய்யட்டும் (**किञ्च**=மேலும்) **नावा**=கப்பலால் **सिंधुमिव** = சமுத்திரத்தைப்போல் **दुरिता**=பாபசமுத்திரத்தை **अति** (**तारयेत्**=கடக்கும்படி செய்யவேண்டும்.)

(2) **इन्द्र**=ஓ பரமேச்வரனே ! **पिशङ्गभृष्टिम्**=கொஞ்சம் சிவந்த நிறமுள்ளதாயும் **अंभृणम्**=சத்தப்போடுகிறதாயு மிருக்கிற **पिशाचिम्**=பிசாசத்தை **संमृण**=நாசஞ் செய்யவேண்டும். **सर्वम्**=சமஸ்தமான **रक्षः**=ராக்ஷஸர்களை **निबर्हय**=நாசஞ் செய்யவேண்டும். ஓ பரமேச்வரனே ! பூதம், பிரேதம், பிசாசம், யக்ஷஸ், ராக்ஷஸன்

முதலியவற்றால் பீடை ஏற்படாவண்ணம் என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று கருத்து.

(3) **देवा:**=ஓ தேவர்களே! **यजत्रा:**=தங்களை யாராதனஞ் செய்கின்றவர்களும் **तुष्टुवांस:**=ஸ்தோத்திரஞ் செய்கின்றவர்களுமான நாங்கள் **भद्रम्**=மங்களமான சமாசாரத்தை **कर्णेभि:**=காதுகளால் **शृणुयाम**=கேட்போமாக **अक्षभि:**=கண்களால் **भद्रम्**=மங்களத்தை **पश्येम** = பார்ப்போமாக. **स्थिरै:**=பலமுள்ளவைகளான **अङ्गै:**=அவயவங்களோடு கூடிய **तनूभि:**=சரீரங்களால் **यत्**=எந்த **आयु:**=ஆயுளானது **देवहितम्**=தேவதைகளைப் பூஜை செய்வதில் உபயோகப்படுதல் மூலம் நன்மையை விளைவிக்கக் கூடியதோ (**तत्**=அந்த ஆயுளை) **व्यशेम**=அடைவோமாக.

(4) **केशी**=கிரணங்களாகிற கேசங்களையுடையசூரியன் **अग्निम्**=அக்னியையும், **केशी**=சூரியன் **वृषम्**=ஜலத்தையும் **केशी**=சூரியன் **रोदसी**=பூமி ஆகாசம் இவைகளையும் **विभर्ति**=பரித்துவருகிறார். அக்னிஹோத்திரம் ஔபாஸனம் முதலியவைதிககர்மங்கள் காலை மாலை முதலிய காலங்களை யனுசரித்து அனுஷ்டிக்கவேண்டியதாய் விதிக்கப்பட்டிருப்பதாலும், அக்காலங்கள் சூரியகதியை யனுசரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருப்பதாலும், அக்கர்மங்களை யனுஷ்டிக்கும்பொழுது அக்னி விருத்தி செய்யப்படுவதாலும், அக்னியைக்குறித்து ஹவிஸ் ஹோமஞ் செய்யப்படுவதாலும் அக்னியைச் சூரியன் பரிப்பதாய் இங்கு சொல்லப்படுகிறதென்றும், கோடைக்காலத்தில் சூரியன் பூமியிலுள்ள ஜலங்களை தனது கிரணங்களால் கிரஹித்து வைத்துக்கொள்வதாலும், ஜலத்திற்குச் சுத்தி சூரியகிரண சம்பந்தத்தாலுண்டாக வேண்டி இருப்பதாலும் சூரியன் ஜலத்தை பரிப்பதாய் இங்கு சொல்லப்படுகிறதென்றும், பூமியிலும் ஆகாசத்திலுமுள்ள பிராணிகளுக்கு ஆரோக்யம் சூரியனாலுண்டாவதால் சூரியன் ஆகாசம் பூமி இவைகளை பரிப்பதாய் இங்கு சொல்லப்படுகிறதென்றும் கொள்ளவேண்டும். **केशी**=சூரியன் **विश्वम्** = சமஸ்தமான **स्व:**=சுவர்க்கம் முதலிய லோகங்களை **दृशे**=கண்ணால் பார்ப்பதற்



குத் தகுதியுள்ளதாக (**करोति**=செய்கிறான்.) மூன்று லோகத்தையும் பிரகாசப்படுத்துகிறார் என்று கருத்து.

மத்தியான்ஹத்திலும் **जातवेदसे** முதலிய 4 மந்திரங்களைப் படித்து உபஸ்தானஞ்செய்து பின் எழுதப்படும் மந்திரங்களைப் படித்தும் உபஸ்தானஞ் செய்யவேண்டும்—

उदुत्यं जातवेदसमिति त्रयोदशर्चस्य सूक्तस्य। कण्वपुत्रः प्रस्कण्व ऋषिः। नवाद्या गायत्री च्छन्दः। उद्वयं तमसस्परीति चतस्रोऽनुष्टुभः, सूर्यो देवता। उपस्थाने विनियोगः। १ उदुत्यं जातवेदसं देवं वहन्ति केतवः। दृशे विश्वाय सूर्यम्। २ अप त्ये तायवो यथा नक्षत्रा यन्त्यक्तुभिः। सूराय विश्वचक्षसे। ३ अदृश्रमस्य केतवो वि रश्मयो जनाँ अनु। भ्राजन्तो अग्नयो यथा। ४ तरणिर्विश्वदर्शतो ज्योतिष्कृदसि सूर्य। विश्वमाभासि रोचनम्। ५ प्रत्यङ् देवानां विशः प्रत्यङ्ङुदेषि मानुषान्। प्रत्यङ् विश्वं स्वर्दृशे। ६ येना पावक चक्षसा भुरण्यन्तं जनाँ अनु। त्वं वरुण पश्यसि। ७ वि द्यामेषि रजस्पृथ्वहा मिमानो अक्तुभिः। पश्यन् जन्मानि सूर्य। ८ सप्त त्वा हरितो रथे वहन्ति देव सूर्य। शोचिष्केशं विचक्षण। ९ अयुक्त सप्त शुन्ध्युवः सूरो रथस्य नप्त्यः। ताभिर्याति स्वयुक्तिभिः। १० उद्वयं तमसस्परि ज्योतिष्पश्यन्त उत्तरम्। देवं देवत्रा सूर्यमगन्म ज्योतिरुत्तमम्। ११ उद्यन्नद्य मित्रमह आरोहन्नुत्तरां दिवम्। हृद्रोगं मम सूर्य हरिमाणं च नाशय। १२ शुकेषु मे हरिमाणं रोपणाकासु दध्मसि। अथो हारिद्रवेषु मे हरिमाणं नि दध्मसि। १३ उदगादयमादित्यो विश्वेन सहसा सह। द्विषन्तं मह्यं रंधयन्मो अहं द्विषते रधम्। चित्रं देवानामिति ऋचस्य आङ्गिरसपुत्रः कुत्सः ऋषिः। त्रिष्टुप् च्छन्दः। सूर्यो देवता। सूर्योपस्थाने विनियोगः। १४ ओम्—चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्र-[illegible] वरुणस्याग्नेः। आप्रा द्यावापृथिवी अन्तरिक्षं सूर्य आत्मा जगतस्तस्थुषश्च। १५ सूर्यो देवीमुषसं रोचमानां मर्त्यो न योषामभ्येति पश्चात्। यत्रा नरो देवयन्तो युगानि वितन्वते प्रतिभद्राय भद्रम्। १६ भद्रा अश्वा

हरितस्सूर्यस्य चित्रा एतग्वा अनुमाद्यासः। नमस्यन्तो दिव आपृष्ठमस्थुः परि द्यावापृथिवी यन्ति सद्यः। १७ तत्सूर्यस्य देवत्वं तन्महित्वं मध्या कर्तोर्विततं संजभार। यदेदयुक्त हरित सधस्थादाद्रात्री वासस्तनुते सिमस्मै। १८ तन्मित्रस्य वरुणस्याभिचक्षे सूर्यो रूपं कृणुते द्योरुपस्थे। अनन्तमन्यद्रुशदस्यपाजः कृष्णमन्यद्धरितः संभरन्ति। १९ अद्या देवा उदितस्सूर्यस्य निरंहसः पिपृता निरवद्यात्। तन्नो मित्रो वरुणो मामहन्तामदितिस्सिन्धुः पृथिवी उत द्यौः।

(1) **उदुत्यंजातवेदसम्** என்ற மந்திரத்திற்கு 117பக்கம் 3வது நம்பரிட்ட பாராவில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

(2) **त्ये**=பிரசித்தர்களான **तायवः यथा**=திருடர்கள்போல **नक्षत्राः**=நக்ஷத்திரங்கள் **अक्तुभिः**=ராத்திரியோடு **विश्वचक्षसे**=லோகத்திற்குக் கண்போலிருக்கின்ற **सूराय**=சூரியனுடைய (**आगमनं दृष्ट्वा**=வரவைக்கண்டு) **अपयन्ति**=ஓடி மறைந்து விடுகின்றன. பகலில் நக்ஷத்திரங்கள் காணப்படுவதில்லை யாகையால், சூரியனுதிக்கப்போவதையறிந்தவுடன் திருடர்கள் எவ்விதம் ஓடி ஓரிடத்தில் பதுங்கிக் கொள்வார்களோ, இரவும் முடிவு பெற்றுவிடுமோ அவ்விதமே சூரியோதயமானவுடன் நக்ஷத்திரங்கள் சூரியனிட மிருந்து பயந்து ஓடிப் பதுங்கிவிடுகின்றன என்று சொல்லப்படுகிறது. அதாவது—நக்ஷத்திரங்களின் காந்தியை யடக்குகின்ற காந்தியுள்ளவனாக சூரியனிருக்கின்றான் என்று கருத்து.

(3) **भ्राजन्तः** = பிரகாசிக்கின்ற **अग्नयः यथा** = விளக்கு போல **अस्य**=இந்தச் சூரியனுடைய **केतवः** = அறிவுக்குச் சாதனமான **रश्मयः**=கிரணங்கள் **जनान्**=பிராணிகளை **अनु**=முறையே **व्यदृश्रम्**=பார்க்கின்றன. அதாவது பிரகாசப் படுத்துகின்றன. சூரியன் ஜகத்திற்கு பிரகாசத்தைக்கொடுத்து உபகரிக்கிறார் என்று கருத்து.

(4) **सूर्य**=ஓ சூரியனே! (**त्वम्**=நீர்) **तरणिः**=தம்மை உபாஸிப்பவர்களை ரோகத்தினின்றும் கரையேற்றுகிறவராகவும், **विश्वदर्शतः**=ஜகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கின்றவராகவும் **ज्योतिष्कृत्** = சந்திரன் நக்ஷத்திரம் முதலியவற்றிற்கு தேஜஸ்ஸைக் கொடுக்கின்றவராகவும் **असि** = இருக்கின்றீர். **विश्वम्** = எங்கும் வியாபரித்திருக்கின்ற ஆகாயத்தை **रोचनम्**=விளங்கும்படி **आभासि**=பிரகாசப்படுத்துகிறீர்.



(5) **हे सूर्य**=ஓ சூரியனே! **देवानाम्**=தேவர்களுடைய **विशः**=பிரஜைகளான "மருத்" என்ற தேவர்களுக்கு **प्रत्यङ्**=எதிராக **उदेषि**=உதயமடைகிறீர். **मानुषान्**=மனிதர்களுக்கு **प्रत्यङ्**=நேராக **उदेषि**=உதய மடைகிறீர். **विश्वम्**=விஸ்தாரமுள்ள **स्वः**=சுவர்க்க லோகத்தை **दृशे**=பார்ப்பதற்காக **प्रत्यङ्**=நேராக **उदेषि**=உதயமடைகிறீர். பூமி, அந்தரிக்ஷம், சுவர்க்கம் என்ற மூன்று லோகங்களிலு முள்ளப் பிராணிகளில் ஒவ்வொருவரும் எவ்விதம் சூரியன் தத்தமக்கு நேராகவே உதிப்பதாய் நினைப்பார்களோ அவ்விதம் சூரியனுதயமடைகிறார் என்று கருத்து.

(6) **पावक**=சுத்தியை யுண்டுபண்ணுகின்றவரும் **वरुण**=அனிஷ்டத்தை விலக்குகின்றவருமான ஓ சூரியனே **त्वम्**=நீர் **जनान्**=ஜனித்தப் பிராணிகளை **भुरण्यन्तम्**=சுமக்கின்ற இந்தப் பூலோகத்தை **येन**=எந்த **चक्षसा**=திருஷ்டியால் **अनुपश्यसि**=பார்க்கின்றீரோ (**तच्चक्षुः**=அந்தத் திருஷ்டியை **स्तुमः** = ஸ்தோத்திரஞ் செய்கின்றோம்.)

(7) **सूर्य**=ஓ சூர்யனே! (**त्वम्**=நீர்) **अहा**=பகல்களாலும் **अक्तुभिः**=ராத்திரிகளாலும் **मिमानः**=பிராணிகளின் ஆயுளை அளந்துகொண்டும், **जन्मानि**=ஜனித்தப்பிராணிகள் யாவற்றையும் **पश्यन्**=பார்த்துக்கொண்டும் **पृथु**=பெரிதான **रजः**=பூலோகத்தையும் **द्याम्**=த்யுலோகத்தையும் **व्येषि**=வியாபரிக்கிறீர். ஓ சூரியனே! உமது உதயாஸ்தமயங்களால் எல்லாப் பிராணிகளின் ஆயுளை அளக்கின்றவராகவும், எல்லாப்பிராணிகளும் செய்கின்ற நன்மை தீமை இவைகட்கு சாக்ஷியாயும் நீர் இருக்கின்றீர். அத்தகைய மஹிமை வாய்ந்த தங்களை நான் பலதடவை வணங்குகிறேன் என்று கருத்து.

(8) **देव**=பிரகாசிக்கின்றவரும் **विचक्षण**=எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துகிறவருமான **सूर्य**=ஓ சூரியனே! **शोचिष्केशम्**=தேஜஸ்ஸாகிற கேசங்களையுடையவரும் **रथे**=ரதத்திலிருப்பவருமான **त्वा**=உம்மை **सप्त**=ஏழு **हरितः**=குதிரைகள் **वहन्ति** = இழுத்துச் சொல்லுகின்றன. சூரியன் ஏழு குதிரைகள் கட்டிய ரதத்தில் ஏறிக்கொண்டு ஆகாசவீதியில் சஞ்சரிக்கிறார் என்று கருத்து.

(9) **रथस्य**=தேரை **नप्त्यः**=கீழே தள்ளிவிடாதவைகளான **सप्त**=ஏழு **शुंध्युवः**=பரிசுத்தங்களான பெண்குதிரைகளை **अयुक्त**=தமது ரதத்தில் கட்டி இருக்கிறார். **स्वयुक्तिभिः**=தம்மால் கட்டப்பட்ட **ताभिः**=அந்தக் குதிரைகளால் **याति**=வருகிறார். (**अतस्तस्मैहविर्देयम्**=ஆதலால் அவரைக்குறித்து ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண்டும்.)

(10) **उद्वयम्** என்ற மந்திரத்திற்கு 116வது பக்கம் 2வது பாராவில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது.

(11) **मित्रमहः**=எல்லாப் பிராணிகளுக்கும் நன்மையைச் செய்கின்ற காந்தியுள்ள **सूर्य**=ஓ சூரியனே **अद्य**=இப்பொழுது **उद्यन्**=உதயமடைந்துகொண்டு **उत्तरांदिवम्**=ஆகாசத்தின் மிகவும் உயர்ந்தபாகத்தை **आरोहन्**=அடைந்துகொண்டு **मम**=என்னுடைய **हृद्रोगम्**=மனக்கவலையையும் **हरिमाणं च**=ரோகத்தினால் சரீரத்திலேற்பட்ட பச்சை நிறத்தையும் **नाशय**=நாசஞ்செய்வாயாக. ஓ சூரியனே! மனத்திலுள்ள கவலையாகிற வியாதியையும், சரீரத்திலுள்ள வியாதியையும் விலக்கவேண்டும் என்று கருத்து.

(12) **मे**=என்னுடைய **हरिमाणम्**=ரோகம் காரணமாய் சரீரத்தில் ஏற்பட்டுள்ள பச்சை நிறத்தை **शुकेषु**=கிளிகளிடத்திலும் **रोपणाकासु**=பச்சை நிறமுள்ள ஓர்வகை பக்ஷிகளிடத்திலும் **दध्मसि**=வைத்துவிடுகிறோம். **अथो** = மேலும் **हारिद्रवेषु**=பச்சை நிறமுள்ளமரங்களில் **मे**=என்னுடைய **हरिमाणम्**=பச்சைநிறத்தை **निदध्मसि**=வைக்கிறோம். ரோகத்தினால் ஏற்படுகின்ற சரீரவைவர்ண்யம் எனக்கு உண்டாகவேண்டாம் என்று பிரார்த்திப்பதில் கருத்து.



(13) **अयम्**=இந்த **आदित्यः**=சூரியன் **विश्वेनसहसा** **सह**=தமக்கு எவ்வளவு பலமுண்டோ அவ்வளவு பலத்துடன் **मह्यम्**=என்னைக் குறித்து **द्विषन्तम्**=த்வேஷிக்கின்ற எனது சத்துருவை **रंधयन्**=ஹிம்ஸித்துக் கொண்டு **उदगात्**=வெளிக்கிளம்புகிறார். **अहम्**=நான் **द्विषते**=த்வேஷிக்கின்றவனிடம் **मोरधम्**=ஹிம்ஸையைச் செய்யப்போவதில்லை. ஓ சூரியனே! எனக்கு எனது சத்துருக்களைச் சிக்ஷிப்பதற்குச் சக்திகிடையாதாகையால் தாங்கள் தான் எனது சத்துருக்களை நாசஞ் செய்யவேண்டும் என்று கருத்து.

(14) **चित्रंदेवानाम्** என்ற மந்திரத்திற்கு 117 வது பக்கம் 4 என்று எண்ணிட்டபாராவில் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

(15) **रोचमानाम्** = பிரகாசிக்கின்ற **उषसं देवीम्** = உஷஸ் என்ற தேவியை **योषाम्**=அழகியஸ்திரீயை **मर्त्योन**=மனிதன்போல **पश्चात्**=பின்னால் **अभ्येति**=தொடர்ந்துவருகிறார். **यत्र**=எந்த உஷக்காலத்தில் **देवयन्तः**=தேவதைகளை யாராதிக்கின்ற **नरः**=மனிதன் **युगानि**=ஸ்திரீ புருஷன் இரண்டு பேராகச்சேர்ந்து **भद्राय**=நன்மையுண்டாவதற்காக **भद्रम्**=மங்களகரமான அக்னிஹோத்திரம் முதலிய கர்மத்தை **प्रतिवितन्वते**=அனுஷ்டிக்கின்றனரோ. சூரியனுதயமடைவதற்கு முன்னிரண்டு நாழிகைக் காலத்திற்கு உஷஸ். என்று பெயர். அதன் அபிமானி தேவதைக்கும் உஷஸ் என்றேபெயர். அது ஸ்திரீ வடிவமுள்ளது அந்த உஷக்காலஞ் சென்ற பிறகு சூரியனுதயமடைவதால் அழகிய ஸ்திரீ முன்சென்றால் காமுகனான புருஷன் எவ்விதம் அவளை அனுசரித்துச் செல்வானோ அவ்விதமே சூரியனும் உஷஸ் என்ற ஸ்திரீயைப் பின் தொடர்ந்து வருவதாய் வர்ணிக்கப்படுகிறது.

(16) **भद्राः**=மங்களகரங்களாயும் **एतग्वाः**=விரைவாய் கடக்கவேண்டிய மார்க்கத்தைக் கடக்கின்றவைகளாயும் **हरितः**=பச்சை நிறமுள்ளவைகளாயும் **अनुमाद्यासः**=யாவராலும் ஸ்துதிக்கத் தகுந்தவைகளாயுமிருக்கிற **सूर्यस्य** = சூரியனுடைய **अश्वाः**=குதிரைகள் **नमस्यन्तः**=நம்மால் வணங்கப்பட்டவைகளாய்க் கொண்டு **दिवः**=ஆகாசத்தினுடைய **पृष्ठम्**=மத்தியபாகத்தை **आस्थुः**=அடைந்திருக்கின்றன. **सद्यः**=ஒரு தினத்திற்குள் **द्यावापृथिवी** = த்யுலோகம்,

பூலோகம்இவைகளில் परि=நான்கு பக்கங்களிலும் यन्ति=சஞ்சரிக்கின்றன. பூமி ஆகாசமிவைகளை ஒருதினத்திற்குள் சூரியனுடைய குதிரைகள் கடக்கின்றன என்றுகருத்து.

(17) कर्तोः=அனுஷ்டிக்கப்படுகின்ற கர்மாவினுடைய मध्या=மத்தியில் विततम्=லோகமெங்கும் பரப்பப்பட்டிருந்த தனது கிரணங்களை सूर्यः=சூரியன் संजभार=சுருக்கித் தன்னிடத்திலேயே அடக்கிக் கொண்டுவிடுகிறார். इतियत्=என்பது யாதுண்டோ तत्=அது सूर्यस्य=சூரியனுடைய देवत्वम्=ஸ்வாதந்திரியம், तत्=அது महित्वम्=மஹிமை. பயிரிடுபவர்கள் முதலிய தொழிலாளர்கள் தமது தொழில் முடிவடையாவிடினும் சூரியன் அஸ்தமனத்தை யடைந்துவிட்டால் அவரவர்கள் தத்தமது தொழிலை மத்தியில் நெருத்திவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிடுகின்றனர். இவ்விதம் தொழில் செய்பவர்களை வேலையைச் செய்யும் படித்தூண்டுவதற்கும், மத்தியில் நெருத்திவிடும்படி செய்வதற்கும் சூரியனுடைய உதயாஸ்தமயங்களே நிமித்தமாகின்ற படியால் சூரியனுடைய மாஹாத்மியமும், ஸ்வாதந்திரியமும் மிகவும் மேலான தென்று சொல்லப்படுகிறது. यदेत्=எப்பொழுது हरितः=பச்சை நிறமுள்ள தனது குதிரைகளை सधस्थात्=தேரினின்றும் अयुक्त=அவிழ்து விட்டாரோ आत्=அப்பொழுதே रात्री=ராத்திரியானது वासः=வஸ்திரம் போல் பொருள்களை மறைக்கின்ற (तमः=இருட்டை) सिमस्मै=எல்லா உலகிலும் तनुते=பரப்புகிறாள். சூரியன் அஸ்தமன மடைந்தவுடன் இரவு வந்துவிடுகிறது. அப்பொழுது இருள் சூழ்ந்துக்கொள்ளுகிறது என்று சொல்லப்படுகிறது.

(18) तत्=உதயமடையும் பொழுது मित्रस्य=மித்திரன் என்ற தேவனுக்கும் वरुणस्य=வருணன் என்ற தேவனுக்கும் (मित्रस्य वरुणस्य என்று சொன்னதை உபலக்ஷணமாக வைத்துக்கொண்டு எல்லாப் பிராணிகளுக்கும் என்று பொருள் கொள்ளவேண்டும்.) अभिचक्षे=எதிராக द्योः=ஆகாசத்தினுடைய उपस्थे=நடுவில் सूर्यः=சூரியன் रूपम्=எல்லா வஸ்துக்களையும் பிரகாசப்படுத்துகின்ற தேஜஸ்ஸை कृणुते=செய்கிறார். अस्य=இந்தச் சூரியனுடைய हरितः=கிரணங்கள் अनन्तम्=முடிவற்றதாயும் रुशत्=பிரகாசிக்கின்



றனவாயும் अन्यत्=இருளைக் காட்டிலும் வேறுபட்டதாயும் पाजः=அதிக பலமுள்ள இருளை விலக்குகின்றதாயும் कृष्णम् = இருளை (स्वकीयगमनेन=தான்போய் விடுவதால் जनयन्तम्=உண்டு பண்ணுகிறதாயும் இருக்கிற तेजः=காந்தியை) संभरन्ति=உண்டு பண்ணுகின்றன. எந்தச் சூரியனுடைய கிரணங்கள் இத்தகைய காரியங்களைச் செய்கின்றனவோ அந்தச் சூரியனின் மஹிமையை வர்ணிக்க முடியுமோ என்பது கருத்து.

(19) देवाः=பிரகாசிக்கின்ற ஓ சூரிய கிரணங்களே! अद्य=இப்பொழுது सूर्यस्य=சூரியனுடைய उदिता=உதய மேற்பட்டபொழுது (इतस्ततः प्रसरन्तः=நான்கு பக்கங்களிலும் பரவுகின்ற यूयम्=நீங்கள்) अवद्यात्=நிந்திக்கத்தகுந்த निरंहसः=மிகுதியான பாபத்தினின்றும் निष्पृपत=நன்றாய்க்காப்பாற்ற வேண்டும். तत्=என்னால் பிரார்த்திக்கப்பட்ட இவ்விஷயத்தை नः=எங்களுக்கு मित्रः=மித்திரன் என்ற தேவனும் वरुणः=வருணன் என்ற தேவனும், अदितिः=அதிதி என்பவளும் सिंधुः=நதியின் அபிமானி தேவதையும், पृथिवी=பூதேவியும், उत=மேலும் द्यौः=த்யுலோகாபிமானிதேவதையும் मामहन्ताम् = சம்மதிக்கவேண்டும். சூரியனும், மித்திரன் முதலிய தேவர்களும் பாபங்களை விலக்கவேண்டும்.

सविता पश्चात्सविता पुरस्तात्सवितोत्तरात्तात्सविताधरात्तात्।
सविता नस्सुवतु सर्वतातिं सविता नो रासतां दीर्घमायुः ॥
ओं शान्तिः शान्तिः, शान्तिः ।

सविता=சூரியன் पश्चात्=மேற்கு திசையிலும் सविता=சூரியன் पुरस्तात्=கிழக்குத்திசையிலும் सविता=சூரியன் उत्तरात्तात्=வடக்குத் திசையிலும் सविता=சூரியன் अधरात्तात्=கீழ்த்திசையிலும் स्थित्वा = இருந்துகொண்டு सर्वतातिम् = சமஸ்தமான அபீஷ்டங்களையும் सुवतु=கொடுக்கவேண்டும். सविता=சூரியன் दीर्घमायुः=நீண்ட ஆயுளை रासताम्=கொடுக்கவேண்டும். शान्तिः=ஆத்யாத்மிக தாப நிவிருத்தியும், शान्तिः=ஆதிதைவிக தாப நிவிருத்தியும் शान्तिः=ஆதிபௌதிக தாப நிவிருத்தியும் (भवतु உண்டாக வேண்டும்.)

இனி ஸாமவேதிகளின் உபஸ்தான மந்திரங்கள் எழுதப்படு

கின்றன. காலையிலும் மாலையிலும் பின் எழுதப்படும் மந்திரங்களைப்படித்து உபஸ்தானஞ் செய்யவேண்டும் அவையாவன—

१ यशोऽहं भवामि ब्राह्मणानां यशो राज्ञां यशो विशाम्। यशस्सत्यस्य भवामि। भवामि यशसां यशः। २ पुनर्मां यन्तु देवता। या मदपचक्रमुः। महस्वन्तो महान्तो भवामि। अस्मिन् पात्रे हरिते सोमपृष्ठे। ३*रूपं रूपं मे दिश प्रातरह्नस्य तेजसः। सायमह्नस्य तेजसः। ४ अन्नमुग्रस्य प्राशिषम्। अस्तु वयि मयि त्वयीदम्। अस्तु त्वयि मयीदम्। यदिदं पश्यामि चक्षुषा। त्वया दत्तं प्रभासया। तेन माभुंज। तेन भुक्षिषीय तेन माविश। ५ †अहर्नो अत्यपीपरद्रात्रिर्नो अतिपारयत्। रात्रिर्नो अत्यपीपरदहर्नो अतिपारयत्। ६ आदित्य नावमारोक्षं पूर्णामपरिपादिनीम्। अच्छिद्रां पारयिष्णवीं शतारित्रां स्वस्तये। ओंनम आदित्याय नम आदित्याय नम आदित्याय। उद्यन्तं त्वाऽऽदित्यानूदीयासम्। प्रतितिष्ठन्तं त्वाऽऽदित्यानु प्रतितिष्ठासम्॥ इति सायं प्रातः॥

(ப-ரை) १ अहम्=நான் ब्राह्मणानाम् = பிராம்மணர்களுள் यशः=அதிகப் புகழ் பெற்றவனாக भवामि=ஆவேனாக. राज्ञाम्=அரசர்களுள் यशः=யசஸ்வியாகவும் विशाम्=வைச்யர்களுள் यशः=யசஸ்வியாகவும் सत्यस्य=सत्, त्यत् சுவரூபமான அதாவது—பஞ்சபூதாத்மகமான பிரபஞ்சத்திற்குள் यशः=யசஸ்வியாகவும் भवामि=ஆவேனாக. ஓ தேவர்களே! இவ்வுலகிலுள்ளவர்களனைவரிலும் நான் நற்புகழ் பெறும்படி அருள்புரியவேண்டும் என்று கருத்து.

(2) या=எந்த தேவதைகள் मत्=என்னிடமிருந்து अपचक्रमुः=விலகினார்களோ அதாவது எனக்கு அனுக்கிரஹஞ் செய்யும் விஷயத்தில் ஔதாசீன்யத்தை வஹிக்கின்றனரோ (ताः=அந்த) देवता=தேவதைகள் पुनः=திரும்பவும் मा=என்னை यन्तु=அடையட்டும். सोमपृष्ठे=கர்மஞ் செய்யுமிடமாயும் हरिते=ஜனித்தவர்களின்

* रूपं रूपं मे दिश प्रात रह्नस्य तेजसः என்று காலையிலும் रूपं रूपं मे दिश सायमह्नस्य तेजसः என்று மாலையிலும் மாற்றிப்படிக்கவேண்டும்.

† अहर्नो अत्यपीपरत् என்றதைக் காலையிலும் रात्रिर्नो अत्यपीपरत् என்றதை மாலையிலும் படிக்கவேண்டும்.



பாபத்தைப் போக்குகின்றதாயுமிருக்கிற अस्मिन्पात्रे=உத்தமமான இந்தக் கர்மபூமியில் महस्वन्तो=காந்தியுள்ளவனாகவும் महान्तः=எதிலும் பெரியவனாகவும் भवामि=ஆவேனாக.

(3) प्रातः=காலையில் अह्नस्य=பகற்கபிமானியான சூரியனது तेजसः=காந்தியினுடைய रूपम्=சுவரூபத்தையும் सायम्=மாலையில் अह्नस्य=பகற் கபிமானியான சூரியனுடைய तेजसः=காந்தியினுடைய रूपम्=சுவரூபத்தையும் मे=எனக்கு दिश=கொடுப்பீர்களாக. ஓ தேவர்களே! பகல் இரவு எந்நேரத்திலும் சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற சரீர காந்தியைக் கொடுத்தருள வேண்டும் என்று கருத்து.

(4) वयि=நான் उग्रस्य=கெட்டகாரியஞ் செய்கின்றவனுடைய (यत्=எந்த) अन्नम्=அன்னத்தை प्राशिषम्=புஜித்தேனோ इदम्=அந்தத்தோஷம் मयित्वयि=என்னிடத்திலும் உம்மிடத்திலும் अस्तु=இருக்கட்டும். त्वया=உம்மால் प्रभासया=வஸ்துக்களைப் பிரகாசப்படுத்தும் வாயிலாக दत्तम्=கொடுக்கப்பட்ட यदिदम्=எந்தப் பார்க்கக்கூடாத வஸ்துவை चक्षुषा=கண்ணால் पश्यामि=பார்க்கின்றேனோ (तेनजातम्=அதன் மூலம் நேர்ந்த) इदम्=இந்தப்பாபம் त्वयि, मयि=உம்மிடத்திலும், என்னிடத்திலும் अस्तु=இருக்கட்டும். ஓ சூரியனே! உம்மால் தூண்டப்பட்டே நான் உண்ணக்கூடாத உணவுகளை யுட்கொள்வது, பார்க்கக்கூடாத வஸ்துக்களைப்பார்ப்பது முதலிய பாபகாரியங்களைச் செய்வதால் அந்தப் பாபத்தில் பங்கு உமக்கும் உண்டு என்று கருத்து. तेन=மேற்சொல்லிய பாபங்காரணமாக माभुंज=என்னைப் புஜித்துவிடாதே. तेन=அதனால் माभुक्षिषीय=அழிந்து விடும்படி செய்யாதே. तेन=அதனால் (मयि=என்னிடம் कोपेन = கோபத்துடன்) माविश=பிரவேசிக்காதே. ஓ சூரியனே! உமது தூண்டுதலாலேயே நான் அக்காரியங்களைச் செய்திருப்பதால் என்னிடம் கோபங்கொண்டு அக்காரியத்திற்காக எனக்குத் தீங்கிழைப்பது உசிதமல்ல என்று கருத்து.

(5) अहः=பகற்கபிமானியான தேவன், அதாவது சூரியன் नः=எங்களை अत्यपीपरत् = சகலகாம சம்பூர்ணர்களாகச் செய்ய

வேண்டும். रात्रिः=ராத்திரியின் அபிமானி தேவன், அதாவது வருணன் नः=எங்களை अतिपारयत्=துக்க சாகரத்தினின்றும் கரை ஏற்றி விடவேண்டும். रात्रिः=ராத்திரியின் அபிமானிதேவன் नः= எங்களை अत्यपीपरत्=சகலகாமசம்பூர்ணர்களாகச் செய்யவேண்டும். अहः=பகற்கபிமானிதேவன், नः=எங்களை अतिपारयत्=துக்க சாகரத்தினின்றும் கரை ஏற்றிவிடவேண்டும்,

(6) आदित्य=ஓ சூரியனே! पूर्णाम्=அபீஷ்டங்களால் நிறைந்ததாயும், अपरिपादिनीम्=நாலாபக்கங்களிலும் செல்லுவதற்குத் தகுதியுள்ளதாயும், अच्छिद्राम्=அபமிருத்யுவாகிற துவாரமற்றதாயும் पारयिष्णवीम्=சம்சார சாகரத்தின் கரையை அடைவிக்கிறதாயும் शतारित्राम्=நூற்றுக்கணக்கான உபாயங்களாகிற துடுப்புகளையுடையதாயுமிருக்கிற नावम्=சரீரமாகிற ஓடத்தை स्वस्तये=மோக்ஷாந்தமான புருஷார்த்தத்தை யடைவதற்காக आरोक्षम्=அடையவேண்டும். ஓ சூரியனே! இந்தச் சரீரம் மோக்ஷாந்தமான புருஷார்த்தத்தை யடைவதற்குச் சாதனமாக ஆகும்படி அனுக்கிரஹிக்கவேண்டும். ओम्=பிரணவத்தின் பொருளான பரப்பிரும்மத்தின் சுவரூபியான आदित्याय=சூரியனுக்கு नमः=நமஸ்காரம். இவ்விதமே மற்று மிரண்டுதரம் படிக்கப்பட்டிருக்கின்ற आदित्याय नमः என்றதற்குப் பொருள் கொள்ளவேண்டும். ஆதராதிசயத்தால் மூன்றுதடவை நமஸ்காரஞ் செய்யப்படுகின்றது. आदित्य=ஓ சூரியனே! उद्यन्तम्=உதயமடைகின்ற त्वा=உம்மை अनु=அனுசரித்து उदीयासम्=விருத்தியடையவேண்டும். प्रतितिष्ठन्तम्=பிரதிஷ்டையை யடைகின்ற त्वा=உம்மை अनु=அனுசரித்து प्रतितिष्ठासम्=பிரதிஷ்டையை யடையவேண்டும். ஓ சூரியனே நீர் எவ்விதம் உதயமடைந்த பிறகு கிரமமாய் விருத்தியை யடைகின்றீரோ அவ்விதமே நானும் கிரமமாய் விருத்தியடைய வேண்டும். நீர் எவ்விதம் லோகத்தில் புகழ் பெற்றிருக்கின்றீரோ அவ்விதமே நானும் புகழ் பெறவேண்டும் என்று கருத்து.

சாமவேதிகள் மத்தியாங்ஹத்தில் அடியில் எழுதப்படும் மந்திரங்களைப் படித்து உபஸ்தானஞ் செய்யவேண்டும்—



आदित्यनावमित्यस्य—परमेष्ठी ऋषिः, अनुष्टुप् च्छन्दः, आदित्यो देवता.। आदित्योपस्थाने विनियोगः। (मन्त्रः) १ आदित्य नावमारोक्षं पूर्णामपरिपादिनीम्। अच्छिद्रां पारयिष्णवीं शतारित्रां स्वस्तये। ओम्, नम आदित्याय, नम आदित्याय, नम आदित्याय। उदु त्यमित्यस्य—सूर्य ऋषिः, गायत्रीच्छन्दः, सूर्यो देवता, अर्घ्यप्रदाने विनियोगः। (मन्त्रः) २ ओम्—उदुत्यं जातवेदसं देवं वहन्ति केतवः। दृशे विश्वाय सूर्यम्। [इत्यर्घ्यं दत्वा आकाश मुद्रां कृत्वा] ३ चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः। आप्रा द्यावापृथिवी अन्तरिक्षं सूर्य आत्मा जगतस्तस्थुषश्च। ४ वृक्ष इव पक्वस्तिष्ठसि सर्वान् कामान् भुवस्पते। यस्त्वैवं वेद तस्मै मे भोगान् धुक्ष्वाक्षतान् बृहन्नृतं सत्ये प्रतिष्ठितम्। ५ भूतं भविष्यता सह। आकाश उपनिरज्यतु मह्यमन्नमथो श्रियम्। अभि भागोऽसि सर्वस्मिंस्तदु सर्वं त्वयि श्रितम्। ६ तेन सर्वो मा विवासन विवासय। कोश इव पूर्णो वसुना त्वं प्रीतो दधसे धनम्। अदृष्टो दृष्टमाभर सर्वान् कामान् प्रयच्छमे। ७ आकाशस्यैष आकाशो यदेतद्भादि मण्डलम्। एवं त्वा वेद यो वेदेशानेशान् प्रयच्छ मे। ओं भूरित्यस्य—परमेष्ठी ऋषिः, सूर्यो देवता, उपस्थाने विनियोगः। ८ ओं भूर्भुवस्स्वरोम्। सूर्य इव दृशे भूयासं, अग्निरिव तेजसा, वायुरिव प्राणेन, सोम इव गंधेन बृहस्पतिरिव बुद्ध्या, अश्विनाविव रूपेण इन्द्राग्नी इव बलेन ब्रह्मभाग एवाहं भूयासं, पाप्मभागा मे द्विषन्तः॥

आदित्यानावम् என்றமுதல்மந்திரத்திற்கு 134வது பக்கத்திலும் उदुत्यंजातवेदसम्=என்ற இரண்டாவது மந்திரத்திற்கு 117வது பக்கம் 3வது எண்ணுள்ள பாராவிலும் चित्रंदेवानाम्=என்ற மூன்றுவது மந்திரத்திற்கு 117வது பக்கம் 4வது எண்ணுள்ள பாராவிலும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

(4) भुवस्पते=புவர்லோகபதியான ஓ சூரியனே! (त्वम्=நீர்) पक्वः=பழங்கள் நிறைந்த वृक्षइव=மரம்போல तिष्ठसि=இருக்கின்றீர்.

यः,तु=எவன் एवम्=மேற்சொல்லியப் பிரகாரம் वेद=உம்மை அறிவனோ तस्मै=அவனுக்கு सर्वान्=சமஸ்தமான कामान्=அபீஷ்டங்களை (यच्छसि=கொடுக்கின்றீர்.) बृहन्=தமது கிரணங்களால் உலகமெங்கும் வியாபரித்திருக்கின்றவரும் ऋतम् = அழிவற்றவரும் सत्ये=பாஞ்ச பௌதிகமான ஜகத்தில் प्रतिष्ठितम्=நிலைபெற்றவருமான (त्वम्=நீர்) मे=எனக்கு अक्षतान्=குறைவற்ற भोगान्=போகங்களை धुक्ष्व=கொடுப்பீராக.

(5) आकाशः=எங்கும் பிரகாசிக்கின்ற சூரியன் भूतम्=உண்டான வஸ்துக்களை भविष्यता=உண்டாகப்போகிற வஸ்துவுடன் सह=கூட उपनिरज्यतु=விருத்திசெய்யட்டும். உண்டான நல்லவஸ்துக்களையும் இனி உண்டாகப்போகின்ற நல்லவஸ்துக்களையும் சூரியன் எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கருத்து. (सः=அந்தச் சூரியன்) अथो=மேலும் मह्यम्=எனக்கு अन्नम्=அன்னத்தையும் श्रियम्=பொருளையும் (ददातु=கொடுக்கட்டும்) (सूर्य=ஓ சூரியனே! त्वम्=நீர்) अभिभागः=எங்கும் யாவராலும் ஸேவிக்கத்தகுந்தவராக असि=இருக்கின்றீர். तद्=ஆகையினால் सर्वम्=சமஸ்தலோகமும் त्वयि=உம்மிடம் श्रितम्=வஸிக்கின்றது.

(6) तेन=சகலலோகமும் உம்மையே அண்டி இருப்பதால் सर्वः=எல்லாவஸ்துக்களின் சுவரூபியான (त्वम्=நீர்) सर्वेण=சமஸ்தமான அபீஷ்டங்களோடு मा विवासन=என்னை பிரித்து விடாமலிருப்பீராக. किन्तु=ஆனால் विवासय=சேர்த்துவையும். என்னிடத்திலிருக்கின்ற போக்ய வஸ்துக்களில் ஒன்றுகூட என்னை விட்டு விலகாமலிருக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டும் என்று கருத்து. वसुना=பணத்தினால் पूर्णः=நிறைந்த कोश इव=பொக்கிஷம்போல प्रीतः=பிரீதியையடைந்த त्वम्=நீர் धनम्=வேண்டிய பொருளை दधसे=கொடுக்கிறீர். अदृष्टः=கண்ணில்படாமல் மறைந்திருந்துகொண்டே दृष्टम्=திருஷ்டமானபொருளை आभर=சம்பாதித்து வைப்பீராக. सर्वान् कामान्=சமஸ்தமான அபீஷ்டங்களையும் मे=எனக்கு கொடுப்பீராக.

(7) ईशान=சகல ஜகத்திற்கும் நாயகனான ஓ சூரியனே! यदेतन्मण्डलम्=யாவராலும் பார்க்கப்படுகின்ற யாதொரு மண்டலமுண்டோ एत=இந்த மண்டலம் आकाशस्य எங்கும் வியாபரித்திருக்கின்ற ஆகாசத்திற்கும் आकाशः=பிரகாசத்தைக் கொடுக்கின்றதாக भाति=பிரகாசிக்கின்றது. यः=எந்த (अहम्=நான்) एवम्=இவ்விதம் वेद=அறிந்திருக்கின்றேனோ (तस्मै=அந்த) मे = எனக்கு ईशान्=அபீஷ்டங்களை प्रयच्छ=கொடுப்பீராக. ஓ சூரியனே! உமது மண்டலம் ஆகாசத்திற்கும் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது பற்றி உமது மஹிமை அளவிட முடியாதது. அத்தகைய மஹிமைவாய்ந்த உம்மை நான் தியானஞ் செய்வதால் எனக்கு அபீஷ்டங்களைக் கொடுக்கவேண்டும்.



(8) दृशे=திருஷ்டியில் सूर्य इव=சூர்யனைப்போல் भूयासम्=ஆகவேண்டும். சூரியன் எவ்விதம் நுட்பமான பொருளையும் பிரகாசப்படுத்துகிறானோ அவ்விதமே எனது திருஷ்டிக்கும் நுட்பமான பொருளைக்கிரஹிக்கும் திறமை உண்டாகவேண்டும் என்று கருத்து. तेजसा=சரீர காந்தியால் अग्निरिव=நெருப்பைப்போலவும், प्राणेन=வேகமானகதியால் वायुरिव=காற்றுப்போலவும் गंधेन=வாசனையால் सोम इव=சோமன் என்ற தேவன்போலவும் बुद्ध्या=புத்தியால் बृहस्पतिरिव=பிருஹஸ்பதியைப் போலவும் रूपेण=சரீரசோபையால் अश्विनाविव=அச்வினீ தேவர்கள் போலவும் बलेन=பலத்தினால் इन्द्राग्नी इव=இந்திரன் அக்னி என்ற தேவர்கள் போலவும் (भूयासम्=ஆகக்கடவேன்) (हे भगवन्=ஓ பகவானே!) ब्रह्मभागे=ஸ்ரீமந்நாராயணனுடைய லோகத்தில் एव=நிச்சயமாய் भूयासम्=வாசஞ் செய்யக்கடவேன் मे=என்னுடைய द्विषन्तः=சத்துருக்கள் पाप्मभागाः=எனது பாபத்தில் பங்குள்ளவர்களாக (भवन्तु=ஆகட்டும்.)

இவ்விதம் மூன்று வேதிகளும் அவரவர்க்கு ஏற்பட்ட மந்திரங்களைப்படித்து மூன்று காலங்களிலும் உபஸ்தானஞ் செய்துகொண்டுப் பிறகு—

संध्यायै नमः। सावित्र्यै नमः। गायत्र्यै नमः। सरस्वत्यै नमः॥

என்று சொல்லி எந்தத்திக்கை நோக்கி ஜபஞ்செய்கிறானோ அந்தத்திக்கிலிருந்து முறையே நான்கு திக்கிலும் ஸந்தியாபிமானி தேவதை, சாவித்திரீ என்ற தேவதை, காயத்திரீ என்ற

தேவதை ஸரஸ்வதீ என்ற தேவதை இவர்களிருப்பதாகப் பாவித்து அந்தந்தத்திக்கை நோக்கி அஞ்சலிபந்தஞ் செய்யவேண்டும். ஷடி தேவதைகளைக் குறித்து அஞ்சலிபந்த ரூபமான நமஸ்காரத்தைச் செய்கின்றேன் என்று பொருள். பிறகு **सर्वाभ्यो देवताभ्यो नमो नमः** என்று சொல்லி எல்லாத் தேவர்களையும் குறித்து அஞ்சலிபந்தம் செய்யவேண்டும். பிறகு—

कामोऽकार्षीदिति महामन्त्रस्य । वामदेव ऋषिः। गायत्री च्छन्दः। परमात्मा देवता । समस्तपापक्षयार्थे जपे विनियोगः । (मन्त्रः) कामोऽकार्षीन्मन्युरकार्षीन्नमो नमः।

என்ற மந்திரத்தை ஜபிக்கவேண்டும். இதன்பொருள் (**भोदेवाः**=ஓ தேவர்களே! **पापम्**=பாபத்தை) **कामः**=ஆசைக்கு அபிமானியானதேவன் **अकार्षीत्**=செய்தான். **मन्युः**=கோபத்திற்கு அபிமானிதேவதை **अकार्षीत्**=செய்தது. **नमो नमः**=உங்களுக்கு அடிக்கடி நமஸ்காரம். ஓ தேவர்களே! நான் (சுத்தஜீவன்) சுயமாய் எவ்வித பாபகார்யத்தையுஞ் செய்யவில்லை. காமம், கோபம் இவைகளால் தூண்டப்பட்டே பாபகார்யங்களைச் செய்திருக்கிறேன். ஆதலால் அந்தக் காமம் குரோதம் இவைகளை என்னிடமிருந்து விலக்கி அருள் புரியவேண்டும். அதற்காக உங்களைப் பலதடவை வணங்குகிறேன் என்று கருத்து.

பிறகு தேவர்களைக்குறித்து **अभिवादनम्** செய்யவேண்டும். **अभिवादये—अभि**=நமஸ்கரிக்கின்ற என்னைக்குறித்து **वादये**=க்ஷேமவார்த்தையைத் தாங்கள் சொல்வதற்குத் தக்கபடி நான் நடந்துகொள்ளுகிறேன் என்று அதன் பொருள். அதாவது நாம் ஒரு மஹானிடம் சென்று அவரது சரணங்களைப் பிடித்துக் கொண்டால் அவர் மனமிரங்கி "நீ க்ஷேமத்தை யடைவாயாக" என்று கூறுவார். ஆகையால் அவர்கள் அவ்விதம் கூறும்படி நாம் அவர்கள் பால் நடந்துகொள்ளும் முறையே அபிவாதனம் எனப் பெறப்பட்டது. அவ்விதமவர்கள் நம்பால் கருணை கொண்டு வார்த்தையால் அனுக்கிஹிரக்குமுன் நமது குலம், கோத்திரம், யோக்யதை, பெயர் முதலியவற்றைத் தெரிந்து கொள்ள அவர்கள் விரும்புவார்களாதலாலும், நாமகரணஞ் செய்யப்பட்டகாலத்தில் நமது பிதாவினல் ரஹஸ்யமாய் உபதேசிக்கப்பட்ட பெயரைத்தெரிந்து அப்பெயரைக் குறிப்பிட்டே அனுக்கிரஹிக்கவேண்டும் என்று சாஸ்திரங்கள் வற்புறுத்துவதாலும் நாம் நமது கோத்திரம், சூத்திரம், கோத்திர பிரவர்த்தகர்களான ருஷிகள், சாகை (ருக், யஜுஸ், ஸாம என்ற வேதங்களுள் எந்தவேதத்தை அத்யயனஞ் செய்கின்றோமோ அந்த வேதம்) இவைகளை அம்மஹான்களிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டும். அபிவாதனஞ் செய்யும்பொழுது சொல்லவேண்டியவைகள் ஒவ்வொரு சூத்திரக்காரர்களுக்கும் ஒவ்வோர் விதமாக இருக்குமாதலால் அவரவர்களின் உபதேச முறைப்படி அதைச் செய்யவேண்டும். உதாஹரணத்திற்காக ஒன்றைமட்டும் எழுதி காண்பிக்கின்றோம்—



अभिवादये—वैश्वामित्र, आघमर्षण, कैशिक त्रयार्षेयप्रवरान्वितः कौशिकगोत्रः द्राह्यायणसूत्रः सामशाखाध्यायी श्रीरामनाथशर्मा नामाहमस्मि भोः ॥

ஓ பெரியவரே! வைச்வாமித்திரர், ஆகமர்ஷணர், கௌசிகர் என்ற மூன்று கோத்திர பிரவர்த்தகர்களான ருஷிகளையுடையவனும், கௌசிக கோத்திரத்தில் பிறந்தவனும், திராஹ்யாயண சூத்திரமுள்ளவனும் சாமவேதத்தை அத்யயனஞ் செய்பவனும் ராமனாதன் என்று பெயருள்ளவனுமான நான் என்னைக்குறித்துத்தாங்கள் க்ஷேம வார்த்தையைச் செல்லுவதற்குத் தக்கபடி நடந்துகொள்ளுகிறேன்—அதாவது தங்கள் சரணாரவிந்தங்களில் நமஸ்கரிக்கின்றேன் என்று மொத்தமான கருத்து. பிறகு

प्राच्यै दिशे नमः। दक्षिणायै दिशे नमः।

प्रतीच्यै दिशेनमः। उदीच्यै दिशे नमः।

என்று சொல்லிக் காலையிலும் மத்தியாங்ஹத்திலும் கிழக்கு திசை முதல் முறையே நான்கு திக்குகளைக்குறித்தும், மாலையில் **प्रतीच्यैदिशेनमः** என்று மேற்குதிசை முதல் தெற்குதிசை ஈராக நான்குதிக்குகளைக் குறித்தும் அஞ்சலிபந்தம் செய்யவேண்டும். அந்தந்தத் திக்குகளுக்கு அதிபர்களான தேவர்களைக் குறித்து நமஸ்கரிக்கிறேன் என்று தாத்பர்யம். பிறகு

ऊर्ध्वाय नमः। अधराय नमः। अन्तरिक्षाय नमः। भूम्यै नमः।
ब्रह्मणे नमः। विष्णवे नमः। रुद्राय नमः। यमाय नमः॥

என்று சொல்லி முறையே மேல்கீழ் என்றதிக்குகளுக் கபிமானி தேவர்களைக் குறித்தும், பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், யமன் என்ற தேவர்களைக்குறித்தும் அஞ்சலிபந்த ரூபமான நமஸ்காரத்தைச் செய்யவேண்டும். பிறகு

यमायऋतमित्यनयोः—परमेष्ठी ऋषिः। अनुष्टुप् छन्दः, यमब्रह्मणी देवते, उपस्थाने विनियोगः। (मन्त्रः) ओम्, यमाय धर्मराजाय मृत्यवे चान्तकाय च। वैवस्वताय कालाय सर्वभूतक्षयाय च। औदुंबराय दध्नाय नीलाय परमेष्ठिने। वृकोदराय चित्राय चित्रगुप्ताय वै नमः। २ ऋतꣳ सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम्। ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमो नमः॥

மேற்படித்த இரண்டுமந்திரங்களுள் முதல்மந்திரத்தை தெற்கு முகமாக நின்றுபடித்து யமனைஸ்துதிக்கவேண்டும். (1) யமன், தர்மராஜன், மிருத்யு, அந்தகன், வைவஸ்வதன், காலன், சர்வபூதக்ஷயன், ஔதும்பரன், தத்னன், நீலன், பரமேஷ்டி, விருகோதரன், சித்திரன் சித்திரகுப்தன், என்று பெயருள்ள யமதர்மராஜனுக்கு நமஸ்காரம்.

(2) இரண்டாவது மந்திரத்தால் வடக்குமுகமாக நின்றுகொண்டு மஹாதேவனை ஸ்துதிக்கவேண்டும். **ऋतं, सत्यम्**=பாரமார்த்திகசத்யத்வம் என்ற தர்மமுள்ளதாயிருக்கிற **यत्परंब्रह्म**=எந்த பரப்பிரும்மமுண்டோ (**तत्**=அந்தப்பிரும்மம் **भक्तानुग्रहाय**=பக்தர்களை யனுக்கிரஹிப்பதற்காக) **कृष्णपिङ्गलम्**=கருப்பு சிவப்பு நிறமுள்ளதும், **ऊर्ध्वरेतम्** = யோகசக்தியால் தனது வீர்யத்தை பிரும்மரந்திரத்தில் தரித்ததும், **विरूपाक्षम्**=மூன்றுகண்ணுள்ளதுவுமான **पुरुषम्**=உமாமஹேச்வரவடிவமாக (**भवति**=ஆகின்றது.) **विश्वरूपाय**=சகல ஜகத்திற்கும் காரணமாயிருப்பதுபற்றி எல்லா உலக வடிவமான மஹாதேவனுக்கு **नमो नमः**=பலதடவை நமஸ்காரம். பாதிபாகத்தில் பார்வதி, பாதிபாகத்தில் மஹேச்வரன் என்று அர்த்தனாரீச்வரவடிவமாய் இருக்கும் சந்தர்ப்பத்தில் பார்



வதியின் பாகம் கருத்தும் மஹேச்வரபாகம் சிவந்துமிருப்பதால் **कृष्णपिङ्गलम्** என்று சொல்லப்பட்டது. பிறகு காலையிலும், மத்யாங்ஹத்திலும் கிழக்கு முகமாகவும், மாலையில் மேற்கு முகமாகவும் திரும்பிநின்று கொண்டு பின் எழுதப்படுவனவற்றைப் படிக்கவேண்டும்.

१ नर्मदायै नमः प्रातर्नर्मदायै नमो निशि। नमोऽस्तु नर्मदे तुभ्यं त्राहि मां विषसर्पतः। २ अपसर्प सर्प भद्रंते दूरं गच्छ महायशाः। जनमेजयस्य यज्ञान्ते अस्तीकवचनं स्मरन्। ३ जरत्कारोर्जरत्कार्वां समुत्पन्नो महायशाः। अस्तीकस्सत्यसंधो मां पन्नगेभ्योऽभिरक्षतु।

என்ற சுலோக ரூபமான மந்திரத்தால் சர்ப்பபாதை விலக வேண்டுமென்றுப் பிரார்த்திக்க வேண்டும். அவற்றுள் முதல் சுலோகத்தால் நர்மதை என்ற நதியின் அபிமானி தேவதையும், இரண்டாவது மந்திரத்தால் சர்ப்பராஜனும், மூன்றாவது மந்திரத்தால் அஸ்தீகர் என்ற மஹருஷியும் பிரார்த்திக்கப்படுகின்றனர். (1) காலையில் நர்மதை என்ற நதியின் அபிமானி தேவதைக்கு நமஸ்காரம். இரவில் நர்மதைக்கு நமஸ்காரம். ஓ நர்மதா தேவியே। உனக்கு மற்றுமுள்ள நேரங்களிலும் நமஸ்காரம். என்னை விஷப்பாம்புகளிடமிருந்து காப்பாற்றுவாயாக.

(2) ஜனமேஜயன் என்ற மஹாராஜன் சர்பயாகம் என்ற கர்மாவில் பாம்புகளை எல்லாம் அழித்துக்கொண்டிருக்கும் பொழுது வாஸுகியால் தூண்டப்பட்ட அஸ்தீகர் என்ற மஹருஷி ஜனமேஜயரின் யாக பூமி சென்று யாகத்தை நிறுத்தும்படிப் பிரார்த்தித்தார். அதன் பேரில் ஜனமேஜயமஹாராஜன் யாகத்தை நிறுத்தினான். அப்பொழுது பாம்புகளைப்பார்த்து அஸ்தீகர் என்ற மஹருஷி "நம்மை எவர்கள் நினைக்கிறார்களோ அவர்கள் சமீபம் நீங்கள்போகக்கூடாது" என்று பாம்புகளைப்பார்த்து உத்தரவிட்டதாகவும், அதன்படியே எல்லாப்பாம்புகளும் பிரதிக்ஞை செய்துகொடுத்து "இவ்வுத்தரவை எந்தப்பாம்பு மீறி கடக்கின்றதோ அதன் தலை நூறு சுக்காக வெடித்துப்போகக்கடவது" என்று சபதங் கூறியதாகவும் மஹாபாரதத்தில் சொல்லப்

சபலமாயாவதற்காக ஜபிக்கவேண்டும். பிறகு ஒருதடவை ஆசமனஞ்செய்து संध्याजपात्मकं कर्म ओं तत्सद्ब्रह्मार्पणमस्तु என்று சொல்லித்தீர்த்தத்தைக் கையிலெடுத்து பூமியில் விடவேண்டும். பிறகு—

अद्या नो देव सवितः प्रजावत्सावीः सौभगम्। परा दुष्वप्नियंसुव।
विश्वानि देव सवितर्दुरितानि परासुव। यद्भद्रं तन्म आसुव॥

என்ற மந்திரத்தை ஜபித்து ஜபஞ்செய்த விடத்தைப் புரோக்ஷணஞ்செய்து அவ்விடத்தினின்றும் கொஞ்சம் மண்ணை எடுத்து ஹிருதயத்தில தரித்துக்கொள்ளவேண்டும். சிலர் நெற்றியிலும் தரித்துக் கொள்ளுகின்றனர்.

(ப - ரை) सवितः=சகலப் பிராணிகளையும் தூண்டுகின்ற देव=ஓ நாராயணனே! अद्य=இப்பொழுது नः=எங்களுக்கு प्रजावत्=புத்திரன், பௌத்திரன் முதலிய சந்ததிகளுடன் கூடிய सौभगम्=பாக்யத்தை सावीः=கொடுக்கவேண்டும். दुष्वप्नियम्=கெட்ட சுவப்ன நிமித்தமாயுண்டான அனிஷ்டத்தை परासुव=நாசஞ்செய்யவேண்டும். सवितः=எல்லாப் பிராணிகளையும் தூண்டுகின்ற ஓ நாராயணனே! दुरितानि=பாபங்களை परासुव=நாசஞ் செய்யவேண்டும். यत्=எந்த भद्रम्=கல்யாண முண்டோ तत्=அதை मे=எனக்கு आसुव=கொடுக்கவேண்டும்.

இக்கலியுகத்தில் பின்னர் வரும்மனிதர்கள் பலவித அசௌகரியங்களால் வைதிகமான சகலகர்மங்களையும் அனுஷ்டிடதற்குச் சக்தியற்றவர்களாக யிருப்பார்களென்று முன்னரே கருதி மஹான்களான மஹருஷிகள் மற்றெல்லாக் கர்மங்களை அனுஷ்டிக்காமல் விட்டுவிடினும் சந்தியாவந்தனம் ஒன்றையாவது விடாமல் அனுஷ்டித்துவருவானுயின் பிராம்மண்யத்தை காப்பாற்றிக் கொண்டவனுயாவானென்றும், அதன் மூலமே இம்மை மறுமைகளில் சகல க்ஷேமத்தையும் பெறுவான் என்று கருணையால் இச் சந்தியானுஷ்டானத்தை உபதேசித்திருப்பதா இவ்வுத்தம காரியத்திலும் ஆலஸ்யம்கொள்ளாது அனுஷ்டித்தல் அவச்யமென ஏற்பட்டது.

श्रीकृष्णः प्रीयताम्

சுபம்

சந்தியா மந்திரார்த்தம் முற்றிற்று.